Vivahara Chintamani.

விவஹார சிந்தாமணி.

By.

[illegible]ஷர்

R. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

இயற்றியது.

மதுகரவேணி விலாஸம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதருஸ்.

M. V. Press, Vepery-Madras.

Price Rs. 2-8-0.] [Postage As, 5.

All Rights Reserved

முகவுரை.

பரஸ்பர நம்பிக்கையுள்ள முற்காலத்தில் சகல வியவகாரங்களும் வாய்மொழியாகவே நடந்துவந்தது. இக்காலத்தில் எழுத்து மூலிய மான நடவடிக்கைகளைத்தான் ஏற்பட்டிருக்கிற சட்டங்கள் அங்கீகரிப்ப தால் சகல நடவடிக்கைகளும் எழுத்து மூலியமாகவே ஏற்பட்டுவிட்டது. அப்படிஎழுதுவதிலும் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருவன் ஒருசொத்தை மற்றொருவனுக்கு விற்று ரொக்கம் பத்திக்கொண்டதாக எழுதினால் போதாது; அதில் அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கப் பட்டு எழுதவேண்டும்.

(1) விற்கப்பட்டசொத்து விற்கிறவனுக்கு முழுசுவாதீனமுள் ளதா அல்லது கூட்டுப்பங்குள்ளதா?

(2) விற்கப்பட்ட சொத்தில் ஏதாவது வில்லங்கங்க ளேற்பட் டிருக்கிறதா ? அல்லது அதில் யாராவது ஜீவனும்சம் பெறவேண்டிய வர்களிருக்கிறார்களா ?

(3) சொத்தின் காலஸ்திதிக்குத் தகுந்த பெருமானம், சர்வே நெ. விஸ்தீரணம், வீடாயிருந்தால் நான்கெல்லை, சொத்தின் பாகம், தஸ்தவேஜு ஏற்படும் வருஷம் மாசம் தேதி, விற்பவன் வாங்குகிறவ ருடைய இருப்பிடம் ஜாதி மதம் ஜீவனம் முதலியவைகள்,

(4) இன்ன ரெஜிஸ்ட்ரேஷன் டிஸ்டிரிக்ட், சப்டிஸ்டிரிக்ட்,

(5) நஞ்சை, புஞ்சை தோட்டம், வீடு மனை முதலிய விபரம்,

(6) சொத்து விற்கப்பட்ட காரணம், அதன்தொகைக்கு நியா யமான விநியோகம்,

(7) கையெழுத்து செய்யக்கூடிய இரண்டு சாட்சிகளை கூட வைத்துக்கொள்வது முதலியவைகள்,

(8) ரெஜிஸ்ட்ரேஷன் சட்ட சம்பந்தமாயும், கால நிர்ணயச் சட்டம், டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட், ஸ்பெசிபிக் ரிலீப் ஆக்ட் முதலிய சட்டங்களின் சாராம்சங்களையும் அறிந்திருக்கவேண்டு.

இவ்விஷயங்களை நன்ருய் தெரியாதவர்களால் எழுதப்படும் பத்திரங்கள் கோர்ட்டில் ஏற்றுக்கொள்ளப்படாமல் தள்ளிவிடப்படுகிறது. ஆகை யால் மேற்கண்ட விஷயங்களைப் பூராவாய் அங்கங்கே விஸ்தாரமாய் சொல்லியிருக்கிருேம். அவைகளையறிந்து தஸ்தாவேஜுகளை எழுத வேண்டும்.

மேற்கண்டபடி எழுதாவிட்டால் முதலில் ரெஜிஸ்டராராபீசில் தஸ்தாவேஜுகள் ரெஜிஸ்தருக்காக அங்கீகரிக்கப்படுவதில்லை. அப் படி அங்கீகரிக்கப்பட்டாலும் பின்ஞல் ஏதாவது விவாதம் ஏற்பட்டு பத்திரங்கள் கோர்ட்டில் தாக்கலாஞல் அது பல காரணங்களால் ரத்து செய்யப்படுகிறது. ஆகையால் பத்திரங்கள் எழுதுகிறவர்கள் இப்பு ஸ்தகத்தை ஆதியோடந்தமாகப் படித்து விஷயங்களைத் தெரிந்துக் கொள்வது உத்தமம்.

தினம்நடவடிக்கையிலுள்ள சிலபத்திரங்களைமட்டும் பத்திரமெ ழுதுகிறவர்கள் அனுபோகத்தின்பேரில் எழுதுவதாயிருந்தாலும், வியாபார சம்பந்தமாயும், கம்பெனிகள் சம்பந்தமாயும், நஷ்டத்துக்கு ஈடுசெய்கிற இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் விஷயமாயும், கூட்டுப்பங்கு கள் சேரும் விஷயமாயும் தஸ்தாவேஜுகள் எழுதுவதற்கு எல்லாருக் கும் தெரியாது. சகல நடவடிக்கைகளும் தெரியும்பொருட்டு இப்புத் தகத்தில் அந்த நடவடிக்கைகளுக்குவேண்டிய விஷயங்களை விபரமாக எழுதியிருப்பதால் எல்லாருக்கும் பிரயோசனத்தைக் கொடுக்கும்.

முன் அச்சிட்டபதிப்புகளில் காணுத பல விஷயங்களை புதிய தாய்ச்சேர்த்தும், ரத்தான விஷயங்களை திருத்தியும் இந்தப்பதிப்பு அ ச்சிடப்பட்டிருக்கிறது. இதில் குற்றங்குறைவுகள் ஏதாவதிருந்து அ தை நமக்குத்தெரிவித்தால் வந்தனத்துடன் ஏற்று திருத்தப்படும்.

சிலர் மோசக்கருத்துடன் நமது புஸ்தகம்போல் தப்பு தவறுக ளாய் அச்சிட்டு மாறுபெயர்கள்வைத்து விற்று ஜனங்களை ஏமாற்றுகி ருர்கள். நம்மால் இயற்றப்பட்ட "விவகாரசிந்தாமணி" என்ற பெயரை யும் நமதுபெயரையும் கவனித்துவாங்க எச்சரிக்கிருேம்.

R. S.

விஷய அட்டவணை.

1. ஸ்டாம்பாக்ட்.

1-ம் அத்தியாயம். பீடிகா விதிகள்.

2-ம் அத்தியாயம். முத்திரைத் தீர்வை.

A.—ஆதரவுகள் தீர்வைக்குட்படுவதைக் குறித்து.

B.—முத்திரைகளைக் குறித்தும், அவைகளை உபயோகிக்கிற விதத்தைக்குறித்தும்.

C.—ஆதரவுகளுக்கு முத்திரைபோடவேண்டிய காலத்தைக் குறித்து.

D.—தீர்வைக்காகப் பெருமானத்தை மதிப்பதைக் குறித்து.

E.—தீர்வை செலுத்தத்தக்கவர் இன்னாரென்பது.

3-ம் அத்தியாயம். முத்திரைகளைக் குறித்துத் தீர்மானம்.

4-ம் அத்தியாயம். கிரமமாய் முத்திரை போட்டிராத ஆதரவுகள்.

5-ம் அத்தியாயம். சில விஷயங்களில் முத்திரைக் கடுதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

6-ம் அத்தியாயம். ஆலோசனைக்கு அனுப்புவதும் மேற்பரிசோதனையும்.

7-ம் அத்தியாயம். க்ரிமினல் குற்றங்களும் நடவடிக்கைகளும்.

8-ம் அத்தியாயம் அனுபந்தமான நிபந்தனைகள்.

1-வது ஷெட்யூல்.— ஆதரவுகளுக்கு முத்திரைத் தீர்வை.

2. ரெஜிஸ்ட்ரேஷன் விஷயங்கள்.

1-ம் பாகம். பீடிகாவிதிகள்.

2-ம் பாகம். ரெஜிஸ்ட்ரேஷன் சிப்பந்திகள்.

3-ம் பாகம். ரெஜிஸ்டர் செய்யப்படத்தக்க தஸ்தவேஜுகள்.

4-ம் பாகம் கொண்டுவந்துகொடுக்கிற காலத்தைக் குறித்து.

5-ம் பாகம் ரெஜிஸ்டர் செய்கிற இடம்.

6-ம் பாகம். ரெஜிஸ்டர்செய்ய தஸ்தவேஜுகளைக்கொண்டுவந்து கொடுப்பதைக் குறித்து.

7-ம் பாகம், எழுதிக்கொடுத்தவர்களையும் சாக்ஷிகளையும் வரும்படி பலவந்தப்படுத்துவது.

8-ம் பாகம். மரண சாஸனங்களையும் சுவீகாரம் செய்துக்கொள்வதற்கான அதிகாரப்பத்திரங்களையும் கொண்டுவந்து கொடுப்பதைக் குறித்து.

9-ம் பாகம். மரண சாஸனங்களைக் கட்டிவைப்பதைக் குறித்து.
10-ம் பாகம். ரெஜிஸ்டராவதினாலும் ரெஜிஸ்டராகாமையினாலும் உண்டாகும் பலன்களைக்குறித்து.
11-ம் பாகம். ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களையும் அதிகாரங்களையுங் குறித்து

A.—ரெஜிஸ்டர் புஸ்தகங்களையும் அட்டவணைகளையும் பற்றியது.

B.—ரெஜிஸ்டர்செய்ய ஏற்றுக்கொண்ட பின்பு நடத்தவேண்டியதைக் குறித்து.

C.—ஸப் ரெஜிஸ்ட்ராருக்கே உரிய அலுவல்கள்.

D.—ரெஜிஸ்ட்ராருக்கே உரிய அலுவல்கள்.

12-ம் பாகம். ரெஜிஸ்டர்செய்ய நிராகரிப்பதைக் குறித்து
13-ம் பாகம். ரெஜிஸ்டர் செய்வதற்கும் தேடி எடுப்பதற்கும் நகல்களுக்குமான கட்டணங்களைக் குறித்து
14-ம் பாகம். தண்டனைகளைக் குறித்து.
15-ம் பாகம். பலவகைப்பட்டவை.
ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிற்கு சம்பந்தப்பட்ட இதர ஆக்டுகளின் குறிப்புகள்

3. தஸ்தாவேஜுகள்.

1. தஸ்தாவேஜு விஷயமாய் ஏற்படும் குற்றங்கள்.
2. தஸ்தாவேஜு விஷயமாய் இந்துலாவை அனுசரித்த விதிகள்.
3. தஸ்தாவேஜுகளை எழுதுவோர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

பத்திர நமூனாக்கள்.

1. பிராமிஸொரி நோட்.
2. பாண்ட் அல்லது பத்திரம்.
3. விக்கிரய சாசனம்.
4. பாகசாசனம்.
5. குத்தகை அல்லது வாடகைச்சீட்டு.
6. நிலத்தை சாகுபடிசெய்யக் குத்தகை, வாரப்பத்திரம்.
7. குத்தகைச் சீட்டுக்கு எதிரிடை.
8. குத்தகை மேடோவர் பத்திரம்.
9. குத்தகை விடுதலை.
10. வாடகைச்சீட்டு.
11. பட்டா விடுதலை.
12. விற்பனை உடன்படிக்கை.
13. மறுவிக்கிரய உடன்படிக்கை.
14. பஞ்சாயத்துத் தீர்மானத்துக்கு உடன்படிக்கை.

15. குமஸ்தா அல்லது வேலைக்காரன் உடன்படிக்கை.
16. பரிவர்த்தனை.
17. ஈடு, அடமானம் அல்லது பெந்தக பத்திரம்.
சுத்த பெந்தகம்.
18. உடன்சேர்க்கையான பொறுப்பு.
19. இரண்டாவது ஈடு அல்லது பெந்தகம்.
20. ஒத்தி அல்லது போக்கியம்.
21. அனுபோக அடமானம்.
22. ஈரெட்டுக் கிரயம்.
23 மாசூல் ஈடு.
24. இரசீது.
25. ஈடு அல்லது பெந்தக மேடோவர்.
26. போக்கிய விடுதலை.
27. ஜாமீன் பத்திரம்.
28. இரண்டாவது ஜாமீன்.
29. விடுதலை பத்திரம்.
30. தான சாசனம்.
31. செடில்மெண்ட் பத்திரம்.
32. ஜீவனாம்ச பத்திரம்.
33. பிழைதிருத்தல் பத்திரம்.
34. சொத்து பரிபாலன பத்திரம்.
35 கூட்டுப்பங்கு ஆதரவு.
36. ஸ்பெஷல் வக்காலத்து நாமா.
37. ஜனரல் வக்காலத்து நாமா.
38. ஸ்வீகார பத்திரம்.
39. ஸ்வீகாரம் செய்துகொள்ள அதிகாரப்பத்திரம்.
40. ஸ்வீகார அதிகார ரத்துப் பத்திரம்.
41. உயில் அல்லது மரண சாசனம்.
42. சரெண்டர் பத்திரம்.
43. மரண சாசனத்தின் ரத்துப் பத்திரம்.
44. உடன்படிக்கை.
45. நஷ்ட விமோசனப் பத்திரம்.

4. கோர்ட்டு கட்டண விஷயங்கள்.

1. 1870-ம்வருஷத்து 7-வது ஆக்டின் நிபந்தனைகள்.
2. கோர்ட்டுக் கட்டண விகிதம்.
3. சீவில் கோர்ட்டில் வியாச்சியம்செய்ய சொத்தின்பேரில் செலுத்தவேண்டிய ஸ்டாம்பு வரி ஜாப்தா.

4. மனு, பிராது, அப்பீல் முதலியவைகளுக்கு ஸ்டாம்பு பீஸ்.
5. ஸ்டாம்பு ஒட்டாமல் கொடுக்கிற தஸ்தாவேஜுகள் ஜாபிதா.

5. இன்கம்டாக்ஸ் விஷயங்கள்.

6. கால நிர்ணய விஷயங்கள்.

1. கெடுவுகாலத்தை எது முதல் கணக்கிடுவதென்பது.
6. மைனர் பைத்தியம் முதலியவர்களுக்கு கெடுவு ஆரம்பிக்குங்காலம்.
11. அந்நியதேச உடன்படிக்கைகளும் இந்த ஆக்டுக்கு உட்படுவது.
12. தீர்ப்புச்சொன்ன நாளை கணக்கில் சேர்க்காமலிருப்பது.
13. பிரதிவாதி ப்ரிடிவ்ஷ் இந்தியாவுக்கு வெளியிலிருந்த நாளை சேர்க்கக் கூடாதென்பது.
14. வேறொரு வியாச்சியம் நடக்கும்போது முதலில் நடந்த கேசின் அமுலை நிறுத்திவைப்பதால் நேர்ந்த தாமதம் கணக்கில் சேராதென்பது.
15. இன்ஜங்ஷன் கட்டளையால் தடுக்கப்பட்ட நாளை சேர்க்கக்கூடாதென்பது.
16. டிக்கிரி ஏலசொத்தை சுவாதீனஞ்செய்வதில் அப்பீல் நடந்த காலத்தைத் தள்ளி எண்ணவேண்டும்.
20. யாதொருதஸ்தாவேஜில் செல்லுவைத்த தினத்திலிருந்து கெடுவுகாலம் மறுபடி தொடங்குமென்பது.
22. புதிதாய் சேர்க்கப்பட்ட வாதி பிரதிவாதிகளுக்கு சேர்க்கப்பட்ட நாள் முதல் கெடுவு அவன் மட்டில் ஆரம்பமாகுமென்பது.

முதலாவது ஷெடியூல்...(கெடுவு காலம்.)

1. வியாச்சியங்கள்.
2. அப்பீல்கள்.
3. மனுக்கள்.

லா ரிப்போர்ட்டுகளின் குறிப்புகள்.

1. மத. 12 அல்லது 1 ம. 12—இந்தியன் லா ரிப்போர்ட் மதருஸ் சீரிஸ் 1-வது வால்யூம் 12-வது பக்கம்.

3. கல். 17—கல்கத்தா சீரிஸ் 3-வது வால்யூம் 17-வது பக்கம்.

3. அல 78—அலகாபாத் சீரிஸ் 3-வது வால்யூம் 78 - வது பக்கம்.

6. அ. ஐ. 32—அலகாபாத் ஐகோர்ட் ரிப்போர்ட் 3-வது வால்யூம் 32-வது பக்கம்.

விவஹார சிந்தாமணி.

1-வது ஸ்டாம்பு ஆக்ட்.

(1899-ம்வருஷத்து 2-வது ஆக்ட்.)

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்

சுருக்கமான பெயரும், வியாபிக்குமிடமும், வழங்கத்தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்ட்டை, 1899 - ம்வருஷத்திய இந்து தேசத்து முத்திரைக்கடிதாசி ஆக்ட் என்று சொல்லலாம் ;

(2) இது அப்பர் பர்மா, ப்ரிட்டிஷ் பெலுசிஸ்டான், ஸன்டால் பர்கணஸ், ஸ்பிட்டிபர்கணு அடங்க ப்ரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கின்றது ;

(3) இது 1899 - வரு ஜூலை 1ட முதல் வழங்கிவர வேண்டும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினலாவது முன் பின் தொடர்ச்சியினலாவது விரோத மொன்று மில்லாவிட்டால்:—

"சாவுகார்"

(1) "சாவுகார்" என்பதிலே—பாங்கும், சாவுகாரராகப் பிரவர்த்திக்கிற யாதொரு நபரென்பதும் அடங்கும்.

"பில் ஆவ் எக்ஸ் சேஞ்ஜ்"

(2) "பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்" என்பதற்கு கைமாறிச் செல்லத்தக்க ஆதாரவுகளைக்குறித்த 1881-ம்வருஷத்திய ஆக்ட்டில் அர்த்தங் கூறப்பட்டிருக்கிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் என்று அர்த்தமாகும் ; மேலும், அதிலே ஹூண்டியும், யாதொரு தொகையை வேறே யாவனொருவன் செலுத்தவேண்டுமென்றுவது வேறே யாவனொருவனிடத்திலிருந்து வாங்கிக் கொள்ளவேண்டுமென்றுவது யாதொரு நபருடைய பெயர் கண்டிருந்தாலும் இராவிட்டாலும், அந்த நபருக்குப் பாத்தியதையை உண்

டாக்குவதாக வாகிலும் அந்தப்படி பொருள் படுவதாகவாகிலுமுள்ள வேறே யாதொரு தஸ்தவேஜூம் அடங்கும்.

"கேட்டவுடனே செலுத்தத்தக்க பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்"

(3) "கேட்டவுடனே செலுத்தத்தக்க பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்" என்பதிலே—

(a) பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட் மூலமாக யாதொரு தொகை செலுத்தும் பொருட்டாவது, யாதொரு தொகைக்குச் சரிச்சொல்லும் நிமித்தம் யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டை ஒப்பிக்கும் பொருட்டாவது, கிடைக்கத்தக்கதா யிருந்தாலுஞ்சரி கிடைக்கத்தக்கதல்லாததாயிருந்தாலுஞ்சரி இன்னதென்று குறிக்கப்பட்ட யாதொரு நிதியிலிருந்து யாதொரு தொகையைச் செலுத்தும் பொருட்டாவது, நிறைவேறவோ அல்லது சம்பவிக்கவோ கூடியதாகவேனும் கூடாததாகவேனுமுள்ள யாதொரு ஷரத்து அல்லது அநிச்சயமான விஷயத்தின் மேல் தொகை செலுத்தும்பொருட்டாவது செய்யப்படுகிற உத்தரவும்,

(b) வாரத்திற்கொருமுறையாவது மாதத்திற்கொருமுறையாவது குறிக்கப்பட்ட வேறே எந்த காலங்களிலாவது யாதொரு தொகையைச் செலுத்துவதற்காகச் செய்யப்படுகிற உத்தரவும்,

(c) ஒரு நபர் எவன் சார்பாகக் கடிதம் எழுதுகிறனோ அவனுக்குக் கடன்கொடுக்கும்படியாக வேறொரு நபருக்கு உத்தரவு செய்யும் ஆதரவாகிய லெட்டர் ஆவ் க்ரெடிட் என்பதும்,—அடங்கும்.

"பில்ஆவ்லேடிங்"

(4) "பில் ஆவ் லேடிங்" என்னும் வார்நாமா என்பதிலே - சரக்கு நேராய்ப்போய்ச் சேருவதைப்பற்றிய த்ரூ பில் ஆவ் லேடிங் என்பதும் அடங்கும்; ஆனால், மேட் என்னும் கப்பல் உத்தியோகஸ்தருடைய ரசீது அதில் அடங்காது;

"பத்திரம்"

(5) பத்திரமென்பதிலே—

(a) சந்தர்ப்பத்திற்கேற்றபடி, குறிக்கப்பட்ட காரியம் நிறைவேற்றப்பட்டாலோ நிறைவேற்றப்படா விட்டாலோ பணஞ்செலுத்துவதாக உடன்படுவது ரத்தாய் விடுமென்கிற ஷரத்தின்மேல், ஒருவன் வேறொருவனுக்குப்பணஞ்செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவென்பதும்,

(b) ஒருவன் வேறொருவனுக்குப் பணஞ்செலுத்துவதாக உடன்பட்டிருந்து உத்தரவு பெற்றவனுக்காவது கொண்டுவருகிறவனுக்காவது பணஞ்செலுத்தப்படத்தக்க தல்லாததாய் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிற யாதொரு ஆதரவென்பதும்,

(c) ஒருவன் வேறொருவனுக்குத் தானியம் அல்லது வேறே சாகுபடி மாகூலை ஒப்பிப்பதாக உடன்பட்டிருந்து சாட்சி கையெழுத்து போடப்பட்ட யாதொரு ஆதரவென்பதும்,—அடங்கும்:

"தீர்வைக்குட்பட்ட"

(6) "தீர்வைக்குட்பட்ட" என்பது —இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குப்பின்பு எழுதப்பட்டு அல்லது முதலில் எழுதப்பட்டிருக்கிற ஆதரவுக்குச் சம்பந்தப்படுகையில், இந்த ஆக்டின்படி தீர்வைக்குட்பட்ட என்றும், வேறே யாதொரு ஆதரவுக்குச் சம்பந்தப்படுகையில் அந்த ஆதரவு எழுதப்பட்டபோதாவது, வெவ்வேறு காலங்களில் பல நபர்கள் அந்த ஆதரவை எழுதினால் அது முதலில் எழுதப்பட்ட போதாவது பிரிட்டிஷ் இந்தியாவில் வழங்கிக்கொண்டிருந்த சட்டத்தின்படி தீர்வைக்குட்பட்ட என்றும் அர்த்தமாகும்:

"செக்"

(7) "செக்" என்பது—குறிக்கப்பட்ட சாவுகார் பெயருக்கு எழுதப்பட்டுக் கேட்டவுடனே யல்லாமல் மற்றப்படி பணஞ்செலுத்தத் தக்கதென்று வெளிப்படையாய்த் தெரிவிக்கப்படாத பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் என்று அர்த்தமாகும்.

"பிரதானமேல்விசாரணை ரெவினியு அதிகாரி"

(8) "பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரி" என்பது—

(a) சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலும், பங்காளத்து கவர்னரும் வடமேற்கு மாகாணங்களின் லெப்ட்டெனென்ட் கவர்னரும் அயோத்தியா சீப் கமிஷனரும் தனித்தனி துரைத்தனஞ் செய்கிற ராஜ்ஜியங்களிலும் ரெவினியு போர்டார் என்றும்,

(b) பம்பாய் ப்ரெஸிடென்ஸியில் ஸிந்துநாட்டுக்கும் பம்பாய்ப் பட்டணத்து எல்லைக்கும் வெளியிலே ரெவினியு கமிஷனரென்றும்,

(c) ஸிந்துநாட்டில் கமிஷனரென்றும்,

(d) பஞ்சாப்தேசத்திலும் அப்பர்பர்மா அடங்கப் பர்மா தேசத்திலும் பைனான்ஷியல் கமிஷனரென்றும்,

(e) மற்ற இடங்களிலே பிரதேச கவர்ன்மென்டார் அல்லது பிரதேச கவர்ன்மென்டாரால் இது விஷயத்தில் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கப்படுகிற உத்தியோகஸ்தரென்றும்,—அர்த்தமாகும்.

"கலெக்டர்" (9) "கலெக்டர்" என்பது—

(a) கல்கத்தா, சென்னபட்டணம், பம்பாய் இந்தப்பட்டணங்களின் எல்லைகளுக்குள் முறையே கல்கத்தா, சென்னப்பட்டணம், பம்பாய், கலெக்டரென்றும், அந்த எல்லைகளுக்கு வெளியில் டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டரென்றும் அர்த்தமாகும் ;

(b) மேலும், அந்த வார்த்தையிலே, டெப்புடி கமிஷனரென்பதும் இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மென்டார் ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கிற யாதொரு உத்தியோகஸ்தரென்பதும் அடங்கும்.

"ஒப்படைப்பத்திரம்." (10) "ஒப்படைப்பத்திரம்" என்பதிலே — விற்பனையினல் ஒப்படைசெய்வதும், அசையும்பொருள் அல்லது அசையாப்பொருளாகிய சொத்தை ஜீவித்திருப்பவர்களில் ஒருவர் வேறொருவர் பெயருக்கு எழுதிக் கொடுக்கிறதும், சந்தர்ப்பத்துக் கேற்றபடி 1-வது ஷெட்யூலிலாவது, 1-A. ஷெடியூலிலாவது, * அதற்கென்று வேறு விதமாய் பிரத்தியேகமாக ஏற்பட்டிராததுமான ஒவ்வொரு ஆதரவும் அடங்கும்.

---

* 1-A. ஷெடியூல் என்னும் வார்த்தை, சென்னபட்டணம் 1922-ம் வருஷத்து 6-வது ஆக்ட்டால் சேர்க்கப்பட்டது.

'கிரமமாய்முத்திரைபோடப்பட்ட' (11) "கிரமமாய் முத்திரை போடப்பட்ட" என்பது - யாதொரு ஆதரவுக்குச் சம்பந்தப்படுகையில், சரியான தொகைக்குக் குறைபாத பசை முத்திரையையாவது அழுத்தப்பட்ட முத்திரையையாவது அந்த ஆதரவு பெற்றிருக்கிறதென்றும், அப்படிப்பட்ட முத்திரையானது ப்ரிட்டிஷ் இந்தியாவில் அந்தந்தகாலத்திலே செலாவணியாய்க் கொண்டிருக்கிற சட்டப்படி ஒட்டப்பட்டாவது உபயோகிக்கப்பட்டாவதிருக்கிறதென்றும் அர்த்தமாகும்.

"எழுதப்பட்டதும் எழுதுவதும்" (12) "எழுதப்பட்டது, எழுதுவது" என்பவை - ஆதரவுகளின் விஷயமாய் உபயோகிக்கப்படும்போது "கையெழுத்து செய்யப்பட்டது" "கையெழுத்து" என்று அர்த்தமாகும்.

"அழுத்தப்பட்ட முத்திரை" (13) "அழுத்தப்பட்ட முத்திரை" என்பதிலே,

(a) தகுதியான உத்தியோகஸ்தரால் ஒட்டப்பட்டு அழுத்தப்பட்டுமுள்ள முத்திரைத்தலைகளும்,

(b) முத்திரைகாகிதத்தின்மேல் வெளியே உபுக்கலாகக் காட்டும்படியாய் அழுத்தப்பட்டாவது, செதுக்கப்பட்டாவதுள்ள முத்திரைகளும்,—அடங்கும்.

"ஆதரவு" (14) "ஆதரவு" என்பதிலே - எதன்மூலமாக யாதொரு பாத்தியதை அல்லது உத்தரவாதம் உண்டாக்கப்பட்டாவது, மாற்றப்பட்டாவது, வரையறுக்கப்பட்டாவது, அதிகமாக்கப்பட்டாவது, நிவர்த்திக்கப்பட்டாவது எழுதிவைக்கப்பட்டாவதிருக்கிறதோ அல்லது அந்தப்படி பொருள்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு தஸ்தவேஜும் அடங்கும்.

"பாரீகத்து" (15) "பாரீகத்து" என்பது—யாதொரு சொத்தின் கூட்டுச் சொந்தக்காரர்கள் அப்படிப்பட்ட சொத்தைத் தனித்தனியாய்ப் பங்கிட்டுக்கொள்ளுகிறதாகவாகிலும் பங்கிட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறதாகவாகிலும் எழுதுகிற யாதொரு ஆதரவென்று அர்த்தமாகும். மேலும், அந்தவார்த்தையி

லே, பாகபேற்படுத்துவதற்கு யாதொரு ரெவினியு அதிகாரி அல்லது யாதொரு ஸிவில் கோர்ட்டார்செய்கிற முடிவான உத்தரவும், பங்கிட்டுக்கொள்ளலாமென்று ஒரு மத்தியஸ்தன் உத்தரவுசெய்கிற தீர்மானமும் அடங்கும் ;

(16) "குத்தகை அல்லது வாடகைச்சீட்டு" என்பது—அசையாப்பொருளின் குத்தகை அல்லது வாடகைச்சீட்டு என்று அர்த்தமாவதுமல்லாமல்,

"குத்தகை".

அந்த வார்த்தையிலே—

(a) பட்டா என்பதும்,

(b) வாடகை அல்லது குத்தகைச்சீட்டுக்கு எதிரிடையல்லாமல், அசையாப்பொருளைப் பயிரிடுவதற்காவது அனுபவிப்பதற்காவது அதற்கு வாடகை செலுத்த அல்லது ஒப்பிப்பதற்காவது எழுதிக்கொடுக்கப்படுகிற கபூலியத் (கவுல்) அல்லது வேறே உடன்படிக்கை என்பதும்,

(c) எவ்வகைப்பட்ட சுகங்களையும் குத்தகைக்கு விடுவதாக எழுதுகிற யாதொரு ஆதரவென்பதும்,

(d) குத்தகை அல்லது வாடகைக்காகச் செய்துக்கொள்ளுகிற மனுவின்பேல் மனு கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கும்படி உத்தேசித்தெழுதிகிற ஆதரவென்பதும்,—அடங்கும் ;

* (16A) "விற்பனை செய்யக்கூடிய பத்திரம்" என்பது - ப்ரிடிஷ் இந்தியாவிலாவது யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியத்திலாவது ஸ்டாச் என்னும் முதற்பணப்பங்கு விற்பனையாகும் யாதொரு பஹிரங்கமான இடத்திலே விற்பனை செய்யப்படுவதற்கேற்ற தன்மையுள்ள ஒருபத்திரம் என்று அர்த்தமாகும் ;

"விற்பனை செய்யக்கூடிய பத்திரம் என்பது"

(17) "கொதுவைப்பத்திரம் என்பதிலே—கடனுகக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்போகிற பணத்திற்காவது அப்போதிருக்கிற அல்லது பின்பு ஏற்படுகிற கடனுக்காவது பொறுப்பு உண்டுபண்ணும் பொருட்டாகிலும் ஒருவன் வேறொருவனுக்காவது அவன் பட்சத்திலாவது

"கொதுவைப் பத்திரம்"

* 1904-ம்வருஷத்து 15-வது ஆக்டினல், இந்த பிரிவு சேர்க்கப்பட்டது.

குறித்தசொத்தில் அல்லது அதன் விஷயமாயிருக்கும் சுதந்தரத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்காகிலும் உண்டுபண்ணுவதற்காகிலும் எழுதிக்கொடுக்கிற பிரதி ஆதரவென்பதும் அடங்கும்;

"கடிதாசி"

(18) "கடிதாசி" என்பதிலே—எதன்மேல் யாதொரு ஆதரவு எழுதலாமோ அப்படிப்பட்ட தோற்கடிதாசி பார்ச்மென்ட் முதலிய யாதொரு வஸ்துவென்பதும் அடங்கும்;

"இன்ஷூரென்ஸ் பாலிஸி,,

(19) இன்ஷூரென்ஸ் பாலிஸி என்பதிலே,

(a) அகஸ்மாத்தாகவாவது ராஜீக தெய்விகத்தினாலாவது நேரிடுகிற நஷ்டம் சேதம் அல்லது பொறுப்பானது வெறொருவன்மேல் சாராதிருக்கும்படி ஒருவன் மேல்வாசி (ப்ரிமியம்) வாங்கிக்கொண்டு கட்டிக்கொடுக்கவும் தாங்கள் உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவும்,

(b) லைவ்பாலிஸி என்பதும், ஆபத்து அல்லது வியாதி நேரிடுமானால் ஒருவனுக்கு நஷ்டம் விளையாதபடி விமோசனஞ் செய்வதற்கான யாதொரு பாலிஸி என்பதும்,— அடங்கும்.

"சமுத்திர நஷ்ட விமோசன சாஸனம்,,

(20) "சமுத்திர நஷ்ட விமோசன சாஸனம்" அல்லது "சமுத்திர பாலிஸி" என்பது—

(a) (சமுத்திர மார்க்கமாகச் சபர் போவதற்காகவானாலுஞ்சரி உள்நாட்டு நீர்நிலைகள் மூலமாகச் சபர்போவதற்காகவானாலுஞ்சரி) யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்தைப் பற்றியாவது, யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்தைச் சேர்ந்த யந்திரவேலையைப்பற்றியாவது பாரஞ்சாம்பியைப்பற்றியாவது பாய் கயிறு முதலிய முஸ்தீபைப்பற்றியாது, யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்திலிருக்கிற யாதொரு சாமானைப்பற்றியாவது வர்த்தகச் சரக்கைப்பற்றியாவது எவ்வகையான சொத்தைப்பற்றியாவது யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்திலேனும் அதன் சம்பந்தமாகவேனும் சட்டப்படி நஷ்டவிமோச

னஞ் செய்யக்கூடிய வேறே யாதொரு பாத்தியதையைப் பற்றியாவது செய்யப்படும் யாதொரு நஷ்டவிமோசன மென்று அர்த்தமாகும் ;

அன்றியும்,

(b) (a) குறிப்பிட்ட பகுதியின் தாற்பரியத்தின்படி சமுத்திர அபாயமேயல்லாமல், சாமான் முதலியவற்றைக்கொண்டு போகத்தொடங்குவது முதல் நஷ்டவிமோசன பத்திரத்திற்கண்ட கடைசியாய்ப் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச்சேருகிறவரையில் இடைச்சம்பவமாக நேரிடுகிற வேறே யாதொரு அபாயமும் அடங்கக்கொண்டு போகவேண்டியதாயுமுள்ள சாமான் - வர்த்தகச்சரக்கு அல்லது சொத்துக்கு நேரிடும் நஷ்டத்திற்கு யாதொரு விமோசனம் செய்வதென்பதும் ஷெ பாலிஸி என்னும் சாஸனத்தில் அடங்கும்.

உடன்சேர்க்கையான கேள்விக்காகவாவது மற்றப்படியாவது செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படுவதாயிருக்கிற யாதொரு தொகையின்பொருட்டு யாதொரு நபர் - யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்திலிருக்கும்போது சாமான் - வர்த்தகச்சரக்கு அல்லது எவ்விதசொத்துக்கு நேரிடத்தக்க யாதொரு அபாயத்திற்குத் தான் பொறுப்புடையவனுயிருப்பதாக உட்பட்டாலும் யாதொரு அபாயம் சேதம் அல்லது நஷ்டத்திற்காக அப்படிப்பட்ட யாதொரு சாமான் - வர்த்தகச்சரக்கு அல்லது சொத்தின் சொந்தக்காரனுக்கு விமோசனஞ் செய்வதாக ஏற்பாடு செய்து கொண்டாலும் அப்படிப்பட்ட உடன்படிக்கை அல்லது ஏற்பாடானது சமுத்திரநஷ்டவிமோசனத்திற்கென்று செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமாயிருப்பதாக எண்ணப்படும்.

"வகாலத்து நாமா"

(21) "வகாலத்து நாமா" என்பதிலே—அதை எழுதிக்கொடுக்கிறவனுக்குப்பதிலாய் அவனுடைய பெயரால் பிரவர்த்திக்கும்படி ஒரு குறித்த நபருக்கு அதிகாரங் கொடுப்பதாய்க் கோர்ட் கட்டணத்தைக்குறித்த அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற சட்டத்திட்டத்தின்படி கட்டணம் விதிக்கப்படத்தக்கதல்லாத யாதொரு ஆதரவும் அடங்கும்,

"ப்ராமிஸொரி நோட்"

(22) "ப்ராமிஸொரிநோட்" என்பது—கைமாரிச்செல்லத்தக்க ஆதரவுகளைக்குறித்த 1881-ம்வருஷத்து ஆக்டில் அர்த்தங் கூறப்பட்டிருக்கிற ப்ராமிஸொரி நோட் என்று அர்த்தமாகும்.

கிடைக்கத்தக்கதாயிருந்தாலுஞ்சரி, கிடைக்கத்தக்கதல்லாததாயிருந்தாலுஞ்சரி, இன்னதென்று குறிக்கப்பட்ட யாதொரு நிதியிலிருந்து யாதொரு தொகையைச் செலுத்துவதென்றாவது நிறைவேற்றவோ அல்லது சம்பவிக்கவோ கூடியதாகவேனும் கூடாததாக வேனுமுள்ள யாதொரு ஷரத்து அல்லது அநிச்சயமான விஷயத்தின்மேல் தொகை செலுத்துவதென்றாவது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிற பத்திரமும் ஷை வார்த்தையில் அடங்கும்.

"ரசீது"

(23) "ரசீது" என்பதிலே — யாவனொருவனுடைய பெயர் கண்டு கையெழுத்துப் போட்டாவது போடாமலாவது இருந்தபோதிலும்—

(a) யாதொரு பணம் - பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - செக் - அல்லது ப்ராமிஸொரிநோட்டை வரப்பற்றிக்கொண்டதாய் ஒப்புக்கொண்டதாகவாகிலும்,

(b) கடனுக்கு ஈடாக வேறே யாதொரு அசையும்பொருளை வரப்பற்றிக் கொண்டதாய் ஒப்புக்கொண்டதாகவாகிலும்,

(c) யாதொரு கடன் அல்லது தாவாவாயினும் கடன் அல்லது தாவாவில் யாதொரு பாகமாயினும் சரிச்சொல்லப்பட்டதென்றாவது தீர்க்கப்பட்டதென்றாவது ஒப்புக்கொண்டதாகவாகிலும்,

(d) அப்படி ஒப்புக்கொண்டதாய்க் காட்டுகிறதாகவாகிலும் பொருள்படுகிறதாகவாகிலுமிருக்கிற யாதொரு சீட்டு யாதாஸ்து அல்லது எழுத்தும் அடங்கும்.

'பொருத்த ஆதரவு'

(24) "பொருத்த ஆதரவு" என்பது—

(a) கலியாணத்தின் நிமித்தமாவது,

(b) பொருத்துகிறவனுடைய சொத்தை அவனுடைய குடும்பத்தாருக்குள்ளாகிலும் யாருக்கு கொடுக்க அவன் இஷ்டங்

கொள்ளுகிருனே அவர்களுக்குள்ளாகிலும் பகிர்ந்து கொடுப்பதற்காவது அவனைச்சார்ந்தவனுகிய யாதொரு நபருக்குக் கொடுப்பதற்காவது,

(c) மதவிஷயத்திற்காவது தர்ம விஷயத்திற்காவது, அசையும்பொருள் அல்லது அசையாப்பொருளை உயில்வழியாயல்லாமல் எழுத்து மூலமாய்ச் செய்கிற யாதொரு ஏற்பாடு என்று அர்த்தமாகும்.

அப்படிப்பட்ட ஏற்பாடு செய்வதற்காக எழுதிக்கொடுக்கிற உடன்படிக்கையும் "அப்படிப்பட்ட யாதொரு ஏற்பாடானது எழுத்து மூலமாய் செய்யப்படாதிருக்கிற பக்ஷத்திலே அந்த ஏற்பாட்டின் ஷரத்துகள் ட்ரஸ்ட் உறுதிமொழி பத்திரமாகவாவது வேறெவ்விதமாகவாவது எழுதப்பட்டிருக்கும் எந்த ஆதரவும்" இதில் அடங்கும்.

(25) "படைச்சேவகன்" என்பது 1911-ம் வருஷத்திய இந்திய ராணுவ ஆக்டின்படி சேர்த்துக்கொள்ளப்பட்ட நன்கமிஷன்ட் ஆபீஸர் அந்தஸ்துக்கு குறைந்த யாதொரு நபர் என்பதும் அடங்கும்.

2 - அத்தியாயம்.

முத்திரைத் தீர்வை.

A —ஆதரவுகள் தீர்வைக்குட்படுவதைக்குறித்து

தீர்வை வாங்கத்தக்க ஆதரவுகள்.

3. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளுக்கும் 1-வது ஷெட்யூலில் கண்டிருக்கிற நிவாரணைகளுக்கும் உட்பட்டு அடியில்வரும் ஆதரவுகள் அந்த ஷெட்யூலில் சரியான தீர்வையாக அதற்குச் சொல்லியிருக்கிற தீர்வைத் தொகைக்கு உட்பட்டவைகளாகும் ; அவையாவன—

(a) அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற ஆதரவுகளில், முன்னமே யாவனொருவனுல் எழுதப்படாமல் 1899-ம் வருஷ ஜூலைமீ 1உயிலாவது அதற்குப் பின்னிட்டாவது ப்ரிட்டிஷ் இந்தியாவில் எழுதப்படுகிற பிரதி ஆதரவும்,

(b) அந்தத் தேதியிலாகிலும் அதற்குப் பின்னிட்டாகிலும் ப்ரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியில் செய்யப்பட்டாவது எழுதப்பட்டாவதிருந்து, ப்ரிட்டிஷ் இந்தியாவில் அங்கிகரிக்கப்பட்டாகிலும் செலுத்தப்பட்டகிலும் அங்கீ

கரிக்கப்படுவதற்காவது செலுத்தப்படுவதற்காவது காட்டப்பட்டாகிலும் எண்டார்ஸ் செய்யப்பட்டாகிலும் வேறொருவர் பெயருக்குச் செய்யப்பட்டாகிலும வேறேவிதமாய்க் கைமாறிச்செல்லும்படி செய்யப்பட்டாகிலும், கேட்டவுடனே செலுத்தத்தக்கதாயிருக்கிற பிரதி பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - அல்லது ப்ராமிஸொரி நோட்டும் ;

(c) முன்னமே யாவனொருவனால் எழுதப்படாமல், அந்தத் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியில் எழுதப்பட்டதாயும், ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு சொத்துக்காவது ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்த அல்லது செய்யப்போகிற யாதொரு விஷயத்திற்காவது காரியத்திற்காவது சம்பந்தப்பட்டதாயும், ப்ரிட்டிஷ் இந்தியாவில் வரப்பற்றப்பட்டதாயும் (பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - அல்லது ப்ராமிஸொரி நோட் அல்லாமல்) அந்த ஷெட்யூலில் கண்டிருக்கிற பிரதி ஆதரவும்:

* ஆனால், இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படியும், இந்தப் பிரிவைச் சேர்ந்த **(a)**அல்லது**(c)** குறிப்பிட்ட பகுதியிலாவது 1-வது ஷெட்யூலிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலும் 1-A ஷெட்யூலில் கண்டிருக்கும் தொகையானது -ஷ ஷெட்யூலில் அடிங்கியுள்ள விலக்குகளுக்குட்பட்டு, அடியிற்கண்ட ஆதரவுகளுக்கு விதிக்கத்தக்க தீர்வையாகும்:—

(aa) முன்னமே யாதொரு நபரால் எழுதப்படாமலிருந்து, 1922-ம்ஸு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் எழுதப்படுகிறதாய் 1-A ஷெட்யூலின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதென்று அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற பிரதி ஆதரவும் ;

(bb) முன்னமே யாதொரு நபரால் எழுதப்படாமலிருந்து, 1922-ம்ஸு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்கு வெளியில் எழுதப்ப

---

* இந்த பாராக்கள் சென்னபட்டணம் 1922-ம்ஸுத்து 6-வது ஆக்டால் சேர்க்கப்பட்டது.

ட்டதாயும், அந்த ப்ரெஸிடென்ஸியிலுள்ள யாதொரு சொத்துக்காகிலும் அந்த ப்ரெஸிடென்ஸியில் செய்த அல்லது செய்யப்போகிற யாதொரு விஷயம் அல்லது காரியத்துக்காகிலும் சம்பந்தப்பட்டதாயும், அந்த ப்ரெஸிடென்ஸியில் வரப்பற்றப்பட்டதாயும் 1-A ஷெட்யூலின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதென்று அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற பிரதி ஆதரவும்.

மேலும்,

(1) இந்த நிவாரணையில்லாவிட்டால் யாதொரு ஆதரவுக்குண்டான தீர்வையைக் கவர்ன்மெண்டார் செலுத்தவேண்டியதாயிருக்கிற விஷயங்களில் கவர்ன்மெண்டாராலாவது கவர்ன்மெண்டாருக்காகவாவது கவர்ன்மெண்டார் பட்சத்திலாவது எழுதிக்கொடுக்கப்பட்ட அந்த ஆதரவு விஷயமாயும்,

(2) 1894-ம் வருஷத்து வர்த்தகக் கப்பலைக்குறித்த ஆக்ட்டின்படிக்காவது, 1838-ம் வருஷத்து 19 - வது ஆக்டின் படிக்காவது, அப்புறம் பிறப்பிக்கப்பட்ட ஆக்டுகளால் திருத்தப்பட்டபடிக்குள்ள கப்பல்களின் இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷனைக் குறித்த 1841-ம் வருஷத்து ஆக்டின்படிக்காவது ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டுள்ள யாதொரு கப்பல் அல்லது மரக்கலத்தையோ, அதில் யாதொரு பாகத்தையோ அதிலுள்ள பொறுப்பு, பாகம் அல்லது சொத்தையோ அறுதியாகவாகிலும் கொதுவையாகவாகிலும், வேறுவிதமாகவாகிலும் விற்கிரயம் அல்லது ட்ரான்ஸ்பர் அல்லது வேறுவிதமாய்ப் பைசல்செய்வதற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொரு ஆதரவு விஷயமாயும்,

தீர்வை வாங்கப்படமாட்டாது.

விற்கிரயம், கொதுவை அல்லது பொருத்துதல் முதலிய ஒரே விவகாரத்தில் பல ஆதரவுகளை உபயோகிப்பது.

4. (1) யாதொரு விற்கிரயம் - கொதுவை அல்லது பொருத்துதலாகிய விஷயத்திலே, அந்த விவகாரத்தை முடிப்பதற்காகப் பல ஆதரவுகள் உபயோகிக்கப்படுகிறபட்சத்தில், ஒப்படைக்காவது கொதுவைக்காவது பொருத்துதலுக்காவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூலிலாவது 1-A ஷெட்யூலிலாவது நிர்ணயித்திருக்கிற தீர்வைக்குப் பிரதான ஆதரவுமாத்திரம் உட்பட்டதாகும் ; மற்ற

ஆதரவுகளில் அதததுசந்தர்ப்பத்துக்கேற்றப்படி 1-வது ஷெட்யூலிலாவது 1-A ஷெட்யூலிலாவது அதற்காக ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த தீர்வைக்குப் பர்த்தியாக ஒரு ரூபாய் அல்லது ஒரு ரூபாய் எட்டணு தீர்வைக்குட்பட்டதாகும்.

(2) அப்படி உபயோகிக்கப்பட்ட ஆதரவுகளில் இன்னதை (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிற காரியங்களின் பொருட்டுப் பிரதான ஆதரவாகக் கொள்ளவேண்டியதென்று உபயத்திராள் தங்களுக்குள் நிச்சயித்துக்கொள்ளலாம்.

ஆனல், அந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட ஆதரவுக்கு விதிக்கப்படத்தக்க தீர்வையானது - உபயோகிக்கப்பட்ட மேற்படி ஆதரவுகளில் எதற்காகவாவது விதிக்கப்படத்தக்க மிகவும் உயர்ந்த தீர்வையாகும்.

வெவ்வேருன பல விஷயங்களைச் சேர்ந்த ஆதரவுகள்.

5. வெவ்வேருன பலவிஷயங்கள் அடங்கியாவது அவைகளுக்குச் சம்பந்தப்பட்டாவதிருக்கிற யாதொரு ஆதரவானது, ஒவ்வொன்றிலே அப்படிப்பட்ட விஷயங்களிலொன்று அடங்கியாகிலும் அதற்குச் சம்பந்தப்பட்டாகிலு மிருக்கிற வெவ்வேறு ஆதரவுகளுக்கு இந்த ஆக்டின்படி என்ன தீர்வை உண்டோ அந்தத்தீர்வைகளின் மொத்தத் தொகைக்கு உட்பட்டதாகும்.

1-வது ஷெட்யூலில் சொல்லியிருக்கிற பலவகைகளுள் அடங்குகிற ஆதரவுகள்.

6. அடுத்து முந்திய பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, சந்தர்ப்பத்துக்கேற்றப்படி 1-வது ஷெட்யூலிலாவது 1 - A ஷெட்யூலிலாவது கண்டிருக்கிறவகைகளில் இரண்டு அல்லது பலவற்றிற்குள் அடங்கும்படியாக எழுதப்பட்ட ஆதரவானது - அந்த வகைகளின் படிக்குண்டான தீர்வைகள் வெவ்வேருயிருக்கிறபட்சத்தில் அந்தத்தீர்வைகளில் உயர்ந்த தீர்வைக்குமாத்திரம் உட்பட்டதாகும்.

ஆனல் தீர்வைக்குட்பட்ட யாதொரு ஆதரவுக்குச் சரியான தீர்வை செலுத்தப்பட்டிருக்குமானல், அந்த ஆதரவின் எதிரிடைச்சாவது இரண்டாம் பிரதிக்காவது இந்த ஆக்டிலுள்ள தெதனுலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஒரு ரூபாய்க்கு அல்லது ஒரு ரூபா எட்டணுவுக்கதிகமாகத் தீர்வை - வாங்கத் தக்கதாகமாட்டாது.

சமுத்திர நஷ்ட விமோசன சாஸனங்கள்.

7. (1) 1894-ம் வருஷத்து வர்த்தக கப்பலாக்ட் 506-வது பிரிவில் உதகரிக்கப்பட்டிருக்கிற நஷ்ட விமோசனம் தவிர வேறே சமுத்திர நஷ்ட விமோசனதிற்காகச்செய்துக்கொள்ளப்படும் எந்த ஒப்பந்தமும் - சமுத்திர நஷ்ட விமோசன சாஸனமாகிய ஸீ பாலிஸி ரூபமாய்ச்செய்து கொள்ளப்பட்டாலன்றி மற்றப்படி செலாவணியாகமாட்டாது.

(2) யாதொரு காலத்திற்கென்று செய்து கொள்ளப்பட்ட சமுத்திர நஷ்டவிமோசன சாஸனமாகிய ஸிபாலிஸிஎதையும் பன்னிரண்டு மாதத்திற்கு மேற்பட்ட யாதொரு காலத்திற்காகச் செய்து கொள்வது கூடாது.

(3) சமுத்திர நஷ்டவிமோசன ஸாஸனமாகிய ஸீபாலிஸி எதுவும் - அது எதற்காகச் செய்யப்படுகிறதோ அந்த அபாயம் அல்லது துணிகரமானவேலை அல்லது காலவரையறை இன்னதென்றும் அதில் கையெழுத்திடும் பிணையாளிகள் அல்லது உத்திரவாதிகளுடைய பெயர்கள் இன்னவையென்றும், நஷ்டவிமோசனம் செய்யப்படும் தொகை அல்லது தொகைகள் இவ்வளவென்றும் அதில் குறிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி செலாவணியாகமாட்டாது.

(4) யாதொரு சமுத்திர நஷ்டவிமோசனமானது ஒரு சபருக்காகவோ அல்லது ஒரு சபர் போய்க்கொண்டிருக்கும்போதோ குறிக்கப்பட்ட காலத்திற்குச் செய்யப்பட்டிருந்தாலும், கப்பற்போய்ச் சேரவேண்டிய இடத்தைச்சேர்ந்து, அவ்விடத்தில் நங்கூரம் போட்டான பிறகு 30 தினங்களுக்கு மேற்பட்ட யாதொரு காலத்திற்குப் பிரயோகமாகும்படிக்கோ அல்லது அந்தகாலமும் அடங்கும்படிக்கோ செய்யப்பட்டிருந்தாலும், அந்த சாஸனமானது - யாதொரு சபருக்காகவோ அல்லது சபர் போய்க்கொண்டிருக்கும்போதோ செய்துக்கொள்ளப்பட்ட சாஸனமாயிருப்பதாகத் தீர்வைக்கும், குறிக்கப்பட்ட காலத்திற்காகச் செய்துகொள்ளப்பட்ட சாஸனமாயிருப்பதாகத் தீர்வைக்கு முள்ளாகும்.

1879 - வருஷத்து 11-வது ஆக்டின்ப

8. (1) இந்த ஆக்டில் என்ன சொல்லிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பாண்டுகள், டிபென்ஷர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளைப் பிறப்பித்து,

டிக்கான கடன்களுக்காகப் பிறப்பிக்கப்பட்ட பாண்டுகள் டிபென்கூர் கடன் பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகள்.

1879-ஆு தத்துப் பிரதேச அதிகாரிகளின் கடனைக் குறித்த ஆக்ட்டின் நிபந்தனைகளின்படியாவது அந்தந்தகாலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற வேறே யாதொரு சட்டத்தின் நிபந்தனைகளின்படியாவது கடன்வாங்குகிற யாதொரு பிரதேச அதிகாரிகள் - அப்படிப்பட்ட கடன்விஷயமாக, அவர்களால் பிறப்பிக்கப்படும் பாண்டுகள் டிபென்கூர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளின் மொத்தத்தொகைக்கு நூற்றுக்கு ஒன்று வீதம் தீர்வை செலுத்தத்தக்கவராவார்கள் ; மேலும், அப்படிப்பட்ட பாண்டுகள், டிபென்கூர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளுக்கு முத்திரைபோடவேண்டிய அவசியமில்லை ; அன்றியும், அவைகள் புதுப்பிக்கப்படும் போதாவது ஒன்றாய்ச் சேர்க்கப்படும் போதாவது பிரிக்கப்படும் போதாவது மற்றப்படியாவது இன்னும் யாதொரு அதிக தீர்வை அவைகளுக்கு விதிக்கத்தக்கதாகாது.

(2) முத்திரை போடவேண்டியதில்லையென்றும் இன்னும் சில தீர்வை விதிக்க வேண்டியதில்லை யென்றும் சில பாண்டுகள், டிபென்கூர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளுக்கு நிவாரணை ஏற்படுத்தியிருக்கிற (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள நிபந்தனைகள் - உள்ளே கண்டிருக்கிற மாதிரியான வெளியே நின்றிருக்கும் சகல கடன்களையும் குறித்த பாண்டுகள், டிபென்ஷர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளுக்குப் பிரயோகப்படும் ; அப்படிப்பட்ட சகல பாண்டுகள், டிபென்கூர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகள் முத்திரை போடப்பட்டாலும் முத்திரை போடப்படாவிட்டாலும் செலாவணியாகும்:

ஆனல், அப்படிப்பட்ட பாண்டுகள், டிபென்கூர் கடன்பத்திரங்கள் அல்லது வேறே ஈடுகளுக்காக வாங்கத்தக்க தீர்வையானது ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைக்கொண்டு முன்னமே செலுத்தப்பட்டிராவிட்டாலும் வாஜா செய்யப்பட்டிராவிட்டாலும் 1897-ம் ஆு மார்ச்சுமீ 26வைக்குமுன்னமே ஷை தீர்வையினின்றும், ஷை பாண்டுகள் முதலியவைகளைப்பிறப்பித்த பிரதேச அதிகாரிகள் இதிற்கண்ட தெகனுலும் நிவாரணையாகமாட்டார்கள்,

(3) இந்தப் பிரிவினால் செலுத்தவேண்டியதாயிருக்கிற தீர்வையைச்செலுத்தாமல் வேண்டுமென்று அசட்டை செய்கிற விஷயத்திலே, செலுத்தப்படத்தக்க தீர்வையின் மேல் நூற்றுக்குப்பத்துக்குச்சரியான ஒரு தொகையையும், அவ்வாறு செலுத்தாமல் அசட்டை பண்ணிக்கொண்டே போகிற முதல் மாதத்திற்குப் பிறகு ஒவ்வொரு மாதத்திற்கும் அதேமாதிரியான தண்டத்தொகையையும் பிரதேச அதிகாரிகள் கவர்மெண்டாருக்குச் செலுத்துவதற்குள்ளாவார்கள்.

தீர்வையைக் குறைப்பதற்காவது வஜா பண்ணுவதற்காவது வேறுவகையால் ஒழுங்கு படுத்துவதற்காவது அதிகாரம்.

9. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்ட விதி அல்லது உத்தரவு மூலமாய்—

(a) எந்த ஆதரவுகளுக்காகிலும், குறித்த ஓரினமான ஆதரவுகளுக்காகிலும் அந்த இனத்தைச்சேர்ந்த ஆதரவுகளிலெதற்காகிலும், குறித்த எந்த வகுப்பாராலாவது அவர்கள் பட்சத்திலாவது அந்த வகுப்பிலுள்ள எந்த நபர்களாவது நபர்கள் பட்சத்திலாவது ஆதரவுகள் எழுதிக்கொடுக்கப்படுமாகில் அந்த ஆதரவுகளுக்காகிலும் வாங்கத்தக்க தீர்வைகளை ப்ரிட்டிஷ்இந்தியா முழுவதிலுமாவது யாதொரு பாகத்திலாவது முன்போனதைத் தழுவியாகிலும் பின்வருவதைத் தழுவியாகிலும், குறைக்கலாம் அல்லது தள்ளிக்கொடுக்கலாம் ; மேலும்,

(b) டிபென்கூஷரென்னும் கடன்பத்திரங்கள், பாண்டுகள் அல்லது வேறே விற்பனையாகத்தக்க ஈடுகளை, சட்டப்படி ஏற்பட்ட யாதொரு கம்பெனியாராவது ஒன்றுசேர்ந்த வேறே கூட்டத்தாராவது பிறப்பிக்கும் விஷயத்திலே தீர்வைகளைவேறுவகையினால் ஒழுங்குபடுத்துவதற்காகிலும் ஒன்றாய்ச் சேர்ப்பதாகிலும் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

B —முத்திரைகளைக்குறித்தும் அவைகளை உபயோகிக்கிற விதத்தைக் குறித்தும்.

தீர்வைகளைச்செலுத்துகிறவிதம்.

10. (1) இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர ஆதரவுகள் உட்பட்டிருக்கிற எல்லாத்தீர்வைகளும்

(a) இதில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படிக்காவது,

(b) அப்படிப்பட்ட நிபந்தனை எதுவும் அதற்குச்சம்பந்தப்படாதபோது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்கள் விதியேற்படுத்தி உத்தரவு செய்கிறபடிக்கவாது,

முத்திரைகள் மூலமாய்ச் செலுத்தப்படும் ; அப்படி செலுத்தினதற்கு அந்த ஆதரவுகளின் மேலுள்ள முத்திரைகளே அடையாளமாகும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக் கொண்டு மற்ற விஷயங்களை ஒழுங்குபடுத்துவதோடுங் கூட,—

(a) ஒவ்வொரு விதமான ஆதரவு விஷயத்தில், உபயோகிக்கும்படியான முத்திரைகளின் விவரத்தையும்,

(b) முத்திரை அழுத்தியிருக்கிற ஆதரவுகள் விஷயத்தில் உபயோகிக்கும்படியான முத்திரைகளின் விவரத்தையும்,

(c) யாதொரு கீழ்த்திசைச்சுதேசபாஷையிலெழுதப்பட்டிருக்கிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டுகள் விஷயத்தில் - அவைகளை எழுதவேண்டிய கடிதாசு அளவையும், ஒழுங்குபடுத்தலாம்.

பசைமுத்திரைகளை உபயோகிப்பது. **11.** அடியில் கண்டிருக்கிற ஆதரவுகளுக்குப் பசைமுத்திரைகளை ஒட்டலாம். அவையாவன:—

(a) கேட்டவுடனே யல்லாமல் மற்றப்படி பணஞ்செலுத்தத்தக்கதாய் ஜதை ஜதையாயெழுதியிருக்கிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜுகளின் பாகங்கள் தவிர, ஒரு அணு தீர்வைக்குட்பட்ட ஆதரவுகள் ;

(b) ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் செய்யப்பட்டாவது எழுதப்பட்டாவதிருக்கிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜுகள், ப்ராமிஸொரி நோட்டுகள் ;

(c) ஹைகோர்ட் ரோலில் அட்வொகேட்டாகவாவது வக்கீலாகவாவது அட்டர்ணியாகவாவது செய்கிற பதிவு ;

(d) நோட்டேரியல் ஆக்டுகள் ;

(e) சட்டப்படி ஏற்பட்ட யாதொரு கம்பெனி அல்லது ஒன்றாய்ச்சேர்ந்த வேறே கூட்டத்தில் பங்குகளை எண்டார்ஸ்மென்ட் மூலமாய் வேறொருவர் பெயருக்குச்செய்வது.

பசைமுத்திரைகளை அழிப்பது.

12. (1) **(a)** தீர்வைக்குட்பட்ட யாதொரு ஆதரவை எவன் எழுதிக்கொடுத்தாலும் அதற்கு யாதொரு பசை முத்திரை ஒட்டுகிறவன் ஒட்டும்போதே அந்த முத்திரையை மறுபடியும் உபயோகிக்கக்கூடாத படி அழித்துவிடவேண்டும் ;

(b) பசைமுத்திரை ஒட்டியிருக்கிற கடிதாசியின்மேல் ஆதரவு எழுதுகிறவனெவனுவது, மேற்சொல்லியவிதமாய் முன்னமே தானே அந்த முத்திரை அழித்து விடப்படாதிருந்தால் அதை எழுதும்போது மறுபடியும் உபயோகிக்கப் படாதபடி அந்த முத்திரையை அழித்துவிடவேண்டும்.

(2) யாதொரு ஆதரவில் ஒட்டியிருக்கிற பசைமுத்திரையை மறுபடியும் உபயோகிக்கக்கூடாதபடி அழித்துவிடாதிருந்தால் அந்த முத்திரை சம்பந்தமானமட்டில் அந்த ஆதரவு வெற்றுக்கடுதாசியிலெழுதி யிருப்பதாக எண்ணப்படும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பசைமுத்திரையை ரத்து செய்யவேண்டியவனுயிருக்கிற நபர் அந்த முத்திரையின் மேலாகவாவது அதற்குக் குறுக்காகவாவது தன்னுடைய பெயரையாகிலும் தன்னுடைய வர்த்தகசங்கத்தின் பெயரையாகிலும் அதன் பெயர் முதலெழுத்துகளையாகிலும் சரியானடீததி சகிதமாக எழுதியாவது, பலிதமாகத்தக்கதான வேறு எந்த விதமாயாவது ரத்து செய்யலாம்.

முத்திரை அழுத்தியிருக்கிற ஆதரவுகளை எவ்விதமாய் எழுத வேண்டுமென்பது.

13. முத்திரை அழுத்தியிருக்கிற கடிதாசியின்மேல் எழுதப்பட்ட பிரதி ஆதரவையும், அந்த ஆதரவின்மேல் அந்த முத்திரை தெரியும்படிக்கும் அந்தமுத்திரை வேறொரு ஆதரவுக்கு உபயோகிக்கவாகிலும் பொருத்தவாகிலும் கூடாதபடிக்கும் எழுதவேண்டும்.

ஒரு முத்திரை கடுதாசியின் மேல் ஒரே ஒரு ஆதரவை எழுதுவது.

14. தீர்வைக்குட்பட்ட ஆதரவை முன்னமே எழுதியிருக்கிற முத்திரைக் கடிதாசியின்மேல் தீர்வைக்குட்பட்ட வேறொரு ஆதரவை எழுதக் கூடாது.

ஆனல், யாதொரு ஆதரவினுலுண்டாகிற அல்லது ருஜூப்படுகிற சுதந்தரத்தை வேறொருவர் பெயருக்குச் செய்கிறதற்காவது, செ

லுத்தும்படிக்காகிலும் ஒப்பிக்கும்படிக்காகிலும் யாதொரு ஆதரவினுல் பந்தோபஸ்து செய்திருக்கிற பணம் அல்லது சரக்கை வரப்பற்றிக் கொண்டதாக ஒப்புக்கொள்ளுகிறதற்காவது, அந்த ஆதரவின்மேல் கிரமமாய் முத்திரை போட்டகிலும் முத்திரை தீர்வைக்குட்படாமலாகிலும் இருக்கிற எண்டார்ஸ்மெண்டை எழுதுவதற்கு இந்தப் பிரிவிலுள்ள யாதொரு நிபந்தனையினுலும் தடையுண்டாக மாட்டாது.

13 அல்லது 14 வது பிரிவுக்கு விரோதமாய் எழுதப்பட்ட ஆதரவு முத்திரை போட்டிராததாக எண்ணப்படுவது.

15. 13 - வது அல்லது 14-வது பிரிவுக்கு விரோதமாய் எழுதப்பட்ட பிரதி ஆதரவும் முத்திரை போட்டிராததாக எண்ணப்படும்.

தீர்வையைக்கண்டெழுதுவது.

16. யாதொரு ஆதரவுக்கு வாங்கத்தக்க தீர்வையாவது அதற்குத் தீர்வை நிவாரணையாவது வேறொரு ஆதரவிற்கு உள்ளபடி செலுத்தப்பட்ட தீர்வைக்கு எவ்விதத்திலாகிலும் சம்பந்தப்படுகிறதாயிருந்தால், கலெக்ட்டருக்கு எழுத்துமூலமாய் மனுசெய்துகொண்டு அவ்விரண்டு ஆதரவுகளையும் காட்டுவதன்மேல் பிந்திச்சொன்ன தீர்வை செலுத்தினதை, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதியேற்படுத்தி நிர்ணயிக்கிறபடி முதலில் சொன்ன அந்த ஆதரவின்மேல் கலெக்ட்டர் கைப்பட எண்டார்ஸ்மென்ட் பண்ணியாவது வேறே ஏதேனும் மாதிரி சொல்லப்பட்டிருந்தால் அந்தப்படி செய்தாவது கண்டெழுதவேண்டும்.

D.—ஆதரவுகளுக்கு முத்திரை போடவேண்டிய காலத்தைக்குறித்து.

ப்ரிடிஷ் இந்தியாவில் எழுதப்பட்ட ஆதரவுகள்.

17. ப்ரிட்டிஷ் இந்தியாவில் எவனுவது எழுதுவதாயிருக்கிற தீர்வைக்குட்பட்ட எல்லா ஆதரவுகளுக்கும் எழுதுவதற்கு முந்தியாவது எழுதும்போதாவது முத்திரை போடவேண்டும்.

பில்லுகள் (ப்ராமிஸொரி) நோட்டுகளல்லாமல் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெ

18. (1) பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட் தவிர ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் எழுதப்பட்டு மாத்திரம் தீர்வைக்

ளியில் எழுதப்பட்ட மற்ற ஆதரவுகள்.

குட்பட்டதாயிருக்கிற பிரதி ஆதரவுக்கும் ப்ரிட்டிஷ் இந்தியாவிலே அது முதலில் வரப்பற்றப்பட்ட பின்பு மூன்று மாதத்திற்குள் முத்திரை போடலாம் ;

(2) அப்படிப்பட்ட ஆதரவுக்குப் போடுவதைக் குறித்து சொல்லியிருக்கிற முத்திரை வகையைப்பற்றி ஸர்க்காரைச் சேர்ந்த யாதொரு நபர் கிரமமாய் முத்திரை போடக்கூடாத பட்சத்தில் அதை மேற்சொல்லிய மூன்று மாதகாலத்திற்குள் கலெக்ட்டரிடத்திற்குக் கொண்டு போகலாம் ; அப்படி கொண்டுபோகிற நபர் எவ்வளவு விலையுள்ள முத்திரை போடச்சொல்லிப் பணங்கொடுக்கிறானோ அந்த முத்திரையை, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் விதியேற்படுத்தி நிர்ணயிக்கிறபடி, அந்த ஆதரவுக்குக் கலெக்டர் போடவேண்டும்.

ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் எழுதப்பட்ட பில்லுகள் (ப்ராமிஸொரி) நோட்டுகள்.

19. ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில்எழுதப்பட்டாவது செய்யப்பட்டாவதிருந்து கேட்டவுடனேயல்லாமல் மற்றப்படி செலுத்தத்தக்கதாயிருக்கிற யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டை ப்ரிட்டிஷ் இந்தியாவிலே முதலில் உடையவன் அதை அங்கீகரிக்கச் சொல்லியாகிலும் பணங்கொடுக்கச் சொல்லியாகிலும் ப்ரிட்டிஷ் இந்தியாவில் கொண்டுவந்து காட்டுவதற்கு முன்னமேயாவது, அதை எண்டார்ஸ் செய்வதற்கு முன்னமேயாவது வேறொருவர் பெயருக்குச் செய்யவதற்கு முன்னமேயாவது வேறே விதமாய்க் கைமாறிச்செல்லும்படி செய்வதற்கு முன்னமேயாவது, அதற்குச் சரியான முத்திரையைஒட்டி அதை அழித்து விடவேண்டும்.

ஆனால்,—

(a) அப்படிப்பட்டயாதொரு பில் அல்லது நோட் ப்ரிட்டிஷ் இந்தியாவிலே உடையவன் கையில்வந்து சேருகிறபோது, சரியான பசை முத்திரை அதற்கு ஒட்டி 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் அழித்துவிடப்பட்டிருந்து, இன்னகாலத்தில் இன்ன நபர் செய்யவேண்டியதென்று இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடிக்கல்லாமல் மற்றப்படி அந்த முத்திரை ஒட்டப்பட்டதென்றாவது அழித்து விடப்பட்டதென்றாவது நம்ப அந்த உடையவனுக்கு முகாந்தரமில்லாத

பட்சத்தில், அந்த உடையவனுக்குச் சம்பந்தப்படுகிறமட்டி லே, அந்த முத்திரையானது கிரமமாய் ஒட்டி அழித்துவிடப் பட்டதாக எண்ணப்படும்.

(b) இந்த விலக்கில் சொல்லப்பட்ட எந்த நிபந்தனையினாலும், முத்திரையை ஒட்டவாவது அழித்துவிடவாவது தவறிப் போகிறவனெவனும் உள்ளாகவேண்டிய தண்டனையினின்றும் நிவர்த்தியாகமாட்டான்.

3-வது பிரிவைச் சேர்ந்த (bb) குறிப்பிட்ட பகுதியின் படி அதிகப்படுத்தப் பட்ட தீர்வைக்குள்ளாகக் கூடிய சில ஆதரவுகளுக்குத் தீர்வை செலுத்துவது.

* **19-A.** சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியல்லாமல் ப்ரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த வேறே யாதொரு பாகத்தில் யாதொரு ஆதரவானது ப்ரிட்டிஷ் இந்தியாவைச்சேர்ந்த அந்த பாகத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற முத்திரைக்கடிதாசியைக் குறித்த சட்டத்தின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதாயிருந்து, அதற்குப்பிறகு 3-வது பிரிவைச் சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையிற்கண்ட **(bb)** குறிப்பிட்ட பகுதியின்படி ஷை ப்ரெஸிடென்ஸியில் முன்னிலும் அதிகமாயுள்ள ஒரு வீதப்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதாகும் பட்சத்தில்—

(i) 3-வது பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஷை ஆதரவுக்கு விதிக்கப்படத்தக்க தீர்வைத்தொகையானது 1-A ஷெட்யூலின்படி அதற்கு விதிக்கப்படத்தக்க தொகையிலிருந்து ஏற்கெனவே அதற்கு ப்ரிட்டிஷ் இந்தியாவில் செலுத்தப்பட்டிருக்கும் தீர்வைத்தொகை ஏதாவதிருந்தால் அதைக் கழித்துவிட்டபிறகு ஏற்படும் தொகையாகும்;

(ii) ஷை ஆதரவில் ஏற்கனவே ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் எவையேனும் இருந்தால் அவைகளுடன்கூட, அந்த ஆதரவானது உயர்ந்த தீர்வை செலுத்தப்படத்தக்கதானபோது முதல் தடவையாய் ப்ரிட்டிஷ் இந்தியாவில் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆதரவாயிருந்தால் அதற்கு எம்மாதிரியும் எந்தக் காலத்திலும் எந்த நபர்களாலும் முத்திரை போடப்படுமோ அம்மாதிரியும் அதே காலத்திலும் அதே நபர்களாலும் **(i)** குறிப்பிட்ட பகுதியின்படி விதிக்கப்படத்தக்க தீர்வைத்தொகையைச் செலுத்துவதற்கு அவசியமாயிருக்

---

* இந்த பிரிவு சென்னபட்டணம் 1922 - ம் வருஷத்து 6 - வது ஆக்ட்டால் அமைத்துக்கொள்ளப்பட்டது.

கும் முத்திரைகளைக் கொண்டு முத்திரை போடப்படவேண்டும்; மேலும்,

(iii) சந்தர்ப்பத்துக்கேற்றபடி 32-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின் விலக்குநிபந்தனையிற்கண்ட **(b)** அடையாள மிட்ட பகுதியிலாகிலும் **(c)** அடையாளமிட்ட பகுதியிலாகிலும் கண்டிருக்கும் நிபந்தனைகள் - அவசியமான திருத்தங்களோடு ஷை ஆதரவுக்குப் பிரயோகப்படும்; ஆனால், ஷை விலக்கு நிபந்தனையின் **(a)** அடையாளமிட்ட பகுதியில் கண்ட நிபந்தனைகள் அதற்குப் பிரயோகப்படமாட்டா.

D.—தீர்வைக்காகப் பெறுமானத்தை மதிப்பதைக்குறித்து.

அன்னியதேசத்து நாணயங்களில் கண்டிருக்கிற தொகையை வேறொரு நாணயத் தொகையாக மாற்றுவது.

20. (1) ப்ரிட்டிஷ் இந்தியா நாணயம் தவிர வேறே யாதொரு நாணயமாகவாவது குடியேறிய நாட்டில் வழங்குகிற நாணயமாகவாவது கண்டிருக்கிற யாதொரு ணத்தைக்குறித்து யாதொரு ஆதரவு மதிப்பின் மேல் தீர்வைக்குட்பட்டதாயிருந்தால், ஆதரவின் தேதியில் வழங்குகிற மார்ப்புவட்டவீதப்படி அந்தப்பணத்தை ப்ரிட்டிஷ் இந்தியா நாணயமாக மாற்றிக்கொண்டு அந்தத் தொகையின்மேல் அப்படிப்பட்ட தீர்வையைக் கணக்காக்க வேண்டும்.

(2) இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாக அப்போதைக்கப் போது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் முத்திரைத்தீர்வையைக் கணக்கிடும் பொருட்டுப் ப்ரிட்டிஷ் அல்லது அன்னியதேசத்து யாதொரு நாணயத்தை ப்ரிட்டிஷ் இந்தியாவின் நாணயமாய் மாற்றுவதற்காக மார்ப்பு வட்டவீதத்தை நிர்ணயிக்கலாம்: அப்படிப்பட்ட விதமானது - (1) குறிப்பிட்ட உட்பிரிவின் காரியங்களுக்காக வழங்கிவருகிற வீதமாக எண்ணப்படும்.

முதற்பணப் பங்குகளையும் விற்கத்தக்க பத்திரங்களையும் மதிப்புச் செய்கிறவிதம்.

21. யாதொரு முதற்பணப்பங்கைக்குறித்தாவது விற்கத்தக்க அல்லது வேறே யாதொரு பத்திரத்தைக் குறித்தாவது ஆதரவு மதிப்பின்மேல் தீர்வைக்குட்பட்டதாயிருந்தால், அந்த ஆதரவின் தேதியில் அந்த முதற்பணப்பங்கு அல்லது பத்திரத்திற்குண்டான

சராசரி விலைப்படி அதன்கிரயம் அல்லது மதிப்பின்மேல் அந்தத் தீர்வையைக் கணக்காக்கவேண்டும்.

மார்ப்பு வட்ட வீதத்தைக் குறித்தாவது சராசரி கிரயத்தைக் குறித்தாவது சொல்லி யிருப்பது இன்னவாகு மென்பது.

22. யாதொரு ஆதரவில் அப்போதைய மார்ப்புவட்ட வீதமேக சராசரி விலையோ எழுதியிருந்து, அதற்குத்தக்கபடி முத்திரைபோட்டிருந்தால், கண்டெழுதியிருக்கிற அந்த விஷயத்திற்குச் சம்பந்தப்படுகிற மட்டிலே, கிரமமாய் முத்திரை போடப்படவில்லையென்று ருஜுவாகிறவரையில் அந்த ஆதரவுக்குக் கிரமமாய் முத்திரைபோட்டிருப்பதாகவே கொள்ளவேண்டும்.

வட்டி கண்டிருக்கிற ஆதரவுகள்.

23. வட்டி செலுத்துவதாக யாதொரு ஆதரவிலே பரிஷ்காரமாய் ஷரத்து கண்டெழுதியிருக்குமாகில், அந்த ஆதரவானது - அதில் வட்டி கண்டிராவிட்டால் எவ்வளவு தீர்வைக்குட்பட்டதாகுமோ அதற்கதிகத்தீர்வைக்கு உட்படத்தக்கதல்ல.

விற்பனை செய்யக்கூடிய பத்திரங்களின் கொதுவைகளோடு சம்பந்தப்பட்ட சில ஆதரவுகள் உடன்படிக்கைகளாக தீர்வைக்குட்படத் தக்கவை.

23-A. (1) (ப்ராமிஸொரி நோட்டாகவாவது பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜாகவாவதிராத) ஒரு ஆதரவானது—

(a) விற்பனை செய்யக்கூடிய யாதொரு பத்திரத்தைக் கொண்டுவந்துகாட்டும் சமயத்திலே, கடனாகக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுப்பதாயிருக்கும் பணத்தின் பொருட்டாயினும் ஈடாகக் கொடுக்கப்பட்டாலும்,

(b) விற்பனை செய்யக்கூடிய யாதொரு பத்திரத்தை ஈடாயிருக்கும்படி உத்தேசித்துக் கிரமமாய் முத்திரையிட்டு எழுதிக் கொடுக்கப்பட்ட ட்ரான்ஸ்பரை மீட்டுக்கொள்ளத்தக்கதாகச் செய்தாலும், ஏதேனும் ஷரத்து ஏற்படுத்தி வரையறைசெய்தாலும்,

சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூலைச்சேர்ந்த 5 (c) நம்பர் பகுதியின்படியாகிலும், 1-A ஷெட்யூலின் 4 (c) நம்பர் பகுதியின்

படியாகிலும், தீர்வைவிதிக்கத்தக்க உடன்படிக்கையாகவாவது உடன்படிக்கையின் யாதாஸ்தாகவாவது இருந்தால் எப்படியோ அப்படியே தீர்வை விதிக்கத்தக்க தாகும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு ஆதரவுதொகை சேர்ந்துவிட்டதாக ரத்துசெய்யப்பட்டால் அதே மாதிரியான தீர்வையே விதிக்கத்தக்கதாகும்.

கடனுக்கு ஐவேஜாகவாவது இனிமேல் பணஞ்செலுத்துவது முதலியவைற்றிற்குட் பட்டாவது ட்ரான்ஸ்பர் செய்வதற்குத் தீர்வைபோடுகிறவிதம்.

24. ஒருவனுக்குச் சேரவேண்டிய யாதொரு கடனுக்கு முழுவதுமாவது கொஞ்சமாவது ஐவேஜாக அவனுக்கு யாதொரு சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டாலும், யாதொரு பணம் அல்லது முதற்பணப்பங்கைப்பற்றிச் சொத்து பெறுப்பாகவாவது சிக்குப்பட்டாவதிருக்கிறதோ இல்லையோ எப்படிக்காயினும், அந்தப்பணம் அல்லது முதற்பணப்பங்கைச் செலுத்துவதற்காகிலும் ட்ரான்ஸ்பர் செய்வதற்காகிலும் நிச்சயமாகவாவது ஈரொட்டாகவாவது உள்ளாக்கிச் சொத்து ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டாலும், அப்படிப்பட்டகடன்-பணம் அல்லது முதற்பணப்பங்கை, எதைக்குறித்து அந்த ட்ரான்ஸ்பர் மதிப்பின்மேல் தீர்வைக்குட்பட்டதாயிருக்கிறதோ அந்த ஐவேஜு முழுவதுமாகவாகிலும் கொஞ்சமாகவாகிலும் சங்கதிக்குத்தக்கபடி எண்ணவேண்டும்.

ஆனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூல் 18-வது பகுதியிலாவது 1-A ஷெட்யூல் 16-வது பகுதியிலாவதுகண்ட யாதொரு விற்கிரய ஸெர்ட்டிபிகேட்டுக்கு இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

விவரணம்:—கொதுவைக்காவது வேறே பொறுப்புக்காவதுட்பட்ட சொத்து விற்பனையாகிற விஷயத்திலே, செலுத்தப்படாத யாதொரு கொதுவைத்தொகை அல்லது கொடுக்கும்படி கணக்கேற்பட்டதொகையும், அதற்காக வட்டி ஏதாவதிருந்தால் அதுவும் விற்கிரயத்தொகையைச் சேர்ந்த பாகமாக எண்ணப்படும்.

ஆனால், கொதுவைக்குட்பட்ட சொத்தானது கொதுவையைத் துக்கொண்டிருப்பவனுக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டால், அவன் ட்ரான்ஸ்பர் விஷயமாய்ச் செலுத்தவேண்டியிருக்கிற தீர்வைத்தொ

கையிலிருந்து, நான் அந்த கொதுவை விஷயமாய் முன்னமே செலுத்தியிருக்கும் யாதொரு தீர்வைத்தொகையைக் கழித்துக்கொள்ள அர்ஹனுவான்.

திருஷ்டாந்தங்கள்.

(1) ஏ-என்பவன் பி-என்பவனுக்கு 1,000 - ரூபாய் கொடுக்கவேண்டியவனுயிருக்கிறுன். ஏ-என்பவன் ஒரு சொத்தை ஆர்-என்பவனுக்கு விற்பனை செய்கிறுன். அந்த விற்பனைத் தொகை 500-ரூபாய்; முந்திய கடன் நிவர்த்தியாவதற்குறிய தொகை 1000 - ரூபாய். முத்திரைத்தீர்வை 1500 - ரூபாய்க்குச் செலுத்தத்தக்கதாகும்.

(2) 1,000-ரூபாய்க்கு ஸி-என்பவனிடத்தில் ஒரு சொத்து கொதுவை வைக்கப்பட்டிருக்கிறது; அதற்கு 200 - ரூபாய் வட்டி சேரவேண்டியதாயிருக்கிறது; அந்த சொத்தை ஏ-என்பவன் 500 ரூபாய்க்கு பி-என்பவனுக்கு விற்கிரயஞ் செய்கிறுன்; 1700 ரூபாய்க்கு முத்திரைத்தீர்வை செலுத்தத்தக்கது.

(3) ஏ-என்பவன் 10,000 ரூபாய் மதிக்கத்தக்க ஒரு வீட்டை பி-என்பவனிடத்தில் 5,000 ரூபாய்க்குக் கொதுவைவைக்கிறுன். அப்புறம் பி-என்பவன் அந்த வீட்டை ஏ-என்பவனிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளுகிறுன். 10,000 ரூபாய்க்குச் செலுத்தவேண்டியிருக்கிற முத்திரைத்தீர்வைத்தொகையிலிருந்து, அக்கொதுவை விஷயமாய் முன்னதாகச் செலுத்தப்பட்டிருக்கும் முத்திரைத்தீர்வைத்தொகை கழித்துவிடலாம்.

வருஷவாரி வர்த்தனை முதலியவிஷயத்தில் பெறுமானத்தை மதிப்பது.

25. வருஷவாரித்தொகை அல்லது காலக்கிரமமாய்ச்செலுத்தத்தக்க வேறே தொகை செலுத்தும்படி பந்தோபஸ்து செய்வதற்காக ஆதரவு எழுதப்பட்டாலும், யாதொரு ஒப்படைப்பத்திரத்துக்கு ஐவேஜானது வருஷவாரி வர்த்தனை அல்லது காலக்கிரமமாய் செலுத்தத்தக்க வேறே தொகையாயிருந்தாலும், (சங்கதிக்குத்தக்கபடி) அப்படிப்பட்ட ஆதரவினுல் பந்தோபஸ்துசெய்திருக்கிற தொகையாவது அப்படிப்பட்ட ஒப்படைப்பத்திரத்துக்கு ஐவேஜாவது இந்த ஆக்டிலுள்ள காரியங்களின் பொருட்டு,—

(a) வரையறுக்கப்பட்ட காலத்திற்குத் தொகை செலுத்தப்படத்தக்கதாயிருந்து அதனுலே செலுத்தவேண்டிய மொத்தத்தொகை இவ்வளவென்று முன்னதாய் நிச்சயிக்கக்கூடிய விஷயத்தில், அப்படிப்பட்ட மொத்தத்தொகையாகவும்,

(b) நிரந்தரமாகவாவது, அந்த ஆதரவு அல்லது ஒப்படைப்பத்திரத்தின் தேதியில் ஜீவித்திருக்கிற யாவனொருவனுடைய அந்தியகாலத்தோடு முடிவுபெறாமல் வரையற்றகாலத்திற்காவது தொகை செலுத்தப்படத்தக்க விஷயத்திலே, முதல்தொகை செலுத்தவேண்டியது எப்போதோ அந்தத்தேதி முதல் கணக்கிட்டு இருபது வருஷகாலத்தில் அந்த ஆதரவு அல்லது பத்திரத்திலுள்ள ஷரத்துகளின்படி எவ்வளவு செலுத்தப்படுமோ அல்லது செலுத்தத்தக்கதாகுமோ அந்த மொத்தத் தொகையாகவும்,

(c) அந்த ஆதரவு அல்லது ஒப்படைப்பத்திரத்தின் தேதியில் ஜீவித்திருக்கிற யாவனொருவனுடைய அந்தியகாலத்தோடுமுடிவுபெறுவதாய் அளவுபடாதகாலத்திற்குத் தொகை செலுத்தப்படத்தக்க விஷயத்திலே, முதல் தொகை செலுத்தவேண்டியது எப்போதோ அந்தத்தேதிமுதல் கணக்கிட்டுப் பன்னிரண்டு வருஷகாலத்தில் மேற்சொல்லியபடி எவ்வளவு செலுத்தப்படுமோ அல்லது செலுத்தத்தக்கதாகுமோ அந்த மொத்தத்தொகையாகவும்,—எண்ணப்படும்.

உள்ளசங்கதியைப்பற்றிய பெறுமானம் இன்னதென்று குறிக்கப்படாத விஷயத்தில் முத்திரை.

26. மதிப்பின்மேல் தீர்வைக்குட்பட்ட யாதொரு ஆதரவிலுள்ள பொருளாகிய தொகையாவது பொருளின் கிரயமாவது அந்த ஆதரவுஎழுதப்பட்ட தேதியிலாகிலும் அது முதலில் எழுதப்பட்ட தேதியிலாகிலும் நிச்சயிக்கக் கூடாமலாவது (இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே எழுதப்பட்ட ஆதரவு விஷயத்தில்) நிச்சயித்திருக்கக் கூடாமலாவதிருக்குமாகில், அதேவகையான ஆதரவில் எவ்வளவு தொகை அல்லது கிரயம் கண்டிருந்தால் வாஸ்தவத்தில் உபயோகிக்கப்பட்ட முத்திரை அப்படி எழுதப்பட்ட தேதியில் போதுமானதாயிருக்குமோ அந்தத்தொகை அல்லது கிரயத்தைவிட அதிகமாக அப்படிப்பட்ட ஆதரவைக்கொண்டு தாவா செய்யக்கூடாது;

ஆனால், உலோகம் விளைநிலமாகிய கனியின் வாடகை அல்லது குத்தகை விஷயத்திலே விளைவின் ஒருபாகமாவது சர்க்கார் தீர்வையாவது வாடகைத்தொகையாகவோ அதன் பாகமாகவோ பெற்றுக்கொள்ளப்படுமாகில்,—

(a) வாடகை அல்லது குத்தகை ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட்ஸெகிர்டெரி அவர்களாலாவது அவர்களுக்காகவாவது கொடுக்கப்பட்டிருந்தால், பிரஸ்தாபவிஷயத்தைப்பற்றிய சகல கூலாம்சங்களையும் யோசித்து, குத்தகை அல்லது வாடகைச் சீட்டின் பிரகாரம் ஷை ஸ்டேட் ஸெகிர்டெரி அவர்களுக்குச் சர்க்கார் தீர்வை ரூபமாகவோ பங்கின் ரூபமாகவோ செலுத்தக்கூடியதாகுமென்று கலெக்டர் மதிப்பிடும் தொகை அல்லது மதிப்பின்படிக்காவது,

(b) குத்தகை அல்லது வாடகை வேறே எவராவது கொடுத்திருந்தால் வருஷத்திற்கு இருபதினுயிரம் ரூபாய் வீதப்படிக்காவது,

முத்திரைத்தீர்வையின் பொருட்டு ஷை சர்க்கார் தீர்வை அல்லது பங்கின் மதிப்பைக்கணக்கிட்டு ஏற்படுத்தினுல் போதுமானதாயிருக்கும்; அது சர்க்கார் தீர்வையாயிருந்தாலுஞ்சரி, பங்காயிருந்தாலுஞ்சரி, அத்தொகை முழுவதும் ஷை குத்தகை அல்லது வாடகையின் பிரகாரம் சுதந்தரித்துக் கேட்கத்தக்கதாகும்.

அன்றியும், 31-வது அல்லது 40-வது பிரிவின்படி ஒரு ஆதரவு விஷயமாய் நடவடிக்கைகள் நடத்தப்பட்டிருந்தால், கலெக்டரால் ஸொர்ட்டிபை பண்ணப்பட்டிருக்கும் தொகையானது அந்த ஆதரவு எழுதப்பட்ட தேதியில் வாஸ்தவமாய் உபயோகிக்கப்பட்ட முத்திரையாக எண்ணப்படும்.

தீர்வைக்குச் சம்பந்தப்படுகிற சங்கதிகளை ஆதரவில் கண்டெழுதுவது.

27. யாதொரு ஆதரவுக்குத் தீர்வை விதிப்பதற்காவது அதற்கு விதிக்கவேண்டிய தீர்வைத்தொகைக்காவது சம்பந்தப்படுகிற ஐவேஜு ஏதாவதிருந்தால் அதையும் மற்றெல்லாச் சங்கதிகளையும் விருத்தாந்தங்களையும் அதில் எதார்த்தமாகப் பூர்த்தியாய்க் கண்டெழுதவேண்டும்.

சில ஒப்படைப் பத்திரங்கள் விஷயத்தில் தீர்வையைக்குறித்து கற்பனை.

28. (1) யாதொரு சொத்தை முழுமைக்கும் ஒரு ஐவேஜுக்காக விற்பனைசெய்ய உடன்படிக்கை செய்திருந்து அந்தச் சொத்தை வெவ்வேறு பாகமாக வெவ்வேறு ஆதரவுகளைக் கொண்டு கிரயக்காரனுக்கு ஒப்படை செய்கிறதாயிருந்தால், அந்த ஐவேஜைப்

பிரத்தியேகமான அந்தந்தப் பாகத்திற்குண்டான வெவ்வேறு ஐவேஜ் அது சம்பந்தமான ஒப்படைப்பத்திரத்தில் கண்டெழுதப்படும்பட்சத்தில் உபயத்திராளுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரகாரம் பிரிக்கவேண்டும்; அந்த ஒப்படைப்பத்திரமானது அப்படிப்பட்ட வெவ்வேறு ஐவேஜ் சம்பந்தமாய் மதிப்பின்மேல் உண்டான தீர்வைக்குட்பட்டதாகும்.

(2) கூட்டாய் இரண்டு அல்லது பலபேராவது, தனக்காகவும் மற்றவர்களுக்காகவுமாகிலும் முழுவதும் மற்றவர்களுக்காகவாகிலும் யாதொரு நபராவது, சொத்து முழுவதையும் ஒரு ஐவேஜ் கொடுத்துக் கிரயத்துக்குக்கொள்வதாய் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்து அந்தச் சொத்து யாரால் அல்லது யாருக்காகக் கொள்ளப்பட்டதோ அவர்களுக்கு வெவ்வேறு ஆதரவுகள் மூலமாய் வெவ்வேறு பிரிவான ஐவேஜுக்கு அந்தச் சொத்து பிரிவு பிரிவாய் ஒப்படை செய்யப்பட்டால், பிரத்தியேகமான அந்தந்தப் பிரிவின் ஒப்படைப்பத்திரமானது அதில் கண்டிருக்கிற பிரத்தியேகமான ஐவேஜ் பிரிவு சம்பந்தமாய் மதிப்பின்மேல் உண்டான தீர்வைக்குட்பட்டதாகும்.

(3) யாதொரு சொத்தைக் கிரயத்துக்குக்கொள்வதாக யாதொரு நபர் உடன்படிக்கைசெய்திருந்து, அதற்கு ஒப்படைப்பத்திரம் பெறுதிருக்கையிலே, அந்தச்சொத்தை வேறே யாதொரு நபருக்கு விற்பனை செய்ய உடன்படிக்கைபண்ணி அதனாலே அந்த உட்கிரயக்காரனுக்கு நேராய் அது ஒப்படை செய்யப்படுமாகில், அந்த ஒப்படைப்பத்திரமானது பிரதமக்கிரயக்காரன் உட்கிரயக்காரனுக்குச்செய்கிற விற்பனைக்குண்டான ஐவேஜைக்குறித்து மதிப்பின்மேலுண்டான தீர்வைக்குட்பட்டதாகும்.

(4) யாதொரு சொத்தைக் கிரயத்துக்குக் கொள்வதாக ஒருவன் உடன்படிக்கை செய்திருந்து, அதற்கு ஒப்படைப்பத்திரம் பெறுதிருக்கையிலே, அந்தச்சொத்து முழுமையையுமாவது அதில்யாதொரு பாகத்தையாவது வேறே யாதொருநபருக்காகிலும் நபர்களுக்காகிலும் விற்பனைசெய்ய உடன்படிக்கைபண்ணி, அதனாலே அந்தச் சொத்து வெவ்வேறு நபர்களுக்குப் பிரிவுபிரிவாகப் பிரதம விற்கிரயக்காரனால் ஒப்படைசெய்யப்படுமாகில், உட்கிரயக்காரனுக்கு விற்கப்பட்ட அந்தந்தப்பிரிவின் ஒப்படைப்பத்திரமானது பிரதம ஐவேஜுத் தொகை

அல்லது பெறுமானம் நிமித்தமில்லாமலே, அந்த உட்கிரயக்காரன் செலுத்தின ஐவேஜுக்குமாத்திரம் மதிப்பின்மேலுண்டான தீர்வைக் குட்பட்டதாகும்; அப்படிப்பட்ட சொத்தில் மிகுதி ஏதாவதிருந்தால் அதற்காகப் பிரதமக்கிரயக்காரனுக்கு எழுதிக்கொடுக்கிற ஒப்படைப் பத்திரமானது - பிரதம ஐவேஜில் உட்கிரயக்காரர்கள் செலுத்தின ஐவேஜுகளின் மொத்தம்போக நிலுவை நின்றதற்கு மாத்திரம் மதிப் பின்மேல் உண்டான தீர்வைக்குட்பட்டதாகும்.

ஆனால், கடைசியாய்க்கண்டிருக்கிற ஒப்படைப்பத்திரத்தின் தீர்வை எந்த விஷயத்திலும் ஒரு ரூபாய்க்குக் குறைந்திருக்கக் கூடாது.

(5) உட்கிரயக்காரனானவன் தனக்கு நேராய் விற்கிற நபருடைய சுதந்தரத்தைக் குறித்து, தான் செலுத்தின ஐவேஜுக்காக மதிப்பின் மேலுண்டான தீர்வைக்குட்பட்டதாய் அப்பிரகாரமே கிரமமாய் முத்திரைபோட்டிருக்கிற ஒப்படைப்பத்திரமே பெற்றுக்கொண்டி ருப்பானாகில், தனக்கு அதே சொத்தைக்குறித்துப் பிரதம விற்கிரயக் காரன் பின்பு எழுதிக்கொடுக்கும் யாதொரு ஒப்படைப்பத்திரமானது அந்தப் பிரதம விற்கிரயக்காரன் பெற்றுக்கொண்ட ஐவேஜுக்காக ஏற்படும் ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை எவ்வளவோ அந்தத்தீர்வைக்குட்பட்டதாகும்; அப்படிப்பட்டதீர்வை ஐந்துரூபாய் க்கதிகப்படுமாகில் ஐந்துரூபாய் தீர்வைக்கே உட்பட்டதாகும்.

E.—தீர்வை செலுத்தத்தக்கவர் இன்னாரென்பது.

29. அடியில் கண்டிருக்கிறவர்களல்லாமல் மற்றவர்கள்செலுத்த வேண்டியதாகஉடன்படிக்கை ஏற்பட்டிராவிட்டால் சரியான முத்திரைக்கடிதாசி சவதரிக்கிற செலவை யார் ஏற்றுக்கொள்ள வேண்டியதென்றால்,—

தீர்வைகளை இன்னார் செலுத்துவது.

(a) சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெடியூலிலே அடியிற் கண்ட பகுதிகளிலெதிலாவது 1-A ஷெட்யூலில் அவைகளுக்குப் பொருத்தமான பகுதிகளில் எதிலாவது விவரிக்கப்பட்டிருக்கிற யாதொரு ஆதாரவு விஷயத்தில், அப்படிப்பட்ட ஆதாரவை எழுதுகிற வன், செய்கிறவன் அல்லது எழுதிக்கொடுக்கிறவன். அந்தப் பகுதிக ளாவன:—

நெ. 2 (அட்மினிஸ்ட்ரேஷன் பாண்ட்,)
,, 6 (ஆட்சிப்பத்திரங்களைக்கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன் படிக்கை,)
,, 13 (பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்,)
,, 12 (பாண்ட் பத்திரம்,)
,, 16 (பாட்டம்ரி பாண்டென்னும் கப்பலீட்டுப்பத்திரம்,)
,, 26 (கஸ்ட்டம்ஸ் பாண்ட்,)
,, 27 (டிபென்சூர் கடன்பத்திரம்,)
,, 32 (பின்னும் பொறுப்பு,)
,, 36 (இண்டெம்னிடி பாண்ட் என்னும் நஷ்ட விமோசனப் பத்திரம்,)
,, 40 (கொதுவைப்பத்திரம்,)
,, 49 (ப்ராமிஸொரி நோட்,)
,, 55 (விடுதலைப்பத்திரம்,)
,, 56 (கப்பற்சரக்கு அடமானபத்திரம்,)
,, 57 (ஜாமீன்பத்திரம் அல்லது கொதுவைப்பத்திரம்,)
,, 58 (பொருத்த ஆதரவு,)
,, 62 (a) சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியிலாவது ஒன்றுயச் சேர்ந்த வேறே கூட்டத்திலாவது பங்குகளை ட்ரான்ஸ் பர் செய்வது.)

(2) (8-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற டிபென்சூர்கள் தவிர டிபென்சூர் தீர்வைக்குட்பட்டதா யிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ் சரி, விற்பனையாகத்தக்க ஈடுகளாயுள்ள டிபென்சூர்களை ட்ரான்ஸ்பர் செய்வது,)

(a) பாண்ட், கொதுவைப்பத்திரம் அல்லதுஇன்ஷூரன்ஸ்பாலிஸியினுல் கிடைத்த யாதொரு வட்டியை ட்ரான்ஸ்பர் செய்வது:

(b) பையர் (**Fire**) இன்ஷூரன்ஸ் (தீ நஷ்டவிமோசனம்) தவிர வேறே இன்ஷூரன்ஸ் பாலிஸி விஷயத்திலே இன்ஷூரன்ஸ் பண்ணிக்கொள்ளுகிறவன்,

(c) ஒப்படைப் பத்திரவிஷயத்தில் (கொதுவைச்சொத்தை மறுபடியும் ஒப்படை செய்வது உட்பட)—அதைப் பெற்றுக்கொள்ளு

கிறவன்: குத்தகை அல்லது வாடகைச்சீட்டு விஷயத்திலே குத்தகை அல்லது வாடகைக்கு ஏற்றுக்கொள்ளுகிறவன் அல்லது அப்படி ஏற்றுக்கொள்ள உத்தேசிக்கிறவன் :

(d) குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு எதிரிடை விஷயத்தில்—குத்தகை அல்லது வாடகைக்கு விடுகிறவன் ;

(e) பரிவர்த்தனை ஆகரவு விஷயத்தில்—சமபாகமாய் பரிவர்த்தனைக்காரர்கள்.

(f) விற்பனை ஸெர்ட்டிபிகேட் விஷயத்தில்—அந்த ஸெர்ட்டிபிகேட் சம்பந்தப்படுகிற சொத்தைக் கிரயத்துக்குக்கொண்டவன்.

(g) பாரீகந்து விஷயத்தில்—பாகம் செய்து கொள்ளப்படும் சொத்து முழுவதிலே யாராருக்கு எவ்வளவு எவ்வளவு பங்கு இருக்கிறதோ அந்தப்பங்கினளவாகவும், ரெவினியு அதிகாரி அல்லது ஸிவில் கோர்ட்டார் அல்லது மத்தியஸ்தரால் செய்யப்பட்ட உத்தரவை நிறைவேற்றும் பொருட்டுப் பாகம் செய்யப்பட்டால், அந்த அதிகாரியாவது கோர்ட்டாராவது மத்தியஸ்தராவது உத்தரவு செய்கிற அளவாகவும், அதில் சம்பந்தப்பட்டிருக்கிற பங்குக்காரர்கள்.

30. தொகையில் இருபதுரூபாய்க்கு மேற்பட்ட தொகையாவது இருபது ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் செக் அல்லது ப்ராமிஸொரி நோட்டையாவது பெற்றுக்கொள்ளுகிறவனும், விலையில் இருபது ரூபாய்க்கு மேற்பட்ட யாதொரு அசையும் பொருளைக் கடனுக்காவது, கடனைச்சேர்ந்த - ஒரு பாகத்திற்காவது ஐவேஜாகப் பெற்றுக்கொள்ளுகிறவனும், அப்படிப்பட்ட பணம், பில், செக், நோட் அல்லது பொருளைச்செலுத்துகிறவனாலாகிலும், ஒப்பிக்கிறவனாலாகிலும் கேட்கப்படுவதன்மேல், அதற்காகக் கிரமமாய் முத்திரை போட்ட ரசீது கொடுக்கவேண்டும்.

சில விஷயங்களில் ரசீது கொடுக்கவேண்டிய கடமை

பைர் இன்ஷூரன்ஸ் சம்பந்தமாயுள்ள யாதொரு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்காக யாதொரு ஐவேஜையோ (ப்ரிமியம்) மேல்வாசியையோ பெற்றுக்கொள்ளுகிற அல்லது வரவுவைத்துக்கொள்ளுகிற யாதொரு நபர் அப்படிப்பட்ட ஐவேஜு அல்லது மேல்வாசியைப் பெற்றுக்கொண்ட அல்லது வரவு வைத்துக்கொண்ட பிறகு ஒரு மாதத்துக்குள்ளே, அதற்காகக் கிரமமாய் முத்திரை போட்ட ரசீது கொடுக்கவேண்டும்.

3-ம் அத்தியாயம்.

முத்திரைகளைக் குறித்து தீர்மானம்.

சரியான முத்திரையைக் குறித்து தீர்மானஞ் செய்வது.

31. (1) பூர்த்திசெய்யப்பட்டாகிலும், முன்னதாய் முத்திரை போட்டாகிலும் போடாமலாகிலும், யாதொரு ஆதரவு கலெக்ட்டரிடத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதைக் கொண்டுவருகிறவன் அதற்கேதாயிலும் தீர்வையிருந்தால், அதைக்குறித்து அந்த அதிகாரியினுடைய அபிப்பிராயங்கேட்க மனு செய்துகொண்டு (ஐந்துரூபாய்க் கதிகப்படாமலும் எட்டணுவுக்குக் குறையாமலும்) அந்தந்தவிஷயத்தில் கலெக்ட்டர் உத்தரவுசெய்கிற கட்டணத்தொகையைச் செலுத்துகிறபட்சத்தில் கலெக்ட்டரானவர் அந்த ஆதரவு தீர்வைக்குட்பட்டதாகத் தாம் அபிப்பிராயப்பட்டால் அந்தத்தீர்வை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டும்.

(2) அதற்காக கலெக்ட்டர் அந்த ஆதரவுக்குச் சங்கிரகத்தையும் அந்த ஆதரவுக்குத் தீர்வைபோடுவது சம்பந்தமாகவாவது அதற்குண்டான தீர்வைத்தொகைச் சம்பந்தமாகவாவதிருக்கிற சகல சங்கதிகளையும் வயணங்களையும் அதில் எதார்த்தமாகப் பூர்த்தியாய்க் கண்டெழுதியிருக்கிறதென்று ருஜுவாக அவருக்கு அவசியமாய்த் தோற்றுகிற அத்தாட்சிப் பிரமாணப்பத்திரிகை அல்லது வேறே சாட்சியத்தையும் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம்; மேலும், அப்பிரகாரமே அப்படிப்பட்ட சங்கிரகத்தையும் சாட்சியத்தையும் கொண்டுவந்து கொடுக்கிறவரையில் அவ்வித யாதொரு மனுவைப்பற்றி பிரவர்த்திக்க நிராகரிக்கலாம்.

ஆனல்,—

(a) இந்தப் பிரிவை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட யாதொரு சாட்சியத்தை, அதுசம்பந்தமான ஆதரவு உட்பட்டிருக்கிற தீர்வையைப்பற்றிய விசாரணையில் தவிர, யாதொரு வியில் விவகாரத்திலே எவனுக்கு விரோதமாகவாகிலும் உபயோகிக்கக்கூடாது.

(b) அப்படிப்பட்ட யாதொரு சாட்சியத்தைக் கொடுத்த பிரதிநபரும், அது சம்பந்தமான ஆதரவு உட்பட்டிருக்கிறபூர்த்தி

யான தீர்வை செலுத்தப்படுவதன்மேல், மேற்கண்ட சங்கதிகள் அல்லது வயணங்களில் யாதொன்று அப்படிப்பட்ட ஆதரவிலே உண்மையாய்க் கண்டெழுதாமல் விடப்பட்டதனுலே இந்த ஆக்ட்டின் பிரகாரம் அவனுள்ளாகும்படியான யாதொரு தண்டனையினின்றும் நிவர்த்தி செய்யப்பட்டவனுவான்.

கலெக்டர் ஸெர்ட்டிபை செய்வது.

32. (1) முப்பத்தோராவது பிரிவின்படி கலெக்ட்டரிடத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஆதரவானது தீர்வைக்குட்பட்டதாக அவர் அபிப்பிராயப்பட்டு,

(a) முன்னதாகவே பூர்த்தியாய் முத்திரை போடப்பட்டிருக்கிறதென்று கலெக்ட்டர் தீர்மானித்தாலும்,

(b) முப்பத்தோராவது பிரிவின்படி கலெக்ட்டர் தீர்மானித்த தீர்வையானது, அப்படி தீர்மானிக்கப்பட்ட தீர்வையில் அந்த ஆதரவைக்குறித்து முன்னதாய்ச் செலுத்தியிருக்கிற தீர்வை போக மிகுதி தொகையாவது செலுத்தப்பட்டிருந்தாலும்,

அந்த ஆதரவுக்குள்ள பூர்த்தியான தீர்வை செலுத்தப்பட்டிருக்கிறதென்று (தொகைகண்டு) அந்த ஆதரவின்மேல்எண்டார்ஸ்மெண்ட் பண்ணிக் கலெக்ட்டர் ஸெர்டிபை செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஆதரவு தீர்வைக்குட்பட்டதல்லவென்று கலெக்ட்டர் அபிப்பிராயப்பட்டால், அவர் அந்த ஆதரவு தீர்வைக்குட்பட்டதல்லவென்று மேற்கண்ட விதமாய் ஸெர்டிபை செய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி எண்டார்ஸ்மெண்ட் பண்ணியிருக்கிற யாதொரு ஆதரவானது கிரமமாய் முத்திரை போடப்பட்டதாயிருக்கிறதோ அல்லது தீர்வைக்குட்படாததாயிருக்கிறதோ அப்படிப்பட்டதாகவே எண்ணப்படும்; மேலும், தீர்வைக்குட்பட்டதாயிருந்தால் சாட்சியமாகவாவது மற்றப்படிக்காவது அது ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்; அன்றியும், அது பிரதமத்திலேயே கிரமமாய் முத்திரை போடப்பட்டிருந்தாற்போல அதை ரெஜிஸ்ட்டர் செய்யவும் அதைக் கொண்டு பிரவர்த்திக்கவும் கூடும்:

ஆனல், இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினுலும்—

5

(a) ப்ரிட்டிஷ் இந்தியாவிலே எழுதப்பட்டாகிலும் முதலில் எழுதப்பட்டாகிலுமிருந்து, எழுதப்பட்ட அல்லது முதலில் எழுதப்பட்டதேதிமுதல் ஒருமாதம் கழிந்த பின்பு கலெக்ட்டரிடத்திற்குக் கொண்டுவரப்பட்ட யாதொரு ஆதரவின்மேலாவது,

(b) ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் எழுதப்பட்டாகிலும் முதலில் எழுதப்பட்டாகிலுமிருந்து, ப்ரிட்டிஷ் இந்தியாவில் முதலில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட பின்பு மூன்று மாதம் கழிந்தபிறகு அவரிடத்திற்குக் கொண்டுவரப்பட்ட யாதொரு ஆதரவின்மேலாவது,

(c) ஒரு அணு அல்லது அரை அணு தீர்வைக்குட்பட்ட யாதொரு ஆதரவானது, 3-வது பிரிவைச்சேர்ந்த (aa) அல்லது (bb) அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (1-A ஷெட்யூலைச்சேர்ந்த 34-வது பகுதியில் கண்ட (a) குறிப்பிட்ட உட்பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள) யாதொரு சாகுபடிக்கொதுவை ஆதரவாவது, யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜாவது ப்ராமிஸொரி நோட்டாவது கிரமமாய் முத்திரைபோடப்படாத கடிதாசியின்மேல் எழுதப்பட்ட பின்பாகிலும் பூர்த்திசெய்யப்பட்ட பின்பாகிலும் அவரிடத்திற்குக் கொண்டுவரப்படுமாகில் அப்படிப்பட்டதின் மேலாவது,

எண்டார்ஸ்பண்ணக் கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டாகமாட்டாது.

4-ம் அத்தியாயம்.

கிரமமாய் முத்திரைபோட்டிராத ஆதரவுகள்.

ஆதரவுகளைப் பரிசீலனை செய்வதும் மறியில் பண்ணுவதும்.

33. (1) சட்டப்படிக்காவது உபயத்திராளின் சம்மதியின்மேலாவது சாட்சியம் வாங்க அதிகாரமுடைய பிரதிநபரும், போலீஸ் உத்தியோகஸ்தர் தவிர யாதொரு ஸர்க்கார் ஆபீஸ்விசாரணை அதிகாரமுடைய பிரதிநபரும், தங்கள் அலுவலை நிறைவேற்றுகையில் தீர்வைக்குட்பட்டதாகத் தாங்கள் அபிப்பிராயப்படுகிற யாதொரு ஆதரவு தங்களுக்குமுன் கொண்டுவரப்பட்

டாலும் வந்தாலும் அப்படிப்பட்ட ஆதரவுக்குக் கிரமமாய் முத்திரை போட்டிருக்கவில்லையென்று தங்களுக்குத் தோற்றுகிற பட்சத்தில், அதை மறியல் செய்யவேண்டும்.

(2) அதற்காக அப்படிப்பட்ட பிரதி நபரும்-அப்படிப்பட்டஆதரவுஎழுதப்பட்டபோதாவது முதலில் எழுதப்பட்டபோதாவது ப்ரிட்டிஷ் இந்தியாவில் வழ்ங்கிவருகிற சட்டதிட்டத்தில் சொல்லியிருக்கிற விலையும் வகையுமுள்ள முத்திரை அதற்குப் போட்டிருக்கிறதாவென்று நிச்சயிக்கும்பொருட்டு அப்படி தீர்வைக்குட்பட்டுத் தனக்கு முன் கொண்டுவரப்பட்டாவது வந்தாவதிருக்கிற பிரதி ஆதரவையும் பரிசோதனை செய்யவேண்டும்.

ஆனால்—

(a) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது க்ரிமினல் கோர்ட் ஜட்ஜாவது 1898-ம்ஞூத்து க்ரிமினல் ப்ரொஸீஜர்கோட் 12-வது அல்லது 36-வது அத்தியாயத்தின்படி நடக்கிற நடவடிக்கை தவிர வேறே யாதொரு நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையில் தமக்கு முன்வருகிற யாதொரு ஆதரவைப் பரிசோதனை செய்வதாவது மறியல்செய்வதாவது யுக்தமென்று தமக்குத் தோற்றுதபட்சத்தில் அவ்வாறு செய்யும்படி சொல்லியிருப்பதாக இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் எண்ணக்கூடாது.

(b) ஹைகோர்ட் ஜட்ஜ்விஷயத்தில், இந்தப்பிரிவின்படியாதொரு ஆதரவைப் பரிசோதனைசெய்கிற அலுவலையும்மறியல்செய்கிற அலுவலையும் இது விஷயத்தில் கோர்ட்டார் நியமிக்கிற உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கலாம்.

(3) சந்தேகமுண்டாகிற விஷயங்களில். இந்தப்பிரிவிலுள்ள காரியங்களின்பொருட்டு—

(a) இன்ன ஆபீசுகள் ஸர்க்கார் ஆபீஸுகளாக எண்ணப்படுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் நிர்ணயிக்கலாம் ; மேலும்,

(b) இன்னார் ஸர்க்கார் ஆபீஸர்களின் விசாரணை அதிகாரமுள்ளவர்களாய் எண்ணப்படுவார்களென்று பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கலாம்.

34. யாதொரு ஸர்க்கார் கணக்கைப் பரிசோதிக்கையில் யாதொரு உத்தியோகஸ்தருக்குமுன், ஒரு அணு தீர்வை விதிக்கத்தக்க யாதொரு ரசீது முத்திரை ஒட்டாமலே கொடுப்பதாகச் சொல்லப்பட்டாலும் கொடுக்கப்பட்டாலும் அந்த உத்தியோகஸ்தரானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினுல், அந்த ஆதரவை மறியல்செய்யாமல், அந்த ரசீதுக்குப் பர்த்தியாகக் கிரமமாய் முத்திரை ஒட்டப்பட்ட ரசீதைக் கொடுக்கும்படி கேட்கலாம்.

முத்திரை ஒட்டாத ரசீதுகளைக் குறித்து விசேஷ நிபந்தனை.

35. தீர்வைக்குட்பட்ட எந்த ஆதரவும் கிரமமாய் முத்திரை போடப்பட்டிருந்தாலொழிய, அப்படிப்பட்டதைச் சட்டப்படிக்காவது உபயத்திராளின் சம்மதியின் மேலாவது சாட்சியம் வாங்க அதிகாரமுடையவரெவரும் யாதொரு காரியத்திற்காகச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவுங் கூடாது; அப்படிப்பட்டவரெவராவது யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தராவது அதை அனுசரித்துப் பிரவர்த்திக்கவுங் கூடாது, ரெஜிஸ்டர்செய்யவுங் கூடாது, ஊர்ஜ்ஜிதப்படுத்தவுங் கூடாது;

கிரமமாய் முத்திரை போட்டிராத ஆதரவுகள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதல்லவென்பது முதலியவை.

ஆனுல்—

(a) ஒரு அணு அல்லது அரை அணு தீர்வைக்குமாத்திரம் உட்பட்ட ஆதரவும், 3-வது பிரிவைச் சேர்ந்த **(aa)** அல்லது **(bb)** அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (**1-A** ஷெட்யூலைச் சேர்ந்த 34-வது பகுதியில் கண்ட **(a)** குறிப்பிட்ட உட்பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள) யாதொரு சாகுபடிக்கொதுவை ஆதரவும், பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டுமல்லாத அப்படிப்பட்ட யாதொரு ஆதரவானது - நியாயமான சகல விலக்குகளுக்கும் உட்பட்டு, அதற்குண்டான தீர்வை அல்லது (குறைவாய் முத்திரைப்போடப்பட்ட ஆதரவு விஷயத்தில்) அப்படிப்பட்ட தீர்வையைச் சரிப்படுத்தவேண்டிய தொகை ஐந்து ரூபாய் அபராதத்தோடு செலுத்தப்படுவதன்மேலாவது, சரியான தீர்வைத்தொகைக்குப் பத்துத்தனையாகிலும்

அந்த தீர்வையில் குறைந்த பாகத்திற்குப் பத்தத்தனையாகிலும் ஐந்து ரூபாய்க்கு அதிகப்படும்போது, அப்படிப்பட்ட தீர்வை அல்லது பாகத்திற்குப் பத்தத்தனைக்குச் சமமான தொகை செலுத்தப்படுவதன்மேலாவது, சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும் ;

(b) முத்திரை ஒட்டப்பட்ட ரசீது யாரிடத்திலிருந்து கேட்டு வாங்கியிருக்கக்கூடுமோ அந்த நபர் முத்திரை ஒட்டப்படாத ரசீதைக் கொடுத்து, அது முத்திரை ஒட்டப்பட்டிருந்தால் அவனுக்கு விரோதமாக சாட்சியமாய் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாயிருக்கும் ஒரு வியாஜ்ஜியத்தைக் கொண்டுவருவானுகில், அப்போது அதைக்காட்டுகிறவன் ஒரு ரூபாய் அபராதம் கொடுக்கும்பட்சத்திலே அந்த ரசீது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும் ;

(c) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட லிகிதங்களடங்கிய கடிதப்போக்கு வரவால் எவ்வகையான குத்தகை அல்லது உடன்படிக்கையாவது செய்யப்பட்டு அந்த லிகிதங்களின் எதற்காகிலும் தகுமான முத்திரை போட்டிருந்தால், அந்த குத்தகை அல்லது உடன்படிக்கை கிரமமாய் முத்திரை போடப்பட்டதாக எண்ணப்படும் ;

(d) 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர்கோட் 12-வது அல்லது 36 - வது அத்தியாயத்தின்படி நடக்கிற நடவடிக்கை தவிர க்ரிமினல் கோர்ட்டில் நடக்கும் வேறே யாதொரு நடவடிக்கையில் எந்த ஆதரவையும் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினுலும் தடங்கலுண்டாகமாட்டாது ;

(e) யாதொரு ஆதரவு கவர்ன்மென்டாராலாவது எழுதப்பட்டாலும், இந்த ஆக்டின் 32 - வது பிரிவிலாவது வேறு எந்த நிபந்தனையிலாவது ஏற்படுத்தியிருக்கிறபடி அந்த ஆதரவு கலெக்டருடைய ஸெர்டிபிகேட்டுடனிருந்தாலும் யாதொரு கோர்ட்டில் அந்த ஆதரவை ஏற்றுக்கொள்ளுவதற்கு இதிலுள்ள தெதனுலும் தடையுண்டாகமாட்டாது.

இன்னபடிக்கானல் ஆதரவைஏற்றுக் கொள்ளுவது ஆட்சேபிக்கப்படாது.

36 யாதொரு ஆதரவு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயத்திலே, அப்படி ஏற்றுக்கொண்டது 61-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, அதே வியாஜ்ஜியம் அல்லது விவகாரத்தின் எந்த நிசையிலாவது அந்த ஆதரவுக்குக் கிரமமாய் முத்திரைபோட்டிருக்கவில்லை யென்கிற ஹேதுவின்மேல் ஆட்சேபணைக்கு இடமாகமாட்டாது.

கிரமப்பிசகாய் முத்திரை ஒட்டப்பட்ட ஆதரவுகளை ஏற்றுக்கொள்வது.

37. ஒரு ஆதரவு போதுமான தொகைக்கு முத்திரைப்போடப்பட்டும் அம்முத்திரை கிரமப்பிசகான தன்மையதாயிருக்குமாயின், அதற்காக விதிக்கத்தக்க தீர்வை செலுத்தப்படுவதன்மேல் அது கிரமமாய் முத்திரைபோடப்பட்டதாக அதைப்பற்றி உறுதிமொழி கூறலாமென்றும், அதன்பிறகு, அவ்வாறு, உறுதிமொழி கூறப்பட்ட அந்த ஆதரவு எழுதப்பட்ட தேதி முதல் கிரமமாய் முத்திரைபோடப்பட்டிருப்பதாக எண்ணப்படுமென்றும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிகள் செய்யலாம்.

மறியல் செய்யப்பட்ட ஆதரவுகளை இன்னது செய்வது.

38. (1) யாதொரு ஆதரவை 33-வது பிரிவின்படி மறியல் செய்கிறவருக்குச் சட்டப்படிக்காகிலும் உபயத்திராளின் சம்மதியின்மேலாகிலும் சாட்சியம் வாங்க அதிகாரமிருந்து, 35 - வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அபராதம் அல்லது 37- வது பிரிவில் சொல்லியிருக்கிற தீர்வை செலுத்தப்படுவதன் மேல் அந்த ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்வாராகில், அவர் அந்த ஆதரவுக்கு உறுதிக்கையெழுத்து செய்யப்பட்ட நகலை அதைக்குறித்து வாங்கப்பட்ட தீர்வைத் தொகையையும் அபராதத்தையும் கண்டு எழுத்துமூலமாய் ஸெர்ட்டிபிகேட்டுடனே கலெக்ட்டருக்கு அனுப்பவேண்டியது மல்லாமல் அந்தத் தொகையைக் கலெக்டருக்காவது இதுவிஷயத்தில்அவர் நியமிக்கிற நபருக்காவது அனுப்பவும்வேண்டும்.

(2) மற்றப் பிரதிவிஷயத்திலும், ஆதரவை அப்படி மறியல் செய்கிறவர் அந்த அசலையே கலெக்ட்டருக்கு அனுப்பவேண்டும்.

38 வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செலுத்தப் பட்ட அபராதத்தை வாப்ஸ்பண்ணக்கலெக்க்ட்டருக்கு அதிகாரம்.

39. (1) யாதொரு ஆதரவுக்கு நகல் 38-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கலெக்ட்டருக்கு அனுப்பப்பட்டால், அவர் - தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்தில், அப்படிப்பட்ட ஆதரவைக் குறித்துச் செலுத்தியிருக்கிற ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட அபாரதத்தில் யாதொரு பாகத்தை வாப்ஸ் பண்ணலாம்.

(2) அப்படிப்பட்ட ஆதரவு 13-வது அல்லது 14-வது பிரிவுக்கு விரோதமாய் எழுதப்பட்டிருக்கிறதனல் மாத்திரம் அது மறியல் செய்யப்பட்டிருந்தால், அப்படி செலுத்தப்பட்ட அபராதம் முழுவதையும் கலெக்ட்டர் வாப்ஸ் பண்ணலாம்.

மறியல் செய்யப்பட்ட ஆதரவுகளுக்கு முத்திரை போடக் கலெக்ட்டருக்கு அதிகாரம்.

40. (1) கலெக்ட்டரானவர் 33-வது பிரிவின்படி யாதொரு ஆதரவை மறியல்செய்தாலும், 38 - வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தமக்கு அனுப்பப்பட்டு, ஒரே ஒரு அணு அல்லது அரை அணு தீர்வைக்குட்பட்ட ஆதரவாகவாவது, 3-வது பிரிவைச் சேர்ந்த **(aa)** அல்லது **(bb)** அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (**1-A** ஷெட்யூலைச் சேர்ந்த 34-வது பகுதியில் கண்ட **(a)** குறிப்பிட்ட உட்பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள) யாதொரு சாகுபடிக்கொதுவை ஆதரவாகவாவது, பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸோரி நோட்டாகவாவதிராத யாதொரு ஆதரவை வரப்பற்றிக்கொண்டாலும், அவர் நடத்தவேண்டிய தென்னவென்றால்:—

(a) அப்படிப்பட்ட ஆதரவு கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கிறதென்றாவது தீர்வைக்குட்பட்டதல்ல வென்றாவது அவர் அபிப்பிராயப்பட்டால், சங்கதிக்குத் தக்கபடி கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கிறதென்றாவது தீர்வைக்குட்பட்டதல்லவென்றாவது அதன்மேல் அவர் எண்டார்ஸ்மெண்ட் எழுதி ஸெர்ட்டிபை பண்ணவேண்டும்.

(b) அப்படிப்பட்ட ஆத்ரவு தீர்வைக்குட்பட்டதாயிருக்கிறதென்றும் கிரமமாய் முத்திரை போடப்படவில்லையென்றும் அவர் அபிப்பிராயப்பட்டால், அவர் சரியான தீர்வையையாவது அதைச் சரிப்படுத்தவேண்டிய தொகையையாவது ஐந்துரூபாய் அபராதசகிதமாய்ச் செலுத்தச் சொல்லவேண்டும்; அல்லது அவருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபட்சத்தில் சரியான தீர்வை அல்லது அதில் குறைவான பாகத்தின் பத்தத்தனை தொகைக்குமேற்படாத ஒரு தொகையை அது ஐந்துரூபாய்க்கு மேற்பட்டாலுஞ்சரி ஐந்து ரூபாய்க்குக் குறைந்தாலுஞ்சரி அபராதமாகச் செலுத்தச் சொல்லவேண்டும்;

ஆனால், அப்படிப்பட்ட ஆதரவானது 13-வது அல்லது 14-வது பிரிவுக்கு விரோதமாய் எழுதப்பட்டதனால் மாத்திரம் மறியல் செய்யப்பட்டிருந்தால், கலெக்ட்டரானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்தில். அந்தப்பிரிவில் சொல்லியிருக்கிற அபராதம் முழுமையும் மன்னிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (a) குறிப்பிட்ட பாகத்தின் படிக்குண்டான பிரதி ஸெர்ட்டிபிகேட்டும் அதில் கண்டிருக்கிற சங்கதிகளுக்கு இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரணங்களின் பொருட்டு முடிவான சாட்சியமாகும்.

(3) 38-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு ஆதரவு கலெக்ட்டருக்கு அனுப்பப்பட்டிருந்தால், அவர் இந்தப் பிரிவில் ஏற்படுத்தியிருக்கிறபடி அதன் விஷயமாகப் பிரவர்த்தித்தான பிறகு அதை, மறியல்செய்த உத்தியோகஸ்தரிடத்தில் அனுப்பிவிடவேண்டும்.

அகஸ்மாத்தாய்க் கிரமமான முத்திரை போடப்படாத ஆதரவுகள்.

41. தீர்வைக்குட்பட்டதாயிருந்து கிரமமாய் முத்திரை போடப்படாமல் ஒரே ஒரு அணா அல்லது அரை அணா தீர்வைக்குட்பட்ட ஆதரவாகவாவது, 3-வது பிரிவைச்சேர்ந்த (aa) அல்லது (bb) அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணா தீர்வை விதிக்கப்படத்தக்க (1-A ஷெட்யூலைச் சேர்ந்த 34-வது பகுதியில் கண்ட (a) குறிப்பிட்ட உட்பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள) யாதொரு சாகுபடிக்கொதுவை ஆதரவாகவாவது, பில் ஆவ்

எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டாகவாவதிராத யாதொரு ஆதரவை எவனாவது அது எழுதப்பட்ட தேதி முதற்கொண்டாகிலும் முதலில் எழுதப்பட்ட தேதி முதற்கொண்டாகிலும் ஒரு வருஷத்திற்குள் தன் இஷ்டமாய்க் கலெக்ட்டருக்கு முன்பாகக்கொண்டுவந்து காட்டி, அந்த ஆதரவு கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கவில்லையென்கிற சங்கதியை அவருக்கு அறிக்கைசெய்து, சரியான தீர்வைத் தொகையையாவது அதை சரிப்படுத்தவேண்டிய தொகையையாவது அவருக்குச் செலுத்துகிறேனென்றால், அந்தக் கலெக்ட்டரானவர் அந்த ஆதரவுக்குக் கிரமமாய் முத்திரைபோடாமற் போனது அகஸ்மாத்தாகவாகிலும் பிசகாகவாகிலும் அவசரத்தினாலாகிலும் நேரிட்ட காரியமென்று தமக்குத் திருப்தியாகிற பக்ஷத்தில், அவர் 33-வது, 40-வது பிரிவுகளின்படி நடவடிக்கை நடத்தாமல், அந்தத் தொகையைவாங்கிக்கொண்டு இதில் அடுத்துப் பின்னால் சொல்லியிருக்கிறபடி நடத்தலாம்.

35, 40-அல்லது 41 - வது பிரிவின்படி தீர்வைசெலுத்தப்பட்ட ஆதரவுகளின்மேல் எண்டார்ஸ் செய்வது.

42. (1) யாதொரு ஆதரவைக்குறித்து வாங்கத்தக்க தீர்வையும் அபராதமேதாவதிருந்தால் அதுவும் 35, 40 - அல்லது 41 - வது பிரிவின்படி செலுத்தப்பட்டிருக்குமாகில், சங்கதிக்குத் தக்கபடி, அந்த ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுகிற நபராவது கலெக்ட்டராவது, வாங்கப்பட்டது சரியான தீர்வையோ, அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி, சரியான தீர்வையும் அபராதமுமோ (அந்தந்த தொகையைக்கண்டு) அந்த ஆதரவுக்காக வாங்கப்பட்டதென்பதையும், அதைச் செலுத்துகிற நபருடைய பெயரையும் இருப்பிடத்தையும் அதன்மேல் எண்டார்ஸ் பண்ணி ஸெர்டிபை செய்யவேண்டும்.

(2) அப்படி எண்டார்ஸ் செய்யப்பட்ட பிரதி ஆதரவும் அதற்குமேல் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகும்; மேலும், அதைக் கிரமமாய் முத்திரை போடப்பட்டிருந்தாற்போல் ரெஜிஸ்ட்டரும் செய்யலாம்; அதை அனுசரித்தும் பிரவர்த்திக்கலாம், ஊர்ஜ்ஜிதமும் செய்யலாம்; அன்றியும், யாருடைய ஸ்வாதீனத்திலிருந்து அப்படிப்பட்ட ஆதரவு மறியல் செய்கிற உத்தியோகஸ்தருடைய கைக்கு வந்ததோ அந்த நபர் மனுசெய்துகொண்டு கேட்பதன்மேல் அந்த

நபருக்காவது அந்த நபர் உத்தரவுசெய்கிறபடிக்காவது அதை ஒப்பித்து விடவேண்டும் ;

ஆனல்,—

(a) 35-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்படுவதன்மேல் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆதரவை, அப்படி மறியல்செய்யப்பட்ட தேதிமுதல் ஒருமாதம் கழிவதற்கு முன்னமேயாகிலும், அதைப் பின்னும் மறியலில் வைத்திருக்க வேண்டியதென்று கலெக்ட்டர் ஸெர்ட்டிபை செய்து அந்த ஸெர்ட்டிபிகேட்டை ரத்து செய்யாதிருக்கிற பட்சத்திலாகிலும் அப்படி ஒப்பிக்கக்கூடாது ;

(b) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 144-வது பிரிவு 3-வதுஉட்பிரிவுக்கு இந்தப் பிரிவிலுள்ள அந்த நிபந்தனையினலும் பாதகமுண்டாகமாட்டாது.

முத்திரைச் சட்டத்துக்கு விரோதமான குற்றத்திற்காகப் பிராது தொடருவது.

43. யாதொரு ஆதரவைக்குறித்து இந்த அத்தியாயத்தின்படி நடவடிக்கை நடத்துவதனலேயாவது அபராதஞ் செலுத்தப்படுவதனலேயாவது அந்த ஆதரவு சம்பந்தமாக முத்திரைச்சட்டத்திற்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவனுகக் காணுகிற நபரின்மேல் பிராது தொடருவதற்குத் தடங்கலில்லை:

ஆனல், சரியான தீர்வைசெலுத்தாமல் மோசஞ்செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு அந்த குற்றஞ்செய்யப்பட்டதென்று கலெக்ட்டருக்குத் தோற்றினலொழிய, அதைக்குறித்து அப்படிப்பட்ட பிராது தொடரக்கூடாது.

தீர்வை அல்லது அபராதம் செலுத்துகிறவர்கள் சில விஷயங்களில் அதை மறுபடி வரப்பற்றலாம்.

44. (1) யாதொரு ஆதரவைக்குறித்து 35, 37, 40 - அல்லது 41-வது பிரிவின்படி யாதொரு நபர் தீர்வையாவது அபராதமாவது செலுத்தியிருந்து, உடன்படிக்கையினலாகிலும், 29 - வது பிரிவிலோ அல்லது அந்த ஆதரவு எழுதப்பட்ட காலத்தில் வழங்கி வந்த வேறே யாதொரு சட்டதிட்டத்திலோ உள்ள நிபந்தனைகளின்படிக்காகிலும், அந்த ஆதரவுக்குச்சரியான முத்திரை சவதரிக்கிற செலவை

ஏற்றுக்கொள்வதாக வேறொரு நபர் உடன்பட்டிருப்பானுகில், முதலில் கண்ட நபர் தான் செலுத்தின தீர்வை அல்லது அபராதத்தொகையை அந்த வேறு நபரிடததிலிருந்து மறுபடி வரப்பற்றிக்கொள்ள அர்ஹனுவான்.

(2) அப்படி வரப்பற்றிக்கொள்ளும்பொருட்டு இந்த ஆக்ட்டின்படி அந்த ஆதரவைக்குறித்துக் கொடுக்கப்பட்ட யாதொரு ஸெர்ட்டிபிகேட்டானது அதில் ஸெர்ட்டிபை செய்திருக்கிற சங்கதிகளுக்கும் முடிவான சாட்சியமாகும்.

(3) அப்படிப்பட்ட நபர்கள் கட்சிக்காரர்களாயிருப்பதும், அந்த ஆதரவு சாட்சியமாகக் காட்டப்பட்டிருப்பதுமான யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையில் செலவைப்பற்றிச் செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலே, கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினுல் மேற்படி தொகையைச் சேர்க்கலாம். கோர்ட்டார் அத்தொகையை அவ்வுத்தரவில் சேர்க்காவிட்டால் அத்தொகையை வசூல் செய்வதற்காக இன்னும் நடவடிக்கைகள் நடத்தினுல் அவை ஒப்புக்கொள்ளத்தக்கவைகளாகமாட்டா.

சிலவிஷயங்களில் தண்டத்தொகையையாவது ஜாஸ்தித் தீர்வையையாவது வாப்ஸ் பண்ண ரெவினியு அதிகாரிக்கு அதிகாரம்.

45. (1) யாதொரு அபராதம் 35 அல்லது 40-வது பிரிவின்படி செலுத்தப்பட்டால், அது செலுத்தப்பட்ட தேதிமுதல் ஒரு வருஷத்திற்குள் எழுத்து மூலமாய் மனு செய்யப்படுவதன்மேல், பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியானவர் அந்த அபராத முழுமையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் மறுபடி கொடுத்துவிடலாம்.

(2) சட்டப்படி விதிக்கத்தக்கதைவிட அதிகமான முத்திரைத் தீர்வை 35 அல்லது 40-வது பிரிவின்படி விதிக்கப்பட்டதென்றும் செலுத்தப்பட்டதென்றும் பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரி அபிப்பிராயப்படுகிற விஷயத்திலே, அதை விதித்த உத்தரவு பிறந்தது முதல் மூன்றுமாதத்திற்குள் எழுத்துமூலமாக மனுசெய்துகொள்ளப்படுவதன்மேல் அந்த அதிகாரி ஜாஸ்தி தீர்வையை வாப்ஸ் செய்யலாம்.

38-வதுபிரிவின்படி அனுப்பப்பட்ட ஆதரவுகள் போக்கடிந்து போனால் உத்தரிப்பதில்லை.

46. (1) கலெக்ட்டரிடத்திற்கு 38-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்ட யாதொரு ஆதரவு ரவாணுவில் போக்கடிந்துபோனாலும் அழிந்துபோனாலும் சேதப்பட்டாலும் அதற்காக அதை அனுப்புகிறவன் உத்தரிக்க வேண்டியதில்லை.

(2) யாதொரு ஆதரவு அப்படி அனுப்பப்படுவதாயிருக்கையிலே யாருடைய ஸ்வாதீனத்திலிருந்து அது மறியல்செய்கிறவனுடைய கைக்குவந்ததோ அந்த நபர் தன்னுடைய செலவிலே அந்த ஆதரவுக்கு நகலெழுதி மறியல்செய்கிறவனுடைய உறுதிக் கையெழுத்துப் போடச்சொல்லிக் கேட்கலாம்.

தொகை கொடுக்கிறவன் முத்திரை போடாமல் தான் வரம்பற்றுகிற பில்லுகளுக்கும் ப்ராமிஸொரி நோட்டுகளுக்கும் செக்குகளுக்கும் முத்திரைபோட அதிகாரம்.

47. ஒரு அணு நீர்வைக்குட்பட்ட பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரிநோட் முத்திரை யில்லாமல்கொண்டுவந்து பணங்கொடுக்கச்சொல்லிக் காட்டப்பட்டால், அது அப்படி யாருக்குக்காட்டப்படுகிறதோ அந்த நபர் அதற்கு அவசியமான பசைமுத்திரை ஒட்டலாம்; இதில் முன்னமே சொல்லியிருக்கிற விதமாய் அதை அழித்துவிட்டு, அப்படிப்பட்ட பில் அல்லது நோட்டுக்குண்டான பணத்தைச் செலுத்தலாம்; அதற்குமேல், அந்தத் நீர்வை செலுத்த வேண்டியிருந்த நபரின்மேல் அதைக் கணக்காக்கலாம், அல்லது மேற்சொல்லியபடி செலுத்துகிற தொகையிலே அதைக் கழித்துக்கொள்ளலாம்; அப்படிப்பட்ட பில் அல்லது நோட்டானது நீர்வைக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலே சரியானதாய்ச் செலுத்தத்தக்கதாக எண்ணப்படும்.

ஆனால், அப்படிப்பட்ட பில் அல்லது நோட்டைப்பற்றி உள்ளாகத்தக்க யாதொரு தண்டனையினின்றாவது நடவடிக்கையினின்றாவது, இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் நிவர்த்தியாகமாட்டான்.

48: இந்த அத்தியாயத்தின்படி செலுத்தவேண்டியதா யிருக்கிற சகல தீர்வைகளையும் தண்டத்தொகைகளையும் வேறே தொகைகளையும், அவைகளை யார் செலுத்தவேண்டுமோ அவனுடைய அசையும்பொருளை ஜப்திசெய்து விற்பனைபண்ணியாவது, நிலவருமான பாக்கியை வசூல் செய்வதற்காக அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வேறே யாதொரு முகாந்தரத்தினாலாவது கலெக்ட்டர் வசூல் செய்யலாம்.

தீர்வைகளையும் தண்டத் தொகைகளையும் வசூலிப்பது.

5-ம் அத்தியாயம்.

சில விஷயங்களில் முத்திரைக்கடிதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

49. வேண்டியிருக்கிற சாட்சியத்தைப் பற்றியாவது செய்யவேண்டிய விசாரணையைப் பற்றியாவது பிரதேச கவர்ன்மெண்டார்-செய்யும்படியான விதிகளுக்குட்பட்டு, கலெக்ட்டரானவர் 50-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலவரையறைக்குள் மனு செய்துகொள்ளப்பட்டு, நடந்த சங்கதிகளைக் குறித்து அவருக்குத் திருப்தியானால் இதில் பின்னால் கண்டிருக்கிற விஷயங்களிலே முத்திரை யழுத்தியிருந்து கெட்டுப்போன முத்திரைக் கடிதாசிகளுக்காகக் கலெக்ட்டர் ஒத்துக்கொடுக்கலாம். அவையாவன:-

கெட்டுப்போன முத்திரைக் கடிதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

(a) யாதொரு கடிதாசியின்மேல் எழுதப்பட்ட ஆதாரவை எவனாவது கையெழுத்துப் பண்ணிப் பூர்த்திசெய்கிறதற்கு முன்னமே, யோசனையில்லாமலும் வேண்டுமென்றல்லாமலும் கெட்டுப்போயாவது அழிக்கப்பட்டாவது எழுதியபோது பிழைபட்டதனாலாகிலும் வேறே எவ்விதத்தினாலாகிலும் உத்தேசமான காரியத்திற்கு உபயோகமற்றதாகியாவது அந்தக் கடிதாசியின்மேலிருக்கிற முத்திரை :

(b) யாதொரு தஸ்தவேஜு முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது எழுதப்பட்டு, அதில் சம்பந்தப்பட்டவர்களில் எவனு

வது அதில் கையெழுத்துப்போடாமலேனும் அதை எழுதி முடிக்காமலேனுமிருந்தால் அப்படிப்பட்ட தஸ்தாவேஜின்மேலிருக்கிற முத்திரை :

(c) கேட்டவுடனே யல்லாமல் மற்றப்படி செலுத்தத்தக்க பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ், அல்லது ப்ராமிஸோரி நோட்டுகளின் விஷயத்திலே—

(1) அப்படிப்பட்ட யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜானது எழுதுகிறவனுலாவது அவனுடைய பட்சத்திலாவது கையெழுத்து செய்திருந்து, ஒப்புக்கொள்ளப்படாமலேனும் எவ்விதத்திலாகிலும் உபயோகிக்கப்படாமலேனும், ஒப்புக்கொள்ளக் காட்டுவது ரூபமாகவன்றி வேறே யாதொரு காரியத்திற்காக அவனுடைய கையிலிருந்து ஒப்பிக்கப்படாமலேனுமிருக்குமாகில், யாதொரு முத்திரை அழுத்தியிருக்கிற கடிதாசியில் பின்பு எழுதவேண்டிய யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜை அங்கிகரிப்பதாகவாவது உத்தேசமான யாதொரு கையெழுத்து இராவிட்டால் அப்படிப்பட்டதற்குப் போட்டிருக்கும் முத்திரை :

(2) எழுதிக் கொடுக்கிறவனுலாவது அவனுடைய பட்சத்திலாவது கையெழுத்து செய்திருந்து, எவ்விதத்திலேனும் உபயோகிக்கப்படாமலாகிலும் அவனுடைய கையிலிருந்து ஒப்பிக்கப்படாமலாகிலுமிருக்கிற யாதொரு ப்ராமிஸோரி நோட்டுக்குப் போட்டிருக்கும் முத்திரை :

(3) அப்படிப்பட்ட யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸோரி நோட்டை எழுதுகிறவனுவது அவன் பட்சத்திலாவது அதில் கையெழுத்து செய்திருந்து, ஏதாவது விட்டுப்போனதனுலாகிலும் பிசகினுலாகிலும் கெட்டுப்போனதாகவாவது உபயோகமற்றதாகவாவதிருக்குமாகில் பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜானல் அது அங்கிகாரத்திற்காகக் கொண்டுவந்து காட்டப்பட்டிருந்தபோதினும் அங்கிகரிக்கப் பட்டிருந்தபோதினும் எண்டார்ஸ் செய்யப்பட்டிருந்தபோதினும், ப்ராமிஸோரி நோட்டால் அது பணம் பெறுகிறவனுக்கு ஒப்பிக்கப்பட்டிருந்தபோதினும், மேற்சொல்லியபடி விட்டுப்போனதையாவது நேரிட்ட பிசகையாவது திருத்துவது தவிர எல்லா விவரங்

களிலும் கெட்டுப்போன பில் - அல்லது நோட்டொப்புரவா கவே கிரமமாய் முத்திரை போடப்பட்ட வேறொரு பூர்த்தி யான பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - அல்லது ப்ராமிஸொரிநோட் கொண்டுவந்து காட்டப்பட்டால்தான் அப்படிப்பட்டதற்கு உபயோகிக்கப்பட்டாவது உபயோகிக்க எத்தனிக்கப்பட்டாவ திருக்கிற முத்திரை :

(d) அடியில் கண்டிருக்கிற ஆதரவுகளில் எதற்காவது அவை களில் சம்பந்தப்பட்ட எவனாலாகிலும் உபயோகிக்கப்பட்ட முத்திரை: அவையாவன :—

(1) ஆதிமுதல் சட்டப்படி சுத்தமாய்ச் செல்லாததாகப் பின்பு கண்டுகொள்ளப்பட்ட ஆதாவு :

(2) யாதொரு பிசகு அல்லது பிழை இருப்பதனாலே பிரதம த்தில் உத்தேசிக்கப்பட்ட காரியத்திற்கு உதவாததாகப் பின்பு கண்டுகொள்ளப்பட்ட ஆதரவு :

(3) அதில் கையெழுத்துப்பண்ணிப் பூர்த்திசெய்யவேண்டிய வன் அப்படி செய்யாமல் இறந்துபோவதனாலாவது, அப் படிப்பட்ட யாதொரு நபர் அதில் கையெழுத்து பண்ணிப் பூர்த்திசெய்ய நிராகரிப்பதனாலாவது, யோசித்திருந்தமா திரியாக உத்தேசமான காரியம் சித்தியாகும்படி பூர்த்தி செய்யக்கூடாமையாயிருக்கிற ஆதரவு :

(4) முக்கியமானவனொருவன் அதில் கையெழுத்து செய்ய அசக்தத்தினாலோ நிராகரிப்பதனாலோ *அது பூர்த்தியாகா மையைப்பற்றி, அது உத்தேசிக்கப்பட்ட காரியத்திற்கு உள்ளபடி போதாமல் பூர்த்தியற்றதாயிருக்கிற ஆதரவு :

(5) அதன்படி நடக்கவாகிலும், அதனால் பத்திரப்படுத்த உத் தேசிக்கப்பட்ட பணத்தை முன்னதாய்க்கொடுக்கவாகிலும் யாதொரு நபர் நிராகரிப்பதனாலாவது, அதனால்கொடுக்கப் பட்ட யாதொரு தொழிலை நிராகரிப்பதனாலாவது அங்கிகரி யாமையினாலாவது உத்தேசமான காரியத்துக்கு முழுவ தும் உதவாமற்போகிற ஆதரவு :

(6) அதனால், சித்தியாகும்படி உத்தேசிக்கப்பட்ட காரியம் அதே நபர்களுக்குள் ஏற்பாடாகி அதைவிடக் குறையாத

மதிப்புள்ள முத்திரைபோட்டிருக்கிற வேறொரு ஆதரவி னாலே சித்தியாவதைப்பற்றி உதவாமற்போகிற ஆதரவு:

(7) குறைந்த மதிப்புள்ளதாயிருந்து அதனால் சித்தியாகும்படி உத்தேசிக்கப்பட்ட காரியம் அதே நபர்களுக்குள் ஏற்பாடாகி அதைவிடக் குறையாத மதிப்புள்ள முத்திரைபோட்டிருக்கிற வேறொரு ஆதரவினால் சித்தியாக்கப்பட்டிருக்குமானால், மேற்படி குறைநத மதிப்புள்ள ஆதரவு:

(8) வேண்டுமென்றல்லாமல் பிசகாய்க் கெட்டுப்போய் அதற்குப்பர்த்தியாக அதே நபர்களுக்குள் அதேகாரியத்திற்காக வேறொரு ஆதரவு எழுதிக் கைபெழுத்துப்பண்ணிப் பூர்த்தி செய்து கிரமமாய் முத்திரைபோட்டிருக்கும்போது மேற்படி கெட்டுப்போன ஆதரவு:

ஆனால், கைபெழுத்து பண்ணிப் பூர்த்திசெய்திருக்கிற ஆதரவு விஷயத்திலே, அந்த ஆதரவு சாட்சியமாகக் கொடுக்க அல்லது கொடுப்பதாகச் சொல்லக்கூடியதாகவாவது அவ்வாறு செய்திருக்கக்கூடியதாகவாவதுள்ள யாதொரு சட்டசம்மதமான நடவடிக்கை ஆரம்பஞ் செய்யப்படாமலும், அந்த ஆதரவு ரத்துசெய்யும்படி கொடுக்கப்பட்டுமிருக்கவேண்டும்.

விவரணம்:—ஒரு ஆதரவின் விஷயமாய் விதிக்கப்படவேண்டிய முழுத்தீர்வையும் செலுத்தப்பட்டிருக்கிறதென்று 32 - வது பிரிவின்படி கலெக்டரால் கொடுக்கப்படும் ஸெர்ட்டிபிகேட்டானது இந்தப் பிரிவின் தாற்பரியப்படி அழுத்தப்பட்ட முத்திரையாகும்.

49 - வது பிரிவின்படி பரிகாரத்திற்காக மனு எப்பொழுது செய்து கொள்ள வேண்டுமென்பது.

50. 49 - வது பிரிவின்படி பரிகாரத்திற்காகச் செய்துகொள்ளப்படும் மனுவை அடியிற்கண்ட காலவரையறைகளுக்குள்ளே செய்துக் கொள்ளவேண்டும். எப்படியென்றால்:—

(1) (d) (5) உட்பிரிவிற்கண்ட விஷயங்களிலே ஆதரவின் தேதிமுதல் இரண்டுமாதத்திற்குள்ளாக:

(2) சம்பந்தப்பட்டவர்களில் எவனும் ஆதாரவை எழுதிப்பூர்த்திசெய்யாமலிருக்கும் முத்திரைக்கடிதாசியின் விஷயத்திலே முத்திரை கெட்டுப்போனபின்பு ஆறு மாதத்திற்குள்ளாக:

(3) சம்பந்தப்பட்டவர்களில் எவனாகிலும் ஆதரவை எழுதிப் பூர்த்தி செய்திருக்கும் முத்திரைக் கடிதாசியின் விஷயத்திலே ஆதரவின் தேதிக்குப்பின்பு ஆறுமாதத்திற்குள்ளும், அதில் தேதி இல்லாவிட்டால் முதலிலாவது தனித்தாவது எழுதிக்கொடுத்தவன் அதில் கையெழுத்துபோட்டுப் பூர்த்திசெய்த பின்பு ஆறுமாதத்திற்குள்ளும் :

ஆனால்,—

(a) கெட்டுப்போன ஆதரவு போதுமான நியாயங்களினால் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் அனுப்பப்பட்டிருந்தால், அது ப்ரிட்டிஷ் இந்தியாவில் மறுபடி வரப்பற்றிக்கொள்ளப் பட்டபின்பு ஆறுமாதத்திற்குள்ளே மனுசெய்துகொள்ளலாம் ;

(b) எதற்குப்பார்த்தியாக வேறொரு ஆதரவு எழுதப்படுகிறதோ அந்த ஆதரவை ரத்துபண்ணும்படி நீக்கக்கூடாத முகாந்தரங்களினாலே மேற்கண்ட காலத்திற்குள் கொடுக்கக்கூடாமையினால் பர்த்தி ஆதரவின் தேதிக்குப் பின்பு ஆறுமாதத்திற்குள்ளே மனுசெய்துகொள்ளலாம்.

அச்சிட்ட நமூனாக்கள் சட்டப்படி ஏற்பட்ட கூட்டத்தாருக்கு இனி வேண்டியிராவிட்டால் அவைகளின் விஷயத்திலே ஒத்துக்கொடுப்பது.

51. யாதொரு (பாங்கராவது) சாவுகாராவது சட்டப்படி ஏற்பாடான யாதொரு கம்பெனியாராவது ஒன்றாய்ச்சேர்ந்த வேறே கூட்டத்தாராவது கையாளும் அச்சிட்ட ஆதரவு நமூனாக்களுக்காக உபயோகிக்கப்பட்ட முத்திரைக் கடிதாசிகள் அவர்களுக்கு ஏதேனும் போதுமான நியாயத்தினால் வேண்டியிராமற் போகுமானால் பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியானவர் - அல்லது இதுவிஷயத்தில் பிரதான மேல்விசாரணைரெவினியு அதிகாரியினால் அதிகாரங்கொடுக்கப்பட்டால் கலெக்டரானவர், அவ்வகையான முத்திரைக் கடிதாசிகளுக்காகத் தீர்வை சரியாய்ச்செலுத்தப் பட்டதென்று அவருக்குத் திருப்தியாகிற பட்சத்திலே காலவரையறையில்லாமல், அவைகளுக்காக ஒத்துக்கொடுக்கலாம்.

பிசகாய் உபயோகிக்கப்பட்ட முத்

52. (a) தீர்வைக்குட்பட்ட ஆதரவுக்காக எவனாகிலும், இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட விதிகளில் அதற்கு ஏற்படுத்தப்பட்ட வகைதவிர வேறே வகையான

திரைக் கடிதாசிகளுக்காக ஒத்துக் கொடுப்பது.

முத்திரையையாவது அவசியமானதைவிட அதிக விலையுள்ள முத்திரையையாவது பிசகாய் உபயோகித்திருந்தாலும், தீர்வைக்குட்படாத ஆதரவுக்காகப் பிசகாய் முத்திரையை உபயோகித்திருந்தாலும் ;

(b) யாதொரு ஆதரவுக்காக உபயோகிக்கப்பட்ட முத்திரையானது 13 - வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் அந்த ஆதரவு எழுதப்பட்டிருப்பதைப்பற்றிப் பிசகாக 15-வது பிரிவின்படி உபயோகமற்றதாய் விட்டாலும்,

கலெக்டரானவர் அந்த ஆதரவு தேதிக்குப் பின்பு ஆறுமாதத்திற்குள்ளும், அதில் தேதி இல்லாவிட்டால் முதலிலாவது தனித்தாவது எழுதிக்கொடுத்தவன் அதில் கையெழுத்துசெய்து பூர்த்தி பண்ணிய பின்பு ஆறுமாதத்திற்குள்ளும் மனு செய்யப்படுவதன்மேல் அந்த ஆதரவு தீர்வைக்குட்பட்டதானால் அதன்மேல் சரியான தீர்வை முத்திரை மறுபடி குத்தப்பட்டபின்பு அப்படி பிசகாய் உபயோகிக்கப் பட்ட அல்லது உபயோகமற்றதாய்விட்ட முத்திரையை ரத்துசெய்து கெட்டுப்போனதாக ஒத்துக்கொடுக்கவேண்டும்.

கெட்டுப்போன அல்லது பிசகாய் உபயோகிக்கப் பட்ட முத்திரைகளுக்காக இன்னபடி ஒத்துக் கொடுப்பது.

53. கெட்டுப்போன அல்லது பிசகாய் உபயோகிக்கப்பட்ட முத்திரைகளுக்கு ஒத்துக்கொடுக்கிற யாதொரு விஷயத்தில், அவைகளுக்குப் பார்த்தியாகக் கலெக்டரானவர்—

(a) அதேவகையும் விலையுமுள்ள வேறே முத்திரைகளையாவது,

(b) வேண்டியதாயிருந்து தகுதியாக அவருக்குத் தோற்றினால் அதேவிலைத் தொகைக்கு வேறே யாதொருவகை முத்திரைகளையாவது,

(c) அவருக்கு யுக்தமாயிருந்தால், ரூபாய் ஒன்றுக்கும் ரூபாய்க்குக் குறைந்த சில்லறைக்கும் ஒரு அணு விழுக்காடு குறைத்துக்கொண்டு அந்த கிரயத்தைப் பணமாகவாவது,—

கொடுக்கலாம்.

வேண்டியிராத முத்திரைக் கடிதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

54. கெட்டுப்போயாவது உத்தேசமான காரியத்துக்குத் தகாததாகவாவது உபயோகமற்றதாகவாவதிராத முத்திரை அல்லது முத்திரைகளை யாவனொருவன் வைத்துக்கொண்டிருந்து அவை தற்கால உபயோகத்திற்கு அவனுக்கு வேண்டியிராத பட்சத்தில், அவன் அவைகளை ரத்துபண்ணும்படி கொண்டுவந்து கொடுத்து—

(a) வாஸ்தவமாய் உபயோகிக்கவேண்டிய எண்ணத்தோடு அவைகளைத்தான் வாங்கினனென்றும்,

(b) அவைகளின் பூர்த்தியான விலையைத் தான் செலுத்தினனென்றும்,

(c) அவைகள் அப்படி கொண்டுவந்து கொடுக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முந்தின ஆறுமாதகாலத்திற்குள் அவைகள் அப்படி வாங்கப்பட்டனவென்றும்,

கலெக்ட்டருக்குத் திருப்தியாகும்படி ருஜுசெய்வதன்மேல், அவர் ஒரு ரூபாய்க்காவது அதற்குக் குறைந்த பாகத்திற்காகவது ஒரு அணு விழுக்காடு கழித்துக் கொண்டு அந்த முத்திரை அல்லது முத்திரைகளின் கிரயத்தைப் பணமாக அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்.

ஆனல், அந்த நபர் முத்திரைக்கடிதாசி விற்பதற்காக லைசென்ஸ் கொடுக்கப்பெற்றவனயிருந்தால் கலெக்ட்டரானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றும்பட்சத்திலே, மேலே கண்டபடி எதையும் கழித்துக் கொள்ளாமல் கிரயத்தைக் கொடுத்துவிடலாம்.

சில டிபென்சூர்களைப் புதுப்பித்துக்கொள்ளும்போது ஒத்துக்கொடுப்பது.

55. கிரமமாய் முத்திரை போடப்பட்ட யாதொரு கடன் பத்திரமானது அதே ஷரத்துகளின்படி ஒரு நூதன டிபென்சூர் பிறந்ததினல் புதுப்பிக்கப்படும்போது கலெக்டரானவர் - ஒருமாதத்திற்குள் மனுசெய்துக்கொள்ளப்படுவதன்மேல், அந்த டிபென்சூரைப் பிறப்பிக்கிறவனுக்கு, பிரதம டிபென்சூரின் முத்திரை விலையோ அல்லது நூதன டிபென்சூரின் முத்திரை விலையோ எது குறைந்திருக்கிறதோ அதை வாப்ஸ் செய்யவேண்டும்.

ஆனால், பிரதம டிபென்சுஷரைக் கலெக்ட்டருக்கு முன்காட்டி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் நிர்ணயிக்கிறவித மாக ரத்து செய்துகொள்ளவேண்டும்.

விவரணம்:—அடியிற்கண்ட வேறுபாடுகளினிருந்த போதிலும் பாதகமில்லாமலே, ஒரு கடன்பத்திரம் இந்த பிரிவின் தாற்பரியப் படி அதே ஷரத்துகளை அனுசரித்துப் புதுப்பிக்கப்பட்டதாக எண் ணப்படும்:—

(a) ஒருபிரதம டிபென்சுஷருக்குப் பர்த்தியாக இரண்டு அல் லது பல டிபென்சுஷர்களைப் பிறப்பித்து - அடையப்படும் மொத்தத்தொகை ஒரு அளவாகவே இருக்கவேண்டும்;

(b) இரண்டு அல்லது பல பிரதமடிபென்சுஷர்களுக்குப்பர்த்தி யாக ஒரு டிபென்சுஷர் பிறப்பித்து - அடையப்படும் மொத் தத்தொகை ஒரு அளவாகவே இருக்கவேண்டும்;

(c) பிரதமத்தில் வைத்துக்கொண்டிருந்தவன் பெயருக்குப்பர் த்தியாக, புதுப்பிக்கப்படும் காலத்தில் அதை வைத்துக் கொண்டிருப்பவனுடைய பெயரை - அமைப்பது;

(d) வட்டி வீதத்தையாவது அதைச் செலுத்தும் தேதிகளை யாவது மாற்றுவது.

6-ம் அத்தியாயம்.

ஆலோசனைக்கு அனுப்புவதும் மேற்பரிசோதனையும்.

பிரதான ரெவினியு அதிகாரியின் மேல் விசாரணையும் அந்த அதிகாரிக்குச் சங்கதியைத் தெரிவித்தலும்.

56. (1) 4-வது 5-வது அத்தியாயங்களின்படிக்கும், 26-வது பிரிவைச் சேர்ந்த முதலாவது விலக்கான நிபந்தனையின் (a) அடையாளமிட்ட பகுதியின்படிக்கும் கலெக்ட்டர் செலுத்தத்தக்க அதிகாரங்கள் - பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியின் மே ல்விசாரணைக்குட்பட்டிருக்கவேண்டும்.

(2) யாதொரு ஆதரவு உட்பட்டிருக்கிற தீர்வைத் தொகையைக் குறித்து, 31, 40, அல்லது 41-வது பிரிவின்படி பிரவர்த்திக்கிற கலெக்ட்டருக்குச் சந்தேகமுண்டானால், அவர் அந்த சங்கதியை விவ

ரமாயெழுதி அதைக்குறித்துத் தம்முடைய அபிப்பிராய சகிதமாய் அதைப் பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியினுடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.

(3) அந்த அதிகாரி அந்த சங்கதியை யோசித்துத் தம்முடைய தீர்மானத்திற்கு ஒத்திருக்கும்படி தீர்வை ஏதாவதிருந்தால் அதை யேற்படுத்தி வாங்கத் தொடங்கவேண்டும்.

பிரதானரெவினியு அதிகாரி ஹைகோர்ட்டாருக்காவது பிரதான கோர்ட்டாருக்காவது சங்கதியைத் தெரிவித்தல்.

57. (1) பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரி 56-வது பிரிவில் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தம்மிடத்திற்கு அனுப்பப்பட்டாகிலும் மற்றப்படி தம்பார்வைக்கு வந்தாகிலுமிருக்கிற சங்கதியை எழுதி அதைத் தம் அபிப்பிராய சகிதமாய்,—

(a) அந்தந்தகாலத்தில் ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களாவது ஆலோசனைசபையிலுள்ள பம்பாய் கவர்னரவர்களாவது துரைத்தனஞ்செய்கிறராஜ்ஜியத்தில் அந்த சங்கதிஉண்டானால்-அந்தந்த ராஜதானியிலுள்ள ஹைகோர்ட்டாருக்கும்,

(b) வடமேற்கு மாகாணங்கள் அல்லது அயோத்தி அல்லது அஜ்மீரிலுண்டானால் - வடமேற்கு மாகாணங்களுக்குரிய ஹைகோர்ட்டுக்கும்,

(bb) பீஹார்-ஒரிஸா லெப்டினெண்ட் கவர்னரவர்கள் அந்தந்தக்காலத்தில் துரைத்தனஞ் செலுத்துகிற ராஜ்ஜியத்தில் உண்டானால்—பாட்னாவிலுள்ள ஹைகோர்ட்டுக்கும்,

(c) பஞ்சாப் லெப்டினெண்ட் கவர்னரவர்கள் அந்தந்த காலத்தில் துரைத்தனஞ்செய்கிற ராஜ்ஜியத்திலாவது பிரிட்டிஷ் பெலுசிஸ்டானிலாவதுண்டானால் - லாகூரிலுள்ள ஹைக்கோர்ட்டுக்கும்,

(d) மத்தியமாகாணங்களிலுண்டானால் - பம்பாயிலுள்ள ஹைகோர்ட்டுக்கும்,

(e) பிரிட்டிஷ் இந்தியாவிலே வேறே யாதொரு பாகத்திலுண்டானால்-போர்ட் வில்லியத்திலுள்ள ஹைகோர்ட்டுக்கும், அனுப்பலாம்.

(2) அப்படிப்பட்ட பிரதி சங்கதியையும், அது எந்த கோர்ட்டுக்கு அனுப்பப்படுகிறதோ அந்த ஹைகோர்ட் அல்லது பிரதான

கோர்ட் ஜட்ஜுகளில் மூன்றுபேருக்குக் குறையாதவர்கள் தீர்மானிக்கவேண்டும்; அபிப்பிராயம் வேறுபடுகிற விஷயத்தில் பெருந்தொகையாருடைய அபிப்பிராயத்தின்படி நடத்தலாகும்.

தெரிவித்த சங்கதியைப்பற்றி இன்னும் விவரங்களைக் கேட்க ஹைகோர்ட் அல்லது பிரதான கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

58. அந்த சங்கதியில் கண்டிருக்கிற வர்த்தமானங்கள் அதனாலுண்டான சமுசயங்களைத் தீர்மானிக்கக்கூடியதற்குப் போதுமானதாயிருக்கிறதென்று அந்த ஹைகோர்ட்டாருக்காவது பிரதான கோர்ட்டாருக்காவது திருப்தியாகாவிட்டால், அந்தக்கோர்ட்டார் அந்த சங்கதி எழுதி அனுப்பின ரெவினியு அதிகாரிக்கு அதை மறுபடி அனுப்பி அதில் இன்னம் சேர்க்கும்படிக்காவது மாற்றும்படிக்காவது தாங்கள் உத்தரவுபண்ணுகிறபடி செய்யச்சொல்லலாம்.

ஆலோசனைக்கு அனுப்பப்பட்டதைத் தீர்மானிக்கையில் நடவடிக்கை.

59. (1) ஹைகோர்ட்டாராவது பிரதான கோர்ட்டாராவது அப்படிப்பட்ட சங்கதியை விசாரணைசெய்த பின்பு அதனாலுண்டாயிருந்த சமுசயங்களைத் தீர்மானித்து, அந்த தீர்மானத்திற்குண்டான ஆதாரங்களைக் கண்டெழுதி அதைக்குறித்துத் தங்கள் தீர்ப்பைக் கொடுக்கவேண்டும்.

(2) சங்கதி எழுதி அனுப்பின ரெவினியு அதிகாரிக்கு அந்த தீர்ப்புக்கு நகலைத் தங்கள் கோர்ட் முத்திரையும் ரெஜிஸ்ட்ராருடைய கையெழுத்துட்பட அனுப்பவேண்டும்: அந்த ரெவினியு அதிகாரியானவர் அந்த நகலை வரப்பற்றிக்கொண்டபின்பு அந்த தீர்ப்புக்கு ஒத்திருக்கும்படி அந்த சங்கதியைப் பைசல்செய்யவேண்டும்.

மற்ற கோர்ட்டார்கள் ஹைகோர்ட்டாருக்காவது பிரதான கோர்ட்டாருக்காவது சங்கதியைத்தெரிவிப்பது

60. (1) ஐம்பத்தேழாவது பிரிவில் கண்டிருக்கிற கோர்ட்டார் தவிர வேறே எந்த கோர்ட்டாராவது 35 - வது பிரிவைச்சேர்ந்த முதலாவது (a) குறிப்பிட்ட விலக்கின்படி யாதொரு ஆதரவுக்காகச் செலுத்தவேண்டிய தீர்வைத் தொகையைக்குறித்துச் சந்தேகங்கொண்டால், ஜட்ஜானவர் அந்த சங்கதியை விவரமாக எழுதி அதைத் தம் அபிப்பிராயசகிதமாய்த் தாம் பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியாயிருந்தால், 57 - வது பிரிவின்படி அதைத் தாம் எந்தக் கோர்ட்டாருக்கு அனுப்புவா

ரோ அந்த ஹைகோர்ட்டார் அல்லது பிரதான கோர்ட்டாருடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.

(2) அந்த கோர்ட்டார் 57 - வது பிரிவின்படி ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருந்தாற்போல் அந்த சங்கதியைப்பற்றி நடத்தவேண்டியது மல்லாமல், தங்கள் கோர்ட் முத்திரையும் ரெஜிஸ்ட்ராருடைய கையெழுத்துட்படத் தங்கள் தீர்ப்புக்குப் பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரிக்கு ஒரு நகலையும் ஆலோசனைக்கு அனுப்பின ஜட்ஜூக்கு அதே மாதிரியான வேறொரு நகலையும் அனுப்பவும்வேண்டும்; அவர்கள் அந்த நகலை வரப்பற்றிக்கொள்வதன்மேல் அந்த தீர்ப்புக்கு ஒத்திருக்கும்படி அந்த சங்கதியைப் பைசல்செய்யவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஆலோசனைக்கு அனுப்ப வேண்டியவைகளை டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டார் அனுப்புகிறதாயிருந்தால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட் மூலமாய் அனுப்ப வேண்டும்; கீழ்ப்பட்ட ரெவினியு கோர்ட்டார் அனுப்புகிறதாயிருந்தால், அடுத்த மேலான கோர்ட் மூலமாய் அனுப்பவேண்டும்.

முத்திரைகள் போதுமான தென்பதைப்பற்றிக் கோர்ட்டார்கள் செய்கிற சில தீர்மானங்களை மேற்பார்சோதனை போடுவது.

61. (1) ஸிவில் அல்லது ரெவினியு அதிகாரஞ் செலுத்துகிற யாதொரு கோர்ட்டாராலாகிலும் 1898-ம்வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர்கோட் 12-வது அல்லது 36-வது அத்தியாயத்தின்படிக்கான யாதொரு நடவடிக்கையில் யாதொரு க்ரிமினல் கோர்ட்டாராகிலும் கிரமமாய் முத்திரை போடப்பட்டதாகவாவது முத்திரை வேண்டியிராததாகவாவது35-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்படுவதன்மேலாவது யாதொரு ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவு செய்தால், அந்த கோர்ட் உத்தரவின்மேல் எந்த கோர்ட்டுக்கு அப்பீல்செய்யப்படுகிறதோ அல்லது அந்த கோர்ட்டார் எந்தகோர்ட் ஆலோசனைக்கு அனுப்புகிறார்களோ அந்த கோர்ட்டார் தங்களிஷ்டமாயாவது கலெக்ட்டருடைய மனுவின்மேலாவது அந்த உத்தரவைக் குறித்து ஆலோசனை செய்யவேண்டும்.

(2) அந்தப்படி ஆலோசனை செய்தபிறகு அந்த கோர்ட்டார்35-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்படாமலாவது செலுத்தியிருக்கிறதைவிட அதிக தீர்வையும் அபராதமும் செலுத்தப்

படாமலாவது அப்படிப்பட்ட ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாதென்று அபிப்பிராயப்படுவாராகில், அவர்கள் அந்தப்படிக்குத் தீர்மானமெழுதி, அந்த ஆதரவுக்குண்டான தீர்வைத் தொகையை நிச்சயித்து யாருடைய ஸ்வாதீனம் அல்லது அதிகாரத்தில் அந்த ஆதரவு அப்போதிருக்கிறதோ அந்த நபரை அதைக் கொண்டுவரச்சொல்லி உத்தரவுசெய்து, கொண்டுவரப்பட்டதன்மேல் அதை மறியல்செய்யலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு தீர்மானம் எழுதப்பட்டபின்பு அதை எழுதின கோர்ட்டார் அதற்கு நகலைக் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; அது சம்பந்தமான ஆதரவு மறியல்செய்யப்பட்டிருந்தாலும் மற்றப்படி அந்தக் கோர்ட்டாருடைய ஸ்வாதீனத்திலிருந்தாலும் அந்த ஆதரவையும் அவருக்கு அனுப்ப வேண்டும்.

(4) அதற்குமேல் கலெக்டரானவர் - அந்த ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவிலாவது 42 அல்லது 43-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு ஸெர்ட்டிபிகேட்டிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், அந்த ஆதரவு சம்பந்தமாய் முத்திரைச் சட்டத்திற்கு விரோதமாக யாதொரு குற்றஞ் செய்திருப்பவனுப்த் தாம் நினைக்கிற நபர்மேல் அந்த குற்றத்திற்காகப் பிராது நடத்தலாம்.

ஆனல்,—

(a) (தீர்வையும் அபராதமும்கூட) அந்த கோர்ட் தீர்மானப்படி 35-வது பிரிவின்பிரகாரம் அந்த ஆதரவுக்காகச் செலுத்தப்படத்தக்கதாயிருந்த தொகை கலெக்டரிடத்தில் செலுத்தப்படுமாகில், சரியான தீர்வை செலுத்தாமல் மோசஞ்செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தோடு அந்த குற்றஞ் செய்யப்பட்டதென்று அவர் நினைத்தாலொழிய அப்படி பிராது தொடரக்கூடாது.

(b) அப்படிப்பட்ட பிராதைப்பற்றி யல்லாமல், இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானத்தினுலே, யாதொரு ஆதரவை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவின் ஊர்ஜிதத்திற்காவது, 42-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஸெர்ட்டிபிகேட்டின் ஊர்ஜிதத்திற்காவது பாதகமுண்டாகமாட்டாது.

7-ம் அத்தியாயம்.

க்ரிமினல் குற்றங்களும் நடவடிக்கையும்.

கிரமமாய் முத்திரை போட்டிராத ஆதரவை எழுதிக் கொடுப்பது முதலியவற்றிற்கு தண்டனை.

62. (1) **(a)** கேட்டவுடனேயல்லாமல் மற்றப்படி செலுத்தத்தக்கதாயிருக்கிற யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - அல்லது ப்ராமிஸொரி நோட்டைக் கிரமமாய் முத்திரைபோடாமல் எவனாவது எழுதினாலும் செய்தாலும் பிறப்பித்தாலும் எண்டார்ஸ் பண்ணினாலும் ட்ரான்ஸ்பர் செய்தாலும் சாட்சியாகவல்லாமல் மற்றப்படி கையெழுத்து பண்ணினாலும், அங்கீகரிக்கும்படிக்காவது பணஞ் செலுத்தும்படிக்காவது கொண்டுவந்து கொடுத்தாலும், அதை அங்கீகரித்தாலும், அதற்குப் பணஞ் செலுத்தினாலும், அதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொண்டாலும், எவ்விதமாகவாவது கைமாறச்செய்தாலும்,

(b) தீர்வைக்குட்பட்ட வேறே யாதொரு ஆதரவைக் கிரமமாய் முத்திரை போடாமல் எவனாவது எழுதிமுடித்தாலும், சாட்சியாகத் தவிர மற்றப்படி கையெழுத்துப் பண்ணினாலும்,

(c) கிரமமாய் முத்திரைபோடாத யாதொரு அதிகாரபத்திரத்தைக்கொண்டு எவனாவது அபிப்பிராயங்கூற எத்தனப்பட்டாலும்,

அப்படிப்பட்டவன் அவ்வித பிரதி குற்றத்திற்காகவும் ஐந்நூறு ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளாவான்:

ஆனால், யாதொரு ஆதரவுக்காக 35, 40 அல்லது 61 - வது பிரிவின்படி அபராதஞ் செலுத்தப்பட்டிருந்தால், அந்த அபராதத் தொகையை, அந்த அபராதஞ் செலுத்தினவனுக்கு அதே ஆதரவுக்காக இந்த பிரிவின்படி பின்னிட்டு அபராதம் விதிக்கப்படுமாகில் அதில் கழித்துக்கொள்ளவிடவேண்டும்.

(2) கிரமமாய் முத்திரைக்கடிதாசியாயிராமல் யாதொரு பங்கு வாரன்ட் பிறப்பிக்கப்பட்டால், அதைப் பிறப்பிக்கிற கம்பெனியாரும், அது பிறப்பிக்கப்படும் காலத்தில் அந்த கம்பெனியைச் சேர்ந்த காரியநிர்வாக டைரெக்டராகவாவது ஸெக்ரிடெரியாகவாவது வேறே பிரதான உத்தியோகஸ்தராகவாவதிருக்கிற ஒவ்வொரு நபரும்

ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

பசை முத்திரையை அழிக்காவிட்டால் தண்டனை.

63. பசை முத்திரையை 12-வது பிரிவின்படி அழித்துவிட வேண்டியவன் அந்தப் பிரிவிற் சொல்லியிருக்கிற விதமாய் அந்த முத்திரையை அழித்துவிடாத பட்சத்தில், அவனுக்கு நூறுரூபாய் வரையில் அபராதம் போடப்படும்.

27-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடவாவிட்டால் தண்டனை.

64. கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு, எவனாவது,—

(a) யாதொரு ஆதரவில் கண்டெழுதவேண்டுமென்று 27-வது பிரிவில் சொல்லியிருக்கிற சங்கதிகளையும் வயணங்களையும் எதார்த்தமாகப் பூர்த்தியாய் கண்டெழுதாமல் அந்த ஆதரவை முடித்துக்கொடுத்தாலும்,

(b) யாதொரு ஆதரவைத் தயார்செய்ய அமர்ந்தாவது சம்பந்தப்பட்டாவதிருந்து, அப்படிப்பட்ட சகல சங்கதிகளையும் வயணங்களையும் அதில் எதார்த்தமாகப் பூர்த்தியாய்க் கண்டெழுதாமலிருந்தாலும், விட்டுவிட்டாலும்,

(c) இந்த ஆக்ட்டின்படிக்கான யாதொரு தீர்வை அல்லது தண்டத்தொகையைக் கவர்ன்மெண்டார் இழப்பதற்கு ஏஷியமான வேறே யாதொரு செய்கையைச் செய்தாலும்,

அப்படிப்பட்டவன் ஐயாயிரம் ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனாவான்.

ரசீது கொடுக்கமாட்டேனென்றாலும் ரசீதுகளுக்குண்டான தீர்வை செலுத்தாமல் தப்பித்துக் கொள்ளத் தந்திரஞ் செய்தாலும் தண்டனை.

65. எவனாவது,

(a) 30-வது பிரிவின்படி ரசீது கொடுக்கவேண்டியதாயிருந்து, அதைக் கொடுக்கமாட்டேனென்றாலும் கொடுக்க அசட்டைபண்ணினாலும்,

(b) தொகையிலோ அல்லது விலையிலோ இருபது ரூபாய்க்கு மேற்பட்ட பணஞ்செலுத்தப்பட்ட பின்பாவது சொத்து

ஒப்பிக்கப்பட்ட பின்பாவது தீர்வை செலுத்தாமல் கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு இருபது ரூபாய்க்கு மேற்படாத தொகை அல்லது விலைக்கு ரசீது கொடுத்தாலும், செலுத்தப்பட்ட பணத்தையாவது ஒப்பிக்கப்பட்ட சொத்தையாவது பிரித்தாலும் வகுத்தாலும்,

அப்படிப்பட்டவன் நூறுரூபாய் வரையில் அபராதம் விதிக்கப் படத்தக்கவனுவான்.

66. எவனுவது,—

பாலிஸி எழுதிக் கொடுக்கா விட்டாலும் கிரமமாய் முத்திரை போட்டிராத பாலிஸியை எழுதிக்கொடுத்தாலும் தண்டனை.

(a) யாதொரு இன்ஷூரன்ஸ் உடன்படிக்கைக்காக மேல்வாசி அல்லது ஐவேஜ் பெற்றுக் கொண்டாவது, வரவு வைத்துக்கொண்டாவது; அப்படி செய்த பின்பு ஒருமாதத்திற்குள் அப்படிப்பட்ட இன்ஷூரன்ஸுக்காகக் கிரமமாய் முத்திரை போட்ட பாலிஸியை எழுதிப் பூர்த்திசெய்யாவிட்டாலும்,

(b) கிரமமாய் முத்திரை போடப்படாத பாலிஸியை எழுதினுலும் பூர்த்திசெய்தாலும் ஒப்பித்தாலும், அப்படிப்பட்ட பாலிஸியைக்குறித்துப் பணத்தைச் செலுத்தினுலும் கணக்கில் ஒப்புக்கொண்டாலும், செலுத்தவாவது கணக்கில் ஒப்புக் கொள்ளவாவது சம்மதித்தாலும்,

அப்படிப்பட்ட பிரதி நபரும் இருநூறு ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனுவான்.

67. ஒரு ஜதையானது இரண்டு அல்லது பலவாராய் எழுதப் படுகிறதாகவாகிலும் பூர்த்தி செய்யப்படுகிறதாகவாகிலும் பொருள்பட்டு கேட்டவுடனேயல்லாமல் மற்றபடிசெலுத்தத்தக்கதாகிறபில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது கப்பல் இன்ஷூரன்ஸ் பாலிஸியை எழுதுகிறவன் அல்லது பூர்த்தி செய்கிறவனெவனுவது அப்படிப்பட்ட பில் அல்லது பாலிஸியினுல் அந்தஜதைக்கு எத்தனை இருப்பதாகத் தெரியவருகிறதோ அத்தனை பில்லுகள் அல்லது பாலிஸிகளையும் கிரமமாய் முத்திரை போடப்பட்ட கடிதாசியில் அதே காலத்திலே எழுதாவிட்டாலும் பூர்த்தி

ஜதை ஜதையாயிருப்பதாகப் பொருள்படுகிற பில்லுகள் அல்லது கப்பல் பாலிஸிகள் எத்தனையோ அத்தனையும் எழுதாவிட்டால் தண்டனை.

செய்யாவிட்டாலும், அப்படிப்பட்டவன் ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனாவான்.

68. எவனாவது,

பில்லுகளில் பிந்திய தேதி போடுவதற்காகவும் தீர்வை செலுத்தாமல் மோசஞ்செய்வதற்காக இதர உபாயங்களைச் செய்வதற்காகவும் தண்டனை.

(a) தீர்வை செலுத்தாமல் கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு, பில் ஆவ் எக்ஸ்சேஞ்சாவது ப்ராமிஸொரி நோட்டாவது வாஸ்தவமாய் எழுதப்பட்ட அல்லது செய்யப்பட்ட தேதிக்குப்பின்னிட்ட தேதியிலுள்ள அந்த பில் அல்லது நோட்டை எழுதினாலும், செய்தாலும், பிறப்பித்தாலும்,

(b) அந்த பில் அல்லது நோட்டுக்கு அப்படி பிந்தின தேதி போட்டிருக்கிறதென்று அறிந்திருந்து எவனாவது அதை எண்டார்ஸ் பண்ணினாலும், ட்ரான்ஸ்பர் செய்தாலும், அங்கீகரிக்கும்படியாவது பணஞ் செலுத்தச் சொல்லியாவது கொண்டுவந்து கொடுத்தாலும், அதை அங்கீகரித்தாலும், அதற்குப் பணஞ் செலுத்தினாலும் பணம் பெற்றுக்கொண்டாலும், எவ்விதமாகவாவது கைமாறச்செய்தாலும்;

(c) அவ்வித எண்ணங்கொண்டு எவனாவது இந்த ஆக்ட்டிலாகிலும் அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டதிட்டத்திலாகிலும் எடுத்துச்சொல்லியிராத யாதொரு செய்கையையாவது தந்திரத்தையாவது உபாயத்தையாவது செய்தாலும், அதில் சம்பந்தப்பட்டிருந்தாலும்;

அப்படிப்பட்டவன் ஆயிரம் ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனாவான்.

முத்திரைக் கடிதாசி விற்பனையைக்குறித்த விதியை மீறுவதற்காகவும் அதிகாரமில்லாமல் விற்பனை செய்வதற்காகவும் தண்டனை.

69. **(a)** முத்திரைகளை விற்பதற்கு நியமிக்கப்பட்டவனெவனாவது 74 - வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியைமீறி நடந்தாலும்,

(b) அப்படி நியமிக்கப்படாதவனெவனாவது ஒரு அணா அல்லது அரை அணா பழைய முத்திரையல்லாத வேறே யாதொரு முத்திரையை விற்றாலும் விற்கக்காட்டினாலும்,

அப்படிப்பட்டவன் ஆறுமாதத்திற்கதிகப்படாமல் காவலில் வைக்கப்படுவதற்குள்ளாவான், அல்லது ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படா

டல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவான், அல்லது இரண்டு தண்டனைக்கும் உள்ளாவான்.

பிராதுகளைத் தொடருவதும் நடத்துவதும்.

70. (1) இந்த ஆக்ட்டின்படிக்காவது இதனால் ரத்துசெய்யப்பட்ட யாதொரு ஆக்ட்டின்படிக்காவது தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைக்குறித்து கலெக்ட்டருடைய அனுமதி இல்லாமலாகிலும் சாதாரணமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாராவது பிரத்தியேகமாகக் கலெக்ட்டராவது இதுவிஷயத்தில் அதிகாரங் கொடுக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தருடைய அனுமதியில்லாமலாகிலும் யாதொரு பிராதும் தொடரக்கூடாது.

(2) பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரியாவது, இது விஷயத்தில் அவரால் பொதுவாகவாகிலும் பிரத்தியேகமாகவாகிலும் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது அப்படிப்பட்ட யாதொரு பிராதை நிறுத்திவைக்கலாம், அல்லது அப்படிப்பட்ட யாதொரு குற்றத்திற்கு ராஜிசெய்துவிடலாம்.

(3) அவ்வாறு ராஜிசெய்யப்பட்ட தொகையானது 48-வது விதியில் ஏற்படுத்தியிருக்கிறவிதமாக வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகார வரம்பு.

71. இந்த ஆக்ட்டுக்குட்பட்ட யாதொரு குற்றத்தை, ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டும், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்திற்குக் குறையாத அதிகாரமுள்ள மாஜிஸ்ட்ரேட்டுதவிர வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டும் பரிசீலனை செய்யக்கூடாது.

பரிசீலனை இடம்.

72. யாதொரு ஆதரவு சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட அவ்வித பிரதி குற்றத்தையும், அந்த ஆதரவு எவ்விடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் அல்லது ராஜதானியிலும், க்ரிமினல் விவகாரத்தைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி அப்படிப்பட்ட குற்றம் பரிசீலனை செய்யப்படத்தக்க டிஸ்ட்ரிக்ட் அல்லது ராஜதானியிலும் பரிசீலனை செய்யலாம்.

8-ம் அத்தியாயம்.

அனுபந்தமான நிபந்தனைகள்.

புஸ்தகம் முதலியவைகளைப் பார்வையிடும்படி வைத்திருக்க வேண்டுமென்பது.

73. எவைகளைப் பார்வையிடுவதனால் யாதொரு தீர்வை கிடைப்பதற்காவது, யாதொரு தீர்வை சம்பந்தமாக யாதொரு மோசம் அல்லது தவிர்தலை ருஜுப்படுத்துவதற்காவது கண்டுபிடிப்பதற்காவது ஏஷிய முண்டாகலாமோ அப்படிப்பட்ட எவ்வகையான ரெஜிஸ்ட்டர்கள், புஸ்தகங்கள், ரெகார்டுகள், காகிதங்கள், தஸ்தாவேஜுகள் அல்லது நடவடிக்கைகளைத் தம்முடைய ஸ்வாதீனத்திலுடைய ஒவ்வொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரும்-கலெக்ட்டரால் கையெழுத்துமூலமாய் அனுமதி கொடுக்கப்பெற்ற எவனையாவது அந்த விஷயத்திற்காக அந்த ரெஜிஸ்ட்டர்களையும் புஸ்தகங்களையும் காகிதங்களையும் தஸ்தவேஜுகளையும் நடவடிக்கைகளையும் கட்டணம் அல்லது வர்த்தனையில்லாமலே நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடவும், அவனுக்கு அவசியமாகத் தோற்றுகிற குறிப்புகளையும் எக்ஸ்ட்ராக்ட்டுகளையும் எடுத்துக்கொள்ளவும் அனுமதி கொடுக்கவேண்டும்.

முத்திரை கடிதாசி விற்பனையைக்குறித்து விதிகள் செய்ய அதிகாரம்.

74. பிரதேச கவர்ன்மெண்டார் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டு,

(a) முத்திரைகள் - முத்திரை கடிதாசிகள், ஆகிய இவைகளின் சர்ப்பராவையும் விற்பனையையும்,

(b) இன்னார்மாத்திரம் விற்கவேண்டுமென்பதையும்,

(c) அவர்களுடைய அலுவலையும் பிரதிபலனையும்,

கிரமப்படுத்துவதற்காக விதிகளைச் செய்யலாம்:

ஆனால், ஒரு அணு அல்லது அரை அணு பசை முத்திரைகளின் விற்பனை அப்படிப்பட்ட விதிகளினால் வரையறுக்கப்படமாட்டாது.

சாதாரணமாய் ஆக்ட்டை நிறைவேற்றுவதற்கு விதிகள்செய்ய அதிகாரம்.

75. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களைச் சாதாரணமாய் நிறைவேற்றுவதைக் குறித்து விதிகளைச் செய்யலாம் : மேலும், அந்த விதிகளை மீறி நடந்தால் எந்தவிஷயத்திலும் ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதத் தொகைகளை அவ்விதிகளைக்கொண்டு நிர்ணயிக்கலாம்.

76. (1) 74 - வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகள் தவிர இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட மற்ற விதிகளை யெல்லாம் இந்தியா கெஜெட்டில் பிரசுரஞ் செய்ய வேண்டும்; 74 - வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளை யெல்லாம் அவ்வவ்விடத்திய கெஜெட்டில் பிரசுரஞ் செய்ய வேண்டும்.

விதிகளைப் பிரசுரஞ் செய்வது.

(2) இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரசுரஞ்செய்யப்பட்ட சகல விதிகளும் அப்படி பிரசுரமானபின்பு இந்த ஆக்ட்டினால் ஏற்படுத்தியவைகளைப்போல் செலாவணியாகும்.

76.-A. பிரதேச கவர்ன்மெண்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக—

சில அதிகாரங்களை ஒப்புவிப்பது.

(a) 2 (9), 33 (3) **(b)**, 70 (1), 74, 78, இந்த பிரிவுகளினால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்களையுமாவது அவைகளில் எதையாவது பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரிக்கும்,

(b) 45 (1) (2), 56 (1), 70 (2) இந்தப் பிரிவுகளினால்பிரதான மேல்விசாரணை ரெவினியு அதிகாரிக்கு கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்களையுமாவது அவைகளில் எதையாவது அந்தவிளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய அவருக்குக் கீழ்ப்பட்ட ரெவினியு அதிகாரிக்கும் —ஒப்புவிக்கலாம்.

77. கோர்ட் கட்டணங்களைக்குறித்து அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டதிட்டப்படிக் குண்டான தீர்வைகளுக்கு இதிலுள்ள தெதனாலும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

கோர்ட் கட்டணங்களுக்குப் பாதகமில்லை.

78. அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் தங்கள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட ராஜ்ஜியத்தின் பிரதான தேசபாஷைகளில், பிரதி ஒன்றுக்கு நாலு அணா அதிகப்படாமல் இந்த ஆக்டின் மொழிபெயர்ப்புகளை விற்பதற்காக ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆக்டை மொழிபெயர்த்து, நயமாய் விற்பது.

79. 2-வது ஷெட்யூலில் கண்ட ஆக்ட்டுகள் அந்த ஷெட்யூலின் நான்காவது கலத்திற்கண்ட அளவுக்கு ரத்துசெய்யப்படுகின்றன.

ரத்து.

1-வது ஷெட்யூல்.

ஆதரவுகளுக்கு முத்திரைத்தீர்வை.

(3-வது பிரிவைப் பார்க்க.)

இக்குறிப்பிட்டிருக்கிற ஆர்டிகில்கள் சென்னப்பட்டணம் 1922-ம்ஹூத்து 6-வது ஆக்டினுல் சென்னை இராஜதானிக்குமட்டும் 1-A ஷெட்யூலில் வரிவிகித்ம் மாற்றியிருப்பதைக் குறிக்கிறது.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
1. கடனை ஒப்புக்கொள்வது, தொகையிலாவது விலையிலாவது இருபது ரூபாய்க்கு மேற்பட்டு கடனைக் குறித்துச் சாட்சியமாக ருஜு கொடுக்கும் பொருட்டு (யாதொரு சாவுகாருடைய பாஸ் புஸ்தகம் தவிர வேறே) யாதொரு புஸ்தகத்திலாவது தனித் துண்டு கடிதாசியிலாவது கடன் வாங்கிக்கொண்டவனுலாகிலும் அவன் பட்சத்திலாகிலும் எழுதப்பட்டாவது கையெழுத்து செய்யப்பட்டாவது, அந்தப் புஸ்தகம் அல்லது கடிதாசி கடன் கொடுத்தவனுடைய ஸ்வாதீனத்தில் வைக்கப்பட்டிருந்தால்: ஆனுல், அவ்வாறு ஒப்புக்கொள்வதிலே, கடனை கொடுத்துவிடும்படியாக யாதொரு வாக்குத்தத்தமாவது வட்டி கொடுப்பதாக அல்லது யாதொரு சரக்கு அல்லது சொத்தை ஒப்பிப்பதாக யாதொரு நிபந்தனையாவது இருக்கக்கூடாது.	ஒரு அணு.
* 2. அட்மினிஸ்ட்ரேஷன் பாண்ட், 1925-ம் ஹூத்திய இந்துதேசத்துத் தாயபாக ஆக்ட் 256-வது பிரிவின்படிக்காவது, 1873-ம் ஹூத்துக் கவர்ன்மென்ட் ஸேவிங்ஸ்பாங்க் ஆக்ட் 5-வது பிரிவின்படிக்காவது, 1881-ம் ஹூத்து ப்ரொபேட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையுங் குறித்த ஆக்ட் 78-வது பிரிவின்படிக்காவது, 1889-ம் ஹூத்து ஸக்ஸெஷன் ஸெர்ட்டிபிகேட் ஆக்ட் 9 அல்லது 10-வது பிரிவின்படிக்காவது கொடுக்கப்பட்ட பத்திரமுட்பட:—	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(a) தொகை 1,000 ரூபாய்க்கு அதிகப்படாத விஷயத்தில்.	அவ்வளவு தொகைக்குஉட்பட்ட (15-வது நம்பர்) பாண்டுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	பத்துரூபாய்.
* 3. **ஸ்வீகாரப்பத்திரம்,** அதாவது யாதொரு ஸ்வீகாரத்தை ரெகார்ட் செய்கிற அல்லது ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரங் கொடுக்கிற அல்லது கொடுப்பதாகப் பொருள்படுகிற (உயிலல்லாத வேறே) யாதொரு ஆதரவு ... ... அட்வோகேட் — அட்வொகேட்டாகத் தாக்கல். (30-வது நம்பர்) இதைப்பார்க்க.	பதினைந்துரூபாய்.
* 4. **பிரமாணப்பத்திரிகை,** பிரமாணம் செய்வதற்குப் பர்த்தியாக உறுதிமொழி சொல்லவாவது உறுதிமொழிப் பத்திரிகை எழுதிகொடுக்கவாவது சட்டத்தினுலே அதிகாரங் கொடுக்கப்பெற்ற நபர்களின் விஷயத்தில் உறுதிமொழியாகிலும் அல்லது எழுதிக்கொடுத்த உறுதிமொழிப் பத்திரிகையாகிலும் அடங்கியிருப்பது.	இரண்டு ரூபாய்.
நிவாரணைகள்.	
பிரமாணப்பத்திரிகை அல்லது உறுதிமொழிப் பத்திரிகை.—	
(a) 1911-ம் வருஷத்து இந்தியா ராணுவ ஆக்டின்படி ராணுவத்தில் சேருவதாய் உடன்படிக்கையாக;	
(b) யாதொரு கோர்ட்டிலாவது யாதொரு கோர்ட் உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாவது உடனே தாக்கல்செய்வதற்காக அல்லது உபயோகிப்பதற்காக ;	
(c) பென்ஷனையாவது தரும வர்த்தனையையாவது எவனையாகிலும் பெற்றுக்கொள்ளும்படிக்கு மாத்திரமே செய்வதற்காக எழுதப்பட்டால்.	
* 5 **உடன்படிக்கை அல்லது உடன்படிக்கை யாதாஸ்து —**	
(a) யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜின் விற்பனையைக் குறித்ததானால் ;	மூன்று அணா.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(b) யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின் அல்லது யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியில் அல்லது இதரமான ஒன்றுசேர்ந்த கூட்டத்திலுள்ள பங்கின் விற்பனையைக் குறித்ததானால் ;	பதினைந்து ரூபாய்க்கு மேற்படக் கூடாதென்பதற்குட்பட்டு, அந்தப் பத்திரம் அல்லது பங்கின் விலைமதிப்பில் பிரதி 10,000 ரூபாய் அல்லது அதின் பாகத்துக்கு ஒன்றறையணா.
(c) மற்றப்படி சொல்லி யிராததானால் ...	பன்னிரண்டு அணா.

நிவாரணைகள்

உடன்படிக்கை அல்லது உடன்படிக்கை யாதாஸ்து—

(a) வஸ்துக்கள் அல்லது சரக்குகளின் விற்பனைக்கேயாவது விற்பனை சம்பந்தமாகவேயாவது 43-வது நம்பரின்படி தீர்வை விதிக்கப்படத்தக்க குறிப்பு அல்லது யாதாஸ்து அல்லாதது ;

(b) யாதொரு கடனுக்காகவாவது கடன் சம்பந்தமாயாவது இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தர்க்காஸ்து ரூபமாய்ச் செய்யப்பட்டது ;

(c) 1874-ம் வருஷத்து யூரோப்பியர்களாகிய ஊர்ச்சுற்றிகள் ஆக்ட் 17-வது பிரிவின்படி செய்யப்பட்டது.

குத்தகை அல்லது வாடகைக்குவிட உடன்படிக்கை (35 - ம் நம்பர்) குத்தகை அல்லது வாடகைச் சீட்டைப்பார்க்க.

* 6 **ஆட்சிப் பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கை** எனவே,

(1) ஆட்சிப்பத்திரங்களையோ (விற்பனை செய்யக்கூடிய பத்திரமல்லாத வேறே) எவ்வித சொத்துக்கும்பாத்தியதை உண்டுபண்ணுகிற அல்லது அந்த பாத்தியதைக்குச் சாக்ஷியமாயிருக்கிற ஆதரவுகளையோ கட்டுவதாகவாவது,

(2) அசையும் பொருளை அடகு அல்லது அடமானம் வைப்பதற்காவது,

கடனாகக் கொடுக்கப்பட்டாகிலும் கொடுக்கப்போகிறதாகவாகிலுமுள்ள பணத்தையோ இப்

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
போதிருக்கிற அல்லது இனிமேல் உண்டாகப்போகிற கடனையோ மீண்டும் செலுத்துவதன் பொருட்டு ஈடாக அப்படி கட்டியாவது, அடகு அல்லது அடமானம் வைத்தாவதிருக்கிற பட்சத்திலே, சம்பந்தப்பட்ட உடன்படிக்கைக்குச் சாக்ஷியமாயிருக்கிற யாதொரு ஆதரவு— (a) கேட்கும்போதாவது, உடன்படிக்கைக்குச்சாக்ஷியமாயிருக்கிற ஆதரவின் தேதிமுதல் மூன்று மாதத்திற்கு மேற்பட்டாவது மேற்படி கடன் அல்லது பாக்கி தீர்த்துவிடத்தக்கதாயிருந்தால்,	

	ஒற்றையாக எழுதினல்.			ஒரு ஜதைக்கு இரண்டெழுதினல் அவைகளில் ஒவ்வொன்றுக்கும்.			ஒரு ஜதைக்கு மூன்றெழுதினல் அவைகளில் ஒவ்வொன்றுக்கும்		
	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
(i) அந்தக் கடன் அல்லது பாக்கித் தொகை 200 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	0	4	6	0	3	0	0	1	6
(ii) ரூபாய் 200 மேல் 400 வரை	0	9	0	0	4	6	0	3	0
,, 400 ,, 600 ,,	0	13	6	0	7	6	0	4	6
,, 600 ,, 800 ,,	1	2	0	0	9	0	0	6	0
,, 800 ,, 1,000 ,,	1	6	6	0	12	0	0	7	6
,, 1,000 ,, 1,200 ,,	1	11	0	0	13	6	0	9	0
,, 1,200 ,, 1,600 ,,	2	4	0	1	2	0	0	12	0
,, 1,600 ,, 2,500 ,,	3	6	0	1	11	0	1	2	0
,, 2,500 ,, 5,000 ,,	6	12	0	3	6	0	2	4	0
,, 5,000 ,, 7,500 ,,	10	2	0	5	1	0	3	6	0
,, 7,500 ,, 10,000 ,,	13	8	0	6	12	0	4	8	0
,, 10,000 ,, 15,000 ,,	20	4	0	10	2	0	6	12	0
,, 15,000 ,, 20,000 ,,	27	0	0	13	8	0	9	0	0
,, 20,000 ,, 25,000 ,,	33	12	0	16	14	0	11	4	0
,, 25,000 ,, 30,000 ,,	40	8	0	20	4	0	13	8	
,, 30,000 க்கு மேற்பட்டு அதிகப்படியான பிரதி 10,000 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது;	13	8	0	6	12	0	4	8	0

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(b) மேற்படி ஆதரவின் தேதிமுதல் மேற்படி கடன் அல்லது பாக்கி மூன்று மாதத்திற்கு மேற்படாமல் தீர்த்துவிடத்தக்கதா யிருந்தால்.	கிடைத்த தொகைக்கு (a) குறிப்பிட்ட பகுதியைச்சேர்ந்த (i) அடையாளமிட்ட உட்பகுதியின் படிக்காவது (a) குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த (ii) அடையாளமிட்ட உட்பகுதியின்படிக்காவது யாதொருகடன் அல்லது பாக்கிக்குச்செலுத்தத்தக்க தீர்வையில்பாதி $\frac{1}{4}$ அணா முத்திரைத் தீர்வையை $\frac{1}{2}$அணாவாகவும் $\frac{3}{4}$ அணாவை 1 அணாவாகவும் கணக்கிடவேண்டும்.
நிவாரணை. சாக்ஷி போடாவிட்டால் சாமான்களின் அடகு அல்லது அடமானத்தைக்குறித்த ஆதரவு.	
* 7. **அதிகாரத்தை நிறைவேற்றுவதில் நேமக பத்திரிகை,** ட்ரஸ்டிகள் சம்பந்தமாயாவது அசையும் பொருள் அல்லது அசையாப்பொருள் சம்பந்தமாயாவது உயிலல்லாத வேறே யாதொரு எழுத்து மூலமாய்ச் செய்யப்படுமாகில்.	இருபத்தைந்துரூபாய்
* 8. **விலைமதிப்பு அல்லது விலை நிர்ணயம்.**—வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் கோர்ட் உத்தரவின்படிக்கல்லாமல் வேறே விதமாய்ச் செய்யப்பட்டது.—	
(a) தொகை ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படாத விஷயத்தில்	அவ்வளவு தொகைக்கு (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்கு உண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	ஏழுரூபாய்எட்டுஅணா
நிவாரணைகள். (a) உடன்படிக்கையினலாவது சட்ட வியாபகத்தினலாவது எவ்விதத்தினலாகிலும் இருதிறத்தாரும் கடமைப்பட்டிருப்பதல்லாததாய், ஒரு திறத்தாருக்கு மாத்திரம் தெரிவிப்பதற்காகச் செய்யப்பட்ட விலைமதிப்பு அல்லது விலை நிர்ணயம்.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(b) குத்தகைத் தொகையாகப் பூமிக்குடையவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையை நிச்சயிக்கும்பொருட்டு மாசூலின் தொகை மதிப்பு.	
* 9. வேலைகற்றுக்கொள்வதற்கான சாஸனம். (11-வது நம்பர்) க்ளெர்க் உத்தியோக நிபந்தனைகள் அல்லாமல், யாதொரு தொழில் - வர்த்தகம் அல்லது அலுவலைக் கற்றுக்கொள்ள எஜமானனிடத்தில் விடப்பட்ட அப்பியாசி, க்ளெர்க் அல்லது வேலைக்காரனுடைய ஊழியத்திற்காவது கற்பனைக்காவது சம்பந்தமான எல்லா ஆதரவுகளும் உள்பட. ...	எழுரூபாய்எட்டுஅணா.
நிவாரணை	
1850-ம்ஸூத்து வேலைகற்றுக் கொள்ளுகிறவர் ஆக்டின்படி மாஜிஸ்ட்ரேட்டினால் எழுதிக் கொடுக்கப்பட்டாகிலும், அல்லது யாதொரு பொதுவான தருமசாலையாலாவது அந்தத் தருமசாலையின் செலவிலாவது ஒருவன் வேலைகற்றுக் கொள்ள அமர்த்திக்கொள்ளப்படுகிற வேலை கற்றுக்கொள்ளுவதற்கான ஆதரவுகள்.	
* 10. ஒரு கம்பெனியாருடைய கூட்டத்தின் நிபந்தனைகள்.	ஐம்பது ரூபாய்.
நிவாரணை	
இலாபத்துக்காக ஏற்படுத்தப்படாமலும் 1913-ம் ஸூத்து இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட் 96-வது பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டும் இருக்கிற யாதொரு கூட்டத்தின் நிபந்தனைகள்.	
(39-வது நம்பர்) யாதொரு கம்பெனியின் கூட்டத்து யாதாஸ்தையும் பார்க்க:	
* 11. க்ளெர்க் உத்தியோக நிபந்தனைகள் அல்லது எவனாவது ஹைகோர்ட்டிலே தான் அட்டர்னியாக ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்டு க்ளெர்க்காகச் சேவிக்க முதலில் உடன்பட்டு எழுதிக் கொடுக்கிற உடன்படிக்கை	முந்நூற்றெழுபத்தைந்து ரூபாய்.
சாட்டுதல் பத்திரம் (23-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்தையும், (62-வது நம்பர்) ட்ரான்ஸ்பர் பத்திரத்தையும், (63-வது நம்பர்) குத்தகை அல்லது வாடகை ட்ரான்ஸ்பர் பத்திரத்தையும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பார்க்கவும்.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
அட்டர்னி, (30-வது நம்பர்) அட்டர்னியாகத் தாக்கலேயும் (48-வது நம்பர் பவர் ஆவ் அட்டர்னியையும் பார்க்க.	
ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரம், 3-வது நம்பர்) ஸ்வீகாரப் பத்திரத்தைப் பார்க்க.	
* 12. பஞ்சாயத்துத் தீர்மானம், அதாவது, வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் கோர்ட்டாருடைய உத்தரவிலல்லாமல் மற்றப்படி ஆலோசனைக்கு அனுப்பப்படுவதன் மேல் பஞ்சாயத்தாராவது மத்தியஸ்தராவது பாகம் பிரித்துக்கொள்ளும்படி உத்தரவு செய்யும் தீர்மானமல்லாத எழுத்துமூலமாய்ச் செய்கிற வேறே தீர்மானம்—	
(a, அந்தத்தீர்மானம் சம்பந்தப்படுகிற தொகை அல்லது சொத்தின் கிரயம் அந்தத்தீர்மானத்தில் கண்டிருக்கிறபடி ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	அவ்வளவு தொகைக்கு(16-வதுநம்பர் பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
(b) அது 1,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 5,000 ரூபாய்க்கு மேற்படாமலும் இருந்தால்.	பத்துரூபாய்.
5,000 ரூபாய்க்கு மேற்பட்டு அதிகப்படியாயுள்ள ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது.	ஐம்பதுரூபாய்க்கு மேற்படக் கூடாதென்பதற்குட்பட்டு எட்டு அணு.
நிவாரணை	
1901-ம் ஹூ த்து பம்பாய் டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபல் ஆக்ட் 160-வது பிரிவின்படியாகிலும் 1874-ம் ஹூ த்துப் பம்பாய் பரம்பரை உத்தியோகங்களைக் குறித்த ஆக்ட் 18 - வது பிரிவின்படியாகிலும் பஞ்சாயத்துத் தீர்மானம்.	
13. பில் ஆவ் எக்ஸ் சேஞ்ஜ் [2 (2) வது பிரிவில் அர்த்தஞ்சொன்ன பிரகாரம்] பாண்ட், பாங்க் நோட், அல்லது கரன்ஸி நோட் அல்லாதது—	
(a) * * * * *	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.					
(b) கேட்டவுடனேயல்லாமல் மற்றப்படி, தேதிக்குப் பின்பாவது தரிசனமான பின்பாவது ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் செலுத்தத்தக்கதாக இருக்கிற விஷயத்தில்—	ஒற்றையாக எழுதினால்.		ஒரு ஜதைக்கு இரண்டு பிரதிகளில் ஒவ்வொன்றுக்கும்.		ஒரு ஜதைக்கு மூன்று பிரதிகளில் ஒவ்வொன்றுக்கும்.	
	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.
அந்த பில் அல்லது நோட்டின் தொகை 200 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	0	3	0	2	0	1
ரூ. மேல் ரூ வரையில்...						
200 400...	0	6	0	3	0	2
400 600...	0	9	0	5	0	3
600 800...	0	12	0	6	0	4
800 1,000...	0	15	0	8	0	5
1,000 1,200...	1	2	0	9	0	6
1,200 1,600...	1	8	0	12	0	8
1,600 2,500...	2	4	1	2	8	12
2,500 5,000...	4	8	2	4	1	8
5,000 7,500...	6	12	3	6	2	4
7,500 10,000...	9	0	4	8	3	0
10,000 15,000...	13	8	6	12	4	8
15,000 20,000...	18	0	9	0	6	0
20,000 25,000...	22	8	11	4	7	8
25,000 30,000...	27	0	13	8	9	0
முப்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு அதிகமாயுள்ள பிரதி பத்தாயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது,	9	0	4	8	3	0

(c) தேதிக்குப் பின்பாவது தரிசனமான பின்பாவது ஒருவருஷத்திற்கு மேற்பட்டுச்செலுத்தத்தக்கதாக இருக்கிற விஷயத்தில்	அந்த தொகைக்கு (நெ 15) பாண்டுக்குண்டான தீர்வை.
* 14. பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா—(யாதொரு த்ரு பில் ஆவ் லேடிங் உள்பட).	ஆறு அணு.
	குறிப்பு - பாகங்களாக

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
நிவாரணைகள். (a) பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா— அதில் கண்டிருக்கிற சரக்குகள் 1908-ம் ௵த்திய இந்திய ரேவு ஆக்ட்டில் விவகரித்திருக்கிற யாதொரு ரேவின் எல்லைகளுக்குள் ஓரிடத்திலே வரப்பற்றிக்கொள்ளப்பட்டு அதே ரேவின் எல்லைகளுக்குள் வேறோரிடத்திலே ஒப்பிக்கப்பட வேண்டியதாயிருந்தால்.	பில் ஆவ் லேடிங் எழுதப்பட்டால், அதற்குண்டாகிய சரியானமுத்திரையை அந்த ஜதையில் ஒவ்வொன்றுக்கும் போடவேண்டும்.
(b) பில் ஆவ் லேடிங்-ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியிலே எழுதப்பட்டதாகவும் ப்ரிட்டிஷ் இந்தியாவில் சேர்க்கவேண்டிய சொத்தைக் குறித்ததாகவும் இருந்தால்.	
15. **பாண்ட் (பத்திரம்)** [2 (5)-வது பிரிவினல் விவரிக்கப்பட்ட பிரகாரம்] (27-வது நம்பர்) யாதொரு டிபென்சூரா யிராததும், இந்த ஆக்ட்டிலாவது 1870-ம் ௵த்துக் கோர்ட் கட்டண ஆக்ட்டிலாவது வேறேவிதமாய்ச் சொல்லியிராததும்.	
அடையப்பட்ட தொகை அல்லது கிரயம் ரூபாய் 10-க்கு மேற்படாத விஷயத்தில்	இரண்டு அணா.
அடையப்பட்ட தொகை அல்லது கிரயம் ரூபாய் 10-க்கு மேற்பட்டு 50-வரையில்	நான்கு அணா.
50 — 100 ...	எட்டு அணா.
100 — 200 ...	1 ரூபாய் 4 அணா.
200 — 300 ...	1 ரூபாய் 14 அணா.
300 — 400 ...	2 ரூபாய் 8 அணா.
400 — 500 ...	3 ரூபாய் 2 அணா.
500 — 600 ...	4 ரூபாய் 8 அணா.
600 — 700 ...	5 ரூபாய் 4 அணா.
700 — 800 ...	6 ரூபாய்
800 — 900 ...	6 ரூபாய் 12 அணா.
900 — 1,000 ...	7 ரூபாய் 8 அணா
ரூபாய் ஆயிரத்திற்கு மேற்பட்டுப் பிரதி ஐந்நூறு ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	3 ரூபாய் 12 அணா.

(2-வது நம்பர்) அட்மினிஸ்ட்ரேஷன் பாண்டையும், (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டையும், (26-வது நம்பர்) கஸ்டம்ஸ் பாண்டையும், (34-வது நம்பர்) இன்டெம்னிடி

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
பாண்டையும், (56-வது நம்பர்) கப்பற்சரக்கு அடமான பத்திரத்தையும் (57-வது நம்பர்) பொருப்புப்பத்திரத்தையும் பார்க்க.	
விலக்குகள்.	
பாண்ட்—	
(a) 1876-ம் வருஷத்திய பங்காளத்து இரிகேஷன் ஆக்ட்டின்படி தங்களுடைய அலுவல்களைக் கிரமமாய் நிறைவேற்றுவதற்காக அந்த ஆக்ட் 99-வது பிரிவை அனுசரித்துச் செய்யப்பட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட தலைவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டால்;	
(b) தரும டிஸ்பென்ஸெரி அல்லது ஆஸ்பத்திரிக்காவது அசேஷ ஜன உபயோகத்திற்கான வேறே யாதொரு விஷயத்திற்காவது ஜனங்கள் செய்திருக்கும் கையொப்பத்தினால் கிடைக்கும் பிரதேச வரும்படி மாதமொன்றுக்குக் குறித்த தொகைக்குக் குறையாதென்று உத்தரவாதஞ் செய்யும்பொருட்டு யாதொரு நபரினால் எழுதிக்கொடுக்கப்பட்டால்.	
* 16. **பாட்டம்ரி பாண்ட் என்னும் கப்பல் ஈட்டுப்பத்திரம்,** அதாவது—கடலில் சபர்போகிற கப்பலின் மாஸ்ட்டரானவர் தாம் கப்பலைக் காப்பாற்றிக்கொள்வதற்காவது சபரை முடிப்பதற்காவது கூடுமானதா யிருக்கும்படி அந்தக் கப்பலை ஈடுகாட்டிப் பணம் கடன்வாங்கிக்கொண்டு எழுதிக்கொடுக்கிற ஆதரவு.—	
அடையப்பட்ட தொகை அல்லது மதிப்பு ரூபா 10 க்குமேற்படாத விஷயத்தில். ...	3 அணா.
,, ரூபா 10-க்கு மேல் ரூபா 50 வரையில்	6 அணா
,, 50 ,, 100 ,,	12 அணா.
ரூ. 100-க்கு மேற்பட்டு ஆயிரம் வரையில் பிரதி 100-ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	12 அணா.
ரூபாய் ஆயிரத்திற்கு மேற்பட்டால் பிரதி ஐந்நூறு ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	3 ரூபாய் 12 அணா.

10

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 17. கான்ஸேல்லேஷன் என்னும் ரத்து ஆதரவு (பத்திரம்)— (முன்னே எழுதிக் கொடுக்கப்பட்ட யாதொரு ஆதரவு எதனால் ரத்து செய்யப்படுகின்றதோ அப்படிப்பட்ட ஆதரவு அடங்கினது) அது சாக்ஷி கையெழுத்து போடப்பட்டு வேறுவிதமாய் ஏற்பாடு செய்யப்படாமலிருந்தால்	7 ரூபாய் 8 அணா.
(55-வது நம்பர் விடுதலைப்பத்திரத்தையும், (58 B-வது நம்பர்) பொருத்த ஆதரவு ரத்தையும், (61-வது நம்பர்) குத்தகை அல்லது வாடகை விடுதலைச்சீட்டையும்,(64-B-வது நம்பர்) டிரஸ்ட் ரத்தையும் பார்க்க.	
* 18. விற்பனை ஸேர்ட்டிபிகேட்—(தனித்தனி லாட்டாக வைத்து விற்கப்பட்ட ஒவ்வொரு சொத்தின் விஷயமாய்) ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாராலாவது கலெக்ட்டர் அல்லது வேறே ரெவினியு உத்தியோகஸ்தராவது பஹிரங்கமான ஏலத்தில் விற்கப்பட்ட யாதொருசொத்தைக்கிரயத்துக்குக் கொண்டவருக்குக் கொடுக்கப்பட்டது.	
(a) விற்பனை செய்யப்பட்ட சொத்தின் விலை 10- ரூபாய்க்கு அதிகப்படாவிட்டால் ...	மூன்று அணா.
(b) விற்பனை செய்யப்பட்ட சொத்தின் விலை 10-ரூபாய்க்கு அதிகப்பட்டு 25-ரூபாய்க் கதிகப்படாவிட்டால்	ஆறு அணா.
(c) இதரமான யாதொரு விஷயத்தில் ...	கிரயத்தொகைக்கு மாத்திரம் சரியான ஐவேஜுக்காக(23 வது நம்பர்) ஒப்பபடைப் பத்திரத்துக்குண்டான தீர்வை.
19. ஸேர்ட்டிபிகேட் அல்லது வேறே தஸ்தாவேஜு—அதைப்பெற்றுக்கொண்டிருக்கிறவனுக்காகிலும் வேறே எவனுக்காகிலும் யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனி அல்லது இதரமான ஒன்றுயச் சேர்ந்த கூட்டத்திலுள்ள அல்லது அதனுடைய எந்த பங்குகளுக்காகிலும், (scrip) ஸ்க்ரிப்புக்காகிலும், முதற்பணப் பங்குக்காகிலும், உண்டாயிருக்கிற சுதந்தரம் அல்லது ஹக்கையாவது, இப்படிப்பட்ட யாதொரு கம்பெனி அல்லது கூட்டத்திலுள்ள அல்லது அதனுடைய பங்குகள்-ஸ்க்ரிப்-அல்	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
லது முதற்பணப்பங்குக்குச் சொந்தக்காரனாவதற்கு அவனுக்குள்ள சுதந்தரத்தையாவது ஹக்கையாவது தெரிவிப்பது.	இரண்டு அணா.
(36-வது நம்பர்) பங்குகள் கொடுக்கப்படுவதற்கான சீட்டையும் பார்க்க.	
* 20. **சார்ட்டர் பார்ட்டி என்னும் கப்பற்கேள்வு உடன்படிக்கை,** அதாவது—(கப்பல்களை இழுப்பதற்கான ஸ்டீமரைக் கூலிக்கு அமர்த்திக்கொள்ளுகிற உடன்படிக்கை தவிர) சபர்போகக் கூலிக்கு அமர்த்திக்கொள்ளுகிறவனுடைய இன்ன காரியங்களுக்கென்று யாதொரு கப்பல் அல்லது அதனுடைய குறித்த பிரதான பாகத்தைக் கூலிக்கு விட்டு எழுதிக்கொடுக்கிற ஆதரவு; இதில் அபராத உட்பிரிவு அடங்கியிருந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலுஞ்சரி	இரண்டுரூபாய்.
21. சேக் (1927-ம்௵த்து 5-வது ஆக்டால் ரத்து)	
* 22. **காம்போஸிஷன் சாஸனம் என்னும் ஒருமை உடன்படிக்கை.** அதாவது கடன் வாங்கினவர் தனக்குக் கடன் கொடுத்தவர்களுடைய பிரயோசனத்துக்குத் தன்னுடைய சொத்து சேரும்படிக்காவது, அவர்களுடைய கடனுக்கு இவ்வளவு தொகையாகிலும் பங்கு வீதமாகிலும் கடன் கொடுத்தவர்களுக்குச்செலுத்துவதாகவாவது கடன்வாங்கினவருடையதொழிலைகண்காணிகளுடைய மேற்பார்வைக்குள்ளாகிலும் கடனைச் செலுத்தப் பத்திரிகை மூலமாய் வாயிதா பெற்றுக்கொண்டாகிலும், அவருக்குக் கடன்கொடுத்தவர்களுடைய பிரயோசனத்துக்காக நடத்துவதாய் ஷரத்து கண்டாவது, கடன்காரர் எழுதிக்கொடுக்கிற ஆதரவு	பதினைந்துரூபாய்.
* 23. ஒப்படைப்பத்திரம்—[2 (10) பிரிவினல் விவரிக்கப்பட்ட பிரகாரம்] 62-வது நம்பரின்படி கட்டணம் வாங்கப்பட்ட அல்லது நிவாரணை செய்யப்பட்ட ட்ரான்ஸ்பராயிராதது—	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
அப்படிப்பட்ட ஒப்படைப் பத்திரத்துக்காக அதில் கண்டிருக்கிறபடி ஜமேஜாபத்தொகை அல்லது விலை 50 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	பன்னிரண்டு அணா.
ரூபா 50-க்கு மேற்பட்டு ரூபா 100 வரையில் ...	1 ரூபாய் 8 அணா.
,, 100 ,, 200 ,,	3 ரூபாய்
,, 200 ,, 300 ,,	4 ரூபாய் 8 அணா.
,, 300 ,, 400 ,,	6 ரூபாய்
,, 400 ,, 500 ,,	7 ரூபாய் 8 அணா.
,, 500 ,, 600 ,,	9 ரூபாய்.
,, 600 ,, 700 ,,	10 ரூபாய் 8 அணா.
,, 700 ,, 800 ,,	12 ரூபாய்.
,, 800 ,, 900 ,,	13 ரூபாய் 8 அணா.
,, 900 ,, 1,000 ,,	15 ரூபாய்.
ரூபாய் ஆயிரத்திற்கு மேற்பட்டுப் பிரதி ஐந்நூறு ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது ...	7 ரூபாய் 8 அணா.
நிவாரணை. 1914-ம் வருஷத்து இந்தியன் காபிரைட் ஆக்ட் 5-வது பிரிவின்படி செய்யப்பட்ட பதிவினுலே காபிரைட்என்னும் சுதந்தரத்தைச் சாட்டுதல். **கூட்டுப்பங்கு பத்திரம்**—(46-வது நம்பர்)கூட்டுப்பங்கை பார்க்க.	
* 24. **நகல் அல்லது எக்ஸ்ட்ராக்ட்** - யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனுலாவது அவனுடையஉத்தரவின்படிக்காவது சரியானநகல்அல்லதுஎக்ஸ்ட்ராக்ட்டென்று ஸெர்ட்டிபை செய்யப்பட்டு, கோர்ட் கட்டணங்களைக்குறித்துஅந்தந்த காலத்தில் வழங்கிவருகிற சட்டப்படி கட்டணத்திற்குட்படாதிருப்பது—	
(i) அசலுக்குத் தீர்வை யில்லாதிருந்தாலும் அதற்குண்டான தீர்வை ஒரு ரூபாய்க்கு மேற்படாவிட்டாலும்	பன்னிரண்டுஅணா.
(ii) வேறே யாதொரு விஷயத்தில் ...	ஒருரூபாய் எட்டணா.
நிவாரணைகள்.	
(a) யாதொரு பத்திரிகைக்கு ஸர்க்கார் உத்தியோகஸ்தன் யாதொரு ஸர்க்கார் ஆபீஸில் ரெகார்டுக்காவது யாதொரு பொறுக் காரி	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
யத்திற்காவது சட்டப்படி வெளிப்படையாய் எழுதவாகிலும் கொடுக்கவாகிலும் வேண்டியிருக்கிற நகல்.	
(b) ஜனனம், ஞானஸ்நானம், நாமகரணம், அர்ப்பணம், விவாகம், விவாக சம்பந்த நிவர்த்தி, மரணம் அல்லது பிரேத அடக்கத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு ரெஜிஸ்டருக்கு நகல் அல்லது ரெஜிஸ்டரிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்ட்.	
* 25. **எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி**—தீர்வைக்குட்பட்டதாயிருந்து சரியான தீர்வை செலுத்தப்பட்டிருக்கிற யாதொரு ஆதரவுக்கு எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி—	
(a) அசலாதரவுக்குண்டான தீர்வை ஒரு ரூபா எட்டு அணாவுக்கு மேற்படாவிட்டால் ...	அசலுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	ஒருரூபாய்எட்டுஅணா
நிவாரணை சாகுபடிகாரனுக்குக் கொடுக்கப்பட்ட யாதொரு குத்தகைச்சீட்டானது தீர்வையினின்றும் நிவாரணை செய்யப்பட்டால் அச்சீட்டுக்கு எதிரிடை.	
* 26. **கஸ்டம்ஸ் பாண்ட்**—	
(a) தொகை 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	அவ்வளவு தொகைக்குஎற்பட்ட (16-ம் நம்பர்) பாட்டம்ரிபாண்டுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	பத்துரூபாய்.
* 27. **டிபென்சர்** (கொறுவை டிபென்சராக இருந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலுஞ் சரி),	அதே தொகைக்குஎற்பட்ட (16-ம் நெ.) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
(a) எண்டார்ஸ் மெண்டாலாயினும் பிரத்தியேகமான ட்ரான்ஸ்பர் ஆதரவாலாயினும் ட்ரான்ஸ்பர் செய்யத்தக்கதாய் விற்கத்தக்க பத்திரமாயிருப்பது ;	டிபென்சரின் பெயர் மதிப்புக்குச் சமமானஐவேஜூத் தொகைக்கு (23-ம் நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டா தீர்வை.)
(b) ஒப்படையாமல் ட்ரான்ஸ்பர் செய்யத்தக்கதாய் விற்கத்தக்க பத்திரமாயிருப்பது.	

இன்ன ஆதாரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.

விவரணம்—டிபென்சர் என்கிற வார்த்தையிலே அதனோடு தொடுக்கப்பட்டிருக்கிற எவ்வித வட்டி கூபன்களும் அடங்கும்; ஆனால், தீர்வையை மதிப்பிடும்போது அந்த கூடங்களின் தொகையைச் சேர்க்கக்கூடாது.

நிவாரணை

சட்டப்படி ஏற்பட்ட யாதொரு கம்பெனியாராவது சட்டப்படி ஒன்றாய்ச் சேர்ந்த வேறே யாதொரு கூட்டத்தாராவது கடன் வாங்கும்போது டிபென்சர் வைத்திருக்கிறவர்களுடைய அனுகூலத்தின்பொருட்டு ட்ரஸ்டிகளிடத்தில் தங்கள் சொத்தை முழுமையுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் ஈடுகட்டி, எந்த பத்திரத்தின் ஆதாரத்தால் டிபென்சர்கள் பிறப்பிக்கப்படுகின்றனவோ அந்த டிபென்சர்களின் பூர்ணமான தொகையின் நிமித்தம் தக்கபடி முத்திரையிடப்பட்டு, ரெஜிஸ்டரான கொறுவைப் பத்திரத்தின் நிபந்தனைகளை அனுசரித்து அந்தக் கம்பெனியாராலாவது கூட்டத்தாராலாவது பிறப்பிக்கப்பட்ட டிபென்சர்; ஆனால் அப்படி பிறப்பிக்கப்பட்ட டிபென்சர்கள் மேலே சொன்ன கொறுவைப்பத்திரத்தின் ஷரத்தை அனுசரித்துப் பிறப்பிக்கப்பட்டதாகக் கண்டிருக்கவேண்டும்.

(15-வது நம்பர்) பாண்டையும், 8 - வது, 55 - வது பிரிவுகளையும் பார்க்க.

யாதொரு ட்ரஸ்ட் உறுதிமொழிப் பத்திரிகை.—(64-வது நம்பர்) ட்ரஸ்ட்டைப் பார்க்க.

ஆட்சிப் பத்திரங்களைக் கட்டிவைப்பது—ஆட்சிப்பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரிகையைப் பார்க்க.

கூட்டுப்பங்குப் பிரிவினை—(46-வது நம்பர்) கூட்டுப்பங்கைப் பார்க்க.

28. **சரக்கை ஒப்பித்துக்கொள்வதற்கான உத்தரவு**—அதாவது அதில் கண்டிருக்கிற யாதொரு நபருக்காவது அவனுடைய சாட்டுதலைக்காரர்களுக்காவது அதை வைத்துக்கொண்டிருக்கிறவனுக்காவது, கப்பல் செப்பனிடும் துறையிலாகிலும் ரேவிலாகிலும் வாடகைக்காவது கூலிக்காவது

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
சரக்கைச் சேர்க்கிற அல்லது வைத்துவைக்கிற யாதொரு பங்கிலாகிலும் யாதொரு செய்கரையின் மேலாகிலும் இருக்கிற சரக்கை ஒப்பித்துக் கொள்ளும்படி ஹக்கு உண்டுபண்ணுகிற ஆதரவு எழுதி, சரக்கிலுள்ள சொத்துவத்தின் விற்பனை அல்லது ட்ரான்ஸ்பரின்மேல் அந்த சரக்கின் சொந்தக்காரனுலாகிலும் அவன் பட்சத்திலாகிலும் கையெழுத்து செய்யப்பட்டிருந்து, அந்த சரக்கு விலையில் இருபது ரூபாய்க்கு மேற்பட்டால்	ஒரு அணா.
ஹக்து சாஸனங்களைக் கட்டிவைப்பது—ஆட்சிபத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப் பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரிகையைப்பார்க்க (6-வது நம்பர்)	
* 29. **விவாகப்பிரிவினை ஆதரவு**—அதாவது - எவனுகிலும் தன் விவாகப்பிரிவினையைஉண்ணுபண்ணுகிற ஆதரவு	இரண்டு ரூபாய்.
சீதன ஆதரவு—(58-வது நம்பர்)பொருத்தம் என்பதைப் பார்க்க.	
இரண்டாம்பிரதி—(25-வது நம்பர்) எதிரிடையைப்பார்க்க.	
* 30 **யாதொரு ஹைகோர்ட் ரோலிலே 1926-ம்வருஷத்திய இந்திய பார் கௌன்ஸில்ஸ் ஆக்டின்படி அட்வோகேட், வக்கீல் அல்லது அட்டர்னியாகத் தாக்கல்**—லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் பத்திரத்தினுலாவது 1884-ம்வருஷத்து நியாயவாதிகளாக்டினுலாவது அந்த கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச்செலுத்துகையிலே.—	
(a) அட்வோகேட் அல்லது வக்கீல் விஷயத்தில்	625 ரூபாய்.
(b) அட்டர்னி விஷயத்தில்	312 ரூபாய் 8 அணா.
நிவாரணை.	
யாதொரு ஹைகோர்ட்டில் முன்னதாகவே தாக்கல் செய்யப்பட்டிருந்து, யாதொரு, ஹைகோர்ட் ரோலில் அட்வோகேட்-வக்கீல் அல்லது அட்டர்னிக்காகத் தாக்கல்.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
* 31. சொத்து பரிவர்த்தனை ஆதாவு ...	அந்த ஆதரவில் கண்டிருக்கிறபடி மிகவும் அதிகபெறுமானமுள்ள சொத்தின் விலைக்குச் சரியான ஐவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்பபடைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
எக்ஸ்ட்ராக்ட்,—(24-வது நம்பர் நகலைப்பார்க்க.)	
* 32. உடன்சேர்க்கையான பொறுப்பு ஆதாவு - அதாவது கொதுவைச் சொத்தின்மேல் உடன்சேர்க்கையான பொறுப்பைச் சுமத்துகிற யாதொரு ஆதரவு—	
(a) ஆதி கொதுவையானது 40-வது நம்பர் (a) பகுதியில் சொல்லியிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது, ஸ்வாதீனத்துடன்.)	அந்த ஆதரவினால் ஏற்பட்ட உடன்சேர்க்கையான பொருப்பின் தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை.
(b) அப்படிப்பட்ட கொதுவை 40-வது நம்பர் (b) பகுதியில் கண்டிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது, ஸ்வாதீனமில்லாமல்,—	
(i) உடன் சேர்க்கையான பொறுப்பு ஆதரவை எழுதுகிறகாலத்தில் சொத்தின் ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டால், அல்லது அப்படிப்பட்ட ஆதரவை அனுசரித்துக் கொடுக்கும்படி உடன்பட்டால்.	(ஆதி கொதுவையும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட யாதொருஉடன்சேர்க்கையான பொருப்புஞ்சேர்ந்து) பொறுப்பின் மொத்தத் தொகைக்குச் சமானமான ஐவேஜுக்காக 23-வது நம்

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
	பர் ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வையியிலே, அப்படிப்பட்ட ஆதிகொதுவைப் பத்திரக் கட்டணத்திற்கும் உடன்சேர்க்கையான பொறுப்புக்கும் முன்னமே கட்டிவிடப்பட்ட தீர்வை கழிவாக.
(ii) அப்படி ஸ்வாதீனம் கொடுக்கப்படாவிட்டால்	அந்த ஆதரவினுல் ஏற்பட்ட உடன்சேர்க்கையான பொறுப்பின் தொகைக்காக (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
* 33. தானசாஸனம். (58-வது நம்பர்) பொருத்த ஆதரவு அல்லது உயில் அல்லது (62-வது நம்பர்) ட்ரான்ஸ்பர் அல்லாதது.	அந்த ஆதரவில் கண்டிருக்கிறபடி சொத்தின் விலைக்குச் சரியானஜவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
கூலிவாங்குவதற்கான உடன்படிக்கை அல்லது ஊழியக்காரன் உடன்படிக்கை—(5-வது நம்பர்) உடன்படிக்கை பத்திரத்தைபார்க்க.	
* 34. இன்டெம்னிடி பாண்ட்— என்னும் நஷ்டவிமோசனப்பத்திரம். தண்டாணித் தொழிற்சாஸனம்-(22-வது நம்பர்) காம்பொசிஷன் சானத்தைப்பார்க்க. இன்ஷூரென்ஸ்.—(47-வது நம்பர்) இன்ஷூரென்ஸ் பாலிஸியைப்பார்க்க.	அதே தொகைக்குஎற்பட்ட (57-வதுநம்பர்)பொருப்புப்பத்திரத்துக்குண்டான தீர்வை.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
* 35. குத்தகை அல்லது வாடகைச்சீட்டு, கீழ்க் குத்தகை அல்லது உள்குத்தகைச்சீட்டும் வாடகைக்குவிட அல்லது கீழ்வாடகைக்குவிட யாதொரு உடன்படிக்கைச்சீட்டும் இதில் அடக்கம் —	
(a) அந்தச் சீட்டிலே குத்தகை அல்லது வாடகைத்தொகை நிர்ணயிக்கப்பட்டு மேல்வாசி செலுத்தப்படாமலாவது ஒப்பிக்கப்படாமலாவது இருக்கிறபக்ஷத்தில்—	
(i) அந்தக் குத்தகை அல்லது வாடகைக் காலம் ஒரு வருஷத்திற்குக் குறைவாயிருப்பதாகப் பொருள் பட்டால் ;	அந்த குத்தகை அல்லதுவாடகையின்பிரகாரம்செலுத்தும்படியான அல்லது ஒப்பிக்கும்படியான தொகைமுழுமைக்கும் (16-வது நம்பர்) பாட்டம்ரிபாண்டுக்குண்டான தீர்வை.
(ii) அந்தக் குத்தகை அல்லது வாடகை ஒரு வருஷத்திற்குக் குறையாமலும் ஐந்து வருஷத்திற்கு அதிகப்படாமலும் இருப்பதாகப் பொருள்பட்டால் ;	குறித்து வைத்துக் கொள்ளப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகையின் தொகை அல்லதுமதிப்புக்காக (16 -வது நம்பர்) பாட்டம்ரிபாண்டுக்குண்டான தீர்வை.
(iii) அந்தக் குத்தகை அல்லது வாடகை ஐந்து வருஷத்திற்கு அதிகப்பட்டு பத்துவருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள் பட்டால் ;	குறித்து வைத்துக் கொள்ளப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத்தொகைக்காவது மதிப்புக்காவது சரியானஜவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(iv) அந்தக் குத்தகை அல்லது வாடகை காலம் பத்துவருஷத்துக்கு அதிகப்பட்டு இருபது வருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால் ;	குறித்து வைத்துக் கொள்ளப் பட்ட சராசரிவருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக் காகிலும் அதன் மதிப்புக் காகிலும் சரியான ஐவேஜூக்காக (23 - வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
(v) அந்தக் குத்தகை அல்லது வாடகைகாலம் இருபது வருஷத்துக்கு அதிகப்பட்டு முப்பது வருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால் ;	குறித்து வைத்துக் கொள்ளப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத்தொகைக்காவது மதிப்புக்காவது மூன்றத்ததனைக்குச்சரியான ஐவேஜூக்காகஏற்பட்ட (23-வதுநம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
(vi) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் முப்பது வருஷத்துக்கு அதிகப்பட்டு நூறு வருஷத்துக்கு அதிகப்படா திருப்பதாகப் பொருள்பட்டால் ;	குறித்து வைத்துக் கொள்ளப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத்தொகைக்காவது மதிப்புக்காவது நான்கத்தனைக்குச் சரியான

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
	ஐவேஜூக்காக ஏற்பட்ட (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
(vii) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் நூறு வருஷத்துக்கு அதிகப்பட்டாலாவது எக்காலத்திற்கும் சாஸ்வதமாய் இருப்பதாகவாவது பொருள்பட்டால் ;	குத்தகை அல்லது வாடகையின் முதல் ஐம்பது வருஷத்திற்காகச் செலுத்தப்படும் அல்லது ஒப்பிக்கப்படும் மொத்த குத்தகை அல்லது வாடகைத்தொகையில் ஆறிலொரு பங்கிற்குச் சரியான ஐவேஜூக்காக ஏற்பட்ட (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
(viii) அந்தக் குத்தகை அல்லது வாடகை நிஷ்கரிஷையாய் இவ்வளவு காலத்திற்கென்று காலம் குறிப்பதாகப் பொருள்படாவிட்டால் ;	குத்தகை அல்லது வாடகை பத்து வருஷ காலத்திற்கு நீடித்திருந்தால், அந்த முதல் பத்து வருஷத்திற்காகச் செலுத்துவதாகவாவது ஒப்பிப்பதாகவாவதிருக்கிற சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காகிலும் அதன் மதிப்புக்காகிலும் மூன்றத்தனைக்குச் சரியான ஐவேஜூக்காக ஏற்

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
	பட்ட (23-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வை.
(b) நஜரானு அல்லது மேல்வாசி அல்லது முன்னதாகக்கொடுத்த பணத்திற்காகக் குத்தகை அல்லது வாடகைப்பணம் குறித்துவைக்கப்படாவிட்டால் ;	அந்தச் சீட்டில் கண்டிருக்கிற நஜரானு அல்லது மேல்வாசி அல்லது கொடுத்த தொகைக்காவது மதிப்புக்காவது சரியான ஜவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக் குண்டான தீர்வை.
(c) குறித்துவைக்கப்பட்ட குத்தகை அல்லது வாடகைத் தொகையுடன்கூட நஜரானுவுக்காவது மேல்வாசிக்காவது முன்னதாகக் கொடுத்த பணத்திற்காவது குத்தகை அல்லது வாடகை விடப்பட்டால்.	நஜரானு அல்லது மேல்வாசி அல்லது முன்பணம் செலுத்தப்பட்டாவது ஒப்பிக்கப்பட்டாவது திராதபட்சத்தில்அப்படிப்பட்ட குத்தகை அல்லது வாடகைச் சீட்டுக்குண்டான தீர்வையுமல்லாமல், அந்தச்சீட்டில் கண்டிருக்கிற நஜரானு அல்லது மேல்வாசி அல்லது முன்பணத் தொகைக்காவது பதிப்புக்காவதுசரியான ஜவேஜுக்காக (23 - வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை: ஆனல், அந்த

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
நிவாரணைகள் ( ) சாகுபடி செய்கிறவன் விஷயத்திலும் (ஆகாரம் அல்லது பானத்தை உற்பத்தி செய்ய மரக்குத்தகை உள்பட) சாகுபடி காரியங்களின்பொருட்டும் யாதொரு நஜராவாவது மேல்வாசியாவது செலுத்தாமலாகிலும், ஒப்பிக்காமலாகிலும், காலவரையறை நிஷ்கரிஷையாய் தெரிவிக்கப்பட்டு, அந்த காலமும் ஒருவருஷத்துக்குமேற்படாமலாவது குறித்தெழுதப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகைத்தொகை நூறுரூபாய்க்கு அதிகப்படாமலாவது இருக்கையில் எழுதிக் கொடுக்கப்பட்ட குத்தகைச்சீட்டு. (b) மீன் பிடிப்பதைக்குறித்து 1905-ம்௵த்து பர்மாதேசத்து மீன்பிடிப்பது ஆக்ட்டின்படியாவது 1889-ம்௵த்து அப்பர் பர்மா லாண்ட் ரெவினியு ரெகுலேஷன்படி யாவதுகொடுக்கப்பட்டகுத்தகைச்சீட்டுகள் **விவரணங்கள்.**—குத்தகைக்கு விடுபவரிடத்திலிருந்து சட்டப்படி வசூலிக்கத்தக்கதான கவர்ன்மெண்ட் கிஸ்தி, ஸெஸ் என்னும் வரிகளில் நிலத்துக்குடையவருடைய பங்கு அல்லது மியுனிஸிபல் வீதங்களிலாவது வரிகளிலாவது சொந்தக்காரருடைய பங்கு ஆகிய இவைகளைப்போன்ற குறித்த கால அளவுக்கு ஒரு முறையாகச் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்துவதாக குத்தகைதாரர் ஒப்புக்கொண்டால், அந்தப்படி குத்தகைதாரர் செலுத்துவதாக ஒப்புக்கொண்ட தொகை, குத்தகை அல்லது வாடகைத் தொகையின் பாகமாக எண்ணப்படும். **லெட்டர் ஆவ் காரன்டி** (ஜாமீன் சீட்டு).—(5-வது நம்பர்) உடன்படிக்கைப் பத்திரத்தைப் **பார்க்க.**	குத்தகை அல்லது வாடகைக்கு விடுவதாகச் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு மதிப்பின்மேல்குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு எவ்வளவுமுத்திரை வேண்டியதோ அந்த முத்திரை போடப்பட்டிருந்து. பின்னிட்டு அந்தஉடன்படிக்கையை அநுசரித்துக்குத்தகைஅல்லது,வாடகைச்சீட்டு எழுதப்பட்டால் அந்தச் சீட்டுக்குத் தீர்வை எந்த விஷயத்திலும் பன்னிரண்டணுவுக்குமேற்படக்கூடாது.
36. பங்குகள் ஏற்படுத்திக்கொடுப்பதற்கான சீட்டு,— யாதொரு கம்பெனியிலாவது உத்தேசமான கம்பெனியிலாவது, யாதொரு கம்பெனியாராலாகிலும் உத்தேசமான கம்பெனியாராலாகிலும் வாங்கப்போகும் எந்த கடன் விஷயத்திலாவது ...	இரண்டு அணு.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(19-வது நம்பர்) ஸெர்ட்டிபிகேட் அல்லது வேறே தஸ்தவேஜையும் பார்க்க	
* 37. லெட்டர் அவ் க்ரேடிட் (நம்பிக்கைச்சீட்டு.) அதாவது-யார்பட்சத்தில் அது எழுதிக்கொடுக்கப்படுகிறதோ அந்த நபருக்கு நம்பி கொடுக்கும்படி ஒருவன் மற்றொருவனுக்கு அதிகாரங் கொடுத்தெழுதுகிற யாதொரு ஆதரவு	இரண்டு அணா
லெட்டர் ஆப் காரண்டி (ஜாமீன் சீட்டு);—(5-வது நம்பர்) உடன்படிக்கைப் பத்திரத்தைப் பார்க்க.	
* 38 வாய்தாச் சீட்டு, அதாவது-கடன் கொடுத்தவர்கள் குறிக்கப்பட்ட ஓர் காலம்வரையில் தங்கள் கடனைக் கேளாமல், கடன் வாங்கிக்கொண்டவனை அவனுடைய யுக்தப்பிரகாரம் வியாபாரத்தை நடத்தவொட்டுகிறதாகக் கடன்கொடுத்தவர்களுக்கும் கடன் வாங்கினவனுக்கும் ஏற்படுகிற யாதொரு உடன்படிக்கை...	பதினைந்து ரூபாய்.
* 39. ஒரு கம்பெனியாருடைய சமுகத்து யாதாஸ்து—	
(a) 1913-ம்வருஷத்து இந்தியன் கம்பெனீஸ்ஆக்ட் 17-வது பிரிவின்படி சமுகத்துக்கு நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருந்தால் ...	முப்பது ரூபாய்.
(b) அப்படிச் சேர்க்கப்பட்டிராவிட்டால் ...	எண்பது ரூபாய்.
நிவாரணை.	
இலாபத்துக்காக ஏற்படுத்தப்படாமலும் 1913-ம் வருஷத்து இந்தியன்-கம்பெனிஸ் ஆக்ட் 26-வது பிரிவின்படி ரெஜிஸ்டர்செய்யப்பட்டும் இருக்கிற யாதொரு சமூகத்தின் யாதாஸ்து.	
* 40 கோதுவைப் பத்திரம்—(6-வது நம்பர்) ஆட்சிப் பத்திரங்களைக் கட்டுவைதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிறஉடன்படிக்கை பத்திரமாவது, (16-வது நம்பர்)பாட்	

இன்ன ஆதந்வுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
டம்ரி பாண்டாவது, (41-வது நம்பர்) யாதொரு சாகுபடி கொதுவைப் பத்திரமாவது, (56-வது நம்பர்) கப்பற்சரக்கு அடமானப்பத்திரமாவது (58-வது நம்பர்) பொறுப்புப் பத்திரமாவது அல்லாதது—	
(a) கொதுவை வைக்கிறவன் அந்தப் பத்திரத்தில் கண்டிருக்கிற சொத்தையாவது அதில் யாதொரு பாகத்தையாவது ஸ்வாதீனஞ் செய்தாலும் ஸ்வாதீனஞ்செய்ய உடன்பட்டாலும் ;	அந்த பத்திரத்தினால் ஏற்பட்ட தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்திரத்குண்டான தீர்வை.
(b) மேற்சொல்லியபடி ஸ்வாதீனஞ் செய்யாவிட்டாலும் செய்ய உடன்படாவிட்டாலும்,	அந்த பத்திரத்தினால் ஏற்பட்ட தொகைக்காக (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
விவரணம்—கொதுவைவைப்போன் கொதுவை வைத்துக்கொண்டவனுக்கு வாடகைகளை வசூல்பண்ணப் பவர் ஆவ் அட்டர்ணியையாவது கொதுவைவைக்கப்பட்ட சொத்தின் அல்லது அதன் பாகத்தின் யாதொரு குத்தகைச் சீட்டையாவது கொடுத்தால் ஷை கொதுவைவைப்போன் இந்தப் பகுதியின் அர்த்தத்தின்படி ஸ்வாதீனம் தருபவனாக எண்ணப்படுகிறான்.	
(c) சார்பான் அல்லது உதவியான அல்லது அதிகப்படியான அல்லது பர்த்திசெய்யப்பட்ட பொறுப்புப்பத்திரமாயினும், அல்லது மேற்சொன்ன விஷயத்துக்காக இன்னும் அதிக உறுதியின் நிமித்தம் பிரதானமான அல்லது பிரதானமான (ப்ரைமெரி) பொறுப்புப்பத்திரமாயினும் தகுந்தபடி முத்திரையிடப்பட்டால் ஏற்படுகிற தொகை 1,000 ரூபாய்க்கதிகப்படாவிட்டால் பிரதி தொகைக்கும்... 1,000 ரூபாய்க்கு மேற்பட்டுப் பிரதி 1,000 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது...	பன்னிரண்டு அணா. ஷை

நிவாரணைகள்.

(1) நிலவிருத்திசம்பந்தமான கடன்களைக்குறித்த 1883-ம்வருஷத்து ஆக்ட்டின்படி அல்லது விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்ப

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
தைக்குறித்த 1884-ம்வூத்து ஆக்டின் படி முன்பணம் வாங்கிக்கொள்ளுகிறவர்களாலாவது அவர்களுடைய ஜாமீன்தாரர்களாலாவது அந்த முன்பணத்தை மறுபடி செலுத்துவதற்கு ஈடாக எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதரவு.	
(2) சொத்தை ஈடாகக்காட்டி பில் ஆவ் எக்ஸ்சேஞ்சோடு கூடவருகிற சீட்டு.	
* 41. **யாதொரு சாருபடிக் கோதுவை ஆதரவு,**—கொதுவை வைத்தகாலத்தில் சாருபடி உண்டாயிருந்தாலும் உண்டாயிராவிட்டாலும் யாதொரு சாருபடியைச் கொதுவை வைத்துக் கொண்டு கொடுக்கப்பட்ட கடனைத் திரும்பக் கொடுப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உடன்படிக்கையாகிற யாதொரு ஆதரவு இதிலடக்கம்—	
(a) ஆதரவுச்சீட்டின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்கு மேற்படாமல் கடன் திரும்பக் கொடுக்கப்படுவதாக இருந்தால் –200-ரூபாய்க்கு மேற்படாமல் கிடைத்த பிரதி தொகைக்கும்	இரண்டு அணா.
200 ரூபாய்க்கு மேற்பட்டுக் கிடைத்த பிரதி 200 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது ...	இரண்டு அணா.
(b) ஆதரவுச்சீட்டின் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்கு மேற்பட்டு பதினெட்டுமாதத்துக்கு அதிகப்படாமல் கடன் திரும்பக் கொடுக்கப்படுவதாக இருந்தால்—	
100 ரூபாய்க்கு மேற்படாமல் கிடைத்த பிரதி தொகைக்கும்	மூன்று அணா.
100 ரூபாய்க்கு மேற்பட்டுக் கிடைத்த பிரதி 100 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	மூன்று அணா.
* 42 நோட்டேரியில் ஆக்ட் — அதாவது நோட்டரி பப்ளிக் என்னும் அதிகாரி தம்முடைய உத்தியோக அலுவல்களை நிறைவேற்றுகையில் அவராலாவது, நோட்டெரி பப்ளிக் என்னும் அதிகாரியைப்போலச் சட்டப்படி பிரவர்த்திக்கிற வேறே எவராலாவது எழுதப்பட்டாகிலும் கையெழுத்துசெய்யப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு ஆதரவு - எண்டார்ஸ்மெண்ட் - நோட்(குறிப்பு) -	

இன்ன ஆதரவுகள்.	சரியகன முத்திரைத்தீர்வை.
அத்தாட்சி - ஸெர்ட்டிபிகேட் அல்லது (50-வது நம்பர்) ப்ரொடெஸ்ட் அல்லாத பதிவு ... (50-வது நம்பர்) ப்ரொடஸ்ட் ஆவ் பில் அல்லது நோட்டையும்பார்க்க	ஒருரூபாய்எட்டுஅணு
* 43. முதலாளிக்காக அடியிற் கண்டதைக் கொண்டது அல்லது விற்றதை ஷை முதலாளிக்குத் தெரிவித்து யாதொரு தரகிரியாலாவது ஏஜெண்டாலாவது அனுப்பப்பட்ட குறிப்பு அல்லது யாதாஸ்து—	
(a) 20 ரூபாய் விலைக்கு மேற்பட்ட சரக்குக்கு,	மூன்று அணு.
(b) 20 ரூபாய் விலைக்கு மேற்பட்ட முதற்பங்கு (ஸ்டாக்)அல்லது விற்கத்தக்கபத்திரத்துக்கு	பதினைந்து ரூபாய்க்கு மேற்படக் கூடாதென்பதற்குட்பட்டு, அந்தமுதற்பங்கு அல்லது பத்திரத்தின் விலை மதிப்பில் பிரதி 10,000ரூபாய் அல்லது அதன் பாகத்துக்குஇரண்டு அணு.
* 44. கப்பல் மாஸ்டரின் ப்ரொடெஸ்ட் நோட் ... (51-வதுநம்பர்) கப்பல்மாஸ்டருடையப்ரொடெஸ்டையும் பார்க்க	ஒரு ரூபாய்.
* 45. பார்கத்து [(2) (15)-வது பிரிவில் விவரிக்கப்பட்ட பிரகாரம்]	சொத்திலிருந்துபிரிக்கப்பட்ட பாகம் அல்லது பாகங்களின் மதிப்புக்குச் சரியான தொகைக்காக (16 - வது நம்பர்) பாட்டம்ரிபாண்டுக்குண்டான தீர்வை.

குறிப்பு.—சொத்தைப் பாகஞ்செய்து கொண்டபிறகு மிகுதியாயிருக்கும் உச்சமான பாகமானது (அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பாகங்கள் சமமான மதிப்புடையதாகவிருந்து மற்ற பாகங்கள் எதைப்பார்க்கிலும் சிறியதாயிராத பட்சத்தில், அவ்வித சமமான பாகங்களில் ஒன்று

னது) மற்ற பாகங்கள் எதிலிருந்து பிரிக்கப்பட்டனவோ அதுவாக எண்ணப்படும் ;

ஆனல் எப்போதும்—

(a) சொத்தைத் தனித்தனியாகப் பாகஞ்செய்து கொள்ளும்படியான யாதொரு உடன்படிக்கை அடங்கிய பாரீகத்தாதரவு எழுதப்பட்டு, மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம் பாகஞ்செய்து கொள்ளப்பட்டால், எந்த ஆதரவைக்கொண்டு பாகஞ்செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆதரவின் விஷயமாய் விதிக்கப்படவேண்டிய தீர்வையிலிருந்து, முந்திச் சொல்லிய ஆதரவின் விஷயமாய்ச் செலுத்தப்பட்டிருக்கும் தீர்வைத்தொகையைக் கழித்துவிடவேண்டும் ; ஆனல், அது பன்னிரண்டு அணுவுக்குக் குறைந்ததாயிருக்கக் கூடாது ;

(b) முப்பது வருஷத்திற்கு மேற்படாத காலம்வரையில் ரெவினியு ஸெட்டில்மென்ட் ஏற்பாட்டின்படி அனுபவிக்கப்படுவதும் பூரணமான வரியைச் செலுத்துவதுமான நிலத்தின் விஷயத்திலே, தீர்வைக்காக அதன் மதிப்பை வருஷாந்தர ரெவினியுவுக்கு ஐந்தத்தனைக்கதிகமாகக் கணக்கிடக் கூடாது ;

(c) பாகம் செய்துகொள்ளும்பொருட்டு யாதொரு ரெவினியு அதிகாரி அல்லது ஸிவில் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட முடிவான உத்தரவுக்காகிலும், பாகம் செய்துகொள்ள வேண்டுமென்றுசொல்லி மத்தியஸ்தர் செய்யும் தீர்மானத்திற்காகிலும் பாரீகத்தாதரவுக்கு வேண்டியிருக்கிற முத்திரைபோட்டிருந்து, அந்த உத்தரவுஅல்லது தீர்மானத்தின்படி பாரிகத்து ஆதரவு ஒன்று அப்புறம் எழுதப்பட்டால், அந்த ஆதரவின்மேல் விதிக்கப்படவேண்டிய தீர்வை பன்னிரண்டு அணுவுக்கு அதிகப்படக் கூடாது.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 46. A - கூட்டுப்பங்கு—ஆதரவு	
(a) கூட்டுப்பங்கின் மூலதனம் 500 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	ஐந்து ரூபாய்.
(b) வேறே யாதொரு விஷயத்தில்... ...	இருபது ரூபாய்.
B - கூட்டுப்பங்குப் பிரிவினை ஆதரவு ...	பத்து ரூபாய்.
அடகு அல்லது அடைமானம்.—(6-வது நம்பர்) ஆட்சிப்பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடைமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரிகையைப்பார்க்க.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை. தனியாக வாங்கினால்	இரட்டையாக வாங்கினால்ஒவ்வொரு பாகத்துக்கும்.
47. இன்ஷூரன்ஸ் பாலிஸி என்னும் நஷ்டவிமோசன சாஸனம்.		
A - ஸீ இன்ஷூரன்ஸ் (சமுத்திரநஷ்டவிமோசனம்) (7 - வது பிரிவைப் பார்க்க)—		
(1) யாதொரு சபருக்காகவோ அல்லது சபர் போய்க்கொண்டிருக்கும்போதோ —		
(i) சாஸனத்தினால் நஷ்டவிமோசனம் செய்யப்பட்ட தொகைக்கு நூற்றுக்கு அரைக்கால் அல்லது இரண்டணா வீதத்திற்கு ப்ரிமியம் (மேல்வாசி) அல்லது ஐவேஜ் மேற்படாத விஷயத்தில்	ஒரு அணா.	அரை அணா.
(ii) வேறே யாதொரு விஷயத்திலே, சாஸனத்தினால் நஷ்டவிமோசனம் செய்யப்பட்ட ஒவ்வொரு 1500 - ரூபாய் முழுமைக்கும், 1500 - ரூபாயில் யாதொரு பாகத்திற்கும்.	ஒரு அணா.	ஷை
(2) குறிக்கப்பட்ட காலத்திற்கு—		
(iii) சாஸனத்தினால் நஷ்ட விமோசனம் செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் முழுமைக்கும் ஆயிரம் ரூபாயில் யாதொரு பாகத்திற்கும்.—		
ஆறுமாதத்திற்கு மேற்படாதயாதொரு காலத்திற்கு நஷ்டவிமோசனம் செய்யப்படுகிற விஷயத்திலே	இரண்டணா.	ஒரு அணா
ஆறுமாதத்திற்கு மேற்பட்டும் பன்னிரண்டு மாதத்திற்குமேற்படாமலும் யாதொரு காலத்திற்கு நஷ்டவிமோசனம் செய்யப்படுகிற விஷயத்தில் ...	நான்கு அணா.	இரண்டு அணா.

இன்ன ஆதாரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
B—டைபர் இன்ஷூரன்ஸ் (தீச்சேதத்திற்கு நஷ்டவிமோசனம்), நஷ்டம் அல்லது சேதம் நேரிடாதபடி சாமான்கள், வர்த்தகச் சரக்குகள், சொந்த சாமான்கள், விலைபொருள்கள் முதலிய சொத்துக்கள் விஷயமாய்ச் செய்யப்பட்டு, இந்தப் பகுதியில் வேறே எந்த இடத்திலும் சேர்க்கப் படாமலிருக்கும் இதர வகைகளைச் சேர்ந்த இன்ஷூரன்ஸும்.	
(1) அசல் பாலிஸி சம்பந்தமாய்—	
(i) நஷ்டவிமோசனம் செய்யப்பட்ட தொகை 5,000 ரூபாய்க்கு மேற்படாத விஷயத்திலே,	எட்டு அணா.
(ii) வேறே யாதொரு விஷயத்திலே ;	ஒரு ரூபாய்
மேலும்,	
(2) அசல் பாலிஸியை எப்போதாகிலும் புதுப்பித்திருப்பது விஷயமாய் ஏதேனும் ப்ரிமியம் (மேல்வாரி) செலுத்தியதற்காகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ரசீது சம்பந்தமாகவும்.	53-ம் நம்பர் (பகுதியின்) படி ஏதேனும் தீர்வைத் தொகை விதித்து வாங்கப்படத் தக்கதாயிருந்தால் அந்தத் தொகையோடுகூட அசல் பாலிஸி விஷயமாய்எவ்வளவு தீர்வை செலுத்த வேண்டுமோ அதில் பாதியும்.
C—ஆபத்தையும் வியாதியையும் பற்றிய இன்ஷூரன்ஸ்.	
(a) ஒரே ஒரு பிரயாணத்திற்குமாத்திரம் செலாவணியாவதாய் இருப்புப்பாதை ஆபத்தின் நஷ்டவிமோசனத்திற்காக	ஒரு அணா
நிவாரணை.	
யாதொரு இருப்புப்பாதையில் மத்திமமான அல்லது மூன்றாவது வகுப்பில் பிரயாணஞ் செய்கிற யாதொரு பிரயாணிக்குக் கொடுக்கப்பட்டால்.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.	
(b) வேறு யாதொரு விஷயத்தில்—யாதொரு தனி ஆபத்து அல்லது வியாதியின் விஷயத்தில் கொடுக்கப்படவேண்டிய உச்சத் தொகை 1,000 ரூபாய்க்கு அதிகப்படமலிருந்தால் அந்தத் தொகைக்கும், 1,000 ரூபாய்க்கு அதிகப்பட்டால், ஒவ்வொரு 1,000 ரூபாய் அல்லது அதன் யாதொரு பாகத்துக்கு	இரண்டு அணு.	
CC-நஷ்டஈடு நிவர்த்தி சாஸனம்—அதாவதுதான் வேலை செய்வதற்காக அமர்த்திக்கொள்ளப்பட்ட வேலையாட்களுக்கு தற்செயலாய் விபத்து நேரிடுகையில் தாமேயாவது இன்ஷூரராவது நஷ்டஈடு செலுத்தும் பொருப்பின் நிமித்தமாவது, 1923-ம் வருஷத்திய தொழிலாளிகளின் பிரதிபலன் சம்பந்தமான ஆக்டின்படி, வேலையாட்களுக்கு பிரதிபலன் செலுத்தும்பொருப்பின் நிமித்தமாவது ப்ரீமியமாக செலுத்தப்பட்ட பிரதி ரூ 100-க்காவது அதன் பாகத்திற்காவது.	ஒரு அணு.	
D-லைப் (பிராணன்) இன்ஷூரன்ஸ் அல்லது பிரத்தியேகமாய் ஏற்பாடு செய்யப்பட்டிராத வேறு இன்ஷூரன்ஸ்—இந்தப்பகுதியில் E-குறிப்பிட்ட பிரிவில் சொல்லியிருக்கிற புனர் நஷ்ட விமோசனம் தவிர—	தனியாக வாங்கினல்	இரட்டையாக வாங்கினல் ஒவ்வொரு பாகத்துக்கும்.
(i) 250-ரூபாய்க்கு மேற்படாமல் இன்ஷூர்செய்யப்பட்ட பிரதி துகைக்கும்	2-அணு.	ஒருஅணு.
(ii) 250-ரூபாய்க்கு மேற்பட்டு 500-ரூபாய்க்கு மேற்படாமல் இன்ஷூர் செய்யப்பட்ட பிரதி துகைக்கும்—	4 அணு.	இரண்டுஅணு
(iii) 500-ரூபாய்க்கு மேற்பட்டு 1000-ரூபாய்க்கு அதிகப்படாதிருந்தால் அந்தத் துகைக்கும், 1000-ரூபாய்க்கு அதிகப்பட்டால், ஒவ்வொரு 1000-ரூபாய் அல்லது அதன் யாதொரு பாகத்திற்கும்	6 அணு.	மூன்றுஅணு.

நிவாரணே.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அதிகாரத்தை அனுசரித்து ஏற்படுத்தப் ஆனால், தற்செலாய் நேரிடும் பிராணஅபாய இன்ஷூரென்

இன்ன ஆதரவுகள்-	சரியான முத்திரைத்தீர்வை.
பட்ட போஸ்ட்டல் லைப் இன்ஷுரன்ஸ் விதிகளின்படி இந்திய போஸ்டல்ஆபீஸ் டைரெக்ட்டர் ஜெனரலால் கொடுக்கப்பட்ட லைப் இன்ஷுரன்ஸ் பாலிஸிகள்.	ஸ் பாலிஸியின் விஷயத்திலே, செலுத்தத்தக்க வருஷாந்தரப்ரிமியம், ஒவ்வொருஆயிரம் ரூபாய்க்கும் ரூ-2-8-0 க்குமேல்படாதபோது, அப்படிப்பட்ட ஆதரவுகளின் தீர்வை ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் அதன் பாகத்திற்கும் ஒரு அணு வீதம் அதன்படி கொடுக்கப்பட வேண்டிய உச்சத்தொகைக்கு விதிக்கப்படத்தக்கதாகும்.
E-யாதோரு இன்ஷுரன்ஸ் கம்பெனியாரால் கொடுக்கப்பட்ட புனர் நஷ்டவிமோசனம் (இன்ஷுரன்ஸ்)—பிரதம நஷ்டவிமோசன ஏற்பாட்டினுல் நஷ்டவிமோசனஞ்செய்வதாகச் சொல்லப்பட்ட தொகையைச் சேர்ந்த யாதொரு பாகத்தை அந்த நஷ்டவிமோசன ஏற்பாட்டின்படி செலுத்துவதாய்ப் பிணைப்படவாவது உத்தரவாதஞ் செய்யவாவது வேருெரு கம்பெனியாரோடு, இந்தப் பகுதியைச் சேர்ந்த **A**-அடையாளமிட்ட பாகத்தில் அல்லது **B**-அடையாளமிட்ட பாகத்தில் குறிப்பிடப்பட்ட தன்மையுள்ள சாஸனத்தைக் கொடுத்திருக்கிற இன்ஷுரன்ஸ் கம்பெனியார் புனர்நஷ்டவிமோசன ஏற்பாடு செய்துகொள்ளுகிற விஷயத்திலே **பொது நிவாரணை.** இன்ஷுரன்ஸ் பாலிஸி கொடுப்பதாக எழுதிக்கொடுக்கிற கரார்நாமா அல்லது உடன்படிக்கை: ஆனுல், இந்த ஆக்ட்டினுல் அப்படிப்பட்ட பாலிஸிக்கு விதிக்கப்பட்ட முத்திரையை அந்த கரார்நாமா அல்லது உடன்படிக்கைக்குப் போட்டிருந்தாலொழிய, அதைக்கொண்டுயாதொருதாவாவும் செய்யப்படாது ; அதில் கண்டிருக்கிற பாலிஸி	முதலிலே செய்து இன்ஷுரன்ஸ் விஷயமாய்ச் செலுத்தப்படவேண்டிய தீர்வையில்கால்பங்கு ; ஆனுல் அது ஒரு அணுவுக்குக்குறையக் கூடாது ; ஒரு ரூபாய்க்கு அதிகப்படக் கூடாது.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை
யை ஒப்பிக்கும்படி நிர்ப்பந்திக்க உபயோகப்படுமே யல்லாமல் வேறே யாதொரு காரியத்திற்கும் உபயோகப்படமாட்டாது.	
* 48. பவர் ஆவ் ஆட்டர்ணி (வக்காலத்து நாமா) [2 (21) பிரிவில் விவரிக்கப்பட்ட பிரகாரம்] பிரதி காரியஸ்தனுக்குக் கொடுக்கப்பட்ட அதிகார பத்திரமல்லாதது,—	
(a) ஒரே ஒரு காரியத்தைப்பற்றி ஒன்று அல்லது பல தஸ்தாவேஜுகளை ரெஜிஸ்ட்ரேஷன் செய்வதற்காக மாத்திரம் எழுதப்பட்டால் அல்லது அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளில் ஒன்றையாவது பலவற்றையாவது எழுதினதாக ஒப்புக்கொள்வதாகஎழுதப்பட்டால்	பன்னிரண்டு அணா.
(b) 1882-ம் ஞூ இராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டுகள் ஆக்ட்டின்படி வியாஜ்ஜியங்களிலாவது நடவடிக்கைகளிலாவது தேவையாக யிருந்தால்	ஷை.
(c) (a) குறிப்பு உட்பிரிவில் கண்டிருக்கிற விஷயம் அல்லாத வேறு ஒரு காரியத்தில் விவகரிக்க ஒருவர் அல்லது பலருக்கு அதிகாரங் கொடுத்தால்	1 ரூபாய் 8 அணா.
(d) ஒன்றல்லாமல் பல காரியங்களிலாவது பொதுவாகவாவது ஐந்துபேருக்கு அதிகப்படாதவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் விவகரிக்க அதிகாரங்கொடுத்தால் ...	7 ரூபாய் 8 அணா.
(e) ஒன்றல்லாமல் பல காரியங்களிலாவது பொதுவாகவாவது ஐந்துபேருக்கு மேற்பட்டுப் பத்துபேருக்கு அதிகப்படாதவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் விவகரிக்க அதிகாரங் கொடுத்தால்	பதினைந்து ரூபாய்.
(f) ஏதேனும் ஒன்றுக்காகவும் யாதொரு அசையாப் பொருளை விற்பனைசெய்ய அட்டர்ணிக்கு அதிகாரங் கொடுப்பதற்காகவும் கொடுத்தால்	இந்த த்தொகைக்கு (23 - வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
(உ) வேறே யாதொரு விஷயத்தில் ...	அதிகாரம் கொடுக்கப்பெறுகிற பிரதிநபருக்கும் ஒருரூபாய் எட்டு அணா குறிப்பு:—"ரெஜிஸ்ட்ரேஷன்" என்னும்வார்த்தையிலே 1908-ம் வருஷத்திய இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டின்படி செய்யப்படும் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு இடைச்சம்பவமாயிருக்கிற ஒவ்வொரு காரியமும் அடங்கும்.
விவரணம்:—இந்தப் பகுதியின்பொருட்டு ஒருவரல்லாமல் பலர் ஒரே வர்த்தகக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அவர்களை ஒருவராகவே எண்ணவேண்டும்.	
49. ப்ராமிஸேரி நோட் [2 (22) பிரிவில் விளக்கப்பட்ட பிரகாரம்]—	
(அ) கேட்டவுடனே செலுத்தத்தக்கதாயிருந்தால்—	
(i) தொகை அல்லது மதிப்பு 250 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் :	ஒரு அணா.
(ii) தொகை அல்லது மதிப்பு 250 ரூபாய்க்கு மேற்பட்டு 1,000 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ;	இரண்டு அணா.
(iii) வேறே யாதொரு விஷயத்தில்	நான்கு அணா.

இன்ன ஆதாரங்களுக்கு.	சரியான முத்திரைத்தீர்வை.
(h) கேட்டவுடனே அல்லாமல் மற்றபடி செலுத்தத்தக்கதா யிருந்தால்—	கேட்டவுடனே அல்லாமல் மற்றப்படி செலுத்தத்தக்க அதே துகைக்கு (13 வது நம்பர்) பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்க்கு உள்ள தீர்வை.
* 50. **ப்ரோடெஸ்ட் ஆவ் பில் அல்லது நோட்.** அதாவது - பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரிநோட்டை அலட்சியஞ் செய்ததற்கு அத்தாட்சியாகக் கையெழுத்து பண்ணி, நோட்டெரி பப்ளிக் என்னும் அதிகாரியாவது சட்டப்படி அப்படிப்பட்டவராகப் பிரவர்த்திக்கிற வேறொருவராவது எழுதிக்கொடுக்கிற யாதொரு உறுதிப்பத்திரிகை	இரண்டு ரூபாய்.
* 51. **கப்பல் மாஸ்டரின் ப்ரோடெஸ்ட்,** அதாவது-நஷ்டங்களைச் சரிப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்தோடாவது சரக்கேற்றினவர்கள் நஷ்டத்துக்காகக் கட்டிக்கொடுக்கவேண்டிய தொகையைக் கணக்கேற்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்தோடாவது கப்பல் சபரின் விவரங்களைக் குறித்து அந்தக் கப்பல் மாஸ்டர் எழுதுகிறயாதொரு உறுதிப்பத்திரிகையும், கப்பலில் சரக்கேற்றுமைக்காகவாவது இறக்காமைக்காகவாவது கப்பலைவாடகைக்கு அமர்த்திக்கொண்டவர்கள் பெயரிலாகிலும் சரக்கை யாரிடத்தில் ஒப்பிக்கவேண்டியதோ அவர்கள் பெயரிலாகிலும் அந்தகப்பல் மாஸ்டர் எழுதுகிற பிரதி உறுதிப்பத்திரிகையும்; அப்படிப்பட்டது நோட்டெரி பப்ளிக் என்னும் அதிகாரியினாலாவது அப்படிப்பட்டவராகச் சட்டப்படி பிரவர்த்திக்கிற வேறே எவராலாவது அத்தாட்சி கையெழுத்து செய்யப்பட்டாகிலும் ஸெர்டிபை செய்யப்பட்டாகிலுமிருந்தால். (44-வது நம்பர்) கப்பல்மாஸ்டரின் ப்ரொடெஸ்ட் நோட்டையும்பார்க்க.	இரண்டு ரூபாய்.
52. **ப்ராக்ஸி** (பிரதிகாரியஸ்தனுக்குக் கொடுக்கிற அதிகாரப் பத்திரம்) - டிஸ்ட்ரிக்ட் போர்டுக்காவது லோகல் போர்டுக்காவது மியுனிஸிபல்	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
கமிஷனர்களின் சங்கத்திற்காவது அத்தியக்ஷர்களை தெரிந்தெடுக்கும் யாதொரு சபையிலாகிலும், (a) முதற்பணமாவது ஆஸ்தியாவது பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ட்ரான்ஸ்பர் பண்ணத்தக்கதாயிருக்கிற யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியில் அல்லது ஒன்றாய்ச் சேர்ந்த வேறு கூட்டத்தின் அத்தியக்ஷர்கள் சபையிலாகிலும்; (b) யாதொரு பிரதேச அதிகாரஸ்தர் சபையிலாகிலும் (c) யாதொரு கல்விச்சாலை முதலிய சாலையின் சொந்தக்காரர்கள், அத்தியக்ஷர்கள், அல்லது அந்தச் சாலையின் நிதிக்குத் திரவிய சகாயிகள், இவர்களுடைய சபையிலாகிலும் அபிப்பராயங் கூறும்படி எவனுக்காவது அதிகாரங்கொடுப்பது	இரண்டு அணா.
53. ரசீது [2 (33)-வது பிரிவில் விளக்கப்பட்ட பிரகாரம்] இருபதுரூபாய்க்கு மேற்பட்ட யாதொரு தொகைக்காவது இருபதுரூபாய்க்கு மேற்பட்ட தொகை அல்லது மதிப்புள்ள வேறே சொத்துக்காவது ரசீது	ஒரு அணா.
இன்ஷூரன்ஸ் பாலிஸி என்னும் நஷ்ட விமோசன சாஸனத்தையும் [நெ. 47-B (2)] பார்க்க	
நிவாரணைகள்.	
ரசீது—	
(a) கிரமமாய்முத்திரை போடப்பட்டாகிலும்(கவர்ன்மெண்டு சார்பிலே எழுதப்பட்ட ஆதரவுகள்) அல்லது கேட்டவுடனேசெலுத்ததக்கதான யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ் அல்லது ப்ராமிஸொரிநோட்டாவது,3-வது பிரிவின்விலக்கான நிபந்தனையின்படி நிவாரணைசெய்யப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு ஆதரவிலே கண்டிருக்கிற ஐவேஜ் தொகையைப் பற்றிக்கொண்டதாக வாகிலும், அதில் கண்டிருக்கிற யாதொரு அசல்பணம் - வட்டி - வருஷவாரித் தொகை அல்லது வேறே காலக் கிரமமாய் செல்லுத்தொகையைப்பற்றிக் கொண்	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
டதாகவாகிலும் ஒப்புக்கொண்டு அந்த ஆதரவின் மேலாவது அதிலாவது எழுதப்பட்டது ;	
(b) ஜவேஜில்லாமல் பணஞ் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டது ;	
(c) ஸர்க்கார் கிஸ்திக்காகத் தீர்வைப் போட்டிருக்கிற நிலத்தின்பொருட்டாவது (சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலும் பம்பாய் ப்ரெஸிடென்ஸியிலும்) இனும் நிலங்களின் பொருட்டாவது குத்தகைத் தொகையைச் சாகுபடிக்காரன் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டது ;	
(d) மஹாராஜா அவர்களுடைய ராணுவத்திலாவது ஆகாயப்படையிலாவது இருக்கிறநன்கம்மிஷன்ட் ஆபிஸர்களாகிலும் படைச் சேவகர்களாகிலும் ஆகாய விமானிகளாகிலும் அந்த ஹோதாவில் சேவித்துக்கொண்டிருக்கையில் அவர்களாலாவது குதிரைச் சவாரியுடைய போலீஸ் கான்ஸ்டேபில்களாலாவது சம்பளத்திற்காகவாகிலும் படிகளுக்காகவாகிலும் கொடுக்கப்பட்டது ;	
(e) ரசீதில்கண்ட தொகையானது யாருடைய சம்பளம் அல்லது வர்த்தனேயிலிருந்து சாட்டப்பட்டதோ அந்த நபர் மேற்சொல்லப்பட்ட எந்தப் படையிலாகிலும், படைச் சேகவனுகவாகிலும் ஆகாய விமானியாகவாகிலும் சேவித்துக்கொண்டிருக்கும் விஷயங்களில்குடும்பஸெர்டிபிகேட்டுகளே யுடையவர்கள் கொடுத்தது ;	
(f) அப்படிப்பட்ட நன்கம்மிஷண்ட் ஆபிஸர்களாகவாகிலும் படைச்சேவகர்களாகவாகிலும் ஆகாய விமானிகளாகவாகிலும் சேவித்துக்கொண்டிருந்ததைப்பற்றிப் பென்ஷனுவது வர்த்தனேயாவது பெற்றுக்கொண்டு, வேறே யாதொரு ஹோதாவில் ஸர்க்காரில் சேவியாதிருக்கிறவர்களால்அந்த பென்ஷனுக்காகவாவது வர்த்தனேக்காகவாவது கொடுக்கப்பட்டது ;	
(g) யாதொரு தலைவன் அல்லது லம்பர்தாரியினுல் வசூல்செய்யப்பட்ட நிலத்தீர்வை அல்லது வரிக்காக அவனுல் கொடுக்கப்பட்டது;	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
(h) உத்தரவாதஞ் செய்யும்படியாக யாதொரு சாவுகாரிடத்திலே கட்டப்பட்ட பணத்திற்காகவாவது பணத்தைச் சேர்ந்த பத்திரங்களுக்காகவாவது கொடுக்கப்பட்டது. ஆனால், யாருக்கு அது உத்தரவாதம் செய்யும்படியாயிருக்கிறதோ அவன் தவிர வேறே யாதொரு நபரிடத்திலிருந்தாவது அந்த நபராலாவது பெற்றுக்கொண்டதாக அதில் கண்டிருக்கக்கூடாது. அல்லாமலும் யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியிலாவது அல்லது சட்டப்படி ஏற்பட்ட வேறே கூட்டத்திலாவது அல்லதுஇப்படிப்பட்ட உத்தேசமான அல்லது எத்தனிக்கப்பட்ட கம்பெனியிலாவது கூட்டத்திலாவது அப்படிப்பட்ட கம்பெனி அல்லது கூட்டத்தாருடையதாகவாவதிருக்கிற பங்கு கொடுக்கப்படுவதற்கான சீட்டுக்காகவாகிலும சீட்டின் மேலாகிலும் யாதொரு ஸ்க்ரிப் அல்லது பங்குக்காகப் பணஞ்செலுத்தும்படி கேட்கப்படுவதைக் குறித்தாகிலும் அல்லது யாதொரு டிபென்ஷர் விற்பனை செய்யத்தக்க பத்திரமாக இருப்பதைக் குறித்தாகிலும் செலுத்தப்பட்ட அல்லது பற்றுச் சீட்டுக்கு இந்த நிவாரணை சம்பந்தப்படமாட்டாது.	
* 54. கோதுவைச் சொத்தை மறுபடி ஒப்பித்து விடுவதற்கான ஆதரவு— (a) எவ்வளவுக்குச் சொத்து கொதுவை வைக்கப்பட்டதோ அந்த ஐவேஜ் 1,000-ரூபாய்க்கு மேற்படாவிட்டால்.	இந்த ஆதரவில் கண்டிருக்கிற ஐவேஜ் தொகைக்காக (23 வது நம்பர்) ஒப்படைப்பத்திரத் துக்குண்டான தீர்வை
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	பதினைந்து ரூபாய்.
* 55. விடுதலைப் பத்திரம். அதாவது ஒருவன் வேறொருவன்மேலாவது குறித்த சொத்தின் மேலாவது தாவாவை விட்டுவிடுகிறதாக எழுதிக்கொடுக்கிற	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
யாதொரு ஆதரவு (23-A குறிப்பிட்ட பிரிவினுல் நிபந்தனை கண்டிருக்கும் விடுதலை சீட்டாய் இராதது.)	
(a) தாவாத்தொகை அல்லது மதிப்பு 1,000-ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ;	விடுதலைப்பத்திரத்தில் கண்டிருக்கிற தொகை அல்லது மதிப்புக்காக (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	7 ரூபாய் 8 அணு.
* 56. சப்பற்ச ரக்குஅடைமானபத்திரம்—அதாவது கப்பலிலேற்றப்பட்டாவது ஏற்றப்படுவதாகவாவதிருக்கிற சரக்குகளின்மேல் கடன்வாங்கிக்கொண்டு குறிக்கப்பட்ட ரேவில் சரக்குப் போய்ச்சேருமாகில் மறுபடி பணஞ் செலுத்துவதாகக் கண்டெழுதிக் கொடுக்கப்பட்ட யாதொரு ஆதரவு	கிடைத்த கடன் தொகைக்கு (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
ட்ரஸ்ட் அல்லது பொருத்த ரத்து. (58-வது நம்பர்) பொருத்த ஆதரவையும் (64-வது நம்பர்) ட்ரஸ்ட்டையும் பார்க்க.	
* 57. பொறுப்புப் பத்திரம் அல்லது கோதுவைப் பத்திரம்—யாதொரு அலுவலைக் கிரமமாய் நிறைவேற்றவாவது, அந்த ஆதரவு மூலமாய்ப் பெற்றுக்கொண்ட பணத்துக்கோ அல்லது இதர சொத்துக்கோ வகை சொல்லவாவது பொறுப்பாக எழுதிக்கொடுக்கப்பட்டது அல்லது யாதொரு கான்ட்ராக்டைச் சரிவர நடத்தும்பொருட்டு உறுதிப்பத்திரமாக எழுதிக்கொடுக்கப்பட்டது—	
(a) ஏற்பட்ட தொகை, 1,000-ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	ஏற்பட்ட தொகைக்கு (16-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில்	7 ரூபாய் 8 அணு.
நிவாரணைகள்.	
பாண்ட் அல்லது வேறே ஆதரவுகள்—	
(a) 1876-ம் ஷுத்திய வங்காளத்து இரிகேஷன்	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத் தீர்வை.
ஆக்ட் 99-வது பிரிவின்படி தங்களுடைய அலு வல்களைச் சரியாகச் செய்வதற்காக, அதை அனு சரித்துச் செய்யப்பட்ட விதிகளின்படி நியமிக்கப் பட்ட தலைவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டால்;	
(b) தரும டிஸ்பென்ஸெரி அல்லது ஆஸ்பத்திரிக் காவது விசேஷ ஜன உபயோகத்திற்கான வேறே யாதொரு விஷயத்திற்காவது ஜனங்கள் செய்தி ருக்கும் கையொப்பத்தினால் உண்டாகும் பிரதேச வரும்படி மாசமொன்றுக்குக் குறித்த தொகைக் குக் குறையாதென்று உத்தரவாதஞ் செய்யும் பொருட்டு யாதொரு நபரினால் எழுதிக்கொடுக் கப்பட்டால் ;	
(c) 1879-ம் வருஷத்து பம்பாய் இரிகேஷன் ஆக்ட் 70-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள பம்பாய் கவர்னரவர்களால் செய்யப்பட்ட விதி களில் 3-A குறிப்பிட்ட விதியை அனுசரித்து எழுதிக் கொடுக்கப்பட்டால் ;	
(d) நில விருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த 1883-ம் வருஷத்து ஆக்டின்படி அல்லது விவசாயக் காரர்களுக்கு கடன் கொடுப்பதைக் குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி முன்பணம்வாங்கிக் கொள்ளுகிறவர்களாலாவது அவர்களுடைய ஜா மீன்தாரர்களாலாவது அந்த முன்பணத்தை மறு படி செலுத்துவதற்கு ஈடாக எழுதிக்கொடுக்கப் பட்டால் ;	
(e) கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாலாவது அவர்களுடைய ஜாமீன்தாரர்களாலாவது யாதொ ரு உத்தியோகத்தைக் கிரமமாய் நிறைவேற்றுவ தைப் பற்றியாகிலும் அந்த உத்தியோக முறை மையில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட பணத்துக் கோ அல்லது வேறு சொத்துக்கோ கிரமமாய் உத் தரிப்பதைப் பற்றியாகிலும் எழுதிக்கொடுக்கப் பட்டால் ;	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 58. பொருத்தம்— A—பொருத்த ஆ த ர வு—(சீதனப்பத்திரம் இதில் அடக்கம்). நிவாரணைகள். (a) விவாககாலத்தில் மகம்மதியருக்குள் எழுதிக் கொடுக்கப்பட்ட சீதனப்பத்திரம் (b) ஹ்ளடாஸ்ஸா, அதாவது, மதிப்பு இவ்வள வென்றுகுறிக்காமலும் 10 ரூபாய் தீர்வை கட்டியும்யாதொரு மதசம்பந்தமான காரியத் துக்காக பர்மாவிலேயாதொரு புத்த மதஸ்த னல்எழுதிக்கொடுக்கப்பட்ட ஸ்தாவரப்பொ ருளின் யாதொரு பொருத்தம்.	பொருத்த ஆதரவில் கண்டிருக்கிற படி பொருத்தப் பட்ட தொகை அல்லது சொத்தின் கிரயத் துக்குச் சரியான தொகைக்காக(16-வ து பாட்டம்ரி) பா ண்டுக்குண்டான தீர்வை. ஆனல் பொருத்துவ தற்கான யாதொரு உடன்படிக்கைக்கு ப்பொருத்தஆதரவி ன்மேல் எவ்வளவு முத்திரை போட வேண்டியதோ அந் த முத்திரைபோட் டிருந்துபின்னிட்டு அந்த உடன்படிக் கையை அனுசரித் துப் பொருத்தஆத ரவுஒன்று எழுதப் பட்டால், அந்த ஆ தரவுக்குத் தீர்வை பன்னிரண்டு அணு வுக்கு மேற்படக் கூடாது.
B—பொருத்த ஆதரவு ரத்து ... ... (66-வது நம்பர்) ட்ரஸ்ட்டையும் பார்க்க.	பொருத்தம்ரத்துசெய் யப்படும் ஆதரவில் சம்பந்தப்பட்டதொ கை அல்லதுசொத் தின் மதிப்புக்குச் சரியான தொகைக் காக(16-வது, பாட் டம்ரி) பாண்டுக்கு ண்டான தீர்வை; ஆனல் அது 15 ரூ பாய்க்கு மேற்படக் கூடாது.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 59. பங்கு வாரண்டுகள்— கொண்டு வருகிறவனுக்கு 1913-ம்வருஷத்து இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட்டின்படி கொடுக்கப்படுவது.	வாரண்டில் கண்டிருக்கிற பங்குகளின் நமோது தொகைக்குச்சரியானஐவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வையில் ஒன்றரைப்பங்கு.
நிவாரணைகள்.	
ஸ்டாம்பு ரெவினியு கலெக்டரிடத்தில் அந்தத் தீர்வைக்காக ஒழுங்கேற்பாடாய், தொகை செலுத்தப்படுவதன்மேல் மாத்திரம் செலாவணியாக வேண்டுமென்று 1913-ம்வருஷத்து இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட் 43-வது பிரிவின்படி ஒருகம்பெனியாரால் பங்கு வாரன்ட் பிறப்பிக்குபோது,—	
எவ்வளவென்றால்—	
(a) கம்பெனியின் கையொப்பஞ் செய்யப்பட்ட மொத்த மூலதனத்தில் நூற்றுக்கு ஒன்றறை வீதம்; அல்லது,	
(b) மேலேசொன்ன தீர்வையையாவது காம்பொஸிஷன் தொகையையாவது பூர்ணமாய்க் கட்டிவிட்ட யாதொரு கம்பெனி அதற்கப்புறம் கையொப்பஞ்செய்யப்பட்ட அதன் மூதனத்துக்கு யாதொரு உடன்சேர்க்கையைப் பிறப்பித்தால் அப்படி பிறப்பிக்கப்பட்ட உடன் சேர்க்கையானமூலதனத்தில் நூற்றுக்கு ஒன்றரைவீதம்.	
ஸ்க்ரிப்.—(19-வது நம்பர்) ஸெர்ட்டிபிகேட்டை பார்க்க.	
60. **ஷிப்பிங் ஆர்டர்.**—யாதொரு மரக்கலத்தில்சரக்குகளை ஏற்றிக்கொண்டு போவதற்காகவாவது அது சம்பந்தமாகவாவது எழுதப்பட்ட ஏற்றுமதி உத்தரவு	ஒரு அணா.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 61. குத்தகை அல்லது வாடகை விடுதலைசீட்டு —	
(a) குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்குண்டான தீர்வை எழு ரூபாய் எட்டு அணுவுக்கு மேற்படாவிட்டால்	அந்த குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்குண்டான தீர்வை.
(b) வேறே யாதொரு விஷயத்தில்	எழு ரூபாய்எட்டணு.
நிவாரணை.	
குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்குத் தீர்வை நிவாரணையாயிருந்தால் அந்த குத்தகை அல்லது வாடகையைச்சேர்ந்த விடுதலைச்சீட்டு.	
* 62. ட்ரான்ஸ்பர்.—(ஐவேஜ் சகிதமாகவாவது ஐவேஜ் இல்லாமலாவது)	
(a) யாதொரு சட்டப்படி எற்பட்ட கம்பெனியில் அல்லது ஒன்ருய்ச்சேர்ந்த வேறே கூட்டத்தில் உள்ள பங்குகள் ;	பங்கின் மதிப்புக்குச் சரியான ஐவேஜுக்காக (23 - வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வையில் அரைபங்கு.
(b) 8-வது பிரிவிஞல் எற்படுத்தப்பட்ட டிபென்சுர்கள் தவிர, தீர்வைக்குட்பட்டிருந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலுஞ்சரி விற்பனை செய்யத்தக்க பத்திரங்களாகிற டிபென்சுர்கள் ;	டிபென்சுரின் முகப்பில்காட்டியிருக்கும் தொகைக்குச்சரியான ஐவேஜுக்காக (23-வது நம்பர்)ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வையில் அரை பங்கு.
(c) பாண்டிலாவது கொதுவைப் பத்திரத்திலாவது இன்ஷூரன்ஸ் பாலிஸியிலாவது எற்படுத்தியிருக்கிற யாதொரு சுதந்தரம்-	
(i) அப்படிப்பட்ட பாண்ட், கொதுவைப்பத்திரம் அல்லது பாலிஸியின் தீர்வை எழுரூபாய் எட்டு அணுவுக்கு மேற்படாவிட்டால் ;	அப்படிப்பட்ட பாண்ட்கொதுவைப் பத்திரம் அல்லதுஇன்ஷூரன்ஸ் பாலிஸிக்குண்டான தீர்வை.

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
(ii) வேறே யாதொரு விஷயத்தில் ...	7 ரூபாய் 8 அணா.
(d) 1913-ம்வருஷத்து அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல் ஆக்ட் 25-வது பிரிவின்படி யாதொரு சொத்து ;	15 ரூபாய்.
(e) ஐவேஜ் இல்லாமல் ஒரு ட்ரஸ்ட்டியினிடத்திலிருந்து வேறொரு ட்ரஸ்ட்டியினிடத்திற்காவது யாதொரு ட்ரஸ்ட்டியினிடத்திலிருந்து யாதொரு பெனிபிஷரியினிடத்திற்காவது செல்லுகிற யாதொரு ட்ரஸ்ட் சொத்து.	7-ரூபாய் 8அணாஅல்லது இந்த பகுதியிலே (a) குறிப்பிட்ட பாகம்முதல் (e) குறிப்பிட்ட பாகம் வரையிலுள்ள பாகங்களின்படி அதற்குக் குறைவாக என்ன தொகை விதிக்கப்படலாமோ அந்தத் தொகை.
நிவாரணைகள். எண்டார்ஸ்மெண்ட் மூலமாய் ட்ரான்ஸ்பர் செய்வது— (a) பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ், செக் அல்லது ப்ராமிஸொரிநோட்டை ; (b) பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா, டெலிவரி ஆர்டர், சரக்கு வாரன்ட் அல்லது சரக்குக்குள்ள ஹக்கின் இதரமான வர்த்தகப் பத்திரத்தை ; (c) இன்ஷூரன்ஸ் பாலிஸியை ; (d) இந்தியா கவர்ன்மெண்ட் பத்திரங்களை. 8-வது பிரிவையும் பார்க்க.	
* 63. **(குத்தகை அல்லது வாடகைச் சீட்டை ட்ரான்ஸ்பர் செய்தல்** —(சாட்டுதல் பத்திரத்தினாலன்றிக் கீழ்க்குத்தகையினாலல்ல)	ட்ரான்ஸ்பர் ஐவேஜ் தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக (23-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
நிவாரணை. தீர்வையிலிருந்து நிவாரணை செய்யப்பட்டிருக்கிற யாதொரு குத்தகை அல்லது வாடகைப்பத்திரத்தை ட்ரான்ஸ்பர் செய்தல்.	

இன்ன ஆதரவுகள்.	சரியான முத்திரைத்தீர்வை.
* 64. ட்ரஸ்ட்.— A—ட்ரஸ்ட் உறுதிமொழிப் பத்திரிகை.—யாதொரு சொத்தையாவது அதைப்பற்றியாவது உயில் அல்லாமல் வேறேயாதொரு எழுத்து மூலமாய்ச்செய்யப்பட்டால்.	ஆதரவில் கண்டிருக்கிறபடி அதில் சம்பந்தப்பட்ட சொத்தின் அளவுக்கு அல்லது மதிப்புக்குச் சரியான தொகைக்காக (16-வது, பாட்டம்ரி) பாண்டுக்குண்டான தீர்வை; ஆனல், அது22 ரூபாய் 8 அணுவுக்கு மேற்படக்கூடாது.
B. ட்ரஸ்ட் ரத்து.—யாதொரு சொத்தையாவது அதைப்பற்றியாவது நம்பி ஒப்பிப்பதைக் குறித்து உயிலல்லாத வேறே யாதொரு ஆதரவினல் ரத்து செய்யப்பட்டால். 58-வது நம்பர் பொருத்ததையும் பார்க்க. மதிப்பு நிர்ணயம்—(8-வது நம்பர்) விலை மதிப்பைப் பார்க்க. வக்கீல்.—(30-வது நம்பர்) வக்கீலாகச் செய்யப்பட்ட பதிவைப்பார்க்க.	ஆதரவில் கண்டிருக்கிறபடி அதில் சம்பந்தப்பட்ட சொத்தின் அளவுக்குஅல்லதுமதிப்புக்குச்சரியானதொகைக்காக (16-வது) பாட்டம்ரி பாண்டுக் குண்டான தீர்வை; ஆனல் அது பதினைந்துரூபாய்க்கு மேற்படக்கூடாது.
* 65. சரக்கு வாரண்ட்—அதாவது அதில் கண்டிருக்கிற யாதொரு நபருக்காவது அவனுடைய சாட்டுதலைக்காரர்களுக்காவது அதை வைத்துக் கொண்டிருக்கிறவனுக்காவது, கப்பல் செப்பனிடும் துறையிலாகிலும் கிடங்கிலாகிலும் செய்கரையிலாகிலும் இருக்கிறசரக்கிலுள்ள சொத்துவத்துக்கு உண்டாயிருக்கிறஹக்கைத் தெரிவித்து, அந்தச்சரக்கு எவனுடையவசத்திலிருக்குமோ அந்த நபராலாவது அவன் பட்சத்திலாவது கையெழுத்து செய்யப்பட்டாகிலும் ஸெர்ட்டிபை செய்யப்பட்டாகிலும் இருக்கிற ஆதரவு.	ஆறு அணு.

ஸ்டாம்பு ஆக்ட் முற்றிற்று

1908-ம் ஹூத்து 16-வது ஆக்ட்.

2-ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம்.

தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர்செய்வதைக்குறித்த சட்ட திட்டங்களை ஒன்ருய்ச்சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிகப்படுகிறதென்னவென்ருல்.—

1-ம் பாகம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வியாபகமும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை 1908-ம்ஹூத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டென்று சொல்லலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார், இந்த ஆக்ட் வியாபிப்பதினின்றும் நிவர்த்திசெய்கிற டிஸ்ட்ரிக்ட்டுகள் அல்லது தேசப்பிரிவுகள் தவிர ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் இந்த ஆக்ட் வியாபிக்கின்றது.

(3) 1909-ம்ஹூ ஜனவரிமீ 1உ முதற்கொண்டு வழங்கத்தொடங்கவேண்டும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்ட்டிலே சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமேதேனும் இருந்தாலொழிய,—

(1) "விசேஷ விவரணம்" என்பது—விவரித்துச் சொல்லப்பட்ட நபரினுடைய வாசஸ்தலம், தொழில், வர்த்தகம், அந்தஸ்து, பட்டம் (ஏதாவதிருந்தால்) அதுவும், இந்துதேசத்தான் விஷயத்தில் அவனுடையஜாதி (ஏதாவதிருந்தால்) அதுவும், அவனுடைய தகப்பன் பெயரும், இன்னுளுடைய குமாரனென்று வழக்கமாய்ச் சொல்லப்படுகிறவன் விஷயத்தில் அவனுடைய தாயின்பெயரும் என்று அர்த்தமாகும்.

(2) "புஸ்தகம்" என்பதிலே—யாதொரு புஸ்தகத்தின் ஓர்பாகமும், ஒரு புஸ்தகமாகவாவது புஸ்தகத்தின் ஓர்பாகமாகவாவதுசெய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு ஒன்ருய்ச்சேர்ந்திருக்கிற சில காகிதங்களும் அடங்கும்.

(3) "டிஸ்ட்ரிக்ட்" என்பதும் "ஸப்-டிஸ்ரிக்ட்" என்பதும்—இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட டிஸ்ட்ரிக்டென்றும், ஸப்-டிஸ்ட்ரிக்ட் என்றும் முறையே அர்த்தமாகும்.

(4) "டிஸ்ட்ரிக்ட் கோர்ட்" என்பதிலே —ஸிவில் விவகாரத்தில் சாதாரண அசல்விசாரணை அதிகாரமுடைய ஹைகோர்ட்டென்பதும் அடங்கும்.

(5) "எண்டார்ஸ்மென்ட் அல்லது மேலே எழுதுவது" என்பதும் "எண்டார்ஸ்செய்யப்பட்டது" என்பதும்—இந்த ஆக்ட்டின்படி ரெஜிஸ்டர் செய்விக்கக் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தாவேஜுடன் சேர்க்கப்பட்ட கடுதாசியின்மேலாவது அதன் மேல்மூடி துண்டுகடுதாசியின்மேலாவது ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் எழுதுகிற பதிவென்றும் அர்த்தமாகி அதற்குப்பிரயோகப்படும்.

(6) "அசையாப்பொருள்" என்பதிலே—நிலம், கட்டிடம், பரம்பரைவர்த்தனை, வழிநடை, வெளிச்சம், படகுவிடுதல், மீன்பிடித்தல் அல்லது நிலத்திலுண்டாகும் வேறே யாதொரு பிரயோஜனத்துக்குள்ள பாத்தியதை, நிலத்தோடுசேர்ந்தாவது நிலத்தோடுசேர்ந்த யாதொரு பொருளோடு ஸ்திரமாய்ப் பிணைந்தாவதிருக்கிற வஸ்துக்கள் என்பதும் அடங்கும்; ஆனல், நிற்கும் மரம், வளருகிற பயிர், புல் ஆகிய இவைகள் அதில் அடங்காது.

(7) "குத்தகைச்சீட்டு" என்பதிலே—எதிரிடைச்சீட்டு, கபூலியாய்க், சாகுபடிசெய்ய அல்லது அனுபவிக்க ஏற்றுக்கொள்வது, குத்தகைக்கு விடுவதற்கான உடன்படிக்கை என்பதும் அடங்கும்.

(8) "மைனர்" என்பது—அவன் உட்பட்டிருக்கிற நபர் சம்பந்தமான சட்டப்படி, பருவமடையாதிருக்கிற நபரென்று அர்த்தமாகும்.

(9) "அசையும்பொருள்" என்பதிலே—நிற்கும் மரம், வளருகிறபயிர், புல் மரங்களிலுள்ள பழமும் ரசமுமென்பதும், அசையாப்

பொருள் தவிர வேறே எவ்வகைப்பட்ட பொருளென்பதும் அடங்கும்.

(10) "பிரதிநிதி" என்பதிலே—யாதொருமைனரின் சவரட்சகரென்பதும், பைத்தியக்காரன் அல்லது உன்மத்தன் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் அல்லது சட்டப்படி தம்முடைய அதிகாரத்துக்குள் வைத்துக்கொண்டிருக்கிற க்யூரேட்டரென்பதும் அடங்கும்.

2-ம் பாகம்.

ரெஜிஸ்ட்ரேஷன் சிப்பந்திகள்.

ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

3. (1) பிரதேச கவர்ன்மெண்டார் தங்கள் துரைத்தனத்திற்குட்பட்ட பிரதேசங்களுக்காக ஒரு உத்தியோகஸ்தரை ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கவேண்டும்.

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் - அப்படி நியமிப்பதற்குப் பர்த்தியாக, இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு இதில் பின்னால் கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்களையும் ஏற்படுத்தப்பட்ட சகல அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது, பிரதேச கவர்ன்மெண்டார் இந்தவிஷயமாய் நியமிக்கிற உத்தியோகஸ்தர் அல்லது உத்தியோகஸ்தர்கள் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கிற பிரதேச எல்லைக்குள் செலுத்திக்கொண்டு நிறைவேற்றிவர வேண்டியதென்று உத்தரவுசெய்யலாம்.

(2) யாதொரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் அந்த உத்தியோகத்தோடுகூட கவர்ன்மெண்டாரிடத்திலே வேறே யாதொரு உத்தியோகமுஞ் செய்யலாம்.

ஹிந்து தேசத்து (ப்ரான்ச்) சாகை இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

4. (1) மேலும், ஆலோசனைசபையிலுள்ள பம்பாய் கவர்னரவர்கள் ஒரு உத்தியோகஸ்தரை ஹிந்துதேசத்து சாகை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கலாம்; அவர் விதிகள் செய்ய இதில்பின்னால் கொடுக்கப்படுகிற அதிகாரந்தவிர இந்த ஆக்டின்படி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குண்டாகிய மற்றெல்லா அதிகாரங்களையுமுடையவராவார்,

(2) ஹிந்துதேசத்து சாகை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அந்த உத்தியோகத்தோடுங்கூட கவர்ன்மெண்டாரிடத்திலே வேறே யாதொரு உத்தியோகமுஞ் செய்யலாம்.

டிஸ்ட்ரிக்டுகளும் ஸப் டிஸ்ட்ரிக்டுகளும்.

5. (1) இந்த ஆக்டில் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக பிரதேச கவர்ன்மெண்டார் டிஸ்ட்ரிக்டுகளையும் ஸப் டிஸ்ட்ரிக்டுகளையும் ஏற்படுத்தி, அந்த டிஸ்ட்ரிக்டுகளுக்கும் ஸப்-டிஸ்ட்ரிக்டுகளுக்கும் எல்லைகளை நிச்சயிக்கவேண்டும்; அந்த எல்லைகளை மாற்றலாம்.

(2) இந்தப்பிரிவுன்படி ஏற்படுத்தப்படுகிற டிஸ்ட்ரிக்டுகளையும் ஸப்-டிஸ்ட்ரிக்டுகளையும் அவைகளின் எல்லைகளையும், அந்த எல்லைகளை எவ்வளவாவது மாற்றினுல் அதையும் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

(3) அப்படி மாற்றப்படுகிற பிரதி எல்லையும் விளம்பரஞ்செய்யப்பட்டதேதிக்குப் பின்பு அதில் கண்டிருக்கிற தேதியில் ஊர்ஜ்ஜிதமாகவேண்டும்.

ரெஜிஸ்ட்ரார்களும் ஸப்- ரெஜிஸ்ட்ரார்களும்.

6. சர்க்கார் உத்தியோகஸ்தர்களாயிருந்தாலும் இராவிட்டாலும், பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறவர்களை மேற்சொல்லியபடி ஏற்படுத்தப்படுகிற அந்தந்த டிஸ்ட்ரிக்டில் ரெஜிஸ்ட்ரார்களாகவும் அந்தந்த ஸப் டிஸ்ட்ரிக்டுகளில் ஸப் ரெஜிஸ்ட்ரார்களாகவும் நியமிக்கலாம்.

ஆனுல், பிரதேசகவர்ன்மெண்டார் - ஸப்ரெஜிஸ்ட்ரார்களை நியமிப்பதற்கான அதிகாரத்தைதங்களுக்குத்தகுதியாகத்தோற்றுகிற நிர்ப்பந்தங்களுக்கும் திட்டங்களுக்குமுட்பட்டு ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களுக்கு ஒப்புவிக்கலாம்.

ரெஜிஸ்ட்ரார் - ஸப் ரெஜிஸ்ட்ரார் ஆகிய இவர்களுடையஆபீஸுகள்.

7. (1) பிரதேச கவர்ன்மெண்டார் பிரதிடிஸ்ட்ரிக்டிலும் ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸென்று சொல்லப்படும் ஒரு ஆபீஸையும், பிரதி ஸப்டிஸ்ட்ரிக்டிலும் ஸப்-ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸென்ருவது ஜாய்ன்ட் ஸப்-ரெஜிஸ்ட்ரார்களுடைய ஆபீஸுகளென்ருவது சொல்லப்படும் ஒரு ஆபீஸ் அல்லது ஆபீஸுகளையும் ஏற்படுத்தவேண்டும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் - யாதொரு ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸோடுகூட அந்த ரெஜிஸ்ட்ராருக்குட்பட்ட யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸைச் சேர்க்கலாம்; அன்றியும், அப்படியாருடையஆபீஸ் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அந்த ஸப்-ரெஜிஸ்ட்ரார் தம்முடையசொந்த அதிகாரமும் அலுவல்களுமல்லாமல், தாம் உட்பட்டிருக்கிற ரெஜிஸ்ட்ராருடைய சகல அதிகாரங்களையும் அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது செலுத்திக்கொண்டுநிறைவேற்றிவரும்படி அவருக்கு அதிகாரங்கொடுக்கலாம்.

ஆனால், அப்படி அதிகாரங் கொடுக்கப்படுவதினாலே யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு, இந்த ஆக்டின்படி தான்செய்த உத்தரவின் மேல்தொடரப்பட்ட அப்பீலை விசாரணைசெய்ய அதிகாரமுண்டாக மாட்டாது.

ரெஜிஸ்ட்ரேஷன்ஆபிஸ்களின் இன்ஸ்பெக்டர்கள்.

8. (1) மேலும் பிரதேச கவர்ன்மெண்டார் ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸ்களின் இன்ஸ்பெக்டர்களென்று சொல்லப்படும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம். அந்த உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட பிரதி இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்டர்ஜெனரலுக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

9. [1927 - ம் வருஷத்து 10-வது ஆக்டால் ரத்து.]

ரெஜிஸ்ட்ரார் ஹாஜரில்லா திருப்பது அல்லது அவருடைய உத்தியோகம் காலியாயிருப்பது.

10. (1) ராஜதானிப்பட்டணம் சேர்ந்திருக்கிற டிஸ்ட்ரிக்டின் ரெஜிஸ்ட்ராரல்லாத வேறே யாதொருரெஜிஸ்ட்ரார் தம்முடைய டிஸ்ட்ரிக்டிலே அலுவலின்மேலல்லாமல் மற்றப்படி ஹாஜரில்லாதிருந்தாலும், அல்லது அவருடைய உத்தியோகம் சிறிதுகாலத்திற்குக் காலியாயிருந்தாலும் இந்த விஷயத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமிக்கிறவரெவராவது, அப்படி நியமிக்காவிட்டால், எவருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அந்தரெஜிஸ்ட்ராருடைய ஆபிஸ் இருக்கிறதோ அந்தடிஸ்ட்ரிக்ட் கோர்ட் ஜட்ஜாவது மேற்சொல்லியபடி ஹாஜரில்லாதிருக்கிற காலம்வரையிலாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் காலியாயிருக்கிற உத்தியோக

த்திற்கு வேறொருவரை நியமிக்கிறவரையிலாகிலும் ரெஜிஸ்ட்ராராயிருக்கவேண்டும்.

(2) ராஜதானிப்பட்டணம் சேர்ந்திருக்கிற டிஸ்ட்ரிக்டின் ரெஜிஸ்ட்ரார் தம்முடைய டிஸ்ட்ரிக்டிலே அலுவலின்மேலல்லாமல் மற்றப்படி ஹாஜரில்லாவிட்டாலும், அவருடைய உத்தியோகம் சிறிதுகாலத்திற்குக் காலியாயிருந்தாலும், இந்த விஷயத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமிக்கிற வேறே எவராவது - மேற்சொல்லியபடி ஹாஜரில்லாதிருக்கிறவரையிலாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் காலியாயிருக்கிற உத்தியோகத்துக்கு வேறொருவரை நியமிக்கிறவரையிலாகிலும் ரெஜிஸ்ட்ராராயிருக்கவேண்டும்.

ரெஜிஸ்ட்ரார் தம்முடைய டிஸ்ட்ரிக்டிலே ஆபீஸை விட்டு அலுவலின் மேல் போயிருப்பது.

11. யாதொரு ரெஜிஸ்ட்ராரானவர் தம்முடைய டிஸ்ட்ரிக்டிலே ஆபீஸைவிட்டு அலுவலின்மேல் போகையில், அப்படி தாம் போய்த் திரும்பிவருகிறவரையிலே, 68-வது, 72-வது பிரிவுகளில் கண்டிருப்பவைகள் தவிர ரெஜிஸ்ட்டாருடைய மற்ற அலுவல்களெல்லாம் நிறைவேற்றுவதற்குத் தம்முடைய டிஸ்டிரிக்டிலுள்ள யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்டரையாவது வேறே நபரையாவது அவர் நியமிக்கலாம்.

ஸப் - ரெஜிஸ்ட்ரார் ஹாஜரில்லாதிருப்பது அல்லது அவருடைய உத்தியோகம் காலியாயிருப்பது.

12. யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ரார் ஹாஜரில்லாவிட்டாலும், அவருடைய உத்தியோகம் சிறிதுகாலத்திற்குக் காலியானாலும், இந்த விஷயத்திலே டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்டரால் நியமிக்கப்படுகிற யாதொரு நபர்-மேற்சொல்லியபடி ஹாஜரில்லாதிருக்கிறவரையிலாகிலும், காலியாயிருக்கிற உத்தியோகத்திற்குவேறொருவர் நியமிக்கப்படுகிறவரையிலாகிலும் ஸப்-ரெஜிஸ்ட்ராராயிருக்கவேண்டும்.

சில நேமங்களைக்குறித்து (கவர்ன்மெண்டாருக்கு) ரிபோர்ட் பண்ணுவதும் உத்தியோகஸ்தர்களை ஸஸ்பெண்ட் செய்வதும் நீக்கிவைப்பதும் தள்ளிவிடுவதும்.

13. (1) 6-வது பிரிவின்படி இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலவர்களால் செய்யப்பட்டசகல நேமங்களையுங்குறித்தும், 10, 11 அல்லது 12-வது பிரிவின்படி செய்யப்பட்டசகலநேமகங்களையுங்குறித்தும்இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்கள் பிரதேசகவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்.

(2) அந்த ரிபோர்ட்டானது பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்கிறபடி பிரத்தியேகமானதாகவாவது பொதுவானதாகவாவதிருக்கவேண்டும்.

(3) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி நியமிக்கப்பட்டவரெவரையாவது பிரதேச கவர்ன்மெண்டார் ஸஸ்பெண்ட் செய்யலாம், நீக்கிவைக்கலாம் அல்லது தள்ளிவிடலாம்; அவருக்குப் பிரதியாக வேறொருவரையும்நியமிக்கலாம். மேலும், ரெஜிஸ்ட்ரேஷன்இன்ஸ்பெக்டர் ஜெனரலானவர் தம்மால் நியமிக்கப்பட்ட ஸப்-ரெஜிஸ்ட்ரார்கள் விஷயத்தில்,பிரதேச கவர்ன்மெண்டாரால் விதிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டு, அதே அதிகாரத்தைச் செலுத்தலாம்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமும் சிப்பந்திகளும்.

14. (1) ரெஜிஸ்டர் செய்வதற்காக இந்த ஆக்டின்படிநியமிக்கப்படுகிற உத்தியோகஸ்தர்களுக்கு பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற சம்பளங்களைக்கொடுக்கலாம், அல்லது அவர்களுடைய பிரயாசைக்கு ஈடாகக் கட்டணமாகிலும், சிறிது கட்டணமும் சிறிது சம்பளமுமாகிலும் ஏற்படுத்தலாம்.

(2) இந்த ஆக்டின்படிக்கான அந்தந்த ஆபீஸுக்காக தகுந்த சிப்பந்திகளை பிரதேச கவர்ன்மெண்டார் வைத்துக்கொள்ளவிடலாம்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்களுடைய முத்திரை.

15. அந்தந்த ரெஜிஸ்ட்ராரும் ஸப்-ரெஜிஸ்ட்ராரும் இங்க்லீஷ் பாஷையிலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் உத்தரவு செய்யப்படுகிற வேறே பாஷையிலும் அடியில் கண்டிருக்கிறபடி செதுக்கியிருக்கிற முத்திரையை உபயோகிக்கவேண்டும்:— அந்த முத்திரைகள், "(இன்ன இடத்து) ரெஜிஸ்ட்ரார் முத்திரை (அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ரார் முத்திரை)" என்று செதுக்கியிருக்கவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்களுடைய முத்திரை.

16. (1) இந்த ஆக்டிற்சொல்லியிருக்கிற காரியங்களுக்காக வேண்டிய புஸ்தகங்களை, ரெஜிஸ்டர் செய்கிற பிரதி உத்தியோகஸ்தருடைய ஆபீஸுக்காக பிரதேச கவர்ன்மெண்டார் சவதரிக்கவேண்டும்.

(2) அவ்வாறு சவதரிக்கப்பட்ட புஸ்தகங்கள் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்மேல் அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிர்ணயிக்கிற நமூனுக்களடங்கியவைகளாயிருக்கவேண்டும்; அந்த புஸ்தகங்களிலுள்ள ஏட்டின் பக்கங்களுக்குத்தொடர்ச்சியாய் லக்கங்கள் அச்சிட்டிருக்கவேண்டியதுமல்லாமல், அந்தப் புஸ்தகங்களைச் சர்ப்பராசெய்கிற உத்தியோகஸ்தர் அந்தந்த புஸ்தகத்திலுள்ளஏடுகளின் பக்கங்கள் இத்தனை என்று அந்தப் புஸ்தகத்தின் பெயர் எழுதியிருக்கிற தலைக்கடுதாசியிலே கண்டெழுதிக் கையெழுத்து செய்யவும் வேண்டும்.

(3) பிரதி ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸுக்கும் பிரதேச கவர்ன்மெண்டார் தீபிடிக்காத ஒரு பெட்டியைச் சர்ப்பரா செய்யவேண்டியதுமல்லாமல், பிரதி டிஸ்ட்ரிக்டிலும் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதைச்சேர்ந்த ரெகார்டுகளைப் பத்திரமாய் வைத்திருப்பதற்காகத்தகுந்த ஏற்பாட்டையும் அந்தந்த டிஸ்ட்ரிக்டில் செய்யவேண்டும்.

3-ம் பாகம்

ரெஜிஸ்டர் செய்யப்படத்தக்க தஸ்தவேஜுகள்.

அவசியம் ரெஜிஸ்டர் செய்விக்க வேண்டிய தஸ்தவேஜுகள்.

17. (1) அடியிற்கண்ட, தஸ்தவேஜுகளை 1864-ம்௵த்து 16-வது ஆக்டாகிலும் 1866-ம்௵த்து 20-வது ஆக்டாகிய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டாகிலும் 1871-ம்௵த்து 7-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டாகிலும் 1877-ம்௵த்து 3-வது ஆக்டாகிய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டாகிலும் இந்த ஆக்டாகிலும் எவ்விடத்தில் வழங்கி வந்திருக்குமோ அல்லது வழங்கிவருமோ அந்த டிஸ்ட்ரிக்டிலே அந்த தஸ்தவேஜுகள் சம்பந்தமான சொத்துமிருந்து, மேற்கண்ட அந்தந்த ஆக்ட் வழங்கத்தொடங்கிய தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது அந்த தஸ்தவேஜுகள் எழுதிக்கொடுக்கப்பட்டுமிருந்தால், ரெஜிஸ்டர் செய்யவேண்டும்; அந்த தஸ்தவேஜுகளாவன:—

(a) அசையாப்பொருளின் தான பத்திரங்கள்:

(b) மரணசாசனமல்லாமல், யாதொரு அசையாப் பொருளுக்காவது அசையாப்பொருளிலாவது நூறுரூபாய்முதல் மேற்பட்ட தொகை பெறுமானமுள்ளதாய்,சங்கிரமித்தோ அல்லது அநிச்சயமாகவோஇருக்கிறயாதொரு பாத்தியதை,ஹக்கை சுதந்தரத்தை தற்காலத்திலாவது இனிமேலாவது உண்டுபண்ணுகிறதாகவாகிலும், ஏற்படுத்துகிறதாகவாகிலும், சாட்டுகிறதாகவாகிலும், மட்டுப்படுத்துகிறதாகவாகிலும், அற்றுப்போகும்படி செய்கிறதாகவாகிலும் பொருள்படுகிற அல்லதுசெலாவணியாகிற மற்ற தஸ்தவேஜுகள்:

(c) மரணசாசனமல்லாமல், அப்படிப்பட்ட யாதொரு பாத்தியதை ஹக்கை அல்லது சுதந்தரத்தைஉண்டுபண்ணுவதைக் குறித்தாவது, ஏற்படுத்துவதைக்குறித்தாவது, சாட்டுவதைக்குறித்தாவது மட்டுப்படுத்துவதைக் குறித்தாவது, அற்றுப்போகும்படி செய்வதைக் குறித்தாவது எவ்வளவாகிலும் ஐவேஜு பெற்றுக்கொண்டதாகவாவது செலுத்தினதாகவாவது ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிற தஸ்தவேஜுகள்:

(d) வருஷாவருஷத்திற்காவது ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட காலத்திற்காவது வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகையை நிறுத்திவைத்துக் கொள்ளுகிறதாகவாவதுள்ள அசையாப்பொருளைக்குறித்த குத்தகை அல்லது வாடகைச்சீட்டுகள் :

ஆனால், கெடுவுகாலம் ஐந்துவருஷத்திற்கு மேற்படாமலும், நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத்தொகை ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமலும் யாதொரு டிஸ்ட்ரிக்டிலாவது டிஸ்ட்ரிக்டின் பாகத்திலாவது எழுதிக்கொடுக்கப்பட்ட எவ்விதகுத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளையும் இந்த உட்ப்பிரிவுக்குள்ளாவதினின்றும் பிரதேச கவர்ன்மெண்டார் பிரதேசஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரஞ்செய்யப்பட்ட உத்தரவுமூலமாய் நிவர்த்திபண்ணலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த **(b)**, **(c)** அடையாளமிட்ட பகுதிகளிலுள்ள எந்த நிபந்தனையும் அடியிற்கண்ட தெதற்கும் பிரயோகப்படமாட்டாது:—

(i) யாதொரு ஒருமை உடன்படிக்கைக்காவது ;

(ii) ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனியாருடைய ஆஸ்தியானது முழுதுமாகிலும் கொஞ்சமாகிலும் அசையாப்பொருளா யிருந்தபோதிலும், அந்தக் கம்பெனியிலுள்ள பங்குகளைப்பற்றிய யாதொரு ஆதரவுக்காவது :

(iii) டிபென்கூஷர் என்னும் யாதொரு கடன்பத்திரம் அப்படிப்பட்ட யாதொரு கம்பெனியாரால் பிறப்பிக்கப்பட்டதாயிருந்து, எதைக்கொண்டு அந்தக்கம்பெனியார் தங்களுடைய அசையாப்பொருள் முழுமையுமாவது அதில் எவ்வளவையாவது அதிலுள்ள யாதொரு பாத்தியதையையாவது அப்படிப்பட்டடிபென்கூஷர்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுடைய பிரயோசனத்திற்காக ட்ரஸ்டின்மேல் டிரஸ்டிகளிடத்தில் கொதுவைவைத்தார்களோ அல்லது அவர்களுக்கு ஒப்படைசெய்தார்களோ அல்லது வேறே விதமாய் ட்ரான்ஸ்பர் பண்ணினார்களோ அப்படிப்பட்ட ரெஜிஸ்டரான ஆதரவினாலே ஏற்படுகிற ஈட்டிற்கு ஷெ டிபென்கூஷரை வைத்துக்கொண்டிருக்கிறவருக்கு அதனால் எவ்வளவு மட்டில் ஹக்கு உண்டாகிறதோ அவ்வளவுமட்டில் தவிர அசையாப்பொருளுக்காவது அசையாப்பொருளிலாவது யாதொரு பாத்தியதை-ஹக்கு அல்லது சுதந்தரத்தை உண்டுபண்ணுததாகவாகிலும் ஏற்படுத்தாததாகவாகிலும் சாட்டாததாகவாகிலும் மட்டுப்படுத்தாததாகவாகிலும் அற்றுப்போகும்படி செய்யாததாக வாகிலுமிருந்தால், அப்படிப்பட்ட கடன் பத்திரத்திற்காவது ;

(iv) அப்படிப்பட்ட யாதொரு கம்பெனியாரால் பிறப்பிக்கப்பட்டயாதொருகடன் பத்திரத்தின்மேல் எழுதியிருக்கிற எண்டார்ஸ்மெண்டுக்காவது அப்பத்திரத்தின் ட்ரான்பருக்காவது ;

(v) யாதொரு அசையாப்பொருளுக்காவது அசையாப்பொருளிலாவது நூறு ரூபாய் முதல் மேற்பட்ட தொகை பெறுமான யாதொரு பாத்தியத்தை, ஹக்கை அல்லது சுதந்தரத்தைத் தானே உண்டுபண்ணுகிறதாகவாகிலும், ஏற்படுத்துகிறதாகவாகிலும், சாட்டுகிறதாகவாகிலும், மட்டுப்படுத்துகிறதாகவாகிலும் அற்றுப்போகும்படி செய்கிறதாகவாகிலுமிராமல் எழுதிக்கொடுக்கப்பட்டபோது அப்படிப்பட்ட யாதொரு பாத்தியதை, ஹக்கை, அல்லது சுதந்தரத்தை உண்டுபண்ணுவதாகவாவது, ஏற்படுத்துவதாகவாவது சாட்டுவதாகவாவது, மட்டுப்படுத்துவதாகவாவது அற்றுப்போகும்படி செய்வதாக

வாவதிருக்கிற வேறொரு தஸ்தவேஜை அடைவதற்குச் சுதந்தரமாத்திரம் உண்டுபண்ணும் யாதொரு தஸ்தவேஜுக்காவது ;

(vi) கோர்ட்டின் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுக்கும் பஞ்சாயத்துத் தீர்மானங்களுக்குமாவது ;

(vii) அசையாப்பொருளைக்குறித்து கவர்ன்மெண்டார் கொடுக்கிற யாதொரு க்ராண்டுக்காவது ,

(viii) யாதொருரெவினியூ உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட யாதொரு பங்கு பிரிவினை ஆதரவுக்காவது ;

(ix) 1871-ஆ த்து 26-வது ஆக்ட்டாகிய நிலவிருத்தி ஆக்டின்படியாவது 1883-ம்ஆ த்து 19-வது ஆக்டாகிய நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படியாவது கொடுக்கப்பட்ட மேல்ஜாமீன் ஆதரவுக்கு அல்லது கடன் கொடுப்பதற்கான யாதொரு உத்தரவுக்காவது ;

(X) விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிய 1884-ம்ஆ த்து 12-வது ஆக்டின்படி கடன்கொடுப்பதற்கான யாதொரு உத்தரவுக்கு. அல்லது அந்த ஆக்டின்படிகொடுக்கப்பட்ட கடனைத் திருப்பச் செலுத்திவிடுவதற்கு ஈடாக எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதரவுக்காவது ;

(Xi) கொதுவைத்தொகை முழுவதையுமாவது அதில் எவ்வளவையாவது செலுத்தினதாக ஒப்புக்கொண்டு கொதுவைப்பத்திரத்தின்மேல் எழுதுகிற யாதொரு எண்டார்ஸ்மெண்டுக்கும், கொதுவையினிமித்தம் பாக்கியாகிற பணத்தைச்செலுத்தினதற்கு வேறே யாதொரு ரசீது கொடுக்கப்பட்டு அதனாலே கொதுவை அற்றுப்போய்விட்டதென்று பொருள்படாவிட்டால்அப்படிப்பட்டரசீதுக்குமாவது ;

(xii) யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு உத்தியோகஸ்தரால் பஹிரங்கமாய் ஏலம்போட்டு விற்பனை செய்யப்பட்ட யாதொரு சொத்தை வாங்குகிறவருக்குக் கொடுக்கப்படும் விக்கிரய ஸெர்டிபிகேட்டுக்காவது.

(3) புத்திர ஸ்வீகாரம் செய்துகொள்ளுவதற்காக, மரணசாசனத்தினாலே அதிகார முண்டுபண்ணுமல், 1872-ம்ஆ ஜனவரிமீ 1உக்குப்பின்பு எழுதிக்கொடுக்கப்பட்ட அதிகாரப்பத்திரங்களையும் ரெஜிஸ்டர்பண்ணவேண்டும்.

இஷ்டமிருந்தால் ரெஜிஸ்டர் செய்யகொள்ளும்படியான தஸ்தாவேஜுகள்

18. அடியிற்கண்ட தஸ்தவேஜுகளிலெதை யாவது இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம்; அவையாவன:—

(a) (தானபத்திரங்களும் மரணசாசனங்களுமல்லாமல்) யாதொரு அசையாப்பொருளுக்காவது அசையாப்பொருளிலாவது நூறு ரூபாய்க்குட்பட்ட தொகை பெறுமானதாய்சங்கிரமித்தோ அல்லது அநிச்சயமாகவோ இருக்கிற யாதொரு பாத்தியதை ஹக்கை அல்லது சுதந்தரத்தை தற்காலத்திலாவது இனிமேலாவது உண்டுபண்ணுகிறதாகவாகிலும், ஏற்படுத்துகிறதாகவாகிலும், சாட்டுகிறதாகவாகிலும், மட்டுப்படுத்துகிறதாகவாகிலும், அற்றுப்போகச்செய்கிறதாகவாகிலும், பொருள்படுகிற அல்லது செலாவணியாகிற ஆதரவுகள்;

(b) அப்படிப்பட்ட யாதொருபாத்தியதை, ஹக்கை அல்லது சுதந்தரத்தை உண்டுபண்ணுவதைக்குறித்தாவது, ஏற்படுத்துவதைக் குறித்தாவது, சாட்டுவதைக் குறித்தாவது, மட்டுப்படுத்துவதைக் குறித்தாவத, அற்றுப்போகச்செய்வதைக் குறித்தாவது, எவ்வளவாகிலும் ஐவேஜு பெற்றுக்கொண்டதாகவாவது செலுத்தினதாகவாவது, ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிற ஆதரவுகள்;

(c) ஒரு வருஷத்திற்கு மேற்படாத எவ்வளவு காலத்திற்காவது அசையாப்பொருளைக்குறித்த குத்தகை அல்லது வாடகைச்சீட்டுகளும் 17-வது பிரிவின்படி நிவர்த்திசெய்யப்பட்ட குத்தகை அல்லது வாடகைச்சீட்டுகளும்;

(d) (மரணசாஸனங்களல்லாமல்) அசையும்பொருளுக்காவது அசையும்பொருளிலாவது யாதொரு பாத்தியத்தை, ஹக்கை அல்லது சுதந்தரத்தை உண்டுபண்ணுகிறதாகவாவது, ஏற்படுத்துகிறதாகவாவது, சாட்டுகிறதாகவாவது, மட்டுப்படுத்துகிறதாகவாவது, அற்றுப்போகச் செய்கிறதாகவாவது பொருள்படுகிற அல்லது செலாவணியாகிற ஆதரவுகள்:

(e) மரண சாசனங்கள்:

(f) 17-வது பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்யவேண்டியதாயிராத மற்றெல்லா தஸ்தவேஜுகளும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்குத் தெரியாதபாஷையில் எழுதியிருக்கிற தஸ்தவேஜுகள்.

19. ரெஜிஸ்டர் செய்யும்படி கிரமமாய்க் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜானது ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்குத் தெரியாத பாஷையிலெழுதியிருந்து, அது அந்த டிஸ்ட்ரிக்டிலே சாதாரணமாய் வழங்காத பாஷையாயுமிருந்தால் அந்த டிஸ்ட்ரிக்டில் சாதாரணமாய் வழங்குகிற பாஷையில் செய்யப்பட்ட சரியான தர்ஜுமாவேடும் சரியான நகலோடுங்கூட அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுத்தாலொழிய, அப்படிப்பட்ட தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்ய மாட்டேனென்று அவர் மறுக்கவேண்டும்.

வரிப்பிளந்தெழுதியாவது இடம்விட்டாவதுகிறுக்கியாவது திருத்தியாவதிருக்கிற தஸ்தவேஜுகள்.

20. (1) யாதொரு தஸ்தவேஜில் வரிப்பிளந்தெழுதி யிருப்பதாகவாவது, இடம்விட்டிருப்பதாகவாவது, கிறுக்கியிருப்பதாகவாவது, திருத்தியிருப்பதாகவாவது காணப்பட்டால், அந்த தஸ்தவேஜை எழுதிக்கொடுத்தவர்கள் அப்படிப்பட்ட வரிபிளப்பு, இடம் விடல், கிறுக்கல் அல்லது திருத்தலுக்கு அத்தாட்சியாகத் தங்கள் கையெழுத்து அல்லது இனிஷலை போட்டாலொழிய அதை ரெஜிஸ்டர் செய்வதற்கு அங்கீகரிப்பதில்லையென்று ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால் மறுக்கலாம்.

(2) ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்தால், அதை ரெஜிஸ்டர்செய்கிற காலத்தில் அப்படிப்பட்ட வரிபிளப்பு, இடம்விடல், கிறுக்கல் அல்லது திருத்தலைக்குறித்து ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் குறிப்பு எழுதிக் கொள்ளவேண்டும்.

சொத்து விவரமும் உருவப்படங்கள் அல்லது நக்ஷாக்களும்.

21. (1) மரணசாஸனமல்லாமல் அசையாப்பொருளைக்குறித்த யாதொரு தஸ்தவேஜிலே அந்தப்பொருள் இன்னதென்று தெரிந்துகொள்ளுவதற்குப் போதுமான விவரம் கண்டெழுதியிராவிட்டால், அப்படிப்பட்ட தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படாது.

(2) பட்டணங்களிலிருக்கிற வீடுகளுக்கு அவைகளின் முன்பக்கத்திலிருக்கும் (இன்னதென்று குறிப்பிடவேண்டிய) தெரு அல்லது ரோட்டுக்கு வடவண்டை முதலிய இன்னபக்கத்திலிருக்கிறவைகளென்பதையும் அவைகளின் தற்கால அனுபோகத்தையும் முந்திய அனுபோகத்தையும், அப்படிப்பட்ட தெரு அல்லது ரோட்டிலிருக்கிற வீடுகளுக்கு நம்பர் போட்டிருந்தால் அவைகளையுங் கண்டு விவரமாயெழுதவேண்டும்.

(3) மற்ற வீடுகளுக்கும் நிலங்களுக்கும்பேர் ஏதாவதிருந்தால் அதையும், இன்னராஜ்ஜியப் பிரிவிலிருக்கிறதென்பதையும் அவைகளின் விஸ்தீரணத்தையும், அவைகளின் முன்பக்கத்திலிருக்கிற பாட்டையையும் இதர சொத்துகளையும் அவைகளின் தற்கால அனுபோகத்தையும், கூடுமானல் கவர்ன்மெண்ட் உருவப்படம் அல்லது ஜரீப்கணக்கு சம்பந்தமான சங்கதியையும் விவரமாய்க் கண்டெழுதவேண்டும்.

(4) மரணசாஸனமல்லாத யாதொரு தஸ்தவேஜில் கண்டிருக்கிற சொத்துக்கு உருவப்படம் அல்லது நக்ஷா அந்த தஸ்தவேஜில் அடங்கியிருங்குமாகில் அந்த உருவப்படம் அல்லது நக்ஷாவுக்குச் சரியான நகலையுங்கூடக் கொடாவிட்டாலும், அந்த சொத்து பல டிஸ்ட்ரிக்டுகளிலிருக்குமாகில், அந்த உருவப்படம் அல்லது நக்ஷாவுக்கு அந்த டிஸ்ட்ரிக்டுகளெத்தனையோ அத்தனை சரியானநகல்கள் கொடாவிட்டாலும், அப்படிப்பட்ட தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படாது.

கவர்ன்மெண்டாருடைய உருவப்படம் அல்லது ஸர்வேயைக் கொண்டு வீடுகளையும் நிலங்களையும் விவரிப்பது.

22. (1) நிலங்களையும் பட்டணங்களிலுள்ள வீடுகளாயிராத வீடுகளையும் கவர்ன்மெண்டாருடைய உருவப்படம் அல்லது ஸர்வேயைக்கொண்டு விவரிப்பது சாத்தியமென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுவார்களாகில் அவர்கள் மேலேகண்ட வீடுகளும் நிலங்களும் 21-வது பிரிவின் காரியங்களுக்காக மேலே கண்டபடி விவரிக்கப்படவேண்டுமென்று இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிமூலமாகக் கட்டளையிடலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியினல் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்

றப்படி, 21-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்டஉட்பிரிவு அல்லது (3) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடந்து கொள்ளாமையினாலே, யாதொரு தஸ்தவேஜு சம்பந்தப்படுகிற சொத்தின் விவரம் அச்சொத்து இன்னதுதானென்று காட்டுவதற்குப் போதுமானதாயிருக்குமானால் அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்கு யோக்கியதை அற்றதாகமாட்டாது.

4-ம் பாகம்.

கொண்டுவந்து கொடுக்கிற காலத்தைக்குறித்து.

தஸ்தவேஜுகளைக்கொண்டுவந்து கொடுப்பதற்குக் காலம்.

23. 24-வது, 25-வது 26-வது, பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மரணஸாஸனமல்லாமல் வேறே தஸ்தவேஜானது அது பிறந்த தேதிமுதற்கொண்டு நான்கு மாதத்திற்குள் தகுந்த அதிகாரியினிடத்திலே ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொண்டுவந்து கொடுக்கப்படாவிட்டால் அது ரெஜிஸ்டர் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படாது;

ஆனால், யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுசெய்யப்பட்ட தேதிமுதல் நான்குமாதத்துக்குள்ளாகவாவது, அது அப்பீல்செய்யும்படியானதாயிருந்தால், அதுமுடிவானதாகிற தேதிமுதற்கொண்டு நான்கு மாதத்திற்குள்ளாகவாவது அந்த டிக்ரி அல்லது உத்தரவின் நகலைக் கொண்டுவந்து கொடுக்கலாம்.

சிலதஸ்தவேஜுகளைமறுபடியும் ரெஜிஸ்டர் செய்வது.

23-A. இந்த ஆக்டில் இதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, எந்த விஷயத்திலாகிலும் ரெஜிஸ்டர் செய்ய வேண்டியதாயிருக்கிற யாதொரு தஸ்தவேஜைக்கொண்டுவந்து கொடுக்க கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிராத யாதொரு நபரிடத்திலிருந்து அந்த தஸ்தவேஜானது ஒரு ரெஜிஸ்ட்ராராலாகிலும் ஸப்-ரெஜிஸ்ட்ராராலாகிலும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால், அந்த தஸ்தவேஜின்படி தாவாசெய்கிற யாதொரு நபர் அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி செலாவணி

யாகாதென்று தமக்கு முதல் முதல்தெரியவந்ததிலிருந்து நான்கு மாதத்துக்குள்ளாக, எதில் கூடி தஸ்தவேஜு முதலில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதோ அந்த ஜில்லா ரெஜிஸ்ட்ராரின் ஆபிஸில் மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக 6-ம் பாகத்திற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து அந்த தஸ்தவேஜைக்கொண்டுவந்து கொடுக்கலாம், அல்லது அதைக் கொண்டுவந்து கொடுக்கும்படிச் செய்யலாம்; அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்க கிரமப்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றிராத யாதொரு நபரிடத்திலிருந்து அது ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக அந்தப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று ரெஜிஸ்ட்ரார் தெரிந்து திருப்தியடைவதன்மேல், அவர் - அந்த தஸ்தவேஜு முன்னமே ரெஜிஸ்டர் செய்யப்படாமலிருந்தால் எப்படியோ அப்படியும், அதை மறுபடியும் ரெஜிஸ்டர் செய்வதற்காக மேலேகண்டபடி கொடுத்துக்கொண்டது 4-ம் பாகத்தின்படி ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொடுக்கப்படும் காலத்துக்குள்ளே அந்தப்படி ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காகக் கொடுத்துக்கொள்ளப்பட்டதாயிருந்தால் எப்படியோ அப்படியும், அந்த தஸ்தவேஜை மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யத் தொடங்கவேண்டும்; அதன்மேல், தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்து இந்த ஆக்டிற்கண்ட சகல நிபந்தனைகளும் - அந்தப்படி மறுபடியும் ரெஜிஸ்டர் செய்வதற்குப் பிரயோகப்படும்; மேலும், அந்த தஸ்தவேஜானது - இந்தப்பிரிவிற் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து கிரமப்படி மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுகிறபட்சத்திலே, அதுமுதலில் ரெஜிஸ்டர்செய்யப்பட்ட தேதி முதல் சகல காரியங்களுக்காகவும் கிரமமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதாகவே எண்ணப்படும்.

ஆனல், 1917-ம்ளு ஸெப்டம்பர்மீ 12௳ முதல் மூன்று மாதத்துக்குள்ளாக, இந்தப் பிரிவு எந்த தஸ்தவேஜுக்குப்பிரயோகப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு தஸ்தவேஜின்படி தாவா செய்கிற யாதொரு நபர் - அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி செலாவணியாகமாட்டாதென்று தமக்கு முதல் முதல் தெரிய வந்த காலம் எதுவாயிருந்தபோதிலும், இந்தப் பிரிவை அனுசரித்து மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்கலாம், அல்லது அதைக் கொண்டுவந்து கொடுக்கும்படிச் செய்யலாம்.

வெவ்வேறுகால த்திலேபற்பல நபர் கள் கையெழுத்து செய்கிற தஸ்தா வேஜுகள்.

24. வெவ்வேறுகாலத்திலே அசல்கையெழுத்துசெய்கிறவர்கள் பலராயிருந்தால், அப்படிப்பட்ட தஸ்தவேஜை ஒவ்வொருமுறை கையெழுத்தாகிற தேதிமுதல் நான்கு நான்கு மாதத்திற்குள் ஒவ்வொருதடவை ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கொண்டுவந்து கொடுக்கும் விஷயத்தில் தடுக்கமுடியாதபடி ஆலசியம்நேரிட்டால் இன்னது செய்வதென்பது.

25. (1) மிகுந்த அவசரத்தைப் பற்றியாவது தடுக்கமுடியாத இடையூறைப்பற்றியாவது, ப்ரிடிஷ் இந்தியாவிலே கையெழுத்து செய்யப்பட்ட யாதொரு தஸ்தவேஜையாகிலும், செய்யப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவின் நகலையாகிலும், அதற்காக இதில்முன்னமே கண்டிருக்கிற கெடுவுகாலம் கழிக்கிறவரையில்ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்துகொடாமல் பின்பு கொண்டுவந்துகொடுத்தால், அப்படி கொண்டுவந்துகொடுக்க நேரிட்ட ஆலசியமானது நான்குமாதத்திற்கதிகப்படாத விஷயங்களில், ரெஜிஸ்ட்ராரானவர் - கிரமமான ரெஜிஸ்டர் கட்டணத்தொகைக்குப் பத்தத்தனைக்கு அதிகப்படாமல் அபராதம் செலுத்தப்படுவதன்மேல் அப்படிப்பட்ட தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்வதற்கு ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவுசெய்யலாம்.

(2) அப்படி உத்தரவாகும்படி எழுதிக்கொள்ளுகிற யாதொரு மனுவை யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ராரிடத்திலே ஒப்பிக்கலாம்; அவர் தாம் உட்பட்டிருக்கிற ரெஜிஸ்ட்ராரிடத்திற்கு அதை உடனே அனுப்பவேண்டும்.

ப்ரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியில் எழுதிக் கொடுக்கப்பட்ட தஸ்தவேஜுகள்.

26. சம்பந்தப்பட்ட எல்லா நபர்களாலாகிலும் அவர்களில் எவராலாகிலும் ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியில் கையெழுத்து செய்யப்பட்டிருப்பதாகப் பொருள்படுகிற யாதொரு தஸ்தவேஜானது அதற்காக இதில்முன்னமே சொல்லியிருக்கிற கெடுவுகாலம் கழிக்கிறவரையில் ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்து கொடாமல்பின்பு கொண்டுவந்து கொடுக்கப்பட்டால், ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர்—

(**a**) அந்த ஆதரவு அப்படி கையெழுத்து செய்யப்பட்டதென்றும்,

(**b**) ப்ரிட்டிஷ் இந்தியாவிலே அதுவந்துசேர்ந்தபின்பு நான்குமாதத்திற்குள் அதுரெஜிஸ்டர் செய்யக் கொண்டுவந்து கொடுக்கப்பட்டதென்றும்,—திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளுவாராகில், அவர்கிரமமான ரெஜிஸ்டர் கட்டணம் செலுத்தப்படுவதன்மேல், அப்படிப்பட்ட தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளலாம்.

மரணசாசனங்களை எப்போதாவது கொண்டுவந்து கொடுக்கலாம் அல்லது கட்டிவைக்கலாம்.

27. யாதொரு மரண சாஸனத்தை எப்போதாவது ரெஜிஸ்டர் செய்யக்கொண்டுவந்து கொடுக்கலாம் அல்லது இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்க் கட்டிவைக்கலாம்.

5-ம் பாகம்.

ரெஜிஸ்டர் செய்கிற இடம்.

நிலத்தைக்குறித்த தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்கான இடம்.

28. இந்த பாகத்தில் வேறேவிதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, 17-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (**a**), (**b**), (**c**), (**d**) அடையாளமிட்ட பகுதிகளிலும், 18 - வது பிரிவு (**a**), (**b**), (**c**) குறிப்பிட்டபகுதிகளிலும்கண்டிருக்கிற பிரதி தஸ்தவேஜையும், யாருடைய ஸப்டிஸ்ட்ரிக்டுக்குள் அந்த தஸ்தவேஜு சம்பந்தப்படுகிற சொத்து முழுமையுமாவது அதில் எவ்வளவாவதிருக்கிறதோ அந்த ஸப்ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிலே ரெஜிஸ்டர் செய்யும்படி கொண்டுவந்து கொடுக்கவேண்டும்.

மற்ற தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்கான இடம்.

29. (1) 28 - வது பிரிவில் உதாகரிக்கப்பட்டிருக்கிற தஸ்தவேஜைத் தவிர இதர தஸ்தவேஜு ஒவ்வொன்றையும் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவின் நகலையும், யாருடைய ஸப்டிஸ்ட்ரிக்டில் அந்ததஸ்தாவேஜு எழுதிக் கொடுக்கப்பட்டதோ அந்த ஸப்ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸிலாவது, அந்ததஸ்தாவேஜை எழு

திக் கொடுக்கிறவர்களும் அதனால்பாத்தியமடைந்திருப்பவர்களுமாகிய எல்லோரும் பிரதேச கவர்ன்மெண்டுக்குட்பட்ட வேறே எந்த ஸப்ரெஜிஸ்ட்ராராபிஸில் அதைரெஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்று கோருகிறார்களோ அந்த ஆபீஸிலாவது ரெஜிஸ்டர் செய்யும்படி கொண்டுவந்துகொடுக்கலாம்.

(2) யாதொரு டிக்ரி அல்லது உத்தரவின் நகலை, யாருடையஸப்டிஸ்ட்ரிக்டுக்குள் அசல் டிக்ரியாவது உத்தரவாவதுசெய்யப்பட்டதோ அந்த ஸப்ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸிலாகிலும், அந்த டிக்ரி அல்லது உத்தரவு அசையாப்பொருளுக்குச் சம்பந்தப்படாத பட்சத்தில், அந்தடிக்ரி அல்லது உத்தரவைக்கொண்டு தாவா செய்யப் பாத்தியமுடையவர்களெல்லோரும் பிரதேச கவர்ன்மென்டுக்குட்பட்ட வேறே எந்த ஸப்ரெஜிஸ்ட்ராராபிஸில் அந்த நகலை ரெஜிஸ்டர் செய்துக்கொள்ளக் கோருகிறார்களோ அந்த ஆபிஸிலாகிலும் ரெஜிஸ்டர் செய்யும்படி கொண்டுவந்து கொடுக்கலாம்.

சில விஷயங்களில் ரெஜிஸ்ட்ரார்கள் ரெஜிஸ்டர்செய்வது.

30. (1) யாதொரு ரெஜிஸ்ட்டிராரானவர் தமக்குக் கீழ்ப்பட்ட எந்த ஸப்ரெஜிஸ்ட்ராராவது ரெஜிஸ்டர் செய்யத்தக்க யாதொரு தஸ்தவேஜை தமக்கு யுக்தமாகத் தோற்றினால் வாங்கிக்கொண்டு ரெஜிஸ்டர் செய்யலாம்.

(2) 28 - வதுபிரிவில் உதகரித்திருக்கிற யாதொரு தஸ்தவேஜில் கண்டிருக்கிறசொத்து ப்ரிடிஷ்இந்தியாவில் எந்தபாகத்திலிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், அப்படிப்பட்ட தஸ்தவேஜை ராஜதானிப்பட்டணம் சேர்ந்திருக்கிற டிஸ்ட்ரிக்டின் ரெஜிஸ்ட்ராரும் லாஹோர்டிஸ்ரிக்ட்டின் ரெஜிஸ்ட்ராரும் வாங்கிக் கொண்டு ரெஜிஸ்டர் செய்யலாம்.

ஒருவருடைய வீட்டிற்குப் போய் ரெஜிஸ்டர் செய்வதும் கட்டிகொள்ள அங்கீகரிப்பதும்.

31. சாதாரணமான விஷயங்களிலே இந்த ஆக்டின்படி தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதையும் கட்டிக்கொள்வதையும், அவைகளை ரெஜிஸ்டர் செய்யவும் கட்டிக்கொள்ளவும் வாங்கிக்கொள்ளுவதற்கு அதிகாரமுடைய உத்தியோகஸ்தருடைய ஆபீஸிலேதான் செய்யவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்-விசேஷ காரணந்தெரிவிக்கப்படுவதன்மேல், யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வித்து

க்கொள்ளக் கொடுக்கவாவது யாதொரு மரணசாஸனத்தைக் கட்டி வைக்கவாவது கோருகிற யாதொரு நபருடைய வீட்டுக்குப்போய் அப்படிப்பட்ட தஸ்தவேஜு அல்லது மரண சாஸனத்தை ரெஜிஸ்டர் செய்யவாவது கட்டிக் கொள்ளவாவது ஏற்றுக்கொள்ளலாம்.

6-ம் பாகம்.

ரெஜிஸ்டர் செய்ய தஸ்தவேஜுகளைக் கொண்டுவந்து கொடுப்பதைக்குறித்து.

ரெஜிஸ்டர் செய்ய தஸ்தவேஜுகளைக் கொண்டு வந்து கொடுக்கவேண்டியவர்கள்

32. 31-வது 89-வது பிரிவுகளில் கண்டிருக்கிற விஷயங்களில் தவிர, அவசியம் ரெஜிஸ்டர் செய்விக்கவேண்டியதா யிருந்தாலும் இஷ்டத்தின்மேல் ரெஜிஸ்டர் செய்வித்துக் கொள்ளுகிறதா யிருந்தாலும்’ இந்த ஆக்டின் பிரகாரம் ரெஜிஸ்டர் செய்யும்படியான பிரதி தஸ்தவேஜையும்,

(a) அந்த தஸ்தவேஜை எழுதிக் கொடுக்கிறவராவது அதனுல் பாத்தியத்தை அடைகிறவராவது, டிக்ரி அல்லது உத்தரவின் நகல் விஷயத்தில் அந்த டிக்ரி அல்லது உத்தரவைக்கொண்டு தாவாசெய்யப் பாத்தியமுடையவராவது,

(b) அப்படிப்பட்ட நபருடைய பிரதிநிதியாவது ஒப்படைக்காரராவது,

(c) இதில் பின்னுல் கண்டிருக்கிற விதமாய் எழுதிக் கையெழுத்திட்டு உறுதி செய்யப்பட்ட அட்டர்னி பவர் என்னும் வகாலத்துநாமா மூலமாய் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற அப்படிப்பட்ட நபர்-பிரதிநிதி அல்லது ஒப்படைக்காரருடைய ஏஜெண்டாவது,

தகுந்த ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸில் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்.

32-வது பிரிவில் கண்டிருக்கிற காரியங்களுக்காக அங்கீகரிக்கத்தக்க வகாலத்து நாமாக்கள்.

33. **(1)** 32-வது பிரிவில் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக அடியிற்கண்ட அட்டர்னி பவர் என்னும் வகாலத்து நாமாக்களை மாத்திரம் அங்கீகரிக்கவேண்டும். அவை ஏவையென்றால்:—

(a) வக்காலத்து நாமா எழுதிக்கொடுக்கிற காலத்தில் பிரதான புருஷன் ப்ரிடிஷ் இந்தியாவிலே இந்த ஆக்ட் அப்போதைக்கு வழங்கிவருகிற யாதொரு பாகத்தில் வாசஞ்செய்தால், அவர் வாசஞ்செய்கிற டிஸ்ட்ரிக்டின் ரெஜிஸ்ட்ரார் அல்லது அவர் வாசம் செய்கிற ஸப் டிஸ்ட்ரிக்டின் ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு முன்பாகக் கையெழுத்திட்டு அந்த ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ராரால் உறுதி செய்யப்பட்ட வகாலத்து நாமா:

(b) மேற்சொன்ன காலத்திலே பிரதான புருஷன் ப்ரிடிஷ் இந்தியாவில் வேறே யாதொரு பாகத்திலே வாசஞ் செய்தால், யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகக் கையெழுத்திட்டு அவரால் உறுதி செய்யப்பட்ட வகாலத்துநாமா:

(c) மேற்சொன்ன காலத்திலே பிரதான புருஷன் ப்ரிடிஷ் இந்தியாவில் வாசஞ்செய்யாவிட்டால், நோடரி பப்ளிக் என்னும் அதிகாரிக்கு முன்பாகவாவது, யாதொரு கோர்ட் ஜட்ஜ், மாஜிஸ்ட்ரேட், ப்ரிட்டிஷ் கான்ஸல் அல்லது வைஸ் கான்ஸலுக்கு முன்பாகவாவது, மஹாராஜா அல்லது இந்தியா கவர்ன்மெண்டாருடைய பிரதிநிதிக்கு முன்பாகவாவது கையெழுத்திட்டு அப்படிப்பட்ட அதிகாரியினால் உறுதி செய்யப்பட்ட வகாலத்து நாமா:

ஆனால், இந்தப் பிரிவு (a), (b) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் கண்டிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு வகாலத்து நாமாவிலே கையெழுத்து செய்வதற்காக யாதொரு ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸிலாவது கோர்ட்டிலாவது ஹாஜராகும்படி, அடியில்கண்டிருக்கிற நபர்களை வரவழைக்கக்கூடாது அவர்கள் யாரென்றால்:—

(i) அபாயம் அல்லது மிகுந்த அசௌகரியமில்லாமல் ஹாஜராவதற்குத் தேக அசக்தியினாலே கூடாமையாயிருக்கிறவர்கள் ;

(ii) ஸிவில் அல்லது க்ரிமினல் கட்டளையைக்கொண்டு ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் ;

(iii) கோர்ட்டில் நேராய் ஹாஜராகவேண்டியதில்லையென்று சட்டத்தினாலே நிவர்த்திசெய்யப்பட்டவர்கள்.

(2) அப்படிப்பட்ட பிரதி நபரின் விஷயத்திலும், சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி ரெஜிஸ்ட்ராராவது ஸப்-ரெஜிஸ்ட்ராராவது மாஜிஸ்ட்

ரேட்டாவது பிரதான புருஷனைப் பொருள்படுகிறவர்களால் மனதார எழுதிக்கொடுக்கப்பட்ட வகாலத்து நாமா தானென்று தாம் திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டால், அப்படிப்பட்டவரை ஜெயில் ஆபீஸ்அல்லது கோர்ட்டுக்கு வரவழைக்காமல் அந்த வகாலத்து நாமாவில் அத்தாட்சிக் கையெழுத்து செய்துகொடுக்கலாம்.

(3) அப்படி மனதார எழுதிக்கொடுக்கப்பட்டதுதானென்று தெரிந்துகொள்ளுவதற்காக ரெஜிஸ்ட்ராராவது ஸப்-ரெஜிஸ்ட்ராராவது மாஜிஸ்ட்ரேட்டாவது பிரதான புருஷனைப் பொருள்படுகிறவனுடைய வீட்டுக்காகிலும் அவன் வைக்கப்பட்டிருக்கிற ஜெயிலுக்காகிலும் தானே நேரப்போய் அவனை விசாரணை செய்யலாம்; அல்லது அப்படிப்பட்டவனை விசாரணை செய்வதற்கு யாருக்காகிலும் கம்மிஷனென்னுங் கட்டளை கொடுக்கலாம்.

(4) இந்தப் பிரிவில் கண்டிருக்கிற யாதொரு வகாலத்து நாமா - அதற்காக இதில் முன்னமே கண்டிருக்கிற நபர் அல்லது கோர்ட்டாருக்கு முன்பாக கையெழுத்து பண்ணப்பட்டு, அவரால் உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அதன்மேல் எழுதியிருப்பதனுல்பொருள்படுமாகில் அப்படிப்பட்ட வகாலத்துநாமாவைக் கொண்டுவந்துகொடுத்தவுடனே வேறே ருஜூகேளாமல் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

ரெஜிஸ்டர்செய்வதற்கு முன்னமே ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் செய்ய வேண்டிய விசாரணை.

34. (1) இந்த பாகத்திலும், 41, 43, 45, 69, 75, 77, 88, 89- வது பிரிவுகளிலும் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின் படிக்குத் தவிர, யாதொரு தஸ்தவேஜை எழுதிக்கொடுக்கிறவர்களாவது அவர்களுடைய பிரதிநிதிகளாவது ஒப்படைக்காரர்களாவது மேற்சொல்லியபடி அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளாவது ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்கு முன்பாக, கொண்டுவந்து கொடுப்பதற்கு 23, 24, 25, 26-வது பிரிவுகளின்படி ஏற்படுத்தப்பட்ட காலத்திற்குள் ஹாஜரானுலொழிய, அப்படிப்பட்ட தஸ்தவேஜு இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்படாது.

ஆனால், மிகுந்த அவசரத்தைப்பற்றியாவது விதியில்லாமல் நேரிட்ட இடையூறைப்பற்றியாவது அப்படிப்பட்டவர்களெல்லோரும் அப்படி ஹாஜராகாவிட்டால், ஹாஜராவதற்குண்டான ஆலசியம் நான்கு மாதத்திற் மிஞ்சப்படாத விஷயங்களில், ரெஜிஸ்ட்ராரானவர் - 25 வது பிரிவின்படி ஏதாவது அபராதம் செலுத்தப்படத் தக்கதாயிருந்தால் அதனுடன்கூட, கிரமமான ரெஜிஸ்ட்ரேஷன் கட்-

டணத்தொகைக்குப் பத்தத்தனைக்கு அதிகப்படாமல் அபராதஞ் செலுத்தப்படுவதன்பேரில், அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணும் படி உத்தரவு செய்யலாம்.

(2) ஏககாலத்திலாவது வெவ்வேறு காலங்களிலாவது (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஹாஜராகலாம்.

(3) அதற்குமேல் ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர்–

(a) அப்படிப்பட்ட தஸ்தவேஜை யார் எழுதிக்கொடுத்ததாகப் பொருள்படுகிறதோ அவர்கள் அதில் கையெழுத்து செய்திருக்கிறார்களா இல்லையா என்று விசாரணை செய்ய வேண்டும்.

(b) (அந்த தஸ்தவேஜில் கையெழுத்து செய்ததாகப்பொருள் படுகிறவர்கள்) தமக்கு முன் ஹாஜராகி அந்த தஸ்தவேஜை எழுதிக் கொடுத்தோமென்று சொல்லுகிறவர்கள் தாமென்று திருப்திகரமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

(c) பிரதிநிதியாகவாவது ஒப்படைக்காரராகவாவது ஏஜென்டாகவாவது ஹாஜராகிறவர் விஷயத்தில், அவர் அப்படி ஹாஜராவதற்கு அதிகாரமுண்டாவென்று திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள விலக்கான நிபந்தனையின் பிரகாரம் உத்தரவு பண்ணும்படி செய்துகொள்ளுகிற மனுவை ஒரு ஸப்-ரெஜிஸ்ட்ராரிடத்திலே ஒப்பிக்கலாம்; அவர் தாம் உட்பட்டிருக்கிற ரெஜிஸ்ட்ராரிடத்திற்கு அதை உடனே அனுப்ப வேண்டும்.

(5) இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் டிக்ரிகள் அல்லது உத்தரவுகளின் நகல்களுக்குப் பிரயோகப்படாது.

முறையே எழுதிக் கொடுத்ததுண்டென்று ஒப்புக்கொள்ளுவதன் மேலும் எழுதிக் கொடுத்ததில்லையென்று சொல்வதன்மேலும் நடவடிக்கை.

35. (1) (a) தஸ்தவேஜை எழுதிக்கொடுத்தவர்களெல்லோரும் ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தருக்கு முன்பாக நேராய் ஹாஜராகி அவர்களை அந்த உத்தியோகஸ்தர் நேரில் அறிந்திருந்தாவது அல்லது தாங்கள் யாரானவர்களென்று சொல்லுகிறவர்கள் இவர்கள்தானென்று வேறேவிதமாய்த் திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டிருந்து, அதற்குமேல் அவர்களெல்லோரும் அந்த தஸ்தவேஜை எழுதிக்கொடுத்ததுண்டென்று ஒப்புக்கொண்டாலும்,

(b) எவருக்காகவாவது பிரதிநிதியாகிலும் ஒப்படைக்காரராகிலும் ஏஜெண்டாகிலும் ஹாஜரானால் அப்படி ஹாஜராகிறவர் அந்த தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததுண்டென்று ஒப்புக்கொண்டாலும்,

(c) தஸ்தவேஜு எழுதிக்கொடுத்தவர் இறந்துபோயிருந்து, அவருடைய பிரதிநிதியாகிலும் ஒப்படைக்காரராகிலும் ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்கு முன்பாக ஹாஜராகி அந்த தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததுண்டென்று ஒப்புக்கொண்டாலும்,

ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர் 58-வது பிரிவுமுதல் 61-வது பிரிவு உட்பட அதுவரையிலுள்ள பிரிவுகளில் உத்தரவு செய்திருக்கிறபடி அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணவேண்டும்.

(2) ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர்-தமக்குமுன்பாக ஹாஜராயிருக்கிறவர்கள் சொல்லுகிறபடி பலானவர்கள் அவர்கள்தானென்று தாம் திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டாகிலும், இந்த ஆக்டிற் சொல்லியிருக்கிற வேறே யாதொரு காரியத்துக்காகவாகிலும், தம்முடைய ஆபீஸில் வந்திருக்கிற யாதாமொருவரைப் பரிசீலனை செய்யலாம்.

(3) (a) தஸ்தவேஜை யார் எழுதிக்கொடுத்தாகப் பொருள்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர் அதை எழுதிக்கொடுத்ததில்லையென்று சொன்னாலும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு நபர் மைனராகவாவது உன்மத்தரர்கவாவது பைத்தியக்காரராகவாவது ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தருக்குக் காணப்பட்டாலும்,

(c) தஸ்தவேஜை யார் எழுதிக்கொடுத்ததாகப் பொருள்படுகிறதோ அந்த நபர் இறந்துபோயிருந்து, அவருடைய பிரதிநிதியாவது ஒப்படைக்காரராவது அதை எழுதிக்கொடுத்ததில்லையென்று சொன்னாலும்,

ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர் அப்படி எழுதிக்கொடுத்ததில்லையென்று சொல்லுகிறவரைக் குறித்ததாகவாவது அப்படி காணப்படுகிறவரைக் குறித்ததாகவாவது அப்படி இறந்துபோனவரைக் குறித்ததாகவாவது அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணமாட்டேனென்று மறுத்துவிடவேண்டும்.

ஆனால், அந்த உத்தியோகஸ்தர் ரெஜிஸ்ட்ராராயிருந்தால், அவர் இந்த ஆக்ட் 12-ம்பாகத்தில் சொல்லியிருக்கிற நடவடிக்கையை அனு

சரிக்கவேண்டும். மேலும், அந்தந்த பிரதேசகவர்ன்மெண்டார்-பிரதேச சர்க்கார் கெஜெட்டில்விளம்பரமூலமாய் குறிப்பிட்டயாதொரு ஸப்-ரெஜிஸ்ட்டரார், தஸ்தவேஜை எழுதிக்கொடுத்ததில்லை என்று மறுக்கப்படுகிறவிஷயத்திலே, 12-ம்பாகத்தின்படிக்கும் இந்தஉட்பிரிவின்காயங்களுக்காகவும் ஒரு ரெஜிஸ்ட்டராக இருப்பதாய் எண்ணப்படவேண்டுமென்று விளம்பரம் பிரஸித்தம் செய்யலாம்.

7-ம் பாகம்.

எழுதிக்கொடுத்தவர்களையும் சாட்சிகளையும் வரும்படி பலவந்தப்படுத்துவது.

எழுதிக்கொடுத்தவரையாவது சாட்சியையாவது வரவழைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டால் இன்னது செய்யப்படுமென்பது.

36. ரெஜிஸ்டர் செய்யும்படி யாதொரு தஸ்தவேஜைக்கொண்டுவந்து கொடுக்கிறவராவது அப்படி கொண்டுவந்து கொடுக்கப்படத்தக்கதாயிருக்கிற யாதொரு தஸ்தவேஜினால் பாத்தியதை அடைந்திருக்கிறவராவது அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதற்கு இன்னொருடைய ஹாஜர் அல்லது சாட்சியம் வேண்டியிருக்கிற படியால், அவரை வரவழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், அப்படிப்பட்டவருக்கு ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸில் நேராய் ஹாஜராகச்சொல்லியாவது அவருக்காகக் கிரமமாய் அதிகாரம்பெற்ற ஏஜெண்டை அனுப்பச்சொல்லியாவது சம்மன் பிறப்பிக்கும்படி, இந்த விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது உத்தரவுசெய்கிற அதிகாரிஅல்லது கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாம். அவர் நேராய் ஹாஜராகவேண்டியதோ அல்லது அவருக்காக ஏஜெண்ட் ஹாஜராகலாமோ அதையும், இன்னகாலத்தில் ஹாஜராகவேண்டுமென்பதையும் ஸம்மனில் கண்டெழுதவேண்டும்.

அதிகாரியாவது கோர்ட்டாராவது ஸம்மன் பிறப்பித்து சேர்ப்பிப்பது.

37 அந்த அதிகாரியாவது கோர்ட்டாராவது அப்படிப்பட்ட விஷயங்களின்மேல் செலுத்தும்படியான தயாதா கட்டணத்தை வரப்பற்றிக்கொள்வதன்மேல், அப்பிரகாரமே ஸம்மன் பிறப்பித்து, யாரை அப்படி ஹாஜராகச் சொல்லியிருக்கிறதோ அந்த நபருக்கு அதைச் சேர்ப்பிக்கவேண்டும்.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸுக்கு வராதபடி நிவர்த்திக்கப்பட்டவர்கள்.

38. (1) (a) அபாயமும் மிகுந்த அசௌகரியமுமில்லாமல் ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸில் ஹாஜராவதற்கு தேக அசக்தியினாலே கூடாமையாயிருக்கிறவரையும்,

(b) ஸிவில் அல்லது க்ரிமினல் கட்டளையின்படி ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறவரையும்,

(c) அடுத்தஇதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனையில்லாவிட்டால், ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸில் நேராய் ஹாஜராகும்படி உத்தரவு செய்யப்படும்படியானவர்களுக்குள்ளே கோர்ட்டில் நேராய் ஆஜராகவேண்டியதில்லையென்று சட்டத்தினாலே நிவர்த்தி செய்யப்பட்டவர்களையும்,

அப்படி ஆஜராகச் சொல்லி வரவழைக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட பிரதி நபரின் விஷயத்திலும், ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரானவர் நேராய் அப்படிப்பட்டவர்களுடைய வீட்டுக்காவது அவர்கள் வைக்கப்பட்டிருக்கிற ஜெயிலுக்காவது போய் அவர்களை விசாரணைசெய்யவேண்டும், அல்லது அப்படிப்பட்டவர்களை விசாரணைசெய்யும்படி யாருக்காவது கம்மிஷனென்னுங்கட்டளை பிறப்பிக்கவேண்டும்.

ஸம்மனுக்கும் கம்மிஷனுக்கும் சாட்சிகளுக்கும் சம்பந்தப்படுகிற சட்டதிட்டங்கள்.

39. ஸிவில்கோர்ட்டுகளில் நடக்கிற வியாஜ்ஜியங்களிலே பிறப்பிக்கப்படுகிற ஸம்மனைக்குறித்தும் கம்மிஷன் என்னும் கட்டளையைக்குறித்தும் சாட்சிகளை வரும்படி கட்டாயப்படுத்துவதைக்குறித்தும் அவர்களுக்குப் படிச்செலவு கொடுப்பதைக்குறித்தும் அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற சட்டதிட்டங்கள் - மேற்சொல்லியபடிக்குத்தவிர, அவசியமான மாறுதலுடனே, இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி பிறப்பிக்கப்பட்ட ஸம்மனுக்கும் கம்மிஷனுக்கும், ஆஜராகும்படி சம்மன் செய்யப்பட்ட யாதொரு நபருக்கும் பிரயோகப்படவேண்டும்.

8-ம் பாகம்.

மரணசாஸனங்களையும் ஸ்வீகாரஞ்செய்துகொள்வதற்கான அதிகார பத்திரங்களையும் கொண்டுவந்து கொடுப்பதைக்குறித்து.

மரணசாஸனங்களையும் ஸ்வீகாரஞ் செய்துகொள்வதற்கான அதிகாரப் பத்திரங்களையும் கொண்டுவந்து கொடுக்கச் சுதந்தரமுடையவர்கள்.

40. (1) மரணசாஸன மெழுதிவைத்திருக்கிறவராவது, அவரிறந்த பின்பு மரணசாஸனப்படி எக்ஸிக்யூடராகவாகிலும் வேறே எவ்விதமாயாகிலும் பாத்தியமடைந்திருக்கிற யாதொரு நபராவது அந்த மரணசாஸனத்தை ரெஜிஸ்டர் செய்யும்படி யாதொரு ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ராரிடத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கலாம்;

(2) ஸ்வீகாரஞ் செய்துகொள்வதற்கான யாதொரு அதிகாரபத்திரத்தை எழுதிக்கொடுத்தவராவது அவரிறந்தபின்பு எழுதிக்கொடுக்கப்பெற்றுக் கொண்டவராவது ஸ்வீகரிக்கப்படும் அந்த புத்திரனாவது அந்த அதிகாரப்பத்திரத்தை ரெஜிஸ்டர்செய்யும்படி யாதொரு ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ராரிடத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கலாம்.

மரணசாஸனங்களையும் ஸ்வீகாரஞ் செய்து கொள்வதற்கான அதிகாரபத்திரங்களையும் ரெஜிஸ்டர் செய்வது.

41. (1) யாதொரு மரணசாஸனமாவது ஸ்வீகாரஞ்செய்துகொள்வதற்கான அதிகாரபத்திரமாவது அந்த மரணசாஸன மெழுதிவைத்தவராலாகிலும் அந்த அதிகாரபத்திரமெழுதிக் கொடுத்தவராலாகிலும், ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்து கொடுக்கப்படுமாகில், அதை வேறே யாதொரு தஸ்தவேஜைப் போலவே ரெஜிஸ்டர் செய்யலாம்.

(2) யாதொரு மரணசாஸனமாவது ஸ்வீகாரஞ் செய்துகொள்வதற்கான அதிகாரபத்திரமாவது - அதை ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்து கொடுப்பதற்கு சுதந்தரமுடைய வேறே எவராலாகிலும் ரெஜிஸ்டர் செய்யக் கொண்டுவந்து கொடுக்கப்படுமாகில்—

(a) மரணசாஸனமானால் அதை எழுதிவைத்தவராலும், அதிகாரபத்திரமானால் அதை எழுதிக்கொடுத்தவராலும் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறதென்றும்;

(b) மரணசாஸன மெழுதிவைத்தவராவது அதிகாரபத்திர மெழுதிக்கொடுத்தவராவது இறந்துபோனாரென்றும்;

(c) மரணசாஸனம் அல்லது அதிகாரபத்திரத்தைக் கொண்டு வந்துகொடுக்கிறவர் 40-வது பிரிவின்படி அதைக்கொண்டு வந்துகொடுக்கச் சுதந்தரமுடையவர் தானென்றும்,

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால் அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டும்.

9-ம் பாகம்.

மரணசாஸனங்களைக் கட்டிவைப்பதைக்குறித்து.

மரணசாஸனங்களை கட்டிவைப்பது.

42. யாதொரு மரணசாஸனமெழுதிவைத்தவர் அந்த மரணசாஸனத்தை ஒரு உறையில்போட்டு முத்திரை செய்து, தம்முடைய பெயரையும் தமக்கு ஏஜெண்ட் (யாராவதிருந்தால்) அவருடைய பெயரையும் அந்த தஸ்தவேஜு இப்படிப்பட்டதென்பதையும், அந்த உறையின் மேலெழுதி நேராய் அவராவது அவருக்காகக் கிரமமாய் அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது கொண்டுவந்து யாதொரு ரெஜிஸ்ட்ராரிடத்தில் கட்டிவைக்கலாம்.

மரண சாஸனங்களைக் கட்டிவைப்பதன்மேல் நடவடிக்கை.

43. (1) அப்படிப்பட்ட உறையை வரப்பற்றிக்கொள்வதன் மேல் ரெஜிஸ்ட்ராரானவர் அதைக் கட்டிவைக்கக் கொண்டுவருகிறவர் அந்த மரணசாஸனமெழுதிவைத்தவரென்றாவது அவருடைய ஏஜெண்டென்றாவது திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டால், அவர் அப்படி உறையின்மேல் எழுதியிருப்பதைத் தம்முடைய 5-ம் நெ. ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு, எந்த வருஷம் மாதம் தேதியில் எத்தனைமணிக்கு அப்படி கொண்டுவந்து கொடுக்கப்பட்டு அப்படி வரப்பற்றிக்கொள்ளப்பட்டதோ அதையும், மரணசாஸனமெழுதிவைத்தவர் அல்லது அவருடைய ஏஜெண்டாயிருப்பவர் தானென்று ருஜுப்படுத்துகிறவர்களுடைய பெயரையும், உறையின் முத்திரையின்மேல் தெளிவாய் ஏதாவது வரைந்திருந்தால் அதையும் அந்த புஸ்தகத்திலும் மேற்படி உறையின் மேலும் குறித்துக்கொள்ளவேண்டும்.

(2) பின்பு ரெஜிஸ்ட்ராரானவர் முத்திரையிட்ட உறையைத் தீபிடிக்காத தம்முடைய பெட்டியில்போட்டு வைத்திருக்கவேண்டும்.

44. அப்படிப்பட்ட உறையைக் கட்டிவைத்தவராகிய மரணசாஸனமெழுதியவர் அதை மறுபடி வாங்கிக்கொள்ளவேண்டுமென்று விரும்பினால், அந்த உறை யாரிடத்தில் அப்படி கட்டிவைக்கப்பட்டிருக்கிறதோ அந்த ரெஜிஸ்ட்ராருக்கு நேராகவாவது கிரமமாய் அதிகாரம் பெற்ற ஏஜெண்ட் மூலமாயாவது மனுசெய்துகொள்ளலாம்; அந்தமனுதாரர்வாஸ்தவமாய் மரண சாஸனமெழுதினவர்தானென்றாவது அவருடைய ஏஜெண்ட்தானென்றாவது அந்த ரெஜிஸ்ட்ரார் திருப்திகரமாய்த்தெரிந்துகொண்டால், அவர் அப்பிரகாரமே அந்த உறையை ஒப்பித்துவிடவேண்டும்.

42-வது பிரிவின்படி கட்டிவைக்கப்பட்ட முத்திரையிட்ட உறையை மறுபடி வாங்கிக் கொள்வது.

45. (1) முத்திரைசெய்யப்பட்ட உறையை 42-வது பிரிவின்படி கட்டிவைத்தவராகிய மரண சாஸனமெழுதினவர் இறந்துபோவதன்மேல் அது யாரிடத்தில் கட்டிவைக்கப்பட்டிருக்கிறதோ அந்த ரெஜிஸ்ட்ராருக்கு அதைத் திறக்கும்படி மனுசெய்துகொள்ளப்படுகிற பட்சத்தில், அவர் மரணசாஸனமெழுதினவர் இறந்துபோனாரென்று திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளுவாராகில் மனுதாரரின் முன்னிலையில் அந்த உறையைத்திறந்து அதனுள்ளே இருக்கிற தஸ்தவேஜையெடுத்து, தம்முடைய 3-ம் நெ. புஸ்தகத்திலே மனுதாரருடைய செலவில் அதற்கு நகலெழுதுவித்துக் கொள்ளவேண்டும்.

கட்டிவைத்தவர் இறந்துபோனால் நடவடிக்கை.

(2) அப்படி நகலெழுதியான பின்பு, அந்தரெஜிஸ்ட்ரார் அந்த அசல் மரணசாஸனத்தைத் தம்மிடத்தில் மறுபடி கட்டிவைத்துவைக்கவேண்டும்.

46. (1) 1865-ம்வருஷத்திய இந்துதேசத்துத் தாயபாக ஆக்ட் 259-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்காவது, ப்ரொபேட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையுங் குறித்த 1881-ம்வருஷத்திய ஆக்டின் 81-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்காவது யாதொருமரணசாஸனத்தைக் கொண்டுவந்து காட்டும்படி உத்தரவு மூலமாய்க் கட்டாயப்படுத்த யாதொரு கோர்ட்டாருக்குண்டாகிய அதிகாரத்துக்காவது, இதில் முன்னமே சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலும் பாதகமுண்டாகமாட்டாது.

சில சட்ட திட்டங்களுக்கும் கோர்ட்டார்களின் அதிகாரங்களுக்கும் பாதகமில்லையென்பது.

(2) அப்படிப்பட்ட யாதொரு உத்தரவு செய்யப்படும்போது, ரெஜிஸ்ட்ராரானவர் 45-வது பிரிவின்படி அந்த மரண சாஸனத்துக்கு முன்னதாகவே நகலெழுதிக்கொண்டிருந்தாலொழிய அந்தஉறையைத் திறந்து, அந்த மரண சாஸனத்துக்கு தம்முடைய 3-ம் நெ. புஸ்தகத்தில் நகலெழுதுவித்துக்கொண்டு, மேற்சொல்லிய உத்தரவை அனுசரித்து அசல் பிரதி கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்று அந்த நகலின்மேல் குறித்துக்கொள்ளவேண்டும்.

10-ம் பாகம்.

ரெஜிஸ்டராவதனுலும் ரெஜிஸ்டராகாமையினுலும் உண்டாகும் பயன்களைக்குறித்து.

ரெஜிஸ்டரான தஸ்தவேஜு இன்னகால முதல் செலாவணியாகுமென்பது.

47. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜானது ரெஜிஸ்டரான காலமுதற்கொண்டல்லாமல், அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டிய அவசியமில்லாதிருந்தாலும் அது ரெஜிஸ்டர் செய்யப்படாதிருந்தாலும் எந்தக் காலமுதற்கொண்டு செலாவணியாகத் தொடங்கி யிருக்குமோ அந்தக்கால முதற்கொண்டே செலாவணியாகி வரவேண்டும்.

சொத்தைக் குறித்து ரெஜிஸ்டராயிருக்கிற தஸ்தவேஜுகளினலே இன்னபடிக்காகுல் வாய்மொழி உடன்படிக்கைகள் பயன்படாமற் போகுமென்பது.

48. மரண சாஸனம் தவிர, யாதொரு அசையும்பொருளைக் குறித்தாவது அசையாப்பொருளைக் குறித்தாவது இந்த ஆக்டின்படி கிரமமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சகல தஸ்தவேஜுகளும், அதே சொத்தைக்குறித்து வாய்மொழி உடன்படிக்கையாவது நிச்சயமாவது செய்யப்பட்டிருந்தபோதிலும், அந்த உடன்படிக்கை அல்லது நிச்சயத்தோடுகூடவாவது பின்னிட்டாவது சொத்து ஸ்வாதீனஞ் செய்யப்பட்டிருந்தாலொழிய, அது பயனற்றுப்போய், அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளெல்லாம் பயன்படத்தக்கவைகளாகும்.

ரெஜிஸ்டராகவேண்டிய தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்யாதிருந்தால் இன்னதாகுமென்பது.

49. ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று 17-வது பிரிவில் சொல்லியிருக்கிற யாதொரு தஸ்தவேஜானது—

இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலொழிய—

(a) அதில் கண்டிருக்கிற யாதொரு அசையாப்பொருளை அது பாதிக்கவுமாட்டாது.

(b) ஸ்வீகாரஞ்செய்துகொள்ள யாதொரு அதிகாரத்தை உண்டுபண்ணவுமாட்டாது.

(c) அப்படிப்பட்ட சொத்தைக்குறித்த அல்லது அப்படிப்பட்ட அதிகாரத்தை யுண்டுபண்ணுகிற யாதொரு காரியத்துக்குச்சாட்சியாக ஏற்றுக்கொள்ளவும்படாது.

நிலத்தைக் குறித்த ரெஜிஸ்டரான சில தஸ்தவேஜுகளினால் ரெஜிஸ்டராகாத தஸ்தாவேஜுகள் பயன்படாமற் போகுமென்பது.

50. (1) 17-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த **(a), (b), (c), (d)** அடையாளமிட்ட பகுதிகளிலும் 18-வது பிரிவு **(a), (b)** குறிப்பிட்ட உட்பிரிவுகளிலும் கண்டிருக்கிற வகையான பிரதி தஸ்தவேஜும் கிரமமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால், அதில் கண்டிருக்கிற சொத்தைக்குறித்து டிக்ரி அல்லது உத்தரவல்லாமல் வேறே தஸ்தவேஜு பிறந்திருந்து அது ரெஜிஸ்டராகாதிருக்கிற பட்சத்தில், அந்த வேறு தஸ்தவேஜானது ரெஜிஸ்டரான தஸ்தவேஜு எப்படிப்பட்டதோ அத்தன்மையுள்ளதாயிருந்தாலு மிராவிட்டாலும் அது பயனற்றுப்போய், அதே சொத்தைக் குறித்து அந்த ரெஜிஸ்டரான தஸ்தவேஜே பயன்படத்தக்கதாகும்.

(2) 17-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையின்படி நிவர்த்திசெய்யப்பட்ட குத்தகை அல்லது வாடகைச் சீட்டுகளுக்காவது, அதே பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கிற தஸ்தவேஜுகளுக்காவது, இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குகையில் செலாவணியாய்க்கொண்டிருந்த சட்டதிட்டத்தின்படி முந்திய சுதந்தரம் பெற்றிராத ரெஜிஸ்டரான யாதொரு தஸ்தவேஜுக்காவது (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள தெதுவும் பிரயோகப்படமாட்டாது.

விவரணம்.—1864-ம் ஹூ த்து 16-வது ஆக்டாவது 1866-ம் ஹூ த்து 20-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டாவது அப்படிப்பட்ட ரெஜிஸ்டராகாத தஸ்தவேஜு எவ்விடத்தில் எக்காலத்திலே எழுதிக்கொடுக்கப்பட்டதோ அவ்விடத்தில் அக்காலத்திலே வழங்கிக்கொண்டிருந்த பட்சத்தில் "ரெஜிஸ்டராகாத" என்

பது அந்த ஆக்டின் பிரகாரம் ரெஜிஸ்டர் செய்யப்படாததென்றும் 1871-ம்ஷு ஜூலைமீ 1ஃ-க்குப் பின்பு அந்த தஸ்தவேஜு எழுதிக் கொடுக்கப்படுகிற பட்சத்தில் 1871-ம்ஷுத்து 8-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படிக்காவது 1877-ம்ஷுத்து 3-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் படிக்காவது இந்த ஆக்டின்படிக்காவது ரெஜிஸ்டர் செய்யப்படாததென்றும் அர்த்தமாகும்.

11-ம் பாகம்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களையும் அதிகாரங்களையுங் குறித்து.

(A) ரெஜிஸ்டர் புஸ்தகங்களையும் அட்டவணைகளையும் குறித்து.

அந்தந்த ஆபீஸிலே வைத்திருக்க வேண்டிய ரெஜிஸ்டர் புஸ்தகங்கள்.

51. (1) இதில் பின்னால் கண்டிருக்கிற அந்தந்த ஆபிஸிலே வைத்திருக்கவேண்டிய புஸ்தகங்கள் எவையெண்றால்—

A.—எல்லா ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸுகளிலும்—

1-வது புஸ்தகம்—"அசையாப்பொருளைக் குறித்த மரண சாஸனமல்லாத தஸ்தவேஜுகளின் ரெஜிஸ்டர்";

2-வது புஸ்தகம்—"ரெஜிஸ்டர் செய்ய நிராகரிப்பதற்குண்டான ஹேதுக்களைப்பற்றிய ரெகார்ட்";

3-வது புஸ்தகம்—"மரண சாஸனங்கள் ஸ்வீகாரஞ்செய்து கொள்வதற்கான அதிகாரபத்திரங்கள் ஆகிய இவற்றின் ரெஜிஸ்டர்";

4-வது புஸ்தகம்—"பலவகைப்பட்ட ரெஜிஸ்டர்";

B—ரெஜிஸ்ட்ரார்களுடைய ஆபிஸுகளில்—

5-வது புஸ்தகம்—"மரணசாஸனங்களைக் கட்டிவைப்பதற்கான ரெஜிஸ்டர்."

(2) 1-வது புஸ்தகத்திலே 17-வது, 18-வது, 89-வது பிரிவுகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு மரணசாஸன மல்லாமல் அசையாப்பொருளைக் குறித்ததாயிருக்கிற சகல தஸ்தவேஜுகள் அல்லது யாதாஸ்துகளையும் பதிவுசெய்யவேண்டும் அல்லது தாக்கல் பண்ணவேண்டும்.

(3) 4-வது புஸ்தகத்திலே—18-வது பிரிவு (d), (f) குறிப் பிட்ட உட்பிரிவுகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, அசையாப்பொரு ளுக்குச் சம்பந்தப்படாததாயிருக்கிற சகல தஸ்தவேஜுகளையும் பதிவு செய்யவேண்டும்.

(4) இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிறதெனுலும், ரெஜிஸ்ட் ராருடைய ஆபிஸ் யாதொரு ஸப்ரெஜிஸ்ட்ராருடைய ஆபிஸோடு சேர்த்துவிடப்படுமாகில், ஒரு ஜதை புஸ்தகங்களைவிட அதிகமாக வைத்திருக்கவேண்டுமென்று எண்ணங்கூடாது.

தஸ்தவேஜு கொண்டுவந்து கொடுக்கப்படும்போது ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர்கள் செய்யவேண்டியவை.

52. (1) (a) ரெஜிஸ்டர் செய்யும்படி யாதொரு தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக் கிற தேதியையும் மணிநேரத்தையும் இடத்தையும் அதைக் கொண்டுவந்து கொடுக்கும்போதே அந்த அந்த தஸ்தவேஜின்மேல் எழுதி, அதைக்கொண்டு வந்து கொடுத்தவருடைய கையெழுத்தாகவேண் டும்;

(b) ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர் அப்படிப் பட்ட தஸ்தவேஜுக்காக அதைக்கொண்டுவந்து கொடுக் கிற நபருக்கு ரசீது கொடுக்கவேண்டும்;

(c) மேலும் 62-வது பிரிவில் சொல்லியிருக்கிற நிபந்தனை களுக்குட்பட்டு, ரெஜிஸ்டர்செய்ய ஏற்றுக்கொள்ளப் பட்ட பிரதி தஸ்தவேஜையும் அது ஏற்றுக்கொள்ளப் பட்ட வரிசைக்கிரமப்படி அதற்குரிய புஸ்தகத்தில் வீணை ஆலசியஞ்செய்யாமல் நகலெழுதிக்கொள்ள வேண்டும்.

(2) அப்படிப்பட்ட புஸ்தகங்களுக்கெல்லாம் அப்போதைக்கப் போது இன்ஸ்பெக்டர்-ஜெனரல் நிர்ணயிக்கிற மத்தியகாலங்களிலே அவர் ஏற்படுத்துகிற விதமாய் அத்தாட்சி கையெழுத்து பண்ண வேண்டும்.

பதிவுகளுக்குத் தொடர்ச்சியாய் இலக்கம்போடுவது.

53. அந்தந்த புஸ்தகத்தில் செய்யப்படுகிற சகல பதிவுகளுக் கும் தொடர்ச்சியாய் லக்கம்போடவேண்டும். அந்த லக்கத்தை வருஷாரம்பமுதற்கொண்டு ஒன்று முதலாகத் தொடர்ச்சியாய்ப் போட்டுக்கொண்டே வந்து வருஷக்கடைசில் விட்டுவிடவேண்டும்;

அந்தப்படியே வருஷாவருஷம் ஆரம்பத்தில் ஒன்று முதலாகத் தொடர்ந்து கடைசியில் நிறுத்திவிடவேண்டும்.

உடனுக்குடனே அட்டவணை தயார் செய்து அதில் எழுதுவது.

54. இதில் முன்னமே கண்டிருக்கிற புஸ்தகங்களில் எதுவாவது வைக்கப்பட்டிருக்கிற பிரதி ஆபிஸிலும் அந்தப் புஸ்தகங்களிலிருக்கிற சங்கதிகளுக்கு உடனுக்குடனே அட்டவணைகள் தயார்செய்யவேண்டும்; அந்த அட்டவணைகளில் எழுதவேண்டியதை அது சம்பந்தமான தஸ்தவேஜுக்கு ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் நகலெழுதிக்கொண்ட பின்பாவது அதற்கு ஒரு யாதாஸ்தை தாக்கல் செய்துகொண்ட பின்பாவது உடனே கூடுமான சீக்கிரத்தில் எழுதவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்கள் எழுதவேண்டிய அட்டவணையும் அந்த அட்டவணையிலே இன்னவை அடங்கியிருக்கவேண்டுமென்பதும்.

55. (1) எல்லா ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிசுகளிலும் அப்படிப்பட்ட அட்டவணைகள் நான்கு தயார்செய்து, முறையே 1-ம் நெ. அட்டவணை, 2-ம் நெ. அட்டவணை, 3-ம் நெ அட்டவணை, 4-ம் நெ. அட்டவணையென்று பெயர் வைக்கவேண்டும்.

(2) 1-ம் நெ. அட்டவணையிலே—1-ம் நெ. புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்ட அந்தந்த தஸ்தவேஜையாகிலும் தாக்கல் செய்யப்பட்ட யாதாஸ்தையாகிலும் எழுதிக்கொடுத்தவர்களெல்லோருடைய பெயர்கள் இருப்பிடம் முதலிய விவரங்களையும் எழுதவேண்டும்.

(3) 2-ம் நெ. அட்டவணையிலே—அப்படிப்பட்ட பிரதி தஸ்தவேஜையும் யாதாஸ்தையுங்குறித்து 21-வது பிரிவில் கண்டிருக்கிறபடி அப்போதைக்கப்போது அந்த விஷயமாய் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் உத்தரவுசெய்கிற விவரங்களை எழுதவேண்டும்.

(4) 3-ம் நெ. அட்டவணையிலே—3-ம் நெ. புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதி மரணசாஸனத்தையும் அதிகாரபத்திரத்தையும் எழுதிக்கொடுக்கிற சகலமானவர்களுடைய பெயர் இருப்பிடம் முதலிய விவரங்களையும், அதன்படி முறையே நியமிக்கப்பட்ட எக்ஸிக்யூடர்கள் நபர்கள் ஆகிய இவர்களின் பெயர் இருப்பிடம் முதலிய விவரங்களையும், மரணசாஸனமெழுதிவைத்தவராவது அதிகாரபத்திரம் கொடுத்தவராவது (இறந்துபோவதற்கு முன்னிட்டல்லாமல்) இறந்துபோனபின்பு, அந்த ஆதரவைக்கொண்டு தாவாசெய்யச் சுதந்தர

முடைய சகலமானவர்களுடைய பெயர் இருப்பிடம் முதலிய விவரங்களையும் எழுதவேண்டும்

(5) 4-ம் நெ. அட்டவணையிலே—4-ம் நெ. புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதி தஸ்தவேஜையும் எழுதிக்கொடுத்தவர்களும் அதனால் பாத்தியமடைகிறவர்களுமாகிய எல்லோருடைய பெயர் இருப்பிடம் முதலிய விவரங்களை எழுதவேண்டும்.

(6) ஒவ்வொரு அட்டவணையிலும் அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்டர்-ஜெனரல் உத்தரவு செய்கிற மற்ற விவரங்களை எழுத வேண்டியதுமல்லாமல் அவர் விதிக்கிற நமூனாப்படி அதைத் தயார் பண்ணவும் வேண்டும்.

1,2,3-ம் நெ. அட்டவணைகளில் எழுதி இருப்பவைகளுக்கு நகலை ரெஜிஸ்ட்ராருக்கு ஸப்ரெஜிஸ்டரார் அனுப்புவதும் அது சேர்த்து வைக்கப்பட வேண்டியதும்.

56. (1) அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவுசெய்கிற மத்திய காலங்களிலே பிரதி ஸப்ரெஜிஸ்ட்ராரும் அவ்வித மத்திய காலங்களிலே சடைசி மத்தியகாலத்தில் 1, 2, 3-ம் நெ. அட்டவணைகளில் தாம் பதிந்திருக்கிறவைகளுக்கெல்லாம் ஒருநகலை தாம் யாருக்கு உட்பட்டிருக்கிறாரோ அந்த ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்ப வேண்டும்.

(2) அப்படிப்பட்ட நகலை வரப்பற்றிக்கொள்ளுகிற பிரதி ரெஜிஸ்ட்ராரும் அதைத் தம்முடைய ஆபிஸில் சேர்த்துவைக்கவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்கள் சில புஸ்தகங்களையும் அட்டவணைகளையும் பார்வையிட விடுவதும் பதிவுகளுக்கு ஸெர்டிபை செய்யப்பட்ட நகல்கள் கொடுப்பதும்.

57. (1) 1, 2-ம் நெ. புஸ்தகங்களையும், 1-ம் நெ. புஸ்தகத்தைச் சேர்ந்த அட்டவணைகளையும் பார்வையிடவேண்டுமென்று மனுசெய்து கொள்ளுகிறவரை அதற்குண்டான கட்டணங்களை முன்னதாய்ச் செலுத்திய பின்பு அவைகளை எந்தக் காலத்திலும் பார்வையிட அனுமதி கொடுக்கவேண்டும்; 62-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, அப்படிப்பட்ட புஸ்தகங்களில் பதிந்திருக்கிறவைகளுக்கு நகல்கள் வேண்டுமென்று மனுசெய்து கொள்ளுகிறவர்களெல்லோருக்கும் அந்த நகல்கள் கொடுக்கவேண்டும்.

(2) அதே நிபந்தனைகளுக்குட்பட்டு, 3-ம் நெ. புஸ்தகத்திலும் அதைச்சேர்ந்த அட்டவணையிலும் பதிந்திருக்கிறவைகளுக்கு நகல்களை, அந்தந்த பதிவு சம்பந்தமான தஸ்தவேஜுகளை யெழுதிக்கொடுத்

தவர்களுக்கும் அல்லது அவர்களுடைய ஏஜெண்டுகளுக்கும், எழுதிக் கொடுத்தவர்கள் (இறந்துபோவதற்கு முன்னிட்டல்லாமல்) இறந்து போனபின்பு அப்படிப்பட்ட நகல்கள் வேண்டுமென்று மனுசெய்து கொள்ளுகிற யாதொரு நபருக்கும் கொடுக்கவேண்டும்.

(3) அதே நிபந்தனைகளுக்குட்பட்டு, 4-ம் நெ. புஸ்தகத்திலும் அதைச்சேர்ந்த அட்டவணையிலும் பதிந்திருக்கிறவைகளுக்கு நகல் களை அந்தந்த பதிவு சம்பந்தமான தஸ்தவேஜுகளை எழுதிக்கொடுத்த வருக்காவது, அவைகளைக்கொண்டு தாவா செய்ய பாத்தியமுடைய வருக்காவது அப்படிப்பட்டவருடைய ஏஜெண்ட் அல்லது பிரதி நிதிக்காவது கொடுக்கவேண்டும்.

(4) 3, 4-ம் நெ. புஸ்தகங்களிலுள்ள பதிவுகளை இந்தப் பிரி வின்படி தேடி எடுக்கவேண்டியிருந்தால் அதை, ரெஜிஸ்டர் பண்ணு கிற உத்தியோகஸ்தரே செய்யவேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட நகல்களுக்கெல்லாம் ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் கையெழுத்துபண்ணி முத்திரை போடவேண்டும்; அப்படிப்பட்ட நகல்கள் அசல் தஸ்தவேஜுகளி லுள்ள சங்கதிகளை ருஜுப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவைகளாகும்.

(B) ரெஜிஸ்டர்செய்ய ஏற்றுக்கொண்ட பின்பு நடத்த வேண்டியதைக் குறித்து.

ரெஜிஸ்டர் செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட தஸ்தவேஜுகளின்மேல் எழுதவேண்டிய விவரங்கள்.

58. (1) டிக்ரி அல்லது உத்தரவின் நகலாவது 89-வது பிரிவின் படி ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்கு அனுப்பப்பட்ட நகலாவது தவிர, ரெஜிஸ்டர் செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறே பிரதி தஸ்த வேஜின்மேலும் அப்போதைக்கப்போது எழுத வேண்டிய விவரங்களாவையென்றால் :—

(a) தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததாக ஒத்துக்கொள்ளுகிற பிரதி நபரினுடைய கையெழுத்தும் இருப்பிடமுதலிய விவ ரங்களும், அப்படி எழுதிக்கொடுத்ததை யாதொரு நப ருடைய பிரதிநிதியாவது ஒப்படைக்காராவது ஏஜெண்டா வது ஒப்புக்கொண்டால், அப்படி ஒப்புக்கொள்ளுகிற வருடைய கையெழுத்தும் இருப்பிட முதலிய விவரங்களும்;

(b) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளில் எதன்படிக்காவது, அப்படிப்பட்ட தஸ்தவேஜு சம்பந்தமாய் விசாரணை செய்யப்படுகிற பிரதி நபருடைய கையெழுத்தும் இருப்பிட முதலிய விவரங்களும்;

(c) தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததை அனுசரித்து ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்கெதிரிலே பணம் செலுத்தப்பட்டாலும் சரக்கு ஒப்பிக்கப்பட்டாலும் அதுவும், அப்படிப்பட்ட தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததை அனுசரித்து முழுவதுமாவது ஓர் பாகமாவது ஐவேஜு பெற்றுக்கொண்டதாக அவருக்கெதிரிலே ஒப்புக்கொள்வதும்.

(2) யாதொரு தஸ்தவேஜு எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொள்ளுகிறவரெவராவது அதை எண்டார்ஸ் பண்ணமாட்டேனென்று மறுத்தபோதிலும், ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர் அதை ரெஜிஸ்டர்செய்து, அப்படி மறுத்ததைக்குறித்து அப்போதே மேலே குறிப்பெழுதி வைக்கவேண்டும்.

எண்டார்ஸ்மெண்டுக்கு ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் தேதி போட்டுக் கையெழுத்துப் பண்ணவேண்டு மென்பது.

59. அதே தஸ்தவேஜு சம்பந்தமாய் 52-வது 58-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி அன்றையதினமே தமக்கெதிரில் செய்யப்பட்ட சகல எண்டார்சுமெண்டுகளுக்கும் ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் தேதிபோட்டுக் கையெழுத்து பண்ணவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்யப்பட்டதற்கான ஸெர்டிபிகேட்.

60. (1) 34, 35, 58, 59-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளில் ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜுக்குப் பிரயோகப்படுகிற நிபந்தனைகளின்படி செய்யப்பட்ட பின்பு ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் தஸ்தவேஜின் மேலே "ரெஜிஸ்டர் செய்யப்பட்டது" என்கிற வார்த்தைகளை எழுதவேண்டியதுமல்லாமல், அந்த தஸ்தவேஜு எதில் பெயர்த்தெழுதப்பட்டதோ அந்த புஸ்தகத்தின் நம்பரையும் ஏட்டிலக்கத்தையும் கூட எழுதவேண்டும்.

(2) அப்படி எழுதின ஸெர்டிபிகேட்டுக்கு ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் கையெழுத்தும் முத்திரையும் தேதியும் போடவேண்டும்; அப்படி செய்யப்பட்ட பின்பு, அது இந்த ஆக்டில் சொல்லி

யிருக்கிற விதமாய் அந்த தஸ்தவேஜு கிரமப்படி ரெஜிஸ்டர் செய்யப் பட்டதென்றும் 59-வது பிரிவிற்சொல்லிய எண்டார்ஸ்மெண்டில் கண்டிருக்கிற சங்கதிகள் அதில் கண்டிருக்கிறபடி நடந்திருக்கின்றன வென்றும் ருஜுபடுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

எண்டார்ஸ் மெண்டுகளுக்கும் ஸெர்டிபிகேட்டுக்கும் நகலெழுதுவதும் தஸ்தவேஜைத்திருப்பிக்கொடுத்து விடுவதும்.

61. (1) அதற்குப் பின்பு, 59-வது 60-வது பிரிவுகளில் கண்டு உதகரிக்கப்பட்டிருக்கிறபடி எண்டார்ஸ்மெண்டுகளுக்கும் ஸெர்டிபிகேட்டுக்கும் ரெஜிஸ்டர் புஸ்தகத்தின் ஓரத்திலே நகலெழுதிக் கொண்டு, 21-வது பிரிவில் கண்டிருக்கிறபடி உருவப்படம் அல்லது நக்ஷா (ஏதாவதிருந்தால்), அதற்கு நகலையும் 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்துகொள்ளவேண்டும்.

(2) இப்படியெல்லாம் செய்தபின்பு அந்த தஸ்தவேஜுக்கு ரெஜிஸ்டர் பூர்த்தியானதாக எண்ணப்படும்; பின்பு அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யும்படி கொண்டுவந்து கொடுத்தவரிடத்திலாவது 52-வது பிரிவில் கண்டிருக்கிற ரீதின்பேரிலே வேறே (யாரிடத்திலாகிலும்) கொடுத்துவிடவேண்டியதென்று அவரெழுதியிருந்தால் அப்படிப்பட்டவரிடத்திலாவது திருப்பிக்கொடுத்து விடவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்குத் தெரியாத பாஷையில் எழுதியிருக்கிற தஸ்தவேஜு கொண்டுவந்து கொடுக்கப்பட்டதன்மேல் நடவடிக்கை.

62. (1) ரெஜிஸ்டர்செய்ய 19-வது பிரிவின்படி யாதொரு தஸ்தவேஜு கொண்டுவந்து கொடுக்கப்பட்டால், அந்த அசல் தஸ்தவேஜு எப்படிப் பட்டதோ அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளின் ரெஜிஸ்டரிலே தர்ஜுமாவை எழுதிக்கொண்டு, அதை 19-வது பிரிவில் கண்டிருக்கிற நகல் சகிதமாய் ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸிலே தாக்கல் செய்து கொள்ளவேண்டும்.

(2) 59-வது பிரிவில் கண்டிருக்கிற எண்டார்ஸ்மெண்டையும் 60-வது பிரிவில் கண்டிருக்கிற ஸெர்டிபிகேட்டையும் அசல் தஸ்தவேஜின்மேல் எழுதவேண்டும்; 57, 64, 65, 66-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற நகல்களையும் யாதாஸ்துகளையும் எழுதுவதற்காக தர்ஜுமாவை அசல் தஸ்தவேஜாக வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணஞ் செய்விப்பதற்கு அதிகா

63. (1) ரெஜிஸ்டர் செய்கிற பிரதி உத்தியோகஸ்தரும் தமக்கு யுக்தமாகத் தோற்றினால்

ரமும் வாக்கு மூல சங்கதியை எழுதி வைப்பதும்.

இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி தாம் விசாரணை செய்கிறவரெவரையாவது பிரமாணஞ்செய்விக்கலாம்.

(2) மேலும், அவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால் அப்படிப்பட்ட பிரதி நபரும் சொல்லுகிற வாக்குமூலத்தின் சங்கதியைக் குறிப்பாக எழுதிக்கொள்ளலாம்; அந்த வாக்குமூலத்தை அந்த நபருக்குப் படித்துக்காட்டவேண்டும்; அல்லது (அந்த நபருக்குத் தெரியாத பாஷையிலே அந்த வாக்குமூல மெழுதியிருந்தால்) அவர் அறிந்திருக்கிற பாஷையிலே அவருக்கு மொழிபெயர்த்துச் சொல்லவேண்டும். அப்படி எழுதியிருப்பது சரியாயிருக்கிறதென்று அவர் ஒத்துக்கொண்டால், ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் அதில் கையெழுத்து பண்ணவேண்டும்.

(3) அப்படி கையெழுத்து செய்யப்பட்ட அவ்வித பிரதிகுறிப்பும்—அதில் எழுதியிருக்கிற வாக்குமூலங்கள் அதில் கண்டிருக்கிற நபர்களாலே அதில் சொல்லிருக்கிற சந்தர்ப்பாசந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டதென்று ருஜுசெய்வதற்காக ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

(C) ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கே உரிய அலுவல்கள்.

பல ஸப்-டிஸ்ட்ரிக்டுகளிலிருக்கிற நிலத்துக்கு தஸ்தவேஜு சம்பந்தப்படுகையில் நடவடிக்கை.

64. பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் முழுமையும் தம்முடைய ஸப்டிஸ்ட்ரிக்டிலிராத அசையாப்பொருளைக் குறித்த மரணசாஸனமல்லாத தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்கையில், அதற்கும் அதன்மேல் எழுதப்பட்ட என்டார்ஸ்மென்டுக்கும் ஸெர்டிபிகேட் (ஏதாவதிருந்தால்) அதற்கும் யாதாஸ்து எழுதி அதை தம்மைப்போல அதே ரெஜிஸ்ட்ராருக்குட் பட்டிருக்கிற வேறே எந்தெந்த ஸப்ரெஜிஸ்ட்ராருடைய ஸப்டிஸ்ட்ரிக்டிலே அந்த சொத்தில் எவ்வளவாவதிருக்கிறதோ அந்தந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். அதை வரப்பெற்றுக்கொள்கிற ஸப்-ரெஜிஸ்ட்ரார் அந்த யாதாஸ்தைத் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்துகொள்ளவேண்டும்.

பல டிஸ்ட்ரிக்டுகளிலிருக்கிற நிலத்துக்கு தஸ்தவேஜு

65. (1) பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் - ஒரே டிஸ்ட்ரிக்டிலல்லாமல் பல டிஸ்ட்ரிக்டுகளிலிருக்கிற அசையாப்பொருளைக்குறித்த மரணசாஸனமல்லாத தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்கையில், அதற்கும் அதன்மேல்

சம்பந்தப்படுகை யில் நடவடிக்கை.

எழுதப்பட்ட எண்டார்ஸ்மென்டுக்கும் ஸெர்டிபிகேட் (ஏதாவதிருந்தால்) அதற்கும் நகலை, 21-வது பிரிவில் கண்டிருக்கிறபடி உருவப்படம் அல்லது நக்ஷா (ஏதாவதிருந்தால்) அதற்கு நகல்சகிதமாய், தம்முடைய ஸப்-டிஸ்ட்ரிக்டிலிருக்கிற டிஸ்ட்ரிக்டிலல்லாமல் வேறே எந்தெந்தடிஸ்ட்ரிக்டில் அந்த சொத்தில் எவ்வளவாவதிருக்கிறதோ அந்தந்த டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவும்வேண்டும்.

(2) ரெஜிஸ்ட்ரார் அதை வரப்பெற்றுக்கொண்ட பின்பு அந்த தஸ்தவேஜினுடைய நகலையும் உருவப்படம் அல்லது நக்ஷா (ஏதாவதிருந்தால்) அதன் நகலையும் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்துகொண்டு, அந்த தஸ்தவேஜுக்கு ஒரு யாதாஸ்தைத் தமக்குட்பட்டிருக்கிற எந்தெந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருடைய ஸப்-டிஸ்ட்ரிக்டிலே அந்த சொத்து எவ்வளவாவதிருக்கிறதோ அந்தந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும்; அப்படிப்பட்ட யாதாஸ்தை வரப்பெற்றுக் கொள்ளுகிற பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் அதைத் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்துகொள்ளவேண்டும்.

(D) ரெஜிஸ்ட்ராருக்கே உரிய அலுவல்கள்.

நிலத்தைக் குறித்த தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்த பிறகு நடவடிக்கை.

66. (1) மரணசாஸனமல்லாமல் அசையாப்பொருளைக் குறித்த யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதன் மேல், ரெஜிஸ்ட்ராரானவர் அந்த தஸ்தவேஜுக்கு ஒரு யாதாஸ்தைத் தமக்குட்பட்டிருக்கிற எந்தெந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருடைய ஸப் - டிஸ்ட்ரிக்டுக்குள் அந்த சொத்தில்எவ்வளவாவதிருக்கிறதோ அந்தந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும்.

(2) மேலும், ரெஜிஸ்டிரரானவர் அந்த தஸ்தவேஜின் நகலொன்றை 21-வது பிரிவில் கண்டிருக்கிறபடி உருவப்படம் அல்லது நக்ஷா (ஏதாவதிருந்தால்) அதன் நகல் சகிதமாய், வேறே யாருடைய டிஸ்ட்ரிக்டில் அந்த சொத்தில் எவ்வளவாவதிருக்கிறதோ அந்தப் பிரதி ரெஜிஸ்ட்ராருக்கும் அனுப்பவேண்டும்.

(3) அப்படிப்பட்ட ரெஜிஸ்ட்ரார் அவ்வகையான யாதொரு நகலை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், அதைத் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்துகொள்ள வேண்டியதுமல்லாமல், தமக்குட்பட்ட ஸப்-ரெஜிஸ்ட்ரார்களில் யாருடைய ஸப்-டிஸ்ட்ரிக்டில்

அந்த சொத்தில் எவ்வளவாவதிருக்கிறதோ அந்தந்த ஸப்-ரெஜிஸ்ட்ராருக்கு அந்த நகலின் யாதாஸ்தை அனுப்பவேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படி யாதொரு யாதாஸ்தை வரப்பெற்றுக் கொள்ளுகிற பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் அதைத் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல்செய்து கொள்ளவேண்டும்.

30-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்த பிறகு நடவடிக்கை.

67. 30-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்படுவதன்மேல், அப்படிப்பட்ட தஸ்தவேஜுக்கும் அதன்மேல் எழுதப்பட்ட எண்டார்ஸ்மெண்டுக்கும் ஸெர்டிபிகேட்டுக்கும் நகலை, அந்த ஆதரவு சம்பந்தப்பட்டிருக்கிற சொத்தில் எவ்வளவாவது யாராருடைய டிஸ்ட்ரிக்டிலிருக்கிறதோ அந்தந்த ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும்; அப்படிப்பட்ட நகலை வரப்பெற்றுக்கொள்ளுகிற ரெஜிஸ்ட்ராரானவர் 66-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அவருக்காக ஏற்படுத்தியிருக்கிற நடவடிக்கைகளை அனுசரிக்கவேண்டும்.

(E) ரெஜிஸ்ட்ரார்களுக்கும், இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்குமுண்டாகிய மேல் விசாரணை அதிகாரத்தைக் குறித்து.

ஸப்-ரெஜிஸ்ட்ரார்களை மேல்விசாரணை செய்து கொண்டு மேலதிகாரஞ் செலுத்த ரெஜிஸ்ட்ராருக்குள்ள அதிகாரம்.

68. (1) பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் யாருடைய டிஸ்ட்ரிக்டில் தம்முடைய ஆபீஸ் இருக்கிறதோ அந்த ரெஜிஸ்ட்ராருடைய மேல் விசாரணைக்குட்பட்டும் மேலதிகாரத்துக் குட்பட்டும் தம்முடைய ஆபீஸ் அலுவல்களை நிறைவேற்ற வேண்டும்.

(2) பிரதி ரெஜிஸ்ட்ராரும் (பிரியாதின்மேலாவது மற்றப்படிக்காவது) தமக்குட்பட்ட யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ரார் யாதொரு காரியஞ் செய்ததைப்பற்றியாகிலும், செய்யாமல் விட்டதைப்பற்றியாகிலும் யாதொரு தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் புஸ்தகம் அல்லது ஆபிஸைக்குறித்து யாதொரு பிசகைத் திருத்துவதைப்பற்றியாகிலும், இந்த ஆக்டுக்கு ஒத்திருக்கும்படி தமக்கு அவசியமாகத் தோற்றுகிற யாதொரு உத்தரவைப் பிறப்பிக்க அதிகார முடையவராவார்.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸுகளை

69. (1) பிரதேச கவர்ன்மெண்டாருக்குட்பட்ட ராஜ்ஜியத்திலிருக்கிற சகல ரெஜிஸ்ட்ரேஷன்

மேல் விசாரணை செய்யவும் விதிகள் செய்யவும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குள்ள அதிகாரம்.

ஆபீஸுகளையும் இன்ஸ்பெக்டர் - ஜெனரலானவர் பொதுவாய் மேல் விசாரணை செய்யவேண்டியது மல்லாமல், இந்த ஆக்டுக்கு ஒத்திருக்கும்படியான விதிகளை அடியிற்கண்ட விஷயங்களுக்காக அப்போதைக்கப்போது ஏற்படுத்தவும் அதிகாரமுடையவராவார்.

(a) புஸ்தகங்களையும் தஸ்தவேஜுகளையும் பத்திரமாய் வைத்திருப்பதற்காகவும் ;

(b) அந்தந்த டிஸ்ட்ரிக்டிலே இன்னபாஷைகள் சாதாரணமாய் வழங்குவதாக எண்ணப்படுமென்பதற்காகவும் ;

(c) 21-வது பிரிவின்படி இன்ன ராச்சியப்பிரிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதாய் நிர்ணயிப்பதற்காகவும் ;

(d) முறையே 25-வது, 34-வது பிரிவுகளின்படி விதிக்கப்படுகிற அபராதத் தொகையைக்குறித்துக் கிரமமேற்படுத்துவதற்காகவும் ;

(e) ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் 63-வது பிரிவின்படி யுக்தா யுக்தம் யோசித்துச் செய்வதற்கான அதிகாரஞ் செலுத்துவதைக் கிரமப்படுத்துவதற்காகவும் ;

(f) ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்கள் தஸ்தவேஜுகளுக்கு யாதாஸ்துகளெழுதவேண்டிய நமூனாவை ஒழுங்குபடுத்துவதற்காகவும் ;

(g) 51-வது பிரிவின்படி ரெஜிஸ்ட்ரார்களும் ஸப்-ரெஜிஸ்ட்ரார்களும் தங்கள் தங்கள் ஆபீஸுகளில் வைக்கப்பட்ட புஸ்தகங்களிலே கையெழுத்துசெய்து உறுதிப்படுத்துவதைக் கிரமப்படுத்துவதற்காகவும் ;

(h) 1, 2, 3, 4-ம் நெ. அட்டவணைகளிலே அதிலதில் எழுதவேண்டிய விவரங்களின்னவையென்று நிர்ணயிப்பதற்காகவும் ;

(i) ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸுகளிலே அனுஷ்டிக்கவேண்டிய விடுமுறை தினங்களை நிச்சயிப்பதற்காகவும் ;

(j) சாதாரணமாய் ரெஜிஸ்ட்ரார்களும் சப்ரெஜிஸ்ட்ரார்களும் நடத்தவேண்டிய நடவடிக்கைகளைக் கிரமப்படுத்துவதற்காகவும் :

(2) அப்படி ஏற்படுத்துகிற விதிகளைப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கிகாரத்துக்கு அனுப்பவேண்டும்; அவைகள் அங்கிகரிக்கப்பட்ட பின்பு, ஸர்க்கார் கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யப்பட்டு, (அப்படி) பிரசித்தஞ் செய்யப்படுவதன்மேல் இந்த ஆக்டினால் விதிக்கப்பட்டிருந்தாற் போலவே செலாவணியாகும்.

அபராதங்களை மன்னிக்க இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்குள்ள அதிகாரம்.

70. மேலும், இன்ஸ்பெக்டர்-ஜெனரலானவர் யுக்தா யுக்தம் யோசித்துச் செய்கையில் 25-வது அல்லது 34-வது பிரிவின்படி விதித்து வசூல் செய்யப்பட்ட யாதொரு அபராதத்திலே கிரமமான ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தொகைபோக மிகுதி முழுமையையுமாவது அதில் எவ்வளவையாவது மன்னிக்கலாம்.

12-ம் பாகம்.

ரெஜிஸ்டர் செய்ய நிராகரிப்பதைக் குறித்து.

ரெஜிஸ்டர் செய்ய நிராகரிப்பதற்குண்டான ஹேதுக்களை எழுதிவைப்பது.

71. (1) யாதொரு தஸ்தவேஜில் சம்பந்தப்படுகிற சொத்து தம்முடைய ஸப்-டிஸ்ட்ரிக்குள்ளிருக்கவில்லையென்கிற ஹேதுவின்மேலல்லாமல் மற்றப்படி, அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்ய நிராகரிக்கிற பிரதி ஸப்-ரெஜிஸ்ட்ராரும் அப்படி நிராகரிப்பதைக் குறித்து உத்தரவு பிறப்பித்து அப்படிப்பட்ட உத்தரவுக்கு தமக்குள்ள ஹேதுக்களைத் தம்முடைய 2-ம் நெ. புஸ்தகத்திலெழுதி, "ரெஜிஸ்ட்ரேஷன் நிராகரிக்கப்பட்டது" என்கிற வார்த்தைகளை அந்த தஸ்தவேஜின் மேல் எழுதவேண்டும்; அந்த தஸ்தவேஜை யெழுதிக்கொடுத்தவராவது அந்த தஸ்தவேஜினாலே பாத்தியமடைந்திருப்பவராவது மனுசெய்து கொள்வதன்மேல் அவருக்கு மேற்சொல்லியபடி எழுதிவைத்த ஹேதுக்களுக்கு வீணான ஆலசியமில்லாமலும் பணம் வாங்காமலும் நகல்கொடுக்கவேண்டும்.

(2) இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணும்படி உத்தரவு செய்யப்படாவிட்டாலும் உத்தரவு செய்யப்படுகிறவரையிலும் அப்படி எண்டார்ஸாயிருக்கிற தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்வதற்கு ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரெவரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

எழுதிக் கொடுத்ததில்லை யென்பது தவிர வேறே ஹேதுவின்மேல் ரெஜிஸ்டர் செய்ய நிராகரிக்கும் ஸப்-ரெஜிஸ்ட்ராரின் உத்தரவின்மேல் ரெஜிஸ்டராருக்கு அப்பீல் செய்து கொள்வது.

72. (1) எழுதிக்கொடுத்ததில்லை யென்கிற ஹேதுவின்மேல் நிராகரிக்கப்படுவது தவிர, (யாதொரு தஸ்தவேஜு அவசியம் ரெஜிஸ்டர் செய்யவேண்டியதாயிருந்தாலும் இஷ்டமாயிருந்தால் செய்துகொள்வதாயிருந்தாலும்) அப்படிப்பட்ட தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்ய ஏற்றுக்கொள்வதில்லையென்று ஸப்-ரெஜிஸ்ட்டார் பண்ணுகிற உத்தரவின்மேல் அப்பீலுண்டு; அப்படி அப்பீல் செய்கிறதானால், அந்த உத்தரவு தேதி முதல் முப்பது தினங்களுக்குள் அந்த ஸப் ரெஜிஸ்ட்ரார் யாருக்கு உட்பட்டிருக்கிறாரோ அந்த ரெஜிஸ்ட்ராரிடத்திலே செய்துகொள்ளவேண்டும். அதற்குமேல் அந்த ரெஜிஸ்ட்ரார் அந்த உத்தரவைத் தள்ளிவிடலாம் அல்லது மாற்றலாம்.

(2) அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணும்படி ரெஜிஸ்ட்ராருடைய உத்தரவிலே கண்டிருந்து அப்படிப்பட்ட உத்தரவு செய்யப்பட்டபின்பு முப்பது தினங்களுக்குள் அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்துகொள்வதற்காகக் கிரமமாய்க் கொடுக்கப்படுமாகில், அந்த ஸப் ரெஜிஸ்ட்ரார் அந்த உத்தரவின்படி செய்யவேண்டியது மல்லாமல், அதற்குமேல் 58, 59, 60-வது பிரிவுகளில் நிர்ணயித்திருக்கிற நடவடிக்கைகளைக் கூடுமானமட்டிலே அனுசரிக்கவும் வேண்டும்; அப்படி ரெஜிஸ்டர்செய்து - அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதற்காக முதலில் கிரமமாய்க் கொண்டுவந்து கொடுத்தபோது அது ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாற்போலவே செலாவணியாகவேண்டும்.

எழுதிக் கொடுத்ததில்லையென் கிற ஹேதுவின் மேல் ரெஜிஸ்டர் செய்ய ஸப்- ரெஜிஸ்ட்ரார் நிராகரித்தால் ரெஜிஸ்ட்ராருக்கு மனு செய்து கொள்வது.

73. (1) யாதொரு தஸ்தவேஜு எவர் எழுதிக்கொடுத்ததாகப் பொருள்படுகிறதோ அந்த நபராவது அவருடைய பிரதிநிதியாவது ஒப்படைக்காரராவது அதை யெழுதிக்கொடுத்ததில்லை யென்று சொல்லுகிற ஹேதுவின்மேல் ஸப்-ரெஜிஸ்ட்ரார் அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யநிராகரித்தால், அப்படிப்பட்ட தஸ்தவேஜினால் பாத்தியமடைந்திருப்பவரெவராவது அவருடைய பிரதிநிதியாவது ஒப்படைக்காரராவது மேற்சொல்லியபடி அதிகாரம் பெற்ற ஏஜென்டாவது, நிராகரித்த உத்தரவு செய்யப்பட்ட பின்பு

முப்பது தினங்களுக்குள் அந்த ஸப்-ரெஜிஸ்ட்ரார் உட்பட்டிருக்கிற ரெஜிஸ்ட்ராருக்கு அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வித்துக்கொள்ளத் தமக்கிருக்கிற பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டு மனு செய்து கொள்ளலாம்.

(2) அந்த மனுவானது எழுத்துமூலமாயிருக்கவேண்டியது மல்லாமல், 71-வது பிரிவின்படி எழுதிவைக்கப்பட்ட ஹேதுக்களுக்கு நகலேயும் அதனுடன்கூடக் கொடுக்கவேண்டும்; அந்த மனுவிலெழுதியிருக்கிற சங்கதிகள் எதார்த்தமென்பதைக்குறித்து - ப்ளெய்ன்டுகள் எதார்த்தமென்பதற்கு அத்தாட்சியாக என்ன செய்யும்படி சட்டத்தில் சொல்லியிருக்கிறதோ அந்தப்படியே மனுதாரர்செய்யவேண்டும்.

நோட்:—இந்தப் பிரிவின்படி, செய்துகொள்ளும் யாதொரு அப்பீலே, மனுதாரராவது அவரால் அதிகாரங்கொடுத்து நியமிக்கப்பட்ட எஜெண்டாவது நேரில் செய்துகொள்ளவேண்டும்; தபால் மூலமாய் அனுப்பினால் அப்பீல் எற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அப்படிப்பட்ட மனுவின்மேல் ரெஜிஸ்ட்ரார் இன்னபடி செய்யவேண்டுமென்பது.

74. அப்படிப்பட்ட விஷயத்திலும், ரெஜிஸ்டர் பண்ணும்படி ரெஜிஸ்ட்ராரிடத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜைக்குறித்து அவருக்கு முன்பாக மேற்சொல்லியபடி அதை எழுதிக்கொடுத்ததில்லையென்று சொல்லப்படுகிற விஷயத்திலும், அந்த ரெஜிஸ்ட்ரார் கூடுமான சீக்கிரத்திலே—

(a) அந்த தஸ்தவேஜை எழுதிக்கொடுத்ததுண்டாவென்றும்;

(b) சந்தர்ப்பத்துக்கேற்றபடி மனுதாரராவது அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்விக்கக் கொண்டுவந்து கொடுத்தவராவது அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்விக்கத்தக்கதாக்கிக்கொள்ள, அந்தந்த காலத்திலே வழங்கிவருகிற சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி செய்திருக்கிறாரா வென்றும், விசாரணை பண்ணவேண்டும்.

ரெஜிஸ்டர் பண்ணும்படி ரெஜிஸ்ட்ராரின் உத்தரவும் அதன்மேல் நடவடிக்கையும்.

75. (1) அந்த தஸ்தவேஜு எழுதிகொடுக்கப்பட்டதுண்டென்றும், மேற்சொல்லியபடி செய்யவேண்டியவைகள் செய்திருக்கிறதென்றும் ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியவந்தால், அவர் அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணும்படி உத்தரவு செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட உத்தரவு செய்யப்பட்ட பின்பு முப்பது தினங்களுக்குள் அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யும்படி கிரமமாய்க் கொண்டுவந்து கொடுக்கப்பட்டால், ரெஜிஸ்டர் பண்ணுகிற உத்தியோகஸ்தர் அந்த உத்தரவின்படி செய்யவேண்டும்; அதற்குமேல் சாத்தியமானபட்டிலே 58, 59, 60-வது பிரிவுகளில் நிர்ணயித்திருக்கிற நடவடிக்கையை அனுசரிக்கவேண்டும்.

(3) அப்படி ரெஜிஸ்டர்செய்வது-ரெஜிஸ்டர் செய்யும்படி கிரமமாய் முதலில் கொண்டுவந்து கொடுக்கப்பட்டபோது அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டராயிருந்தாற்போலவே செலாவணியாகவேண்டும்.

(4) ரெஜிஸ்ட்ரானவர் 74-வது பிரிவின்படி யாதொரு விசாரணை நடத்தும்பொருட்டு சாக்ஷிகளுக்கு ஸம்மனனுப்பி அவர்களை ஹாஜராகும்படி செய்வித்து, ஸிவில் கோர்ட்டாரைப்போலவே அவர்களைச் சாட்சியஞ்சொல்லும்படி நிர்ப்பந்திக்கலாம்; மேலும், அவர் அப்படிப்பட்ட யாதொரு விசாரணைக்குண்டான செலவு முழுமையையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது இன்னார் செலுத்தவேண்டியதென்று உத்தரவு செய்யலாம்; அப்படிப்பட்ட செலவுகள் 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் ப்ரோஸீஜர் கோடுக்குட்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே அவைகள் தீர்பானமாயிருந்தாற்போல வசூல்செய்யப்படத் தக்கவைகளாகும்.

ரெஜிஸ்ட்ரார் நிராகரிப்பு உத்தரவு செய்வது.

76. (1) யாதொரு ரெஜிஸ்ட்ரானவர்—

(a) தஸ்தவேஜு சம்பந்தப்படுகிற சொத்து தம்முடைய டிஸ்ட்ரிக்டுக்குள்ளிருக்கவில்லை யென்கிற ஹேதுவின் பேலாவது யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸில் அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்கிற ஹேதுவின்மேலாவதன்றி மற்றப்படி அந்த தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யவாகிலும்,

(b) 72-வது அல்லது 75-வது பிரிவின்படி யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்ய உத்தரவு பண்ணவாகிலும்.

நிராகரிப்பாராகில், அப்படிப்பட்ட பிரதி ரெஜிஸ்ட்ராரும் அப்படி நிராகரிப்பதைக்குறித்து உத்தரவு பிறப்பித்து, அப்படிப்பட்ட உத்தரவுக்கு தமக்குள்ள ஹேதுக்களைத் தம்முடைய 2-ம் நெ. புஸ்தகத்தில் எழுதிவைத்து, அந்த தஸ்தவேஜை எழுதிக்கொடுத்தவராவது அந்த

தஸ்தவேஜினுலே பாத்தியமடைந்திருப்பவராவது மனுசெய்துகொள்வதன்மேல், அவருக்கு மேற்சொல்லியபடி எழுதிவைத்த ஹேதுக்களுக்கு வீணுன ஆலசியமில்லாமல் நகல் கொடுக்கவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படியாவது 72-வது பிரிவின்படியாவது ஒரு ரெஜிஸ்ட்ராரால் செய்யப்பட்ட யாதொரு உத்தரவின்மேல் அப்பீல் இல்லை.

ரெஜிஸ்ட்ரார் நிராகரிப்பு உத்தரவுசெய்கிற விஷயத்தில் வியாஜ்ஜியம்.

77. (1) ரெஜிஸ்ட்ராரானவர் 72-வது பிரிவு அல்லது 76-வது பிரிவின் பிரகாரம், தஸ்தவேஜை ரெஜிஸ்டர் பண்ணும்படி உத்தரவுசெய்ய நிராகரிப்பாராகில், அப்படிப்பட்ட தஸ்தவேஜினுலே பாத்தியமடைந்திருப்பவராவது, அவருடைய பிரதிநிதியாவது, ஒப்படைக்காரர் அல்லது ஏஜெண்டாவது, நிராகரிப்பு உத்தரவு செய்யப்பட்ட பின்பு முப்பது தினங்களுக்குள், தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வித்துக் கொள்ளவேண்டுமென்று கோரின ஆபிஸானது எதனுடைய அசல் விசாரணை அதிகாரப்பிரதேச எல்லைக்குள் இருக்கிறதோ அந்த ஸிவில் கோர்ட்டிலே, டிக்ரி பிறந்த பின்பு முப்பது தினங்களுக்குள் அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்வதற்காக கிரமமாய்க் கொண்டுவரப்படுமாகில், அப்படிப்பட்ட ஆபிஸில், அதை ரெஜிஸ்டர்செய்யும்படி டிக்ரி பெறுவதற்காக வியாஜ்ஜியந்தொடரலாம்.

(2) 75-வது பிரிவு (2) (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலுள்ள நியந்தனைகள் அப்படிப்பட்ட யாதொரு டிக்ரியின்பிரகாரம் ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட சகல தஸ்தவேஜுகளுக்கும் அவசியமான மாறுதலுடனே பிரயோகப்படவேண்டும்; இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அந்த தஸ்தவேஜானது அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

13-ம் பாகம்.

ரெஜிஸ்டர் செய்வதற்கும் தேடி எடுப்பதற்கும் நகல்களுக்குமான கட்டணங்களைக் குறித்து.

பிரதேச கவர்ன்மெண்டார் கட்டணங்களை நிர்ணயிக்

78. பிரதேச கவர்ன்மெண்டார் அடியில் கண்டிருக்கிற விஷயங்களுக்காகச் செலுத்தத்

கவேண்டு மென்பது. தக்க கட்டண ஜாபிதா ஒன்று தயார் செய்ய வேண்டும். அதாவது—

(a) தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்காக :

(b) ரெஜிஸ்டர்களைத் தேடிப்பார்ப்பதற்காக :

(c) ரெஜிஸ்டர் செய்வதற்கு முன்னேயாவது ரெஜிஸ்டர்செய்கையிலாவது செய்த பின்பாவது ஹேதுக்களுக்காகிலும் பதிவுகளுக்காகிலும் தஸ்தவேஜுகளுக்காகிலும் நகலெழுதுவதற்காக அல்லது நகல் கொடுப்பதற்காக :

மேலும், அடியில் கண்டிருக்கிற விஷயங்களுக்காக விசேஷ அல்லது அதிக கட்டணம் செலுத்தத்தக்க கட்டண ஜாபிதா ஏற்படுத்தவேண்டும் ; அதாவது :—

(d) 30-வது பிரிவின்படி செய்யப்பட்ட அந்தந்த ரெஜிஸ்ட்ரேஷனுக்காக :

(e) கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிப்பதற்காக :

(f) தர்ஜுமாக்களைத் தாக்கல் செய்வதற்காக :

(g) நபர்களுடைய இருப்பிடங்களுக்குப் போவதற்காக :

(h) தஸ்தவேஜுகளைப் பத்திரமாய் வைத்திருந்து மறுபடி கொடுப்பதற்காக :

(i) இந்த ஆக்டில் சொல்லியிருக்கிற காரியங்களை நிறைவேற்ற பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அவசியமாகத் தோற்றுகிற மற்ற விஷயங்களுக்காக :

79. அப்படி செலுத்தத்தக்க கட்டணங்களின் ஒரு ஜாபிதாவை ஸர்க்கார் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யவேண்டியதுமல்லாமல், அதற்கொரு பிரதியை இங்கிலிஷிலும் அந்த டிஸ்ட்ரிக்டின் சுய-பாஷையிலும் அந்தந்த ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸிலே எல்லாரும் பார்த்துக்கொள்ளும்படி வைக்கவேண்டும்.*

கட்டணங்களைப் ப்பிரசித்தஞ் செய்வது.

80. இந்த ஆக்டின்படி தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்கான சகல கட்டணங்களும் அந்த தஸ்தவேஜுகளைக் கொண்டுவந்து கொடுக்கும்போதே செலுத்தப்படத் தக்கவைகளாகும்.

கொண்டு வந்து கொடுத்தவுடனே கட்டணஞ் செலுத்துவது.

* ரெஜிஸ்டர் கட்டணங்களின் ஜாப்தா அனுபந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

14-ம் பாகம்.

தண்டனைகளைக் குறித்து.

கெடுதிசெய்ய வேண்டுமென்கிற எண்ணத்தோடு தஸ்தவேஜுகளைத் தப்பாய் எண்டார்ஸ்பண்ணினாலும் நகல் செய்தாலும் தர்ஜுமா செய்தாலும் ரெஜிஸ்டர் பண்ணினாலும் தண்டனை.

81. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி கொண்டுவந்து கொடுக்கப்பட்ட அல்லது கட்டிவைக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜை எண்டார்ஸ் பண்ணுவது, நகல்செய்வது, தர்ஜுமாசெய்வது, அல்லது ரெஜிஸ்டர் செய்வதாகிய அலுவல் கொடுக்கப்பட்டு, இந்த ஆக்ட்டின்படி நியமிக்கப்பட்ட பிரதி ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரும், இந்த ஆக்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு அவருடைய ஆபீஸில் அமர்த்தப்பட்டிருக்கிற பிரதி நபரும், இந்தியன் பினல்கோடில் அர்த்தஞ் சொல்லியிருக்கிறபடி எவருக்காவது **தீங்கு** செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டாகிலும், அப்படிசெய்வதனாலே தீங்குண்டாகலாமென்று அறிந்தாகிலும், தப்பானதென்று தான் அறிந்தாவது நம்பியாவதிருக்கிற விதமாய் அப்படிப்பட்ட தஸ்தவேஜை எண்டார்ஸ் செய்தாலும், நகல்செய்தாலும், தர்ஜுமாசெய்தாலும், ரெஜிஸ்டர் செய்தாலும், அப்படிப்பட்டவர் ஏழு வருஷகாலத்திற்கு அதிகப்படாமல் காவலில் வைக்கப்படுவார், அல்லது அபராதம் விதிக்கப்படுவார், அல்லது இவ்விரண்டு தண்டனைக்கு முட்படுவார்.

நோட் :—தீங்கு என்னும் வார்த்தையானது - ஒருவனுடைய சரீரத்திற்காவது, மனதிற்காவது, கீர்த்திக்காவது, சொத்துக்காவது அக்கிரமமாய் செய்யப்பட்டதுன்பமென்றும் அர்த்தமாகும்.

பொய்யான சங்கதி சொல்வது, பொய்யான நகல் அல்லது தர்ஜுமாவை ஒப்பிவிப்பது, ஆள் மாருட்டம், உடந்தையாயிருப்பது ஆகிய இவைகளுக்காகத் தண்டனை.

82. எவராகிலும்—

(a) இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கை அல்லது விசாரணையிலே, வாக்குமூலம் எழுதப்பட்டாலும் எழுதப்படாவிட்டாலும் இந்த ஆக்டின்படி நடத்திக்கொண்டிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தருக்கு முன்பாகப் பிரமாணஞ்செய்தாவது செய்யாமலாவது, வேண்டுமென்று பொய் வாக்குமூலம் கொடுத்தாலும் ;

(b) 19-வது அல்லது 21-வது பிரிவின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையில் யாதொரு தஸ்தவேஜுக்கு அபத்

தமான நகலையாவது தர்ஜுமாவையாவது உருவப்படம் அல்லது நக்ஷாவுக்கு அசத்தமான நகலையாவது, ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரிடத்திலே வேண்டுமென்று ஒப்பித்தாலும் ;

(c) வேறொருவரைப்போல ஆள்மாருட்டமாகி, அந்த மாருட்டத்திலே யாதொரு தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுத்தாலும், எதையாவது ஒப்புக்கொண்டாலும் அல்லது வாக்குமூலஞ் சொன்னாலும், யாதொரு ஸம்மன் அல்லது கம்மிஷன் என்னுங் கட்டளை பிறப்பிக்கச் செய்தாலும், இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கை அல்லது விசாரணையிலே வேறே யாதொரு காரியத்தைச் செய்தாலும் ;

(d) இந்த ஆக்டின் பிரகாரம் தண்டிக்கத்தக்கதாக செய்யப்பட்ட யாதொரு காரியத்துக்கு உடந்தையாயிருந்தாலும்,

அவர் ஏழுவருஷகாலத்துக்கு அதிகப்படாமல் காவலில் வைக்கப்படுவார், அல்லது அபராதம் விதிக்கப்படுவார். அல்லது இரண்டு தண்டனைக்கு முட்படுவார்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் பிரியாது தொடரலாமென்பது.

83. (1) ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தருக்கு அவருடைய உத்தியோக ஹோதாவிலே இந்த ஆக்டின்படிக்கான யாதொரு குற்றம் செய்யப்பட்டதாகத் தெரிய வந்தால், அதைக்குறித்து சந்தர்ப்பத்துக்கேற்றபடி எவரெவருடைய ராஜ்ஜியம் டிஸ்ட்ரிக்ட் அல்லது ஸப்-டிஸ்ட்ரிக்டில் அந்த குற்றம் செய்யப்பட்டதோ அந்த இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஹிந்துதேசத்துச் சாகை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ராராவது, அவர்களுடைய அனுமதியின்மேலாவது பிரியாது தொடரலாம்.

(2) இந்த ஆக்டின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்குண்டான அதிகாரங்களுக்குக் குறையாத அதிகாரங்களைச் செலுத்துகிற அந்த கோர்ட்டாராலாவது அதிகாரியாலாவது பரிசீலனை செய்யத்தக்கவைகளாகும்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர்கள் ஸர்க்கார்

84. (1) இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்ட ரெஜிஸ்டர்செய்கிற பிரதி உத்தியோகஸ்தரும் இந்

உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுவது.

தியன் பினல்கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராக எண்ணப்படுவார்.

(2) ரெஜிஸ்டர்செய்கிற அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் ஏதாவது சங்கதி கேட்கும்போது அதை ஒவ்வொருவரும் தெரிவிக்க சட்டப்படிக் கடமைப்பட்டவராவார்.

(3) இந்தியன் பினல்கோட் 228-வது பிரிவில் சொல்லியிருக்கிற "நீதி விவகார நடவடிக்கை" என்னும் வார்த்தைகளிலே, இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையென்பதும் அடங்கியிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

15-ம் பாகம்.

பலவகைப்பட்டவை.

பேவாரிஸ் தஸ்தவேஜுகளை அழித்து விடுவது.

85. (மரணசாஸனங்களல்லாமல்) யாதொரு ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸிலே இரண்டு வருஷத்திற்கு மேற்பட்டு பேவாரிஸாயிருக்கிற மற்ற தஸ்தவேஜுகளை அழித்துவிடலாம்.

ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் தம்முடைய உத்தியோக ஹோதாவிலே நல்ல எண்ணத்தோடு செய்த அல்லது (செய்ய) நிராகரித்த யாதொரு காரியத்திற்காக அவர் உத்தரவாதியல்லவென்பது.

86. ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தரானவர் தம்முடைய உத்தியோக ஹோதாவிலே நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட யாதொரு காரியத்தினிமித்தம் யாதொரு வியாஜ்ஜியத்திற்காவது தாவாவுக்காவது தண்டனைக்காவது உள்ளாகமாட்டார்.

அப்படி செய்யப்பட்ட தெதுவும் உத்தியோக நியமனத்திலாவது நடவடிக்கை யிலாவது குறை விருப்பதனலே பயன்படாமற் போக மாட்டாது.

87. ரெஜிஸ்டர்செய்கிற யாதொரு உத்தியோகஸ்தரால் இந்த ஆக்டையாகிலும் இதனுல் ரத்துசெய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் அனுசரித்து நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட தெதுவும் அவருடைய உத்தியோக நியமனத்திலாவது நடவடிக்கையிலாவது யாதொரு குறைவிருக்கிறதென்கிற ஹேதுவைப்பற்றிமாத்திரம் பயன்படாமற்போனதாக எண்ணப்படாது.

கவர்ன்மெண்ட் அதிகாரிகளாலாவது சில ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாலாவது எழுதிக்கொடுக்கப்பட்ட தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வது.

88. (1) இதில் என்னசொல்லியிருந்தபோதினும் பாதகமில்லாமலே, யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராவது, பங்காளம்-சென்னப்பட்டணம் அல்லது பம்பாயின் அட்மினிஸ்ட்ரேடர் - ஜெனரலாவது, யாதொரு அபிஷல் ட்ரஸ்ட்டியாவது, அபிஷல் அஸைனியாவது, ஹைகோர்ட் ஷெரீப்-ரிஸீவர் அல்லது ரெஜிஸ்ட்ராராவது, தம்முடைய உத்தியோகஹோதாவில் தாம் எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவை ரெஜிஸ்டர் செய்வதைப்பற்றிய யாதொரு நடவடிக்கையில் யாதொரு ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸுக்கு நோய்த் தாமே வரவேண்டுமென்பதாகிலும் தமக்காக ஏஜெண்டை அனுப்பவேண்டுமென்பதாகிலும் 58-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி கையெழுத்து பண்ணவேண்டு மென்பதாகிலும் அவசியமில்லை.

(2) அப்படி யாதொரு ஆதரவு எழுதிக்கொடுக்கப்பட்டால் ரெஜிஸ்டர் செய்யும்படி அந்த ஆதரவு யாரிடத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறதோ அந்த ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர் தமக்கு யுக்தமாகத் தோற்றினல், அதைக்குறித்து சங்கதி தெரிந்துகொள்ளும் பொருட்டு சந்தர்ப்பத்துக்கேற்றபடி யாதொரு கவர்ன்மெண்ட் செகெர்டெரிக்காவது, அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்காவது, அட்மினிஸ்ட்ரேடர்-ஜெனரலுக்காவது, அபிஷல் டிரஸ்டிக்காவது, அபிஷல் - அஸைனிக்காவது, ஷெரிப்புக்காவது, ரிஸீவருக்காவது ரெஜிஸ்ட்ராருக்காவது எழுதியனுப்பி, அந்த ஆதரவு எழுதிக்கொடுக்கப்பட்டதென்பதைத் திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டபின்பு அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டும்.

சில உத்தரவுகள், ஸெர்டிபிகேட்டுகள், ஆதரவுகள் இவைகளின் நகல்களை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்புவதும் அவைகளைத் தாக்கல் செய்துகொள்வதும்.

89. (1) 1883-ம் ௵ த்திய நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டின்படி கடன்கொடுக்கிற பிரதி உத்தியோகஸ்தரும், விருத்தி செய்யும்படியான நில முழுமையுமாவது அதில் யாதொரு பாகமாவது மேல் ஜாமீனுய்க் கொடுக்கும்படியான நிலமுழுமையுமாவது அதில் யாதொரு பாகமாவது யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருக்கு அப்படிப்பட்ட உத்தரவின் நகலை அனுப்பவேண்டும். ரெஜிஸ்டர் செய்கிற அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் தம்

முடைய 1-ம் நெ புஸ்தகத்திலே அந்த நகலைத் தாக்கல்செய்து கொள்ளவேண்டும்.

(2) 1908-ஹூத்திய ஸிவில் ப்ரொஸிஜர் கோடின்படி அசையாப்பொருளை விற்பனை ஸெர்டிபிகேட் கொடுக்கிற பிரதி கோர்ட்டாரும்-யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அந்த ஸெர்டிபிகேட்டில் சொல்லியிருக்கிற அசையாப்பொருள்முழுவதுமாவது அதில் யாதொரு பாகமாவது இருக்கிறதோ அந்த ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்கு அப்படிப்பட்ட ஸெர்டிபிகேட்டின் நகலை அனுப்பவேண்டும். அந்த உத்தியோகஸ்தர் தம்முடைய 1-ம் நெ புஸ்தகத்திலே அந்த நகலைத் தாக்கல்செய்து கொள்ளவேண்டும்.

(3) விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிய 1884-ம்ஹூத்து 12-வது ஆக்டின்படி கடன்கொடுக்கிற ஒவ்வொரு உத்தியோகஸ்தரும், அந்த கடனைத் திரும்பச் செலுத்திவிடுவதற்கு ஏற்பாடுசெய்யும்பொருட்டு எதன் மூலமாய் அசையாப்பொருள் குதுவை வைக்கப்பட்டதோ அந்த ஆதரவின் நகலையும், அப்படிப்பட்ட யாதொரு அசையாப்பொருள் கடன்கொடுப்பதற்காகச் செய்த உத்தரவில் அதே காரியத்தின் பொருட்டு குதுவையாக வைக்கப்பட்டால் அந்த உத்தரவின் நகலையுங்கூட, அப்படி குதுவை வைக்கப்பட்ட அசையாப்பொருள் யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலு மிருக்கிறதோ அந்த ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்; ரெஜிஸ்டர்செய்கிற அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் சங்கதிக்குத் தக்கபடி அந்த நகல் அல்லது நகல்களைத் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் தாக்கல் செய்து கொள்ளவேண்டும்.

(4) பஹிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட அசையாப்பொருளைக் கிரயத்திற்குக் கொண்டவருக்கு விற்பனை ஸெர்டிபிகேட் கொடுக்கிற ஒவ்வொரு ரெவினியு உத்தியோகஸ்தரும் - அந்த ஸெர்டிபிகேட்டில் கண்டசொத்து முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தருக்கு அந்த ஸெர்டிபிகேட்டின் நகலை அனுப்பவேண்டும்; அந்த உத்தியோகஸ்தர் தம்முடைய 1-ம் நெ. புஸ்தகத்தில் அந்த நகலைத் தாக்கல்செய்யவேண்டும்.

ஆக்டினின்றும் நிவாரணை.

90. (1) அடியில் கண்டிருக்கிற தஸ்தவேஜுகள் அல்லது உருவப்படங்களில் எதையாவது ரெஜிஸ்டர் செய்யும்படி இந்த ஆக்டிலாகிலும் 1877-ம்ஹூத்திய 3-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டி-

கவர்ன்மென்டாராலாவது அவர்கள் பட்சத்திலா

வது எழுதிக்கொடுக்கப்பட்ட சில தஸ்தவேஜுகளுக்கு நிவாரணை.

லாகிலும் 1871-ம்ஸ்த்திய 8-வது ஆக்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிலாகிலும் அதனால் ரத்துசெய்யப்பட்ட யாதொரு ஆக்டிலாகிலும் சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலாவது உத்தரவு செய்கிறதாகவாயினும் எப்போதாவது உத்தரவு செய்திருப்பதாகவாயினும் எண்ணக்கூடாது ; அவையாவன :—

(a) பூமி பேரீஜ் பைசல் செய்வதிலாவது அந்தப்பைசலைச் சீர்படுத்துவதிலாவது அமர்ந்திருக்கிற யாதொரு உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்பட்டாகிலும் வாங்கிக்கொள்ளப்பட்டாகிலும் அத்தாட்சி கையெழுத்து செய்யப்பட்டாகிலுமிருந்து, அப்படிப்பட்ட பைசல் ரெகார்டுகளைச் சேர்ந்ததாயிருக்கிற தஸ்தவேஜுகள் ;

(b) யாதொரு நிலத்தை ஜரீப்செய்வதிலாகிலும் ஜரீப்பைச் சீர்திருத்துவதிலாகிலும் கவர்ன்மென்ட்தரப்பில் அமர்ந்திருக்கிற யாதொரு உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்பட்டாவது வாங்கிக்கொள்ளப்பட்டாவது உறுதிசெய்யப்பட்டாவதிருந்து, அப்படிப்பட்ட ஜரீப் ரெகார்டைச் சேர்ந்ததாயிருக்கிற தஸ்தவேஜுகளும், உருவப்படங்களும் ;

(c) கிராமரெகார்டுகளைத் தயார்செய்யும் அலுவலையுடைய பத்வாரிகள் முதலான உத்தியோகஸ்தர்களால் யாதொரு ரெவினியூ கச்சேரியில் அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி காலக்கிரமமாய்த் தாக்கல் செய்யப்படுகிற தஸ்தவேஜுகள் ;

(d) ஸன்னதுகளும், இனம் ஹக்கு சாஸனங்களும், நிலத்தைக் குறித்தாவது நிலத்திலுள்ள யாதொரு பாத்தியதையைக்குறித்தாவது கவர்ன்மெண்ட் க்ரான்ட் அல்லது ஒப்படையாக இருப்பதாகவாகிலும் ருஜுப்படுத்துவதாகவாகிலும் பொருள்படுகிற மற்ற தஸ்தவேஜுகளும் ;

(e) அனுபோகதாரர்கள் அனுபோகத்தை விட்டுவிடுவதைக் குறித்தாவது பராதீனஞ்செய்யப்பட்ட நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அதை விட்டுவிடுவதைக்குறிதாவது 1879-ம்ஸ்த்து 5-வது ஆக்டாகிய பம்பாய் லாண்ட் ரெவினியூ கோட் 74-வது அல்லது 76-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோடிஸுகள்.

(2) ஆனால், அப்படிப்பட்ட சகல தஸ்தவேஜுகளும் உருவப் படங்களும் 48-வது 49-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக, இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளை யனுசரித்து ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பவைகளாவும் ரெஜிஸ்டர் செய்யப்படுபவைகளாவும் எண்ணப்படும்.

அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளைப் பார்வையிடுவதும் அவைகளுக்கு நகலும்.

91. இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டார் ஏற்படுத்துகிற விதிகளுக்கும் நிர்ணயிக்கிற கட்டணங்களை முன்னதாய்ச் செலுத்துவதற்கும் உட்பட்டு, 90-வது பிரிவு **(a)**, **(b)**, **(c)**, **(e)** குறிப்பிட்ட உட்பிரிவுகளில் கண்டிருக்கிற சகல உருவப்படங்களையும் தஸ்தவேஜுகளையும் **(d)** குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கிற தஸ்தவேஜுகளின் சகல ரெஜிஸ்டர்களையும் பார்வையிட வேண்டுமென்று மனுசெய்துகொள்ளுகிறவரெவராவது பார்வையிட அனுமதிகொடுக்கவேண்டும்; மேற்சொல்லியபடிக்குட்பட்டு, அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளின் நகல்களையும் அவைகளுக்காக மனுசெய்துகொள்ளுகிறவர்களெல்லோருக்கும் கொடுக்கவேண்டும்.

பர்மா தேசத்தாரைக்குறித்த ரெஜிஸ்ட்ரேஷன் விதிகள் ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்பட்டதென்பது.

92. 1877-ம்வருஷத்திய 3-வது ஆக்ட்டாகிய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குள் லோயர் பர்மாவில் ரெஜிஸ்ட்ரேஷனைக்குறித்து வழங்கிவந்திருக்கிற சகல விதிகளும் சட்டத்தைப் போல் செலாவணியானதாகவே எண்ணப்படும்; மேற்படி விதிகளைதன்படிக்காவது செய்யப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து யாதொரு உத்தியோகஸ்தர்மேலாவது வேறொரு நபரின்மேலாவது வியாஜ்ஜிய முதலிய விவகாரம் நடத்தக்கூடாது.

ரத்தானவைகள்.

ரத்தானவைகள்.

93. (1) ஷெட்யூலிலேகண்ட சட்டதிட்டங்கள் அந்த ஷெட்யூலின் நான்காவது கலத்தில் குறிப்பிட்ட அளவுக்கு ரத்து செய்யப்படுகின்றன.

(2) ப்ரிடிஷ் இந்தியாவின் யாதொரு பாகத்தில் வழங்கி வருவதும் இதனால் வெளிப்படையாய் ரத்துசெய்யப்படாததுமான யாதொரு சட்டதிட்டத்தின் எந்த நிபந்தனைக்காவது இதிலுள்ளதெதனாலும் பாதகமுண்டாவதாக கொள்ளக்கூடாது.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிற்கு சம்பந்தப்பட்ட இதர ஆக்டுகளின் குறிப்புகள்.

சொத்தை ட்ரான்ஸ்பர்செய்வதைக்குறித்த 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்.

*   *   *   *

அர்த்தம்.

3. இந்த ஆக்ட்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்,—

"அசையாப்பொருள்" என்பதிலே, நிற்கும் மரங்களாவது வளரும் பயிராவது புல்லாவது அடங்கமாட்டாது.

"ஆதரவு" என்பது மரணஸாஸனமல்லாத ஆதரவென்று அர்த்தமாகும்.

"ரெஜிஸ்ட்டர்செய்யப்பட்டது" என்பது தஸ்தவேஜுகளை ரெஜிஸ்ட்டர் செய்வதை ஒழுங்குபடுத்துவதற்காக அந்தந்தக் காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற சட்டதிட்டப்படி ப்ரிட்டிஷ் இந்தியாவில் ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டதென்று அர்த்தமாகும்.

"நிலத்தோடு சேர்க்கப்பட்டது" என்பது—

(a) மரம் செடி முதலியவைகளைப்போல, நிலத்தில் வேரூன்றியிருப்பது என்றும்,

(b) சுவர்கள் அல்லது கட்டடங்களைப்போல, நிலத்தில் புதைந்திருப்பது என்றும், அல்லது

(c) எதேனுடன் இணைக்கப்பட்டிருக்கிறதோ அதைப் பிரயோசனகரமாக சாஸ்வதமாய் அநுபவிப்பதற்கு அப்படி புதைந்திருக்கிறதோடு இணைக்கப்பட்டிருப்பது என்றும் அர்த்தமாகும்.

"வியாஜ்ஜியங்கொண்டு வரத்தக்க பாத்தியதை" என்பது—அசையாப்பொருளைக் கொதுவைவைத்தாவது அசையும்பொருளை ஸ்வாதீனப்படுத்தாமல் ஈடுகாட்டியாவது அடகுவைத்தாவது பந்தோபஸ்து செய்யப்பட்ட கடன் தவிர வேறே யாதொரு கடனும்பாத்தியதை கொண்டாடுகிறவன் உடனே அநுபவிக்கிற ஸ்வாதீனத்திலாவது உடனே அநுபவிக்கநற்கேற்ற ஹக்குள்ள ஸ்வாதீனத்திலாவதி

ராத அசையும்பொருளில் உண்டாயிருக்கும் பிரயோசனகரமான யாதொரு சுதந்தரமாயினும், தற்காலத்திலிருந்தாலும், உண்டாய்க் கொண்டிருந்தாலும், ஷரத்தை யனுசரித்திருந்தாலும், தற்செயலாய் நேரிட்டாலும், அந்தக் கடனையாவது பிரயோசனகரமான சுதந்தரத்தையாவது ஸிவில்கோர்ட்டார் பரிகாரத்துக்கு ஆதாரமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளுவார்களாகில், அப்படிப்பட்ட கடன் அல்லது பிரயோசனகரமான சுதந்தரத்துச்குப் பாத்தியதை என்று அர்த்தமாகும்.

யாதொரு நபருக்கு யாதொரு சங்கதி வாஸ்தவத்தில் தெரிந்திருந்தாலும், அவன் விசாரணையாவது பரிசோதனையாவது செய்ய வேண்டியவனயிருந்து வேண்டுமென்று அப்படிச்செய்யாமலிருப்பதனலாயினும் மிகுந்த அஜாக்கிரதையாயிருந்ததனலாயினும் தெரியாமற் போயிற்றே தவிர மற்றப்படி அவனுக்கு அது தெரிந்திருக்கும்படியானதாயிருந்தாலும், 1872-ம் வருஷத்து இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 229-வது பிரிவில் சொல்லியிருக்கிற விஷயங்களிலே அந்தசங்கதியைக் குறித்து அவனுடைய ஏஜெண்டுக்கு அறிக்கைசெய்யப்பட்டிருந்தாலும், அவனுடைய ஏஜென்ட் அதைத் தெரிந்துகொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட நபர் அந்தசங்கதியைக்குறித்து "நோட்டிஸ்" அடைந்தவனென்று சொல்லப்படுகிறன்.

காண்ட்ராக்ட்டுகளைக் குறித்த நிபந்தனைகள் காண்ட்ராக்ட் ஆக்ட்டைச் சேர்ந்தவைகளாகக் கொள்ளவேண்டும்.

4. இந்த ஆக்ட்டிலே காண்ட்ராக்ட்டுகளுக்குச் சம்பந்தப்படுகிற அத்தியாயங்களையும் பிரிவுகளையும் 1872-ம் வருஷத்திய இந்துதேசத்து காண்ட்ராக்ட் ஆக்ட்டோடு சேர்ந்திருப்பதாகக் கொள்ளவேண்டும்.

மேலும், 54-வது பிரிவு 2-வது பாராவையும், 59-வது, 107-வது 123-வது பிரிவுகளையும் 1908-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டைச்சேர்ந்த அனுபந்தமாக வாசிக்கவேண்டும்.

உபயத்திராளுடைய விவகாரத்தினலே சோத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்து

(A).—அசையும் பொருள் அல்லது அசையாப்பொருளாகிய சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வது.

"சொத்துட்ரான்ஸ்பர்" என்பதற்கு அர்த்தம்.

5. அடியில்வரும் பிரிவுகளிலே, "சொத்து ட்ரான்ஸ்பர்" என்பது—ஜீவித்திருக்கிற யாவனொருவன் ஜீவித்திருக்கிற வேறொருவன் அல்லது பலபேருக்காவது தனக்கும் ஜீவித்திருக்கிற வேறொருவன் அல்லது பல பேருக்குமாவது, தற்காலத்திலாகிலும் இனிமேலைக்காகிலும் சித்திக்கும்படி சொத்தை ஒப்படைக்கிற செய்கையென்று அர்த்தமாகும்; "சொத்தை ட்ரான்ஸ்பர்செய்வது" என்பது அப்படிப்பட்ட செய்கையைச் செய்வதென்று அர்த்தமாகும்.

*　　*　　*　　*

அசையாப்பொருளின் விற்பனையைக்குறித்து.

"விற்பனை" என்பதற்கு அர்த்தம்.

54. செலுத்தப்பட்டாவது செலுத்துவதாகச் சொல்லப்பட்டாவது, சிறிதுமட்டில் செலுத்தப்பட்டும் மிகுதியைச் செலுத்துவதாகச் சொல்லப்பட்டுமாவதிருக்கிற யாதொரு கிரயத்திற்குப்பர்த்தியாய்ச் சொத்துவத்தை ட்ரான்ஸ்பர் செய்வது "விற்பனை" ஆகும்.

விற்பனை செய்கிற விதம்.

நூறுரூபாய்முதல் அதற்குமேற்பட்ட பெறுமானமுள்ள கைக்குவரத்தக்க அசையாப்பொருள் விஷயத்திலாவது கொடுத்தவன் அல்லது அவனுடைய பாத்தியஸ்தனுக்குத் திரும்பிவருகிறபொருள் (அதாவது ரிவர்ஷன்) விஷயத்திலாவது, அப்போது கைக்குவராத வேறே பொருள் விஷயத்திலாவது, அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பரானது ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட ஆதரவுமூலமாய்த்தான் செய்யப்படக்கூடும்.

நூறுரூபாய்க்குக் குறைந்த பெறுமானமுள்ள கைக்குவரத்தக்க அசையாப்பொருள் விஷயத்திலே, ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட ஆதரவுமூலமாயாவது பொருளை ஒப்பிப்பதனலாவது அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் செய்யலாம்.

எப்போது கைக்குவரத்தக்க அசையாப்பொருள் ஒப்பிக்கப்பட்டதாகுமென்றால், கொள்பவனுக்காவது அவன் உத்தரவு செய்கிறவனுக்காவது விற்பவன் அந்தப்பொருளை ஸ்வாதீனப்படுத்தும்போது அப்படியாகிறது.

விற்பனை செய்வதற்காக காண்ட்ராக்ட்.

அசையாப்பொருளின் விற்பனைக்காகச் செய்யப்பட்ட காண்ட்ராக்ட்டானது உபயத்திராளும் ஒத்துக்கொண்ட ஷரத்துகளின்மேல் அப்படிப்பட்ட பொருள் விற்

பனை செய்யப்படுமென்று செய்துகொள்ளப்பட்ட கான்ட்ராக்ட்டாகும்.

அப்படிப்பட்ட பொருளில் யாதொரு சுதந்தரத்தையாவது அதன்மேல் யாதொரு பொறுப்பையாவது அது தன்னந்தனியே உண்டுபண்ணமாட்டாது.

* * * *

அசையாப்பொருளின் கொதுவையையும் பொறுப்பையுங்குறித்து.

கொதுவை, கொதுவைவைக்கிறவன், கொதுவைவைத்துக்கொண்டவன், கொதுவைப்பணம், கொதுவைப்பத்திரம், என்பவைகளுக்கு அர்த்தம்.

58. (a) கடனுகக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்போகிற பணத்தைச்செலுத்துவதற்காவது அப்போதிருக்கிற அல்லது பின்பு ஏற்படுகிற கடனுக்காவது ஈடுவைக்கும்பொருட்டாகிலும், பணமிறுக்கும்படி நேரிடும்படியான. யாதொரு உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு உத்தரிக்கும் பொருட்டாகிலும், குறித்த அசையாப்பொருளிலுள்ள யாதொரு சுதந்தரத்தை ட்ரான்ஸ்பர் செய்வது கொதுவையாகும்.

ட்ரான்ஸ்பர் செய்கிறவன் கொதுவைவைக்கிறவனென்றும் ட்ரான்ஸ்பர் பெறுகிறவன் கொதுவைவைத்துக் கொள்ளுகிறவனென்றும் சொல்லப்படுகிறார்கள்; எதைச் செலுத்துவதற்காக அப்போதைக்கு ஈடுவைக்கப்படுகிறதோ அந்த முதற்பணமும் வட்டியும் கொதுவைப் பணமென்று சொல்லப்படுகிறது; ட்ரான்ஸ்பர் செய்கிறதாக எழுதிக்கொடுக்கப்படும் ஆதரவு கொதுவைப்பத்திரமென்று சொல்லப்படுகிறது

ஒற்றி.

(b) கொதுவைச்சொத்திலுள்ள ஸ்வாதீனத்தை ஒப்பித்துவிடாமல், கொதுவைவைக்கிறவன் தானே நேராய்க் கொதுவைப்பணத்தைச் செலுத்துவதாகப் பிணைப்பட்டு, தான்செய்துகொண்ட கான்ட்ராக்ட்டின் பிரகாரம்செலுத்தத் தவறிப்போகிறபட்சத்தில், அந்தக் கொதுவைச்சொத்தை விற்பனை செய்வித்து அதனல் வருகிற பணத்தை அவசியமானமட்டில் கொதுவைப்பணத்தைச் செலுத்துவதற்காக உபயோகித்துக்கொள்ளக்கொதுவைவைத்துக்கொண்டவனுக்குச் சுதந்தரமுண்டென்று வெளிப்படையாகவாகிலும் குறிப்பாகவாகிலும் சம்மதித்தால், அந்த விவகாரம் ஒற்றியென்று சொல்லப்படுகிறது; கொதுவைவைத்துக் கொண்டவன் ஒற்றிவைத்துக் கொண்டவனென்று சொல்லப்படுகிறான்.

அவதிக்கிரயக் கொதுவை.

(c) ஏதோ ஒரு தேதியில் கொதுவைப்பணத்தைச் செலுத்தத் தவறிப்போவதன்மேல் விற்பனை அறுதியாய்விடுமென்கிற ஷரத்தின்மேலாவது,

அப்படி செலுத்தப்படுவதன்மேல் விற்பனை செலாவணி அற்றுப் போகுமென்கிற ஷரத்தின் மேலாவது,

அப்படி செலுத்தப்படுவதன்மேல் கொள்பவன் விற்பவனுக்குச் சொத்தை ட்ரான்ஸ்பர்பண்ணவேண்டுமென்கிற ஷரத்தின் மேலாவது,

கொதுவைவைக்கிறவன் கொதுவைச்சொத்தைப் பெயருக்கு மாத்திரம் விற்பானாகில்,

அந்த விவகாரம் அவதிக்கிரயக்கொதுவையென்று சொல்லப்படுகிறது; கொதுவைவைத்துக்கொண்டவன் அவதிக்கிரயக் கொதுவை வைத்துக்கொண்டவனென்று சொல்லப்படுகிறான்.

பெந்தக போக்கியம்.

(d) கொதுவைவைக்கிறவன் கொதுவைவைத்துக்கொள்ளுகிறவனுக்குக்கொதுவைச் சொத்தை ஸ்வாதீனஞ்செய்து கொதுவைப்பணம் செலுத்தப்படுகிறவரையில் அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ளும்படியாகவும், அந்த சொத்திலிருந்துவருகிற குத்தகை அல்லது வாடகை பணத்தையும் லாபத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாகவும், வட்டிக்குப் பர்த்தியாயாவது கொதுவைப்பணத்துக்குச் செல்லு வைத்துக்கொள்ளவாவது சிறிதுமட்டில் வட்டிக்குப்பர்த்தியாயும் சிறிதுமட்டில் கொதுவைப்பணத்துக்குச் செல்லுவைத்துக்கொள்ளவுமாவது அவைகளை விநியோகித்துக்கொள்ளும்படியாகவும் அவனுக்கு அதிகாரங்கொடுத்தால், அந்த விவகாரம் பெந்தகபோக்கியமென்று சொல்லப்படும்; கொதுவைவைத்துக்கொண்டவன் பெந்தகபோக்கியம் வைத்துக்கொண்டவனென்று சொல்லப்படுவான்.

இங்கிலீஷ் மாதிரியான கொதுவை.

(e) கொதுவைவைத்தவன் கொதுவைப்பணத்தை ஏதோ ஒரு தேதியில் செலுத்திவிடுவதாகத்தானே பிணைப்பட்டு, ஒத்துக்கொண்டபடி கொதுவைப் பணத்தைச் செலுத்திவிடுவதன்மேல் கொதுவைவைத்துக் கொள்ளுகிறவன் கொதுவைவைத்தவனுக்குக் கொதுவைச் சொத்தை மறுபடியும் ட்ரான்ஸ்பர்செய்வானென்கிற நிபந்தனைக்குட்படுத்தி, கொதுவைவைத்துக்கொண்டவனுக்கு அதை அறுதியாய்

ட்ரான்ஸ்பர் செய்தால், அந்த விவகாரம் இங்க்லீஷ் மாதிரியான கொதுவை யென்று சொல்லப்படுகிறது.

கொதுவையானது இன்னபடிக்கானல் உறுதிப்பத்திர மூலமாயாக வேண்டும்.

59. எதற்கு ஈடுவைக்கப்பட்டதோ அந்த அசல் தொகையானது நூறுரூபாய் அல்லது அதற்குமேற்பட்ட தொகையாயிருந்தால், கொதுவை வைக்கிறவன் கையெழுத்துசெய்து குறைந்தது இரண்டு சாட்சிகள் சாட்சிகையெழுத்துபண்ணி ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட ஆதரவு கொடுத்தால் மாத்திரமே கொதுவை சித்தியாகும்.

எதற்கு ஈடுவைக்கப்பட்டதோ அந்த அசல் தொகையானது நூறு ரூபாய்க்குக் குறைவாயிருந்தால், மேற்சொல்லியபடி கையெழுத்துசெய்து சாட்சி கையெழுத்துபண்ணியிருக்கிற ரெஜிட்டரான ஆதரவுமூலமாயாவது (ஒறறிவிஷயத்தில் தவிர) சொத்தை ஒப்பிப்பதனாலாவது கொதுவை சித்திக்கும்படிச் செய்யலாம்.

கல்கத்தா - சென்னபட்டணம் - பம்பாய் - கராச்சி - ரங்கூன் மேல்மீன் - பஸ்ஸீன் - ஆக்யாப் இந்தப் பட்டணங்களிலே, அசையாப்பொருளை ஈடாக்கும்பொருட்டு அதைச்சேர்ந்த ஹக்கு ஸாஸனங்களைக்கடன் கொடுத்தவனுக்காவது அவனுடைய ஏஜெண்டுக்காவது ஒப்பித்துச் செய்யப்படுகிற கொதுவைகள் இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதனாலும் செல்லாமற் போய்விடுவதாக எண்ணக்கூடாது.

*   *   *   *

அசையாப்பொருளின் குத்தகை அல்லது வாடகையைக்குறித்து.

குத்தகை அல்லது வாடகை (lease) என்பதற்கு அர்த்தம்.

105. செலுத்தப்பட்டாவது செலுத்துவதாக உறுதியாய்ச் சொல்லப்பட்டாவதிருக்கிற கிரயநிமித்தமாகவாகிலும், ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவனால் ட்ரான்ஸ்பர் செய்தவனுக்குக் காலக்கிரமமாயாவது குறித்தகாலங்களிலாவது கொடுக்கப்படவேண்டிய பணம் அல்லது மாசூலில் பங்கு நிமித்தமாகவாகிலும், அல்லது செய்யப்படவேண்டிய ஊழிய முதலிய பெறுமானமுள்ள காரிய நிமித்தமாகவாகிலும், வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது ஏதோ ஒரு காலத்திற்காகவாகிலும் நிரந்தரமாகவாகிலும் அசையாப்பொருளை அநுபவிப்பதற்குண்டான யாதொரு சுதந்தரத்தை ட்ரான்ஸ்பர்செய்து,

ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவனும் அந்த ஷரத்துக்களின்மேல் அந்த ட்ரான்ஸ்பரை அங்கீகரித்திருக்கும்போது, அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பரானது அந்த அசையாப்பொருளின் (lease) குத்தகை அல்லது வாடகையாகும்.

குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவன் - குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவன் - மேல்வாசி- குத்தகை அல்லது வாடகை (rent) என்பவற்றிற்கு அர்த்தம்.

ட்ரான்ஸ்பர்செய்தவன் குத்தகை அல்லது வாடகைக்குவிட்டவனென்றும் ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவன் குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டவனென்றும் சொல்லப்படுகிறார்கள்; அந்தக்கிரயம் மேல்வாசி என்று சொல்லப்படுகிறது; அப்படி கொடுக்கப்படவேண்டிய பணம் அல்லது பங்கும் செய்யப்படவேண்டிய ஊழியம் அல்லது வேறே காரியமும் குத்தகை அல்லது வாடகை (rent)* என்று சொல்லப்படும்.

எழுத்து மூலமான கான்ட்ராக்ட்டாவது பிரதேச வழக்கமாவது இல்லாவிடில் சிலகுத்தகை அல்லது வாடகைகள் செல்லுங் காலம்.

106. மாறான கான்ட்ராக்ட்டாவது பிரதேச சட்டமாவது வழக்கமாவது இல்லாவிடில், சாகுபடிக்காகவாகிலும் வஸ்துசெய்யப்படுவதற்காகவாகிலும் அசையாப் பொருளை குத்தகை அல்லது வாடகைக்குவிட்டிருப்பது வருஷவாரி குத்தகை அல்லது வாடகையாக எண்ணப்படும்; அது குத்தகை அல்லது வாடகைக்கு விட்டவனாவது வாங்கிக்கொண்டவனாவது அநுபோக வருஷக்கடைசியோடு நோட்டிஸ் கெடுவு கழியும்படியான ஆறுமாதத்திய நோட்டிஸ் கொடுப்பதனாலே முடிந்துபோவதாகும்; வேறே யாதொரு காரியத்திற்காக அசையாப் பொருளை குத்தகை அல்லது வாடகைக்குவிடுவது மாதவாரி குத்தகை அல்லது வாடகையாக எண்ணப்படும்; அது குத்தகை அல்லது வாடகைக்குவிட்டவனாவது வாங்கிக்கொண்டவனாவது அநுபோக மாதக் கடைசியோடு நோட்டிஸ் கெடுவுகழியும்படியான பதினைந்துநாளைய நோட்டிஸ் கொடுப்பதனாலே முடிந்துபோவதாகும்.

இந்தப் பிரிவின்படி கொடுக்கிற பிரதி நோட்டிஸையும் எழுதி அதைக்கொடுக்கிற நபராவது அவர் பட்சத்திலாவது கையெழுத்து

---

* பின்வரும் பிரிவுகளிலே, "குத்தகை அல்லது வாடகைத்தொகை" "குத்தகை அல்லது வாடகைப்பணம்" என்று பிரயோகித்திருக்கிற வசனங்களுக்கு. இந்த உட்பிரிவில் "குத்தகை அல்லது வாடகை" (rent) என்பதற்கு உண்டாகிய அர்த்தத்தைத்தான்கொள்ளவேண்டும். **Translator's Note.**

செய்து, அதற்கு யாரை உடன்படுத்த உத்தேசமோ அந்த நபருக்கு நேராயாகிலும், அந்த நபருடைய இருப்பிடத்திலே அவருடைய குடும்பத்திலுள்ள யாருக்காகிலும் அவருடைய வேலைக்காரர்களில் யாருக்காகிலும் அதை வாங்கிக்கொள்ளச்சொல்லிக் காட்டவாவது ஒப்பிக்கவாவதுவேண்டும்; அல்லது (அப்படி காட்டுவதற்காகிலும் ஒப்பிப்பதற்காகிலும் கூடாததாயிருக்கிற பட்சத்தில்) அந்த சொத்தில் எல்லாருக்குந்தெரியும்படியான பக்கத்திலே ஒட்டவாவதுவேண்டும்.

குத்தகை அல்லது வாடகைசெய்கிறவிதம்.

107. வருஷவாரியாகவாவது ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட காலத்திற்காகவாவது வருஷாந்தர குத்தகை அல்லது வாடகைத்தொகையை ஏற்படுத்தியாவது அசையாப்பொருளை குத்தகை அல்லது வாடகைக்கு விடுவது ரெஜிஸ்டர்செய்யப்பட்ட ஆதரவு மூலமாய்த் தான் செய்யப்படக்கூடும்.

அசையாப்பொருளை மற்றபடி குத்தகை அல்லது வாடகைக்கு விடுவதையெல்லாம் ரெஜிஸ்டரான ஆதரவு மூலமாயாவது வாய்மொழி உடன்படிக்கையினலாவது செய்வதுமல்லாமல் சொத்தை ஸ்வாதீனமும் பண்ணுவிக்கலாம்.

ஆனல், வருஷாவருஷம் செய்யப்படும் குத்தகைகளாவது ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட யாதொரு காலத்திற்குச் செய்யப்படும் குத்தகைகளாவது ஒரு வருஷத்துக்-குத்தகை அல்லது வாடகைத் தொகையைச் செலுத்துவதென்னும் ஏற்பாட்டின்படிக்கான குத்தகைகளாவது அப்படிப்பட்ட குத்தகைகளைச்சேர்ந்த யாதொரு இனமாவது தவிர அசையாப்பொருளின் மற்றக்குத்தகைகளை, ஸ்வாதீனம் செய்யாமலே ரெஜிஸ்டராகாத ஆதரவு மூலமாயாவது வாய்மொழி உடன்படிக்கையினலாவது செய்துகொள்ளலாமென்று பிரதேச கவர்ன்மெண்டார் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்-ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு அப்போதைக்கப்போது பிரதேச சர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாகக் கட்டளையிடலாம்.

*　　*　　*　　*

விவசாயத்தின் பொருட்டான குத்தகை அல்லது வாடகைகளுக்கு நிவாரணை.

117. அந்தந்தக் காலத்தில் பிரதேச சட்டமேதாவது வழங்கிக்கொண்டிருந்தால் அதிலுள்ள திட்டங்கள் சகிதமாயாவது திட்டங்களுக்குட்பட்டாவது, இந்த அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள் சகலமுமாகிலும் அவைகளில் எதுவாகிலும் விவசாயகாரியங்

களுக்காக விடப்பட்ட குத்தகை அல்லது வாடகைகளுக்கு அப்படிப் பட்டவைகள் யாவற்றின் விஷயத்திலுமாவது அவைகளின் எதன் விஷயத்திலாவது சம்பந்தப்படவேண்டியதென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மென்டார் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அநுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு அவ்வவ்விடத்திய சர்க்கார் கெஜட்டில் பிரசித்தஞ்செய்யப்பட்ட விளம்பரமூலமாய் நிர்ணயிக்கிறமட்டில் தவிர, அப்படிப்பட்ட நிபந்தனைகளெதுவும் விவசாயத்தின் பொருட்டான குத்தகை அல்லது வாடகைகளுக்குச் சம்பந்தப்படமாட்டாது.

அப்படிப்பட்ட விளம்பரம் பிரசித்தஞ்செய்யப்பட்டதேதிமுதல் ஆறுமாதம் கழிகிறவரையில் அது அமுலுக்கு வரமாட்டாது.

பரிவர்த்தனையைக் குறித்து.

பரிவர்த்தனைக்கு விவரணம்.

118. ஒரு பொருளின் சொத்துவத்தை வேறொரு பொருளின் சொத்துவத்துக்காக இரண்டுபேர் பரஸ்பரமாய் ட்ரான்ஸ்பர் செய்தால், அந்தப்பொருள்களிலெதுவும் பணமாகவே இராவிட்டாலும் அவ்விரண்டும் பணமாகவே இருந்தாலும், அந்த விவகாரம் பரிவர்த்தனை யென்று சொல்லப்படுகிறது.

பரிவர்த்தனை நிறைவேற்றுவதற்கு சொத்தை ட்ரான்ஸ்பர் செய்யும்போது, விற்பனை மூலமாய் அந்த சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்காக விதிக்கப்பட்டிருக்கிற விதமாய்த்தான் ட்ரான்ஸ்பர் செய்யக்கூடும்.

* * * *

தானங்களைக் குறித்து.

தானமென்பதற்கு அர்த்தம்.

122. தானஞ்செய்வதனென்று சொல்லப்படுகிற ஒருவனால் தானம்பெற்றவனென்று சொல்லப்படுகிற வேறொருவனுக்குச் சுதாவாய் ஐவேஜில்லாமல் அப்போதிருக்கிற ஏதோ ஒரு அசையும்பொருள் அல்லது அசையாப்பொருள் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டு, தானம் பெற்றவனாலாவது அவன்பட்சத்திலாவது அது அங்கீகரிக்கப்பட்டிருக்குமாகில் அந்த ட்ரான்ஸ்பர் தானமாகும்.

அங்கீகரிக்க வேண்டிய காலம்.

தானங்கொடுக்கிறவனுடைய ஜீவிதகாலத்தில், அவனுக்குக் கொடுக்கச் சக்தியிருக்கும்போதே அப்படி அங்கீகரிக்கவேண்டும்.

அங்கீகரிப்பதற்கு முன்னமே தானம்பெற்றவன் இறந்துபோய் விட்டால், அந்த தானம் செல்லாததாகும்.

ட்ரான்ஸ்பர் செய்யவேண்டிய விதம்.

123. அசையாப்பொருளைத் தானஞ்செய்யவேண்டுமானல், தானம் கொடுக்கிறவனாலாவது அவன் பட்சத்திலாவது கையெழுத்திட்டு குறைந்தது இரண்டு பேர் சாட்சிகள் சாட்சி கையெழுத்துபண்ணி ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருககிற ஆதாரவுமூலமாய் அந்த ட்ரான்ஸ்பர் செய்யப் படவேண்டும்.

அசையும்பொருளைத் தானஞ்செய்யவேண்டுமானல், மேற்சொல்லியபடி கையெழுத்திட்டு ரெஜிஸ்ட்டர்செய்யப்பட்டிருக்கிற ஆதாரவு மூலமாயாவது ஒப்பிப்பதனாலாவது அந்த ட்ரான்ஸ்பரைச்செய்யலாம்.

விற்கப்பட்ட சொத்தை எப்படி ஒப்பிக்கலாமோ அவ்விதமாகவே மேற்படி அசையும்பொருளை ஒப்பிக்கலாம்.

* * * *

1872-ம்ஞூத்திய இந்துதேசத்துக் காண்ட்ராக்ட் ஆக்ட்.

செல்லாத உடன்படிக்கைகள்.

எழுதி ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருந்தாலொழிய பிரதி பலனில்லாத உடன்படிக்கை செல்லாது.

25. பிரதி பலனில்லாமல் செய்யப்பட்ட உடன்படிக்கையானது ஒருவருக்கொருவர் நெருங்கின பந்துவாயிருக்கிற இருபட்சத்தாருக்கு முண்டாகிய இயற்கையான ஆசாபாகத்தின்பொருட்டு, வெளிப்படையாயெழுதி, சாஸனங்களை ரெஜிஸ்ட்டர்செய்வதற்காக அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற சட்டப்படி ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டிராவிட்டாலும், * * செல்லாது.

* * * *

திருஷ்டாந்தங்கள்.

(a) பிரதிபலனில்லாமல் பி-என்பவனுக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறதாக ஏ-என்பவன் வாக்குத்தஞ்செய்கிருன். இது செல்லாத உடன்படிக்கை.

(b) இயற்கையான ஆசாபாகத்தைப்பற்றி ஏ-என்பவன் தன் குமாரனுகிய பி-என்பவனுக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறதாக வாக்குத்தத்தஞ்செய்

கிறான் ; எ-என்பவன் பி-என்பவனுக்குத் தான்செய்த காக்குத்தத்தத்தையெழுதி ரெஜிஸ்ட்டர் செய்விக்கிறான். இது கான்ட்ராக்ட் ஆகிறது.

* * * *

திரஸ்ட்டிகளைக்குறித்த 1882-ளுத்து 2-வது ஆக்ட்.

அசையாப் பொருளைக் குறித்துதிரஸ்ட்டு ஏற்பாடு.

5 அசையாப்பொருளைக்குறித்து ஏற்படும் திரஸ்ட்டானது எழுதப்பட்டு, திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவனுலாவது திரஸ்ட்டியினுலாவது கையெழுத்து போடப்பட்டு ரிஜிஸ்தர்செய்கிற உயிலல்லாத யாதொரு ஆதரவினுலாகிலும், திரஸ்ட்டு ஏற்பாடு செய்கிறவன் அல்லது திரஸ்ட்டியினுடைய உயிலினுலாகிலும் தெரிவிக்கப்பட்டிருந்தாலொழிய, செல்லமாட்டாது.

அசையும் பொருளைக் குறித்து திரஸ்ட்டு ஏற்பாடு.

அசையும்பொருளைக்குறித்து ஏற்பட்ட திரஸ்டானது மேற்சொல்லியபடி தெரிவிக்கப்பட்டாகிலும், சொத்தின் ஸ்வாதீனம் திரஸ்ட்டிக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டாலு மிருந்தாலொழிய செல்லமாட்டாது.

இந்த விதிகள் மோசஞ்செய்வதற்காக வியாபிக்கும்படியானதாயிருக்கிற விஷயங்களிலே சம்பந்தப்படமாட்டாது.

* * * *

1877-ம்ஞுத்து ஸ்பெஸிபிக் ரிலீப் என்னும் குறித்த பரிகார ஆக்ட்.

ஆதரவுகளை ரத்துசெய்வதைக்குறித்து.

இன்னபடிக்கானல் ரத்துபண்ண உத்தரவு செய்யலாமென்பது.

39. எழுத்துமூலமான யாதொரு ஆதரவு எவன்மேல் செல்லாததாகவாவது செல்லத் தகாததாகவாவதிருக்கிறதோ அவன் அப்படிப்பட்ட ஆதரவை வெளியில் விட்டுவைத்தால் அதனுலே தனக்குப் பெருங்கெடுதி யுண்டாகலாமென்று நியாயமாய்ப் பயப்படுகிறபட்சத்தில், அப்படிப்பட்டவன் அதைச்செல்லாததாகவாவது செல்லத்தகாததாகவாவது தீர்மானஞ்செய்வித்துக்கொள்ள வியாஜ்ஜியங்தொடரலாம் ; கோர்ட்டாரும் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினுல் அப்படியே தீர்மானஞ்செய்து, அதை ஒப்பித்து ரத்துபண்ணும்படி உத்தரவு செய்யலாம்.

இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டின்படி அந்த ஆதரவு ரெஜிஸ்ட்டர்செய்யப்பட்டிருந்தால், யாருடைய ஆபிஸில் அந்த ஆதரவு

அப்படி ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தருக்குக் கோர்ட்டார் தங்கள் டிக்ரிக்கு நகலை அனுப்பவும்வேண்டும். அதற்குமேல் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரானவர் அந்த ஆதரவு ரத்தான சங்கதியைத் தன் புஸ்தகங்களில் அதற்கு எழுதியிருக்கிற நகலின்மேல் குறித்துக்கொள்ளவேண்டும்.

* * * *

திருஷ்டாந்தங்கள்.

(c) ஏ-என்பவன் தன்னுடைய நிலத்திலிருக்கிற வாடகைதாரர்களெல்லோரும் இஷ்டமுள்ளவர்களாகவே யிருக்கிறார்களென்று தெரிவித்து, அதை பி-என்பவனுக்கு விற்று, 1877-ம் ஜனவரி 1ல் அவனுக்கு விற்கிரயப் பத்திரம் எழுதிக்கொடுக்கிறான். அந்த தினத்திற்குப் பின்பு உடனே, அந்த நிலத்தில் ஓர் பாகத்திற்கு 1876-ஆக்டோபர் 1ல போட்டு ஒரு வாடகைச்சீட்டை சி-என்பவனுக்கு ஏ-என்பவன் மோசடியாய்க்கொடுத்து, அந்த வாடகைச்சீட்டை இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படி ரெஜிஸ்ட்டர் செய்வித்துக்கொள்ளுகிறான். பி-என்பவன் இந்த வாடகைச்சீட்டை ரத்து செய்வித்துக்கொள்ளலாம்.

அனுபந்தம்.

தஸ்தாவேஜுகளின் ரெஜிஸ்ட்ரேஷன் புதிய கட்டண விஷயமாய் சென்னை கவர்ன்மெண்டாரின் விளம்பரம்

1928-ஜனவரி 1ல முதல் அநுஷ்டிக்கவேண்டிய புதிய கட்டண விகிதம்.

1. (a) 1-வது புஸ்தகத்திலும் 4-வது புஸ்தகத்திலும் தாக்கலாகவேண்டிய தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதற்கு—

	ரூ.	அ.	பை.
(1) மதிப்புத்தொகை ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால்	0	4	0
(2) மதிப்புத்தொகை ரூ. 10-க்கு மேற்பட்டும் ரூ. 25-க்கு மேற்படாமலும் இருந்தால் ...	0	6	0
(3) மதிப்புத்தொகை ரூ. 25-க்கு மேற்பட்டும் ரூ. 50-க்கு மேற்படாமலும் இருந்தால் ...	0	8	0

(4) மதிப்புத்தொகை ரூ. 50-க்கு மேற்பட்டும் ரூ. 75-க்கு மேற்படாமலும் இருந்தால் ..	0	12	0
(5) மதிப்புத்தொகை ரூ 75-க்கு மேற்பட்டும் ரூ. 100-க்கு மேற்படாமலும் இருந்தால் ...	1	0	0
(6) மதிப்புத்தொகை ரூ. 100-க்கு மேற்பட்டும் ரூ. 250-க்கு மேற்படாமலும் இருந்தால் ...	1	8	0
(7) மதிப்புத்தொகை ரூ. 250-க்கு மேற்பட்டும் ரூ. 500-க்கு மேற்படாமலும் இருந்தால் ...	2	0	0
(8) மதிப்புத்தொகை ரூ. 500-க்கு மேற்பட்டும் ரூ. 1,000-க்கு மேற்படாமலும் இருந்தால்...	3	0	0
(9) மதிப்புத்தொகை ரூ. 1,000-க்கு மேற்பட்டும் 5,000-க்கு மேற்படாமலும் இருந்தால்,—முதல் ரூ. 1,000-க்கு 8-வது உட்பிரிவின்படியும், அதிகப்படியான பிரதி ரூ. 500-க்காவது அதற்கு குறைந்த துகைக்காவது ...	1	0	0
(10) மதிப்புத் தொகைக்கு ரூ. 5,000-க்கு மேற்பட்டு ரூ. 50,000-த்துக்கு மேற்படாமலிருந்தால்—முதல் 5,000-க்கு 9-வது உட்பிரிவின்படியும், அதற்கு மேற்பட்ட பிரதி ரூ. 1,000 அல்லது அதற்கு குறைந்த துகைக்கு	1	0	0
(11) மதிப்புத்தொகை ரூ 50,000-க்கு மேற்பட்டால்— முதல் ரூ. 50,000-க்கு 10-வது உட்பிரிவில் சொன்னபடியும், அதற்கு மேற்பட்ட பிரதி ரூ. 1,000 அல்லது அதற்குக் குறைந்த பாகத்திற்கும்	0	8	0
(12) வகாலத்து நாமாக்களை ரெஜிஸ்டர் செய்வதற்காக	2	8	0

(b) யாதொரு தஸ்தவேஜின் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தை நிச்சயிப்பதற்கு, அந்த தஸ்தவேஜில் பரிஷ்காரமாய்க் கண்டிருக்கிற "கன்ஸிடரேஷன்", என்னும் பிரதிப்பிரயோஜனத் தொகையை அந்த தஸ்தவேஜின் மதிப்புத்தொகையாகச் சாதாரணமாய் வைத்துக்கொள்ளவேண்டும். பிரதிப்பிரயோஜனத்தொகை ஒரு தஸ்தவேஜில் பரிஷ்காரமாய்க் கண்டிரா

விட்டால், அந்த தஸ்தவேஜில் காட்டியபடி விவரிக்கப்பட்ட சொத்தின் மதிப்புத்தொகையை எடுத்துகொள்ளவேண்டும்

(c) ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தை நிச்சயிப்பதற்காக எடுக்கும் மதிப்புக்கணக்குகளுக்கு, 1899-ம்வருஷத்திய 2-வது ஆக்டாகிய இந்துதேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்டின் 5, 6, 20, 21, 23, 25-வது பிரிவுகளின் நிபந்தனைகள் அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

(d) சம்பளத்துக்கு வேலைசெய்கிறதாகவாவது, அசையும் பொருளை வாடகைக்கு விடுகிறதாகவாவது செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் விஷயத்திலே, தஸ்தவேஜின் மதிப்புத்தொகையை, ஒரு வருஷத்திய சம்பளம் அல்லது வாடகைத் தொகைக்கு மேற்பட்ட தொகையாகக்கொள்ளக்கூடாது.

(e) குத்தகைச்சீட்டுகள் விஷயத்திலே—

(1) குத்தகையின் கெடு ஒரு வருஷமாகவாவது அதற்குக் குறைந்த காலமாகவாவதிருந்தால், அந்தக்கால முழுமைக்கும் ஆகிறமொத்த குத்தகைத் தொகையையும்,

(2) குத்தகையின்கெடு ஒருவருஷத்திற்கு மேற்பட்டிருந்தால்ஒரு வருஷத்திற்குச் சராசரியாகிற குத்தகைத்தொகையையும்,

(3) சாசுவத குத்தகையானல், முதல் ஐம்பது வருஷங்களுக்குச் குச் செலுத்தத்தக்க மொத்த குத்தகைத் தொகையிலே ஐந்தில் ஒரு பாகத்தையும்,—குத்தகைச்சீட்டின் மதிப்புத் தொகையாக வைத்துக்கொள்ளவேண்டும். அபராதமாவது மேல்வாசியாவது கொடுக்கப்பட்டிருந்தாலும், கொடுக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், முன்பணம் செலுத்தப்பட்டிருந்தாலும், அந்தத் தொகையையும் குத்தகைச்சீட்டின் மதிப்புத்தொகையுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். குத்தகைதாரர் குத்தகைத் தொகையோடுங்கூட அஸெஸ்மென்ட் (தீர்வை) க்விட்ரென்ட் முதலியவைகளும் செலுத்துவதாக ஒப்புக்கொள்வாராகில், அவர் அப்படி செலுத்திய தொகையையும் குத்தகை மதிப்புத்தொகையுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். குத்தகைத் தொகையானது தானியமாய்ச் செலுத்தத்தக்கதாக இருந்து அந்தத் தானியத்தின் மதிப்புத்தொகை குத்தகைச்சீட்டில் சண்டிராதபட்சத்திலே, அந்த தஸ்தவேஜின் முத்திரைக்கு உயர்ந்தது எவ்வளவு தொகை வரையில் குத்தகைச் சீட்டெழுதலாமோ அந்த

உயர்ந்த தொகையை, அக்குத்தகைச்சீட்டின் மதிப்புத்தொகையாக வைத்துக்கொள்ளவேண்டும். அந்தக் குத்தகைச்சீட்டு முத்திரைத் தீர்வையினின்றும் நிவாரணையாயிருக்கும் பட்சத்திலே, குத்தகைத் தானியத்தின் ரொக்க மதிப்பானது அந்தந்தக் காலங்களில் தானியங்கள் விற்கும் ஊர்விலைப்படி நிச்சயிக்கப்படும்.

(f) பரீகத்து பத்திரங்களின் விஷயத்திலே, சொத்திலிருந்து பிரிக்கப்பட்ட எந்தபாகம் அல்லது பாகங்களின் மதிப்பின்மேல் முத்திரைத்தீர்வை செலுத்தத்தக்கதாகுமோ, அதை மதிப்புத்தொகையாகவாவது பிரதிப்பிரயோசனத் தொகையாகவாவது எடுத்துக்கொள்ளவேண்டும். (பரீகத்து என்பது பாகம்.)

(g) ஒரு விவகாரத்தின் பிரதிப்பிரயோஜனத்தொகையாவது, அதனல் பாதிக்கப்பட்ட சொத்தின் மதிப்புத்தொகையாவது பரிஷ்காரமாய்க் கண்டிராததாகவாகிலும் அதன் ஒரு பாகமாத்திரம் பரிஷ்காரமாய்க் கண்டிருக்கிறதாகவாகிலும் உள்ள இதர எல்லா தஸ்தவேஜுகள் விஷயத்திலும், தஸ்தவேஜானது மதிப்பின்மேலேற்பாடாகும் வீதங்களின்படி முத்திரைத் தீர்வைக்குள்ளாகத்தக்கதாகயிருந்தால், தஸ்தவேஜுக்குப்போட்டிருக்கும் முத்திரைக்கு உயர்ந்தது எவ்வளவு தொகைவரையில் எழுதலாமோ அவ்வளவு தொகையே அதன் மதிப்புத்தொகையாகும். முத்திரையைக்கொண்டு மதிப்புத்தொகையை நிச்சயிக்கக்கூடாமலிருக்கும்போது, எப்படியென்றால்— தஸ்தவேஜு முத்திரைத்தீர்வைக்கு உள்ளாகாமலிருக்கும்போதாவது பிரஸ்தாப விவகாரத்தின் மதிப்புத்தொகை எவ்வளவாயிருந்தபோதிலும் அதைக் கவனிக்காமலே, இவ்வளவென்று நிஷ்கரிஷையாக ஏற்பட்டிருக்கிற தீர்வைக்குத் தஸ்தவேஜு உள்ளாகத்தக்கதாயிருக்கும்போதாவது, பிரஸ்தாப விவகாரமானது பணத்தினல் மதிப்பிடக்கூடாததாயிருக்கும் போதாவது-விதித்து வாங்கவேண்டிய கட்டணமானது ரூபா 5 ஆகும். ஆனல், சொத்தைச்சேர்ந்த ஒரு பாகத்தின் மதிப்பு அல்லது பிரதிப்பிரயோஜனத்தொகை மாத்திரம் கண்டிருந்து அந்த மதிப்பு 2,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அப்படிக் கண்டிருக்கிற மதிப்புத் தொகையின்மேல் சட்டணம் விதித்து வாங்கப்படும்.

குறிப்பு.—மதிப்பிடமுடியாத சுவல்ப விவகாரங்களைக்குறித்த தஸ்தவேஜுகள் விஷயத்திலே. 5 ரூபாய் கட்டணம் விதித்துவாங்குவது கஷ்டத்தை உண்டு பண்ணுமென்று இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அபிப்பிராயப்படுவோராகில் அதற்குக்

குறைந்ததும் நாலணுவுக்குக் குறையாததுமான கட்டணத்தை அப்படிப்பட்ட விஷயங்களில் விதித்துவாங்கும்படி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அவர் அதிகரங்கொடுக்கலாம்.

(h) பிரதான அல்லது பிரதம கொதுவை கிரமமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்று ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாக மெய்ப்பிக்கப்படுகிற விஷயத்திலே, மேல் ஈடாகவாவது சகாய ஈடாகவாவது உடன் சேர்க்கையான ஈடாகவாவது பர்த்திசெய்யப்பட்ட ஈடாகவாவது இன்னும் அதிக நிச்சயமுண்டாவதற்கான ஈடாகவாவது கொடுப்பதாய்ப் பொருள்படுகிற ஒரு தஸ்தவேஜின்மேல் விதித்து வாங்கத்தக்க ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணமானது-பிரதான அல்லது பிரதம கொதுவைக்காக ஏற்பட்ட கட்டணம் 2 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் அந்தக்கட்டணமாகவே இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அது 2 ரூபா ஆகும்.

(i) முன்னமே ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற யாதொரு தஸ்தவேஜு விஷயமாய்ப் பிரதிப் பிரயோஜனத்தொகை செலுத்தப்பட்டதையோ அல்லது அந்தத்தொகையின் வரவையோ பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுக்கிற தஸ்தவேஜின் மேலும், முன்னமே ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற கொதுவை, குத்தகை முதலியவைகளின்படி சேரவேண்டிய கடன்தொகைகள் அல்லது குத்தகைத் தொகைகள் செலுத்தப்படுவதைப்பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுக்கும் யாதொரு ரசீதின்மேலும் விதித்துவாங்கத்தக்க ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணமானது 1-வது பிரிவின் (a) குறிப்பிட்ட உட்பிரிவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடி மதிப்பின்மேல் ஏற்படுவதாகும்; ஆனல் அப்படி விதிக்கப்படும் கட்டணம் ரூபா 2-க்கு மேற்படக்கூடாது.

(j) அசல் தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொண்டுவந்து கொடுக்கப்படுகிற தினத்திலேயே, அதன் நகலையாவது எதிரிடையையாவது ரெஜிஸ்டர்செய்யக் கொண்டுவந்துகொடுத்தால், அசல் தஸ்வேஜும் ரெஜிஸ்டர் செய்யப்படுகிற பட்சத்திலே, அசல் நகல் அல்லது எதிரிடையை ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கட்டணமானது:-

(1) பிரதி நகலுக்கும், எட்டு அணுவாக நிஷ்கரிஷையான ஒரு கட்டணம்.

(2) எதிரிடைக்கு, உறுதிமொழி கூறப்பட்ட நகல்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமும் ஆகும்.

ஆனல், மேற்படி எட்டு அணு வீதமாவது நகல் செய்வதற்கான கட்டணமாவது ரெஜிஸ்டர் செய்வதற்கான சாதாரண கட்டணத்தை விட அதிகமாயிருந்தால் பின் சொன்ன கட்டணத்தை விதித்து வாங்க வேண்டும்.

(k) ஸிவில் இலாக்காவிலாவது இராணுவ இலாக்காவிலாவது வேலையாயிருக்கும் யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் தம்முடைய சொந்த உபயோகத்திற்காக ஒரு குடியிருப்பு வீட்டைக் கட்டிக்கொள்ளும் காரியத்துக்காகவோ, வாங்கும் காரியத்துக்காகவோ மராமத்து செய்வதற்காகவோ, அல்லது ஒரு மோட்டார் படகை யாவது மோட்டார் வண்டியையாவது வாங்கும் காரியத்துக்காகவாவது அவர் பெற்றிருக்கும் முன்பணத்தொகையைத் திருப்பி செலுத்தி விடும்படி செய்வதற்காக அவர் எழுதிக்கொடுக்கும் கொதுவைப் பத்திரத்தின் பேரில் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணமெதுவும் விதித்துவாங்கக் கூடாது.

2. தர்ஜுமா தாக்கல்செய்வதற்கு (19-வது பிரிவு)— விசேஷகட்டணம்	1	0	0
3. (1) 30-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் செய்யும் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு,—விசேஷகட்டணம்...	5	0	0

ஆனல், தஸ்தவேஜு சம்பந்தப்படுகிற விவகாரத்தில் ஸப்-ரெஜிஸ்ட்ரார் பாத்தியதையுடையவராயிருக்கும் காரணத்தினல், அந்த தஸ்தவேஜை டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் ரெஜிஸ்டர் செய்யும்போது ஷெ விசேஷ கட்டணம் வசூல்செய்யக்கூடாது.

(2) 30-வது பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி, மதராஸ் ரெஜிஸ்ட்ராரால் செய்யப்படும் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு—

	ரூ.	அ.	பை.
விசேஷ கட்டணம்	10	0	0

குறிப்பு:—யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யும் விஷயமாக விசேஷ கட்டணம் கட்டப்பட்டிருந்தால், அந்த தஸ்தவேஜின் நகலையாவது எதிரிடையையாவது, அதன் அசல் தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்யக்கொடுக்கிற தினத்திலேயே கொண்டுவந்து ஆஜர்செய்து அந்த அசல் தஸ்தவேஜும் ரெஜிஸ்டர்செய்யப்படுகிற பட்சத்தில், அதை ரெஜிஸ்டர் செய்வதற்காக 1-வது 2-வது பிரிவுகளின்படி அதிகப்படியான விசேஷகட்டணம் ஒன்றும் வாங்கப்படமாட்டாது.

4. 64, 65, 66, 67-வது பிரிவுகளின்படி யாதாஸ்து—
தேவையான ஒவ்வொரு பிரதிக்கும் 0 4 0

5. மரண சாஸனங்களையும் ஸ்வீகாரஞ் செய்து கொள்வதற்கான அதிகாரபத்திரங்களையும் ரெஜிஸ்டர் செய்வது (3-ம்புஸ்தகம்)—

(1) முத்திரைபோட்ட உறையைத் திறப்பதற்கும் அதில் உள்ளதை ரெஜிஸ்டரில் பதிவதற்கும் 2 0 0

நகல் தயார்செய்வதற்கு ஏற்படுத்தியிருக்கிற கட்டணம் வசூல் செய்வதோடுங்கூட.

(2) உறையில் அடக்கஞ்செய்யாமல் ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் மரணசாஸனத்திற்காவது ஸ்வீகாரம் செய்துகொள்வதற்கான அதிகாரப்பத்திரத்திற்காவது 4 0 0

ஆனல், எவைகளில் விவகரிக்கப்பட்ட சொத்தின் மதிப்பு கண்டிருந்து அந்தமதிப்பு ரூ. 1000-க்கு மேற்படாமலிருக்கிறதோ அந்த மரணசாஸனங்களின் விஷயத்திலே ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணமானது 1-ம் பிரிவு (a) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட மதிப்பின்மேலேற்பாடாகும் வீதத்தின்படியாகும்.

6. முத்திரைபோட்ட உறைகள் (5-வது புஸ்தகம்)—

(1) மரணசாஸனம் உள்ளேயிருப்பதாகப் பொருள்படுகிற முத்திரைபோட்ட உறை கட்டிவைப்பதற்கு ... 2 0 0

(2) அப்படிப்பட்ட யாதொரு முத்திரைபோட்ட உறையை மறுபடியும் வாங்கிக்கொள்வதற்கு ... 2 0 0

7. வகாலத்து நாமாக்களில் அத்தாட்சி கையெழுத்துசெய்வது—

(1) விஷேச வகாலத்துக்கு 0 8 0

(2) பொது வகாலத்துக்கு 1 0 0

குறிப்புகள்:—(1) *ஒரு வக்காலத்து நாமாவில் எத்தனைபேர் கையெழுத்து செய்தாலுஞ்சரி, அதில் அத்தாட்சி கையெழுத்துசெய்ய ஒரே கட்டணம் தான் விதித்து வாங்கவேண்டும். ஆனல், அவர்களெல்லோரும் விசாரணைக்காக ஏககாலத்தில் ஆஜராகவேண்டும். அந்தப்படி அவர்கள் ஆஜராகாதபட்சத்தில், சிற்சில நபர்கள் சேர்ந்து ஆஜராகும் ஒவ்வொரு தடவையிலும் அவர்களுக்காகத் தனிக் கட்டணம் விதித்து வாங்கவேண்டும்.*

(2) ஒரு வக்காலத்து நாமாவின் இரண்டாம் பிரதி அல்லது மூன்றாம் பிரதியானது சரியானதென்று உறுதி கூறப்படுவதற்காக கொடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில், அதைப் பிரத்தியேகமான வகாலத்து நாமாவாக எண்ணி, அதி

ல் அத்தாட்சிக் கையெழுத்து செய்வதற்காக அதற்குப் பிரத்தியேகமாய்க் கட்டணம் விதித்து வாங்கவேண்டும்.

8. பொதுவானதல்லாத ஒருவருடைய வாசஸ்தலத்திற்கு போவது—

(1) (a) ஒருவராலேயே எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு தஸ்தவேஜையாவது பல தஸ்தவேஜுகளையாவது ரெஜிஸ்டர் செய்வதற்காகிலும்,

(b) ஒரே நபர் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு தஸ்தவேஜையாவது பல தஸ்தவேஜுகளையாவது ரெஜிஸ்டர் செய்ய அங்கீகரிப்பதற்காகிலும், ஒரு நபரால் எழுதி முடிக்கப்பட்ட மரணசாஸனத்தை டிபாஸிட் செய்துவைக்க அங்கீகரிப்பதற்காகிலும்,

(c) ஒருவராலேயே எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு வகாலத்து நாமாவிலாவது பல வகாலத்துநாமாக்களிலாவது அத்தாட்சிக் கையெழுத்து செய்வதற்காகிலும்,

(d) 33 அல்லது 38-வது பிரிவின்படி ஒரு நபரையே விசாரிப்பதற்காகிலும்,

அந்த நபருடைய வாசஸ்தலத்திற்குப் போகவேண்டியிருக்கிற ஒவ்வொரு தடவைக்கும் பிரயாணவர்த்தனையோடுங்கூட ரூ. 15 விசேஷக்கட்டணம் செலுத்தவேண்டும்.

(2) (a) சிறைச்சாலையிலிருக்கும் யாதொரு நபரால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு தஸ்தவேஜையாவது பல தஸ்தவேஜுகளையாவது ரெஜிஸ்டர் செய்வதற்காகிலும்,

(b) அந்நபர்பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு தஸ்தவேஜையாவது பல தஸ்தவேஜுகளையாவது அங்கீகரிப்பதற்காகிலும், அவரால் எழுதி முடிக்கப்பட்ட ஒரு மரணசாஸனத்தை டிபாஸிட்செய்துவைக்க அங்கீகரிப்பதற்காகிலும்,

(c) அப்படிப்பட்ட நபரால் எழுதிகொடுக்கப்பட்ட ஒரு வகாலத்து நாமாவிலாவது பல வகாலத்து நாமாக்களிலாவது அத்தாசிக்கையெழுத்து செய்வதற்காகிலும்,

(d) அப்படிப்பட்ட நபரை 33-வது அல்லது 38-வது பிரிவின்படி விசாரிப்பதற்காகிலும்,

சிறைச்சாலைக்குப் போகவேண்டியதற்காகப் பிரயாணவர்த்தனை யோடுங்கூட ரூ. 5 கட்டணம் செலுத்தவேண்டும்

(3) ஒருவருடைய வாசஸ்தலத்தில் ஒரு பெண்பிள்ளையினுடைய உதவிவேண்டியதாயிருந்தால் ரூ. 3 அதிக கட்டணம் கொடுக்க வேண்டும்.

ஆனால், இரண்டுபேராவது இரண்டுக்கு மேற்பட்டவர்களாவது ஒரேதஸ்தவேஜைச்சேர்ந்த கட்சிக்காரர்களாயும், ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸில் ஆஜராகவேண்டியதினின்றும் நிவாரணை செய்யப்படுவதற்கு உரியவர்களாயிருந்து, அவர்கள் ஒரே இடத்தில் வசித்துக்கொண்டிருந்தாலும், இரண்டுபேராவது இரண்டுக்கு மேற்பட்டவர்களாவது ஒரேதஸ்தவேஜைச்சேர்ந்த கட்சிக்காரர்களாயிருந்து சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் சம்பந்தப்படுகிற மட்டிலே அவர்களுடைய வாசஸ்தலத்திற்குப் போவதற்காவது கம்மிஷன் அனுப்புவதற்காவதுள்ள ஒரு கட்டணம் மாத்திரம் வாங்கப்படும்; அப்படிப்பட்ட விஷயத்தில், அங்கு வருவதற்கு மறுபடியும் கட்டணம் யாதொன்றும் செலுத்தாமலே, ரெஜிஸ்ட்ரேஷனுக்காகவாகிலும் அத்தாட்சிக்கையெழுத்துக்காகவாகிலும் எத்தனை தஸ்தவேஜுகளையாவது வகாலத்து நாமாக்களையாவது அப்போதுகொடுக்கவோ, அல்லது ரெஜிஸ்ட்ரேஷனுக்காகக் கொடுக்கப்பட்ட எத்தனை தஸ்தவேஜுகளையாவது எழுதிக்கொடுத்ததுண்டென்று ஒப்புக்கொள்ளவோ, ஒரு மரணசாஸனத்தை டிபாஸிட் செய்துவைக்கவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் சுதந்தரமுண்டு.

குறிப்பு—ஜில்லா ரெஜிஸ்ட்ரார் மேலே (1), (2), (3) குறிப்பிட்ட விதிகளின்படி கட்டணம் வாங்குவது கஷ்டத்திற்கு இடமாயிருக்குமென்று அபிப்பிராயப்படுவாராகில், தமக்கு யுக்தமாகத்தோற்றினால் அந்தக் கட்டணத்தை மன்னித்துவிடலாம்.

9. யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்த பிறகாவது ரெஜிஸ்டர்செய்ய நிராகரித்துவிட்ட பிறகாவது பதினைந்து நாள் வரையில் வந்து கேளாமலிருந்தால், அதைப் பத்திரப்படுத்திவைப்பதற்காக யாதொரு கட்டணமும் வாங்கப்படமாட்டாது; ஆனால், ஷை தஸ்தவேஜை வாபஸ்பண்ணுவதற்கு அது சித்தமாயிருக்கிற தேதி முதல் கணக்கிடப்படும்; மேற்படி முதல் பதினைந்து தினத்திற்குப் பிறகு பிரதி பதினைந்து நாள்களுக்காவது அதற்குக் குறைந்தநாள்களுக்காவது 4 அணு வீதம் கட்டணம் விதித்து வாங்கும் கட்டணம் 2-ரூபாய்க்கு மேற்படக்கூடாது.

குறிப்பு:—ஜில்லா ரெஜிஸ்ட்ரார் அப்படி கட்டணம் வசூலிப்பதனுல் அரியாயத்திற்காவது கஷ்டத்திற்காவது இடமுண்டாகுமென்று அபிப்பிராயப்படுவாராகில், தமக்கு யுக்தமாகத்தோற்றினுல் அந்தக் கட்டணத்தை மன்னித்து விடலாம்.

10. 1908-ம்௵த்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் 36-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஸம்மன்களைச் சேர்ப்பிப்பதற்காகவும், வரவழைக்கப்பட்ட சாக்ஷிகளுக்கும், பத்திரமெழுதிக் கொடுத்தவர்களுக்கும், படி கொடுப்பதற்காகவும், டிஸ்ட்ரிக்ட் முனிஸிப்கோர்ட்டுகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வீதங்களின்படி கட்டணம் விதித்து வாங்கப்படும். மதராஸ் டிஸ்ட்ரிக்ட் விஷயத்தில் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகள் கோர்ட்டுகளுக்கு ஏற்பட்டுள்ள வீதப்பிரகாரம்ஷெ கட்டணம் வாங்கப்படும். 75-வது பிரிவின்படி ரெஜிஸ்ட்ரார்களால்பிறப்பிக்கப்பட்ட ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளுக்கு, ஸிவில் விவகாரங்களில் அசல் விசாரணை அதிகாரமுள்ள பிரதான கோர்ட்டில்ஏற்பாடாயிருக்கிற வீதப்பிரகாரம் கட்டணம் வசூல் செய்யவேண்டும்.

11. (1) பொதுவானதல்லாத ஒருவருடைய வாசஸ்தலத்துக்காவது, ஒரு சிறைச்சாலைக்காவது, போவதற்கும் அங்கிருந்து திரும்பி வருவதற்கும், ரெஜிஸ்டர்செய்கிற உத்தியோகஸ்தர், தமக்காகவும் தம்முடன்கூட ஒரு சேவகன் போகும்பட்சத்தில் அதற்காகவும் வாஸ்தவத்தில் பிடிக்கும் பயணச்செலவை விதித்து வாங்கவேண்டும்.

(2) ரெயில் மார்க்கமாய்ச்செய்யும் பிரயாணத்துக்கு அந்தப்படி வாஸ்தவத்தில் பிடிக்கும் பயணச் செலவானது—ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தர் ஸிவில் ஸெர்விஸ் ரெகுலேஷன்படி எந்த வகுப்புக் கட்டணத்துக்கு அர்ஹராயிருக்கிருரோ அந்த கட்டணத்துக்கும், சேவகன் விஷயத்தில் கடைசி வகுப்புக் கட்டணத்துக்கும் மேற்படக் கூடாது.

(3) ரஸ்தா மார்க்கமாகச் செய்யும் பிரயாணத்துக்கு வாஸ்தவத்தில் பிடிக்கும் பிரயாண செலவானது அடியிற்கண்ட அதமதொகைக்கும் உச்சதொகைக்கும் உட்பட்டதாகும்.

உத்தியோகஸ்தர்.	1-மைலுக்கு. அதமம்.			உச்சம்.		
டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார்	1	8	0	0	12	0
சென்னை ராஜதானி பட்டணத்திலுள்ள ஸப்-ரெஜிஸ்ட்ரார்	1	0	0	0	8	0
சென்னை ராஜதானி பட்டத்துக்கு வெளியிலுள்ள ஸப்-ரெஜிஸ்ட்ரார்	0	12	0	0	6	0

ரஸ்தா மார்க்கமாய் செய்யும் பிரயாணத்தில், ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தருடன்கூடப்போகிற ஒருசேவகன் அல்லது இதரமான தாழ்ந்த கவர்ன்மெண்ட் ஊழியக்காரனுக்கு, அவன் பிரயாணம்செய்யும் தூரம் போகும்போதாகிலும்சரி, வரும்போதாகிலும்சரி, 5 மைலுக்கு மேற்பட்டிருந்தால், ஸிவில்செர்விஸ் ரெகுலேஷன்களின்படி கொடுக்கப்படத்தக்க அன்றாடவர்த்தனை கொடுக்கப்படும்.

ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் பிரயாணம் செய்யவேண்டிய தூரம் முழுமையிலும் கட்சிக்காரரால் கொடுத்துதவப்பட்ட வண்டியில் பிரயாணம் செய்யும்பட்சத்தில் பிரயாணவர்த்தனை எதுவும் விதித்து வாங்கக்கூடாது.

ஒரு ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர் ஒரே கிராமத்தில் இரண்டு அல்லது இரண்டுக்கு அதிகப்பட்டவாசஸ்தலங்களுக்கு போகவேண்டியிருந்தால், ஒருபிரயாணத்துக்கு எவ்வளவு வசூலிக்கலாமோ, அவ்வளவே பிரயாணச்செலவு மொத்தம்,—மொத்த விண்ணப்பதாரார்களிடமிருந்தும் வசூலிக்கவேண்டும். ஆனல், ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமிருந்தும் சரிபிரிவாய் வாங்கவேண்டும்.

12. பொதுவானதல்லாத ஒருவருடைய வாசஸ்தலத்திற்குப் போய் விசாரணைசெய்து வரும்படியாக ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ரார் அனுப்புகிற எந்த நபருக்கும் மைல் ஒன்றுக்கு 2 அணு வீதம் பிரயாணவர்த்தனை கொடுக்கப்படும்.

13. (1) ஒரு தஸ்தவேஜையாவது பதிவையாவது தேடுவது அல்லது பார்வையிடுவது.—

	ரூ.	அ.	ப.
எந்த வருஷத்து புஸ்தகங்களில் தேடப்படுகிறதோ அப்படிப்பட்ட முதல் வருஷத்திற்குப் பிரதி பதிவு அல்லது தஸ்தவேஜுக்காக	1	0	0
வேறே எந்த வருஷத்து புஸ்தகங்களில் இன்னும் தேடப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு வருஷத்திற்கும் பிரதி பதிவு அல்லது தஸ்தவேஜுக்காகவும். ...	0	4	0

(2) ஒரே சொத்தின் சம்பந்தமானதாகவாவது ஒரே நபரினலாகிலும் ஒரே நபருக்காகிலும் எழுதிக் கொடுக்கப்பட்டதாகவாவதுள்ள பல தஸ்தவேஜுகளையாகிலும் பதிவுகளையாகிலும் பொதுவாய்த்தேடுவது அல்லது பார்வையிடுவது.—

எந்த வருஷத்து புஸ்தகங்களில் தேடப்படுகிறதோ அப்படிப்பட்ட முதல் வருஷத்திற்கு 2 0 0

வேறே எந்தவருஷத்து புஸ்தகங்களில் இன்னும் தேடப்படுகிறதோ அப்படிப்பட்ட பிரதி வருஷத்திற்கும் 0 8 0

ஆனல்.—

(a) நில விருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படிக்காவது விவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்பதைக் குறித்த ஆக்டின்படிக்காவது கொடுக்கப்படும் கடன் ரூ 750, க்கு மேற்படாமலிருக்கும்பட்சத்தில் அந்தக்கடனுக்குஈடாகக்காட்டப்படும் சொத்தின்விஷயமாகவாகிலும்,

(b) ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் தம்முடைய அலுவலைச் சரியாய்ச் செய்யும்பொருட்டு ஈடாகக்காட்டும் சொத்தின்விஷயமாகவாகிலும்,

சிக்குச்சிலுக்குகளில்லையென்று கூறும் உறுதிமொழிப்பத்திரிகையாகியஎன்கம்ப்ரன்ஸ் ஸெர்டிபிகேட்டை ஒருசர்க்கார் உத்தியோகஸ்தர் கொடுக்கும் நிமித்தம் அவர்விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல்பொதுவான பரிசோதனை செய்யப்படும்போது, எந்த புஸ்தகங்களில் அப்பரிசோதனை செய்யப்படுகிறதோ அப்புஸ்தகங்களிலுள்ள வருஷங்களின் சங்கியையை யோசிக்காமலே நிஷ்கரிஷையான ஒரு ரூபாய்மாத்திரம் கட்டணமாக விதித்துவாங்கப்படும்.

குறிப்பு:—(1) யாதொரு பரிசோதனையைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அந்தப்பரிசோதனை பூர்த்தியான தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குப் பிறகு செய்துகொள்ளப்பட்டால், அதை நூதன விண்ணப்பமாகப் பாவித்து, எந்தவருஷத்தின் புஸ்தகங்களில் அந்தப்பரிசோதனையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று விரும்பப்படுகிறதோ அப்படிப்பட்ட முதல்வருஷத்துக்கு உயர்ந்த கட்டணங்களாகிய ரூபா 1-ம் ரூபா 2-ம் முறையே வாங்கப்படும்.

(2) சரியானதென்று உறுதிமொழி கூறப்பட்ட ஒரு நகல் வேண்டுமென்பதாகச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், அசல் தஸ்தவேஜு ரெஜிஸ்டர்செய்யப்படுகிறகாலத்திலேயே செய்துகொள்ளப்பட்டாலொழிய தேடுவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பமாக எண்ணப்பட்டு அதற்கு அதன்படி கட்டணம் வாங்கப்படும்; ஆனல் விண்ணப்பதாரர் யாதொரு பதிவின் நம்பரையும் வருஷத்தையும், சம்பந்தப்பட்டநபர்களின் பெயர்களையும் தஸ்தவேஜு என்ன விதமானதென்பதையும் ஷை. விண்ணப்பத்தில்சொல்லும்பட்சத்தில் சரியானகட்டணம் செலுத்தப்படுவதன்மேல் பொதுவாகவோ தனியாகவோ தேடிப்பார்க்கை

யில் அகப்படும் பதிவுகளுக்குநகல்கொடுத்தால் அதற்காகத் தேடுங்கட்டணம் இரண்டாம்முறை வசூல்செய்யப்படமாட்டாது.

(3) ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் இந்தப்பிரிவின்படி விதித்து வாங்கத்தக்க கட்டணமுழுவதையும் வசூல்செய்வதனல் கஷ்டமுண்டாகுமென்று அபிப்பிராயப்படுவாராகில், தமக்குயுக்தமாகத்தோற்றினல் அந்தக்கட்டணத்தில் ஒருபாகத்தை மன்னித்துவிடலாம்.

14. யாதொரு ஆபீஸுக்கு அனுப்பும்பொருட்டாவது யாதொரு நபருடைய பிரயோஜனத்தின் பொருட்டாவது தஸ்தவேஜுகள் அல்லது பதிவுகள் அல்லது நியாயங்களுக்கு நகல் எழுதுவது அல்லது கொடுப்பது.—

	ரூ.	அ.	பை.
(1) இங்கிலிஷிலாகிலும் ரெஜிஸ்ட்ரேஷன் ஸப்-டிஸ்ட்ரிக்டின் சுதேச பாஷையிலாகிலும்—			
ஒவ்வொரு 100 வார்த்தைகளுக்காவது அதற்குக்குறைந்த வார்த்தைகளுக்காவது ...	0	1	0
(2) வேறே யாதொரு சுதேச பாஷையிலே—			
ஒவ்வொரு 100 வார்த்தைகளுக்காவது அதற்குகுறைந்தவார்த்தைகளுக்காவது ...	0	3	0

(3) உருவப்படங்களுக்காவது நக்ஷாக்களுக்காவது நகல்கொடுக்கவேண்டியிருக்கிற விஷயத்திலே, ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர் நியாயமான ஒருகட்டணத்தை அதற்கென்றே ஏற்படுத்தவேண்டும்.

குறிப்பு:—இத்தனை வார்த்தைகள் இருக்கிறதென்று கணக்கிடுகையில், பிரதி எண்ணையும், இனிஷலை (பெயரின் முதற்குறிப்பெழுத்தையும்) அல்லது சுருக்கக் குறிப்பையும் ஒருவார்த்தையாக எண்ணவேண்டும்.

(a) ஆனல், இந்தவிதியின் (2) குறிப்பிட்ட பகுதியில் குறித்திருக்கும் சுதேசபாஷை நன்றாய்த்தெரிந்த ஒரு குமஸ்தா ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிஸில் இருப்பாரானல், அந்தபாஷையில் எழுதியிருக்கும் தஸ்தவேஜுகளுக்கு நகல்கொடுப்பதற்காக, (1) குறிப்பிட்டபகுதியில்ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டணமே வாங்கப்படும்,

(b) மேலும், ஏற்படுத்தப்பட்டிருக்கிற வீதப்பிரகாரம், தஸ்தவேஜுகளுக்கும் பதிவுகளுக்கும் நகல்கொடுப்பதற்கு வாங்கவேண்டிய கட்டணங்களைக் கணக்கிடுகையிலே, அப்படிவாங்கும் கட்டணம் சரியா

என்பதைப்பற்றி விண்ணப்பதாரர் ஆக்ஷேபித்தாலன்றிமற்றப்படி, அந்தபதிவுகளிலாவது தஸ்தவேஜுகளிலாவது எத்தனைவார்த்தைகள்இருக்கின்றனவென்று பதம்பதமாய் எண்ணவேண்டியஅவசியமில்லை; ஆனால், ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர் அப்படிப்பட்டபதிவுகளிலாவது தஸ்தவேஜுகளிலாவது எத்தனைவார்த்தைகள்இருக்கலாமென்று நியாயமாய் உத்தேசங்கொண்டு மதிக்கிறரோ, அந்தமதிப்பின்படி கட்டணம் வசூல்செய்துவிடலாம்.

குறிப்பு:—கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் வாஸ்தவத்தில் பொதுகாரியங்களுக்காக ரெஜிஸ்டர்களைத் தேடவோ பதிவுகளுக்கு நகல் எடுக்கவோவேண்டியிருக்கிற பட்சத்தில் யாதொரு கட்டணமும் செலுத்தாமலே அந்தப்படிசெய்து கொள்ள அவர்களுக்கு அனுமதிகொடுக்கவேண்டும்.

(4) யாதொரு விண்ணப்பதாரரின் செலவில் ஒரு நகல் அச்சிடப்பட்டாலும், யாதொரு விண்ணப்பதாரர்-ஏற்கெனவே ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜுக்கு ஒரு அச்சிட்ட நகலைக்கொண்டுவந்து கொடுத்து அதற்கு உறுதிமொழி கூறப்பட்ட ஒருநகல் வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டாலும், உறுதிமொழி கூறப்பட்ட நகலிலே கையெழுத்தில் எழுதிச்சேர்க்கப்பட்ட பாகத்துக்கு மாத்திரமே நகல் செய்வதற்காக ஏற்பட்டுள்ள சாதாரண வீதங்களின்படி கட்டணம் விதித்து வாங்கவேண்டும்; அதோடுகூட, பிரதி நகலையும் ஒத்திட்டுப்பார்த்து அதற்கு உறுதிமொழிகூறுவதற்காக நிஷ்கரிஷையான கட்டணம் இரண்டு அணு விதித்து வாங்கவேண்டும்.

1. சென்னை ராஜதானியில் வழங்கும் பாஷைகள்

1. இதில் பின்னல் சொல்லப்படும் டிஸ்ட்ரிக்டுகளிலும் ஸப்டிஸ்ட்ரிக்டுகளிலும் அடியிற்கண்டபாஷைகள் சாதாரணமாய் வழங்கிவருமென்று எண்ணப்படும் :—19-வது பிரிவு.

(1) **இங்கிலீஷ்** :—எல்லா டிஸ்ரிக்டிலும் ஸப்டிஸ்டிரிக்டிலும்.

(2) **தெலுங்கு** :—கஞ்சம், விசாகப்பட்டணம், கீழ் கோதாவரி, மேல்-கோதாவரி, கிருஷ்ணு, குண்டூர், நெல்லூர், அனந்தபுரம், கடப்பை, கர்நூல், பெல்லாரி, மதராஸ், வட ஆர்க்காடு, சித்தூர் இந்த டிஸ்ட்ரிக்டுகள்.

சேலம் டிஸ்ட்ரிக்டில், ஊசூர், டெங்கிணிகோட்டை, கிருஷ்ணகிரி ஸப்டிஸ்ட்ரிக்டுகள்.

செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்டில், செம்பியம், பொன்னேரி, சத்திய வேடு, திருவள்ளூர்

(3) தமிழ் :—மதராஸ், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மதுரை, திருசிராப்பள்ளி, ராமநாதபுரம், சேலம், கோயமுத்தூர், ஈரோடு, இந்த டிஸ்ட்ரிடுகள்.

(4) கன்னடம் :—தென்கன்னடம் டிஸ்ட்ரிக்ட், பெல்லாரி, அனந்தபூர் டிஸ்ட்ரிக்ட்.

ஈரோடு டிஸ்ட்ரிக்டில், ஹாஸனூர், கொள்ளேகாலம், தாளவாடி ஸப்டிஸ்ட்ரிக்டுகளும்.

சேலம் டிஸ்ட்ரிடில் உசூர் டெங்கிணிகோட்டை ஸப்டிஸ்ட்ரிக்டு களும்.

(5) மலையாளம் :—கள்ளிக்கோட்டை, பாலக்காடு, தலைச்சேரி டிஸ்ட்ரிக்டுகள், தென்கன்னடம் டிஸ்ட்ரிக்டில் ஹோஸ்ட்ருக், காஸார் கோடு, டிகார்பூர், ஸப்டிஸ்ரிக்டுகள். கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்டில் கூடலூர்.

(6) ஹிந்துஸ்தானி :—மதராஸ் டிஸ்ட்ரிக்ட்.

கர்நூல், ஆற்காடு, வேலூர், சித்தூர், திரிசிராப்பள்ளி இந்த ஸப் டிஸ்ரிக்டுகள்.

(7) உரியா :—கஞ்சம் டிஸ்ட்ரிக்ட்.

இங்கிலீஷ், தெலுங்கு, அல்லது தமிழில் எழுதப்பட்ட தஸ்தவே ஜுகளை, இந்த பாஷைகளைத் தெரிந்திருக்கும் ரெஜிஸ்டர்செய்கிற உத்தி யோகஸ்தர் இருக்கிற எந்த ஆபீஸிலாவது தாக்கல் செய்யலாம்.

2-தேசப்பிரிவுகள்.

1908-ம் வருஷத்திய இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் 21,22 (1) பிரிவுகளில் உபயோகித்திருக்கிறபடி "தேசப்பிரிவு" என்னும் பதத் தில் கூடியவரையிலே அடியிற்கண்டவைகளடங்கும் :—

(1) ரெஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட்.

(2) ரெஜிஸ்ட்ரேஷன் ஸப்டிஸ்ட்ரிக்ட்.

(3) தாலூக்கா, ஜாகீர், ஜமீன்தாரி அல்லது ஒருவருக்கே யுரிய பூஸ்திதி.

(4) அவைகளில் மிட்டா, ஹாண்டா, கண்டம், பிரிக்கா; மாகாணம், அம்சம் முதலிய பிரசித்தமான யாதொரு பிரிவு.

(5) ரெஜிஸ்டர் செய்யத்தகுந்த தஸ்தவேஜில் கண்டிருக்கிற சொத்து இருக்கிற கிராமம், குக்கிராமம் அல்லது பேட்டை.

ஆனால், மேற்சொன்ன விவரங்களையும் சொத்தைக் குறித்துப் போதுமான விவரத்தையும் முன்னமே கண்டிருக்கிற ரெஜிஸ்டரான யாதொரு தஸ்தவேஜை, சொத்திற்குச் சம்பந்தப்பட்ட தஸ்தவேஜில் பிரத்தியேகமாய்க் குறித்துக்காட்டி அச்சொத்தை விவரித்திருந்தால், அந்த விவரங்களையெல்லாம் மறுபடியும் எழுதவேண்டிய அவசியமில்லை.

குறிப்பு :—ரெஜிஸ்ட்ரேஷன் கெடுவுகாலத்தின் கடைசிதினம் விடுமுறைகளாயிருந்து ஆபீஸ் மூடப்பட்டிருந்தால் அது திறக்கப்படும் தினத்தன்று ரெஜிஸ்டர் செய்வதற்காக தஸ்தவேஜுகளை தாக்கல்செய்யலாம்

ரெஜிஸ்டர் கெடுவுகாலத்தை இங்கிலீஷ் மாதத்தின்படிக் கணக்கிடவேண்டும்.

3. தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்துகொள்வதினுல் உண்டாகும்பயன்.

1. தஸ்தவேஜுகள் கெட்டுப்போனுலும் அல்லது கைசோர்ந்து போனுலும் தீவெள்ளம் முதலியவைகளால் தற்செயலாய் தீடீரென்று அழிந்துபோனுலும் ரெஜிஸ்டர்செய்யப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளுக்கு ரெஜிஸ்டர் ஆபீசினின்றும் சரியான நகல்கள் வாங்கிக்கொள்ளலாம். சிவில், க்ரிமினல் முதலிய நியாய ஸ்தலங்களில் அப்படிப்பட்ட நகல்கள் அசல் தஸ்தவேஜைப்போலவே ஆதரவாக யேற்றுக்கொள்ளப்படும்.

2. தஸ்தவேஜுகள் ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளில் முன்னமே யேற்பட்டிராத சங்கதிகளை புதிதாய்ச் சேர்ப்பதற்கும் அல்லது ஏற்பட்டிருந்த சங்கதிகளை மறைப்பதற்கும் சாத்தியமல்லவாகையால் துர்வழக்குகளுக்கு இடமற்றுப் போகிறது.

3. தஸ்தவேஜுகளை ரெஜிஸ்தர் செய்துகொண்டால் அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளின் சொத்து விஷயமாக ஏற்படும் வில்லங்கங்களை வரிசைக்கிரமமாக ரெஜிஸ்தராபீசினின்றும் தெரிந்துகொள்ள சாத்திதியமாகும்.

4. தஸ்தவேஜுகளின் பாத்தியமடைந்தவர்களிடம் தஸ்தவேஜுகள் கட்டுப்பட்டிருப்பது வழக்கமாகையால் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்தர் செய்துகொண்டால் அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளின் ஷரத்துகளை எழுதிக்கொடுத்தவன் முதலானவர்கள் தேவையான காலத்தில் ரெஜிஸ்தராபீசினின்றும் வேண்டிய விவரங்களை தெரிந்து கொள்ள சாத்தியமாகும்.

5. முன்னால் விவரித்திருக்கிறபடி இஷ்டமிருந்தால் ரெஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டிய தஸ்தவேஜுகளையும் ரெஜிஸ்தர் செய்து கொண்டால் அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளை, ரெஜிஸ்தர் செய்யாத தஸ்தவேஜுகளைப்பார்க்கிலும் சகல நடவடிக்கைகளிலும் சாக்ஷியத்திற்கு அபேக்ஷணையின்றி எடுத்துக்கொள்ளப்படும். மேலும் ஒரு சொத்துவிஷயமாக ஒரு தஸ்தவேஜு ஏற்பட்டு அது ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால் க்ஷை சொத்தின் ரெஜிஸ்தராகாத தஸ்தவேஜைக் காட்டிலும். ரெஜிஸ்தரான தஸ்தவேஜே அதிகமாக பாத்தியப்படுத்துவதாக பாவித்து அதற்கு முன்பாத்தியத்தையும் உண்டாகும்.

6. இதற்குமுன் விவரித்திருக்கிற அவசியம் ரெஜிஸ்தர் செய்து கொள்ளவேண்டிய தஸ்தவேஜுகளை ரெஜிஸ்தர் செய்துகொள்ளாவிட்டால் அதில் கண்டிருக்கிற யாதொரு அசையாப்பொருளுக்கு அது சம்பந்தப்படமாட்டாது; ஸ்வீகாரஞ்செய்துகொள்ள யாதொரு அதிகாரத்தையும் உண்டுபண்ணவுமாட்டாது; அவைகள் உத்தேசிகப்பட்ட விஷயங்களில் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படவுமாட்டாது.

7. வெண்கடன், கோர்ட்டு டிக்கிரி முதலியவைகளை ரெஜிஸ்தர் செய்துகொள்ளாவிட்டால் அப்படிப்பட்டவைகள் பிறந்தகாலம் அல்லது வாய்தாமுதல் 3-வருஷகாலம் வரையில்தான் செலாவணியாகும். அவைகளை ரெஜிஸ்தர் செய்துகொண்டால் அவைகள் பிறந்த காலம் அல்லது வாய்தா கண்டிருந்தால் அதுமுதல் 6-வருஷம் வரையில் செலாவணியாகும்.

8. ரெஜிஸ்தரான பத்திரத்தை ருஜுப்படுத்துவது அதிக சுலபம்; ஆகையால் மேற்கூறிய காரணங்களினால் சகலவித சாஸனங்களையும் ரெஜிஸ்தர்செய்துகொள்வது உத்தமம்.

3-தஸ்தாவேஜுகள்.

1. தஸ்தாவேஜுகள் விஷயமாய் ஏற்படும் குற்றங்கள்.

1. ஆள் மாருட்டம் செய்தல், ஆள் மாருட்டம் செய்வதில் சகாயம் செய்தல் அல்லது உடந்தையாயிருத்தல், உறுதிமொழியின் பேரிலும் அல்லது அப்படி யல்லாமலும் பொய்சாக்ஷியம் அல்லது பொய் விஷயங்கள் சொல்லுதல் அல்லது சொல்ல எத்தனித்தல், தப்பு தஸ்தாவேஜுகள் உண்டுபண்ணுதல், தஸ்தாவேஜுகளில் பெயர்கள், தேதிகள், எண்கள் முதலியவைகளை எழுதிக்கொடுத்தவன் சம்மதமில்லாமல் திருத்தல், அடித்தல் ஆகிய இவ்விதமான சிருஷ்டனை என்னுங் குற்றங்களைச் செய்தல், பத்திரத்துடன் ஆஜர்செய்யவேண்டிவரும் தர்ஜுமா, நகல், படத்தின் நகல் இவைகளுக்காக சரியல்லாத தப்பு தர்ஜுமா, நகல், படத்தின் நகல் இவைகளை சரியானவைகளென்று ரெஜிஸ்தர் உத்தியோகஸ்தர்களிடம் ஆஜர் செய்தல், கவர்ன்மெண்டாரால் லைசென்ஸ்பெற்ற நபரன்றி அன்னியர்கள் ஸ்டாம்பு காகிதங்களை விற்பனை செய்தல் அல்லது விற்பனைசெய்ய எத்தனித்தல் ஆகிய இக் குற்றங்களைச் செய்கிறவர்கள் தண்டனைக்கு உட்படுவார்களாகையால், அவைகளைச் செய்யாமலிருக்கவேண்டுமென்று எல்லோருமறியவேண்டியது.

2. தஸ்தாவேஜுகள் விஷயமாய் இந்துலாவை அனுசரித்த பொது விதிகள்.

(1) **ஸ்வீகாரம்**—பிள்ளையாவது பேரனுவது கொள்பேரனுவது இருக்கும்போது தத்து வாங்கினுல் செல்லாது, தத்து புத்திரனிருக்க மறுபடியும் தத்துவாங்கினுல் செல்லாது, புத்திரன், ஸ்வீகார புத்திரன் இவர்களுடைய சம்மதத்தின் பேரில் தத்து வாங்கினுலும் செல்லாது, பெண்ஜாதியினுடைய சம்மதமில்லாமல் புருஷன் தத்து வாங்கலாம், பெண்ஜாதி கர்ப்பிணியாயிருக்கும்போது தத்து வாங்கிக் கொள்ளலாம்; பிள்ளையாகப்பிறந்தால் அதற்கு பாத்தியமதிகம், புருஷனுடைய சம்மதமின்றி பெண்ஜாதி தத்துவாங்கினுல் செல்லாது, புருஷன் பெண்ஜாதிக்கு தத்துவாங்க அதிகாரம் கொடுக்கலாம்.

(2) **உயில்சாஸனம்.**—மைனர்கள் உன்மத்தர்கள், சித்த சுவாதீனமில்லாதவர்கள், உயில் எழுதி வைக்கக்கூடாது, ஸ்திரீகள்,

தாங்கள் பூர்த்தியான பாத்தியமடைந்திருக்கிற சொத்தின் விஷயமாய் மாத்திரம் உயில் எழுதிவைக்கலாம். ஸ்வார்ஜித வகையிலும் பிதுரார்ஜித வகையிலும் பாத்தியப்பட்ட குடும்ப சொத்து ஒருவனுக்கே பாத்தியப்பட்டிருந்தால் அவன் இஷ்டம் வந்தவர்களுக்கு உயில் எழுதிவைக்கலாம். தகப்பனும் பிள்ளைகளும் ஏக குடும்பமாயிருக்கும்போது தகப்பன் அசையாப்பொருளின் விஷயமாய் ஸ்வார்ஜிதமானாலும் பிதுரார்ஜிதமானாலும் உயில் செய்யக்கூடாது. அவிபக்த குடும்பத்தில் புருஷ சந்ததி இல்லாதவன் உயில் சாஸனமாவது, தானசாஸனமாவது செய்தால் செல்லாது. தன் பாகத்தை விக்கிரயம்செய்து ஸ்வாதீனப்படுத்திவிட்டால் செல்லும், அசையாப்பொருளை தானஞ்செய்யும்போது சொத்தை ஸ்வாதீனஞ்செய்யவேண்டிய அவசியம், கடன்காரர்களை மோசஞ்செய்ய உயில் அல்லது தானசாஸனம் செய்தால் செல்லாது.

(3) **மைனர்கள்.**—ஸ்திரீகள், புருஷர்கள், 18-வயது ஆனவுடனே மேஜர்களென்று எண்ணப்படுவார்கள். மைனர்கள் சம்ரக்ஷணை கர்த்தருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கவேண்டியது.

3. தஸ்தாவேஜூகளை எழுதுவோர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. தஸ்தாவேஜூ எழுதிக்கொடுப்பவன் பெயருக்கு ஸ்டாம்பு காகிதம் வாங்கிக்கொண்டு வரும்படி கட்சிக்காரர்களுக்குச் சொல்லவேண்டியது. அப்படி எழுதிக்கொடுக்கும் நபரே. வெண்டரிடம் போக அசந்தர்ப்பப்பட்டால் அவனுக்காக வேறொருவனை அனுப்பி இன்னானுக்காக இன்னான் என்று எழுதி. ஸ்டாம்பு காகிதம் வாங்கி வரச்செய்யவேண்டியது. பழைய ஸ்டாம்பு காகிதங்களை விலைக்கு வாங்கி அவைகளில் தஸ்தாவேஜூகள் எழுதிக்கொள்வது சரியல்ல.

2. ஒரு தஸ்தாவேஜூ எழுதப்படும் தேதி. ஸ்டாம்பை வாங்கின தேதியாகவோ அல்லது பின் தேதியாகவோ இருக்கவேண்டுமேயொழிய, ஸ்டாம்பு வாங்கப்பட்ட தினத்திற்கு முன்தேதியாய் இருக்கக்கூடாது. பலதேதிகளில் வாங்கின ஸ்டாம்புகளை ஒரு தஸ்தவேஜூக்கு உபயோகிக்கும் விஷயத்தில் கடைசியாய் ஸ்டாம்பு வாங்கிய தேதியிலாவது அதற்கு பின் தேதியிலாவது அது எழுதப்பட்டதாய் இருக்கவேண்டும். மேலும் இங்கிலீஷ். தமிழ்த் தேதிகளை உபயோகிக்கையில்,

இரண்டிற்கும் ஒன்றுமை இருக்கிறதாவென்பதை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

3. தஸ்தாவேஜுகள் எழுதும்போது, எழுதிக்கொடுப்பவர்களேயும், எழுதி வாங்குகிறவர்களேயும், சாக்ஷிகளேயும் பக்கத்தில் வைத்துக் கொண்டு, ஏற்படும் சங்கதிகளே எழுதவேண்டியது. பத்திரத்திற்குரிய வாசகத்தை முற்றுமெழுதினதன்மேல், ஒருதடவை படித்துக்காட்ட வேண்டியது. அப்போது ஏதாவது சேர்க்கவேண்டுமானாலும், நீக்க வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். பத்திரத்தில் திருத்தலென்பது சற்றேனுமிருக்கக்கூடாது; அப்படிப்பட்டவைகளே அடித்துவிட்டு அதற்குமேல் வரி பிளந்து எழுதவேண்டியது; இப்படிச்செய்யும் திருத்துப்பாடுகளுக்கு ஷரா எழுதியபின் தான், பத்திரத்தில் கையெழுத்து வாங்கவேண்டியது. சாக்ஷிகள் அந்தஸ்துள்ளவர்களாயும் கையெழுத்து செய்பவராயும் ஏற்படுவது உத்தமம்.

4. மேற்குறித்த விதமாயல்லாமல் பத்திரத்தை வீட்டில் எழுதிக்கொண்டு, ரெஜிஸ்தராபீஸில் வந்து எழுதிக்கொடுத்தவன் கையெழுத்தும், சாக்ஷிகள் கையெழுத்தும், எழுதுவோன் கையெழுத்தும் செய்வது சுத்த தப்பு; அல்லது பத்திரத்தை முடித்துக்கொண்டு ஊருக்கொரு சாக்ஷியாக வாங்குவதும் தப்பு.

5. தஸ்தாவேஜுகளே எழுதும்போது, அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளில் ஏற்படும் விவசாய சம்பந்தமான சொத்துக்களே சிட்டாவை யனுசரித்து எழுதவேண்டியது.

6. தஸ்தாவேஜுகளில் ஏற்படும் பங்கு வீதத்தைத் தெளிவாய்க் காட்டவேண்டியது.

7. அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளில் ஏற்படும் சொத்து, எழுதிக்கொடுத்த நபருக்கு எவ்வளவு வரையிலும் பாத்தியப்பட்டதென்பதை பூரணமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது.

8. பத்திரம் எழுதிக்கொடுத்த நபர் கையெழுத்து செய்யக்கூடியவனு அல்லது தற்குறியாவென்பதை கவனிக்கவேண்டியது. அப்படி கவனிக்காமல் பத்திரத்தில் தற்குறியென்று எழுதப்பட்டு, ரெஜிஸ்தராபீஸில் அப்படிப்பட்ட நபர் கையெழுத்து செய்யத்தெரிந்தவனென்று அநேக விடங்களில் ரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட விநோதமான மௌடீகத்தை பத்திரமெழுதுவோர் தவிர்க்க வேண்டியது.

9. இதற்கடுத்த 4-வது பாகம் A. B. C. ஜாப்தாக்களை கவனிக்கவேண்டியது.

10. மேற்கூறிய விஷயங்களுக்கிணங்க. பத்திரத்தைக் கிரமமாய் எழுதியபின். ரெஜிஸ்தர் செய்துகொள்ள தஸ்தாவேஜுகளை ரெஜிஸ்தராபீஸுக்குக் கொண்டுவரும்பொழுது ஷை தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்த நபருக்கு தஸ்தாவேஜின் ஷரத்துக்கள் நன்றாய்ப் புலப்படும் வண்ணம் இன்னுமொருமுறை வாசித்துக்காட்டவேண்டியது.

11. எழுதிக்கொடுத்த நபரை நன்றாய்த் தெரிந்தாலன்றி. ரெஜிஸ்தராபீஸுகளுக்கு சாக்ஷியமாகப் போகக்கூடாது.

12. பத்திரமெழுதுவோர்கள் தாங்கள் எழுதும் ஒவ்வொரு பத்திரத்திற்கும். ரெஜிஸ்தராபீஸுகளில் சாக்ஷியமாக ஏற்படுவதை ஜீவனமாக வைத்துக்கொள்வதும் சுத்தத்தப்பு.

4. தஸ்தாவேஜுகளை எழுதும்போது அவசியம் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

A. பத்திரம் உண்டாகும் விஷயம்.

1. எழுதிக்கொடுத்த வருஷம், மாசம், தேதி.

2. தஸ்தாவேஜினால் பாத்தியமடைந்த நபரின் பெயர். இருப்பிடம், ஜாதி, ஜீவனம், இன்னான் குமாரன்.

3. தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்த நபரின் பெயர், இருப்பிடம், ஜாதி, ஜீவனம். இன்னான் குமாரன். ஸ்திரீயானால் புருஷன் அல்லது தாயரின் பெயர்.

4 தஸ்தாவேஜை எழுதிக்கொடுப்பதற்கு நேரிட்ட முக்கியமான காரணங்கள், தஸ்தாவேஜின் விபரம், தொகை, தொகை செல் விவரம், முதலிய முக்கியமான ஷரத்துக்கள் ; எழுதப்படும் தஸ்தவேஜில், முன் ரெஜிஸ்தரான போக்கியம் அடமானம் முதலிய தஸ்தவேஜுகளைக் காட்டுவதாயிருந்தால், அவைகளின் வருஷம், மாதம் தேதி, ரெஜிஸ்டராபீஸ் புஸ்தக நெ. பக்கம், ரெஜிஸ்டர் நெ. முதலியதைக் காட்டவேண்டும்.

5. சொத்து இன்ன ரெஜிஸ்தரேஷன் டிஸ்திரிக்ட்டு, சப்டிஸ்திரிக்ட்டு, தாலூகா, கிராமம், மஜரா.

6. **(a)** நஞ்சை புஞ்சை வீடு தோட்டம் அல்லது காலி நிலம் முதலிய அசையாப்பொருள்களில் அடியிற்கண்டவைகளுங்கூட அடங்கும் :—நிலபாத்தியதை (3 அல 422.) பாரம்பரைவரும்படி (7 பம். 1.) இனும்தாராகவாவது, சொந்தக்காரராவாவது நிலத்தீர்வை பாத்தியதை (24-பம் 615.) காற்று, வெளிச்சம் முதலியபாத்தியதை (20 பம். 704.)

(b) அசையும் பொருள் அவையாவன :—நிற்கும் மரம், வளருகிற பயிர், பழம், கல், பூமியில் அங்கமியாய் சேர்ந்திருக்கும் வஸ்துக்கள். (25 பம். 649,) கொடி, செடிகளின் மாசூல். (26 அல. 277 ; 28 மத. 181.) நிலபாத்தியமில்லாமல் செடிகளை அப்புறப்படுத்தும் பாத்தியதை (7 க. 152) ஜீவனப்சபாத்தியதை (3 ம-184) பரம்பரை ஊழியவரும்படி (39 க. 227.) நபர் ஜாமீன். (21-பம். 725.) வக்காலத்துகள். (13. க 845.) ஜலதாரை, மழைஜலம் போகும்பாத்தியம். (31 612.) மற்றும் அசையாப்பொருளாயிராத எவ்வகைப்பட்ட பொருளென்பதும் இதில் அடங்கும்

7. அவைகளின் பங்கு வீதம்.

8. ஷரா முதலிய விவரங்கள்.

9. எழுதிக்கொடுத்தவன் கையெழுத்து.

10. சாக்ஷிகள் :—ஒவ்வொரு சாக்ஷிக்கும் குடியிருப்பு வகையறு முதலிய விவாங்கள்.

11. **குறிப்பு**—(1) கையெழுத்து சாக்ஷிகள் ஏற்படுவது உத்தமம்.

(2) இரண்டுக்கு மேற்பட்ட சாக்ஷிகள் இருக்கவேண்டியது.

(3) மைனருக்காகவும் தனக்காகவும் ஒரு நபர் எழுதிக்கொடுத்தால், தனக்காக ஒரு கையெழுத்தும், மைனருக்காக ஒரு கையெழுத்தும் ஆக இரண்டு கையெழுத்து செய்யவேண்டியது. (5 அல, 599.) தஸ்தவேஜு இரண்டு அதற்கு மேற்பட்ட காயிதங்களில் எழுதப்பட்டால் ஒவ்வொன்றிலும் எழுதிக்கொடுத்தவர் கையெழுத்து செய்ய வேண்டும் (30 கல் 433.)

(4) ஷரா, கையெழுத்துக்கு மேலிருக்கவேண்டிய தவசியம்.

(5) சாக்ஷி கையெழுத்து மாத்திரம் ஒருவனை தஸ்தாவேஜிற் கண்ட ஷரத்துக்களுக்குக் கட்டுப்படுத்தாதாகையால், அப்படி கிஞ்சித்தேனும் யாதாமொருவனுக்கு பாத்தியமுண்டென்று தோன்றினும்

அல்லது பாத்தியம் பாராட்டக்கூடிய விஷயங்களாயிருந்தாலும், அப்படிப்பட்ட நபர்களையும், தஸ்தாவேஜினால் கட்டுப்படுத்திக்கொள்வது உத்தமம்.

(6) பத்திரமெழுதியவனும் சாட்சிகளும் கையெழுத்துச் செய்தபிறகு அதற்கடியில் புதிதாய் திருத்தங்களைப்பற்றி ஷரா எழுதினால் அதற்குக்கீழும் பத்திரமெழுதிக்கொடுத்தவன் கையெழுத்துச் செய்யவேண்டும்.

(7) அசையாப்பொருளை முழுவதும் பூர்த்தியான விவரங்களுடன் தெளிவாய் விவரிக்கவேண்டும். (7 கல் 196) அப்படி விவரிக்காததினால் அந்த தஸ்தாவேஜு ஸ்திரசொத்து சம்பந்தமான புஸ்தகத்தில் ரெஜிஸ்டர் செய்யப்படாது. அதனால் ஸ்திரசொத்தில் ஒருவித பாத்தியதையும் உண்டாக்காது. (18 மத. 364 ; 35 கல் 845.)

B. சொத்து ஜாப்தா.

வீடு.

ரெஜிஸ்திரேஷன் டிஸ்திரிக்ட். சப்-டிஸ்திரிக்ட். தாலூகா, ஜாகிர். ஜமீன்தாரி மிட்டா. கிராமம். மஜரா. தெரு. முதலிய விவரங்கள். வீட்டின் நான்கு எல்லைகள். வீட்டின் அளவு. . அங்கணம். சதுரம் அல்லது முழம் முதலிய விவரங்கள், வில்லை வீடு. கூரை வீடு. தொட்டிக்கட்டு. மெத்தை வீடு. அல்லது பங்களா முதலிய விவரங்கள். பட்டணங்களிலுள்ள வீடாயிருந்தால், வார்டு. வீதி. லைன். புரம் அல்லது சந்து. சிரேணி. முனிசிபல் கதவு லக்கம் முதலிய விவரங்கள்.

தஸ்தாவேஜுக்கு சம்பந்தப்பட்ட பங்கு வீதம். வீட்டுக்குச் சம்பந்தப்பட்ட, கிணர். முன்பின் வாசல்கள். கதவு நிலை பலவிருட்சங்கள் போக்குவரத்துக்கான வழிநடை வசதியுரிமை. வீட்டு கழிஜலம் முதலியதுகள்விட சுதந்தரம். முதலிய விவரங்களுடன் சுயார்ஜிதம் அல்லது பிதுரார்ஜிதம்.

C. நஞ்சை புஞ்சை. தோட்டம் வகையரா.

ரெஜிஸ்திரேஷன் டிஸ்திரிக்ட். சப்-டிஸ்திரிக்ட். தாலூகா. கிராமம். சர்க்கார், இனம். பைமாஷ் அல்லது சர்வே நெம்பர் முதலிய விவரங்கள் ; ஜாகா அல்லது இடம். பிரிவு. விஸ்தீர்ணம். தீர்வை, தஸ்தாவேஜுகளுக்குச் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் பங்கு வீதம். சொத்துக்களிலுள்ள கிணர், மரங்கள். வேலி. கொட்டம் முதலிய விவ

ரங்கள், சொத்துக்களிலுள்ள கிணர்கள் துருஸ்து அல்லது சிகஸ்து துலைகள் முதலிய விவரங்கள், சுயார்ஜிதம் அல்லது பிதுரார்ஜிதம்.

ஷரா :—பாக சாஸனங்களில் 1 பங்கு தீர்வையும், கிணர்கள் மொத்தமும், வீடுகளின் மொத்தமும் முதலிய விவரங்களை எழுதிக் கொள்ளலாம்.

1. Promissory Note.

1. அண்டிமாண்டு அல்லது பிராமிஸோரி நோட்.

ப்ராமிஸொரி நோட் என்பது அந்த ஆதரவில் குறித்திருக் கிற காலத்திலாவது கேட்டவுடனேயாவது தரிசனமான வுடனே யாவது குறித்த யாதொரு தொகையை ஒருவர் வேறொருவருக்கு உடனே செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற ஆதர வென்று அர்த்தமாகும், இது இரண்டு விதம் (1) கேட்டவுடனே செலுத்தத் தக்கதாயிருந்தால், தொகை அல்லது மதிப்பு ரூபா 250-க்கு மேற்படாவிட்டால் ஒரு அணு, ரூபா 250-க்கு மேல் ரூபா 1,000 வரையில் இரண்டு அணு, ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகை எவ்வள வாயிருந்தாலும் அணு 4. (2) கேட்டவுடனே யல்லாமல் ஒருவருஷ காலத்திற்கு மேற்படாமல் எவ்வளவு காலத்திற்காவது எழுதுவதாயி ருந்தால் ஸ்டாம்பாக்ட் 1-வது, ஷெடியூல் 13-வது ஆர்டிகளில் சொல் லியபடி ஸ்டாம்பு ஒட்டவேண்டும். (3) கெடுவுகாலம் ஒரு வருஷத் திற்கு மேற்பட்டால் அப்படிப்பட்ட பிராமிஸொரி நோட்டுக்கு அட மான தஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்புக்கடிதத்தில் எழுதவேண்டும்.

குறிப்பு 1 :—எழுதிக்கொடுக்கும் நபர், எழுதக் கூடியவனாயிருந் தால் தன் சொந்தக் கையெழுத்தால் எழுதுவது உத்தமம்.

2. தனக்காகவும், உத்திரவுக்காகவும், தொகைசெலுத்துவதாயி ருந்தால், சாக்ஷிகள் போட்டுக்கொள்ளலாம்.

3. தனக்காக மாத்திரம் தொகை செலுத்துவதாயிருந்தால், சாக்ஷிகள் போடக்கூடாது. போட்டால் வெண்கடன் பத்திரத்திற் குரிய ஸ்டாம்பு தேவையாயிருக்கும்.

4. பிராமிசரி நோட்டுகளை, பின்பக்கத்தில் எண்டார்சுசெய்து மேடோவர் செய்தால், ஸ்டாம்பு தேவையில்லை.

5 எண்டார்சு செய்யாமல், தனியாய் மேடோவர்பத்திரம் எழுதிக்கொள்வதாயிருந்தால், ஏற்படும் தொகைக்கு விக்கிரய தஸ்தா வேஜுக்குள்ள ஸ்டாம்பு போடவேண்டியது.

6. கையெழுத்தை ஸ்டாம்பின் பேரில் போடவேண்டும்.

நமூனா 1.

(a) வரு மீ உ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு. (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு.

நாளது தேதியில் என்னுடைய அவசர நிமித்தமாக (ஏற்படுங் காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) தங்களிடத்தில் ரொக்கம் பெற்றுக்கொண்டபடியால்

. இந்த ரூபா (எழுத்தால்) பெற்றுக்கொண்டபடியால் மேற்படி தொகைக்கு மாதம் 1-க்கு 100-க்கு வீதம் வட்டியுடன் தங்களுக்காவது தங்கள் உத்திரவிற்காவது வேண்டும்போது கொடுப்போமாகவும். இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த பிராமிசரிநோட்.

கையெழுத்து

சாக்ஷிகள்.

எழுதியது.

(b) 192 வரு மீ உக்குச்சரியான தமிழ் வரு மீ உ திருச்சிராப்பள்ளி ஜில்லா குழித்தலை தாலூக்கா மேட்டூரிலிருக்கும் ப. குப்புசாமிபிள்ளை, மேற்படி தாலூக்கா நங்கபுரத்திலிருக்கும் சேஷய்யருக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்.

என்னுடைய நிலங்களின் இரண்டாவது கிஸ்திக்கு ரூ. 50 செலுத்துவதற்காகவும், ஜவுளிக்கடையில் பத்துவரவு செய்ததில் நாளது தேதியில் என்பேரில் பாக்கியாய் நின்ற ரூ. 50 கொடுப்பதற்காகவும் நான் தங்களிடத்தில் ரொக்கம் பத்திக்கொண்டது ரூபா. 100 இந்த நூறு ரூபாய்க்கும் மீ 1-க்கு 100-க்கு ரூ. ஒன்று வீதம் வட்டி சேர்த்து கூடியவட்டியும் முதலும் தங்களுக்காவது தங்களுடைய உத்திரவு பெற்றவருக்காவது செலுத்தி இந்தபாண்டை வாபீஸ் பெற்றுக் கொள்வேனாகவும்.

சாக்ஷிகள் :—

ப. குப்புசாமி பிள்ளை.

வைத்தீசுவரய்யர்

கையெழுத்து

நாராயணய்யர்.

இந்த பிராமிசரி நோட்டெழுதியது ஷை யூர் ஆதிசேஷய்யர்.

(c) 192 வரு மீ உ (இன்ன) ஊரிலிருக்கும் (இன்னான்) (.)க்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டு.

என்னுடைய அவசர நிமித்தமாக நான் தங்களிடத்தில் ரொக்கம் பத்திக்கொண்டது ரூ. 200. இந்த ரூபா இருநூற்றுக்கும் மாதம் 1-க்கு. 100-க்கு ரூபா ஒன்று வீதம் வட்டிசேர்த்து கூடியவட்டியும் முதலும் தங்களுக்காவது தங்கள் உத்திரவுபெற்றவருக்காவது வேண்டியபோது கொடுத்து இந்த பாண்டை வாபீஸ் பெற்றுக்கொள்வேனாகவும்.

இராமகிருஷ்ணய்யர்.

சுகஸ்தலிகிதம்.

சுகஸ்தலிகிதமாய் எழுதினால் சாட்சியவசியமில்லை.

(d) 1918 ஹூ மார்ச்சுமீ 6 தேதி தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகா முடிகொண்டான் கிராமத்திலிருக்கும் கிருஷ்ணய்யர் குமாரன் இராயசுவாமி அய்யர். மேற்படியூர் வாசுதேவய்யர் குமாரன் சேஷய்யருக்கு எழுதிக்கொடுத்தப் பிராமிசரி நோட் என்னவென்றால். நான் ( ) இடத்தில் நிலம் வாங்கிய விஷயத்தில் தங்களுக்குக் கொடுக்கும்படி சாட்டிவிட்டபாபத்தில் என் பத்தானது ரூ. 300. இந்த ரூபா முன்னூறையும் இரண்டுமாத கெடுவில் தங்களுக்காவது தங்கள் உத்தரவு பெற்றவருக்காவது மாதம் 1-க்கு 100-க்கு ரூ. 1 வட்டி சேர்த்து கூடிய வட்டியும் முதலும்சேர்த்து கொடுப்பேனாகவும். (இதற்கு ஸ்டாம்பு; ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 13-வது ஆர்டிகிளின்படி)

சாட்சிகள் :— இராமசுவாமி அய்யர்.

கிருஷ்ணய்யர்.

கோவிந்தய்யர்.

இது எழுதியது ஷை யூர் கிருஷ்ணபிள்ளை.

(e) On demand I, Krishnaswamy Aiyar of Village. Taluq. Dt- promise to pay Regunada Aiyar of Village Taluq Dt. or to his order the sum of Rupees 100 (one hundred only), with interest at the rate of12 percent per Annum. value received in cash.

(Signed.) Krishnaswamy Aiyar.

Witness :—

(f) After two months I promise to pay Kuppusawmy Aiyar of Village.

Taluq: Dt. or to his order the sum of Rs. 500 (Five hundred) the price of the paddy received by me with interest at the rate of 12 percent per Annum.

(Signed.) Sivarama Aiyar.
of
Radhapuram—Tinnevelly Dt.

---

2. Bond.

கடன் பத்திரம் அல்லது பாண்ட்.

கடன்பத்திரம் அல்லது பாண்ட் என்றால் :—இரண்டல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளால் கையெழுத்துப் போடப்பட்டும், யார்பேருக்கு அது எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவனுடைய உத்திரவுபெற்ற யாருக்காவது அதைக்கொண்டு வருகிறவனுக்காவது தொகை கொடுப்பதாகயிராமல், ஒருவன் மற்றொருவனுக்குத் தொகை கொடுக்க உடன்பட்டு எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு என்றும், ஒருவன் வேறொருவனுக்கு தானியம் அல்லது வேறே சாகுபடி பாகூலே ஒப்பிப்பதாக உடன்பட்டிருந்து சாட்சி கையெழுத்து போடப்பட்ட யாதொரு ஆதரவென்றும் அர்த்தமாகும்.

192 ௵ ௴ ௳ க்குச்சரியான தமிழ் ௵ ௴ ௳
ஜில்லா தாலூகா கிராமத்திலிருக்கும்
ஜாதி மதம் தொழிலுள்ள மகன்
க்கு ௸ ஜில்லா ௸ தாலூகா ௸ யூரிலிருக்கும் ஜாதி மதம் அந்தஸ்துள்ள மகன் ஸ்ரீனிவாசய்யர் எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் என்னவென்றால்.

என்னுடைய குமாரன் கோபாலனுடைய படிப்பு நிமித்தமாகவும், உழவுமாடு வாங்குவதற்காகவும் நான் தங்களிடத்தில் கடனாகவாங்கினது ரூ. 100. இந்த ரூபா நூறும் நான் தங்களிடத்தில் ரொக்கம் பற்றிக்கொண்டபடியால் ௸ தொகைக்கு ௴ 1-க்கு 100-க்கு ரூபா ஒன்றுவீதம் வட்டிசேர்த்து, கூடியவட்டியும் முதலும் இரண்டு வருஷவாயிதாவில் கொடுத்து இந்தப் பத்திரத்தில் செல்லு வைத்து வாபீஸ் பெற்றுக்கொள்வேனாகவும்.

சாட்சிகள் :— ஸ்ரீனிவாசய்யர்,
கிருஷ்ணய்யர். கையெழுத்து.
கோவிந்தய்யர்.

நெட்டெழுத்து :—இந்தப் பத்திரம் எழுதியது ௸ யூர் வாசுதேவய்யர்.

குறிப்பு:—இஷ்டமிருந்தால் கடன் பத்திரங்களை ரெஜிஸ்டர் செய்யலாம். ரெஜிஸ்டராகாத பத்திரம் 3 ஷூமும், ரெஜிஸ்டரான பத்திரம் 6 ஷூ வரையில் செலாவாணியாகும். (கால நிர்ணயச் சட்டத்தைப்பார்க்க.)

இதற்கு முத்திரை, ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 15-வது ஆர்டிகளை பார்க்கவும்.

---

3. Sale.

விக்கிரயசாசனம்.

விக்கிரயசாசனம்:—விற்பனையினால் யாதொரு சொத்தை ஒப்படைசெய்வதும், அசையும் பொருள் அல்லது அசையாப்பொருளை ஜீவித்திருப்பவர்களில் ஒருவர் வேறொருவர் பெயருக்கு எழுதிக்கொடுக்கிற ஒவ்வொரு ஆதரவும் அடங்கும். முக்கியமாய், ஜீவனாம்ச துகை, இந்த சொத்தில் அப்போழுது இருக்கும் மாசூல் பாத்தியதை, கிஸ்தி, விக்கிரய பங்கத்திற்கு நஷ்டம் முதலிய ஷரத்துக்களை கவனித்து எழுத வேண்டும்.

(a) 1920ஷூ ஜனவரிமீ 31 தஞ்சாவூர் தாலூக்கா திருவாதி கிராமம் மஜரா அம்மன்புரத்திலிருக்கும் கோமட்டிசெட்டி ஜாதி குடித்தனமும் மணியும் ஜீவனம் ஆர்-என்பவர் குமாரர் பி-என்பவருக்கு ஷை யூரிலிருக்கும் ஷை ஜாதி குடித்தன ஜீவனம் வி-என்பவன் குமாரன் சி-என்பவன் (1) கும்பகோணம் தாலூக்கா சூலூரிலிருக்கும் ஷை ஜாதி உத்தியோக ஜீவனம் டி-என்பவன் குமாரர்கள் எம். (2) என் (3) என்பவர்களும், ஷை எம்-என்பவனின் மைனர்கள் 16 வயதுள்ள எஸ்-என்பவனுக்கும் 12 வயதுள்ள டி-என்பவனுக்கு கார்டியனும் தகப்பனுமான ஷை எம்-என்பவன் (4), ஆகிய நாங்கள் ஏகோபித்து எழுதிக் கொடுத்த கிரய சாசனம்.

அடியில்கண்ட நஞ்சை பூமிகளை, எங்கள் குடும்பார்த்த சிலவுகளுக்காக வாங்கின அடியில் குறித்தகடன் வகையராக்களைத் தீர்ப்பதற்காகவும் ஷை மைனர்களின் விவாகத்தை முடிப்பதற்கும் (எற்படும் காரணங்களை காட்டிக் கொள்ளவும்) தங்களுக்கு (......) ரூபாய் கிரயத்திற்குப்பேசி கிரயத்தொகை ரூபா......(எழுத்தால்) பெற்றுக்கொண்டதற்கு விபரம். கோயமுத்தூர் தாலூக்கா சுண்டக்காய் முத்தூரிலிருக்கும் கொ. என்பவர் குமாரர் ப என்பவருக்கு...... ஷூ...... மீ......உயில் நாங்கள் எழுதிக்கொடுத்த...... ரூபாய் பந்தகப் பத்திரத்திற்கு நாளது-உ வரை அசல்வட்டி சகிதம்.......ரூபாய் தாங்களே ஷை யாருக்குச் செலுத்தி ஷை அடமான தஸ்தாவேஜை ரத்துசெய்து வாப்ஸ் பெற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டவகையில் எங்களுக்குச் செல்லானது ரூபாய்......; ஷை சுண்டக்காய் முத்தூரிலிருக்கும் சா. என்பவர் குமார் அ. என்பவர் ....ஷூ............மீ......உயில் கோயமுத்தூர் டிஸ்திரிகட்டு முன்சீப்

கோர்ட்டில் எங்கள்பேரில் பெற்றிருக்கும் டிக்ரியை அனுசரித்து பஞ்சாயத்தார் பைசல்படிக்கு தயாவிஷயமாய்த் தள்ளிக்கொடுத்தது......ரூபாய் போக பாக்கி ......ரூபாய் ஷை யாருக்குச்செலுத்தி ஷை டிக்ரிதுகைபூராவையும் தீர்த்து எங்களுக்கு ரசீது வாங்கிக்கொடுப்பதாக தாங்கள் ஒத்துக்கொண்டவகையில் எங்களுக்குச்செல்லானது ரூபாய்..................ஷு.........மீ ......உயில் தங்களுக்கு ஷை பூமிகளை கிரயஞ்செய்வதாக எழுதிக்கொடுத்த எக்ரிமெண்டின்படி எங்களுக்குச்செல்லானது ரூபாய்......(எற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) ஆகக்கிரயத் தொகை பூராவும் இவ்விதமாய் எங்களுக்குச் செல்லாகிவிட்டபடியால், அடியில்கண்ட சொத்தை இன்றையதினமே தங்களுடைய சுவாதீனமும் செய்துவிட்டோம் (பின்னால் சுவாதீனம் செய்வதாயிருந்தால் அதையுங் காட்டிக் கொள்ளவும்) மேற்படி பூமிகளுக்கு எங்களில் எம்-என்பவருடைய பேரிலுள்ள பட்டயத்தை தாங்கள் பெயருக்கு மாற்றும்பொருட்டு, பத்திரம் ரிஜிஸ்தராகும் காலத்தில் ரிஜிஸ்தராபீசில் பட்டாமாறுதல் விண்ணப்பம்கொடுக்க வுடன்பட்டவர்கள். இனிமேல் அடியில்கண்ட பூமிகளைப்பற்றி எங்களுக்காவது எங்களுடைய வார்சுகளுக்காவது யாதொரு பாத்திய சம்பந்தமுமில்லை. இதில் காட்டிய வில்லங்கங்களைத் தவிர மேற்படி சொத்தை வேறு யாதொரு வில்லங்கங்களுக்கு உட்படுத்தவில்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறோம். இனிமேல் அடியில்கண்ட சொத்தை தாங்களே புத்திர பௌத்திரபாரம்பரியமாய்.தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக்கொள்ளவேண்டியது. இந்தப் படிக்கு நாங்கள் சம்மதித்து எழுதிக்கொடுத்த கிரயசாசனம்.

சோத்து விவரம்.

(B & C குறிப்பிட்ட சொத்து ஜாப்தாவைப் பார்க்க).

ஷரா :—முதலிய விவரங்கள்.

...........கையெழுத்துகள்.

சாக்ஷிகள்..............

எழுதியது.............

(b) 192 ஷு மீ உ (ஊர்பேர் வகையரா) எ-என்பவன் (ஊர்பேர் வகையரா) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் என்னவென்றால்:—நான் மேற்படியூரில் சொந்தமாய் அனுபவித்து வருகிற (இன்ன இடம்) சர்வே நெ. 46, அயன் நஞ்சை ஏகர் 4, டிசமல் 8 யும் நான் தங்களுக்கு ரூபா 2000-த்துக்கு விற்றுவிட்டபடியால், நீரும் உம்முடைய சந்ததியாரும் தானவிக்கிரய யோக்கியமாய் ஆண்டு அனுபவித்து வருவீராகவும், மேற்படி ரூபா இரண்டாயிரம் என் பத்தானதற்கு விபரம், 1920ஷு ஏப்பிரல்மீ 15உ மேற்படியூர் வெங்கிட்டராமய்யருக்கு எழுதிக்கொடுத்த பிராமிசோரிநோட்டுக்குச் செல்லவேண்டிய ரூபா 1,500 (ஆயிரத்தை நூறு), மேற்படியூர் இராமய்யர் அவர்களுக்கு திண்டுக்கல் முனிசீப் கோர்ட்டு 1913-ஷுத்திய 78 நெ. கேசின் டிக்கிரிக்

காகச் செல்லவேண்டிய ரூபா 495 (நாநூற்றுத்தொண்ணூற்றைந்து) ரெஜிஸ்ட்ரார் முன்னிலையில் நான் ரொக்கம் பத்திக்கொண்டது ரூபா ஐந்து, மேற்படி நிலத்தின் பேரில் இதற்கு முன் ஈடு முதலிய வில்லங்கங்களில்லை.

சாட்சிகள்.

கையெழுத்து.

கெட்டெழுத்து.

குறிப்பு.—(1) தனக்காகவும் மைனருக்காகவும் ஒருவன் எழுதிக் கொடுத்தால், தனக்காக ஒரு கையெழுத்தும் மைனருக்காக ஒரு கையெழுத்தும் ஆக இரண்டு கையெழுத்துகள் செய்யவேண்டியது.

(2) கிரயதஸ்தாவேஜுகளில் காட்டியசொத்து முன்னடியே குத்தகைக்குக் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் மேற்படி குத்தகையை கிரயதாரனுக்கு மேடோவர் செய்திருப்பதாக மேற்படி கிரய தஸ்தாவேஜிலேயே எழுதிக்கொள்ளலாம். அதற்கு தனியே ஸ்டாம்பு தேவையில்லை.

(3) பத்திரம் இரண்டு அதற்கு மேற்பட்ட கடிதங்களில் எழுப்பட்டால் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதிக்கொடுத்தவர்கள் கையெழுத்து செய்யவேண்டும். ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 21-வது பிரிவின்படி சொத்தின் விமர்சை இல்லாமற்போனால், தஸ்தவேஜு ரெஜிஸ்டரானாலும் செல்லாது.

ஸ்டாம்பு.—(1) எ-என்பவன் பி-என்பவனுக்கு (சொத்தின்பேரில் ஏற்பட்ட ஆதரவில்லாமல்) வேறுவிதமாக 1000 ரூ. கடன் கொடுக்க வேண்டும். எ-என்பவன் பி-என்பவனுக்கே தன்னுடைய சொத்தை ஷை 1000 ரூ கடனையும் கட்டுப்படுத்திசெய்து கொண்டதுபோக இப்போது ரூபாய் 500 பெற்றுக்கொண்டதாக ஏற்பட்டு கிரயஞ்செய்து விட்டால் ரூபாய் 1500-க்கு ஸ்டாம்பு போடவேண்டும்.

(2) எ-என்பவன் பி-என்பவனுக்கு தன்னுடைய சொத்தை ரூபாய் 500-க்கு கிரயஞ்செய்து அதன்பேரில் மூன்றுவது நபராகிய சி-என்பவனுக்குக் கொடுக்கவேண்டிய அடமானக்கடன் ரூபாய் 1000 அதற்கு வட்டி ரூபாய் 500-ம் பி-என்பவனே செலுத்திக்கொள்ள வேண்டியதாகச் சொன்னால் ரூபாய் 2000-க்கும் ஸ்டாம்பு போட வேண்டும்.

(3) எ-என்பவன் பி-என்பவனுக்கு, தன்னுடைய சொத்தைக் கிரயஞ்செய்கிறான். அதே சொத்தின்பேரில் ஷை பி-என்பவனுக்கு

அடமானம், போக்கியம் அல்லது மேடோவர் பாத்திய மிருக்கும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளுக்கு ஏற்பட்ட ஸ்டாம்பு தீர்வையை, தற்கால கிரயசாதனத்திற்குள்ள ஸ்டாம்பு தீர்வையினின் றும் கழித்துக்கொள்ளலாம்.

உதாரணம்.—(1) ஏ-என்பவன் தன்னுடைய சொத்தை சி-என்பவனுக்கு 600 ரூபாய்க்கு அடமானம் வைத்தான். பின்பு சி-என்பவன் ஷெ அடமான தஸ்தாவேஜை பி-என்பவனுக்கு மேடோவர் செய்து ரிஜிஸ்தர்செய்து கொடுத்துவிட்டான். இப்பொழுது ஷெ ஏ-என்பவன் தன்னுடைய சொத்தை (முன் அடமானம் வைத்த சொத்தை) மேடோவர் வாங்கின பி-என்பவனுக்கே ரூபாய் 1000-க்கு கிரயஞ்செய்கிறான். இதற்கு எவ்வளவு ஸ்டாம்பு வேண்டும்?

தற்கால கிரயமொத்தமாகிய ரூபாய் 1000-க்குத் தேவையான ஸ்டாம்பு ரூபாய்.	15	0	0
கிரயதாரனே மேடோவர் பெற்றிருக்கிற அடமான தஸ்தாவேஜ் ரூ 600-க்கு போடப்பட்டிருக்கிற ஸ்டாம்பு	4	8	0
ஆகையால் ரூ $4\frac{1}{2}$ போக பாக்கி தற்காலம் 1000 ரூபாய் கிரயத்திற்கு போடவேண்டிய ஸ்டாம்பு	10	8	0

(2) ஏ-என்பவன் பி-என்பவனுக்கு தன்னுடைய சொத்தை ரூபாய் 800-க்கு போக்கியம் வைக்கிறான். பிறகு ஏ-என்பவன் பி-என்பவனுக்கே, அதேசொத்தை ரூபாய் 1000-க்கு கிரயஞ்செய்து விடுகிறான். இதற்கு ஸ்டாம்பு எத்தனை?

1000 ரூ. கிரயத்திற்கு ஏற்பட்ட ஸ்டாம்பு ரூபாய்	15	0	0
ரிஜிஸ்தரான 800 ரூபாய் போக்கியதற்கு முன்னமே போடப்பட்டிருக்கிற ஸ்டாம்பு ரூபாய்	12	0	0
ஆகையால், போக்கியத்திற்கு ஏற்பட்ட ஸ்டாம்பு ரூ. 12 போக தற்காலம் போடவேண்டிய ஸ்டாம்பு	3	0	0

4. Partition.

பாகசாசனம்.

பாகமென்பது:—யாதொரு சொத்தின் கூட்டுச் சொந்தக்காரர்கள் அப்படிப்பட்ட சொத்தைத் தனித்தனியாய்ப் பங்கிட்டுக்கொள்

ளுகிறதாகவாகிலும், பங்கிட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறதாகவாகிலும் எழுதுகிற யாதொரு ஆதரவென்று அர்த்தமாகும். மேலும், அந்த வார்த்தையிலே, பாகமேற்படுத்துவதற்கு யாதொரு ரெவினியு அதிகாரி அல்லது யாதொரு ஸிவில் கோர்ட்டார் செய்கிற முடிவான உத்திரவும், பங்கிட்டுக்கொள்ளலாமென்று ஒரு மத்தியஸ்தன் அல்லது பஞ்சாயத்தார் உத்தரவுசெய்கிற தீர்மானமும் அடங்கும். 100 ரூ. மதிப்புக்கு மேற்பட்ட ஸ்தாவரசொத்தைப் பங்கிட்டுக் கொள்கிறதாயிருந்தால் ரெஜிஸ்டர் அவசியம் செய்யவேண்டும். ரூ. 100-க்கு உட்பட்டிருந்தால் இஷ்டமிருந்தால் ரெஜிஸ்டர் செய்யலாம். இதற்கு ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெட்யூல் 15-வது நெ. பாண்டுக்கு ஏற்பட்டிருக்கிற தீர்வை.

(a) 192 ஸு மீ ஷ (ஜில்லா, தாலூகா, ஊர், வகையரு) த. து. ப. ஆகிய நாமூன்று சகோதரர்களும் நம்முடைய பிதாவின் மரணத்திற்குப் பிறகு முன்போல ஏககுடும்பமாயிருந்துவர நமக்குள் ஒத்துவராததால், நம்முடைய பொதுவான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை அடியில் கண்டபடி சரியான மூன்று பிரிவாகப்பிரித்து சீட்டுப்போட்டதில், அந்தந்த பாகத்துக்கு எதிரில் குறித்திருக்கிற பேர்வழிகளுக்கு விழுந்தபடியால், அதன்படியே நாம் சம்மதித்து பாகம் செய்துகொள்ள உடன்பட்டோம்.

பாகத்தின் விவரம்.—1-வது பிரிவு (ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள்.) த-என்பவனுக்கு சீட்டு விழுந்ததால் இனிமேலாக அவன் அவைகளை தனியாக அனுபவிக்கவேண்டியது. அதன்படியே 2-வது பிரிவு (சொத்துக்கள் விவரம்) து-என்பவனுக்கு, 3-வது பிரிவு (சொத்துக்கள் விவரம்) ப-என்பவனுக்கு விழுந்து.

சாட்சிகள். கையெழுத்துகள்.

நெட்டெழுத்து.

(b) 192 ஸு மீ ஷ (குடியிருப்பு, ஊர், வகையரு) எ.பி.சி. என்ற நாம் மூன்று சகோதரர்களும், நமக்குள் சேர்ந்திருக்க ஒத்து வராததால் அடியில் கண்டபடி பாகஞ்செய்துகொண்டதாவது:—நம்முடைய 10,000 ரூ. பெறுமான சொத்தில் ரூ. 1000 பெறுமானதைத் தாயாரின் சம்ரட்சணார்த்தத்துக்காகவும், 500 ரூ. பெறுமான சொத்தை நம்முடைய தங்கையின் விவாகம் முதலான செலவுகளுக்காகவும். நம்முடைய பொதுக்குடும்பக் கடனைத் தீர்ப்பதற்காக ரூ. 1000 மிகுதிப்புள்ள சொத்தை ஒதுக்கிவிட்டு மீதியுள்ள ரூ. 7500 பெறுமான சொத்தை சரியாக மூன்றுபாகம்போட்டுத் தலைக்கு 2500 ரூபாய் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு வரவேண்டியது. நம்முடைய தாயாரின் மரணத்துக்குப்பிறகு அவளுக்கு வைத்திருந்த சொத்தில் அவளுடைய உத்தர கிரியைக்குச் சில வழிந்ததுபோக பாக்கி சொத்தை ஏதாபாகமாக நாமூவரும்

பிரித்துக்கொள்ளவேண்டும். பூஜைக்குரிய சாளிக்கிராமம் விக்கிரகம் முதலியதை ஜேஷ்டபிராதாவான ஏ-என்பவன் எடுத்துக்கொள்ளவேண்டும்.

சாட்சிகள். கையெழுத்துகள்.

நெட்டெழுத்து.

(c) ஷூ மீ உ தாலூக்கா கிராமம் மஜராவிலிருக்கும் ஜாதி ஜீவனம் குமாரர்கள் எ (1), பி (2) ஆகிய நாங்கள் இருவரும் எழுதிவைத்துக்கொண்ட பாகசாசனம்.

இதுவரையில் நாம் ஏககுடும்பமாயிருந்து வந்து இப்பொழுது ஏகோபித்திருக்கச் சரிப்படாததினால் (எந்த காரணம் ஏற்படுகின்றதோ அந்தக்காரணத்தைக் காட்டிக்கொள்ளவும்) பஞ்சாயத்தார் பைசல்படிக்கு முன்னமே ஜங்கம சொத்துக்களை பிரிவினைசெய்து கொண்டதுபோக நம்ம குடும்பத்திற்குப் பொதுவான ஸ்தாவர சொத்துக்களை அடியில் விவரித்திருக்கிறபடி 1-வது ஜாப்தாவில் கண்ட சொத்து 1-லக்கமிட்ட ஏ-என்பவனுக்கும் 2-வது ஜாப்தாவில் கண்ட சொத்து 2-லக்கமிட்ட பி-என்பவனுக்கும் சேர்ந்ததென்றும், நம்மில் ஏ-என்பவன் குடும்பத்தலைவனாயிருந்து காரியங்களைப் பார்த்து வந்ததினால் அவனுக்கு 200 ரூபாய் பெறுமானசொத்து அதிகமாகச் சேர்த்திருக்கிறதென்றும், இனிமேல் அவரவர்களுக்குப் பிரிந்தசொத்துக்களை அவரவர்களே புத்திரபௌத்திர பாரம்பரீயமாய் தானாதிவிக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவேண்டியவர்களென்றும் அவரவர் பாகசொத்துக்கு இனிமேல் அவரவர்களே பாத்தியப்பட்டு சர்க்கார் கந்தாயம் முதலியவைகளைச் செலுத்திக்கொள்ள வேண்டியதென்றும்; ஷூ மீ உ தாலூகா கிராமத்திலிருக்கும் சி-என்பவனிடத்தில் நம்மகுடும்பார்த்தமாக வாங்கியிருக்கும் ரூபாய் கடனை நபர் ஒன்றுக்கு ரூபாய் வீதம் கட்டிக்கொள்ள கடமைப்பட்டவர்களென்றும், நம்ம தாயார் டி-என்பவள் ஜீவனாம்சத்திற்காக அடியில் விவரித்திருக்கிற 3-வது ஜாப்தாவில்கண்ட சொத்து சேரத்தக்கதென்றும், அவள் ஜீவதிசைக்குப்பின் அவள் உத்தரகிரியைக்குச் செலவான தொகையை சமபாகமாகப் போட்டு மேற்படி சொத்தை நாம் சமபாகமாகப் பிரித்துக்கொள்ள உள்ளவர்களென்றும், நம் வீட்டில் எஸ்-என்பவள் ஆதரவில்லாத விதவையாயிருப்பதால் அவளுக்கு காலக்ஷேபத்திற்காக மாசம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் நாம் கொடுத்துக்கொண்டு வரவேண்டியவர்களென்றும், நம்மூத்தவர் மைனராகிய சகோதரனுடைய பாகத்தையும் பரிபாலித்து, கார்டியனாகவும் இருந்துவரவேண்டியது. இந்தப்படிக்கு நாம் சம்மதித்து மனப்பூர்வமாய் எழுதிவைத்துக்கொண்ட பாகசாசனம். (ஏற்படும் ஷரத்துக்களை காட்டிக்கொள்ளவும்.)

ஷரா:—முதலிய விவரங்கள்.

சொத்து விவரம்.

1-வது ஜாப்தா எ-என்பவனுக்கு பிரிந்த சொத்து.

நன்சைபுஞ்சை தோப்புவகையரா மொத்தம்		...	...	ரூ.........
வீட்டின் கிரைய மொத்தம்		...	...	ரூ.........
ஆகமொத்தம்	...	...	...	ரூ ....
கடன் மொத்தம்	...	...	..	ரூ.........
கடன்போக பாக்கி	...	...	...	ரூ.........

2-வது ஜாப்தா பி-என்பவனுக்கு பிரிந்த சொத்து.

நஞ்சைபுஞ்சை தோப்புவகையராகிரயமொத்தம்...				ரூ.........
வீட்டின் கிரய மொத்தம்.		...	....	ரூ.. ......
ஆகமொத்தம்	...	...	...	ரூ.........
கடன் மொத்தம்	...	...	...	ரூ.........
கடன் நீக்கி மொத்தம்	...	...	...	ரூ.........

3-வது ஜாப்தா. தாயார் டி-என்பவள் ஜீவனசம் சொத்து.

நஞ்சைபுஞ்சை தோட்டம்வகையரா கிரயமொத்தம்			ரூ.........
வீட்டின் கிரய மொத்தம்	...	...	ரூ.........

.........கையெழுத்துக்கள்

சாக்ஷிகள்............

எழுதியது............

ரிஜிஸ்தரேஷன் குறிப்புகள்.

1. சொத்து மொத்தத்திலிருந்து கடனைக்கழிப்பதாயிருந்தால் பாகசொத்துக்கு கிரயப்பத்திர ஸ்டாம்பு போடவேண்டியது.

2. கடனைக் கழிக்காத விஷயங்களில் கவர்ன்மெண்டு பூமி களுக்கு கந்தாயத்திற்கு 5 பங்கு மொத்தம் கட்டுவதுடன் ஷை பூமி களிலுள்ள கிணர்களுக்கும், வீடுகளுக்கும் இனும் பூமிகளுக்கும் தனித் தனியே கிரயமொத்தம் கட்டவேண்டியது.

3. வெண்கடன், பிராமிசரிநோட்டு, கைக்கடன் கணக்குப் புஸ்த கங்களில் ஏற்பட்ட கணக்குகள் முதலியவைகளை பாகபத்திரங்களின் கிரய மொத்தத்திலிருந்து கழிக்கக்கூடாது. ஆனல் ஏற்படும் சொத்து விஷயமாய் ரிஜிஸ்தரான வில்லங்கங்களை மாத்திரம் கிரய மொத்தத்தி லிருந்து கழித்துவிடலாம்.

ஸ்டாம்பு.—1. 1000 ரூபாய் பெறுமான சொத்தை இரண்டு சமபாகங்களாகப் பிரித்துக்கொண்டால் ஒருபாகமாகிய 500 ரூபாய் க்கு மாத்திரம் ஸ்டாம்பு போடவேண்டியது.

2. 1000 ரூபாய் பெறுமான சொத்தை, 600 ரூபாய் ஒருபாக மும், 400 ரூபாய் மற்றபாகமுமாகப் பிரித்துக்கொண்டால் பெரிய பாகத்தை நீக்கி குறைந்தபாகமாகிய 400 ரூபாய் பாகத்திற்கு மாத் திரம் ஸ்டாம்பு போடவேண்டியது.

3. 1000 ரூபாய் பெறுமான சொத்தை 550 ரூபாய் ஒரு பாகமும் 350 ரூபாய் இரண்டாவது பாகமும், பாக்கி ரூபாய் 100 மூன்ருவது பாகமுமாகப் பிரித்துக்கொண்டால் பெரியபாகத்தை நீக்கி மற்ற குறைந்த பாகங்களாகிய 350+100, இதன் மொத்தம் 450 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது.

4. 1000 ரூபாய் பெறுமான சொத்தை 4 சமபாகங்களாகப் பிரித்துக்கொண்டால், ஒருபாகத்தைத் தள்ளி மற்ற 3 பாகங்களாகிய 750 ரூபாய் மொத்தத்திற்கு ஸ்டாம்பு போடவேண்டியது.

5. 1000 ரூபாய் பெறுமான சொத்தை, முதல் பாகத்திற்கு ரூபாய் 400, இரண்டாவது பாகத்திற்கு ரூபாய் 300, மூன்ருவது பாகத்திற்கு ரூபாய் 200 நான்காவது பாகத்திற்கு ரூபாய் 100, இவ் விதமாக 4 பாகங்கள் செய்துகொண்டால், பெரியபாகமாகிய 400 ரூபாய் பாகத்தைதள்ளி குறைந்த பாகங்களாகிய மற்ற 3 பாகங்களும் சேர்ந்த 600 ரூபாய் மொத்தத்திற்கு ஸ்டாம்பு போடவேண்டியது.

6. 1000 ரூபாய் பெறுமான சொத்தில் 550 ரூபாய் பொருமா னது எ, பி, என்பவர்களுக்கு ஜாய்ண்டாகவும், மீதி ரூபாயை

சி, டி, ஈ. என்பவர்கள் ஜாய்ண்டாகவும் பாகம் செய்துகொண்டால் பெரியபாகமாகிய 550 ரூபாய் கூட்டு பாகத்தைத் தள்ளி குறைந்த பாகமாகிய 450 ரூபாய் கூட்டுபாகத்திற்கு ஸ்டாம்பு போடவேண்டியது.

7. 1000 ரூபாய் பெறுமான சொத்தில் 700 ரூபாய் பெறுமானது எ. பி, என்பவர்களுக்கு ஜாய்ண்டாகவும், மற்ற 300 ரூபாய் பெறுமானதை சி, என்பவனும் பாகம் செய்துகொண்டால், பெரிய பாகத்தைத்தள்ளி குறைந்த பாகமாகிய 300 ரூபாய் பாகத்திற்கு ஸ்டாம்பு போடவேண்டியது.

குறிப்பு.—(i) (a) பாகசாசனங்களில் பெரிய பாகத்தைத்தள்ளி, குறைந்த பாகங்களுக்கு அடமான தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

(b) ஜாய்ண்டாக அனுபவிக்கும் பாகங்களை ஒரே பாகமென பாவிக்கவேண்டியது.

(c) ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் முன்னமே பிரித்துக் கொண்டதுபோக என்று எழுதியிருந்தால் அப்படிப்பட்டவைகளுக்குத் தனியே ஸ்டாம்பு தேவையில்லை—அப்படிப்பட்ட சொத்தை விவரித்துக் காட்டவேண்டியதுமில்லை.

(ii) (a) பாகசாசனங்களில் பிரித்துக்கொண்ட பங்கு வீதங்களியிருந்து ஜீவனும் சத்திற்கு விடப்பட்ட சொத்தின் மதிப்புக்காவது, வருஷவாரி மாதவாரி துகைக்காவது ஸ்டாம்பு தேவையில்லை.

(b) பங்கு வீதங்களில் ஏற்படாத சொத்தை ஜீவனும்சத்திற்கு விட்டு அந்த சொத்தை பின்னால் பிரித்துக்கொள்வதாக ஒத்துக் கொண்டால் அப்படிப் பின்னால் சேரும் சொத்தையும், தற்காலம் பிரித்துக்கொண்ட பங்கு வீதங்களுக்கு ஏற்பட்ட சொத்தையும் சேர்த்து முன்னமே விவரித்துக்காட்டிய வண்ணம் அப்படி ஏற்படும் ஒட்டுபங்கு வீதத்தை யனுசரித்து ஸ்டாம்பு போடவேண்டியது.

உதாரணம்.

		ரூபா.
எ. என்பவனுக்குப் பிரிந்த சொத்து	...	1,000
பி. என்பவனுக்குப் பிரிந்த சொத்து	...	800
சி. என்பவனுக்குப் பிரிந்த சொத்து	...	600

பின்னால் பிரித்துக்கொள்வதாக ஒப்புக்கொண்ட வகையில்.

பி. என்பவனுக்கு பிரியும் சொத்து	...	400
சி. என்பவனுக்கு பிரியும் சொத்து	...	500
ஆகையால் எ-என்பவனுக்கு பிரிந்த சொத்து	...	1,000
பி. என்பவனுக்கு பிரிந்தசொத்தும் பிரியும் சொத்தும்	...	1,200
சி. என்பவனுக்கு பிரிந்தசொத்தும் பிரியும் சொத்தும்	...	1,100

இப்பொழுது பெரியபாகமாகிய 1,200 ரூபாய் பாகத்தைத் தள்ளி பற்ற குறைந்தபாகங்களாகிய 1,000+1,100=2,100 ரூபாய் மொத்தத்திற்கு அடமான தஸ்தாவேஜ் ஸ்டாம்பு, அதாவது 18-12-0 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது.

(iii) பாக விடுதலை தஸ்தாவேஜுகளுக்கு, கந்தாயத்தின் 5 பங்கு தீர்வை விதம் போடக்கூடாது. கிரயமொத்தந்தான் போட வேண்டும்; விடுதலையாகும் சொத்துக்கு அடமான தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

குறிப்பு—பாகசாசனங்கள் ரிஜிஸ்தராகும் காலத்தில், பாகஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நகல் தேவையிருந்தால், அசல் தஸ்தாவேஜ் 1½-ரூபாய் ஸ்டாம்பு காகிதத்திற்கு மேற்படாத ஸ்டாம்பு காகிதத்தில் எழுதப்படவேண்டியிருந்தால், தேவையான நகல்களும் அசல் ஸ்டாம்பில் எழுதிக்கொள்ளலாம்.

அசல் தஸ்தாவேஜ் 1½ ரூபாய் ஸ்டாம்புக்கு அதிகப்பட்ட எவ்வளவு தொகையான ஸ்டாம்பின்பேரில் எழுதப்பட வேண்டியதாயிருந்தாலும், தேவையான நகல்கள் (டூப்பிளிகேட்டுகள்) 1½ ரூபாய் ஸ்டாம்பின்பேரில் எழுதிக்கொள்ளலாம்; அப்படி எழுதிக்கொண்ட நகல்கள் அசல் தஸ்தாவேஜுக்குச் சரியான நகலாயிருக்கவேண்டியது. அசல் தஸ்தாவேஜ் ரிஜிஸ்தராகும் காலத்தில் அப்படிப்பட்ட நகல்களை ரிஜிஸ்தராபீசரிடம் சர்டிபிகேட்டு செய்து கொடுக்கும்படி தாக்கல் செய்தால், நகல் கட்டணம் மாத்திரம் வசூல் செய்துகொண்டு அந்த நகல்களுக்கு சர்டிபிகேட்டு செய்துகொடுக்கப்படும். அப்படி சர்டிபிகேட்டு செய்யப்படும் நகல்கள் அசல் தஸ்தாவேஜைப்போல சிவில் கிரிமினல் நடவடிக்கைகளிலும் செலாவணியாகும்.

Lease or Rent.

குத்தகை அல்லது வாடகைச் சீட்டு.

குத்தகை அல்லது வாடகைச்சீட்டு என்பது:—(1) யாதொரு அசையாப்பொருளை குத்தகை அல்லது வாடகைக்கு விட சீட்டெழுதுவதென்றும், (2) யாதொரு அசையாப்பொருளைப் பயிரிடுவதற்காவது அனுபவிப்பதற்காவது அதற்கு வாடகை செலுத்த அல்லது மாசூலின் பாகத்தையாவது ஒப்பிப்பதற்காவது எழுதிக்கொடுக்கொடுக்கிற கவுல். அல்லது வேறே உடன்படிக்கை என்றும், (3) எவ்வகைப்பட்ட ஊழிய முதலிய பெருமானமுள்ள காரியங்களையாவது யாதொரு சுதந்தரத்தையாவது குத்தகைக்கு விடுவதாக எழுதுகிற யாதொரு ஆதரவென்றும், (4) குத்தகை அல்லது வாடகைக்காகச் செய்து கொள்ளுகிற மனுவின்மேல் மனுக்கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கும்படி உத்தேசித்தெழுதுகிற ஆதரவென்பதும், (5) பட்டாவென்பதும், அடங்கும்.

குத்தகைக்கு எதிரிடை யென்பது :—சொத்தின் சொந்தக்காரன் குத்தகைதாரனுக்கு எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜ். சில ஊர்களில் அசல் குத்தகை தஸ்தவேஜுக்களை நிலத்துக்குடையவரே எழுதியும், எதிரிடையை குத்தகைக்கு ஏற்றுக்கொள்பவர் எழுதிக்கொள்ளும் வழக்கம் அனுசரிக்கப்படுகிறது. சந்தர்ப்பத்துக்கேற்றபடி வாசகங்களை தேவையானபடி மாற்றி எழுதிக்கொள்ளவும், யாதொரு குத்தகை அல்லது வாடகைச்சீட்டைக் குத்தகை அல்லது வாடகைக்கு விடுபவரும் கொள்பவரும் ஆகிய இருவரும் எழுதிக்கொடுத்தால் தான் அது குத்தகை சீட்டாகும்.

ஜமீன்தார்கள், முகாசாதார்கள், இனாம்தார்கள், சுரோத்திரியதார்கள் முதலான பூமியுள்ளவர்களும் விவசாயஞ்செய்யும் குடிகளும் ஒருவருக்கொருவர் எழுதிக்கொடுக்கும் பட்டா முச்சலிகாக்கள், நிலம் சாகுபடி செய்து கொண்டதற்குக் குடியாவன் நிலக்காரனுக்குக் கொடுக்கும் சர்க்கார் கிஸ்தி வகையரா சகிதம் எல்லாபாபத்தும் எவ்வளவு மதிப்புள்ளதாயிருந்தபோதிலும் சரி (1) குத்தகை ஷரத்து ஒரு வருஷத்திற்கு மேற்படாமலிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட பட்டா முச்சிலிகைகளை ரெஜிஸ்டர் செய்வது அவரவரிஷ்டம் (2) ஷரத்து

ஒரு வருஷத்துக்கு மேற்பட்டுசெலுத்தவேண்டிய வருஷாந்திரத்துகை 50 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தபட்டா முச்சலிக்கைகளை அவசியம் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். (3) குத்தகைத்துகை எவ்வளவு அற்பமாயிருந்தாலும் 5-வருஷத்துக்குமேல் கெடுவு ஏற்பட்டால் அந்தப்பட்டா முச்சலிக்கையை கட்டாயம் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். (4) ஒரே கிராமத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட பூமிகளை ஒருவனுக்கே அல்லது அநேகருக்கு ஜாயிண்டாக குத்தகைக்குக் கொடுக்கும் விஷயத்திலும் ஒரே தஸ்தாவேஜ் எழுதிக்கொள்ளலாம். (5) ஒரே கிராமத்திலுள்ள நஞ்சை, பூமிகளை ஜாதா ஒன்றுக்கு வெவ்வேறு குத்தகை விதமாக ஒருவனுக்கு அல்லது அநேகருக்கு ஜாயிண்டாக குத்தகைக்குக் கொடுத்தாலும் ஒரே தஸ்தாவேஜ் எழுதிக்கொள்ளலாம். (6) அநேக கிராமங்களிலுள்ள பூமிகளை ஒருவனுக்கு அல்லது அநேகருக்கு ஜாயிண்டாக குத்தகைக்குக் கொடுத்தாலும் ஒரே தஸ்தாவேஜ் எழுதிக்கொள்ளலாம். (7) குத்தகை தஸ்தாவேஜுகளில், குத்தகைக்கு ஏற்றுக்கொள்ளும் நபர் எழுதிக்கொடுப்பவராக இருக்கவேண்டியது.

ஸ்டாம்பு :—1. மேலே கண்டபடி கெடுவுகாலம் ஒரு வருஷத்திற்கு மேற்படாமலிருந்தால் குத்தகைத்தொகை எவ்வளவாயிருந்த போதிலும் ஸ்டாம்பு தேவையில்லை.

2. கெடுவுகாலம் ஒரு வருஷத்திற்கு மேற்பட்டாலும், வருஷவாரி குத்தகை ரூபாய் 100-க்கு மேற்படாமலிருந்தாலும் ஸ்டாம்பு தேவையில்லை.

3. ஷை (1) (2) லக்கமிட்ட தஸ்தாவேஜுகளின் எதிரிடை முச்சலிக்காவுக்கும் மேடோவர், முதலிய தஸ்தாவேஜிகளுக்கும் ஸ்டாம்பு தேவையில்லை.

4. கெடுவுகாலம் ஒரு வருஷத்திற்கு மேற்பட்டு 5 வருஷங்களுக்கு மேற்படாமலிருந்து, வருஷவாரி குத்தகை அல்லது வாடகை ரூ 100-க்குமேற்பட்டால் அப்படிப்பட்ட குத்தகை தஸ்தாவேஜுக்கு சராசரி வருஷாந்தர குத்தகையின்பேரில் (ஸ்டாம்பாக்ட்) நெ. 16-வது பாட்டம்ரிபாண்டுக்குள்ள ஸ்டாம்பு போடவேண்டியது.

5. கெடுவுகாலம் 5 வருஷத்திற்கு மேற்பட்டு 20-வருஷத்திற்கதிகப்படாதிருந்தாலும் ஒரு கெடுவு குறிக்கப்பட்டிருந்து வருஷவாரி குத்தகை 100 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால், சராசரி வருஷவாரி

குத்தகையின்பேரில் நெ. 23 கிரயதஸ்தாவேஜுக்கு ஏற்பட்ட ஸ்டாம்பு போடவேண்டியது.

6. அந்தக் குத்தகையின் கெடுவு அல்லது வாடகைக்காலம் 20 ஸ்த்துக்கு மேற்பட்டு 30-வருஷத்திற்குட்பட்டிருந்தால் அதன் சராசரி வருஷவாரி குத்தகையின் மூன்றத்தனைத்தொகைக்கு ஸ்டாம்பு ஆக்ட் நெ. 23 ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.

7. அந்தக்குத்தகைக்காலம் 30-ஸ்த்துக்கு மேற்பட்டு 100 வருஷத்திற்கு அதிகப்படாதிருந்தால் சராசரி வருஷவாராரி குத்தகையின் நான்கத்தனைக்கு நெ. 23 கிரயதஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்பு வீதம்.

8. அந்தக் குத்தகைக்காலம் 100 வருஷத்திற்கு மேற்பட்டு எக்காலத்திற்கும் சாஸ்தமாய் இருப்பதாகவாவது பொருள்பட்டால், முதல் 50 வருஷக்குத்தகையின் ஆறிலொருபங்கிற்கு 23-ம் நம்பர் ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.

9. வருஷவாரி குத்தகை ரூபாய் 100-க்கு மேற்பட்டு கெடுவு குறிக்கப்படாத தஸ்தாவேஜுக்கு 10 வருஷத்திய குத்தகையின் சராசரி வருஷாந்தரகுத்தகையின் மூன்றத்தனை தொகைக்கு கிரய தஸ்தாவேஜு ஸ்டாம்பு போடவேண்டியது.

உதாரணம்.—ஏ-என்பவன் பி-என்பவனுக்கு தன்னுடைய பூமியை, முதல் ஸ்த்திற்கு 125 ரூபாய் வீதமும், 2-வது ஸ்த்திற்கு 130 ரூபாய் வீதமும், 3-வது ஸ்த்திற்கு ரூபாய் 135 வீதமும், ஆக இவ்விதம் பிரதி வருஷம் 5 ரூபாய் அதிகமான குத்தகைக்குக் கொடுக்கிறான். ஆனால் கெடுவுகாலம் குறிக்கப்படவில்லை. இதற்கு 10-ஸ்த்திய குத்தகையின் மொத்தம் ரூபாய் என்னவென்றால், 125, 130, 135, 140, 145, 150, 155, 160, 165, 170, ரூ. 1475 ஆக சராசரி வருஷாந்தரகுத்தகை என்னவென்றால் $\frac{1475}{10}$ 147-8-0. ஆகையால்—சராசரி வருஷாந்தரகுத்தகையாகிய ரூபா 147—8—0-க்கு கிரய தஸ்தவேஜ் ஸ்டாம்பாகிய, 3 ரூபாய் போடவேண்டியது.

7. சாசுவத குத்தகை தஸ்தாவேஜுக்கு, முதல் 50 வருஷங்களுக்குள்ள குத்தகையைக்கூட்டி, கூட்டிவந்த தொகையை 6 ஆல்

வகுத்து. வந்த துகைக்கு கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

ஷை சாசுவத குத்தகைகளின் வருஷவரி குத்தகை ரூபாய் 100-க்கு மேற்படாத தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு தேவையில்லை.

குறிப்பு :—(**a**) குத்தகை தஸ்தாவேஜுகளில் வீட்டுச்சிலவுக்காகக்கொடுக்கும் தாய்கறி பதார்த்தங்களின் கிரய மொத்தத்தை வருஷவாரி குத்தகைத்தொகையில் சேர்த்து வந்தமொத்தத்திற்கு ஸ்டாம்பு தேவையிருந்தால் போடவேண்டும்.

(**b**) வருஷவாரி குத்தகையைகாட்டி, ஏதாவது அட்வான்ஸ் கொடுத்தால், அந்த அட்வான்ஸ் துகையை குத்தகையினின்று கழித்துக்கொள்ளும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட அட்வான்ஸ் துகைக்குத் தனியாய் ஸ்டாம்பு வேண்டியதில்லை.

(**c**) வருஷவாரி குத்தகையுங்காட்டி பெற்றுக்கொள்ளும் அட்வான்ஸ் துகை பின்னால் வாப்ஸ் செய்வதாயிருந்தால் அப்படிப்பட்ட அட்வான்ஸ் துகைக்கு கிரயப்பத்திர ஸ்டாம்பும், குத்தகைத் தொகைக்கு ஸ்டாம்பு தேவையிருந்தால் அந்த ஸ்டாம்பும் சேர்த்துப் போடவேண்டியது ; அப்படி வருஷவாரி குத்தகைத்தொகைக்கு ஸ்டாம்பு தேவையில்லாவிட்டால், ஏற்படும் அட்வான்ஸ் துகைக்கு மாத்திரம் கிரயசாசன ஸ்டாம்பு போடவேண்டியது.

(**d**) குத்தகை தஸ்தாவேஜுகளில் வருஷவாரி குத்தகைதண்டு கெடுவுகாலம் வரையிலும் கூடிய பூரா குத்தகைத்தொகையை முன்னுடியே பெற்றுக்கொள்வதாயிருந்தபோதிலும், வருஷவாரி குத்தகைக்கு மாத்திரம் ஸ்டாம்பு தேவையிருந்தால் போடவேண்டியது.

(**e**) குத்தகை தஸ்தாவேஜுகளில் வருஷவாரி குத்தகைகாட்டாமல், அட்வான்ஸ் தொகைக்கு பூமியை விடும்பக்ஷத்தில், அப்படியேற்படும் அட்வான்ஸ் தொகைக்கு கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்புபோடவேண்டியது.

(**f**) சர்க்கார் தீர்வை முதலியவைகளை குத்தகைக்காரன் செலுத்துவதாயிருந்தால் அதையும் வருஷவாரி குத்தகைத்தொகையில் சேர்த்துக்கொண்டு, ஏற்படும் மொத்தத்திற்கு ஸ்டாம்பு தேவையிருந்தால் போடவேண்டியது.

(g) குத்தகைத்தொகையைமாத்திரம் வசூல்செய்துகொள்ள மேடோவர்செய்யும் தஸ்தாவேஜுகளுக்கு, வருஷாந்தரகுத்தகைத் தொகையின்பேரில் கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது; வருஷவாரி குத்தகையின்றி பாக்கி நிற்கும் குத்தகைத்தொகையை மாத்திரம் வசூல்செய்துகொள்ள மேடோவர் செய்யும் தஸ்தாவேஜு களுக்கு ஏற்படும் தொகைக்கு கிரயப்பத்திர ஸ்டாம்பு தேவை.

Agricultural Lease.

நிலத்தைச் சாகுபடிசெய்யக் குத்தகை.

ஹூ ஸ்ரீ உ தாலூக்கா கிராமத்திலிருக்கும் ஜாதி பூஸ்திதிதாரர் இன்னார் குமாரன் ஏ-என்பவனுக்கு மேற்படி யூரிலிருக்கும் ஷ ஜாதி ஜீவனம் குமாரன் பி-என்பவன் எழுதிக்கொடுத்த குத்தகை தஸ்தாவேஜு.

அடியில்கண்ட பூமிகளை எனக்கு சொந்த சாகுபடி செய்யச் சரிப்படாத்தினுல் (எந்தக்காரணம் மேற்படுகிறதோ அந்தகாரணத்தைக் காட்டிக்கொள்ளவும்) உமக்கு ஹூ 1-க்கு ரூ வீதம் ஹூகளுக்கு குத்தகைக்குக் கொடுத்திருப்பதால் மேற்படி பூமிகளை நீயே உன் சொந்த பூமிகளைப்போல வேண்டும் பயிரிட்டு சாகுபடி செய்துகொண்டு வருஷாவருஷம் ஸ்ரீ உயில் ஏற்பட்ட குத்தகையைச் செலுத்திக்கொண்டு வரவேண்டியது. அப்படி குறித்த கெடுவில் வருஷவாரி குத்தகையைச் செலுத்தத்தவறினுல் தவறின உ முதல் நின்ற நாள்வரைக்கும் ஸ்ரீ 1-க்கு 100-க்கு வீதம் வட்டி சேர்த்துச் செலுத்த வேண்டியது. விளைந்தாலும் விளையாவிட்டாலும் ஏற்பட்ட குத்தகையை கிரமமாய் செலுத்திக்கொண்டு வரவேண்டியது. கிணற்றில் தண்ணீரில்லாவிட்டால் கிணற்றை அடிவெட்டு வெட்டிவைத்து தண்ணீர் கட்டும்படி செய்து கொடுப்பேனுகவும்; வேலி மரம் முதலியவைகளை உத்திரவன்றி வெட்டாமல் பாது காத்து ஒப்பிக்கவேண்டியது பூமியில் அருகுசப்பாத்துக் கள்ளிகள் முளைக்காமல் துருஸ்தாய் வைத்திருக்கவேண்டியது; அப்படியில்லாமல் கெடுவுகாலத்தில் பூமியில் அருகு சப்பாத்துக் கள்ளிகள் அதிகரித்து சாகுபடிக்கு லாயக்கில்லாமலிருந்தால் ஏகரா 1-க்கு ரூ வீதம் நஷ்டம் கொடுக்கவேண்டியது. (ஏற்படும் நிபந்தனைகளைக் காட்டிக்கொள்ளவும்) பூமிக்குப்பாயப்பட்ட வாய்க்கால்களின் மராமத்து உன்னைச்சேர்ந்தது. சர்க்கார் கந்தாயம் நானே செலுத்தவுள்ளவன் ஹூ 1-க்கு ரூபாய் பொறுமான தேங்காயும் ரூபாய் பெறுமான மாங்காயும் காலத்தில் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது; கெடுவுகாலம் முடிந்தவுடன் யாதொரு தடையுமின்றி பூமியை என் சுவாதீனத்தில் விட்டுவிடவேண்டியது.

சோத்து விபரம்.

சாக்ஷிகள். *கையெழுத்து.*

எழுதியது.

6. வாரப்பத்திரம்.

வாரப்பத்திரமேன்பது:—நிலத்தின் மாசூலில் ஒரு பாகத்தை நிலக்காரனுக்குக்குடியானவன் கொடுக்கும்படி ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கும் கவுல்; இந்த தஸ்தாவேஜுகள் எழுதுகிற காலத்தில் வரும்படி இவ்வளவென்று நிர்ணயிக்க சாத்தியமில்லாததால், நிலக்காரன் பங்குக்குவாத்தகுந்த தானியம் வகையராக்களின் மதிப்பை கால விலையை யனுசரித்து ஸ்டாம்பு தீர்வைசெலுத்தவேண்டும்.

1. குத்தகை தஸ்தாவேஜுகளை எழுதுவதைப்போலவே வாரப்பத்திரங்களையும் எழுதிக்கொள்ளலாம். ஆனால் ஒரு வருஷத்திய ராஜவாரத்தின் மொத்த தானியத்திற்கு நிலவாரத்தின் விலை மதிப்பை அனுசரித்து, விலை மதிப்புக்காட்டவேண்டிய தவசியம்.

2. ஒரு வருஷத்திய விலைமதிப்பின் பேரில் சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம் வாங்கப்படும்.

3. ஒரு வருஷத்திற்கு மேற்படாத வாரப்பத்திரங்களின் விலை மதிப்புக் காணுவிடில் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ரூபாய் 5 ஏற்படக்கூடும்.

4. ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு, முதலிய விஷயங்களுக்காக தானியத்தின் விலைமதிப்பைக் குறைக்கும் பக்ஷத்தில், தாவாசெய்ய நேரிடுங் காலத்தில் ஏமாந்துபோகவேண்டியதாயிருக்கும்.

5. வாரப்பத்திரம், அதன் எதிரிடை முச்சலிக்கா, மேடோவர் விடுதலை முதலிய தஸ்தாவேஜுகளுக்கும், குத்தகை தஸ்தாவேஜை அனுசரித்து ஸ்டாம்பு தீர்வைபோடவேண்டும்.

ஸு மீ வ திருச்சினாப்பள்ளி ஜில்லா முசிரிதாலூகா துறையூர் கிராமத்திலிருக்கும் முத்துக்கருப்பன் பிள்ளை ஷை ஜில்லா ஷை தாலூகா ஷை கிராமம் ராமசுவாமிய்யர் குமாரன் ஜம்புனதய்யருக்கு எழுதிக்கொடுத்த வாரப்பத்திரம் என்னவென்றால், மேற்படி கிராமத்தில் தங்களுக்குச் சொந்தமான (இன்ன) இடத்திலுள்ள ஏகர் செண்டு விஸ்தீர்ணமுள்ள புஞ்சை அல்லது நஞ்சை நிலத்தை நான் சாகுபடிக்கு ஒப்புக்கொண்டு தங்களுக்குப்பட்டணம்படி 4. கொண்ட மாக்காலால் 15 கலம் நெல்லும், 7 கலம் ராகி என்கிற கேழ்வரகும் கொடுப்பதாக சம்மதித்து இந்த வாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன், கிராமவழக்

கப்படி ஏற்பட்ட சில்லரை வரிகளையும் நானே கொடுப்பதுடன் சாகுபடிக்காக ஏற்பட்ட சகல சிலவுகளையும் நானே செய்வேனாகவும்.

முத்துக்கருப்பன்பிள்ளை.

சாட்சிகள்.

---

7. Counterpart of Lease.

குத்தகைசீட்டுக்கு எதிரிடை அல்லது முச்சிலிக்கா.

பூமியை சாகும்படி செய்கிறவன் அதன் சொந்தக்காரனுக்கு எழுதிக்கொடுக்கும் பத்திரத்திற்கு குத்தகைக்கு எதிரிடை முச்சலிக்கா வென்று பெயர்.

குத்தகை தஸ்தவேஜை எழுதிக்கொடுத்தவன், குத்தகையின் எதிரிடையில் எழுதி வாங்கிக்கொண்டவனாகவும்;

குத்தகை தஸ்தாவேஜில் எழுதி வாங்கிக்கொண்டவன், குத்தகையின் எதிரிடையில் எழுதிக்கொடுத்தவனாகவும், ஏற்படவேண்டும். (வாரப்பத்திர நமூனாவைப்பார்க்கவும்.)

குத்தகை தஸ்தாவேஜிலுள்ள நபர்களின் பெயர்களை முன்பின்னாய் எழுதி மற்ற விஷயங்களின் வாசகத்தையெல்லாம் அதே வரிசைக் கிரமமாக ஒன்றும்விடாமல் மேற்படி எதிரிடையிலும் எழுதவேண்டியது.

குத்தகை தஸ்தாவேஜில் நீ என்பதை, எதிரிடையில் நான் எனவும், குத்தகை தஸ்தாவேஜில் நான் என்பதை எதிரிடையில் நீ எனவும், குத்தகை தஸ்தாவேஜில் கொடுப்பேனாகவும் என்பதை எதிரிடையில் கொடுக்கவேண்டியது எனவும், குத்தகை தஸ்தாவேஜில் கொடுக்க வேண்டியது என்பதை எதிரிடையில் கொடுப்பேனாகவும் எனவும், அசல் தஸ்தாவேஜிலுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்ட விதமாக வாசகத்தைப் பொருத்தி மேற்படி எதிரிடையில் எழுதிக்கொள்ளவேண்டியது.

ரேஜிஸ்டர்.—(1) குத்தகை தஸ்தாவேஜை ரிஜிஸ்தர் செய்யுங் காலத்தில் அதற்குச் சம்மந்தப்பட்ட எதிரிடையை ரிஜிஸ்தர் செய்துகொண்டால், மேற்படி எதிடைக்கு நகல் கட்டணம் மாத்திரம் வாங்கப்படும், அன்றி தனியாய் ரிஜிஸ்தர் செய்துகொண்டால் அசல் தஸ்தாவேஜைப்போல கட்டணம் ஏற்படும்.

(2) குத்தகையின் எதிரிடையை, அசல் தஸ்தாவேஜு எழுதின பின்னிட்ட தேதிகளிலும் எழுதிக்கொள்ளலாம், ஒரே காலத்தில் எழுதப்படவேண்டுமென்கிறதில்லை.

ஸ்டாம்பு.—(1) அசல் குத்தகை தஸ்தாவேஜுக்கு ஸ்டாம்பு தேவையில்லாவிட்டால் அதன் எதிரிடைக்கும் ஸ்டாம்பு வேண்டியதில்லை.

(2) அசல் குத்தகை தஸ்தாவேஜ் 1½ ரூபாய் ஸ்டாம்புக்கு மேற்படாத ஸ்டாம்பின்பேரில் எழுதப்படவேண்டியிருந்தால், அதன் எதிரிடைக்கும் அசல் ஸ்டாம்பு போடவேண்டியது.

(3) அசல் குத்தகை தஸ்தாவேஜ் 1½ ரூபாய்க்கு மேற்பட்ட எவ்வளவு ஸ்டாம்பின்பேரில் எழுதப்படவேண்டியதாயிருந்தபோதிலும், அதன் எதிரிடைக்கு 1½ ரூபாய் ஸ்டாம்புதான் தேவையானது.

8. Transfer of Lease.

குத்தகை மேடோவர் பத்திரம்.

குத்தகை மேடோவர் என்பது:—ஒரு குடியானவன் பேருக்கு நிலச்சொந்தக்காரன் ரொக்கமாகவோ தானியமாகவோ குத்தகை செலுத்தும்படி எழுதிக்கொடுத்த பத்திரத்தை, வேறொருவருக்கு அந்தக் குத்தகை செலுத்தும்படி தனக்குள்ள பாத்தியதையை வேறொருவர் பேருக்கு மாற்றுவது.

1. அசல் தஸ்தாவேஜுக்கு ஸ்டாம்பு தேவையில்லாவிட்டால் அதன் மேடோவர் தஸ்தாவேஜுக்கும் ஸ்டாம்பு வேண்டியதில்லை.

2. மொத்தமாக தொகை பெற்றுக்கொண்டு மேடோவர் செய்து பூமியை சுவாதீனஞ்செய்தால், அப்படி மேடோவரில் ஏற்படும் துகையின் பேரில் கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

3. உள் குத்தகைக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் வருஷவாரி குத்தகைத் துகைக்கும் ஏற்படும் கெடுவுக்கும், சாதாரண குத்தகை தஸ்தாவேஜுகளை அனுசரித்து ஸ்டாம்பு தேவையிருந்தால் போடவேண்டியது.

1920-ம் வருஷம் மார்ச்சு மீ 18 தேதிக்குச் சரியான தமிழ் ௵ ௴ ௳ ஊரிலிருக்கும் ஜாதி மதம் தொழில் வகையரா எ-என்பவன் ஊர் தொழில் ஜாதி மதம் வகையரா பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த குத்தகை மேடோவர் பத்திரம் என்னவென்றால்.

ஷ மீ உ ஊர் ஜாதி மதம் தொழில் உள்ள சி-என்பவனால் அடியிற்கண்ட நஞ்சை தோட்டம் வகையராவை 5-வருஷத்துக்கு ரூ. என்னிடம் ரொக்கம் அல்லது கலம் தானியமாகக் கொடுக்க குத்தகை ஒப்புக்கொண்டதில் சென்ற இரண்டு வருஷத்திய குத்தகை பூராவும் நான் பத்திக்கொண்டு விட்டபடியால், பாக்கி 3-வருஷத்துக்கும் வருஷவாரி குத்தகை ரூ. அல்லது தானியம் கலம் நீரே குத்தகைதாரனிடம் வசூல் செய்துகொண்டு அந்தந்த வருஷைத்துக்கு நீரே இரசீது கொடுக்கவேண்டியதாய் எழுதிக்கொடுத்து அட்வான்சாக தங்களிடம் சாட்சிகள் முன்னிலையில் பெற்றுக் கொண்டது ரூ அல்லது தானியம் கலம் இத்துடன் அசல் தஸ்தாவேஜையும் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். இனிமேல் இந்த அசல் குத்தகைப் பத்திரத்திலுள்ள யாதொரு பாத்தியமும் எனக்கு சம்பந்தமில்லை.

சொத்து விபரம்.

நஞ்சை, புஞ்சை, தோட்டம், பல விருட்சம் உள்பட சர்வே நெ. விஸ்தீரணம் ஜாகா வகையரா.

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

---

9. Surrender of Lease.

குத்தகை விடுதலை.

அசல் தஸ்தாவேஜை ஒட்டி விடுதலைப்பத்திரம் எழுதவேண்டியது:

1. அசல் தஸ்தாவேஜுக்கும் ஸ்டாம்பு தேவையில்லாவிட்டால் அதன் விடுதலை தஸ்தாவேஜுக்கும் ஸ்டாம்பு தேவையில்லை.

2. **(a)** அசல்தஸ்தாவேஜுக்கு 7—8—0 ரூபாய்க்கு மேற்படாத ஸ்டாம்பு தேவையிருந்தால், அதன் விடுதலைக்கும், அசல் தஸ்தாவேஜுக்குரிய ஸ்டாம்பு போடவேண்டியது.

(b) அசல் தஸ்தாவேஜுக்கு 7½-ரூபாய்க்கு மேற்பட்ட எவ்வளவு ஸ்டாம்பு தேவையாயிருந்தாலும், அதன் விடுதலைக்கு 7—8—0 ரூபாய்க்கு மேற்பட்ட ஸ்டாம்பு தேவையில்லை.

---

10. Non-Agricultural Lease.

வாடகைச்சீட்டு.

ஸு மீ ௳ தாலூக்கா கிராமத்திலிருக்கும் ஜாதி ஜீவனம் குமாரன் ஏ-என்பவனுக்கு தாலூக்கா கிராமத்திலிருக்கும் ஜாதி ஜீவனம் குமாரன் பி-என்பவன் எழுதிக்கொடுத்த வாடகைச்சீட்டு.

அடியில்கண்ட வீட்டை தங்களுக்கு ஸுங்களுக்கு வாடகைக்குக் கொடுத்து ஷை வீட்டை நாளது தேதியில் தங்கள் சுவாதீனஞ் செய்திருப்பதால், தாங்கள் ஒத்துக்கொண்டபடி மீ 1-க்கு........ரூபாய் வாடகை வீதம் ஏற்படும் வாடைகையை மாதா மாதம்..................டையில் என்னிடம் அல்லது என்னுடைய உத்திரவு பெற்றவர்களிடத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது. அப்படியன்றி குறித்த கெடுவில் வாடகையைச் செலுத்தத்தவறினால், தவறின தேதி முதற்கொண்டு நின்ற நாள்வரைக்கும் மீ 1-க்கு 100-க்கு ......வீதம் வட்டி சேர்த்துச் செலுத்தவேண்டியது (ஏற்படும் நிபந்தனைகளைக் காட்டிக்கொள்ளவும்.) வீட்டுக்கு முக்கியமான ரிபேர் வகையரா என்னைச் சேர்ந்தது ; சுண்ணும்புப் பூச்சு முதலிய சாதாரண ரிப்பேர் உன்னைச் சேர்ந்தது ; வீட்டுக்கு முனிசிபாலிட்டி வரியை நானே செலுத்திக்கொள்ள உள்ளவன். (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்.) வீட்டை துரஸ்தாய் வைத்திருந்து குறித்த கெடுவில் என் சுவாதீனஞ் செய்துவிடவேண்டியது ; அப்படி செய்யத் தவறினால் தவறினதேதி முதற்கொண்டு நின்ற நாள்வரைக்கும் ஆதியில் ஏற்பட்ட வாடகைக்கு இரட்டிப்பு மடங்கு கொடுக்கவேண்டியது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த வாடகைச்சீட்டு.

வீட்டின் விபரம்.

* * * *

ஷரா :—முதலிய விவரங்கள்.

............கையெழுத்து.

சாக்ஷிகள்............

எழுதியது............

ஸ்டாம்பு :—(1) 1-ஸுத்திற்கு மேற்படாத வாடகைச்சீட்டுகளுக்கு எவ்வளவு மாதங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு மாதங்களுக்குள்ள வாடகையைக் கூட்டிய தொகையின் பேரில் அடமானப்பத்திர ஸ்டாம்பு போடவேண்டியது.

(2) 1-வருஷத்திற்கு மேற்பட்டு 5 வருஷங்களுக்கு மேற்படாத வாடகை சீட்டுகளுக்கு சராசரி வருஷவாரி வாடகையின்பேரில் அடமான தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

(3) 5-வருஷங்களுக்கு மேற்பட்டிருந்தால், சராசரி வருஷவாரி வாடகையின்பேரில் கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது. 5-வருஷத்துக்கு மேற்பட்ட காலங்களுக்கு, குத்தகை அல்லது வாடகை சீட்டுக்கு ஏற்பட்ட வீதம்.

(4) காலங் குறிக்கப்படாமலும் சாசுவதமாயும் விடப்பட்ட வாடகைச்சீட்டுகளுக்கும், அட்வான்ஸ் முதலிய விஷயங்களுக்கும் (தொகை காரணமின்றி) குத்தகை தஸ்தாவேஜை யனுசரித்து ஸ்டாம்பு தீர்வை போடவேண்டியது.

(5) அசல் தஸ்தாவேஜ் 1—8—0 ரூபாய்க்கு மேற்படாத ஸ்டாம்பில் எழுதப்படவேண்டியிருந்தால் அதன் எதிரிடைக்கு அசல் ஸ்டாம்பும் மற்ற எல்லா விஷயங்களிலும் 1—8—0 ரூபாய் ஸ்டாம்பும் போடவேண்டியது. (வாசகத்திற்கு குத்தகையின் எதிரிடையை யனுசரிக்கலாம்).

(6) அசல் தஸ்தாவேஜ் 7—8—0 ரூபாய்க்கு மேற்படாத ஸ்டாம்பில் எழுதப்பட வேண்டியிருந்தால் அதன் விடுதலைக்கு அசல் ஸ்டாம்பும், மற்ற விஷயங்களில் 7—8—0 ரூபாய்க்கு மேற்பட்ட ஸ்டாம்பு தேவையில்லை.

(7) வாடகைச்சீட்டை மேடோவர்செய்தால், மேடோவர் தஸ்தாவேஜில் ஏற்படும் தொகைக்கு கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

(8) விவசாய சம்பந்தமில்லாத குத்தகைசீட்டுகள் அதாவது ஆவாரம்பட்டை குத்தகை சந்தைப்பேட்டை முதலியவைகள் விஷயமாய் ஏற்படும் குத்தகை முதலியவைகளுக்கு வாடகைச்சீட்டை யனுசரித்து ஸ்டாம்பு தீர்வை தெரிந்துகொள்ளவும்.

11. Release of Puttah Right.

பட்டா விடுதலை.

ஷ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த பட்டா விடுதலைப் பத்திரம்.

அடியில் கண்ட பூமியை தங்களுக்கு ஷ ௴ ௳ கிரயத்துக்குக் கொடுத்து ரிஜிஸ்தராபீசில் ஷ ௴ ௳யில் 1-வது புஸ்தகம் வது பக்கம் வது நம்பராக ரிஜிஸ்தரான தஸ்தாவேஜின்படி தங்கள் பெயருக்கு பட்டா செய்விக்கச் சரிப்படாததினால், நாளது ௳யில் ரூபாய் பெற்றுக்கொண்டு என் பெயரிலுள்ள பட்டா பாத்தியத்தை தங்கள் பெயருக்கு மாறுதல் செய்துகொள்ள, இதன்மூலமாய் விடுதலைசெய்து விட்டேன். இனிமேல் அந்த பட்டா பாத்தியத்தைக் குறித்து எனக்கு யாதொரு பாத்தியமும் சம்பந்தமுமில்லை. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த பட்டா விடுதலைப்பத்திரம்.

சொத்து விபரம்

சாக்ஷிகள். கையெழுத்து.
எழுதியது.

ரேஜிஸ்டர்—அசல் கிரயசாசனம் எழுதிக்கொடுத்த நபரே, பட்டாவிடுதலை எழுதிக்கொடுக்கும் பக்ஷத்தில் ஆக்ஷேபணையில்லை. அப்படியன்றி மூன்றாவது நபர் சம்பந்தபட்டாலும் அல்லது வேறு விஷயங்களிலும், பட்டா கிரயந்தான் எழுதிக்கொள்ளவேண்டும். அப்படியன்றி பட்டாவிடுதலை எழுதிக்கொண்டாலும் பாதகமில்லை.

ஸ்டாம்பு:—(1) பட்டா கிரயத்திற்கு, கிரயஸ்தாவேஜ் ஸ்டாம்பு (அதாவது 50 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் 12-அணா ஸ்டாம்பு போடவேண்டியது.)

(2) பட்டாவிடுதலைக்கு, அடமான பத்திர ஸ்டாம்பு (அதாவது 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் 2 அணா ஸ்டாம்புபோடவேண்டியது.)

(3) சர்க்கார் பூமியாயிருந்தால், பட்டாமாறுதல் விண்ணப்பத்திற்கு, 1 அணா விண்ணப்ப ஸ்டாம்புவேண்டும்.

(4) இனும் பூமியாயிருந்தால் பட்டாமாறுதல் விண்ணப்பத்திற்கு 8 அணு விண்ணப்பஸ்டாம்புவேண்டும்.

---

12. Agreement to sell.

விக்கிரயஞ்செய்ய உடன்படிக்கை.

ஸு ஸ்ரீ ௳ (குடியிருப்பு வகையரா) எஸ்-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) டி-என்பவன் எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கை.

அடியில் கண்ட சொத்தை தங்களுக்கு ரூபாய் கிரயத்திற்கு கொடுப்பதாகச் சம்மதித்து நாளது ௳யில் என்னுடைய குமாரத்தியின் விவாக அவசிய செலவு நிமித்தம் (ஏற்படுங் காரணங்களை காட்டிக்கொள்ளவும்) தங்களிடம் அடியில்கண்ட சாக்ஷிகள் முன்பாக ரொக்கமாக அட்வான்ஸ் பெற்றுக்கொண்டது ரூபா மேற்படி அட்வான்ஸ் தொகை ரூபாய் போக பாக்கி கிரயத் தொகை ரூபாய் -ம் ஸு கெடுவில் கொடுத்தால் நான் மேற்படி பூமியைத் தங்களுக்கு கிரயஞ்செய்து சுவாதீனமும் செய்துகொடுக்க உட்பட்டவன். அப்படிக் குறித்த கெடுவில் பாக்கித் தொகையைத் தாங்கள் செலுத்தத் தவறினால், தாங்கள் கொடுத்த அட்வான்ஸ் தொகையை இழந்துபோவதுடன் இந்த தஸ்தாவேஜும் ரத்தாகத்தக்கது. (ஏற்படும் காரணங்களைக் காட்டிக் கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கை.

சொத்து விபரம்

சாட்சிகள் கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—(1) கிரயஞ் செய்வதாக செய்துகொள்ளும் உடன்படிக்கைக்கு 12 அணு ஸ்டாம்புவேண்டும்.

(2) அட்வான்ஸ் துகை கண்டிருந்தால், அப்படிப்பட்ட அட்வான்ஸ் துகைக்கு மாத்திரம் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ஏற்படும்.

(3) அட்வான்ஸ் துகை கண்டிராவிட்டால் கிரயத் தொகையின் பேரில் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ஏற்படும்.

(4) ஷை உடன்படிக்கையை எழுதி வாங்கிக்கொண்டவன், எழுதிக்கொடுத்தவனுக்கே அதன் பாத்தியத்தை விட்டுவிடும் பக்ஷத்தில் விடுதலை தஸ்தாவேஜி எழுதவேண்டியது. அல்லது அன்னியர்களுக்கு அதன் பாத்தியத்தை விடும்பக்ஷத்தில் ஏற்படும் துகைக்கு

மேடோவர் தஸ்தாவேஜ் எழுதவேண்டியது. இதற்கு ஸ்டாம்பு கிரய தஸ்தாவேஜின்படி.

---

13. Agreement to Re-sell

மறுவிக்கிரயம் செய்ய உடன்படிக்கை.

ஷ ௴ வ (குடியிருப்பு வகையரா) பி-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவன் எழுதிக்கொடுத்த மறு விக்கிரய உடன்படிக்கை.

அடியில் கண்ட பூமியை ஷ ௴ வயில் தாங்கள் எனக்குக் கிரயஞ்செய்துகொடுத்து ஷ ௴ வயில் ரிஜிஸ்தராபீசில் 1-வது புஸ்தகம் -வது வாலியம் பக்கம் நம்பராக ரிஜிஸ்தரான தஸ்தாவேஜின்படி பூமியை சுவாதீனமும் செய்துகொடுத்திருக்கிறீர். மேற்படி கிரய சாசனத்தில் கண்ட ஷரத்துகளின்படி (கிரய சாசனத்தில் ஏற்பட்ட காரணங்களை காட்டிக்கொள்ளவும்) கிரயத்தொகை ரூபாயும் ஏற்பட்டபடி ஷ கெடுவில் கொடுத்தால் மேற்படி பூமியை உனக்கு மறு கிரயஞ்செய்து சுவாதீனமும் செய்துகொடுக்கவுள்ளவன். அப்படி குறித்த கெடுவில் நீர் மேற்படி கிரயத்தொகை பூராவையும் செலுத்தத் தவறிப்போகுல், நீர் இந்த அக்ரிமெண்டின் பாத்தியத்தை இழந்துபோகவேண்டியது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த மறு விக்கிரய உடன்படிக்கை.

சொத்து விவரம்.

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—(1) மறுவிக்கிரயஞ் செய்வதாகச் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளுக்குக் கிரய சாசனத்தின் ஷரத்துகளை யனுசரித்து கிரயதாரனுல் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியது. ஸ்டாம்பு 12 அணு. கிரயத் தொகையின்பேரில் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ஏற்படும்.

(2) ஷ உடன்படிக்கையை விடுதலை அல்லது மேடோவர் செய்வதாயிருந்தால் மேலே 12-வது விக்கிரயஞ்செய்ய உடன்படிக்கைப் பத்திரத்தின் குறிப்பு 4-வது விதியை யனுசரித்து எழுதவேண்டும்.

---

14. Agreement to abide by the decision of a panchayet.

பஞ்சாயத்து தீர்மானத்துக்கு உடன்படிக்கை.

பஞ்சாயத்து முச்சிலிகா என்பது:—யாதொரு பொதுவான சொத்தை இரண்டல்லது பலபேர் வார்சுபாத்தியமாகவாவது, கூட்டு பங்கு பாத்தியமாகவாவது அநுபவித்து வருகிறபோது அதைப்பிரிப்பதில் விவாதம் ஏற்பட்டால் மேற்படி பாகஸ்தர்களாலாவது, கோர்ட்டாராலாவது பஞ்சாயத்தாரை ஏற்படுத்தி அப்பங்காளிகளுடைய விவாதத்தை நீக்கி சரியானபடி சொத்தைப் பாகித்துக்கொடுக்கும்படி சிலரை நேமிக்கிற பத்திரம்.

(a) 19 ௵ ௴ ௳ (ஊர், பேர், வகையரு எ. பி. சி. என்ற நாங்கள் டி. ஈ. எப். என்றவர்களுக்கு எழுதிக்கொடுத்த முச்சிலிக்கா. நாங்கள் மூவரும் வெகுகாலமாக கூட்டாய் வியாபாரம் செய்துகொண்டுவந்ததில் தற்காலம் எங்களுக்குள் சச்சரவு நேரிட்டுவிட்டபடியால் இனிமேல் ஏகமாய் கூட்டு வியாபாரஞ்செய்ய சாத்தியப்படாததாலும், அவரவர்கள் பாகத்தை அவரவர்களுக்கு எதாபாகமாக பாகித்துக்கொடுக்கும்படியாய்த் தங்களை மத்தியஸ்தர்களாகக் கோரிக்கொண்டிருப்பதாலும், தாங்கள் எங்களுடைய கடைக் கணக்குகளையும் மற்ற தஸ்தாவேஜுகளையும் பரிசோதித்து நடவடிக்கை நடத்துவதற்காக, நாங்கள் சம்மதித்து தங்களுக்கு இந்த முச்சிலிக்காவை ஏகோபித்தெழுதிக் கொடுத்தோம். இதனால் தாங்கள் மூவரும் ஏகோபித்து பைசல்செய்யக்கூடாத பக்ஷத்தில் தங்களில் பெரும்பான்மையோர் செய்யும் தீர்மானத்திற்குக் கட்டுப்படுவோமாகவும்.

சாட்சிகள். கையெழுத்துகள்.

நெட்டெழுத்து.

(b) 192 ௵ ௴ ௳ (ஊர் பேர் வகையரு) எ. பி. சி. என்பவர்கள் (ஊர் பேர் வகையரு) டி. ஈ. எப். ஜீ. எச். என்பவர்களுக்கு எழுதிக்கொடுத்த பஞ்சாயத்து முச்சிலிகா.

நாங்கள் மூவரும் சகோதரர்கள். எங்களுடைய பெற்றோர்களுடைய வியோகத்திற்குப் பிறகு இவ்வளவு நாள் ஏகமாயிருந்தும் இப்போது எங்களுக்குள் ஒத்துவராததால், எங்களுடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைச் சமபாகமாகப் பிரித்துக்கொண்டு வேறாகவிருக்க உத்தேசித்திருக்கிறோம். நாங்கள் சுவயமாகப் பிரித்துக்கொள்வதில் ஒருவருக்கொருவர் சம்மதிக்காததால் தாங்களை மத்தியஸ்தர்களாக நாங்கள் மூவரும் சம்மதித்துக் கோரிக் கொண்டிருக்கிறோம்.

தாங்கள் ஐந்து பேரும் எங்களுடைய வழக்குகளையும் தஸ்தாவேஜுகளையும் பார்வையிட்டுச் செய்கிற பைசலுக்குக் கட்டுப்படுவோம். தங்களுடைய ஏகோபித்த அபிப்பிராயம் பேதப்பட்டால் தங்களில் பெரும்பான்மையோர் செய்யும் தீர்மானத்திற்குக் கட்டுப்படுவோம்.

சாக்ஷிகள். கையெழுத்துகள்.
நெட்டெழுத்து.

(c) ஷ ஷீ ஊ (குடியிருப்பு வகையரா) ஏ, பி, சி, டி, ஈ, என்பவர்களுக்கு (குடியிருப்பு வகையரா) எக்ஸ், ஒய், இஜட், என்பவர்கள் எழுதிக்கொடுத்த பஞ்சாயத்து உடன்படிக்கை.

இதுவரையிலும் நாங்கள் ஏக குடும்பமாயிருந்து வந்து, இனி அப்படியிருக்கச் சரிப்படாததினால், எங்கள் குடும்பம் பொதுவான சொத்துக்களை பங்கு வீதம் பிரித்துக்கொள்ள எத்தனித்ததில், எங்களுக்குள் கணக்கு விஷயத்திலும், பத்திரங்கள், நகைகள், கையிருப்பு வகையரா விஷயத்திலும் எங்களுக்குள் விவாதமுண்டாயிருப்பதனால் நாங்களே பைசல் செய்துகொள்ள சாத்தியப்படாததினிமித்தம் உங்கள் ஐந்து பேர்களையும் மேற்படி விஷயத்திற்குப் பஞ்சாயத்தார்களாக நாங்கள் மூவரும் கோரிக்கொண்டிருக்கிறோம். ஆகையால் நீங்கள் ஐந்து பேர்களுமாவது அல்லது உங்களில் பெருந்தொகையாராவது எங்கள் கணக்கு வகையராக்களை நன்றாய்ப் பரிசோதித்து, எங்களை விசாரணை செய்யவேண்டிய விஷயங்களில் விசாரணைசெய்தும், சாக்ஷிகளை விசாரணை செய்யவேண்டிய விஷயங்களில் விசாரணைசெய்தும், சங்கதிகளை நன்றாய்த் தெரிந்து, பாரபக்ஷமில்லாமல் மூன்று சமபாகங்களாக அவரவர்களுக்குள்ள பங்கு வீதத்தை ஏற்படுத்தி (எந்த மாதிரி பங்குகள் ஏற்படவேண்டுமோ அந்த மாதிரி காட்டிக்கொள்ளவும்) தீர்மானஞ்செய்வது எங்களுக்குச் சம்மதம். அப்படி செய்யும் தீர்மானத்தை நாங்கள் நிராக்ஷேபணையாக ஒப்புக்கொள்ளக் கட்டுப்பட்டிருக்கிறோம். இந்தப்படிக்கு நாங்கள் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

சொத்து விவரம்

சாக்ஷிகள். கையெழுத்துகள்.
எழுதியது.

குறிப்பு :—(1) பஞ்சாயத்து உடன்படிக்கைக்கு, ஸ்டாம்பு 12 அணா.

(2) ஷ ரிஜிஸ்தரேஷன் கட்டணம் 5 ரூ.

15. Agreement to serve as a clerk or a servant.

குமாஸ்தாவாகவாவது அல்லது வேலைக்காரனாகவாவது சேவிக்க உடன்படிகை.

(a) வேலைக்காரன் உடன்படிக்கை:

௵ மீ ௳ (குடியிருப்பு வகையரா) எ-என்பவருக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

தங்களுக்குச் சொந்தமான அடியில் கண்ட பூமியில் நான் குடித்தன விஷய மான வேலைகளைப்பார்த்து வருவதற்காக எனக்கு மாதம் 1-க்கு ரூபாய் சம்பளம் கொடுப்பதை வாங்கிக்கொண்டு ௵ கெடுவுவரை நான் தங்க ளிடம் கிரமமாய் வேலைபார்த்து வரக்கடவேன். இதற்கு முன் தாலூகா கிராமத்திலிருக்கும் சி-என்பவரிடத்தில் நான் வேலையிலமர்ந்திருந்தபோது என் பேரில் பாக்கி ஏற்பட்ட ரூபாய் ; ரூபாய் எழுத்தால் நான் அவருக் குச் செலுத்த வேண்டியதற்காக தங்களிடம் இப்போது அட்வான்சாகபெற்றுக் கொண்டது ரூபாய் ; இந்த அட்வான்ஸ் தொகையைத் தாங்கள் என் சம் பளத்தினின்று மாதம் 1-க்கு ரூபாய் வீதம் கழித்துக்கொண்டு பாக்கி சம் பளத்தை எனக்குக் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது. (ஏற்படும் வண்ணம் காட்டிக்கொள்ளவும்.) நான் கிரமமாய் வேலைபார்த்து வரத்தவறினால் அதனால் தங்களுக்கு நேரிடும் நஷ்டத்தை நான் கொடுக்க உள்ளவன். (எந்த வேலைக்காக எக்ரிமெண்டு ஏற்படுகிறதோ அந்த வேலைக்கவசியமான ஷரத்துகளைக் காட்டிக் கொள்ளவும்): இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த உடன் படிக்கை.

வேலை விவரம்.

சாக்ஷிகள். கையெழுத்து.
எழுதியது.

குறிப்பு:—1. வேலை செய்வதற்காக எழுதிக்கொடுக்கும் எக்ரி மெண்டுகளுக்கு 12 அணா ஸ்டாம்பு போதும்.

2. அப்படிப்பட்ட யாதொரு உடன்படிக்கையில் மூன்றாவது நபர் ஜாமீனாகவிருந்து தன்னுடைய சொத்தையும் ஜாமீனாகக் காட்ட லாம்.

3. சம்பளவிதம் கண்டிருக்கும் பக்ஷத்தில், ஒரு வருஷத்திய சம்பள மொத்தத்தின்பேரில் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் வாங்கப்படும்.

4. அட்வான்ஸ் தொகைமாத்திரம் கண்டிருக்கும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட அட்வான்ஸ் தொகையின்பேரில் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ஏற்படும்.

5. அட்வான்ஸும், சம்பள விதமும் கண்டிருக்கும் பக்ஷத்தில் சம்பள விதத்தின்பேரில் 3-வது கலத்தில் கண்டவிதம் ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ஏற்படும்.

6. அசையும் பொருள்களை வாடகைக்குக் கொடுக்கும் விஷயத்தில் செய்துகொள்ளும் உடன்படிக்கைக்கு 12 அணா ஸ்டாம்பு.

7. சரக்குகளை மாத்திரம் விற்பனை செய்வதைக் குறித்த உடன்படிக்கைகளுக்கு ஸ்டாம்பு தேவையில்லை.

(b) குமஸ்தாவின் உடன்படிக்கை.

ஸ்ரீ௵ மீ௴ உ௳ (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

தாங்கள் செய்துவரும் (வியாபாரம், கண்டிராக்ட் முதலிய விபரங்கள்)த்துக்காக குமஸ்தாவாக வேலைபார்த்துவர எனக்கு மாதம் ஒன்றுக்குச் சம்பளம் ரூபா......கொடுப்பதை வாங்கிக்கொண்டு......ஸ்ரீ௵ கெடுவரையில் நான் தங்களிடம் கிரமமாய் வேலைபார்த்து வருவேனாகவும்.........தாலூக்கா......கிராமம்........தெருவு.....நெம்பர் என் சொந்த வீட்டின்பேரில் ஏற்பட்ட ஈட்டு தஸ்தாவேஜுக்கு நான் கொடுக்கவேண்டிய அசல்வட்டி ரூ......தாங்கள் கொடுத்த வகையில் என்பத்தாய்விட்டதால், என் சம்பளத்தில் மாதம் 1-க்கு ரூபா......வீதம் கழித்துக்கொண்டு பாக்கி ரூபா......எனக்கு மாதம் மாதம் கொடுத்துக்கொண்டுவரவேண்டியது. நான் உடன்படிக்கைப்படி நடக்கத்தவறினால் தங்களுக்கு அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கு நானே பாத்தியப்படுவேனாகவும். என் வீட்டின் ஈட்டு தஸ்தாவேஜை தாங்களே ஆதாரமாக வைத்திருந்து கடைசியில் என்னிடம் கொடுக்கவேண்டியது.

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

16. Deed of Exchange.

பரிவர்த்தனை.

பரிவர்த்தனை யென்பது :—ஒருவன் தனக்குச் சொந்தமான சொத்தை அந்த சொத்தின் மதிப்புக்குச் சரியான வேறொருவனுடைய சொத்துக்குக்கொடுத்து மாற்றிக்கொள்வது. இதற்கு ஸ்டாம்பு பரிவர்த்தனைசெய்து கொள்ளப்பட்ட சொத்துக்களின் மதிப்பின்பேரில் ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 23 நெ. ஒப்படைப் பத்திரத்திற்குண்டான தீர்வை.

(a) 192 வரு மீ உக்குச் சரியான தமிழ் வரு மீ உ (ஊர் பேர் ஜாதி தொழில் வகையரா) எ-என்பவனும், (ஊர்பேர் ஜாதி தொழில் வகையரா) பி-என்கிற நாமிருவரும் செய்துகொண்ட சொத்துப் பரிவர்த்தனை என்னவென்றால், எ-ஆகிய எனக்கு பி-ஆகிய உம்முடைய நிலத்துக்குச் சமீபமாக கொஞ்சநிலமிருப்பதாலும், என்னுடைய நிலத்துக்குச் சமீபத்தில் உமக்குக் கொஞ்சம் நிலமிருப்பதாலும் அந்த நிலங்களை நீரும் நானும் பரிவர்த்தனைசெய்து கொள்வதினால் உபயத்திராளுக்கும் ஒரே ஜாகாவில் நிலமேற்பட்டு சாகுபடிசெய்ய சவுக்கியமாயிருக்குமென்பதை உத்தேசித்து இருவருடைய சம்மதத்தின்பேரில் இந்தப் பரிவர்த்தனையைச் செய்துகொண்டோம். ஷை நிலங்களின்பேரில் எவ்வித ஈடு முதலிய வில்லங்கங்களில்லையென்று அவரவர் நிலத்துக்கு அவரவர் உறுதியாகச்சொல்லுகிறோம்.

நிலங்களின் விபரம் (விஸ்தீரணம் தீர்வையாருக்குச் சொந்தம் யாருக்கு பரிவர்த்தனை முதலிய விவரங்கள் காணவேண்டும்.)

சாட்சிகள். கையெழுத்துகள்.

நெட்டெழுத்து.

(b) வரு மீ உ (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் (1), (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் (2) ஆகிய நாங்கள் இருவரும் சேர்ந்து எழுதிவைத்துக்கொண்ட பரிவர்த்தனை தஸ்தாவேஜ்.

சாகுபடிசெய்ய சரிப்படாததினிமித்தம் (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக் கொள்ளவும்) அடியில் விவரித்திருக்கிறபடி எ-என்பவனுக்கு பாத்தியப்பட்ட 1-வது ஜாப்தாவில் கண்ட ரூபாய் பெறுமான சொத்து இப்போது பி என்பவனுக்கும், பி-என்பவனுக்கு பாத்தியப்பட்ட 2-வது ஜாப்தாவில் கண்ட ரூ. பெறுமான சொத்து இப்போது எ-என்பவனுக்கும் சேரத்தக்கதென்றும், அந்தந்த சொத்துக்குடைய மூலசாசனங்களை அவரவர் மாற்றிக்கொள்ளத்தக்கதென்றும், இனிமேல் அவரவருக்குச் சேர்ந்தசொத்தை அவரவரே புத்திர பௌத்திர

பாரம்பரியமாய் தானாதிவிக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளத்தக்கதென்றும், இனிமேல் அவரவருக்குப்பிரிந்த சொத்துக்கு அவரவரே சர்க்கார் தீர்வைமுதலியது செலுத்திக்கொள்ளத்தக்கதென்றும், அவரவர் பேரிலிருந்த பட்டாவை மாற்றிக்கொள்ளும்பொருட்டு ரிஜிஸ்ட்ராபீசில், ரிஜிஸ்தராகுங்காலத்தில் பட்டாமாறுதல் விண்ணப்பங்களும் தாக்கல்செய்யவுள்ளவர்களென்றும் பரிவர்த்தனையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருளையாகிலும் அதில் எவ்வளவையாகிலும் முன்னதாய் அவரவர் பொருப்புக்காட்டியதனாலாகிலும் வேறே யாதொரு பாத்தியக்குறைவு காரணமாகவாகிலும் இழந்துபோக நேரிட்டால் அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய உட்பட்டவர்களென்றும், இந்தப் படிக்கு நாங்கள் சம்மதித்து எழுதிவைத்துக்கொண்ட பரிவர்த்தனை தஸ்தாவேஜ்.

சொத்து விவரம்.

1-வது ஜாப்தா :—(பி-என்பவனுக்கு சேரத்தக்கது.)

2-வது ஜாப்தா :—(எ-என்பவனுக்கு சேரத்தக்கது.)

சாட்சிகள். கையெழுத்துகள்.

எழுதியது.

குறிப்பு :—1. இரண்டு சொத்துக்களில், அதிகமான விலையுள்ள சொத்துக்கேற்படும் மொத்தத்தின்பேரில் மாத்திரம் கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு தேவை. அதிகமான மொத்தத்திற்கே ரிஜிஸ்தரேஷன் கட்டணம்.

2. இரண்டு சொத்தும் சமமான விலையுள்ளவைகளாயிருந்தால் ஒரு சொத்தின் கிரய மொத்தத்தின்பேரில் மாத்திரம் கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு அவசியம் வேண்டும். ரிஜிஸ்தரேஷன் கட்டணம் அப்படியே.

3. பட்டாமாறுதல் செய்யவேண்டுமானால் (இருவர் பேரிலும் பட்டாவிருக்கும் பக்ஷத்தில்) இரண்டு விண்ணப்பங்கள் தாக்கல்செய்ய வேண்டியது.

---

17. Mortgage.

அடமானம், பெந்தம், குதுவை.

ஒத்தி அல்லது போக்கியம்.

ஒற்றி அல்லது பெந்தகம் என்பதற்கு அடியிற்கண்ட விஷயங்களிருக்கவேண்டுவதவசியம்.

(1) ஒரு ஸ்தாவர சொத்தில் ஒருவனுக்குள்ள சுதந்திரங்களில் ஒருவிதபாத்தியம் மற்றொருவனுக்கு மாற்றப்படவேண்டும்.

(2) கடனாக முன்னால் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கபட வேண்டிய தொகைக்காக மேற்சொன்ன பாத்தியம் ஏற்படவேண்டும்.

(3) அக்கடனானது அப்போது கொடுபட வேண்டியதாகவாவது பின்னால் கொடுபடவேண்டியதாகவாவது இருக்கலாம் அல்லது பணவுத்திரவாதம் ஏற்படக்கூடிய ஒருவித உடன்பாட்டைச் செய்து முடித்ததாகவும் இருக்கலாம்.

அவ்வித பாத்தியங்களை மாற்றுகிறவன் கொதுவைவைப்போன் (Mortgagor) எனவும் அவ்வித பாத்தியங்களை வாங்குகிறவர் கொதுவை வாங்குவோன் (Mortgagee) எனவும், அவைகளில் அவர்கள் மூலமாய் ப்ராத்தியதை அடையும் சகல நபர் என்பதும் அடங்கும்.

கொதுவை அல்லது பெந்தகம் அடியிற்கண்டபடி ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு :—அடமானம், ஈடு, குதுவை, பெந்தகம் என்பது ஒரே அர்த்தத்திலும், ஒத்தி, போக்கியம், சுவாதீன அடமானம் என்பதும் ஒரே அர்த்தத்திலும் வழங்குகிறது.

(1) சுத்தபெந்தகம் என்னும் ஒற்றி, (Simple mortgage.)

(2) ஈரெட்டு அல்லது நிபந்தனைக்கிறயம் என்னும் அவதிக்கிரயக்கொதுவை. (Mortgage by conditional sale.)

(3) (சொத்தனுபவ) பெந்தக போக்கியம் (Usufructuary mortgage.)

(4) போக்கியம் அல்லது சுவாதீன அடமானம் (Mortgage with possession.)

(5) மூல ஆதரவுகளை ஒப்படைப்புவைக்கும் பெந்தகம்.

(Mortgage by deposit of Title deeds Known as Invalid Mortgage.)

மேற்சொன்ன 5-வது பெந்தகம் சென்னபட்டணம், பம்பாய், கல்கத்தா, கராச்சி, இரங்கூன், மோல்மீன், பஸ்ஸீன், ஆக்யாப், இந்தப் பட்டணங்களில் செல்லுபடியுள்ளதேயன்றி மற்றெவ்விடங்களிலும் செல்லுபடியுள்ளதல்ல. இவ்வைந்துவித பெந்தக பத்திரங்களையன்றி

சென்னை இராஜதானியில் குதுவைப்பத்திரம் (Hypothecation bond) என்னும் ஓர்வித தஸ்தாவேஜு நடைபெற்று வருகிறது.

அதாவது ஒருவனுக்கு ஒரு ஸ்தாவர சொத்திலுள்ள பாத்தியங்கள் பலபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பாகங்களில் சிலவற்றை ஒருவருக்கு கொடுப்பதற்கு ஒற்றியென்று பெயர். அவ்விதம் பராதீனஞ் செய்யப்பட்ட பாத்தியங்கள் நீங்கலாக பாக்கியாயுள்ளவைகளை ஒற்றி வைப்பவன் எவ்வித வினியோகமுஞ் செய்யலாம். அவனுடைய இதர கடன்காரன் அவ்வொற்றித் துகைக்கு மேற்பட்டவைகளை யடைய பாத்தியமுடையவர்கள். (7. பம். 455.)

(6) மேலேகண்ட விவரப்படி, ஒற்றியாகவாவது, அவதிக்கிரயக் கொதுவையாகவாவது, பெந்தக போக்கியமாகவாவது, இங்கிலீஷ் மாதிரியான கொதுவையாகவாவதிராத யாதொரு கொதுவையானது குறிக்கப்படாத கொதுகை (Anomalous mortgage) என்று சொல்லப்படும்.

கொதுவை பத்திரங்களில் இன்ன விஷயங்கள் இருக்கவேண்டுமென்பது.

(a) ஒரு ஸ்தாவர சொத்தில் ஒருவனுக்குள்ள பாத்தியம் மற்றொருவனுக்கு மாற்றப்பட்டு அப்பாத்தியம் கடன் கொடுக்கப்படும் துகைக்கு ஜாமீனாக இருக்கவேண்டும்.

(b) மேற்சென்ன பாத்தியங்கண்ட சொத்துக்கள் இன்னவையென்பதை எவரும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளும்படி அவைகளைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

ஒருவன் தான் கடன்வாங்கும் துகையை பல தவணைகளாகச் செலுத்துகிறதென்றும், அந்தக் கெடுக்களின்படி துகைசெலுத்தத் தவறினால் அவனுடைய எல்லாச் சொத்துக்களும் ஷை கடனுக்கு ஜவாப்தாரியாக இருக்கிறதென்றும், ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்கிறான். அதில் சொத்து விபங்கள் எழுதப்படவில்லை. அது ஒற்றிப் பத்திரமாகமாட்டாது. (3. மத. 35.)

(c) ஒருவன் தனக்கு பின்னால் கிடைக்கக்கூடிய சொத்துக்களையும் பெந்தகம் வைக்கலாம். (13. அப்பீல் கேஸ் 523.)

(d) ஒருவன் கடன்வாங்கும் துகைக்கு குறிப்பிட்ட ஒரு சொத்தை அடமானம் வைக்காமல் தன்னுடைய சொத்துக்களை தான்

ஒருவருக்கும் பாத்தியப்படுத்துகிறதில்லையென்று மட்டில் பத்திரம் எழுதிக்கொடுப்பானுகில் அது ஒற்றிப் பத்திரமாகமாட்டாது. (3. கல். 336.)

(e) பெந்தகப் பத்திரங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாக்ஷிகள் கையெழுத்து செய்யவேண்டியது அவசியம். ஒரே சாக்ஷிபோட்ட பெந்தகப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும் அது பெந்தகப் பத்திரமாகமாட்டாது.

(f) ஒருவன் தன்னுடைய ஸ்தாவர சொத்துக்களை அடமானமாகவைத்து எழுதிக்கொடுத்திருக்கிற பெந்தகப் பத்திரத்தின் முதற் பக்கத்தில் ஒரே சாக்ஷி கையெழுத்து செய்திருக்கிறான்; பின் பக்கத்தில் ஷை பத்திரத்தை ரிஜிஸ்டர்செய்த சப்-ரிஜிஸ்ட்ரார் கையெழுத்தும் அப்பத்திரம் எழுதிக்கொடுத்தவன் இன்னானென்பதை ருஜுப்பிப்பதற்காக ஒரு சாக்ஷியின் கையெழுத்தும் போடப்பட்டிருக்கிறது; இப்பத்திரம் பெந்தகப் பத்திரமாக மாட்டாதெனத் தீர்ப்பு செய்யப்பட்டது. (26. கல். 246.)

இவ்விதப்பத்திரத்தின்படி பெந்தகச் சொத்து ஏல விற்பனையின் பேரில் துகை கிடைக்கும்படி டிக்ரி செய்யக்கூடாததாக விருந்தாலும் அப்பத்திரம் வெண்ணலைப் பத்திரமாக பாவித்து ஆளைப்பொறுத்த (Personal liability) மட்டில் டிக்கிரி பெறலாம். (26 கல். 68.)

(g) பெந்தகச்சொத்து விவரங்களை தெளிவாய்ச் சொல்லாமல் சந்தேகாஸ்பிதமான வார்த்தைகளாக எழுதியிருந்தால் அது கொதுவை பத்திரம் (Mortgage) ஆகமாட்டாது. பொருப்புச் சாட்டிய பத்திரமாகவும் (Charge) செல்லமாட்டாது. (7 கல் 198.)

ஒற்றிப்பத்திரங்கள் எவ்விதமாக எழுதப்படவேண்டுமென்பதும் அவைகளுக்கு வேண்டிய ருஜுக்களும்.

(a) ஒற்றி அல்லது பெந்தகப் பத்திரங்களில் குறிப்பிட்ட ஒரே விதமான வார்த்தைகள் கண்டெழுதப்படவேண்டுமென்பது அவசியமில்லை. கொடுபடும் கடன் துகைக்கு ஸ்தாவர சொத்து ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமென்பதுமட்டில் மெத்த அவசியமானது.

(b) ஒற்றியின் வாசகங்கள் இரண்டு தஸ்தாவேஜுகளில் எழுதப்படலாம். அதாவது ஒன்று அத்தறுதி கிரயசாசனமாகவும் மற்

றென்று அக்கிரயத்துகையைக் கொடுத்துவிட்டால் சாசனச்சொத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறதென்ற ஒருவித நிபந்தனையைக் குறிப்பிட்ட தஸ்தாவேஜாகவும் இருக்கலாம்; அல்லது விற்றவன் சாசனச்சொத்தை மீட்கும்படியான பாத்தியதைகளை ஏற்படுத்தியதாகவாவது இருக்கலாம். உபயவாதிகளின் நடவடிக்கைகளினால் அந்த தஸ்தாவேஜுகளில் கண்ட ஷரத்துக்கள் அவர்களுக்குள் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் கருத்துக்களல்லவென்பதை வாய்மொழி முதலிய எவ்வித சாக்ஷியங்களினாலாவது ருஜுப்பிக்கலாம். சாக்ஷிய ஆக்டு (Evidence Act) 92-பிரிவு; இவ்வித ருஜுக்கள் விடப்படுவதை எவ்விதத்திலும் தடைசெய்யமாட்டாது. (3 அல. 369; 23 செ. 114; 18. அல. 534; இ. லா. ரி. 43 மத. 244.)

[மகம்மதியர்களின் சாஸ்திரங்களின்படி வட்டி வாங்குவது மிகுந்த பாபமானதால் வட்டிகண்டு பத்திரமெழுதக்கூடாதென்பதை யுத்தேசித்து மேற்சொன்ன பெந்தகப்பத்திரம் இருவித தஸ்தாவேஜிகளில் ஏற்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது இவை மகம்மதியர்கள் அரசாண்ட தேசங்களில் மிகுதியாகவிருக்கும்.]

(c) கிரயசாசன வாசகமாக ஏற்பட்ட பத்திரங்கள் பெந்தகப் பத்திரங்களென ருஜுப்பிக்கப்படலாம். அவைகளுக்கு அடியிற்கண்ட ருஜுவம்சங்கள் வேண்டுவதவசியம்.

1. கிரயசாசனத் துகை கிரயசொத்தின் பெறுமானத்துக்கு மிகுந்த குறைவாக இருக்கவேண்டும்.

2. சாசனத் துகையைக் கொடுத்துவிட்டால் கிரயச்சொத்தை விட்டுவிடுவதாகவாவது அல்லது அச்சாசனத்துகை உளவடைகிற வரையில் ஷெ சொத்தை அனுபவித்துக்கொண்டு பின்பு விட்டுவிடுகிறதென்றுவது ஒருவித உடன்படிக்கை ஏற்படவேண்டும்.

3. கிரயத்துகையை கடன்துகையாகவும், சாசனச்சொத்தை ஜாமீன் சொத்தாகவும் பாவித்துவந்ததாக சாக்ஷியம் ஏற்படவேண்டும்.

4. சாசனம் பெற்றவன் வசத்தில் கிரயச்சொத்துக்கள் சிலகாலமாவது விடப்படாமல் விற்றவன் வசத்தில் இருந்திருக்கவேண்டும்.

5. சாசனஞ்செய்தவன் சாசனம் வாங்கினவன் இவ்விருவர்களுடைய மற்றெவ்வித நடவடிக்கைகளினாலும் தஸ்தவேஜுக்களின் உண்

மையான கருத்தை தெரிந்துகொள்ளலாம். (4 பம். 609; 7 பம். 73; 8 கல். 528.)

சாசனம் ஏற்பட்டிருப்பதையும் சாசனச் சொத்துக்கள் கிரயம் பெற்றவன் வசத்திலிருந்து வருவதையும் தெரிந்துகொண்ட ஒருவன் கிரயஞ்செய்தவன் வாங்கினவன் இவ்விருவர்களுக்குள்ளும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கை இன்னதென்பதைத் தெரிந்துக்கொள்ளாமல் நல்ல எண்ணத்துடன் அச்சாசனச் சொத்தை கிரயத்துக்கு வாங்கி விடுவானுகில் அக்கிரயம் ரத்துசெய்யப்படமாட்டாது. (9 கல். 898.)

(d) மறுசாசனம் செய்யப்படவேண்டும் என்கிற நிபந்தனை யின் பேரில் ஏற்படுகிற கிரயப்பத்திரங்கள் (Sale with a Condition of repurchase) பெந்தகப் பத்திரங்களென அடியிற்கண்ட விஷயங் களினுல் ருஜுப்பிக்கப்படலாம்.

(1) சாசனத்துகையை கடன் துகையாக பாவித்து நடந்து வந்ததாக கிரயப்பத்திர வாசகங்களினுலும் அது சம்பந்தமான மற்ற நடவடிக்கைகளினுலும் தெரிந்துகொள்வது.

(2) கிரயம் பெற்றவன் கிரயத்துகையை வசூலிக்கும்படியான பாத்தியதையுள்ள ஷரத்துகள் மேற்படி கிரயப்பத்திரத்தில் ஏற்பட்டிருத்தல்.

(3) கிரயத்துகை கொடுப்பதற்கு வட்டி ஷரத்துகள் ஏற்பட்டிருத்தல்.

(4) கிரயத்துகை சாசனச்சொத்தின் பெறுமானத்துக்குக் குறைவாயிருத்தல்.

இந்நான்கு விஷயங்களிலும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று. அதாவது கிரயத்துகையை வசூலிக்கும்படியான பாத்தியம் கிரயம் பெற்றவனுக்கு இருக்கிறதாவென்பதுதான். (10-கல் 30.)

ஏ-என்பவன் பி-என்பவனுக்கு தன்னுடைய நிலங்களை ரூபா. 6,000-க்கு கிரயஞ்செய்து கொடுத்துவிடுகிறுன். அதில் ஷை சாசனத்துகை முழுவதும் 6 மாதக்கெடுவுக்குள் கொடுத்துவிட்டால் சாசன நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறதென்றும், கெடுப்படி துகை கொடாவிட்டால் நிலங்களுக்குச் சர்க்கார் கிஸ்தி செலுத்தி

வரும்படிகளை யடைகிறதென்றும் இந்த சாசனம் அத்தறுதி சாசனமாகி விடுகிறதென்றும் கண்டிருக்கிறது.

ஏ-என்பவன் மேற்படி பத்திரம் ஒற்றி தஸ்தாவேஜு வென்றும் சாசனத்துகையை கொடுத்து நிலத்தை மீட்கும்படியான பாத்தியம் தனக்கிருக்கிறதென்றும் பி-என்பவன்மேரில் வழக்கிட்டான்.

பி-என்பவன் மேற்படி பத்திரம் ஒற்றிப்பத்திரம் அல்லவென்றும் மறுசாசனஞ் செய்துகொள்ளும் அனுமதியுடன் ஏற்பட்டகிரயப்பத்திரமென்றும் கெடுப்படி துகை கொடாததால் சாசனம் உறுதியாய்விட்டதென்றும் எதிர்வாதஞ்செய்தான்.

பி-என்பவன் மேற்படி சொத்துக்களை நிராக்ஷேபணையாக 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுபவித்துவருவதாலும், சாசனத்துகைக்கு வட்டி கொடுக்கிறதென்ற ஏற்பாடாவது சாசனத்துகையை பி-வசூலிக்கும்படியான பாத்தியதையாவது மேற்படி பத்திரத்தில் ஏற்படாததினாலும், மேற்படி பத்திரம் ஒற்றிப் பத்திரமாகமாட்டாதென்றும் பி-சொல்லுகிறபடி கிரயம் உறுதியாய் விட்டதென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது. (7 மத. ஹை. ரி. 6.)

(e) குத்தகைப் பத்திர ஷரத்துகள் அடங்கிய தஸ்தாவேஜுகள் ஒற்றிப் பத்திரங்களென ருஜுப்பிக்கப்படலாம்.

ஏ-என்பவன் தன்னுடைய நிலங்களை பி-என்பவனிடத்தில் குத்தகைக்குவிட்டு அனுபவிக்கச்செய்து சில துகை அட்வான்சாக வாங்கிகொள்ளுகிறான். அந்த துகையும் அதன்வட்டியும் உளவடைகிறவரையில் பி-என்பவன் அச்சொத்துக்களை அனுபவிக்கும்படியான பாத்தியமுடையவனாக இருப்பதால் பி-என்பவன் போக்கிய அடமானதாரன் அதாவது சொத்தனுபவ ஒற்றிதாரன்(Usufructuary mortgagee) ஸ்தானத்திலும் ஏ-என்பவன் ஒற்றிவைத்தவன் (Mortgagor) ஸ்தானத்திலும் இருக்கிறார்களென்பதாக தீர்ப்புச் செய்யப்பட்டது (3. மத. 381.)

(f) ஒற்றிப் பத்திரவாசகமாக எழுதப்பட்ட தஸ்தாவேஜுகள் குத்தகைப் பத்திரங்களென தீர்மானிக்கப்படலாம்.

1862-வருஷத்தில் ஏ-என்பவன் பி-என்பவனுக்கு ரூபா. 150 கடன் கொடுக்கவேண்டியிருந்தது. ஏ-தன்னுடைய ஸ்தாவர சொத்

துக்களில் சிலதை பி-என்பவன் வசம்விட்டு மேற்படி கடனுக்கும் அதன் வட்டிக்கும், மேற்படி சொத்துக்களை 20 வருடங்கள் அனுபவித்துக்கொண்டு கெடுமுடிந்தவுடன் சொத்துக்களை எ-வசம் விட்டு விடுகிறதென்றும், மேற்படி சொத்தில் பி-என்பவன் திராட்சக்கொடிவைத்து பயிராக்கினால் அந்த 20 வருடங்களுக்குப்பிறகும் மேற்படி சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு வருடம் 1-க்கு ரூபாய், 50 வீதம் எ-என்பவனுக்கு பி-என்பவன் கொடுத்துவருகிறதென்றும் கடன்சீட்டு எழுதிக்கொடுத்திருந்தான். பி-என்பவன் அதில் திராட்சக்கொடி பயிர் செய்துவிட்டான். மேற்படி கெடுக் கடந்தவுடன் அதாவது 1882-ஆம் வருஷத்தில் எ-என்பவன் மேற்படி சொத்து கிடைக்கவேணுமென்று வழக்கிட்டதில், மேற்படி பத்திரம் ஒற்றிப்பத்திரமாகமாட்டாதென்றும், திராட்சப் பயிர் இருக்கிறவரையில் எ-என்பவனுக்கு வருடம் 1-க்கு ரூபா 50 வீதம் பகுதி கிடைக்கக்கூடுமேயன்றி அதன்மத்தியில் நிலங்கிடைக்கமாட்டாதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது. (11 பம். 462.)

(g) கொதுவைப் பத்திரத்தில் வெளிப்படையாகக் கண்டிருக்கும் ஷரத்துகளின்படி, கொதுவைப்பணத்தையாவது வட்டியையாவது குறிப்பிட்டதவணைகளில் செலுத்த தவறியதன்மேல் அப்போது பாக்கியாயிருக்கும் தொகைக்காக கொதுவைச் சொத்தில் போதுமான பாகத்தை விற்பனைக்கு கொண்டுவரலாமென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 35 பம். 327 ; 42 மத. 813.) மேலும் டிரான்பர் ஆப் பிராபர்டி ஆக்டின் 68-வது பிரிவினால் இவைகளுக்கு பாதகமுண்டாகமாட்டாது.

குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் செய்துமுடிப்பதற்காக ஏற்படும் உடன்படிக்கையில் கண்ட சொத்துக்களின் பெறுமானம் எவ்வளவாகவிருந்தபோதிலும் அவைகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்பதவசியமில்லை. (9 மத. 103)

Simple Mortgage.

சுத்த பேந்தகம்.

ஒற்றி வாங்குகிறவனுக்கு கொதுவைச் சொத்தை ஸ்வாதீனப்படுத்திவிடாமல், ஒற்றித் தொகையை ஒற்றிவைத்தவன் தானே நேரில்

கொடுக்கிறதென்று பிணைபட்டு, அத்துகையை உடன்படிக்கை செய்து கொண்டபடி கொடாவிட்டால், ஒற்றிச்சொத்தை ஏலம்போடச் செய்வித்து துகையினின்றும் ஒற்றித்துகை செல்லாவதற்கு போதுமானதை உபயோகித்துக்கொள்ளுகிறதென்றும், வெளிப்படையாக அல்லது குறிப்பாகவாவது சம்மதித்து. ஒற்றிவைப்பவன் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கும் பத்திரத்துக்கு சுத்தபெந்தகம் அல்லது ஒற்றி (Simple mortgage) என்று சொல்லப்படுகிறது.

ஸ்தாவரச் சொத்துக்களின் கொதுவைகளெல்லாம் அவைகளில் சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவாயிருந்தபோதிலுஞ்சரி, ரெஜிஸ்டர்செய்யப்பட்ட ஆதரவு மூலமாய் தான் ஏற்படவேண்டும். தகுந்த ஸ்டாம்பில் எழுதப்பட்டும், ஒற்றிவைப்போனல் கையெழுத்து செய்யப்பட்டும், இருவருக்குக் குறையாதவர்களின் சாக்ஷியங்கள் வாங்கப்பட்டும் இருக்கவேண்டியதுமன்றி, அப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதும் மெத்த அவசியம்.

ரூ 100-க்கு மேற்பட்ட துகைக்கு ஒரு பெந்தகப் பத்திரத்தில் சாக்ஷிகள் போடப்படவில்லை. அப்பத்திரம் ஆளைப்பொறுத்த உடன்படிக்கையாகவும் செல்லமாட்டாது. அப்பத்திரத்தின்பேரில் வழக்கிடுவதும் செல்லமாட்டாது. (18 மத. 29.)

ஸ்தாவர சொத்தின் ஜவாப்தாரியின்பேரில் ஏற்பட்ட ஒரு பத்திரத்தில் அப்பத்திரம் எழுதிக்கொடுத்தவன் கையெழுத்துமட்டில் வாங்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி இரண்டு சாக்ஷிகளின் கையெழுத்து வாங்கப்படவில்லை. அப்பத்திரம் ரிஜிஸ்டர்செய்த சப்-ரிஜிஸ்ட்ரார் அப்பத்திரத்தின் பின்பக்கத்தில் கையெழுத்து செய்திருக்கிறார். எழுதிக்கொடுத்தவன் இன்னவன் என்பதை ருஜூப்பிக்க சப்-ரிஜிஸ்ட்ரார் முன்பாக ஒரு சாக்ஷி கையெழுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அப்பத்திரத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் செல்லத்தக்கதில்லையென தீர்ப்புசெய்யப்பட்டது. (26 கல். 246.)

ஸ்தாவர சொத்துக்களின் ஜவாப்தாரியின்பேரில் எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு பத்திரத்தில் ஒரே சாக்ஷி வாங்கப்பட்டு அது கிரமப்படி ரிஜிஸ்டரும் செய்யப்பட்டிருக்கிறது. அப்பத்திரத்தின்பேரில் கொண்டு வந்த வழக்கில் சொத்து ஜவாப்தாரியை நீக்கிவிட்டார்கள். துகை கொடுக்கவேண்டியதாக பத்திரமெழுதிக்கொடுத்தவன் ஒப்புக்கொண்டதால் ஆளைபொறுத்துமட்டில் டிக்ரிசெய்யப்பட்டது. (26 கல். 78)

சுத்த பெந்தகப் பத்திரத்திற்கும் குதுவைப்பத்திரத்திற்குமுள்ள வித்தியாசங்கள் அடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(a) குதுவைப் பத்திரத்தின்படி கடன் கொடுத்தவன் வழக்கிடவேண்டியதாகவிருந்தால் அக்கடன் வாங்கியவன் சரீர ஜவாப்தாரியின் பேரிலாவது குதுவை சொத்து ஏலவிற்பனை செய்யப்படுவதின் மூலமாயாவது அல்லது மேற்சொன்ன இருவகையினுலாவது தகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டு தீர்ப்புப்பெறலாம். சுத்த பெந்தகப் பத்திர வியாஜ்ஜியத்தில் சொத்து ஏலவிற்பனையின் பேரில் மட்டில் துகை கிடைக்கவேணுமென்று வழக்கிடவேண்டும். மற்றெவ்வித பரிகாரமும் கேட்கக்கூடாது. (1 மத. ஹை. ரி. 114.)

(b) குதுவைப் பத்திரம் பெற்றவன் அடமானச் சொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள எவ்வித பாத்தியமுமில்லை. சுத்த பெந்தகப் பத்திரங்களுக்கு அவ்வித பாத்தியமுண்டு. குதுவைப்பத்திரம் பெறுகிறவனுக்கு பெந்தக சொத்தில் ஒருவித பாத்தியம் ஏற்பட்டு வருகிறது. அப்பாத்தியமிருப்பதை அறிந்துகொள்ளாமல் ஒருவன் அச்சொத்துக்களை கிரயம் பெற்றிருந்தாலும் அது அக்குதுவைப் பத்திர பாத்தியங்களுக்கு விரோதமாகமாட்டாது. (5 மத. ஹை. ரி. 457.)

(c) காலாவதி தோஷத்தைப்பற்றின விஷயத்திலும் மேற்சொன்ன இருவகைப் பத்திரங்களுக்கும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. குதுவைப்பத்திர வழக்குகள் கெடுக்கடந்து 12-வருஷங்களுக்குள் கொண்டுவரவேண்டியதேயன்றி சுத்த பெந்தகங்களைப்போல 60 வருடகாலாவதி அவைகளுக்கு ஏற்படவில்லை.

குதுவைப்பத்திரம் பெற்றவனுக்கு அப்பத்திரத்தில் கண்ட சொத்திலுள்ள பாத்தியம் லிமிட்டேஷன் ஆக்டு 2-வது ஷெடியூல் 147-வது பிரிவின்படி சொத்து பாத்தியமா? அல்லது மேற்படி ஆக்டு மேற்படி ஷெடியூல் 132-வது பிரிவின்படி பொறுப்புச்சாட்டிய பாத்தியமா? (Charge) என்ற விவாதம் ஏற்பட்டதில் குதுவை தஸ்தாவேஜுகளினுல் சொத்துப் பாத்தியமுண்டாக மாட்டாதென்றும், ஒத்திச்சொத்தை ஏலவிற்பனை செய்யக்கூடிய பாத்தியதையானது பெந்தக பாத்தியதைகள்போல அல்லவென்றும் தீர்ப்புச்செய்தார்கள். (10 மத. 509.)

பெந்தகப் பத்திரத்துகை ஒத்திசொத்து ஏல விற்பனையால் உள வடையாமல்போய் இதர சொத்துக்களை அல்லது ஆளைத்தொடர்ந்து தொகை வசூலிக்கப்படவேண்டுமென்று டிக்கிரியேற்படவேண்டியதாக விருந்தால் பத்திரக்கெடுவுகடந்து 6 வருஷங்களுக்குள் வழக்கிடவேண்டும். (10 மத. 100.)

ஒரு பெந்தகப்பத்திரத்தில் சில பாகம் சுத்த பெந்தகவாசகமாகவும், சிலபாகம் அனுபோக ஒத்தி வாசகமாகவும் கண்டிருந்தால், ஒத்தி பெற்றவன் பத்திரத்தில்கண்ட கெடுக்கடந்தவுடன் ஒத்திக்தொகை கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டுத் தீர்ப்புப்பெறலாம். (21 அல. 4.)

ஒரு சுத்தபெந்தகப் பத்திரத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட வழக்கில் பெந்தகச்சொத்துக்கள் ஏலவிற்பனை செய்யப்படாமல் டிக்கிரி பெற்றவனுக்கு பெந்தகச் சொத்துக்கள் சுவாதீனப்படுகின்றன ஒத்தி பெற்றவன் அச்சொத்துக்களை அனுபவித்துவந்தால் பெந்தகக்கடன் முழுவதுவும் உளவடைந்துவிட்டதென்றும், மேற்படி சொத்தின் வரும்படிக்கும் ஒத்தித்தொகை சேரவேண்டியதற்கும் கணக்குப் பார்க்க வேண்டுமென்றும், மேற்படி சொத்துக்கள் தனக்கு வசமாகவேண்டுமென்றும், மேற்படி டிக்கிரி கடன்காரனுகிய ஒத்திவைத்தவன் (Mortgagor) மேற்படி சொத்துக்களை சுவாதீனத்துடன் அனுபவிக்கும் ஒத்திபெற்றவன் பேரில் வழக்கிட்டான்.

ஒத்திப்பெற்றவன் தனக்கு டிக்கிரியில் கண்ட சொத்துக்கள் கிடைத்துவிட்டதால் வேறு டிக்கிரி செய்யவாவது தாவாசொத்துக்களை ஒத்திவைத்தவனுக்கு சுவாதீனப்படுத்திக் கொடுக்கவாவது நியாயமில்லையென எதிர்க்கட்சியாடினன்.

சொத்து சுவாதீனஞ்செய்யப்படவேண்டியதாக ஏற்பட்ட மேற்கண்ட டிக்கிரி சொத்துபாத்தியதையை விலக்குதல் (forclosure) ஆகமாட்டாதென்றும், ஒத்தி வைத்தவனுக்குள்ள மீட்கும்படியான பாத்தியதைகளை (right of redemption) மேற்படி டிக்கிரி எவ்விதத்திலும் தடைசெய்யமாட்டாதென்றும், டிக்கிரிபெற்றவன் ற்மேகண்டவிதம் சொத்துக்களை அனுபவிப்பதானது ஒத்தி பெற்றவன் அநுபவமேயன்றி சொத்தில் அத்தறுதியான பாத்தியதையைக் கொடுக்கமாட்டாதென்றும் வாதியின் பிராதுப்படி கணக்கு ஒப்புவிக்கவும்,

சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கவும் பிரதிவாதி கடமைப்பட்டவனென்றும் தீர்ப்புச்செய்யப்பட்டது. (19 மத. 249.)

ஒரு ஸ்தாவரசொத்தின் வரும்படியைக்கொண்டு கடனை உளவடைத்துக்கொள்ளுகிறதென்று தஸ்தாவேஜு ஏற்பட்டால் அது ஒத்திப் பத்திரமேயன்றி குதுவைப் பத்திரமல்ல. (8 மத. 104.)

எ-என்பவன் பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்திருக்கும் ஓர் பத்திரத்தில் தனக்கு ஜாமீன் பாத்தியதையுள்ள ஸ்தாவர சொத்துக்களை பெந்தகம் வைத்ததாகக் கண்டிருக்கிறது. சொத்து விபரங்கள் இல்லை. அந்தப்பத்திரம் ஏற்பட்டகாலத்தில் அவனுக்குள்ள ஜாமீன் சொத்துக்கள் இன்னவையென்பது சாட்சியங்களினால் பிற்பட்டு ருஜுவாயிற்று. அதனால் அந்தப்பத்திரம் பெந்தகப்பத்திரமெனத் தீர்ப்புச்செய்யப்பட்டது. (12 அல 175.)

எ-என்பவன் பி-என்பவனுக்கு ஒரு சொத்தைப் பெந்தகம் வைக்கிறான். அந்தப் பெந்தகபத்திரம் ஏற்பட்ட தேதியில் எ-என்பவனுக்கு அச்சொத்தில் எவ்வித பாத்தியமுமில்லை. மேற்படி பத்திரத்தின் பேரில் வழக்கிட்டகாலத்தில் எ-என்பவனுக்கு அச்சொத்தில் பாத்தியம் ஏற்பட்டுவிடுகிறது. அந்தப்பத்திரம் பெந்தகபத்திரமாக செல்லுபடியுள்ளதெனத் தீர்ப்புச் செய்யப்பட்டது. (13 அப்பீல் கேஸ் 523.)

பெந்தகப்பத்திர நமூனா.

(a) 19 ஷ ௴ ௳ (ஊர்வகையரா பெயர் முதலியன) இன்னார் இன்னாருக்கு எழுதிக்கொடுத்த கொதுவை பெந்தகம் அல்லது ஈட்டுக் கடன்பத்திரம்.

மேற்படி கிராமத்தில் என்பேரால் பட்டா ஏற்பட்டு நான் சொந்தமாய் அனுபவித்துவருகிற சர்வே நெ. 17. அயன் நஞ்சை எகர் 3, செ. 18, (இதற்கு நான்கெல்லை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு) இதற்குட்பட்ட நிலத்தை தங்களிடத்தில் நான் ஈடாகவைத்து கடன்வாங்கியது ரூபா 200. இந்த இருநூறு ரூபாய்க்கும் நாளது தேதிமுதல் 100-க்கு ரூபா ஒன்றுவீதம் வட்டி சேர்த்து அந்தந்த வருஷவட்டியை அந்தந்தவருஷத் கடைசியில் பாக்கியில்லாமல் செலுத்தி இந்தப்பத்திரத்தில் வரவுவைப்பதுடன், இன்றுமுதல் மூன்றுவருஷத்திற்குமேல் தாங்கள் என்றைக்குப்பணத்தைக் கேட்கிறீர்களோ அன்றைக்கு அசல்வட்டி முழுவதையும் பாக்கியின்றிச் செலுத்தி இப்பத்திரத்தை வாபீஸ் பெற்றுக்கொள்வேணுகவும். தங்களுக்கு ஈடுவைத்திருக்கிற சொத்தில் எவ்வித சிக்குச்சிலுக்குகளும் கிடையாது.

சாட்சிகள். கையெழுத்து.
நெட்டெழுத்து.

(b) ஷ ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு, (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த அடமானம் அல்லது பெந்தக தஸ்தாவேஜ்.

என் குடும்பார்த்த சிலவுகளுக்கும், குடித்தன விஷயமான சிலவுக்கும் (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) அடியில்கண்ட சொத்தை தங்களுக்கு ஈடுகாட்டி நாளது தேதியில் அடியில்கண்ட சாக்ஷிகள் முன்பாக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூபாய் ம், சப்-ரிஜிஸ்தரார் முன்னிலையில் பத்திரம் ரிஜிஸ்தராகுங்காலத்தில் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்ட வகையில் எனக்குச்செல்லானது ரூபாய் ம், (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) ஆக ரூபாய்( ) மேற்படி ரூபாய் எழுத்தால் எனக்கு மேற்கண்ட விதம் செல்லானபடியால், மேற்படி தொகைக்கு மாதம் 1-க்கு 100-க்கு வீதம் வட்டிசேர்த்து ஷ கெடுவில் அசலும் வட்டியும் செலுத்தக் கடவேன்; அப்படி குறித்த கெடுவில் செலுத்தத்தவறினால் தவறின தேதி முதற்கொண்டு மேற்படி அசலையும் அதற்குக் கூடியவட்டியையும் உடையார் வேண்டும்போது செலுத்தக்கடவேன். இதுவரையில் அடியில்கண்ட சொத்தை யாதொரு வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லை யென்பதற்கு அத்தாக்ஷியாக ரிஜிஸ்தராபீசில் வில்லங்கசர்டிபிகேட்டும் வாங்கிக்கொடுத்திருக்கிறேன். அசலுக்காவது வட்டிக்காவது தொகைசெலுத்தினால் தங்களிடம் தகுந்த ரசீதுபெற்றுக்கொள்ளக் கடவேன்; ஆதரவில்லாமல் அசலுக்காவது வட்டிக்காவது தொகை சென்றதாக எவ்வித முகாந்திரத்தைக்கொண்டு ரூபித்தபோதிலும் அது செல்லத்தக்கதல்ல. (ஏற்படும் நிபந்தனைகளைக் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த அடமானம், ஈடு அல்லது பெந்தக தஸ்தாவேஜ்.

சொத்து விபரம்.

* * * *

சாட்சிகள். கையெழுத்து.
நெட்டெழுத்து.

குறிப்பு:—1. வெண்கடன் தஸ்தாவேஜுகளுக்கும் ஷை அடமான வீத ஸ்டாம்பை அனுசரிக்கவேண்டியது.

2. அடமான தஸ்தாவேஜில், பத்திரமெழுதுங்காலத்தில் சொத்தை ஈடு காட்டியதாகவும், பின்னால் மேற்படி சொத்தை சுவாதீனம் செய்வதாகவும் ஒப்புக்கொண்டால் கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு தேவை.

3. அடமான சொத்தை குத்தகைக்குக் கொடுத்திருந்து, அந்த குத்தகைத் தொகையை வசூல்செய்துகொள்ள அடமானதாரனுக்கே அதிகாரங்கொடுக்கும் விஷயத்தில், அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளை போக்கிய தஸ்தாவேஜுகளெனப் பாவித்து, ஏற்படும் துகைக்குக் கிரய தஸ்தாவேஜு ஸ்டாம்பு தேவை.

4. அடமான சொத்தை அடமானதாரனுக்கே குத்தகைக்கு விடும்பக்ஷத்தில், அப்படிப்பட்ட தஸ்தாவேஜை போக்கியமெனப் பாவிக்கவேண்டியது. ஏற்படும் தொகைக்கு கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு தேவை.

---

18. Additional Security.

உடன்சேர்க்கையான பொறுப்பு.

போக்கியம் அல்லது அடமான தஸ்தாவேஜில் கண்ட சொத்து, ஈடு காட்டிய தொகைக்குப் போதாவிட்டால், அதற்காக மறுபடியும் வேறு சொத்தை ஜாமீன் காட்டி எழுதிக்கொடுக்கும் யாதொரு தஸ்தாவேஜுக்கு ஜாமீன் தொகை ரூ. 1000-க்கு மேற்படாமலிருந்தால் 12 அணு ஸ்டாம்பும், ஜாமீன் தொகை 1000-க்கு மேற்பட்டால் பிரதி 1000-க்கு 12 அணு வீதம் ஸ்டாம்பும் போடவேண்டியது. ஈட்டுப் பத்திர வாசகங்களைப்போல் இதையும் எழுதவேண்டும். (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல், 32-வது, 40-வது ஆர்ட்டிகிலைப் பார்க்கவும்.)

---

19. Further Charge.

இரண்டாவது ஈடு அல்லது பேந்தகம்.

(a) ஒரு சொத்து முன்னமேயே ஒருவனுக்கு போக்கியம் வைக்கப்பட்டு அவனுடைய அனுபவத்திலிருக்கும்போது, மறுபடியும் அதே சொத்தின்பேரில் அதே போக்கியதாரனிடத்தில் வட்டிக்குக் கடன்வாங்கி சாதாரண அடமான தஸ்தாவேஜ் எழுதினுலும் அப்படி-

வாங்கும் இரண்டாவது அடமானத்தொகைக்கு கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

(b) ஒரு சொத்தை ஒருவனுக்கு சுவாதீனமில்லாமல் அடமானம்வைத்து அந்தத்தொகை செல்லாகாமலிருக்க, மறுபடியும் அதே சொத்தை அதே அடமானதாரனிடத்தில் சொத்து சுவாதீனமில்லாமல் கடன்வாங்கினால், அப்படிவாங்கும் இரண்டாவது கடன்தொகைக்கு அடமான தஸ்தாவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது.

(c) சொத்து சுவாதீனமில்லாத அடமானதாரனிடத்தில். அந்த அடமானத்தொகை செல்லாகாமலிருக்க, மறுபடியும் அதே சொத்தை அதே அடமானதாரனிடத்தில் போக்கியம்வைத்து தொகை வாங்கினால், அப்படிப்பட்ட விஷயத்தில் முன் அடமான தஸ்தாவேஜுக்குள்ள தொகையையும் பின்னால் வாங்கும் போக்கியத்தொகையையும் சேர்த்துக்கூடிய மொத்தத்திற்குக் கிரயதஸ்தஸ்தவேஜ் ஸ்டாம்பு போடவேண்டியது ; ஆனால் முன் அடமானத்தொகைக்கு ஸ்டாம்பு செல்லாயிருப்பதினால் அப்படிப்பட்ட ரிஜிஸ்தரான முன் அடமான தஸ்தாவேஜின் ஸ்டாம்பை, தற்கால ஒட்டு மொத்தத்திற்கு வாங்க வேண்டிய கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பினின்றும் கழித்துவிட்டு, பாக்கி ஸ்டாம்பின்பேரில் எழுதிக்கொள்ளலாம். முன்பத்திரரெஜிஸ்டர் நெ. ஷ ௵ உ வால்யூம் பக்கம் இவைகளைக்காட்ட வேண்டும்.

உதாரணம்.

முன் அடமானத்தொகை	ரூபாய்	200
அதன்பேரில் போக்கியக்கடன்	ரூபாய்	300
	ஆக ரூபாய் ...	500

இப்பொழுது ரூ. 500-க்கு கிரய தஸ்தாவேஜ் ஸ்டாம்பு	ரூ.	7	8	0
முன் 200 ரூ. ரிஜிஸ்தரான அடமான தஸ்தாவேஜுக்குப் போடப்பட்டிருக்கிற ஸ்டாம்பு நீக்கி.	ரூ.	1	8	0
தற்காலம் போடவேண்டிய ஸ்டாம்பு.	ரூ.	6	0	0

20. Mortgage with Possession.

ஒத்தி (போக்கியம்.)

ஒத்திப்பத்திரம் அல்லது போக்கியப்பத்திரம் :—ஒருவன் வாங்குகிற கடன் துகைக்கு வட்டி செலுத்தாமல், அதற்காக ஒரு சொத்தை கடன்வாங்கினவனிடம் விட்டு அந்தசொத்திலிருந்து வருகிற மாசூல் குத்தகை அல்லது வாடகையை வட்டிக்காக வைத்துக்கொண்டும் அந்த சொத்துக்குள்ள சர்க்கார் தீர்வையை செலுத்தும்படியாயும் கண்டெழுதுகிற தஸ்தாவேஜ். இதற்கு ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 23 நெ. ஒப்படைப்பத்திரத்திற்குண்டான தீர்வை செலுத்தவேண்டும்.

(a) 19 வ மீ உ (ஜில்லா முதலிய விவரங்கள்) இன்னார், (குடியிருப்பு வகையரா) இன்னாருக்கு எழுதிக்கொடுத்த போக்கியப்பத்திரம்.

நான் மேற்படி கிராமத்தில் சொந்தமாய் அனுபவித்துவருகிற. நில விபர வகையரா, அயன் சர்வே நெ. 28 நஞ்சை ஏகர் 4, செ. 27, விஸ்தீர்ணமுள்ள நிலத்தை தங்களிடத்தில் போக்கியமாகவைத்து ரெஜிஸ்ட்ரார் முன்னிலையில் ரொக்கம் பத்திக்கொண்ட ரூபா 1000. இந்த ஆயிரம் ரூபாய்க்கும் மேற்படி நிலத்தை தங்கள் சுவாதீனத்தில் விட்டிருப்பதால், அதன் வரும்படியை மேற்படி துகையின் வட்டிக்கீடாக வைத்துக்கொண்டு, அந்த நிலத்திற்குள்ள சர்க்கார் தீர்வையையும் தாங்களே செலுத்திவருவதுமல்லாமல் கிராமக்கட்டுப்பாட்டுக்காக மேற்படி நிலவிஷயமாய் ஏற்படும் சகல சில்லரை வரிகள் ஊழியங்கள் முதலானவைகளுக்கும் தாங்களே ஜவாப்தாரியாயிருக்கவேண்டும். இந்தப்பத்திரம் பிறந்த தேதி முதல் ஐந்துவருஷங்கழித்து எந்தக்காலாவதி முதலிலாவது நான் வாங்கியதுகை பூராவும் கொடுத்துவிட்டால் மேற்படி நிலத்தை என் சுவாதீனத்தில் விட்டுவிடவேண்டும். மேற்படி நிலத்தின்பேரில் இதற்குமுன் எவ்வித ஈடுமுதலிய வில்லங்கங்களில்லையென்று உறுதியாய்ச்சொல்லுகிறேன்.

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

(b) 19 வ மீ உ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த போக்கிய தஸ்தாவேஜ்.

என்பேரில் (குடியிருப்பு வகையரா) சி-என்பவன் டிஸ்திரிக்ட்டு முன்சீப் கோர்ட்டில் பெற்றிருக்கும் டிக்ரித்துகையைத் தீர்க்கும்பொருட்டு (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) அடியில்கண்ட சொத்தை தங்களுக்கு வ

கெடுவுக்கு போக்கியம்வைத்து தங்களிடம் அடியில் கண்ட சாக்ஷிகள் முன்பாக நாளது தேதியில் ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூபாய் ; ஷ ரூபாய் (எழுத்தால்) நான் பெற்றுக்கொண்டபடியால், மேற்படி சொத்தை நாளது தேதியில் தங்கள் சுவாதீனஞ்செய்திருக்கிறேன். கெடுவுகாலம்வரை ஷ சொத்தை அனுபவித்துக்கொண்டு கெடுவு கடந்த மறுதேதியில் ருகையைப்பெற்றுக்கொண்டு பூமியையென்னுடைய சுவாதீனத்தில் விட்டுவிடவேண்டியது. பூமியை துருஸ்தாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது. (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்.) கெடுவுகாலத்தில் துகையைச் செலுத்தத்தவறிப்போனால் துகை செலுத்துங்காலத்தில் பூமியை என் சுவாதீனஞ்செய்துவிடவேண்டியது. பூமிக்குரிய சர்க்கார் கந்தாயம் கெடுவுகாலம்வரை நீரே செலுத்திக்கொள்ளவேண்டியது. இப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த போக்கிய தஸ்தாவேஜ்.

சொத்து விபரம்.

* * * *

சாக்ஷிகள். கையெழுத்து.
எழுதியது.

குறிப்பு:—1. போக்கிய தஸ்தாவேஜ்களுக்கு, கிரயதஸ்தாவேஜ் ஸ்டாம்பு.

2. போக்கிய தஸ்தாவேஜின்பேரில் செல்லுவைத்துக்கொள்ளலாம்; தொகை செல்லான விபரத்தைக்காணலாமே தவிர பூமி மறுபடி சுவாதீனமாகும் விஷயத்தைச் சற்றேனுங் காட்டக்கூடாது. அப்படி பூமி மறு சுவாதீனமாகும் சங்கதியைக் காட்டவேண்டிய தவசியமானால், போக்கிய விடுதலை தஸ்தாவேஜ் தான் எழுதிக்கொள்ளவேண்டும்.

3. அசல் தஸ்தாவேஜின்பேரில் செல்லுவைப்பதானாலும், செல்லாகும் தொகைக்கு சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம்.

4. தொகைமாத்திரம் செல்லானதாக எழுதிக்கொள்ளும் தனி ரசீதுக்கு 1-அணு ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து செய்யவேண்டியது. ஏற்படும் துகைக்கு சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம் வாங்கப்படும்.

21. Usufructuary Mortgage.

அனுபோக அடமானம் என்னும் பெந்தக போக்கியம்.

கொதுவை வைக்கிறவன் கொதுவை வைத்துக்கொள்ளுகிறவனுக்குக்கொதுவைச் சொத்தை ஸ்வாதீனஞ்செய்து அல்லது சுவாதீனம் செய்வதாக வெளிப்படையாகவாகிலும் அந்தப்படி அனுமானிக்கும்படியாகவாகிலும் தான் கட்டுப்பட்டு, கொதுவைப்பணம் செலுத்தப்படுகிற வரையில் அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ளும்படியாகவும், அந்த சொத்திலிருந்துவருகிற குத்தகை அல்லது வாடகைப் பணத்தையும் லாபத்தையுமாகிலும், அந்த குத்தகை அல்லது வாடகைப்பணம் லாபம் ஆகிய இவைகளில் யாதொரு பாகத்தையாகிலும் பெற்றுக்கொள்ளும்படியாகவும், வட்டிக்குப் பர்த்தியாகவாவது கொதுவைப்பணத்துக்குச் செல்லுவைத்துக்கொள்ளவாவது சிறிதுமட்டில் வட்டிக்குப்பர்த்தியாயும்சிறிதுமட்டில் கொதுவைப்பணத்துக்குசெல்லுவைத்துக்கொள்ளவுமாவது அவைகளை விநியோகித்துக்கொள்ளும்படியாகவும் அவனுக்கு அதிகாரங்கொடுத்தால், அந்த விவகாரம் பெந்தக போக்கியமென்று சொல்லப்படும்; கொதுவைவைத்துக்கொண்டவன் பெந்தகபோக்கியம் வைத்துக்கொண்டவனென்று சொல்லப்படுவான்.

ஞு ஶ்ரீ வ (குடியிருப்பு வகையரா) எ-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த அனுபோக அடமானம்.

இதனடியில்கண்ட பூமியைத் தங்களிடம் ஸ்வாதீனஞ்செய்து என்னுடைய வியாபாரத்தின் அவசரநிமித்தமாக (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) நாளதுதேதியில் அடியில்கண்ட சாட்சிகள் முன்பட தங்களிடம் ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூபாய் ; இனிமேல் அடியில்கண்ட பூமியைத் தாங்களே சொந்த சாகுபடி செய்துகொண்டு, வருஷாவருஷம் விளையும் மாசூலில், ஷை பூமிக்குள்ள கந்தாயத்தீர்வை ரூபாய் ப, ஷை அசலுக்கு மாசம் 1-க்கு 100-க்கு வீதம் வருஷாவருஷம் கூடுகிற வட்டி ரூபாய் ம், செல்லானதுபோக மீதி மாசூலின்கிறய மொத்தத்தை அப்போதைக்கப்போது ஏற்படும் காலக்கிரயத்தை அனுசரித்து, அசலுக்குச் செல்லுவைத்துக்கொண்டு வரவேண்டியது. ஷை பூமியிலுள்ள கிணற்றை துருஸ்து செய்யவேண்டியிருந்தால் அதற்கேற்படும் சிலவையும் மேற்படி வருஷவாரி வரும்படியில் கழித்துக்கொண்டு சரியான கணக்கு வைத்து வருஷாவருஷம் எனக்குக் காட்டிக்கொண்டு வரவேண்டியது. (அசல் ரூபா எந்த விதமாக கட்டுவழியாகிறதோ அந்த விதத்தைக் காட்டிக்கொள்ளவும்) மேற்படி வீதம் கட்டுவழி செய்துகொண்டு வந்து எந்த வருஷம் எந்தக் காலாவதியில் மேற்படி அசலும் அதற்கு மேற்கண்ட வீதம் கூடும்வட்டியும் கிரம

மாய் ஏற்படும் சிலவுகளும் கட்டுவழியாகிறதோ அந்தக்காலத்தில் பூமியை என் சுவாதீனஞ் செய்துவிடவேண்டியது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த அனுபோக அடமானப்பத்திரம்.

சொத்து விபரம்.

* * * *

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு.—அசல் தொகையை, ஞு 1-க்கு இத்தனை வீதம் செல்லு வழி செய்து கொண்டு இத்தனை ஞும் கெடுவில் பூமியைவிட்டுவிட வேண்டியது என்றும் எழுதிக் கொள்ளலாம்.

ஸ்டாம்பு :—(1) மேற்படி தஸ்தாவேஜில் ஏற்படும் தொகைக்கு கிரயதஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்பு.

(2) ஏற்படும் தொகைக்கு, சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம்.

22. Mortgage by Conditional Sale.

ஈரேட்டுக்கிரயம்.

ஒத்தி வைப்பவன் குறிப்பிட்ட ஒரு தேதியில் கொதுவைத்தொகையைக் கொடுக்கத் தவறிப்போவதன்மேல் ஏற்பட்ட கிரயம் அறுதியாய் விடுகிறதென்றாவது அல்லது அவ்வொத்தித்தொகையைக் கெடுப்படிச் செலுத்தப்படுவதன்மேல் கிரயம் ரத்தாய் விடுகிறதென்றாவது, அல்லது அவ்வொத்தித் தொகையைக் கெடுப்படி கொடுத்துவிடுகிறதென்ற நிபந்தனையின்பேரில் சாசனம்பெற்றவன் கிரயஞ்செய்தவனுக்கு சொத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறதென்றாவது, ஒத்திவைத்தவன் கொதுவைச்சொத்தை வெளிப்படையாக விக்கிரயஞ்செய்வானாகில் அவ்விபரங்கள் கண்ட பத்திரத்துக்கு "ஈரேட்டுக்கிரய ரூபமான பெந்தகம்" என்று பெயர். அவ்வொத்தி வாங்குவோன் ஈரேட்டுக் கிரயரூபமாக பெந்தகம் பெற்றவன் என்று சொல்லப்படுவான். இந்த கொதுவை தஸ்தவேஜில் அறுதியான விற்பனைசெய்யப்படுகிறதாகவோ அல்லது கொதுவை சம்பந்தமாகவோ ஷரத்து சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வித பெந்தகபத்திரங்கள் இந்தியாவில் எல்லாவிடங்களிலும் நடைபெற்றுவருகின்றன. இதைச் சென்னை ராஜதானியில் கெடு

வுடன்படிக்கைச் சாசனமெனவும், திருஷ்டபெந்தகமெனவும், முத்த டக்கிரயமெனவும் சொல்லுகிறார்கள். (1 மத. ஹை. ரி. 464.) பங்காள தேசத்தார் கட்கபாலா எனவும், பைபில்வூவா எனவும், பம்பாய் தேசத்தார் காஹறன் லாஹறன் எனவும் சொல்லுகிறார்கள்.

இவ்வித ஒத்தி பெற்றவனுக்கு ஒத்திச் சொத்துகள் சுவாதீனப் படுத்தப்பட்டாலும், சுவாதீனமாகாவிட்டாலும் பத்திரத்தில்கண்ட கெடுவானவுடன் அவ்வொத்தி அத்தறுதி கிரயமாய் விடுகிறது. மேற்படி சொத்து சுவாதீனமாகாவிட்டால், சொத்து வசமாகவேண்டுமென வழக்கிட்டு சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம். மேற்படி கிரயம் அத்தறுதிக் கிரயமாய்விட்டதென்று வழக்கிட்டு டிக்கிரி பெறவேண்டுமென்பதில்லை. ஒத்திப்பெற்றவன், ஒத்தி வாங்கினவன் இவர்களுக்குள் கணக்கு வழக்குகள் பார்த்துக்கொண்டு முடிவுசெய்து கொள்ளவேண்டுவதுமில்லை. ஏற்பட்ட கெடுக்கடந்தபின் வேறு கெடுக்கேட்க ஒத்திவைத்தவனுக்குப் பாத்தியமில்லை. (10, கல். 16 ; 4, இ. அ. 15 ; 31, அல. 318.)

இந்த நிபந்தனைகள் இப்போது அநுஷ்டானத்திலுள்ள 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்டுப்படி ஏற்பட்டிருக்கின்றன. இச்சட்டம் ஏற்படுவதற்குமுன் இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் பங்காளதேசத்தில் 1798-ம் வருஷத்திய 1-வது ரெகுலேஷன் எனவும், 1806-வருஷத்திய 17-வது ரெகுலேஷன் எனவும் பம்பாய் ராஜதானியில் 1827-ம்வருஷத்திய ரெகுலேஷன் எனவும் ஏற்படுத்தியிருந்தார்கள். அவைகள் இங்கிலீஷ் சட்டங்களை யனுசரித்து ஏற்பட்டவைகள். மேற்கண்ட ஈடுரெட்டுக்கிரய ரூபமான பெந்தகபத்திரஷரத்தின்படி கெடுக்கடந்த பின்னிட்டும் பெந்தக சொத்துகளை மீட்கும்படியான பாத்தியம் ஒத்திவைப்பவனுக்கு உண்டென்பது மேற்கண்ட இருவகைச் சட்டங்களின் கருத்து. ஒரு காலத்தில் ஒத்தியென்று ஏற்பட்டால் அது எப்போதும் ஒத்திதான். (Once a mortgage always a mortgage) என்பது இங்கிலீஷ் சட்டநிபுணர்களின் கொள்கை. (10 இ. அ. 340 ; 3 கல் 397.)

நமது சென்னை ராஜதானியில் மேற்கண்ட விதமான சட்டங்கள் யாதொன்றும் ஏற்படவில்லை. ஆகையால் ஜனங்கள் எந்தெந்தவிதம் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்களோ அந்தந்த நிபந்தனைகளின்படி நடக்கவேண்டுமெனத் தீர்ப்புகள் ஏற்பட்டு

வந்தன. இப்பால் ஈஸ்டு இந்தியா கம்பெனியாரிடமிருந்து சக்கரவர்த்தினி விக்டோரியா மகாராணியவர்கள் இவ்விந்தியாவின் அரசாட்சியை கைக்கொண்டபின் அதாவது 1858-ம் வருஷத்துக்குப் பிறகு இந்தியா தேசத்திலுள்ள சகல விவகாரங்களும் இங்கிலீஷ் சட்டங்களின்படி நடத்தப்படவேண்டுமென உத்திரவு செய்தார்கள். ஒத்தி முதலியன வற்றைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரால் 1882-ம்ஸ்ரீ ஜூலைமீ 1உக்கு முந்தி எவ்விதச்சட்டமும் ஏற்படாததினுலே அத்தேதிக்கு முந்தியும் 1858-வருஷத்துக்குப்பிந்தியும் இதன்மத்தியகாலங்களில் ஏற்பட்ட கெடுவுடன்படிக்கைச் சாசனங்கள் (Mortgage by conditional sale) எல்லாம் இங்கிலீஷ் சட்டத்தையனுசரித்து தீர்ப்புகள் செய்யப்பட்டுவருகின்றன. அதாவது பத்திர ஷரத்துப்படி கெடுமுடிந்தவுடன் அத்தறுதி கிரயமாகமாட்டாதென்றும் பத்திரங்களில் கெடுக்கள் கண்டெழுதுவதைக்கொண்டு அந்தப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பது உடன்படிக்கை யேற்படுத்திக் கொள்பவர்களின் கருத்துகள் அல்லவென்றும், கட்சிக்காரர்களின் எண்ணங்களை தஸ்தாவேஜிகளின் ஷரத்துகளை ஆழ்ந்துயோஜித்து வியாக்கியானங்கள் செய்வதைக்கொண்டும், அவர்களின் நடவடிக்கைகளினுலும், வாய்மொழி சாட்சியமுதலிய மற்ற விஷயங்களினுலும் தெரிந்துகொள்ள வேண்டியதெனத் தீர்ப்பு செய்துவருகிறுர்கள். (4 மத. 186.)

1858-வருஷத்துக்குப்பிந்தி 1882-ஸ்ரீ ஜூலைமீ 1உக்கு முந்தி ஒரே தேதியில் எ-என்பவனுல் பி-என்பவனுக்கு ஒரு சாசனமும் பி-என்பவனுல் எ-என்பவனுக்கு ஒரு உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன. பி-க்கு எ-கொடுக்கவேண்டியிருந்த ஒரு கடனைத்தீர்க்கவேண்டியதற்காக மேற்கண்ட தஸ்தாவேஜிகளில் ஒன்றில் அத்தறுதி சாசனமாகவும் மற்றொரு உடன்படிக்கையில் சாசனவிபரத்தை கண்டு ஷை சாசனத்துகையைக் குறிப்பிட்ட ஒரு கெடுவுக்குள் கொடுக்கிறதென்றும், அந்தப்படி கொடுத்துவிடும்பக்ஷத்தில் மேற்படி சாசனத்தை ரத்துசெய்து நிலத்தை விற்றவனுக்கு மறு சாசனஞ் செய்துகொடுத்து நிலத்தையும் ஸ்வாதீனப்படுத்திக் கொடுக்கிறதென்றும், மேற்படி சாசனத்தின் அசல் வட்டித்தொகைகளைப் பல கெடுக்களில் கொடுக்கிறதென்றும், அந்தப்படி எந்தக் கெடுத்துகையாவது கொடாவிட்டால் உடனே பாக்கியாயிருக்கும் தொகை முழுவதுங் கொடுத்துவிடவேண்டியதென்றும், அந்தப்படிக்குங் கொடாவிட்டால் மேற்படி உடன்படிக்கை ரத்தாய் விடுகிறதுமன்றி சாசன வாசகப்படி பி-நிலங்களைச் சர்வ

சுதந்தரமாக அனுபவித்துக்கொள்ளுகிறதென்றும் கண்டிருக்கிறது. அப்பத்திர ஷரத்துகளின்படி எ-நடந்துகொள்ளவில்லை. நீண்டகாலத்துக்குப் பிற்பட்டு எ-யின் வார்சுகள் மேற்படி சாசனச்சொத்துகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென பி-என்பவன் பேரில் வழக்கிட்டார்கள். பத்திர ஷரத்துகளின்படி நடக்க எ-என்பவனும் அவன் வார்சுகளும் கடமைப்பட்டவர்களென்றும், தாவாப்படி சொத்துகள் கிடைக்கமாட்டாதென்றும் பி-நட்சியாடினன். மேற்கண்ட சாசனம் உடன்படிக்கை இரண்டும் ஏககாலத்தில் ஏற்பட்டிருப்பதால் அவைகள் ஒரு பத்திரவாசகமாகக் கொள்ளப்படவேண்டியதென்றும், அவைகளிற் கண்ட தொகை கடன்தொகையேயன்றி வேறல்லவென்றும், அத்தொகையை வசூலிக்கும்படியான பாத்தியம் பி-க்கு ஏற்பட்டிருப்பதால் அவருக்கு மேற்படி சொத்தில் அத்தறுதிக்கிரய பாத்திய முண்டாக மாட்டாதென்றும், அவ்விரண்டு தஸ்தாவேஜுகளும் ஒரு பெந்தகபத்திரமாகக் கொள்ளவேண்டியதென்றும், 1882-ம்வூ த்திய 4-வது ஆக்டு ஏற்படுவதற்கு முந்தி மேற்கண்ட தஸதாவேஜிகள் ஏற்பட்டிருப்பதால் (தம்புசாமி முதலி வாதியாகவும், ஹுஸ்ஸேன்ராவுத்தன் பிரதிவாதியாகவும் ஏற்பட்ட) 1. மத. 1; (அதன்பேரில் ஏற்பட்ட) பிரி. கவு. 2. இ. அ. 241) இத்தீர்ப்புகளை யனுசரித்து இவ்வியாஜ்ஜியமும் தீர்மானஞ்செய்யப் படவேண்டியதெனத் தீர்ப்புசெய்தார்கள் (23. மத. 114.)

அவ்வித பத்திரங்களில் ஒற்றித் தொகையை வசூலிக்கும்படியான பாத்திய மிருக்கவேண்டுமென்பதும் அவசியமில்லை. ஒரே தேதியில் சாசனமும் உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கும் ஒரே காரணத்தைக் கொண்டு பெந்தகப் பத்திரமென்று உறுதியாய்ச் சொல்லமுடியாது. அந்தப்பத்திர வாசகங்களை வியாக்கியானங்கள் செய்வதைக்கொண்டும் மற்றும் சுற்றுப்பட்ட அநேக விஷயங்களைக்கொண்டும் கெடு நிபந்தனைகள் உடன்படிக்கையின் கருத்தல்ல வென்பதை நிச்சயஞ்செய்யவேண்டும். அதற்கு வாய்மொழியான சாட்சியங்களும் விடலாம். (19 அல. 434.)

இவ்விரு கட்சிக்காரர்களுக்குள் இதேவிதமாகப் பின்னும் ஏற்பட்ட மற்றொரு கேசில் (1) உடன்படிக்கையில்கண்ட கெடுக்கடந்த பின்னிட்டும் தொகை கொடுத்து சாசனச்சொத்தை மீட்டுக்கொள்ளலாமென்ற ஏற்பாடுகள் நடந்திருப்பதை வாய்மொழி சாட்சியங்களைக்

கொண்டுமட்டில் ருஜூப்பிப்பது போதுமானதல்லவென்றும், பத்திர வாசகங்களையும் அதைப்பற்றிய மற்ற நடவடிக்கைகளையுங்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், (2) பெந்தகக்கடனை சர்ர ஜவாப் தாரியின்பேரிலும் கொடுக்கிறதென்ற வாசகம் ஏற்படவேண்டுமென்ப தவசியமில்லையென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. (22 அல. 149.)

ஏ-என்பவன் பி-என்பவனுக்கு ஒரு குதுவைப்பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தான். அந்தக் கடனைத் தீர்க்கவேண்டியதற்காக மேற்படி குதுவைப் பத்திரத்தில் கண்ட சொத்துக்களையே 1873-ஹு த்தில் பி-என்பவனுக்கு கிரயசாசனஞ் செய்துகொடுத்து அதே தேதியில் பி-யிடமிருந்து ஒரு எதிர்நடைப் பத்திரம் (Counter document) எழுதி வாங்கியிருந்தான். அதில் மேற்படி சாசனத்துகையை குறித்த ஒரு கெடுவுக்குள் கொடுத்துவிட்டால் சாசனத்தைத் திருப்பிக்கொடுத்து மறு சாசனஞ்செய்து கொடுக்கிறதென்றும், அந்தக் கெடுவுக்குள் கொடாவிட்டால் உடன்படிக்கை ரத்தாய்விடுகிறதென்றும் கண்டிருக்கிறது. வட்டி ஷரத்துகளாவது சாசனத்துகையை வசூலிக்கும்படியான பாத்தியதையாவது யாதென்றும் ஏற்படவில்லை.

சாசனமும் உடன்படிக்கையும் ஒரே காலத்தில் ஏற்பட்டிருப்பதால் பெந்தகப் பத்திரமென்றும், கெடு நிபந்தனை செல்லாதென்றும், கெடுவுக்குப் பிற்பட்டும் சாசன சொத்துகளை மீட்கும்படியான பாத்தியமிருக்கிறதென்றும் ஏ-என்பவன் வார்சுகள் பி-என்பவன் பேரில் வழக்கிட்டார்கள். மேற்படி பத்திரங்களின் ஷரத்துகளின்படி கிரயம் உறுதியாய் விட்டதென பி-எதிர்வாதஞ்செய்தான்.

ஏற்கனவே ஏற்பட்டிருந்த பெந்தகத்தை மாற்றி சாசனவாசகமாக எழுதியிருப்பதைக்கொண்டு ஏ-பி-இருவர்களுக்குள்ளும் ஏற்பட்ட உடன்படிக்கை பத்திர ஷரத்துப்படி நடந்துகொள்ளுகிறதேயன்றி வேறுவித ஏற்பாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை யென்றும், மேற்படி தஸ்தாவேஜிகள் கெடுவுடன்படிக்கைச் சாசனங்கள் (Mortgage by conditonal sale) ஆகமாட்டாதென்றும், மறுசாசனம் செய்யப்படவேண்டியதென்ற நிபந்தனையின்பேரில் ஏற்பட்ட சாசனம் (Sale with a condition of repurchase) என்றும், ஏ-யின் வார்சுகள் கொண்டுவந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (14 மத. 170.)

1858-ஷூ த்துக்கு முந்தி ஏற்பட்ட பத்திரங்களின்பேரில் கொண்டுவரப்படும் மேற்கண்ட விதமான வியாஜ்ஜியங்களெல்லாம் பத்திர ஷத்துகளின்படித் தீர்ப்புகள் செய்யப்படவேண்டுமென சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்துவருகிறார்கள்.

1846-ஷூ த்தில் ஏ-என்பவன் தன்னுடைய நிலத்தை பி-என்பவனுக்குப் பெந்தகமாகவைத்து எழுதிக்கொடுத்திருக்கும் பத்திரத்தில் அச்சொத்தின் வரும்படிகளை ஏ-என்பவன் 1848-ம்ஷூ வரையில் அனுபவித்துக்கொள்ளுகிறதென்றும் அந்தக் கெடுவுக்குள் பி-க்குச் சேரவேண்டியதுகையைக் கொடாவிட்டால் அச்சொத்துகள் விற்கப்பட்ட சொத்துகளாக பி-அனுபவித்துக்கொள்ளுகிற தென்றும் கண்டிருக்கிறது. அந்தப்பத்திர வாசகப்படி ஏ-நடந்துகொள்ளவேண்டியவனேயன்றி கெடுவுக்குப் பிற்பட்டு அச்சொத்தை மீட்கும்படியான பாத்தியம் அவருக்கில்லை. (3 மத. 26.)

1858-ஷூ த்துக்கு முந்தி யேற்பட்ட ஒரு பெந்தக தஸ்தாவேஜியில் பெந்தகச்சொத்தை ஒற்றி பெற்றவன் அனுபவித்துக்கொண்டு வருகிறதென்றும், ஒற்றி பெற்றவனும் ஒற்றி வைத்தவனும் வட்டிக் கணக்கு முதலியன பார்த்துக்கொண்டு பாக்கியாகும் தொகையைக் கொடுத்துத் தீர்த்துக்கொள்ளுகிறதென்றும் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தால் பத்திரத்தில் கெடுக்கண்டிருந்தபோதிலும் அந்தக் கெடு நிபந்தனையில்லாமலே 60 வருஷ காலாவதிக்குள் மேற்படி சொத்துகளை மீட்டுக்கொள்ளலாம். (8 மத. 185.)

ஒற்றி வாங்கினவன் ஒற்றிச் சொத்துகள் தனக்குக் கிடைக்கவேணுமென்று வழக்கிடுவதாகவிருந்தால் அவன் லிமிடேஷன் ஆக்ட்டு 2-வது ஷெடியூல் 135-வது உட்பிரிவின்படி 12 வருஷங்களுக்குள் வழக்கிடவேண்டும். பெந்தகத்தொகை செல்லாவதற்கு ஒருதேதி குறிப்பிட்டிருந்தால் அந்தக் கெடுக்கடந்து பன்னிரண்டு வருஷங்களுக்குள் வழக்கிட்டு சொத்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளலாம். (10. கல் 68.)

ஷூ மீ வ (ஊர் பேர் வகையரா) ஏ-என்பவன் (ஊர்பேர் வகையரா) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த ஈரெட்டுக் கிரயசாசனம் என்னவென்றால், சி-என்பவன் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் என்பேரில் பெற்றிருக்கிற டிக்கிரிக்குத் தொகை ரூ. செலுத்துவதற்காகவும் (இன்ன நில விவரம் வகையரா) டி-என்பவனிடம் ஈடுவைத்து வாங்கிய கடனுக்கு அசல் வட்டி ரூ. , நான் செலுத்தவேண்டியிருப்பதாலும், (இன்ன, ஊர்) ஜவுளிக் கடையில் என் குமாரத்தியின் கல்யாணநிமித்தம் ஜவுளி வாங்கியதில் பாக்கி

கொடுக்கவேண்டிய ரூ. ஆக ரூ. நீர் கொடுத்துத் தீர்த்தவகையில் என் பத்தாய் விட்டபடியால், மேற்படி துகை (எழுத்தால்) ரூபாய்க்கு இதனடியில் கண்ட ஸ்தாவரசொத்தை தங்களுக்கு ஈரெட்டுக்கிரய சாசனஞ் செய்துகொடுக்கி றேன். இன்றுமுதல் பத்துவருஷ கெடுவில் அல்லது அதற்குள் எப்போதாவது நான் சாசனத்துகையை பூராவும் கொடுத்துவிடுகிற விஷயத்தில் தாங்கள் எனக்கு மேற்படி சொத்தை மறுசாசனஞ் செய்துவிடவேண்டியது. (வேண்டிய ஷரத் துக்களை எழுதிக்கொள்ளவும்) மறுசாசனஞ் செய்துகொடுப்பதாக தாங்கள் எக்ரிமெண்டும் எழுதிக்கொடுத்து, ரெஜிஸ்டர் செய்துகொடுக்கவேண்டியது. தங்களுக்கு ஆதரவாக பணஞ்செலுத்தி வாங்கிவைத்திருக்கிற மூல தஸ்தாவேஜு களையும் மறுசாசனம் செய்யும்போது என்னிடமாவது, என்னுடைய வார்சுகளி டமாவது கொடுத்துவிடவேண்டியது.

சொத்து விவரம்

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

இதற்கு ஸ்டாம்பும் ரெஜிஸ்ட்ரேஷனும் விக்கிரய தஸ்தாவேஜுப் போலவே.

---

23. Mortgage of Crops

மாசூல் ஈடு.

(a) மாசூல் அடமான தஸ்தாவேஜின் கெடுவுகாலம் 3 மாதங் களுக்கு மேற்படாமலிருந்தால் :—

	ஸ்டாம்பு. ரூ.	அ.	ப.
ரூபாய் 200-க்கு மேற்படாத தொகைக்கு ...	0	2	0
ரூபாய் 200-க்கு மேற்பட்டு பிரதிரூபாய் 200-க்கும் அல்லது அதற்குக் குறைந்த பாகத்திற்கும்	0	2	0

(b) ஷை தஸ்தாவேஜுகளின் கெடுவுகாலம் 3 மாதங்களுக்கு மேற்பட்டும் 18-மாதங்களுக்கு மேற்படாமலுமிருந்தால்—

	ரூ.	அ.	ப.
ரூபாய் 100-க்கு மேற்படாத தொகைக்கு ...	0	3	0
ரூபாய் 100-க்கு மேற்பட்ட பிரதி ரூபாய் 100-க்கும் அல்லது அதற்குக் குறைந்த பாகத்திற்கும்	0	3	0

(c) மற்ற யாதொரு விஷயத்தில் அடமான தஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்பு போடவேண்டியது. (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 41 நெ. சாகுபடி கொதுவைப்பார்க்க.) பத்திரஷரத்து மாருலின் வகையைக்கண்டு எழுதவேண்டும்.

---

24. Receipt.

இரசீது

1. (a) அடமான தஸ்தாவேஜிகளின்பேரில் செல்லுவைத்து ரசீது எழுதிக்கொண்டால், ஸ்டாம்பு தேவையில்லை. ஏற்படும் தொகைக்கு சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம்.

(b) அடமானத்தொகை செல்லானதாக தனி ரசீது எழுதிக்கொண்டால், ஒரு அணா ரசீது ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்து செய்ய வேண்டியது. ஏற்படும் தொகைக்கு சாதாரண ரிஜிஸ்தரேஷன் கட்டணம் வாங்கப்படும். ஆனுல் இவைகளில் ஷை அடமானம் ரத்தானதாகவாவது சொத்தின்பேரில் அடமானப்பாத்தியத்தை விட்டுவிட்டதாகவாவது காணக்கூடாது. (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 53 ரசீதைப்பார்க்க.)

---

25. Transfer of Mortgage.

பந்தக மேடோவர்.

டிரான்ஸ்பர் என்கிற மேடோவர் பத்திரம் என்பது:—ஒருவன் தன் பெயரால் ஏற்பட்ட பிராமிஸோரி நோட்டுகள், கடன் பத்திரங்கள், ஈட்டுப்பத்திரங்கள், கூட்டுப்பங்குகள், முதலியவைகளை வேறொருவன் பெயருக்குமாற்றி அப்படிப்பட்ட பத்திரமுதலியவைகளுடைய பாத்தியதையை அவனுக்கு டிரான்ஸ்பர் செய்கிற தஸ்தாவேஜு. ஸ்தாவரசொத்தை டிரான்ஸ்பர் செய்வதில் பிரதிபலன் ரூ. 100 கிடைத்தால் அந்த டிரான்ஸ்பர் தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யவேண்டும். ஒத்தி, கொதுவைப்பத்திரம் முதலிய விஷயங்களில் அசல் பத்திரத்துக்கு எவ்வளவு ஸ்டாம்பு கிரயம் கொடுக்கப்பட்டதோ, அப்படிப்பட்டதை டிரான்ஸ்பர் செய்வதற்கும் அதே ஸ்டாம்பு கிரயந்தான் கொடுக்கவேண்டும். ஆனுல் அசல் தஸ்தாவேஜுக்கு ஏழரை ரூபாய்

க்கு மேற்பட்ட ஸ்டாம்பிருந்தால், டிரான்ஸ்பர் தஸ்தாவேஜுக்கு ஏழரை ரூபாய்க்குமேல் ஸ்டாம்புவேண்டியதில்லை. (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 62-நெ. பார்க்க.)

(a) 19 ௵ ௴ ௳ (ஜில்லா ஊர் பேர் ஜாதி வகையரா) ஏ-என்பவன் (ஊர் பேர் ஜாதி வகையரா) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த மேடோவர் பத்திரம் என்னவென்றால் :—19 ௵ ௴ 8௳ சி-என்பவன் என்னிடம் ரூ. பெற்றுக்கொண்டு இதனடியிற் கண்டசொத்தை ரெஜிஸ்டர் செய்த தஸ்தாவேஜு மூலமாய் ஈடுவைத்திருப்பதால், மேற்படி ஈட்டுக்கடனுக்காக நாளது தேதிவரையில் வரவேண்டிய அசல் வட்டி ரூபா( ) ஆகிறது. மேற்படி ரூபாய் (இலக்கத்திலும் எழுத்திலும்) தங்களிடம் நான் ரொக்கமாக தொகை பெற்றுக்கொண்டு ஷை ஈட்டு பத்திரத்திரத்தில் எனக்குள்ள சர்வசுவதந்தரங்களையும் தங்களுக்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறபடியால், தாங்களே மேற்படி ஈட்டுப் பத்திர ஷரத்துப்படி தொகையை வசூல்செய்துகொள்வீர்களாகவும்; மேற்படி பத்திரத்தில் எனக்காவது என்னுடைய வார்ஸுகளுக்காவது யாதொரு பாத்தியமுமில்லை. மேற்படி ஈட்டுப்பத்திரத்தையும் மூலதஸ்தாவேஜையும் இத்துடன் தங்களிடம் தந்திருக்கிறேன்.

சோத்து விவரம்·

சாக்ஷிகள். கையெழுத்து.
எழுதியது.

(b) ௵ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) பி-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவன் எழுதிக்கொடுத்த அடமானமேடோவர் தஸ்தாவேஜ்.

௵ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) சி-என்பவன் எனக்கு அடியில் கண்டசொத்தை ஈடுவைத்து ௵ ௴ ௳யில் ரிஜிஸ்தராபீசில் 1-வது புஸ்தகம் -வது வாலியூம் -வது பக்கம் -வது நம்பராக ரிஜிஸ்தர் செய்வித்துக்கொடுத்த அடமான தஸ்தாவேஜின்படி எனக்கு வரவேண்டிய அசல் ரூ. ம் அதற்கு நாளது வரையில் வட்டிசெல்லானது ரூ. போக, பாக்கி வரவேண்டிய வட்டி ரூ ம், ஆக அசல் வட்டி சகிதம் ரூ, வரவேண்டியபடியால், நாளது ௳யில் என்னுடைய குடித்தனச் செலவுக்காக (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) ஷை அடமான தஸ்தாவேஜுக்குறிய அசல் வட்டி ரூ. ல், தள்ளிக்கொடுத்தது ரூபாய் போக, பாக்கி ரூ தங்களால் நான் அடியில்கண்ட சாக்ஷிகள்முன் ரொக்கம்பெற்றுக்கொண்டு, ஷை அடமான தஸ்தாவேஜை தங்களுக்கு மேடோவர் செய்துவிட்டேன். ஷை அசல் தஸ்தாவேஜையும் இத்துடன் கொடுத்திருக்கிறேன். இனி

மேல் அந்த அடமான தஸ்தாவேஜைக்குறித்து எனக்கு யாதொரு பாத்திய சம்மந்தமுமில்லை. ஷை. அடமான தஸ்தாவேஜூக்கு இனிமேல் தாங்களே பாத்தியஸ்தராய் ஷை சி-என்பவனிடத்தில் ஷை தஸ்தாவேஜூக்கு அவனுல் செல்லானது.

ரூபா போக பாக்கி நிற்கும் பூராதுகையும் இனிமேல் அதற்கு கூடுகிறவட்டியும். தாங்கள் நேராகவோ அல்லது கோர்ட்டு மூலமாகவோ வசூல்செய்து கொள்ளத்தக்கது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த அடமான மேடோவர் தஸ்தாவேஜ்.

சொத்து விவரம்.

(அடமான தஸ்தாவேஜில் கண்ட சொத்து.)

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—1. அடமானதாரன் தன்னுடைய பாத்தியத்தை மூன்ருவது நபருக்கு மாற்றுவது மேடோவர்.

2. அடமானதாரன் தன்னுடைய பாத்தியத்தை, அசல் தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்த நபருக்கே விட்டுவிடுவதாயிருந்தால் அது விடுதலை தஸ்தாவேஜ்.

ஸ்டாம்பு :—அடமானத்துகை ரூபாய் 1,000-க்கு மேற்படாமலிருந்தால், அதன் மேடோவரில் கண்ட அசலுக்கும் வட்டிக்கும் அசல் ஸ்டாம்பே போதுமானது. மற்ற எல்லா விஷயங்களில் ஏழரை ரூபாய் ஸ்டாம்பு போதுமானது.

---

26. Re-conveyance.

போக்கிய விடுதலை.

19 ஷு மீ உ (குடியிருப்பு வகையரா) பி-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் எழுதிக்கொடுத்த போக்கிய விடுதலைப்பத்திரம்.

19 ஷு மீ உயில் தாங்கள் ரூபாய்க்கு எனக்கு போக்கியம் வைத்து சப்ரிஜிஸ்தராபீசில் 19 ஷு மீ உயில் 1-வது புஸ்தகம் வது வால்யூம் வது பக்கம் வது நம்பராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டி

ருக்கிற தஸ்தாவேஜின்படி, என்னுடைய சுவாதீனத்திலிருக்கிற தங்களுக்கு பாத்தியப்பட்ட இதனடியில்கண்ட பூமியை நான் ௵ கெடுவுக்கு போக்கியத்திற்குப் பெற்றிருப்பதில், இப்போது ௵ கழிந்ததுபோக பாக்கி ௵ மிருக்கிறது. கெடுவுகாலம் முடிவதற்குமுன் ஷை பூமியைத் தாங்கள் சி- என்பவனுக்கு தானங்கொடுப்பதற்காக வேண்டுமென்று பிரியப்படுவதால் (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) நான் அதை ஆக்ஷேபிக்க இஷ்டமில்லாதவனாயிருப்பதினிமித்தம், இன்னம் கெடுவுகாலம் ௵ம் இருந்தாலுங் கூட, அதை ரத்துசெய்து என்னுடைய அசல் ரூபாய் ம், தங்களால் நாளது தேதியில் அடியில்கண்ட சாக்ஷிகள் முன்பாகரொக்கம் பெற்றுக்கொண்டபடியால், அடியில்கண்ட தங்களுடைய பூமியை தங்களுடைய சுவாதீனத்திலேயே விட்டுவிட்டேன். அசல் போக்கிய தஸ்தாவேஜையும் தங்களுக்கு வாப்ஸ் செய்திருக்கிறேன். இனிமேல் எனக்கு அடியில்கண்ட சொத்தைப்பற்றி யாதொரு பாத்தியமுங்கிடையாது. இந்தப்படிக்குநான் சம்மதித்து எழுதிக்கொடுத்த போக்கிய விடுதலைப் பத்திரம்.

சொத்து விவரம்.

* * * *

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு.-(a) சொந்தக்காரனுக்கே பூமியை மறு சுவாதீனஞ்செய்வது போக்கிய விடுதலை.

1. அசல் தஸ்தாவேஜ் 1,000 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் போக்கிய விடுதலை தஸ்தாவேஜுக்கு, ஏற்படும் துகைக்கு கிரய தஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்பு.

2. அசல் தஸ்தாவேஜ் 1,000 ரூபாய்க்கு மேற்பட்ட எவ்வளவு தொகையாயிருந்தபோதிலும், போக்கிய விடுதலைக்கு 15 ரூபா ஸ்டாம்புக்கு அதிகம் தேவையில்லை.

(b) போக்கிய தாரன் தன்னுடைய பாத்தியத்தை 3-வது நபருக்கு மாற்றுவது, மேடோவர்.

3. அசல் போக்கிய தஸ்தாவேஜ் 500 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால், அதன் மேடோவருக்கு அசல் ஸ்டாம்பும், மற்ற விஷயங்களில் 7—8—0 ரூபா ஸ்டாம்பும் தேவையானது.

---

27. Security Bond.

ஜாமீன் பத்திரம்.

(a) 19 -ம்வூ மீ உ (குடியிருப்பு வகையரா) பி-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் எழுதிக்கொடுத்த ஜாமீன்பத்திரம்.

வூ மீ உயில் 1-வது புஸ்தகம் வது வால்யூம் வது பக்கம் வது நம்பராக ரிஜிஸ்தர் செய்வித்துக்கொடுத்த தஸ்தாவேஜின்படி தாலூகா கிராமத்திலிருக்கும் நிலங்களை, நான் தங்களுக்கு வூ 1-க்கு ரூபாய் குத்தகை வீதம் கொடுப்பதாக வூ கெடுவுக்கு குத்தகைக்குப் பெற்றிருப்பதில், வருஷாவருஷம் குறித்த கெடுவில் குத்தகையைச் செலுத்தாவிட்டால், குத்தகை தஸ்தாவேஜில் கண்ட நிபந்தனைகளின்படி யேற்படும் தொகையை அடியில்கண்ட யென் சொந்தமான ரூபா பெறுமான ஸ்தாவர சொத்தின் மூலமாய் வசூல்செய்து கொள்ளும்பொருட்டு மேற்படி சொத்தை ஜாமீனாகக் காட்டியிருக்கிறேன். (சொத்தை ஜாமீன் காட்டுவதற்கு என்ன காரணங்கள் ஏற்படுகின்றனவோ அவைகளைக் காட்டிக்கொள்ளவும்) தங்களுக்கு ஜாமீன் காட்டிய அடியில்கண்ட சொத்தை இதுவரையிலும் யாதொரு வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லையென்பதற்கு அத்தாக்ஷியாக வில்லங்க ஸர்டிபிகேட்டும் வாங்கிக்கொடுத்திருக்கிறேன். (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஜாமீன் பத்திரம்.

ஜாமீன் காட்டும் சொத்து விவரம்.

*　　*　　*　　*

சாட்சிகள்.　　　　கையெழுத்துகள்.

எழுதியது.

(b) 19 -ம்வூ மீ உ (ஊர் பேர் வகையறு) எ-என்பவன் (ஊர் பேர் வகையறு) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த ஜாமீன்பத்திரம். சி-என்பவர் ரெங்கூனிலுள்ள உம்முடைய கடையில் மாதம் 1-க்கு 50 ரூபாய் சம்பளத்தில் பத்து வருஷம் குமாஸ்தாவாயிருந்து வேலை செய்வதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்ததின்பேரில் நீர் அவரை மேற்படி உத்தியோகஞ்செய்ய உத்திரவுகொடுத்து, அந்த உத்திரவிலே, மேற்படி சி-என்பவன் 1,000 ரூபாய் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று கண்டிருப்பதால், அவருக்குப் பதிலாக மேற்படித் தொகைக்குச் சரியாக என் அனுபோகத்திலுள்ள அடியில் விவரித்த நிலங்களை ஜாமீனாக எழுதிக்கொடுக்கிறேன். உடன்படிக்கைப்படி பத்து வருஷம் நான் ஜாமீனை மாற்றுகிறதில்லை; ஜாமீன் சொத்தின்பேரில் ஈடு முதலிய வில்லங்கங்கள் ஒன்றுமில்லை.

சொத்து விவரம்

சாக்ஷிகள். கையெழுத்து

நெட்டெழுத்து.

28. Additional or Substituted Security.

இரண்டாவது ஜாமீன்.

அடமான தஸ்தாவேஜில் கண்ட சொத்தைக் கிரயஞ்செய்து விட்டால் அதற்கு மாறாக, அடமானதாரனுக்கு யேற்படும் ஜாமீன்சொத்துக்கும் அல்லது அடமான தஸ்தாவேஜில் கண்ட சொத்து ஈடுகாட்டிய தொகைக்குப்போதாமல் மறுபடியும் அதே அடமானதாரனுக்கு அதே சொத்தின் விஷயமாக யேற்படும் ஜாமீன்சொத்துக்கும் ஏற்படும் தஸ்தாவேஜு. இதற்கு ஸ்டாம்பு, இதற்குமுன் அடமான தஸ்தாவேஜின் ஜாமீன் சொத்துக்கு ஏற்பட்ட பத்திரத்தைப்போல எழுதி அதற்குபோட்ட ஸ்டாம்பு இதற்கும் போடவேண்டும்.

விலக்குகள் :—1. அடமான தஸ்தாவேஜுகளில் யேற்படும் நபர் ஜாமீனுக்கு, அதிகமான ஸ்டாம்பு தேவையில்லை.

2. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருடைய வேலையின்பொருட்டு கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொடுக்கும் ஜாமீன் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு தேவையில்லை.

3. கவர்ன்மெண்டாரிடத்தில் நிலவிருத்தி சம்பந்தமான ஆக்ஞை அனுசரித்து வாங்கும் கடன் துகைக்கும், அதற்கேற்படும் ஜாமீன் பத்திரங்களுக்கும் ஸ்டாம்பு தேவையில்லை.

---

29. Release Bond.

விடுதலைப்பத்திரம்.

விடுதலைப்பத்திரம் என்பது :—ஒருவனுக்குள்ள யாதொரு பாத்தியதையை வேண்டாமென்று நீக்கிக்கொள்வது. ஸ்டாம்பாக்ட் (55-வது ஆர்ட்டிகில்.)

(a) 192 ஸு மீ உ (ஊர் பேர் வகையரா) எ-என்பவன் எழுதிக்கொடுத் தவிடுதலைப்பத்திரம் என்னவென்றால் .—என்னுடைய அண்ணர்

களாகிய பி சி-என்பவர்கள் தகுந்த வரும்படியில்லாதவர்களாயும் பெரிய சம்சாரியாயுமிருப்பதாலும், இதனடியில்கண்ட எங்களுடைய பிதுரார்ஜிதசொத்து மிகச்சொற்பமாயிருப்பதாலும் நான் ஏகாங்கியாயிருப்பதால் எனக்கு அந்தச்சொத்தில் அபேட்சையில்லாததாலும் நான் எனக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தை அவர்களே வைத்துக்கொள்ள வேணுமென்று விட்டுவிட்டபடியாலும் இனிமேல் அந்தசொத்து எனக்குத் தேவையில்லையென்றும், அதன்பேரில் ஏதாவது வில்லங்கங்களிருந்தால் அது என்னைக்கட்டுப்படுத்தக்கூடாதென்றும் இதனால் நான் விலகிவிட்டேன்.

சொத்து விவரம்.

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

(b) 19 ஷ ௴ ௨ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு குடியிருப்பு வகையரு) பி-என்பவன் எழுதிக்கொடுத்த விடுதலை தஸ்தாவேஜு.

நான் உனக்கு அண்ணன் பெண்ஜாதியாயிருப்பதினாலும், எனக்கு ஆண்சந்ததியேற்படாததினாலும், உனக்குத் தமையனும் எனக்குப் புருஷனுமான சி-என்பவன் இறந்துபோகுங்காலத்தில் எனக்கு அடியில்கண்ட பூமிகளை ஜீவனாம்சத்திற்கு விட்டுவிடவேண்டுமென்று வாக்களித்தவண்ணம் நீயும் சம்மதப்பட்டு ஷை பூமிகளை எனக்கு ஜீவனாம்சத்திற்குவிட்டு 19 ஷ ௴ ௨யில் பத்திர மெழுதிக்கொடுத்து 19 -ம்ஷ ௴ ௨யில் 1-வது புஸ்தகம் -வது வாலம் வது பக்கம் வது நம்பராக ரிஜிஸ்தர் செய்வித்துக்கொடுத்திருப்பதால், மேற்படி பூமிகளை நான் குத்தகை முதலானவைகளுக்குக் கொடுத்து பாதுகாத்துவரஏன்றால் சாத்தியப்படாததினால், அடியில்கண்ட சாக்ஷிகள் முன்பட உன்னால் நாளது ௨யில் ரூ. பெற்றுக்கொண்டு அடியில் கண்ட சொத்துகளின்பேரில் எனக்கேற்பட்டிருந்த ஜீவனாம்சபாத்தியத்தை இதன் மூலமாய் விட்டுவிட்டேன். ஷை தஸ்தாவேஜையும் உனக்கே கொடுத்துவிட்டேன். (எவ்விதமான பாத்தியம் விடப்படுகிறதோ அவ்விதமான பாத்தியத்தின் விடுதலை செய்வதற்குரிய காரணங்களைக்காட்டி ஏற்படும் ஷரத்துக்களையும் எழுதிக்கொள்ளவும். இனிமேல் ஷை சொத்துக்களைப்பற்றி எனக்கு யாதொரு பாத்தியசம்பந்தமில்லை. ஷை சொத்துக்களை நீயே தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவேண்டியது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஜீவனாம்ச விடுதலை தஸ்தாவேஜ். (நெ. 32. ஜீவனாம்ச பத்திரத்தை கவனிக்கவும்.)

சொத்து விவரம்.

* * *

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

---

30. Gift.

தானசாசனம்

தானசாசனம் என்பது:—பிரதிப்பிரயோசனமின்றி, ஒருவன் தன் சொத்தை மற்றொருவருக்கு மனப்பூர்வமாய் தானமாகக்கொடுத்து எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜ். தானங்கொடுக்கிறவனுடைய ஜீவித காலத்தில் அவனுக்கு கொடுக்க சக்தியிருக்கும்போதே தானம் பெறுகிறவனாவது அவன் பட்சத்திலாவது அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும். தானசாசனம் எவ்வளவு குறைந்த விலையுள்ளதாயிருந்தபோதிலும் கட்டாயம் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். இவைகளுக்கு ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 23 நெ. ஒப்படைப்பத்திரத்திற்குண்டான தீர்வை.

குறிப்பு:—விக்கிரயம், தானசாசனம் இவைகளில் கண்டசொத்து குயிட்ரெண்ட் ஏற்பட்ட இனமாகவாவது, கவர்ன்மெண்டு நிலமாகவாவது இருக்கும்பட்சத்தில், ரெவினியூ இலாகாக்கணக்குகளில் அதை விற்றுவிட்டவன் பெயரை நீக்கிவிட்டு, வாங்கிக்கொண்டவன் பேரால் தாக்கல்செய்துகொள்ள மாமூலாய் தாசில்தாரவர்களாபீசில் கொடுக்கவேண்டிய டிரான்ஸ்பர் விண்ணப்பங்களை, ரெஜிஸ்டர் காலத்தில் ரெஜிஸ்ட்ரார் முன்னிலையில் கையெழுத்துச்செய்து அவர்களிடத்திலேயே தாக்கல்செய்தால், அதை அந்த ரெஜிஸ்ட்ரார் அந்தந்த தாசீல்தாருக்கு அனுப்புவார். அந்த விண்ணப்பம் எழுதவேண்டிய பாரங்கள் ரெஜிஸ்ட்ரராபீசில் அகப்படும். டிரான்ஸ்பர் விண்ணப்பங்கள் ஸர்க்கார் பூமிகளைக்குறித்ததானால் ஒரு அணா கோர்ட்டுபீஸ் ஸ்டாம்பு ஒட்டவேண்டும். இவ்வுடன்படிக்கைகளை தாக்கல்செய்ய, விற்பவனாவது வாங்குகிறவனாவது சுயமாய் ஆஜராக முடியாமற்போனால் 1 ரூ. கோர்ட்டுபீஸ் ஸ்டாம்பு ஒட்டி கிராமமுன்சீப் முன்பாக கையெழுத்து செய்யப்பட்ட வக்காலத்து நாமாப்படி அதிகாரமடைந்திருக்கும் ஏஜண்டு மூலமாய் தாக்கல்செய்யலாம்.

(a) 19 -ம்ஹூ மீ உ (ஊர் பெயர் வகையரா) எ-என்பவன் (ஊர் பெயர் வகையரா பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த தானசாசனம் என்னவென்றால்:—நான் சொந்தமாய் அனுபவித்து என்பேரால் பட்டாவாயிருக்கிற சொத்துக்களில், (நான்கெல்லை) இதற்குட்பட்ட அயன் சர்வே 25 நெ. டி. லெட்டர் நஞ்சை ஏகர் 1, செ-15, விஸ்தீர்ணமுள்ள நிலத்தை என்னுடை

ஷஷ்டியப்த பூர்த்திதினம் உமக்கு தானம்செய்தபடியால், நீரும் உம்முடைய சந்ததியாரும் மேற்படி நிலத்தை தான விக்கிரய யோக்கியமாக ஆண்டனுபவித்து வருவீர்களாகவும். இந்தப்படி நான் சம்மதித்து சுவேச்சையாய் எழுதிக்கொடுத்தேன்.

சாட்சிகள். கையெழுத்து.

செட்டெழுத்து.

(b) 19 -ம்வரு மீ உ (குடியிருப்பு வகையரா எ-என்பவனுக்கு குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த தானசாசனம்.

எனக்கு விருத்தாப்பிய காலமாய் விட்டதினாலும், இனிமேல் நான் நீடித்தகாலம் ஜீவித்திருப்பேனென்ற நம்பிக்கையில்லாததினாலும், எனக்கு நற்கதி கிடைக்கவேணுமென்ற யெண்ணத்தினாலும், (ஏற்படுகிற சந்தர்ப்பங்களை வேண்டியபடி காட்டிக்கொள்ளவும்) நீர் சன்மார்க்கமுள்ள பிராமணனாயிருப்பதினிமித்தம், உமக்கு அடியில்கண்ட ரூ பெறுமான ஸ்தாவர சொத்துக்களை தானமாகக்கொடுத்துவிட்டேன். இனிமேல் மேற்படி பூமிகளுக்கு சர்க்கார் தீர்வை முதலானதும் நீரே செலுத்திக்கொள்ளவேண்டியது. ஷை பூமியை நாளது தேதியில் உம் சுவாதீனமும் செய்திருக்கிறேன். மேற்படி பூமிக்கு உம்பெயரால் பட்டாவாகும்படி பட்டா ராஜிநாமாவும் செய்துகொடுப்பேனாகவும்; ஷை பூமிகளை நீரே தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவேண்டியது; இனி ஷை சொத்துக்களைப்பற்றி எனக்காவது என்னுடைய வார்சுகளுக்காவது யாதொரு பாத்திய சம்பந்தமுமில்லை. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த தானசாசனம்.

சொத்து விவரம்

௦௦ ௦௦ ௦௦ ௦௦

சாக்ஷிகள். கையெழுத்து.

செட்டெழுத்து.

குறிப்பு :—1. தானசாசனங்களுக்கு, சொத்தின் மொத்தத்தை அனுசரித்து கிரயப்பத்திர ஸ்டாம்பு போடவேண்டியது.

2. சொத்து பாத்தியமும், சவரக்ஷணை பாத்தியமும் அல்லது சம்மந்தமும் ஏற்படும் விஷயங்களில் தானசாசனம் செய்வதற்கு பதிலாய் செட்டில்மெண்டு பத்திரம் எழுதிக்கொள்ளலாம். (இதற்கடுத்து வரும் செட்டில்மெண்டு பத்திரத்தைப்பார்க்க.)

3. தானசாசனத்தில் கண்ட சொத்தை உடனே சுவாதீனம் செய்துகொள்ளவேண்டியது; இல்லாவிட்டால் சிவில் நடவடிக்கைகளில் ஆதாரமற்றதாய் ஏற்படக்கூடும்.

31. Settlement.

செடில்மெண்டு பத்திரம்.

(a) 19 -ம்ஆ ௴ ௳ (ஊர்பேர் வகையரா) ஏ-பி-சி-என்கிற நாம் மூன்று சகோதரர்களும் எழுதிக்கொண்ட செடில்மெண்டு பத்திரமென்னவென்றால், இன்ன ஜில்லா தாலூகா கிராமத்தில் நாம் மூவரும் சொந்தமாய் அனுபவித்து வருகிற இதனடியில் கண்ட நிலங்களின் வரும்படியைக்கொண்டு (ஊர் பேர் வகையரா) தேவஸ்தானத்தில் பிரதிபட்சம் பிரதோஷத்தன்று சுவாமிக்கு அபிஷேகாதிகள்செய்து சாயங்காலத்தில் ரிஷபவாகனத்தில் எழுந்தருளச்செய்வதற்குப் பிடிக்கும் செலவை செலவழித்துக்கொண்டு வருவதற்காக ஷை சொத்துக்களை நாம் மூவரும் சம்மதித்து நம்முடைய பாகத்தில் சேராமல் ஒதுக்கிவைத்திருக்கிறோம். நமக்குள் ஒத்துவராமல் வேறாகப் போகும் பட்சத்தில், நாம் மூவரும் வருஷம் ஒருவராக ஷை சொத்துக்களின் வரும்படியை வசூல்செய்து ஷை பிரதோஷக்கட்டளையை நடத்தவேண்டியது. ஷை சொத்திலிருந்து வரும் வரும்படியில் எவ்வளவையாவது நாமாவது நம்முடைய வார்சுகளாவது எடுத்துச் சொந்தமாய் உபயோகித்துக்கொள்ள எவ்வித பாத்தியமுமில்லை. ஷை கட்டளையை நாம் சரிவர நடத்த நமக்கு சவுகரியப்படாவிட்டால், தேவஸ்தான அதிகாரியைக்கொண்டாவது, அல்லது நம்மால் ஏற்படுத்தப்பட்ட வேறே தர்மகர்த்தராலாவது ஷை தர்மத்தை சரிவர நடத்தவேண்டியதாயும் ஷை சொத்து நாமும் நம்முடைய வார்சுகளின் மேற்பார்வையில் இருக்கவேண்டியதாயும் நாம் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக்கொண்ட செடில்மெண்ட் பத்திரம்.

சொத்து விபரம்.

சாக்ஷிகள். ஏ. பி. சி.

எழுதியது. கையெழுத்துகள்.

(b) 19 ஆ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த செட்டில் மெண்டு பத்திரம்.

உன்னை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று ஏற்பாடுசெய்ததில் உன் பெற்றோர் உனக்கு ஓர் ஆதரவு செய்துகொடுக்கவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டதினிமித்தம், (என்ன காரணங்கள் ஏற்படுகின்றனவோ அவைகளைக் காட்டிக்கொள்ளவும்) என் பாகத்திற்குப் பிரிந்து நான் அனுபவித்து வரும் சொத்துக்களில் அடியில்கண்ட ரூ. பெறுமான சொத்தை உனக்கு ஆதாரமாகக் கொடுத்திருக்கிறேன். ஷை சொத்தை நாளது தேதியில் உன்னுடைய சுவாதீனமும் செய்துவிட்டேன். ஷை பூமியின்பேரில் ஷை ஊரிலிருக்கும் சி-

என்பவனுக்கு ஏற்பட்டிருக்கும் ரூ. கடனை கெடுவுக்குள் தீர்த்து ஷை அடமானபத்திரத்தை ரத்துசெய்து வாப்ஸ் வாங்கிக்கொடுக்கவுள்ளவன். (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) உன் ஜீவதிசைக்குப்பின் ஷை சொத்து எனக்காவது அல்லது நம்முடைய வார்சுகளுக்காவது சேரத்தக்கது. (நிபந்தனை வேண்டியிருந்தால் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த செட்டில்மெண்டு பத்திரம்.

சொத்து விபரம்.

* * * *

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—1. தஸ்தாவேஜில் ஏற்படும்சொத்தின் மொத்தத்திற்கு அடமான பத்திர ஸ்டாம்பு போடவேண்டியது.

2. சீதனங்கொடுக்கும் சாசனங்களுக்கு, சொத்து மொத்தத்தின்பேரில் பாட்டம்ரி பாண்டுக்குண்டான ஸ்டாம்பு போடவேண்டியது. (ஸ்டாம்பு ஆக்ட் ஷெடியூலில் 53-வது பொருத்த ஆதாரவைப் பார்க்கவும்.)

3. விவாககாலத்தில் முகம்மதியருக்குள் ஏற்படும் சீதன தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு தேவையில்லை.

4. செட்டில்மெண்டு பத்திரத்தை ரத்துசெய்வதாயிருந்தால் அசல் தஸ்தாவேஜில் சம்பந்தப்பட்ட தொகை அல்லது சொத்தின் மதிப்புக்குச் சரியானதொகைக்கு 16-வது பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. ஆனல், அப்படிப்பட்ட தீர்வை ரூ. 15 மேற்படக் கூடாது.

32. Maintenance Deed.

ஜீவனும்ச பத்திரம்.

ஜீவனும்சம் :—யாதொருவருக்கு அவருடைய ஜீவகாலம் வரையிலாவது, மற்றப்படியாவது, குறிப்பிட்ட காலங்களில் இவ்வளவு தொகை கொடுக்கிறதென்று சம்மதித்து எழுதிக்கொடுக்கிற தஸ்தாவேஜுக்கு ஜீவனும்சம் என்று பெயர். ஜீவனும்சசொத்து ரூ. 100-க்கு மேற்பட்ட ஸ்தாவர சொத்தாயிருந்தால் ரெஜிஸ்டர் செய்வது அவசியம். காலநிர்ணயம் ஜீவகாலம் வரையில் ஏற்பட்டிருந்தால் 12-

ஷுத்துக்குள்ள தொகையின்பேரிலும், கால நிர்ணயம் நிச்சயமாய் தெரியாதிருந்தால் 20-ஷுத்துக்குள்ள துகையின்பேரிலும், கால நிர்ணய மேற்பட்டிருந்தால் அந்தக் காலத்துக்கு ஏற்பட்ட மொத்த துகையின்பேரிலும் 15-ரூ. பாண்டுக்குண்டான ஸ்டாம்பு தீர்வை கொடுக்கவேண்டும்.

(a) 19 ஷு மீ உ (ஊர் பேர் வகையரா ஏ-என்பவன், ஊர் பேர் வகையரா) பி-என்பவளுக்கு எழுதிக்கொடுத்த ஜீவனும்சப் பத்திரம் (என்னவென்றால் :—

தங்கள் பர்த்தாவும் என் தமையனுமாகிய சி-என்பவர் இறந்துபோன இரண்டு வருஷத்திற்குள்ளேயே தனியாக விருக்கவேண்டுமென்று தாங்களிஷ்டப் படுகிறபடியால் என்னுடைய பிதுரார்ஜிதமானதும் நான்சொந்தமாய் அனுபவித்துவருகிற சொத்துக்களில் இதனடியில்கண்ட சொத்தை தங்களுக்கு ஜீவனும்சத்தின்பொருட்டு தங்கள் சுவாதீனத்தில் விட்டுவிட்டபடியால் ஷை சொத்தின் வரும்படியை எவ்விதமாயாவது தாங்களடைந்து அதற்குள்ள சர்க்கார் தீர்வையைத் தாங்களே செலுத்திக்கொண்டு தங்களுடைய ஜீவியகாலம் வரையில் அதைத் தங்கள் அனுபோகத்திலேயே வைத்திருந்து பிறகு நானாவது என் வார்சாவது அந்த சொத்தை அடையவேண்டியது. ஷை சொத்தை எவ்வித பாத்தியத்திற்கும் உட்படுத்த தங்களுக்கு சுவாதீனங்கிடையாது. ஷை சொத்தில் யாதொரு விதமான வில்லங்கங்களும் இல்லை.

சொத்து விவரம்

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

(b) 19 -ம்ஷு மீ உ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவளுக்கு, (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த ஜீவனும்ச பத்திரம்.

நீ எனக்குத் தமயன் பெண்ஜாதியாயிருப்பதினாலும், உனக்கு ஆண் சந்ததியில்லாததினாலும், இது வரையிலும் ஏக குடும்பமாயிருந்து வந்து இப்பொழுது அப்படியிருக்கச் சரிப்படாததினிமித்தம், (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) பஞ்சாயத்தார் பைசல்படிக்கு உன் ஜீவனும்சத்திற்காக அடியில்கண்ட சொத்துக்களை உனக்குக் கொடுத்திருக்கிறேன். ஷை சொத்துக்களில் வரும் வரும்படியை மாத்திரம் உன் ஜீவதிசைவரை அனுபவித்துக்கொண்டு வரவேண்டியது. உன் ஜீவதிசைக்குப்பின் ஷை சொத்தை என்வசம் சேர்த்துக்கொள்ளவுள்ளவன். ஷை சொத்தை பராதீனஞ்செய்ய உனக்கு யாதொரு பாத்தியமுங்கிடையாது. ஷை சொத்துக்கு நீயே சர்க்கார் தீர்வை முதலானது செலுத்திக்கொண்டுவர

வேண்டியது. (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஜீவனாம்ச பத்திரம்.

சொத்து விபரம்.

* * * *

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—பிற்காலத்தில் ஜீவனாம்சம் பெறுவதற்கான சுதந்தரம் எவ்விதமாக ஏற்படுவதாயிருந்தாலுஞ்சரி அல்லது கிடைத்திருந்தாலுஞ்சரி தீர்மானிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி அந்த சுதந்தரத்தை எவ்விதமாகவேனும் பராதீனம் செய்யக்கூடாது. ஆனால், பாக்கியாய்ச் சேர்ந்திருக்கும் ஜீவனாம்ச நிலுவைத் தொகையை இஷ்டப்படி வேறொருவருக்கு பாத்தியப்படுத்தலாம்.

33. Rectification Deed.
பிழைதிருத்தல் பத்திரம்.

---

19 -ம்வ௵ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) **ஏ**-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) **பி**-என்பவன் எழுதிக்கொடுத்த பிழைதிருத்தல் பத்திரம்.

ரிஜிஸ்தரேஷன் டிஸ்திரிக்ட்டு சப்-டிஸ்திரிகட்டு கிராமத்திலிருக்கும் (இன்ன) சொத்தை 19 -ம்வ௵ ௴ ௳யில் தங்களுக்கு ரூபாய்க்கு அடமானம் வைத்து 19 -ம்வ௵ ௴ ௳யில் ரிஜிஸ்தராபீசில் 1-வது புஸ்தகம், -வது வாலம் -வது பக்கம், -வது நம்பராக ரிஜிஸ்தர் செய்வித்துக்கொடுத்த பத்திரத்தில் (இன்னஜாகாவுக்கு) (இன்ன) ஜாகாவை கைப்பிசகாய் மாற்றி எழுதப்பட்டிருப்பதினால், பிசகாயிருக்கிற ஜாகாவைத் தள்ளி எனக்கு பாத்தியப்பட்ட என் சொந்தமான மேற்படி கிராமத்திலுள்ள (இன்ன) ஜாகாவை ஷை ரிஜிஸ்தரான அடமான தஸ்தாவேஜுக்கு ஆதாரமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டியது. அதாவது ஷை அசல் தஸ்தவேஜில் கண்ட (இன்ன) ஜாகா நீங்கலாக பாக்கி ஜாகாக்களும், இப்பொழுது மாற்றி எழுதப்பட்ட (இன்ன) ஜாகாவும் ஷை அடமான தஸ்தாவேஜின் தொகைக்கு ஈடாயிருக்கத் தக்கது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த பிழைதிருத்தல் பத்திரம்.

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—1. அசல் பத்திர ஸ்டாம்பைக் கவனிக்காமல், பிழை திருத்தல் பத்திரத்திற்கு, 1 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது.

2. அசல் தஸ்தாவேஜில்கண்ட தொகைக்கு, ரிஜிஸ்தரேஷன் கட்டணம் வேண்டும்.

---

34. Deed of Trust.

சொத்து பரிபாலன பத்திரம்.

19 -ம்வருஷ ஸ்ரீ வ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவனுக்கு (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த திரஸ்டு பத்திரம்.

எனக்கு விர்த்தாப்பிய காலமாய்விட்டதினாலும், என் குமாரர்கள் (இத்தனை) வயதுள்ள ஏ-(1) (இத்தனை) வயதுள்ள பி-(2) ஆகிய இருவர்களும் மைனர்களாயிருப்பதினாலும், எனக்கு வேறு உதவியில்லாததினாலும், (ஏற்படும் காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) நீ எனக்கு நம்பிக்கையுள்ளவனாயிருப்பதினாலும், என்னுடைய நெருங்கிய பந்துவாயிருப்பதினாலும், (ஏற்படும் சொந்தத்தைக் காட்டிக்கொள்ளவும்) எனக்கு பாத்தியப்பட்ட அடியில்கண்ட ரூபாய் பெறுமான சொத்துக்களையும், ரொக்கம் ரூபாய் ம், நாளது தேதியில் உன்வசம் ஒப்பித்திருக்கிறேன். ஆகையால், இன்றுமுதல் ஷை சொத்துக்களை உன்னுடைய சொந்த சொத்துகளைக்களைப்போல பாவனைசெய்து பூமிகளை குத்தகை முதலானவைகளுக்குக்கொடுத்து, வருஷாவருஷம் வசூலாகும் வரும்படியை வட்டிக்குக் கொடுத்து, ஷை மைனர்கள் பெயரால் தகுந்த ஆதரவுகளைச்செய்து வைக்க வேண்டியது; மேற்படி சொத்துக்களை விருத்திசெய்துவருவது உன்னைச்சேர்ந்தது ; சிவில், கிரிமினல் கோர்ட்டுகளில் ஷை சொத்துக்களைக்குறித்து நேரிடும் சகல நடவடிக்கைகளும் உன்னைச்சேர்ந்தது. அப்படி நேரிடும் சிலவுகளை, ஷை பூமிகளின் மூலமாய்வரும் வரும்படியைக்கொண்டு சிலவுசெய்து கிரமமாய் கணக்குகள் வைத்திருக்கவேண்டியது. (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) ஷை மைனர்கள் மேஜர்கள் ஆனவுடன் ஷை சொத்துக்களையும், அவைகளினின்றும் விருத்தியாகும் பின் பலனையும் சரியான கணக்குகளுடன் மத்தியஸ்தர்களை வைத்துக்கொண்டு என் குமாரர்கள் வசம் ஒப்பித்துவிடவேண்டியது. (ஏற்படும் நிபந்தனைகளைக் காட்டிக்கொள்ளவும்) ஷை ரொக்கம் ரூபாய் யும் நம்பிக்கையுள்ளவர்களுக்குத் தகுந்த ஆதரவின்பேரில் வட்டிக்குகொடுத்து, அவ்வகை அசல்வட்டியையும் ஷை மைனர்கள் மேஜரானவுடன் அவர்களுடைய கலியாணகாரியங்களுக்காக நீயே முன்னின்று சிலவு செய்துவிடவேண்டியது. மைனர்கள் விஷயத்தில் ஏற்படும் சிலவுக்குக் கிரமமாய் கணக்குகள் ஏற்படுத்திவைத்திருக்கவேண்டியது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து சுவேச்சையாய் எழுதிக்கொடுத்த திரஸ்டு பத்திரம். (சொத்தை ஒருவனிடம் ஒப்பிப்பதற்குரிய காரணங்

களையும், ஒப்புவித்தபின் சொத்தை அவன் விருத்தி செய்யவேண்டியதற்குரிய விஷயங்களையும், விருத்தியாகும் லாபத்தை உபயோகம் செய்யவேண்டிய விஷயங்களையும், ரத்துசெய்ய அதிகாரத்தையும், அவைகளைக்குறித்த நிபந்தனைகளையும் ஏற்படும்விதம் காட்டிக்கொள்ளவும் :—முக்கியமாக கோவில்கள், உயில்கள் விஷயமாக ஏற்படும் திரஸ்டு பத்திரங்களும் இவ்வண்ணமே எழுதவேண்டியது.)

சொத்து விவரம்.

* * * *

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

ஸடாம்பு :—1 திரஸ்டு பத்திரத்தில் ஏற்படும் சொத்தின் மொத்தத்திற்கு 16-வது பாட்டம்ரி பத்திர ஸ்டாம்பு போடவேண்டியது. ஆனல் எவ்வளவு மொத்தம் ஏற்பட்டாலும் 22—8—0 ரூபாய் ஸ்டாம்பு தீர்வைக்கு அதிகம் தேவையில்லை.

2. திரஸ்டு பத்திரத்தின் விடுதலை அல்லது ரத்துப்பத்திரத்திற்கு, ஏற்படும் தொகைக்கு 16-வது பாட்டம்ரிப் பத்திரத்திற்குண்டான ஸ்டாம்பு போடவேண்டியது. ஆனல் எப்படிப்பட்ட விஷயத்திலும் 15 ரூபாய் ஸ்டாம்புக்கு அதிகம்தேவையில்லை. (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 64-வது பிரிவு எ. பி. பார்க்க.)

---

35. Partnership.

கூட்டுப்பங்கு ஆதரவு.

19 ஷு ஸ்ரீ ௳ (குடியிருப்பு வகையரா) எ. (1), (குடியிருப்பு வகையரா) பி. (2), (குடியிருப்பு) வகையரா) சி. (3) ஆகிய நாங்கள் மூவரும் எழுதிக்கொண்ட கூட்டுப்பங்கு ஆதரவு.

விஷயங்கள்.—நாம் ஏற்பாடு செய்துக்கொண்டபடி 1, லக்கமிட்ட எ-என்பவன் ரூபாயும், 2, லக்கமிட்ட பி என்பவன் ரூபாயும், 3, லக்கமிட்ட சி-என்பவன் ரூபாயும், ஆக கைமுதல் ரூபாய் -ம் சேர்த்து

ஸ்ரீ ௳-முதல் ஷுகெடுவுவரை (இன்ன) வியாபாரத்தை நடத்துவதற்காக இதனல் மூவரும் கட்டுப்பட்டுள்ளவர்கள்.

2. ஷெ வியாபாரத்தை நடத்த -வது வார்டு தெருவில் நெம்பர் லக்கமிட்ட கடைவீட்டை மாதம் 1-க்கு ரூபாய் வாடகை வீதம் ஷுங்களுக்கு எம்-என்பவனிடத்தில் வாடகைக்கு வாங்கக்கடவோம்.

3. நமது கம்பெனிக்கு இன்றுமுதல் (இன்ன) பெயர் வழங்கிவரத்தக்கது.

4. நம் மூவரில் எ-என்பவர் மானேஜராகவிருந்து இதர கம்பெனிகளில், நம் கம்பெனி பெயருக்கு சரக்குகளைத் தருவிக்கவும், அவர்கள் விஷயத்தில் வரவு சிலவுகளை நடத்திவரவும், நிலுவை பாக்கிகளை வசூல் செய்யவும், சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் கம்பெனிக்குச்சேர்ந்த சகல நடவடிக்கைகளையும் தன் பெயரால் நடத்தவும், இதனால் அதிகாரம் பெற்றவராவார். (ஏற்படும் விஷயங்களைக் காட்டிக்கொள்ளவும்.)

5. நமது கம்பெனிக்குச்சேர்ந்த கணக்குகளைக் கிரமமாய் எழுதுவதற்கு மாதம் 1-க்கு (இத்தனை) ரூபாய் சம்பளத்தில் ஓர் குமஸ்தாவையும், மீ 1-க்கு (இத்தனை) ரூபாய் சம்பளத்தில் ஓர் சேவகனையும் ஏற்பாடுசெய்துக்கொள்ளவேண்டியது.

6. வருஷாவருஷம் மாதத்தில் நமது கம்பெனிக்குச்சேர்ந்த வரவு சிலவு கணக்குகளை நாம் மூவரும் சேர்ந்து பரிசோதித்து தணிக்கை செய்வதற்கு நம்மில் மானேஜராகிய எ-என்பவர் ஷை வரவு சிலவு கணக்குகளைத் தயாராய் வைத்திருக்கவேண்டியது.

7. மாதந்தோரும் வீட்டுவாடகையும், குமஸ்தாவின் சம்பளத்தையும், ஏற்படும் சிப்பந்திகளின் சிலவுகளையும் நம்மில் மானேஜரே கிரமமாய் பட்டுவாடா செய்து, ஏற்பட்ட புஸ்தகத்தில் அவரவர்களுடைய கையெழுத்துக்களையும் கிரமமாய் வாங்கி வைத்துக்கொள்ளவேண்டியது.

8. நம்மில் எ-என்பவர் மானேஜராயிருந்து சகல நடவடிக்கைகளையும் நடத்திவருவதினால் அவர் மாதந்தோரும் (இத்தனை) ரூபாய் சம்பளம் எடுத்துக் கொள்ளவேண்டியது.

9. வருஷக்கடைசியில் குறித்த காலத்தில் வரவு கணக்குகளை தணிக்கை செய்து,கையிருப்புக் காட்டுங்காலத்தில் அவரவர்கள் போட்ட தொகைக்கு மாதம் 1-க்கு 100-க்கு (இத்தனை) ரூ. வீதம் வட்டியாகக் கூடும்வட்டித்தொகையை அவரவர்கள் பங்கு வீதத்திற்கேற்றபடி எடுத்துக்கொள்ளவேண்டியது.

10. மீதி லாபமிருக்கும் பக்ஷத்தில் அதை நபர் 1-க்கு (இத்தனை) ரூ. வீதமாக பங்கு வீதத்திற்கேற்றபடி பாகம்செய்து கொள்ளவேண்டியது. (ஏற்படும் பங்கு வீதங்களைக் காட்டிக்கொள்ளவும்.)

11. பங்கு வீதத்திற்குரிய லாபம் அல்லது வட்டித்தொகை கையிருப்பில் லாமல் நிலுவையிலிருக்கும் பக்ஷத்தில், அந்தத்தொகை வசூலானவுடன் ஏற்பட்ட வீதம் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். (ஏற்படும் வண்ணம் காட்டிக் கொள்ளவும்.)

12. லாபமின்றி நஷ்டம் வந்திருக்கும் பக்ஷத்தில் கிரமமாய் ஏற்பட்ட மேற்படி சிலவுகளை நீக்கி, பாக்கி ஏற்படும் நஷ்டத்தை மூவரும் ஏற்பட்ட பங்கு வீதம் ஒத்துக்கொள்ளக் கட்டப்பட்டவர்கள்.

13. வியாபாரத்திற்குப் பணம் போதாவிட்டால் நம்மில் எ. சி-என்பவர்கள் மட்டும் போடவேண்டியது. அப்படி அதிகமாகப்போடும் தொகைக்கு மாதம் 1-க்கு 100-க்கு (இத்தனை) ரூபாய் வீதம் வட்டியும், (இத்தனை) ரூபாய் வீதம் லாபமும் எடுத்துக்கொள்ள பாத்தியமுள்ளவர்கள். (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்.)

14. குறித்த கெடுவுரை நாம் வியாபாரத்தைக் கிரயமாய் நடத்திவரக் கடமைப்பட்டவர்கள். கெடுவுக்குமுன் நம்மில் மூவரில் யாராவது இஷ்டமில்லாமல் விரோதப்படும் பக்ஷத்தில் அப்படிப்பட்டவர்கள் தங்கள் பங்குவீதத்திற்குரிய வட்டியையும், லாபத்தையும் இழந்துபோவதுடன், தங்கள் பங்கு வீதத்திற்குரிய அசல் தொகையைக் கம்பெனி கலைவதற்குரிய கெடுவுகாலம் முடிந்தவுடன் பெற்றுக்கொள்ளவேண்டியது. (ஏற்படும் நிபந்தனைகளைக் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நாம் மூவரும் சம்மதித்து எழுதிக்கொண்ட கூட்டுப்பங்கு ஆதரவு.

சாட்சிகள். கையெழுத்துகள்.

எழுதியது.

ஸ்டாம்பு :—1. ஏற்பட்ட தொகை ரூபாய் 500-க்கு மேற்படாவிட்டால் 5 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது.

2. மற்ற எல்லா விஷயங்களிலும் 20 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது. (ஸ்டாம்பு ஆக்ட் ஷெடியூல் 47, **(a)**, **(b)**, பார்க்கவும்.)

கூட்டுப்பங்கு பிரிவினை ஆதரவு:

எப்படிப்பட்ட விஷயத்திலும், கூட்டுப்பங்கு பிரிவினை ஆதரவுக்கு 10 ரூபாய் ஸ்டாம்பு போடவேண்டியது.

---

36. Special Power of Attorney.

ஸ்பெஷல் வக்காலத்து நாமா.

ஒரே ஒரு காரியத்தைப்பற்றி அல்லது ஒன்று அல்லது பல தஸ்தாவேஜுகளை ரெஜிஸ்டர் செய்ய அதிகாரங்கொடுத்தல்.

ஹு ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா) எ-என்பவனுக்கு, குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த ஸ்பெஷல் வக்காலத்து நாமா.

(இன்ன) தாலூக்கா (இன்ன) கிராமத்திலிருக்கும் (இன்ன) சொத்துக்களை (குடியிருப்பு வகையரா) எம்-என்பவருக்கு ரூபாய்க்கு ஹு ஸ்ரீ உயில் நான் எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜை ரிஜிஸ்தர் செய்து கொடுக்க ரிஜிஸ்தராபீசர் முன்னிலையில் நான் நேராய் ஆஜராகி ஒத்துக்

கொள்ள சாத்தியமில்லாததினால், நீர் ஷை ரிஜிஸ்தராபீஸர் முன்னிலையில் எனக்காக ஆஜராகி ஷை தஸ்தாவேஜின் ரிஜிஸ்தரேஷனை ஒத்துக்கொள்ள இதனால் உமக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறேன்; ஷை விஷயத்தில் நீர் நடத்தும் நடவடிக்கைகளை நான் நேரில் செய்ததைப்போலவே ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டவன். இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஸ்பெஷல் வக்காலத்து நாமா.

கையெழுத்து.

குறிப்பு :—இதற்கு ஸ்டாம்பு 12 அணா.

37. General Power of Attorney.

பொது வக்காலத்து நாமா.

ஒருவன் தனக்காக தன்சொத்தைப்பார்த்துவரவும் அல்லது வியாபாரம் முதலியவைகளை நடத்திவரவும் வேறொரு நபருக்கு எழுதிக் கொடுக்கிற அதிகாரப்பத்திரத்துக்கு பொது வக்காலத்து நாமா என்று பெயர்.

பொது வக்காலத்து நாமாவில் ஏற்படும் காரியங்களை யெல்லாம் வரிசைக்கிரமமாக காட்டி, அவைகளில் அதிகாரம் பெற்ற நபர்கள் விவகரிக்கும் வண்ணம், மேற்படி வாசகத்தை அனுசரித்து எழுதிக் கொள்ளலாம்.

குறிப்பு :—1. வக்காலத்து நாமாவை எழுதிக்கொடுக்கும் நபர் தான் நிலையாயிருக்குமிடம் எந்த ரிஜிஸ்தரேஷன் எல்லைக்குட்பட்டிருக்கிறதோ அந்த ரிஜிஸ்தராபீசரிடம் தான் உறுதி கையெழுத்து செய்துக்கொள்ளலாம்.

2. வக்காலத்து நாமா எழுதிக்கொடுத்த தேதியிலேயேதான், ரிஜிஸ்தராபீசர் முன்னிலையில் கையெழுத்து உசிதம்போலச் செய்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் அது செல்லத்தக்கதல்ல. தேதிக்கு இடம்விட்டு அத்தாக்ஷி செய்யுங்காலத்தில் தேதி போட்டுக்கொள்ளுவது உத்தமம்.

3. கையெழுத்து செய்கிற நபர் 1-க்கு, ஸ்பெஷல் வக்காலத்து நாமாவானால் 12 அணா பீஸ் கட்டவேண்டியது.

4. ஜெனரல் வக்காலத்து நாமாவில், கையெழுத்து செய்கிற நபர் 1-க்கு $1\frac{1}{2}$ ரூபாய் பீஸ் கட்டவேண்டியது. (ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 181 பக்கம் பாக்கவும்.)

35

5. ஸ்பெஷல் அல்லது ஜெனரல் வக்காலத்து நாமாவை, ரிஜிஸ்தர் மாத்திரம் செய்துகொள்ளவேண்டுமானால் 2—8—0 ரூபாய் பீஸ் கட்டவேண்டியது.

6. **(a)** ஜெனரல் வக்காலத்து நாமாவை, ரிஜிஸ்தராபீசர் முன்னிலையில் கையெழுத்து செய்து, ரிஜிஸ்தரும் செய்துகொள்ளவேண்டுமானால், ரிஜிஸ்தரேஷன் கட்டணம் ரூபாய் 2—8—0 ம், கையெழுத்து செய்யும் நபர் 1-க்கு 1 ரூபாய் வீதமும் கட்டணம் கொடுக்கவேண்டியது.

(b) ஜெனரல் வக்காலத்து நாமாவை, ரிஜிஸ்தராபீசர் முன்னிலையில் கையெழுத்து செய்து அவருடைய உறுதி கையெழுத்துப் பெறவேண்டுமானால் அந்த ஜெனரல் வக்காலத்து நாமாவில், ரிஜிஸ்தரேஷன் விஷயமாய் அதிகாரமும் கண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் ரிஜிஸ்தராபீசரால் உறுதி கையெழுத்து செய்யப்படமாட்டாது. ரிஜிஸ்தர் மாத்திரம் செய்து கொடுக்கப்படும்

(c) தஸ்தாவேஜுகளின் ரிஜிஸ்தரேஷன் விஷயமான அதிகாரமும் ஒரு ஜெனரல் வக்காலத்து நாமாவில் கண்டிருக்குமாகில், ரிஜிஸ்தராபீசரால் உறுதி கையெழுத்து செய்யப்படவேண்டிய தவசியம். அப்படிக்கன்றி ரிஜிஸ்தர் மாத்திரம் செய்துகொண்டால், பத்திர ரிஜிஸ்தரேஷன் விஷயத்திற்குக் கொடுத்த அதிகாரம் உபயோகப்படமாட்டாது.

ஸ்டாம்பு :—**(a)** ஒரே காரியத்தைப்பற்றி, ரிஜிஸ்தரேஷனுக்காக, ஒன்று அல்லது பல தஸ்தாவேஜுகளை தாக்கல் செய்து ரிஜிஸ்தர் செய்விக்க மாத்திரம் அதிகாரம் கொடுக்கப்பெற்றால்	0	12	0.
(b) 1882-வருஷத்து இராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளின் சட்டப்படி வியாச்சியங்களிலாவது நடவடிக்கைகளிலாவது தேவையாயிருந்தால்	0	12	0.
(c) **(a)** குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கிற விஷயமல்லாத, வேறு ஒரே காரியத்தில் விவகரிக்க ஒருவன் அல்லது பலருக்கு அதிகாரம் கொடுத்தால் ...	1	8	0.
(d) ஒன்றல்லாமல் பலகாரியங்களிலாவது, பொதுவாகவாவது ஐந்துபேருக்கு அதிகப்படாதவர்களுக்கு தனித்தனியாகவும் அல்லது கூட்டாகவும் விவகரிக்க அதிகாரங்கொடுக்கப்பெற்றால்	7	8	0.

(e) ஒன்றல்லது பல காரியங்களில், 5 பேருக்கு மேற்பட்டு 10 பேருக்கு அதிகப்படாதவர்கள், கூட்டாகவும், தனித்தனியாகவும் அல்லது பொதுவாகவாவது, விவகரிக்க அதிகாரங் கொடுக்கப்பெற்ருல் ... ... 15 0 0.

(f) வேறே யாதொரு விஷயத்தில் அதிகாரங் கொடுக்கப்பெற்ற நபர் 1-க்கு ... ... 1 8 0.

(g) பிரதிப் பிரயோசனத்தின் பேரில் ஸ்தாவர சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அட்டர்ணி அல்லது ஏஜண்டுக்கு அதிகாரங் கொடுத்தால், பிரதிப் பிரயோசனத்தின் மொத்தத்திற்கு கிரய தஸ்தாவேஜு ஸ்டாம்பு போடவேண்டியது. (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷெடியூல் 48-ஆர்டிகிளைப் பார்க்கவும்.)

(a) ஷு ஸ்ரீ வ (குடியிருப்பு வகையரா) எ-என்பவனுக்கு, (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிக்கொடுத்த ஜெனரல் வக்காலத்து நாமா.

நாளது தேதியில் நான் இந்த ஊரைவிட்டு, நீடித்தகாலம் சீமையிலிருக்க வேண்டிய காரியமிருப்பதினுல், (ஏற்படும் காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) தாலூக்கா கிராமத்திலிருக்கும் பூமிகள், வீடு முதலியவைகளைக் குறித்த சகல நடவடிக்கைகளையும் நடத்த இதனுல் உனக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறேன். ஆகையால் தாங்கள் ஷை சொத்துக்களை குத்தகை முதலானவைகளுக்குக் கொடுக்கவும் அவைகளின் விஷயமாய் ஏற்படும் தஸ்தாவேஜுகளை எழுதிக்கொடுக்கவும் அவைகளை ரிஜிஸ்தராபீசுகளில் ரிஜிஸ்தர் செய்துகொடுக்கவும், குத்தகை பாக்கிகளை வசூல்செய்யவும் அவைகளின் விஷயமாய் ஏற்படும் சிவில், கிரிமினல் நடவடிக்கைகளை நடத்தவும், நான் செய்த வியாபாரத்தில், கணக்குப் புஸ்தகங்களின்படி ஏற்பட்ட நிலுவைகளை வசூல் செய்யவும் அப்படி வசூலாகாத பக்ஷத்தில் கோர்ட்டில் தாவாசெய்யவும், வக்கீல் முதலானவர்களுக்கு வக்காலத்துக்கொடுத்து அவர்களை ஏற்படுத்தவும், நான் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்கவும் உமக்கு இதனுல் அதிகாரங் கொடுத்திருக்கிறேன். ஷை விஷயங்களில் தாங்கள் நடத்தும் சகல நடவடிக்கைகளையும் நானே நேரில் நடத்தியதாக ஒத்துக்கொள்ளக்கடவேன்; இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஜெனரல் வக்காலத்து நாமா.

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

(b) 19 -ம்ஷு ஸ்ரீ வ (ஊர் பேர் வகையரு) எ-என்பவன் (ஊர்பேர் வகையரு) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆப் அட்டர்ணி என்னவென்ருல்:—

நான் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பதால் என்னுடைய பிதுரார்ஜித மான சொத்துக்களைப் பார்த்துவர சாவகாசங் கிடையாது. ஆகையால் தாங்களே ஷை சொத்தின் நஞ்சை புஞ்சைகளை குத்தகைக்குவிடவும் சாகுபடிக்காக அட்வான்ஸ் கொடுக்கவும் மற்ற சிலவுகளைச்செய்யவும், குத்தகைகளை வசூல் செய்து தீர்வைகொடுக்கவும், பண்ணையாட்களுக்கு கூலிகொடுக்கவும், சொத்தின் மராமத்துக்காக கடன்வாங்கவும், லாபத்தை கடன் கொடுக்கவும், குத்தகை நிலுவைகளையும் கடன்கொடுத்த ருகைகளையும் வசூல்செய்ய சீவில் கோர்ட்டில் வியாச்சிய முதலானது செய்யவும், ஷை வியாஜ்ஜியங்களை நடப்பிப்பதற்கு வக்கீல்களை நியமித்து நடத்தவும், தங்களிஷ்டப்படி ராஜிநாமா செய்யவும் டிக்கிரிகளை நிறைவேற்றவும், இரசீது கொடுத்து பணத்தை வரப்பற்றவும் சொத்துக்கு நஷ்டம் வரக்கூடாத சகல காரியங்களையும் நடத்த இதனால் உமக்கு அதிகாரப் பத்திரம் கொடுத்திருக்கிறேன். தங்களுடைய அஜாக்கிரதையினால் ஏதாவது நஷ்டம் நேரிட்டால் அந்த நஷ்டத்துக்கு தாங்களே உத்திரவாதம் செய்யவேண்டியது, ஆகையால் தாங்கள் எழுத்து மூலியமாகவாவது வாய்மொழியாகவாவது நடத்தும் சகல நடவடிக்கைகளையும் நான் நேராகவே நடத்தியதாக ஒப்புக் கொள்வேன்.

சாக்ஷிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

---

38. Adoption Deed.

ஸ்வீகார பத்திரம்.

ஹ ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் எழுதி வைத்த ஸ்வீகாரப்பத்திரம்.

இதுவரையிலும் எனக்கு ஆண் சந்ததியில்லாததினாலும், இப்பொழுது எனக்கு விருத்தாப்பிய காலமாய் விட்டதினாலும், இனிமேல் எனக்கு சந்ததி யுண்டாகுமென்ற நம்பிக்கையில்லாததினாலும், (ஏற்படுங்காரணங்களைக் காட்டிக்கொள்ளவும்) தாலூக்கா கிராமத்திலிருக்கும் (குடியிருப்பு வகையரா பி-என்பவன் குமாரன் வயதுள்ள சி-என்பவனை அவன் பெற்றோர் சம்மதப்படி, உலகத்தாரறிய நாளது தேதியில் எனக்கு தத்து புத்திரனாகப் பெற்றிருக்கிறேன். ஆகையால் இன்றுமுதல் மேற்படி சி-என்பவன், என் ஸ்வீகாரப் புத்திரனுக்குரிய யாவத்து சுதந்தரங்களையுமடைந்தவனாக இருக்கவேண்டியது. எனக்குப் பிற்காலத்தில் எனக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியை முதலிய சடங்குகளையும் செய்யக்கட்டுப்பட்டவன். (ஏற்படும் ஷரத்துக்களைக் காட்டிக்கொள்ளவும்) இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிவைத்த ஸ்வீகாரப்பத்திரம்.

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—1. தத்துசாஸனத்திற்கு ஸ்டாம்பு, 15 ரூபாய்.

2. ரிஜிஸ்தரேஷன் கட்டணம், 4 ரூபாய்.

3. சொத்துக்கள் ஏற்படும் விஷயத்தில் சொத்துக்களை விவரித்துக் காட்டிக்கொள்ளவும்.

---

39. Authority to Adopt.

ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரப் பத்திரம்.

ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரப் பத்திரம்.—ஒருவன் தான் உயிரோடிருக்கும்போதே ஸ்வீகாரஞ் செய்துக்கொள்ள முடியாமற் போனல் தானிறந்த பிறகு தனக்காக தன்னுடைய பெண்ஜாதியை ஸ்வீகாரஞ்செய்துக்கொள்ள அதிகாரங்கொடுக்கலாம்.

(a) 192 ஞு ஸ்ரீ உ (ஊர் பேர் வகையரா) **ஏ**-என்பவன் தன் பெண்சாதியாகிய **பி**-என்பவளுக்குக் கொடுத்த ஸ்வீகார அதிகாரப்பத்திரம், நான் மரணவஸ்தையான வியாதியாயிருப்பதால் நானிறப்பதற்குள் ஸ்வீகாரஞ் செய்துகொள்ள சாத்தியப்படாதுபோலிருப்பதால், அபுத்திரர்களாகிய நமக்கு நல்ல கதி கிடைக்கும்பொருட்டும், நம்முடைய குடும்பவிருத்தியின் பொருட்டும் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொண்டு அந்தப்பிள்ளை மேஜராகிறவரையில் அந்தப்பிள்ளைக்கு நீயே கார்டியனுகவுமிருந்து நம்முடைய சொத்துக்களைப் பார்த்து வரவும் உனக்கு இதனுல் அதிகாரங்கொடுக்கிறேன். (இன்னூர் பிள்ளையென்று குறித்தும் எழுதலாம்.)

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

(b) 19 -ம்ஞு ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா **எஸ்**-என்பவளுக்கு (குடியிருப்பு வகையராவும்) **டி** என்பவன் புருஷனுமான **ஏ**-என்பவன் எழுதிக்கொடுத்த ஸ்வீகாரஞ்செய்துகொள்ள அதிகாரப்பத்திரம்.

இதுவரையிலும் நமக்கு சந்தானம் ஏற்படாததினுலும், இப்பொழுது நாம் இருவருக்கும் வயோதிகமாய் விட்டபடியாலும், இனிமேல் நமக்கு சந்தானமுண்டாகுமென்ற நம்பிக்கையில்லாததினுலும், எனக்கு இப்பொழுதிருக்கிற வியாதியினுல் நான் இனிமேல் ஜீவித்திருப்பேனென்ற நம்பிக்கையில்லாததினுலும், (எந்த காரணம் ஏற்படுகின்றதோ அந்த காரணத்தைக் காட்டிக்கொள்ளவும்) எனக்குப் பிற்காலத்தில் கர்மாதி சடங்குகளைச் செய்யவும், நமது ஆஸ்திக்கு பாத்தியஸ்தனுகவும், உன்னைக் காப்பாற்றும்பொருட்டும், தாலூக்கா கிராமத்திலிருக்கும் **பி**-என்பவன் குமாரன் வயதுள்ள **வி**-என்பவனை நாம் முன்னமே

தீர்மானித்த வண்ணம், ஷை பி-என்பவன் சம்மதித்துக்கொண்டிருப்பதினால் உலகத்தாரறிய, ஏற்பட்ட சடங்குகளைச்செய்து, தத்துவாங்கிக்கொள்ள இதனால் உனக்கு அதிகாரங் கொடுக்கிறேன். இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த ஸ்வீகாரஞ்செய்துகொள்ள அதிகாரப்பத்திரம்.

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு.—1 ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரப்பத்திரத்திற்கு ஸ்டாம்பு, 15 ரூபா.

2. ரிஜிஸ்தரேஷன் கட்டணம் 4 ரூபா.

3. மேற்படி தஸ்தாவேஜினால் அதிகாரம் பெற்றிருந்தாலும், இஷ்டமிருந்தால் தத்து வாங்கிக்கொள்ளலாம். ஸ்வீகாரஞ்செய்து கொள்ளாவிட்டால் பாதகமில்லை.

4. இன்னாரை தத்துவாங்கிக்கொள்ளவேண்டியதென்று குறித்துக் காட்டவேண்டியது அவசியமுமல்ல. அப்படி குறிப்பிட்டிருந்தால் வேறெவரையும் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளக்கூடாது.

40. Cancellation of Authority to Adopt.

ஸ்வீகார அதிகாரப்பத்திர ரத்துப் பத்திரம்.

19 வரு மீ உ (குடியிருப்பு வகையரா) ஏ-என்பவன் எழுதிவைத்த ஸ்வீகார அதிகாரப்பத்திரத்தின் ரத்து சாஸனம்.

19 வரு மீ உயில் என்மனைவி எஸ்-என்பவளுக்கு எழுதிக்கொடுத்த ஸ்வீகார அதிகாரப்பத்திரத்தினால் தாலூக்கா கிராமத்திலிருக்கும் (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் குமாரன் வயதுள்ள சி-என்பவனை தத்து வாங்கிக்கொள்ள அதிகாரங்கொடுத்திருந்ததில், இப்பொழுது எனக்கேற்பட்டிருந்த வியாதி பூரணமாய் நீங்கிவிட்டதினாலும், அல்லது சந்தான முண்டாயிருப்பதினால் (ஏற்படும் காரணங்களைக்காட்டிகொள்ளவும்) இதுவரையிலும் அப்படி தத்து வாங்காததின்நிமித்தமும், இனிமேல் எனக்கு தத்து வாங்க இஷ்டமில்லாததினாலும் ஷை அதிகாரப்பத்திரத்தை இன்று ரத்துசெய்து விட்டேன் ஷை அதிகாரப்பத்திரம் இனிமேல் செல்லத்தக்கதல்ல. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிவைத்த ஸ்வீகார அதிகாரப்பத்திரத்தின் ரத்து சாசனம்.

சாக்ஷிகள். கையெழுத்து.

கைட்டெழுத்து.

குறிப்பு :—அதிகாரப்பத்திரத்தின் ரத்து சாஸனத்திற்கு ஸ்டாம்பு, 7—8—0 ரூபாய். உயில் எழுதுகையில் ஸ்வீகார அதிகாரத்தை ரத்துசெய்வதானல் அதற்கு தனிஸ்டாம்பு கிடையாது. உயில் ரெஜிஸ்டர் செய்வதற்குண்டான கட்டணம்தான் செலுத்தவேண்டும்.

2. ரிஜிஸ்தரேஷன் கட்டணம் 6 ரூபாய்.

3. அதிகாரப்பத்திரத்தில் ஏற்பட்டவண்ணம் ரத்து வாங்குவதற்குமுன், ரத்து சாஸனம் ஏற்படும் பக்ஷத்தில், மேற்படி அதிகாரப் பத்திரம் செலாவணியாகத் தக்கதல்ல.

---

41. WILL.

உயில் அல்லது மரண சாசனம்.

1. **உயில் அல்லது மரணசாசனம்** என்பது :—ஒருவன் சாகும்போதாவது அதற்கு முன்னிட்டாவது தன்னுடைய ஜீவகாலத்திற்குப் பிறகு தன்னுடைய ஆஸ்திகளை இன்னின்னர் இன்னவிதமாய் எடுத்துக் கொள்ளுகிறதென்று தன் அபிப்பிராயத்தை எழுதிவைக்கிற சட்டசம்மதமான தஸ்தாவேஜ். இந்த மரணசாஸனத்திற்கு ஸ்டாம்பு தேவையில்லை. ரெஜிஸ்டர் செய்வதற்கு காலநிர்ணயமுங் கிடையாது.

2. மரண சாஸனத்தை, சாஸனமெழுதினவனாவது, அவனுக்குப் பின் எக்ஸிக்யூட்டராவது, அல்லது வேறே பாத்தியஸ்தனாவது ரெஜிஸ்டர்செய்ய தாக்கல்செய்யலாம். ஸ்வீகாரப்பத்திரத்தை, ஸ்வீகாராதிகாரம் கொடுத்தவனாவது, அவனுக்குப்பின் அதிகாரங்கொடுக்கப் பெற்றவராவது, அதன்படி ஸ்வீகாரமெடுக்கப்பட்ட புத்திரனாவது ரெஜிஸ்டர்செய்ய தாக்கல்செய்யலாம். மரணசாஸனம் அல்லது ஸ்வீகாரப்பத்திரம் எழுதிவைத்தவனே நேரில் ரெஜிஸ்டர் செய்ய தாக்கல் செய்தால், அதை எல்லா தஸ்தாவேஜைப்போலவே ரெஜிஸ்டர் செய்யப்படும். மற்ற பாத்தியஸ்தர்களால் அவைகள் தாக்கல் செய்யப்பட்டால், அவைகளில் போட்டிருக்கிற கையெழுத்துகள் இறந்துபோன உயில் அல்லது ஸ்வீகாராதிகாரம் கொடுத்தவனுடையதுதானென்றும், ரெஜிஸ்டர்செய்ய மேற்படி பத்திரங்களை தாக்கல்செய்யக் கொண்டுவந்தவர்கள் சரியான பாத்தியஸ்தர்களாவென்றும், மேற்படி பத்திரங்களை எழுதியவன் உயிருடனில்லையென்றும் நிச்சயமாய் யாதொரு ரெஜிஸ்ட்

ரார் தெரிந்துகொண்டதின்பேரில் அவைகளை ரெஜிஸ்டர் செய்யவேண்டும்.

3. யாதொரு மரணசாஸன மெழுதிவைத்தவன் அந்த மரணசாஸனத்தை ஒரு உரையில்போட்டு முத்திரைசெய்து, தன்னுடைய பெயரையும், தனக்கு ஏஜெண்டு யாராவதிருந்தால் அவருடைய பெயரையும், அதற்குள் வைத்திருக்கிற தஸ்தாவேஜு இப்படிப்பட்டதென்பதையும் அந்த உரையின்மேலெழுதி, தானே நேராகவாவது, தன்னுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டு மூலமாயாவது அதை ரெஜிஸ்ட்ராரிடத்தில் கட்டிவைக்கலாம். அப்படிப்பட்ட உரையை வரப்பற்றிக் கொள்வதன்மேல், அதைக் கொண்டுவந்தவர்கள் சரியானவர்களாவென்று திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டு, அதன் பின்பு அந்த உரையின்மே லெழுதியிருப்பதை தம்முடைய 5-ம் நெ. புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு, கொண்டுவந்த அல்லது வரப்பற்றின வருஷம் மாதம் தேதி மணியையும், அது சரியானவர்களால் தான் கொண்டு வரப்பட்டதென்று ருசுச்சொன்ன சாட்சிகளின் பெயரையும், உரையின்மேல் போட்டிருக்கிற முத்திரையில் தெரியும்படி வரைந்திருக்கிறதையும் அந்தப் புஸ்தகத்திலும், உரையிலும் குறித்துக்கொள்ளவேண்டும். பிறகு ரெஜிஸ்ட்ரார் முத்திரைபோட்ட உரையை நெருப்பு முதலிய சம்பவங்களுக்கு அகப்படாத பெட்டியில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்.

4. பிறகு அதை ரெஜிஸ்ட்ராரிடம் ஒப்பித்தவன் தானே நேரிலாவது ஏஜெண்டு மூலமாயாவது திருப்பிக்கேட்டால், அதை வைத்திருக்கிற ரெஜிஸ்ட்ரார் அது சரியானவர்களால்தான் கேட்கப்படுகிறதென்று திருப்திகரமாய் தெரிந்துகொண்டதன்மேல் அதைக்கேட்டவரிடம் திருப்பிக்கொடுக்கவேண்டும். உயில் எழுதினவன் இறந்துபோனபிறகு அதைத்திறக்கும்படி மனுசெய்யப்பட்டால், அப்படி இறந்தது வாஸ்தவந்தானென்று ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியவந்ததின்மேல், மனுதாரன் முன்னிலையில் அவர் அதே உரையை உடைத்து அதிலுள்ள தஸ்தாவேஜை 2-ம் நெ. புஸ்தகத்தில் மனுதாரன் சிலவில் பதிந்துகொண்டு, அசலையும் தானே வைத்திருக்கவேண்டியது.

5. இந்த இராஜதானியிலே, 1926-ம் வருஷத்திய இந்துதேசத்து தாயபாக (திருத்துவதற்கான) ஆக்டானது சென்னை ஹைகோர்ட்டாரின் அசல் விசாரணை அதிகார வரம்புக்கு வெளியே ஹிந்துக்களும்

பௌத்தர்களும் ஸீக்கியர்களும் ஜைனர்களும் (முஹம்மதியர்கள் நீங்கலாக) உயில் எழுதக்கூடிய நமூனாவைப் பாதிக்கின்றது.

6. இந்த ஆக்ட் 1927-ம் ஜனவரி 1உ செலாவணியாகத் தொடங்குகிறது. ஆகவே, அந்தத் தேதியன்றைக்காகிலும் அதற்குப் பிறகாகிலும் ஏற்படுத்தப்படும் எந்த உயிலும் அடியிற்கண்ட புதிய நியந்தனைகளின்படி இருக்கவேண்டும்.

7. படையெழுச்சியில் அமர்ந்தாவது வாஸ்தவத்தில் யுத்தம் செய்துகொண்டாவதிருக்கிற படைச் சேவகராகவாகிலும் கப்பலில் சபர்போய்க்கொண்டிருக்கிற கப்பல்களிலாகிலும் இராத எவரும் வெறும் வாய்மொழி மூலமாக உயில் ஏற்படுத்திவைப்பது இனிமேல் சாத்தியமல்ல. எழுத்துமூலமான ஆதரவு முற்றிலும் அவசியமென்று விதித்திருக்கிறது.

8. உயில் ஏற்படுத்திவைப்பவர் உயிலில் தம்முடைய கையெழுத்து அல்லது கைநாட்டு போடவேண்டும்; அல்லது, அவருக்கெதிரில் அவர் உத்தரவு செய்கிறபடி வேறே எந்த நபராகிலும் அதில் கையெழுத்து போடவேண்டும். உயில் ஏற்படுத்திவைப்பவரின் கையெழுத்தினுலாகிலும் கைநாட்டினுலாகிலும் அவருக்காகக் கையெழுத்து செய்கிற நபரின் கையெழுத்தினுலாகிலும் ஷெ ஆதரவை உயிலைப்போல் செலாவணியாகும்படிச் செய்ய உத்தேசிக்கப்பட்டதென்று தோற்றும்படியான இடத்திலே அந்தக் கையெழுத்தாயாகிலும் கைநாட்டையாகிலும் போடவேண்டும்.

9. உயிலில் குறைந்தது இரண்டு பேராவது சாட்சிகளாக அத்தாட்சிக் கையெழுத்து போடவேண்டும். அவர்களில் ஒவ்வொருவரும். உயில் ஏற்படுத்திவைத்தவர் அந்த உயிலில் தம்முடைய கையெழுத்து அல்லது கைநாட்டு போட்டதையாகிலும், உயில் ஏற்படுத்திவைத்தவருக்கெதிரில் அவர் உத்தரவு செய்கிறபடி வேறே யாதொரு நபர் அதில் கையெழுத்து போட்டதையாகிலும் பார்த்திருக்கவேண்டும்; அல்லது, அவர்கள் இவ்விரண்டில் எதையும் பார்த்திராவிட்டால், அவர்களில் ஒவ்வொருவரும்-உயில் ஏற்படுத்திவைத்தவர் தம் கையெழுத்தையாவது கைநாட்டையாவது அப்படிப்பட்ட வேறே நபரின் கையெழுத்தையாவது நேரில் ஒப்புக்கொண்டதைக் கேட்டிருக்கவேண்டும். உயில் ஏற்படுத்திவைத்தவருக்காக அவர் உத்தரவு செய்தபடி கையெழுத்து போட்ட நபர் உயில் ஏற்படுத்திவைத்தவர் தம்

மைக் கையெழுத்து போடும்படி கேட்டதாகவும் தாம் அந்தப்படி செய்ததாகவும் சொன்னால் அது போதாது.

10. அத்தாட்சிக் கையெழுத்து போடும் சாட்சிகள் ஒவ்வொருவரும்-உயில் ஏற்படுத்திவைப்பவருக்கெதிரில் உயிலில் கையெழுத்து போடவேண்டும். ஆனால், அத்தாட்சிக் கையெழுத்து போடும் ஒரு சாட்சியானவர் உயிலில் கையெழுத்து போடும்போது அத்தாட்சிக் கையெழுத்து போடும் மற்றொரு சாட்சி ஹாஜராயிருக்க வேண்டுமென்பது அவசியமல்ல.

(a) 19 ௵ மீ உ ஜில்லா தாலூகா
கிராமம் ஜாதி மதம்
ஜீவனம் குமாரனாகிய

நான் மனப்பூர்வமாய் சுயபுத்தியோடு எழுதிவைத்த உயில் என்னவென்றால் :—

நான் பிதுரார்ஜிதமாயும் சுயயார்ஜிதமாயும் அனுபவித்துவருகிற சொத்துக்களை என்னுடைய வார்சுகள் சண்டை சச்சரவில்லாமல் பிரித்துக்கொண்டு வாழவேண்டுமென்கிற எண்ணத்தினால், அடியில் விவரித்தப்படி 1-வது பாபத்தில் கண்ட ஸ்தாவரஜங்கம சொத்துக்களை என்னுடைய ஜேஷ்ட குமாரனும், 2-வது பாபத்தில் கண்ட சொத்துக்களை என்னுடைய இரண்டாவது குமாரனும், 3-வது பாபத்தில் கண்ட சொத்துக்களை என்னுடைய மைனரான பெண்ணின் விவாகத்திற்கும் ஸ்திரீதனத்திற்காகவும் அவளும், நான்காவது பாபத்தில்கண்ட சொத்தின் வரும்படி ஐவேஜைக்கொண்டு சிவன் கோவில் புஷ்ய உற்சவத்திற்காக ௸ கோவில் கங்காதரேசுவரர் பேருக்கும், ஐந்தாவது பாபத்தில் கண்ட சொத்தை என் தங்கைக்கும் பாத்தியப்படுத்தியிருக்கிறேன். எனக்குப்பின் மேற்படியார்கள் ஏகோபித்தாவது, தனித்தனியாகவாவது அவர்களிஷ்டப்படி இருந்தாலும் நான்காவது பாபத்தில் கண்டசொத்தை உடனே கோவில் தர்மகாத்தாவிடம் ஒப்பித்துவிடவேண்டும். இந்த உயிலில் கண்டபடி நடவடிக்கைகளை நடத்துவதற்காக என் குமாரர்களிருவரையும், என் தம்பியையும் எக்ஸிக்யூட்டர்களாக நேமித்திருப்பதால் இவர்கள் இந்த உயிலில் கண்ட காரியங்கள் நடத்தவேண்டியது.

1-வது பாபத்தில் கண்ட சொத்துக்கள் விவரம்.
2-வது ௸ ௸
3-வது ௸ ௸
4-வது ௸ ௸
5-வது ௸ ௸

சாட்சிகள் கையெழுத்து.
நெட்டெழுத்து.

(b) 19 ௵ ௴ ௳ (குடியிருப்பு வகையரா) பி-என்பவன் எழுதிவைத்த உயில் சாஸனம்.

எனக்கு விர்த்தாப்பிய காலமாய்விட்டபடியினாலும், ஆண் சந்ததி ஏற்படாத தினிமித்தமும், (எந்த காரணங்கள் ஏற்படுகின்றனவோ அவைகளைக்காட்டிக் கொள்ளவும்) என் ஜீவதிசைக்குப்பின் என்னுடைய சகல ஆஸ்திகளையும் அடியில்கண்ட விபரப்படிக்கு அவரவர்களுக்கேற்பட்ட சொத்தை அவரவர்களே சுவாதீனஞ்செய்து கொள்ளவேண்டியது. என் ஜீவதிசை வரையிலும் நான் ஷை சொத்துக்களை பாதுகாத்து வருவேனாகவும்; என் ஜீவதிசைக்குப்பின் அவரவர்களுக்கேற்பட்ட சொத்தை அவரவர்களே தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்துக்கொள்ளவேண்டியது. தர்ம காரியங்களுக்காக விடப்பட்ட சொத்தின் விஷயமாக ஒருவரும் பாத்தியம் பாராட்டக்கூடாது; குறித்த காரியங்களுக்கே ஏற்படுத்திவிடவேண்டியது. தாலூக்கா கிராமத்திலிருக்கும் பி-என்பவன் குமாரன் சி-என்பவனுக்கு, 1-வது ஜாப்தாவில் கண்ட சொத்து; தாலூக்கா கிராமத்திலிருக்கும் டி-என்பவன் குமாரத்திகள் இ, எப், ஜி. ஆகிய மூவருக்கும் 2-வது ஜாப்தாவில்கண்ட சொத்து சமபாகச் சேரத்தக்கதென்றும்; தாலூக்கா கிராமத்திலிருக்கும் எச்-என்பவர் மனைவி டப்ளியு-என்பவளுக்கும் அவளுடைய மைனர் மக்கள் ஜே, கே, எல்-என்பவர்களுக்கும் 3-வது ஜாப்தாவில்கண்ட சொத்து சமபாகமாகச் சேரத்தக்கதென்றும், ஷை மைனர்கள் மேஜராகும்வரை அவர்களுக்கேற்படும் சொத்தை (குடியிருப்பு வகையரா) எம்-என்பவன் பாதுகாத்து வரவேண்டியதென்றும், தாலூக்கா கிராமத்திலிருக்கும் என்-என்பவருடைய மானேஜ்மெண்டிலிருக்கிற பள்ளிக்கூடத்திற்கு 4-வது ஜாப்தாவில்கண்ட சொத்து பாத்தியப்படத்தக்கது. இந்த சொத்தை தற்கால மானேஜரும், பிந்தி அவர் ஸ்தானத்தை வகிப்பவர்களும் சுயப்பிரயோஜனத்திற்கு உபயோகிக்காமல் ஷை பாடசாலையின் விஷயமாகவே உபயோகிக்கவேண்டியதென்றும்; தாலூக்கா கிராமத்திலிருக்கும் ஓ-என்னும் கோயிலுக்கு 5-வது ஜாப்தாவில் கண்ட சொத்தும்; இந்த சொத்தை ஷை சுவாமிபெயரால் பட்டாவும்செய்து வைத்து ஏற்படும் திரஸ்டிகளிடம் ஒப்புவித்து ஷை சொத்தின் வரும்படியைக்கொண்டு ஷை கோயிலுக்கு தினந்தோறும் சாயங்காலம்முதல் அர்த்த ஜாமம்வரையில் இரண்டு நெய் விளக்குகள் வைத்துக்கொண்டுவரும்படி ஏற்பாடு செய்யவேண்டியதென்றும், தாலூக்கா கிராமத்திலிருக்கும் பி-என்பவன் குமாரன் கியூ-என்பவன் நீடித்தகாலம் எனக்கு ஊழியக்காரனாகவிருந்து அதிக விசுவாசமாய் வேலைபார்த்து வந்ததினாலும் அவனுக்கு வேறு உதவியில்லாததினாலும், 7-வது ஜாப்தாவில்கண்ட சொத்து அவனுக்குச் சேரத்தக்கதென்றும்; என்மனைவி ஆர்-என்பவள் உதவியற்றவளாயிருப்பதினிமித்தம் அவளுக்கேற்படும் 8-வது ஜாப்தாவிற்கண்ட சொத்துக்கு பாத்தியஸ்தனாகவும் அவளைக்காப்பாற்றும் பொருட்டும் அவள் தத்து புத்திரனை என் ஜீவதிசைக்குப்பின் ஏற்படுத்திக்கொள்ளவுள்ளவளென்றும்; (ஏற்படும் விஷயங்களைக் காட்டிக்கொள்ளவும்) மேலே விவரித்திருக்கும் வண்ணம் அவரவர்களுக்கு ஏற்பட்ட சொத்துக்களை, என் ஜீவதிசைக்குப்

பின், அவரவர்களுக்குப் பிரித்துக்கொடுக்க (குடியிருப்பு வகையரா) எஸ், இஜடி. என்பவர்கள் இந்த உயில் சாஸனத்தின் எக்ஸிக்யூட்டர்களாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்றும், நான் சம்மதித்து என் மனப்பூர்வமாய் எழுதிவைத்த உயில் சாஸனம்.

சொத்து விவரம்

(ஸி-என்பவனுக்குச் சேரத்தக்க 1-வது ஜாப்தா.)
(ஆர்-என்பவளுக்குச் சேரத்தக்க 8-வது ஜாப்தா.)

ஷரா முதலிய விவரங்கள்.

சாக்ஷிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

குறிப்பு:—1. உயில் சாஸனங்களுக்கு ஸ்டாம்பு தேவையில்லை.

2. ரிஜிஸ்தரேஷன் கட்டணம் 4 ரூபாய்.

3. சொத்து மொத்தத்தை இஷ்டமிருந்தால் காட்டிக்கொள்ளலாம்.

4. உயில் சாஸனத்தை, மரணகாலத்தில் எழுதவேண்டுமென்பதில்லை; அதற்குமுன் எக்காலத்திலும் எழுதிவைக்கலாம்.

5. ரிஜிஸ்டர் விஷயங்களுக்கு ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 27, 42-வது பிரிவுகளைப்பார்க்க.

---

42. Surrender.

சரேண்டர் பத்திரம்.

சரேண்டர் பத்திரமென்பது:—யாதொரு சொத்தில் பூர்ணபாத்தியமில்லாமல் அனுபோக பாத்தியத்தைமட்டும் வார்சுக்கிரமமாய் அடைந்த யாதொரு ஸ்திரீ வார்சானவள், தன் அனுபோகத்திலிருக்கிற சொத்துக்களை தான் உயிருடனிருக்கும் போதே தன் அனுபவ பாத்தியத்தை தனக்கு அடுத்த நெருங்கின சமீப அநந்தர வார்சுக்கு ஒப்புக்கொடுத்து எழுதிவைக்கிற தஸ்தாவேஜ்.

குறிப்பு:—பூர்ண பாத்தியமாய் வார்சு பாத்தியமடைந்த சொத்துக்களை ஸ்திரீகள் உயில் மூலமாயாவது தான மூலமாயாவதுதான் தன்னுடைய ஜீவிதகாலத்தில் வினியோகஞ் செய்யவேண்டும்.

(1) 19 ஸூ மீ உ எ-என்பவள் (இன்னாருக்கு) எழுதிக்கொடுத்த சரெண்டர் பத்திரம் என்னவென்றால்; எனக்கு விருத்தாப்பிய தசையுண்டாய் விட்டபடியாலும், என்வசமிருக்கிற ஸ்தாவர ஜங்கம சொத்துகளை பரிபாலனஞ்செய்ய சக்தியற்றிருப்பதாலும், காசிமுதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைபோக எண்ணியிருப்பதாலும், எனக்கு சமீபவார்சாயிருக்கிற

உன்னிடம் என்னுடைய அனுபோகத்திலிருக்கிற ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை சரெண்டர் பத்திரமூலமாய் ஒப்படைத்துக்கொடுத்து, என்னுடைய ஷை காசி யாத்திரை முதலிய செலவுக்கு ரூ ரொக்கமாகப் பெற்றுக்கொண்டு விட்டபடியால், இனிமேல் நீ ஷை சொத்துக்களை தானாதி விக்கிரய யோக்கியமாய் ஆண்டனுபவித்துக்கொள்ளவேண்டியது. இனிமேல் ஷை சொத்தில் எனக்காவது, இதர அநந்தர வார்சுகளுக்காவது எவ்வித பாத்தியமுமில்லை

சொத்து விவரம்.

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

(2) 19 -ம்வூ மீ உ எ-என்பவள் பி-என்பவருக்கு எழுதிக்கொடுத்த சரெண்டர் பத்திரம். நான் விருத்தாப்பியதசையை யடைந்து விட்டதினாலும், எனக்கு நீ சமீபவார்சாயிருப்பதுடன், ன்னை நீ சுமார் 20 வூகாலமாக சவரக்ஷணைசெய்து வருவதுடன் விருதாதிகள், யாத்திரைகள் முதலியவைகளுக்காக எனக்கு வேண்டிய திரவியசகாயஞ் செய்துகொண்டு வந்ததினாலும், (ஏற்படும் காரணங்களை காட்டிக்கொள்ளவும்.) என் சுவாதீனத்திலிருக்கிற ஸ்தாவர ஜங்கமசொத்துக்களை நீயே வெகுகாலமாக பரிபாலித்து வருவதாலும், இனிமேல் நீயே மேற்படி சொத்துக்களை சர்வசுவதந்திரமாய் ஆண்டனுபவித்துகொண்டு, என்னுடைய ஜீவனத்துக்குவேண்டியதை மட்டும் கொடுத்துக்கொண்டு வருவதுடன், என் ஜீவகாலத்துக்குப் பிறகு என்னுடைய உத்தரகிரியைகளை நீயே செய்து வரும்படியாயும் சம்மதித்து இந்த சரெண்டர் பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன்.

சொத்து விபரம்.

சாட்சிகள். கையெழுத்து.

நெட்டெழுத்து.

குறிப்பு :—ஒப்படைக்கும் சொத்தின் மதிப்பு ரூ 100-க்கு மேற்ப்பட்டிருந்தால், அந்த ஆதரவு கட்டாயமாய் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். இதற்கு ஸ்டாம்பு, ரெஜிஸ்ரேஷன் கட்டணம் ஒப்படை பத்திரத்திற்குண்டானது.

---

43. Cancellation of a Will.

மரண சாஸனத்தின் ரத்துப்பத்திரம்.

உயில் ரத்து என்னும் கோடிஸில் :—யாதொரு உயில் சம்பந்தமாய், அதிற்கண்ட ஏற்பாடுகளை விவரித்துச் சொல்வதாகவாவது, மாற்றுவதாகவாவது, அவைகளோடு பின்னும் சேர்ப்பதாகவாவது தயார் செய்யப்படும் யாதொரு ஆதரவென்று அர்த்தமாவதல்லாமல், அது அந்த உயிலில் ஒருபாகமாயிருப்பதாகவும் எண்ணப்படும்.

ஷ ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா) எ-என்பவன் எழுதி வைத்த உயில் சாஸனத்தின் ரத்துப்பத்திரம்.

ஷ ஸ்ரீ உ (குடியிருப்பு வகையரா) எஸ் (1). டி (2) ஆகிய இருவர்களுக்கும் நான் எழுதிக்கொடுத்து ரிஜிஸ்தராபீசில் ஷ ஸ்ரீ உயில் ரிஜிஸ்தரும் செய்வித்துக்கொடுத்த உயில் சாஸனப் படிக்கு, ஷது ஜாப்தாவில் கண்ட சொத்து டி-என்பவனுக்கு என் ஜீவதிசைக்குப்பின் சேரத்தக்கதென்று ஏற்பட்டிருந்ததில், இப்பொழுது ஷை டி-என்பவன் என்னுடைய விஷயத்தில் உண்மையில்லாதவனுயும், எனக்கு நேர் விரோதியாகவுமிருப்பதால் (ஏற்படும் காரணங்களைக் காட்டிக்கொள்ளவும் அவனுக்கு ஷை உயில் சாஸனத்தினுல் ஏற்பட்ட சொத்தைக்கொடுப்பதற்கு எனக்கு இஷ்டமில்லாததினுல் அந்த உயில் சாஸனத்தினின்றும் அவனுடைய பெயரை இதன்மூலமாய் நீக்கியிருக்கிறேன். இனிமேல் ஷை டி-என்பவனுக்கு, ஷை உயில் சாஸனத்தில் கண்ட ஷரத்துக்களுக்கும், அவனுக்கேற்பட்டிருந்த சொத்துக்கும், யாதொரு பாத்திய சம்மந்தமுமில்லை ஷை உயில் சாஸனத்தில்கண்ட பூரா சொத்துக்களும் என் ஜீவதசைக்குப்பின் எஸ் என்பவனுக்கே சேரத்தக்கது. இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிவைத்த உயில் சாஸனத்தின் ரத்துப்பத்திரம்.

சாட்சிகள் கையெழுத்து.

எழுதியது.

குறிப்பு :—1. உயில் சாஸனங்களை ரத்துசெய்யும் பத்திரத்திற்கு கோடிஸில் என்றும் பெயர்.

2. ரிஜிஸ்தரேஷன் கட்டணம் 4 ரூபாய்.

3. ரத்துசெய்யும் தஸ்தாவேஜிலேயே, புதிதாய் ஏற்படும் நபரையும் அவனுக்கு ஏற்படும் சொத்தையும் காட்டிக்கொள்ளலாம். உயில் எழுதி ரெஜிஸ்டர் செய்திருந்தபோதிலும் உயில் செய்தவனே வேறொரு உயில்செய்து ரெஜிஸ்டர் செய்தால், முதல் உயில் ரத்தாய்விடும்.

---

44. Agreement.

உடன்படிக்கை.

எக்ரிமெண்டு அல்லது **உடன்படிக்கை** என்பது :—இரண்டல்லது பலபேர் சேர்ந்து யாதொரு தொழில் வர்த்தகம் முதலியவைகளைச் செய்வதற்காகவும், இடையில் யாதொரு மனஸ்தாபம் அவர்களுக்குள் வராமல் காப்பாற்றுவதற்காகவே உடன்படிக்கை ஏற்படுகிறது. குமாஸ்தாக்கள், கூலியாட்கள், வேறே உத்தியோகஸ்தர்களும் இன்ன விஷயத்துக்காக இன்னுரிடத்தில் வேலை அல்லது உத்தியோகஞ்செய்வதாக

வும் சம்மதித்து எழுதிக்கொடுக்கிற உடன்படிக்கை. (இது முன்னமே விவரிக்கப்பட்டிருக்கிறது.)

19 ஷ மீ வ (ஊர் பேர் ஜாதி தொழில் வகையரா) எ-பி-ஆகிய நாமிருவரும் செய்துகொண்ட உடன்படிக்கை என்னவென்றால்:— ஷை ஊரில் நாமிருவரும் சேர்ந்து நஞ்சைகளைக் குத்தகைக்கு வாங்கி அதில் வாழைபோட்டு அதற்காக முதலில் செலவு எவ்வளவு நேரிடுகின்றதோ அதில் சரிபாதி ஒவ்வொருவரும்போட்டுப் பிறகு காய்வெட்டுங்காலங்களில் நாமிருவரில் ஒருவர் மதராஸில்போய் ஆறுமாதகாலம் வியாபாரம்செய்து அங்கு விற்பனையாகும் பணத்தை பிரதிதினமும் பாங்கியில் செலுத்திவிடவேண்டும். பிறகு ஆறுமாதகாலம் இவ்விடம் வந்து தோட்டத்தை பார்க்கவேண்டும். மற்றொருவர் தோட்டத்தில் ஆறுமாதகாலமிருந்துவிட்டு பிறகு ஆறுமாதம் மதராஸில் போய் வியாபாரஞ்செய்யவேண்டும். இவ்விதமே ஒவ்வொருவரும் மாறிமாறி இங்காறுமாதமும் மதராஸில் ஆறுமாதமாகவிருந்து வியாபாரஞ்செய்து வருஷம் ஒன்றுக்கு நம்முடைய செலவுக்காக பேருக்கு ரூ. 200 மட்டும் எடுத்துக்கொண்டு பாக்கிக் கணக்குவழக்குகளை இன்றுமுதல் மூன்று வருஷத்துக்குப் பிறகு தீர்த்துக்கொண்டு இந்த உடன்படிக்கையை ரத்துசெய்யலாம். ஆகையால் நாமிருவரும் சம்மதப்பட்டு இந்த உடன்படிக்கையை எழுதிக்கொண்டோம். (உடன்படிக்கைக்கு ஸ்டாம்பு தீர்வை அணா 12.)

சாக்ஷிகள்.	எ. பி.
எழுதியது.	கையெழுத்துகள்.

45. Indemnity Bond.
நஷ்டவிமோசனப்பத்திரம்.

நஷ்டவிமோசனப் பத்திரமென்பது:—யாதொரு சொத்து விற்கப்படுகையிலாவது அல்லது மற்றொருவரிடம் ஒப்புவிக்க நேரிடுகிற சமயத்திலாவது பின்னால் அந்த விற்பனை அல்லது சொத்து ஒப்புவித்ததை பின்னால் ஆட்சேபணைசெய்து ரத்துசெய்வதற்கு வார்சுகள் தோன்றுவார்களென்றிருந்தால் விற்பவனாவது அல்லது ஒப்பிக்கப்பட்டவனாவது அவனுக்காக வேறொருவனாவது அப்படி நஷ்டம் நேரிடுகிறதாயிருந்தால் பாத்தியப்படுவதாக தங்கள் ஸ்வாதீனத்திலுள்ளசொத்தை ஜாமீனுக்சக்காட்டி எழுதிக்கொடுக்கிற தஸ்தாவேஜ்.

(a) ஷ மீ வ (ஊர் பேர் ஜாதி வகையரா) எ-என்பவன், (ஊர் பேர் வகையரா) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த நஷ்டவிமோசனப்பத்திரம். (இன்ன ஊர்) ஸி-என்பவன் தன் போஷணையிலிருக்கிற தன் மைனர் குமாரன் டி-என்பவனுக்குச் சொந்தமான (இன்ன சொத்தை பி-யாகிய

உனக்கு ரூ க் கிரயஞ்செய்துகொடுத்து அதின் பணத்தைக்கொண்டு (இன்ன) இடத்தில் நிலம் வாங்கியதை ஷை மைனர் மேஜரானபிறகு ஒப்புக்கொள்ளாமல் விவாதஞ்செய்வதாயிருந்து நஷ்டமேற்படுகிறதாயிருந்தால் ஷை சாசனத்தொகை ரூ. யும் நான் பின்னால் அந்த நஷ்டத்தை ஈடுசெய்யக்கூடிய (இத்தனை) ரூபா பெறுமான இதனடியில்கண்ட சொத்தை உமக்கு ஜாமீனாக வைக்கிறேன் ஷை சொத்தின்பேரில் எவ்வித வில்லங்கங்களும் இல்லையென்பதற்கு அத்தாட்சியாக வில்லங்க சர்டிபிகேட்டும் வாங்கிக்கொடுத்திருக்கிறேன்.

சொத்து விவரம்

சாட்சிகள். கையெழுத்து.

எழுதியது.

(b) 19 -ம்வூ மீ உ (ஊர் பேர் வகையரு) ஏ-என்பவன், (ஊர் பேர் வகையரா) பி-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த நஷ்டவிமோசனப் பத்திரம் என்னவென்றால், (ஊர் பேர் வகையரா) சி-என்பவன் தன்னுடைய மைனர் பெண்களின் விவாகத்திற்காக அவன் வாங்கிய கடனைத்தீர்க்கவேண்டியதற்காக (இன்ன ஊர் இன்ன) சொத்துக்களை உமக்கு (இத்தனை) ரூபாய்க்கு கிரயஞ்செய்து கொடுத்ததில், ஷை கிரயத்தை ஆட்சேபிக்கக்கூடிய பின் வார்சுகள் ஏற்பட்டு கிரயத்தை ரத்துசெய்தாலும், அல்லது வேறுவிதமாய் நஷ்டமுண்டாகினாலும் அந்தநஷ்டத்தை ஈடுசெய்யக்கூடிய இதனடியில் கண்ட சொத்துக்களை உமக்கு ஷை கிரயத்தொகை ரூபா (இத்தனை)க்கு ஜாமீனாகவைக்கிறேன். மேற்படி சொத்தில் எவ்வித வில்லங்கங்களுமில்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

சொத்து விபரம்.

சாக்ஷிகள். கையெழுத்து.

எழுதியது.

---

46 கூட்டுச்சீட்டு.

(a) 19 -ம்வூ மீ உ ஜில்லா தாலூக்கா கிராமத்திலிருக்கும் (இன்னார்) குமாரர் (இன்னார்) ஜாதி மதம் தொழில் (இதேமாதிரி மெம்பர் எத்தனைபேர் இருக்கிறார்களோ அத்தனை பேர்களுடைய பெயர் ஜாதி ஊர் பேர் முதலியதைக்காட்டவும்.)

ஆக நாம் 20 பேரும் சேர்ந்து செய்துகொண்ட பிரேஸ்கூட்டு சீட்டின் உடன்படிக்கை. அடியில்கண்ட விபரப்படி நாளது (இன்ன) வருஷம் அற்பிசி மாதம் தீபாவளி அமாவாசை முதல்கெடுவாக ஆரம்பித்து (இன்ன) வருஷம் சித்திரைமாதம் அமாவாசையோடு முடிவாகிற $6\frac{1}{2}$ வருஷத்துக்கு சீட்டு 1-க்கு ரூபா 100 வீதம் சீட்டு நெம்பர் 14-க்கு ரூபா 1400 ஆக ஏற்படுத்தி அந்தந்தவருஷம் அற்பிசிமாசம் தீபாவளி அமாவரையிலும் சித்திரைமாதம் அமாவாசையிலும் சீட்டு

நடத்துவதாக நிச்சயித்திருப்பதில், சீட்டுக் கடைசிவரையில் தவறாமல் சரிவர நடத்துவதற்காக நமக்குள் ஒரு சீட்டுக்காரர் ஆகிய (இன்னாரை) யேஜண்டாக ஏற்படுத்தியிருப்பதால், அந்த ஏஜண்டுமூலமாய் சீட்டை நடத்திவரவேண்டியது. ஆறுமாசத்திற்கொரு தடவை அற்பசிமாசம் அமாவாசையிலும் சித்திரைமாசம் அமாவாசையிலும் அவரவர்கள் சீட்டின் வீதாசாரப்படிக்குள்ள தொகைகளை ஏஜெண்டுதாரிடம் செலுத்தி சொந்தத்தில் லேபில் ஒட்டிரசீது பெற்றுக்கொள்ளவேண்டியது. மேல்கண்ட சீட்டு 14-க்கு மொத்தம் ரூபா 1400-க்கு மாசம் 1-க்கு 100-க்கு ரூபா $1\frac{1}{2}$ வீதம் ஆறுமாதத்துக்குள்ள வட்டி ரூபா 126 போகபாக்கி ரூபா 1274-ம் வைத்துக்கொண்டு 2-வது சீட்டு முதல் ஏஜண்டை விலக்கிமற்ற நெ. 13 சீட்டுகள் பேர்வழிகளும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற ஜாப்தாவில் கொடுத்திருக்கிற நெம்பர்படி சீட்டில் நெம்பர்கொடுத்து பேர்வழி சீட்டு எத்தனையோ அத்தனை வெத்து சீட்டும், அந்தச் சீட்டுடன் ஒரு பிரேஸ் சீட்டுங்கலந்து, பேர்வழிகள் சீட்டை ஒருவரிடத்திலும் பிரேஸ் கலந்த வெத்துச் சீட்டுகளை ஒருவரிடத்திலும் கொடுத்து சீட்டைக் குலுக்கி பேர்வழிச் சீட்டில் ஒன்றும் பிரேஸ்கலந்த சீட்டில் ஒன்றும் எடுத்துப்பார்த்து யார் பேருக்கு பிரேஸ் விழுகிறதோ அவர்களுக்கு ரூபா 1274 கொடுக்கவேண்டியது. அம்மாதிரியே 2-வது கெடுவுமுதல் 13-வது கெடுவரை பிரேஸ் விழுந்த பார்ட்டியை நீக்கி மற்றபேர் வழிகள் சீட்டைமட்டும் வைத்துக்கொண்டு பிரேஸ் குலுக்கவேண்டியது. 14-வது சீட்டின் பேர்வழிக்கு ரூபா 1400-யும் கொடுத்துவிடவேண்டியது. பிரேஸ் விழுந்து பெற்றுக்கொள்ள வேண்டிய பார்ட்டிகள் பின்னுள்ள கெடுக்களுக்கு வில்லங்கமில்லாத சொத்தின் பேரில் யேஜண்டு பேருக்கு ஜாமீன் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்துகொண்டு வந்து கொடுத்து ரசீது மூலமாய் தொகையைப்பெற்றுக்கொள்ளவேண்டியது. அம்மாதிரி ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுக்காதவரை பிரேஸ்தாருக்கு ஏஜெண்டுதார் தொகைகொடுக்க கட்டுப்பட்டவரல்ல ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுக்காத காரணத்தினால் பிரேஸ்தொகை யேஜண்டுதாரிடம் இருப்புக்குள்ள வட்டி நஷ்டமும் அதினாலுண்டாகிற மற்ற எவ்வித நஷ்டமும் பிரேஸ்தாரரை சேர்ந்ததே தவிர ஏஜண்டுக்கு சம்பந்தமில்லை. ஏஜண்டு தொகை வசூல்செய்துவைத்து பார்ட்டிகளுக்கு பிரேஸ் தொகையை கொடுக்கவேண்டிய சிரமத்திற்காக வட்டிபிடித்த மன்னியில் முதலாவது சீட்டிலேயே பூரா ரூபாய் 1400-யும் ஏஜண்டு எடுத்துக்கொள்ள வேண்டியது. 2-வது கெடுவுமுதல் ஒவ்வொரு கெடுவிலும் ஏற்பட்டிருக்கிற வட்டிக்தொகை ரூபா 126-யும் ஏஜண்டு பிரேஸ் விழுந்தவர்களை விலக்கி பிரேஸ் விழாதவர்களுக்கு வீதாசாரமாகப் பிரித்துக் கொடுக்கவேண்டியது பிரேஸ் விழுந்தவர்கள் வட்டிப்பிடித்த மன்னியில் பூரா தொகையும், பிரேஸ் விழாதவர்கள் வட்டிப்பிடித்தம் போக மீதி தொகையையும் ஒவ்வொரு கெடுவின் அமாவாசைதினம் முதல் 5 தேதிக்குள் ஏஜண்டுதாரிடம் பணத்தைகொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியது. கெடுப்படி ஏஜண்டினிடம் தொகை கொடுக்காதபட்சத்தில் பிரேஸ் விழாத பார்ட்டிகள் வட்டி லாபத்தை இழந்து அந்தகெடுவிற்கு செலுத்த வேண்டிய சீட்டின் பூராத்தொகை ரூபா 100-ம் அதற்கு மாதம் ஒன்றுக்கு 100-க்கு வட்டி ரூபா 2 வீதம் வட்டிசேர்த்து செலுத்தவேண்டியது. பிரேஸ் விழுந்த

பார்ட்டிகள் கெடுப்படி துகை கொடுக்காதபட்சத்தில் பின்னுள்ள பூராகெடுவை யெதிர்பாராமல் தவறின கெடுவுமுதல் பின்னுள்ள பூரா கெடுவின் துகையையும் அதற்கு மாதம் 1-க்கு 100-க்கு 2 ரூபா வீதம் வட்டிசேர்த்து செலுத்தவேண்டியது. பிரேஸ் விழுந்த பார்ட்டிகளுக்கு அமாவாசைதினம் முதல் 30 நாளைக்குள்ளாக மேலேகண்ட வீதப்படி ஜாமீன்பத்திரம் ஏஜெண்டு பேருக்கு எழுதி வாங்கிக் கொண்டு தொகையை பெற்றுக்கொள்ளவேண்டியது. ஜாமீன்பத்திரம் எழுதிக் கொடுத்தபின் ஏஜெண்டு பார்ட்டிகளுக்கு தொகை கொடுக்காத பக்ஷத்தில் 30 நாளைக்குமேல் நிற்கிறகாலத்துக்கு மாதம் 1-க்கு 100-க்கு 2-வீதம் ஏஜெண்டு வட்டி சம்மதிசெய்யவேண்டியது. பிரேஸ்விழுந்த பார்ட்டிகள் ஜாமீன்பத்திரம் எழுதிக் கொடாமலிருக்கும் பக்ஷத்தில் பிரேஸ்துகையிலிருந்து பின் கெடுக்களின்தொகையை நிறுத்திக்கொண்டு மீதிதுகையை ஏஜெண்டு அந்த பார்ட்டிக்கு கொடுத்துவிடவேண்டியது.

(b) 19 -ம்ஸூ மீ உ ஜில்லா தாலூக்கா கிராமத்திலிருக்கும் (இன்னார்) குமாரர் (இன்னார்) ஏஜெண்டாகவும் அடியில் கையொப்பமிட்ட (இத்தனை) மெம்பர்கள் அடங்கிய ஏல கூட்டு சீட்டை (இன்ன) தேதியில் ஆரம்பித்து மாதம் வரையில் இன்ன இடத்தில் நடத்துவதற்காக நாம் அனைவரும் ஏகோபித்து செய்துகொண்ட உடன்படிக்கை.

(1) இந்த ஏல சீட்டு (இத்தனை) மெம்பர்களுக்கு குறையாமல் ஆரம்பிக்க வேண்டியது. மெம்பர்கள் தங்களுடைய மாதாந்திர சந்தாவை கசர் துகை போக மீதியை இன்ன தேதிக்குள் செலுத்தவேண்டும்.

(2) மாதந்தோறும் தேதியில் பகல் -மணிக்கு இடத்தில் அப்பொழுது ஆஜராய் இருக்கும் மெம்பர்களை வைத்துக்கொண்டு சீட்டை ஏலத்தில் குறைந்த துகைக்கு கேட்பவர்களுக்கு விடப்படும். ஏலமெடுத்தவர்கள் பிந்திய மாதங்களுக்கு செலுத்தவேண்டிய துகைக்கு தகுந்த ஜாமீன்கொடுத்து ஏலத்துகையைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. (முன் கூட்டுசீட்டில் கண்ட நிபந்தனைகளையும் சந்தர்ப்பத்துக் கேற்றபடி சேர்த்துகொள்ளவும்.)

ஏஜெண்டு ஜாமீன் காண்பித்த சொத்து விவரம்.

(சீட்டுப் பேர்வழி ஊர் பேர் வகையரா, இத்தனை சீட்டு முதலியதுடன் வரிசைக்கிரமமாக.)

சாக்ஷிகள். கையெழுத்துகள்.

எழுதியது.

	ரூ.	அ.
இதற்கு ஸ்டாம்புக் கிரயம் பார்ட்டிகள் சேர்ந்து எழுதிக்கொள்ளும் உடன்டடிக்கை)	0	12

ரிஜிஸ்தரேஷன் பீசு மொத்தத் துகை மதிப்பின்பேரில் ஏற்படவேண்டும்.

கூட்டுச் சீட்டை கெடுவுக்கு முந்தி நிறுத்தி அவரவர் கொடுத்த பணத்தைப் பிரித்துக்கொடுப்பதற்காக ஏற்பட்ட தஸ்தாவேஜுக்கு (கூட்டுச்சீட்டுப் பிரிவினை தஸ்தாவேஜு) என்று பெயர்.

அடியில்கண்டபடி பல பத்திரங்களைச்சேர்த்து ஒருதஸ்தாவேஜாக எழுதிக்கொள்ளலாம் :—

போக்கியம்+குத்தகை; குத்தகை+அடமானம்; ஜீவனும்சம் + குத்தகை; கிரயம்+குத்தகை டிரான்ஸ்பர்; டிரஸ்டு+அடமானம்; டிரஸ்டு+அக்கிரிமெண்டு; செட்டில்மெண்டு—டிரஸ்டு; தானம்—டிரஸ்டு; விடுதலை—டிரஸ்டு; ஜீவனும்சம்—டிரஸ்டு; பரீகத்து—டிரஸ்டு; கிரயம்—இன்டெம்னிடி; அடமானம்—இன்டெம்னிடி; அக்ரிமெண்டு—பாண்டு; அடமானம்—பாண்டு; அடமானம்—இன்டெம்னிடி; கூட்டுப்பங்கு—பாண்டு; கூட்டுப்பங்கு—அடமானம்; உயில்—சுவீகார அதிகாரம்; உயில்ரத்து—உயில்; இதுபோல் சந்தர்ப்பங்களுக்கு தகுந்தாற்போல இரண்டுக்கு மேற்பட்ட பத்திரங்களை ஒரே தஸ்தாவேஜில் செய்துகொள்ளலாம்.

மூன்றுவது தஸ்தாவேஜுகள் முற்றிற்று.

4-கோர்ட் கட்டண விஷயங்கள்.

1870-ம்ஞூத்து 7-வது ஆக்ட்.

1. நஷ்டமல்லது பிரதிப் பிரயோசனத்தைக் குறித்தாவது, ஜீவனும்சம், வருஷவாரி அல்லது காலக்கிரமமாய் செலுத்தப்படத்தக்க வேறே தொகை, ஆகிய இவற்றின் பாக்கியைக் குறித்தாவது, கொண்டுவரப்படுகிற வியாச்சியங்களுள்பட பணத்தைக் குறித்த வியாச்சியங்களிலே தாவா செய்யப்பட்ட தொகைக்கேற்றபடி கணக்கிட்டு ஸ்டாம்பு வாங்கவேண்டும்.

ஜீவனும்சத்தையும், வருஷவாரி அல்லது காலக்கிரமமாய் செலுத்தப்படத்தக்க தொகைகளைக் குறித்த தாவாக்களிலே, வியாச்சிய விஷயத்தின் மதிப்புத்தொகைக்குத் தகுந்தபடி கணக்கிடவேண்டும். அந்த மதிப்புத்தொகை ஒரு வருஷத்துக்கு செலுத்தப்படத்தக்கதாய் தாவா செய்யப்பட்ட தொகைக்கு பத்து மடங்காக எண்ணம்படும்.

2. பணந்தவிர தாவா விஷயம் அசையும் பொருளாயிருந்தால் பிராது தாக்கல் செய்கிற தேதியில் அந்தப்பொருளின் விலை ஊரில் என்னமாயிருக்கிறதோ அதன்பேரில் மதிப்புப் போடவேண்டும்.

வியாச்சிய விஷயம் ஹக்கைக்குறித்த தஸ்தாவேஜுகள் போன்ற விலை மதிப்பில்லாத அசையும் பொருளைக்குறித்தும், குடும்ப சமுதாயமாய்ப் பொதுவாயிருக்கிற சொத்தை பங்கிட்டுக்கொள்வதற்கான பாத்தியதையை நிறைவேற்றுவதற்கும், பரிகாரத்தை பின்னால் செய்யக்கூடிய யாதொரு டிக்கிரி அல்லது உத்தரவைப்பெறுவதற்கும், இன்ஜங்க்ஷன் என்னும் கட்டளை பெறுவதற்கும். (இதில் வேறே விதமாய்ச் சொல்லிபிராததாய்) நிலத்திலுண்டாகும் யாதொரு பிரயோசனத்தைப்பற்றிய பாத்தியதையைக் குறித்தும், விஷயங்களிலே, அதற்கேற்றபடி மதிப்பின் கணக்கேற்படுத்தப்படும்.

3. கணக்குகளைக் குறித்துச் செய்கிற தாவாக்களிலே தேடிக்கொள்ளப்படும் பரிகாரத்துக்கு பிராதிலாவது, அப்பீல் விண்ணப்பத்திலாவது ஏற்படுகிற மதிப்புத்தொகைக் கேற்றபடி கணக்கேற்படுத்தப்படும்.

அப்படிப்பட்ட வியாச்சியங்களிலெல்லாம் வாதி கேட்டுக்கொள்ளுகிற பரிகாரத்துக்கு அவன் ஏற்படுத்துகிற மதிப்புத் தொகையைக்

கண்டெழுதவேண்டும்; நிலங்கள், தோட்டங்கள், வீடுகள் இவைகளின் ஸ்வாதீனத்தைக்குறித்த வியாச்சியங்களிலே, வியாச்சிய சொத்தின் அல்லது விஷயத்தின் மதிப்புக்குத் தகுந்தபடி கணக்கேற்படுத்தவேண்டும்.

வியாச்சியசொத்து நிலமாயிருந்தால், அந்த மதிப்புத்தொகை:—

(a) அந்த நிலமானது முழுஸ்திதியாகவாவது, ஒரு ஸ்திதியின் நிச்சயமான பங்காகவாவது சர்க்காருக்கு வருஷவாரி தீர்வை செலுத்துகிறதாயிருந்தாலும், அல்லது அப்படிப்பட்ட ஸ்திதியின் பாகமாகி பிரத்தியேகமாய் தீர்வை போட்டிருக்கிறதாய் கலெக்டருடைய ரெஜிஸ்டரில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், அந்தத் தீர்வை நிஷ்கரிஷையான சாசுவத பேரீஜாயிருக்குமாகில், அவ்விதஞ்செலுத்தப்படத்தக்க தீர்வைக்கு பத்தத்தனையாயிருப்பதாகவும்,

(b) நிலம், சர்க்காருக்கு வருஷவாரி தீர்வை செலுத்துகிறதாய் முழுஸ்திதியாகவாவது, ஒருஸ்திதியின் நிச்சயமான பங்காகவாவது இருந்தாலும், அல்லது அப்படிப்பட்ட ஸ்திதியின் பாகமாயிருந்து கலெக்டருடைய ரெஜிஸ்டரில் பிரத்தியேக தீர்வை போட்டிருப்பதாய் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், அந்தத்தீர்வை நிஷ்கரிஷையான பேரீஜாயிருந்தாலும், சாசுவதமானதாயிராவிட்டால் அவ்விதம் செலுத்தப்படத்தக்க தீர்வைக்கு ஐந்தத்தனையாயிருப்பதாகவும்.

(c) நிலம் அவ்விதத் தீர்வை செலுத்தாததாகவாவது, அப்படி செலுத்துவதினின்றும் சிலபாகம் நிவர்த்திசெய்யப்பட்டிருந்தாலும், அப்படிப்பட்ட தீர்வைக்குப் பர்த்தியாய் யாதொரு நிஷ்கரிஷையான தொகை செலுத்தும்படியாய் ஏற்பட்டதாயிருந்தாலும், பிளெயிண்டு தாக்கல்செய்கிற தேதிக்கு அடுத்த முந்தியவருஷத்தில் அந்த நிலத்தி லுண்டான நிகரவரும்படிக்கு பதினைந்தத்தனையாயிருப்பதாகவும்,

[குறிப்பு:—நிலத்தின் வரும்படி சிலவுபோக மிச்சமில்லாதிருந்தால் அக்கம்பக்கத்தின் நிலத்தின் கிரயத்தின்பேரில் இதற்கு மதிப்பை கோர்ட்டார் போடுவார்கள்.]

(d) நிலம், சர்க்காருக்கு தீர்வை செலுத்துகிற ஸ்திதியின் பாகமாயிருந்தபோதிலும், அந்தஸ்திதியின் நிஷ்கரிஷையான பாகம் மேற்கண்டபடி தீர்வை பிரத்தியேகமாய்ப் போடப்படாமலிருந்தால், அந்த நிலத்தின் விலை ஊரில் என்ன மதிப்பிடுகிறார்களோ அந்த மதிப்பாயிருப்பதாகவும்,—எண்ணப்படும்.

(2) கோர்ட்டு கட்டண விகிதம்.

(1922-வருஷத்து மதருஸ் கோர்ட் பீஸ் ஆக்டால் திருத்தப்பட்டது.)

1-வது ஷெட்யூல்—தாவாக்களின் பெருமானத்தை அனுசரித்த விகிதம்.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
1. யாதொரு ஸிவில் கோர்ட்டுக்காவது ரெவினியூகோர்ட்டுக்காவது கொடுக்கப்பட்ட பிளெயிண்டு அல்லது அப்பீல் விண்ணப்பம்.	ரு. அ.
(a) விவாதத் தொகையாவது, விவாத விஷயத்தின் மதிப்பாவது 5 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	0—8
(b) அந்தத்தொகை அல்லது மதிப்பு 5 ரூபாய்க்கு மேற்பட்டால், 100 ரூபாய் வரையிலே 5 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 5 ரூபாய்க்காவது அதன் பாதத்திக்காவது	0—9
(c) அந்தத்தொகை அல்லது மதிப்பு 100 ரூபாய்க்கு மேற்பட்டால் 1000 ரூபாய் வரையிலே, 100 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 10 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது ...	1 2
(d) அந்தத் தொகை அல்லது மதிப்பு 1000 ரூபாய்க்கு மேற்பட்டால், 5000 ரூபாய்வரையிலே, 1000 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 100 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	7 8
(e) அந்தத்தொகை அல்லது மதிப்பு 5000 ரூபாய்க்கு மேற்பட்டால், 10,000 ரூபாய் வரையிலே, 5,000 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 250 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	15 0
(f) அந்தத்தொகை அல்லது மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால், 20,000 ரூபாவரையிலே 10,000 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 500 ரூபாய்ககாவது அதன்பாகத்திற்காவது.	22 8
(g) அந்தத்தொகை அல்லது மதிப்பு 20,000 ரூபாய்க்கு மேற்பட்டால், 30 000 ரூபாவரையிலே 20,000 ரூபாய்க்கு அதிகப்படுகிற பிரதி 1000 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	30 0

குறிப்பு:—பிளெயிண்டு அல்லது அப்பீல் விண்ணப்பத்துக்கு வாங்கத்தக்க விகிதத்தை பின் வரும் கோர்ட்டு கட்டண் எ. ஜாப்தாவைப்பார்க்கவும்.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
	ரூ. அ.
(h) அந்தத்தொகை அல்லது மதிப்பு 30,000 ரூபாய்க்கு மேற்பட்டால், 50,000 ரூபாய் வரையிலே, 30,000 ரூபாக்கு மேற்படுகிற பிரதி 2000 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	30—0
(i) அந்தத்தொகை அல்லது மதிப்பு 50,000 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 5,000 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	30—0
2. ஸ்மால் காஸ் கோர்ட்டுகளால் பிடிக்கப்படக்கூடிய தன்மையுடைய யாதொரு வியாஜ்ஜியத்தில் ராஜதானிப்பட்டணத்துக்கு வெளியேயுள்ள யாதொரு கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட ப்ளெய்ன்ட், எதிர்க்கடன் அல்லது எதிர் தாவா உண்டென்று வாதிக்கிற விவரப்பத்திரிகை—விவாத விஷயத்தின் தொகை அல்லது மதிப்பு 500 ரூபாய்க்கு மேற்படாமலிருக்கும்போது	
விவாதத்தொகையாவது விவாத விஷயத்தின் மதிப்பாவது ஐந்து ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	0—6
அந்தத்தொகை அல்லது மதிப்பு 5 ரூபாய்க்கு மேற்பட்டால், 100 ரூபாய் வரையிலே 5 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 5 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது	0—6
அந்தத்தொகை அல்லது மதிப்பு 100 ரூபாய்க்குமேற்பட்டால், 500 ரூபாய் வரையிலே 100 ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி 10 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது	0--12
(கோர்ட்டு கட்டண பி. ஜாப்தாவைப் பார்க்கவும்.)	
3. ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் என்கிற குறித்த பரிகார ஆக்ட் 9-வது பிரிவின்படி ஸ்வாதீனத்திற்காகக் கொண்டுவரப்படும் வியாச்சியத்தில் பிளெயிண்டு	1-வது ஆர்ட்டிகிளில் கண்டிருக்கிற தொகையிலே பாதி கட்டணம்.
4. தீர்மானத்தைப் புனராலோசனை செய்யும்படிக்கான விண்ணப்பத்தை, டிக்கிரித்தேதிமுதல் தொண்ணூறும் நாளையிலாவது அதற்குப்பின்பாவது கொடுத்தால்	ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்துக்கு வாங்கத்தக்க கட்டணம்.
5. தீர்மானத்தை புனராலோசனை பண்ணும்படிக்கான விண்ணப்பத்தை, டிக்ரி தேதிமுதல் தொண்ணூறும் நாளைக்கு முன்னமே கொடுக்கப்பட்டால்	ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்துக்கு வாங்கத்தக்க கட்டணத்தில் பாதி.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
6. டிக்கிரியல்லாத யாதொரு தீர்மானம் அல்லது உத்தரவுக்கு நகல் அல்லது தர்ஜுமா:—அப்படிப்பட்ட தீர்மானமாவது, உத்தரவாவது, ஹைகோர்ட்டாரல்லாத வேறே யாதொரு சிவில்கோர்ட்டாராவது, யாதொரு ரெவினியூ கோர்ட்டாராலாவது, வேறே யாதொரு நீதிபரிபாலன அல்லது நிர்வாக அதிகாரியினுல் செய்யப்பட்டால் :—	ரூ. அ.
(a) தாவாதொகை அல்லது விஷயத்தின் மதிப்பு 50 ரூபாயாகவாவது அதற்குக் குறைந்ததாகவாவதிருந்தால்	0 6
(b) அந்தத் தொகை அல்லது சொத்தின் மதிப்பு 50 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால்	0 12
மேற்கண்ட தீர்மானம் அல்லது உத்தரவு ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டால்	1 8
6-A. யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரின் தீர்மானம் அல்லது உத்திரவின் நகல் அல்லது மொழிபெயர்ப்புக்கு	0 8
7. டிக்கிரி அல்லது உத்தரவுக்கு நகல்.—அப்படிப்பட்ட டிக்கிரியாவது, உத்தரவாவது ஹைகோர்ட்டாரல்லாத வேறே யாதொரு சிவில்கோர்ட்டாராலாவது ரெவினியூகோர்ட்டாராலாவது செய்யப்பட்டால்:—	
(a) அப்படிப்பட்ட டிக்கிரி அல்லது உத்திரவுசெய்யப்பட்ட வியாச்சியத்தில் தொகை அல்லது மதிப்பு 50 ரூபாயாகவாவது, அதற்குக்குறைந்ததாகவாவதிருந்தால்	0 8
(b) அந்தத்தொகை அல்லது மதிப்பு 50 ரூபாய்க்கு மேற்படுமாகில்	1 0
மேற்கண்ட டிக்கிரி அல்லது உத்திரவு ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டால்	4 0
8. யாதொரு வியாச்சியம் அல்லது நடவடிக்கையைச் சேர்ந்தவர்களால் அசலுக்குப் பதிலாக கொடுக்கப்படும், ஸ்டாம்பு தீர்வை வாங்கக் கூடியதுமாயிருக்கிற தஸ்தாவேஜுக்கு நகல்:—	
(a) அசலுக்கு ஏற்பட்ட ஸ்டாம்பு தீர்வை 8 அணுவுக்கு மேற்படாமலிருந்தால்	அசலுக்கு ஏற்பட்ட ஸ்டாம்பு தீர்வை.
(b) மற்ற விஷயங்களில்	0 8

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
9. யாதொரு ரெவினியூ அல்லது ஜுடிஷியல் நடவடிக்கையின் உத்தரவு அல்லது நகலாவது, யாதொரு சிவில் கிரிமினல் அல்லது ரெவினியூ கோர்ட்டிலிருந்தாகிலும் ஆபீசிலிருந்தாகிலும், யாதொரு டிவிஷனல் ஆபீசிலிருந்தாகிலும், எடுக்கப்பட்ட யாதொரு கணக்கு, ஸ்டேட்மெண்டு, ரிப்போர்ட், அல்லது அதைப்போன்றதற்காவது நகல்:-	
பிரதி 360 வார்த்தைகளுக்காவது, 360 வார்த்தைகளுக்குக் குறைந்த, சில்லரை வார்த்தைகளுக்காவது	0 ꝛ
10. [1890-ம் வருஷத்து 3-வது கார்டியன்களையும் வார்டுகளையும் குறித்த ஆக்டினால் ரத்து செய்யப்பட்டது.]	
11. உயிலுடன் சேர்ந்த அல்லது சேராத உயிலின் ருசுப்பத்திரம் அல்லது அதிகாரப்பத்திரம்:—எதன் விஷயமாய் ருசுப்பத்திரம் (ப்ரொபேட்) அல்லது அதிகாரப்பத்திரம் (லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்ட்ரேஷன்) கொடுக்கப்பட்டதோ அந்த சொத்தின் மதிப்பு 1000 ரூபாய்க்கு அதிகப்பட்டும் 5000 ரூபாய்க்கு அதிகப்படாமலுமிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு இரண்டு வீதம்.
அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு 5000 ரூபாய்க்கு அதிகப்பட்டிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின் மேல் நூற்றுக்கு மூன்று வீதம்.
ஆனால், யாதொரு ஆஸ்தியில் சேர்ந்த யாதொரு சொத்தின் விஷயமாக 1889-ம் வருஷத்து ஸக்ஸெஷன் ஸெர்டிபிகேட் ஆக்டின்படிக்காவது 1827-வருஷத்து 8-வது பம்பாய் கோடைச்சேர்ந்த ரெகுலேஷன்படிக்காவது ஸெர்டிபிகேட் கொடுத்தான பிற்பாடு அதே ஆஸ்தியைப்பற்றி ப்ரொபேட் அல்லது லெட்டர்ஸ் ஆவ் அட்மினிட்ரேஷன் கொடுக்கப்படுமாகில், பின்னால் சொல்லப்பட்டதன் விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க கட்டணமானது முன்னால் சொல்லப்பட்டதன் விஷயமாய் செலுத்தப்பட்ட கட்டணம்போக மிகுதியாகும்.	
12. 1889-வருஷத்து ஸக்ஸெஷன் ஸெர்டிபிகேட் ஆக்டின்படி கொடுக்கப்படும் ஸெர்டிபிகேட்.	
இந்த ஆக்டின் 8-வது பிரிவின்படிக்கான ஸெர்ட்டிபிகேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பு ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமலிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின் மேல் நூற்றுக்

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
	கு இரண்டு வீதமும், ஆக்டின் 10-வது பிரிவின் பிரகாரம் எதற்கு ஸெர்டிபிகேட் வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்று வீதமும்.
அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு 1,000 ரூபாய்க்கு அதிகப்பட்டிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு 3 வீதமும், ஆக்டின் 10-வது பிரிவின் பிரகாரம் எதற்கு ஸெர்டிபிகேட் வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பின் மேல் 100-க்கு நாலரை வீதமும்.

குறிப்பு:—(1) கடன்தொகை என்பது ஸெர்டிபிகேட்டில் கடனைச்சேர்க்க வேண்டியதென்று எப்போது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த தினத்தில் வட்டியும் சேர்ந்து எவ்வளவு தொகை ஆகிறதென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளக்கூடுமோ அவ்வளவு வரையில் அந்தத் தொகை என்று அர்த்தமாகும்.

(2) ஸெர்டிபிகேட்டில் கண்ட யாதொரு பத்திரத்தின் விஷயமாய் ஆக்டின்படி யாதொரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் கொடுக்கப்படாமலிருந்தாலும், அப்படிப்பட்ட அதிகாரம் அந்தப்படி கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் அது பத்திரத்தின்மேல் வரவேண்டிய வட்டி அல்லது பங்கு வீதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த பத்திரத்தைக் கைமாறச் செய்வதற்காகவாவது ட்ரான்ஸ்பர் செய்வதற்காகவாவது அவ்விரண்டு காரியங்களையுஞ் செய்வதற்காகவாவது கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த பத்திரத்தின் மதிப்பு என்பது-ஸெர்டிபிகேட்டில் பத்திரத்தைச் சேர்க்கவேண்டியதென்று எப்போது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த தினத்தில் அந்த பத்திரத்தின் ஊர் விலை எவ்வளவிருக்கிறதென்று நிச்சயமாய் அறிந்து கொள்ளக்கூடுமோ அவ்வளவு வரையில் அந்த ஊர் விலையென்று அர்த்தமாகும்.

(3) சிவில் கோர்ட்டுகளில் வியாச்சியம் தாக்கல் செய்வதில் தாவாவின் பெறுமானத்தை அனுசரித்து செலுத்தவேண்டிய ஸ்டாம்பு கட்டண ஜாபிதா.

(A) 1-வது ஆர்டிகிலில் சொல்லப்பட்ட ப்ளெய்ன்டு முதலியவைகளின்மேல்.

தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அடியிற் கண்ட ரூ தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.		தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அடியிற் கண்ட ரூ தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
...	5	0	8	180	190	21	5
5	10	1	1	190	200	22	7
10	15	1	10	200	210	23	9
15	20	2	3	210	220	24	11
20	25	2	12	220	230	25	13
25	30	3	5	230	240	26	15
30	35	3	14	240	250	28	1
35	40	4	7	250	260	29	3
40	45	5	0	260	270	30	5
45	50	5	9	270	280	31	7
50	55	6	2	280	290	32	9
55	60	6	11	290	300	33	11
60	65	7	4	300	310	34	13
65	70	7	13	310	320	35	15
70	75	8	6	320	330	37	1
75	80	8	15	330	340	38	3
80	85	9	8	340	350	39	5
85	90	10	1	350	360	40	7
90	95	10	10	360	370	41	9
95	100	11	3	370	380	42	11
100	110	12	5	380	390	43	13
110	120	13	7	390	400	44	15
120	130	14	9	400	410	46	1
130	140	15	11	410	420	47	3
140	150	16	13	420	430	48	5
150	160	17	15	430	440	49	7
160	170	19	1	440	450	50	9
170	180	20	3	450	460	51	11

தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அதிரில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.		தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அதிரில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
460	470	52	13	810	820	92	3
470	480	53	15	820	830	93	5
480	490	55	1	830	840	94	7
490	500	56	3	840	850	95	9
500	510	57	5	850	860	96	11
510	520	58	7	860	870	97	13
520	530	59	9	870	880	98	15
530	540	60	11	880	890	100	1
540	550	61	13	890	900	101	3
550	560	62	15	900	910	102	5
560	570	64	1	910	920	103	7
570	580	65	3	920	930	104	9
580	590	66	5	930	940	105	11
590	600	67	7	940	950	106	13
600	610	68	9	950	960	107	15
610	620	69	11	960	970	109	3
620	630	70	13	970	980	110	5
630	640	71	15	980	990	111	5
640	650	73	1	990	1,000	112	7
650	660	74	3	1,000	1,100	119	15
660	670	75	5	1,100	1,200	127	7
670	680	76	7	1,200	1,300	134	15
680	690	77	9	1,300	1,400	142	7
690	700	78	11	1,400	1,500	149	15
700	710	79	13	1,500	1,600	157	7
710	720	80	15	1,600	1,700	164	15
720	730	82	1	1,700	1,800	172	7
730	740	83	3	1,800	1,900	179	15
740	750	84	5	1,900	2,000	187	7
750	760	85	7	2,000	2,100	194	15
760	770	86	9	2,100	2,200	202	7
770	780	87	11	2,200	2,300	209	15
780	790	88	13	2,300	2,400	217	7
790	800	89	15	2,400	2,500	224	15
800	810	91	1	2,500	2,600	232	7

தாவா தொகை அல்லது மதிப்பு தீர்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அதிகம் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.		தாவா தொகை அல்லது மதிப்பு தீர்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அதிகம் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்.	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
2,600	2,700	239	15	7,750	8,000	592	7
2,700	2.800	247	7	8,000	8,250	607	7
2,800	2,900	254	15	8,250	8,500	622	7
2,900	3,000	262	7	8,500	8,750	637	7
3,000	3,100	269	15	8,750	9,000	652	7
3,100	3,200	277	7	9,000	9,220	667	7
3,200	3,300	284	15	9,250	9,500	682	7
3,300	3,400	292	7	9,500	9,750	697	7
3,400	3,500	299	15	9,750	10,000	712	7
3,500	3,600	307	7	10,000	10,500	734	15
3,600	3,700	314	15	10,500	11,000	757	7
3,700	3,800	322	7	11,000	11,500	779	15
3,800	3,900	329	15	11,500	12,000	802	7
3,900	4,000	337	7	12,000	12,500	824	15
4,000	4,100	344	15	12,500	13,000	847	7
4,100	4,200	352	7	13,000	13,500	869	15
4,200	4,300	359	15	13,500	14,000	892	7
4,300	4,400	367	7	14,000	14.500	914	15
4,400	4,500	374	15	14,500	15,000	937	7
4,500	4,600	382	7	15,000	15,500	959	15
4,600	4,700	389	15	15,500	16,000	982	7
4,700	4,800	397	7	16,000	16,500	1,004	15
4,800	4,900	404	15	16,500	17,000	1,027	7
4,900	5,000	412	7	17,000	17,500	1,049	15
5,000	5,250	427	7	17,500	18,000	1,072	7
5,250	6,500	442	7	18,000	18,500	1,094	15
5,500	5,750	457	7	18,500	19,000	1,117	7
5,750	6,000	472	7	19,000	19,500	1,139	15
6,000	6,250	487	7	19,500	20,000	1,162	7
6,250	6,500	502	7	20,000	21,000	1,192	7
6,500	6,750	517	7	21,000	22,000	1,222	7
6,750	7,000	532	7	22,000	22,000	1,252	7
7,000	7,250	547	7	23,000	24,000	1,282	7
7,250	7,500	562	7	24,000	25,000	1,312	7
7,500	7,750	577	7	25,000	26 000	1,342	7

தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.		தாவா தொகை அல்லது மதிப்பு கீழ்க்கண்ட ரூபாய்க்கு மேற்பட்டு.	அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்.	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
26,000	27,000	1 372	7	36.000	38,000	1,582	7
27,000	28,000	1,402	7	38,000	40,000	1,612	7
28,000	2 ,000	1,4 2	7	40,000	42,000	1,642	7
29,000	30,000	1,462	7	42,000	44 000	1,672	7
30,000	32,000	1,492	7	44,000	46,000	1,702	7
32,000	34,000	1,522	7	46,000	48,000	1,732	7
34,000	36.000	1,522	7	48,000	50,000	1,762	7

வியாஜ்ஜியத்தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐயாயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது—முப்பது ரூபாய்.

(B) இந்த ஷெட்யூலின் 2-வது ஆர்ட்டிகிலில் சொல்லப்பட்ட ப்ளெய்ன்டுகள் முதலியவைகளின்மேல்.

ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
...	5	0	6	75	80	6	0
5	10	0	12	80	85	6	6
10	15	1	2	85	90	6	12
15	20	1	8	90	95	7	2
20	25	1	14	95	100	7	8
25	30	2	4	100	110	8	4
30	35	2	10	110	120	9	0
35	40	3	0	120	130	9	12
40	45	3	6	130	140	10	8
45	50	3	12	140	150	11	4
50	55	4	2	150	160	12	0
55	60	4	8	160	170	12	12
60	65	4	14	170	180	13	8
65	70	5	4	180	190	14	4
70	75	5	10	190	200	15	0

(B) இந்த ஷெட்யூலின் 2-வது ஆர்ட்டிகிலில் சொல்லப்பட்ட ப்ளெய்ன்டுகள் முதலியவைகளின்மேல்—தொடர்ச்சி.

ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
200	210	15	12	350	360	27	0
210	220	16	8	360	370	27	12
220	230	17	4	370	380	28	8
230	240	18	0	380	390	29	4
240	250	18	12	390	400	30	0
250	260	19	8	400	410	30	12
260	270	20	4	410	420	31	8
270	280	21	0	420	430	32	4
280	290	21	12	430	440	33	0
290	300	22	8	440	450	33	12
300	310	23	4	450	460	34	8
310	320	24	0	460	470	35	4
320	330	24	12	470	480	36	0
330	340	25	8	480	490	36	12
340	350	26	4	490	500	37	8

2-வது ஷெடியூல்—நிஷ்கரிஷையான கட்டணம்.

தாக்கல்செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
1. விண்ணப்பம் அல்லது மனு,—	
(a) யாதொரு கஸ்டம் அல்லது எக்ஸைஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தரெவருக்காவது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது சர்க்காருடன் லேவாதேவி வைத்துக்கொண்டிருக்கிறவனால் அதே லேவாதேவி விஷயமாய்க்கொடுக்கிற மனுவுக்கும்	1 அணா.
சர்க்காரால் நேராகப் பார்வையில் வைத்துக்கொண்டும் புதிதாய் யாதொரு காலத்துக்குமட்டும் சுவாதீனத்தில் விடப்பட்டிருக்கிற நிலத்தை வைத்திருப்பவனால், அந்த நிலவிஷயமாய் யாதொரு லாண்ட் ரெவினியூ ஆபீசருக்குக் கொடுக்கிற மனுவுக்கு...	2 அணா.
யாதொரு விடத்தின் சுகாதாரக் குறைவை சீர்திருத்தும் விஷயமாய் நகரபரிபாலன சபையாருக்குக் கொடுக்கிற மனுவுக்கு.	1 அணா.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
அசல் விசாரணை அதிகாரமுடைய பிரதான ஸிவில் கோர்ட்டல்லாத யாதொரு சிவில்கோர்ட்டுக்காவது, யாதொரு கலெக்டருக்காவது, அல்லது மற்ற ரெவினியூ ஆபீசருக்காவது ஐம்பதுரூபாய்க்குக் குறைந்த யாதொரு வியாச்சியம் விஷயமாய் யங்கள் செய்யப்படுகிற மனுவுக்கு	2 அணா.
யாதொரு சிவில், கிரிமினல், அல்லது ரெவினியு கோர்ட்டுக்காவது, யாதொரு சங்கத்தார் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தருக்காவது, அந்த கோர்ட்டார், போர்டார் அல்லது உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட யாதொரு தீர்மானம் டிக்ரி அல்லது உத்தரவுக்காகிலும், அந்த கோர்ட் அல்லது ஆபிஸின் ரெகார்டிலிருக்கிற வேறே யாதொரு தஸ்தாவேஜுக்காகிலும் நகல் அல்லது மொழிபெயர்ப்பு வாங்கும்பொருட்டுக் கொடுக்கப் படும்போது.	ஷை
(b) போலீஸ் ஆபீஸர் வாரண்டில்லாமல் பிடிக்கக் கூடிய குற்றந்தவிர ; மற்ற குற்றங்களைப்பற்றிய பிராதை யாதொரு கிரிமினல் கோர்டில் கொடுக்க...	க்ரிமினல் பிரியாதின் விஷயத்தில் ஒரு ரூபாயும் மற்றவைகளில் 12 அணா.
சிவில், கிரிமினல், ரெவினியூ கோர்ட்டார் கலெக்டர் அல்லது வேறே ரெவினியூ உத்தியோகஸ்தர், அல்லது மாஜிஸ்ட்ரேட் இவர்களுக்குச் செய்யப்படும் மனுவிஷயமாய், ஸ்டாம்புத் தீர்வை வேறே விதமாய் பிரஸ்தாபிக்கப்படாமலிருந்தால்	
கோர்ட்டில் தீர்வை அல்லது குத்தகை அல்லது வாடகையை கட்டுவதற்காக மனு	ஷை
யாதொரு நிலசுவான்தாரனல் அந்த நிலத்தின் குத்தகை அல்லது வாடகைக்காரனுக்கு கொடுக்கவேண்டிய காம்பன்ஸேஷன் துகை இவ்வளவென்று யாதொரு கோர்ட்டாரால் ஏற்படுத்துவதற்காகக் கொடுக்கிற மனுவுக்கு	8 அணா.
(c) இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிராததாய் யாதொரு ரெவினியூ கம்மிஷனர், மேல் விசாரணை அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது	1½ ரூபாய்.
(d) (i) ஒரு உத்தரவைப் புனராலோசனை பண்ணுவதற்காக 1908-ம்ஷுத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது—	
(a) அந்த உத்தரவு எதற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையின் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	5 ரூபாய்.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
(b) அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையின் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால்	10 ரூபாய்.
(ii) அந்தப் பிரிவின்படிக்கன்றி மற்றப்படி ஹைகோர்ட்டுக்குக்கொடுக்கப்படும்போது	2 ரூபாய்.
1-A. யாதொரு ஸிவில் கோர்ட்டாரை வேறொரு கோர்ட்டிலிருந்து ரெகார்டுகள் வரவழைக்கும்படி கேட்டுக்கொள்ளும் விண்ணப்பம். அந்தக் கோர்ட்டார் அந்த விண்ணப்பத்தின்படி உத்தரவு செய்து, அப்படிப்பட்ட ரெகார்டுகளை அனுப்புவதற்காகத் தபாலை உபயோகிக்கவேண்டியிருக்குமென்று அபிப்பிராயப் படும்போது.	இந்த ஷெட்யூலின் 1-வது ஆர்டிகிலைச் சேர்ந்த (a, b, d) குறிப்பிட்ட பகுதிகளின்படியாவது அந்த விண்ணப்பத்தின்மேல் விதித்து வாங்கப்பட்ட யாதொரு கட்டணத்துடன் கூட பன்னிரண்டணா.
2. பாபர் வியாச்சியஞ்செய்ய அனுமதி கொடுப்பதற்காக மனு ...	8 அணா
3. பாபராக அப்பீல்செய்ய அனுமதிகொடுக்க மனு.	
(a) யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது ஸப்-கோர்ட்டுக்கு கொடுத்தால் ...	1 ரூபாய்.
(b) கம்மிஷனர் அல்லது ஹைகோர்ட்டுக்கு கொடுத்தால்.	2 ரூபாய்
4. [ரத்துசெய்யப்பட்டது.]	
5. அனுபோக சுதந்தரத்தை ஸ்தாபிக்கவாவது, இல்லையென்று ருஜூப்படுத்தவாவது செய்கிற வியாச்சியத்தில் கொடுக்கிற பிளெயிண்டு அல்லது அப்பீல் மனு	8. அணா.
6. கிரிமினல் புரொஸீஜர்கோட், அல்லது சீவில் புரொஸீஜர்கோட் இவைகளிலுள்ள எந்தப் பிரிவின்படிக்காவது யாதொரு கோர்ட்டார் அல்லது மாஜிஸ்ட்ரேட்டால் செய்த உத்திரவின்படி கொடுக்கப்பட்ட ஜாமீன் பத்திரம் அல்லது வேறே முச்சிலிக்கா. ...	மேற்படி.
7. இந்திய விவாக சம்பந்த நிவர்த்தி ஆக்ட் 49-வது பிரிவுப்படி உத்திரவாதப் பத்திரம் ...	மேற்படி.
8, 9. [ரத்துசெய்யப்பட்டன.]	

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
10. முக்தியார்நாமா அல்லது வக்காலத்து நாமா அல்லது யாதொரு கட்சிக்காரருக்குத் தாம் நிறுத்திக்கொள்ளப்பட்டிருப்பதாகப் பொருள்படுவதாய் அல்லது தெரிவிப்பதாய் யாதொரு அட்வொகேட்டால் கையெழுத்துசெய்யப்பட்டிருக்கும் யாதொரு தஸ்தவேஜு.	
ஏதாவது ஒரு கேஸை நடத்துவதற்காக—	
(a) ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு சிவில் அல்லது க்ரிமினல் அல்லது ரெவினியு கோர்ட்டுகளுக்காவது, யாதொரு கலெக்டர் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது. இந்த இலக்கத்தைச்சேர்ந்த (b) (c) குறிப்பிட்ட பகுதிகளில் கண்டிருக்கிறவர்கள் தவிர வேறே யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தருக்காவது கொடுக்கப்படும்போது; ...	1 ரூபாய்.
(b) ரெவினியூ-ஸர்க்கியூட் அல்லது கஸ்டம்ஸ் கமிஷனருக்காவது, பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரியல்லாத ஒரு டிவிழன் நிர்வாக அதிகாரங்கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தருக்காவது கொடுக்கப்படும்போது ...	$1\frac{1}{2}$ ரூபாய்.
(c) ஹைகோர்ட்டுக்காவது, பிரதான கம்மிஷனருக்காவது, ரெவினியூ போர்டுக்காவது மேலதிகாரமுடைய வேறே பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது. ...	3 ரூபாய்.
11. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட், 47-வது பிரிவு அல்லது 144-வது பிரிவின்படி யாதொரு விஷயத்தைத் தீர்மானிக்கும் உத்தரவு அடங்க யாதொரு உத்தரவின் மேல் அப்பீல் செய்துகொண்டு அது கொடுக்கப்படும்பொழுது அப்பீல் யாதாஸ்து.	
(a) ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு ஸிவில் கோர்ட்டுக்காவது, யாதொரு ரெவினியு கோர்ட் அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது ...	1 ரூபாய்.
(b) ஹைகோர்ட்டுக்காவது, பிரதான கம்மிஷனருக்காவது மேலதிகாரமுடைய வேறே பிரதான நிர்வாக அல்லது ரெவினியூ அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது. ...	2 ரூபாய்.
12. கேவியட் என்னும் மறியல் அல்லது முன்னெச்சரிக்கைப்பத்திரிகை ...	10 ரூபாய்.
13. [ரத்துசெய்யப்பட்டது.]	
14. கிறிஸ்துமதத்தை அவலம்பித்த இத்தேசஸ்தர்களுடைய விவாகத்தை ரத்து செய்வதற்கான 1866-ம் வருஷத்திய ஆக்டின்படி யாதொரு வியாஜ்ஜியத்தில் மனு ...	5 ரூபாய்.

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
15, 16. [ரத்துசெய்யப்பட்டன.]	
17. அடியிற்கண்ட (வகையான) வியாஜ்ஜியத்திலே ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து.—	
(i) லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகாரபத்திரத்தினால் ஸ்தாபிக்கப்படாத ஸிவில் கோர்ட்டுகளில் எதிலாவது யாதொரு ரெவின்யூ கோர்ட்டிலாவது செய்யப்பட்ட சுருக்க வகையான தீர்மானம் அல்லது உத்தரவை மாற்றவாகிலும் தள்ளிவிடவாகிலும் கொண்டுவரப்பட்டது; ...	15 ரூபாய்.
(ii) தீர்வைசெலுத்துகிற பூஸ்திதிகளின் சொந்தகாரர்களுடைய பெயர்களை ரெஜிஸ்டரில் செய்திருக்கிற யாதொருபதிவை மாற்றவாவது ரத்துசெய்யவாவது கொண்டுவரப்பட்டது;	15 ரூபாய்.
(iii) 1863-ம்வருஷத்து மதசம்பந்தமான இனங்களைக் குறித்த ஆக்ட் 14-வது பிரிவின்படியாவது 1908-ம்வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 91-வது அல்லது 93-வது பிரிவின்படியாவது பரிகாரத்துக்காகக் கொண்டுவரப்பட்டது. ...	50 ரூபாய்.
17-A அடியிற்கண்ட (வகையான) வியாஜ்ஜியத்திலே ப்ளெயிண்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து:—	
(i) எதனாலே பின்பு பரிகாரம் கேட்டுக்கொள்ளப்படவில்லையோ அப்படிப்பட்ட பரிஷ்கரமான டிக்ரியைப்பெற்றுக் கொள்ளுவதற்காகக்கொண்டுவரப்பட்டது ;	
(ii) தீர்மானத்தைத் தள்ளிவிடுவதற்காகக் கொண்டுவரப்பட்டது ;	
(iii) செய்துகொள்ளப்பட்டதாகச்சொல்லப்படும் ஸ்வீகாரமானது செலாவணியற்றதாகுமென்றாவது வாஸ்தவத்தில் செய்துக்கொள்ளபடவேயில்லையென்றாவது ஒரு நிர்ணயத்தைப் பெறுவதற்காகிலும் யாதொரு ஸ்வீகாரம் செலாவணியாகுமென்று ஒரு நிர்ணயத்தைப்பெருவதற்காகிலும் கொண்டுவரப்பட்டது.	
அடியிற்கண்ட எந்த கோர்ட்டுக்காகிலும் ப்ளெய்ன்ட்கொடுக்கப்பட்டிருந்தாலும், அப்பீல் யாதாஸ்தானது அந்தக் கோர்ட்டின் டிக்ரிக்கு விரோதமானதாயிருந்தாலும் -	
ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸிடி ஸிவில் கோர்ட் ...	15 ரூபாய்.
ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப்-கோர்ட் ...	அதிகாரவரம்பின் காரியங்களுக்காகமதிப்பு பதினாயிரரூபாய்க்குக்
17-B. யாதொரு வியாஜ்ஜியத்திலே விவாதத்திலுள்ள விஷயத்துக்கு ரொக்கமதிப்பு போடமுடியாமலிருந்து, அதற்காக இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிராமலிரு	

தாக்கல் செய்கிற விஷயங்கள்.	சரியான கட்டணம்.
க்கும் பட்சத்தில், அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்திலும் ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து.	குறைவாயிருந்தால், 100 ரூபாய். அந்த மதிப்பு பதினாயிரரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் 500 ரூபாய்.
அடியிற்கண்ட எந்த கோர்ட்டுக்காகிலும் ப்ளெய்ன்ட் கொடுக்கப்பட்டிருந்தாலும் அப்பீல் யாதாஸ்தானது அந்த கோர்ட்டின் டிக்ரிக்கு விரோதமானதாயிருந்தாலும்—	
ஒரு ரெவினியூ கோர்ட் ...	10 ரூபாய்.
ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸ்மால் ஸிவில் கோர்ட் ...	15 ரூபாய்.
ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப்-கோர்ட் ...	100 ரூபாய்.
18. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரோஸீஜர் கோடின் இரண்டாவது ஷெட்யூலில் கண்ட 17-வது அல்லது 20-வது பிரிவின்படிக்கான விண்ணப்பங்கள்.	
ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸ்மால் ஸிவில் கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது ...	15 ரூபாய்.
ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப்-கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது ...	100 ரூபாய்
19. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி கோர்ட்டாரின் அபிப்பிராயத்துக்கு யாதொரு விவாதாம்சத்தை அனுப்புவதாகக் கண்ட எழுத்துமூலமான உடன்படிக்கை.	
ஒரு டிஸ்டிரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸ்மால் ஸிவில் கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது ...	15 ரூபாய்.
ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப்-கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது ...	100 ரூபாய்.
20. 1869-ம் வருஷத்து இந்திய விவாகசம்பந்த நிவர்த்தி ஆக்ட் 44-வது பிரிவின்படிக்கான மனுக்கள் தவிர அதே ஆக்டின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு மனுவும், அதே ஆக்ட் 50-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு அப்பீல் யாதாஸ்தும் ...	20 ரூபாய்.
21. பார்ஸி விவாகத்தையும் விவாக சம்பந்த நிவர்த்தியையுங்குறித்த 1865-ம் வருஷத்திய ஆக்டின்படிக்கான ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து ...	மேற்படி.

(5) அடியில்கண்ட தஸ்தாவேஜுகளுக்கு கோர்ட்பீஸ் ஸ்டாம்ப் கிடையாதென்று கோர்ட்பீஸ் ஆக்டிலும், கவர்ன்மேண்டாராலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

(1) யாதொரு வியாச்சியத்தின் பிரதம விசாரணைக்குப் பிறகு யாதொரு கோர்ட்டாரால் வரவழைக்கப்பட்ட விவரப்பத்திரிகைகள்.

(2) மதராஸ் பிரெசிடென்சியிலுள்ள கிராமக்கோர்ட்டுகளால் பரிசீலனை செய்யப்பட்ட வியாச்சியங்களில் பிளெயிண்டுகள், மனுக்கள்.

(3) மதராஸ் பிரெசிடென்சியில் டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்தாருக்கு முன்பாக நடக்கிற வியாச்சியங்களில் பிளெயிண்டுகள், சம்மன்கள், கட்டளைகள்.

(4) 1816-ம்வருஷத்திய மதராஸ் 12-வது ரெகுலேஷன்படி கலெக்டர்களுக்கு முன்பாக நடக்கிற வியாச்சியங்களில் பிளெயிண்டுகள்.

(5) மரணசாசனத்தின் ப்ரொபேட்டும், அதிகாரப்பத்திரமும் எதற்காகக் கொடுக்கப்படுகின்றதோ அந்தத்தொகை அல்லது சொத்தின் கிரயம் 1000 ரூபாய்க்கு அதிகப்படாவிட்டால் அந்தப்ரொபேட்டும், அதிகாரப்பத்திரமும்.

(6) நிலத்தீர்வை சம்பந்தமான சங்கதிகளைக் குறித்தாவது, அதற்குண்டான பாத்தியதை அல்லது அதிலுள்ள சுதந்தரத்தை நிச்சயிப்பதைச்சேர்ந்த சங்கதிகளைக் குறித்தாவது, கலெக்டருக்காகிலும் பூமிபேரீஜ் பைசலாதிசெய்கிற வேறே உத்தியோகஸ்தருக்காகிலும், ரெவினியூ போர்டாருக்காகிலும் ரெவினியூ கமிஷனருக்காகிலும் அப்படிப்பட்ட பைசலாதி முடிவாய் ஊர்ஜிதமாவதற்கு முன்னமே விண்ணப்பம் அல்லது மனு.

(7) சர்க்கார் ஜலத்தை பாய்ச்சலுக்காக உபயோகஞ்செய்வதைக் குறித்த மனு.

(8) சாசுவதமாயல்லாமல் சர்க்கார் பேரீஜ் கிஷ்கரிஷையாயிருக்கிற நிலத்தை நேராய் சர்க்காரோடு கரார்நாமாவின்மேல் அனுபவித்து வருகிறவர் சாகுபடியை அதிகப்படுத்திக்கொள்ளவாவது, நிலத்தை விட்டுவிடவாவது உத்தரவாகவேண்டுமென்று யாதொரு லாண்ட் ரெவினியூ அதிகாரிக்குக் கொடுத்துக்கொள்ளுகிற மனு.

(9) நிலத்தை விட்டுவிடவாவது குத்தகைத்தொகையை அதிகப்படுத்தவாவது நோட்டீஸ் சேர்ப்பிக்கும்படி விண்ணப்பம்.

(10) ஜப்தி பண்ணும்படி ஏஜெண்டுக்குக் கொடுக்கிற அதிகாரப் பத்திரம்.

(11) சாட்சிசொல்லவாவது, தஸ்தாவேஜைக் கொண்டுவந்து காட்டவாவது ஆஜராகும்படிக்காகிலும், கோர்ட்டில் தட்சணம் கொண்டுவந்து தாக்கல் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட அபிடேவிட் (affidavit) பிரமாணப்பத்திரமல்லாத யாதொரு ஆதரவைக்கொண்டு வந்து காட்டுவது அல்லது தாக்கல் செய்வதைக் குறித்தாகிலும், சாட்சியையாவது வேறே எவரையாவது சம்மனனுப்பி வரவழைக்கும்படி (க்ரிமினல் பிராதல்லாத வேறே யாதொரு) முதல் விண்ணப்பம்.

(12) க்ரிமினல் விவகாரங்களிலே நபர் ஜாமீன் பத்திரங்களும் பிராது தொடருகிறதாகவாவது சாட்சிசொல்லுகிறதாகவாவது எழுதிக்கொடுக்கிற முச்சிலிக்காக்களும் நபர் ஆஜராகிறதாகவாவது மற்றப்படிக்காவது, எழுதிக்கொடுக்கிற முச்சிக்காக்களும்.

(13) யாதொரு குற்றத்தை குறித்து மனுவாவது, விண்ணப்பமாவது, பிரியாதாவது, அறிக்கையாவது, சென்னப்பட்டண ராஜதானியிலுள்ள போலீசாருக்காவது கிராமப் பெரியதனக்காரனுக்காவது, கிராமப்போலீசாருக்காவது கொடுக்கப்பட்டாலும், செய்யப்பட்டாலும், வைக்கப்பட்டாலும் அவைகளுக்கும்.

(14) யாதொரு கைதியினலாவது, யாதொரு கோர்ட் அல்லது அதன் உத்தியோகஸ்தருடைய காவலிலிருக்கிற வேறே எவனுலாவது கொடுக்கப்பட்ட மனு.

(15) (இ. பி. கோட்படி) சர்க்கார் உத்தியோகஸ்தர் முனிசிபல் உத்தியோகஸ்தர், ரெயில்வே உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரர் செய்கிற பிராது.

(16) சர்க்கார் காடுகளில் மரம் வெட்டுவதற்கு உத்தரவாகும் படிக்காவது, மற்றப்படி அந்தக் காடுகளுக்குச் சம்பந்தமாகவாவது கொடுக்கப்பட்ட விண்ணப்பம்.

(17) மனுதாரனுக்கு கவர்ன்மெண்டார் பாக்கியாயிருக்கிற பணத்தைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிற மனு.

(18) 1856-ஞூ 2-வது ஆக்டின்படி சவுகிதாரி அல்லது முனிசிபல் வரியைக்குறித்துச் செய்யப்படுகிற அப்பீல் மனு.

(19) பொது ஜனப்பிரயோசனத்துக்காக சொத்தை யெடுத்துக் கொள்வதைக் குறித்து அந்தந்தக் காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்பிரகாரம் பிரதிபலன் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறமனு.

(20) 1872-ஞூ த்து இந்துதேசக் கிரிஸ்தவ விவாக ஆக்ட் 45 48-வது பிரிவுகளின்படி கொடுக்கப்பட்ட மனுக்கள்.

(21) கெட்டுப்போன ஸ்டாம்புகளின் கிரயத்தை புதுப்பிக்க அல்லது வாப்ஸ் செய்ய கலெக்டருக்கு மனு.

(22) கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமாகிய உப்பை வாங்குவதற்காக கொடுக்கப்படும் மனுக்கள்.

(23) செட்டில்மெண்டு நடக்குங்காலத்திலாவது, முடிவான பிறகாவது நிலச்சுவான்தாரர்களுக்கும், சாகுபடி செய்கிறவர்களுக்கும் கொடுக்கப்படுகிற வில்லேஜ் செட்டில்மெண்டு நகல்கள்.

(24) செட்டில்மெண்டு மத்தியஸ்த கோர்ட்டுகளில் ஆஜர்செய்வதற்காக வில்லேஜ் செட்டில்மெண்டு ரெகார்டுகளிலிருந்து புலங்கள் வாரியாய் நகல் எடுத்த ஒரு ஜாபிதா.

(25) தீர்வை பைசலாகி ஸ்திரமானதாய் செய்யப்படாத சர்க்கார் நிலத்தை, சர்க்காருக்கு நேராக தீர்வை செலுத்திப் பயிரிடவேணுமென்று மனுச்செய்யுங்காலத்தில், நிலமில்லாத ஒருவன் செய்துகொள்ளும் மனு.

(26) சாகுபடிக்கு வேண்டிய விதை, மாடு இவைகள் வாங்குவதற்கும், கிணறு வெட்டவும், நிலத்தை மராமத்து செய்யவும் கடன் வேண்டுமென்று சர்க்காருக்குக் கொடுக்கப்படும் மனுக்கள்.

(27) ஸ்டாம்புக் குறைவுக்காக யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தரால் வசப்படுத்திக்கொள்ளப்பட்டு கலெக்டருக்கு அனுப்பப்பட்டுள்ள தஸ்தாவேஜுகளைத் திருப்பிக்கொடுக்கும்படி கலெக்டருக்குச் செய்து கொள்ளப்படும் மனுக்கள்.

(28) யாதொரு கோர்ட்டிலாவது ஆபீசிலாவது ஆஜர் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளை வாப்ஸ் செய்யவேணுமென்று கொடுத்துக் கொள்ளும் விண்ணப்பங்கள்.

(29) 1831-ஞூ த்திய 6-வது ஆக்டின்படி செய்யப்பட்ட வியாச்சியங்களில் ஜட்ஜிமெண்டுகள் அல்லது தீர்ப்புகள்.

(30) குத்தகை வசூல் ஆக்ட்டின்படி கலெக்டரிடத்தில் கொடுக்கப்படும் பிரியாது.

(31) கி-பு-கோ. 210-வது பிரிவின்படி எழுதப்பட்ட குற்றப் பத்திரிகையின் நகலாவது, அதன் தர்ஜுமாவாவது குற்றஞ்சாட்டப் பட்டவனுக்கு கொடுக்கப்படும்போது அந்த நகல் அல்லது தர்ஜுமா.

(32) கமிட் செய்தபிறகு இன்னுஞ் சேர்க்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்தின் நகலாவது குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு மேற்படி கோட் 219-வது பிரிவின்படி கொடுக்கப்படுமாகில் அந்த நகலும்.

(33) சம்மன்கேஸ் அல்லது வேறே யாதொரு கேசின் தீர்ப்பின் நகலாவது தர்ஜுமாவாவது, ஜூரிக்கு ஜட்ஜி எடுத்துச்சொல்லுகிற கற்பனைகளின் பொருள்களுக்கு நகலாவது, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு இ-பி-கோ 371-வது பிரிவின்படி கொடுக்கப்படுமாகில் அப்படிப் பட்ட நகல் அல்லது மொழி பெயர்ப்பு:

(34) சம்மன் கேசில் தீர்ப்பின் நகலாவது மொழிபெயர்ப்பாவது குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு மேற்படி கோட் 371-வது பிரிவின்படி கொடுக்கப்படுகிறதோ, அந்த நபர்ஜெயிலிலிருப்பானுகில் அந்த நகல் அல்லது மொழிபெயர்ப்பும்

(35) ஜீவனும்ச உத்தரவு யார் பட்சத்தில் செய்யப்படுகிறதோ அந்த நபருக்காவது அந்த நபருடைய சம்ரட்சகர் யாராவதிருந்தால் அவருக்காவது ஜீனும்சத்தொகை யாரிடத்தில் செலுத்தப்படவேண்டியதோ அந்த நபருக்காவது, கி-பு கோட் 490-வது பிரிவின்படி அவ்வுத்தரவின் நகல் கொடுக்கப்படுமாகில் அந்த நகலும்.

(36) போலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய அலுவலே நடத்துகையில்அவர்களுக்கு வேண்டியிருக்கிற தீர்ப்புகள் அல்லது வாக்குமூலங்களின் நகல்கள்.

(37) கவர்னர் அல்லது வைஸிராய் இவர்களுக்கும், மகாராஜா அவர்களுக்கும் செய்துகொள்ளுகிற மனு.

(38) இன்கம்டாக்ஸ் ஆக்ட் 26-வது பிரிவுப்படி கலெக்டருக்காவது தாசீல்தாருக்காவது செய்துகொள்ளப்படுகிற ஆட்சேபனை மனுக்களும் அதன் பேரில் செய்யப்பட்ட உத்தரவின் நகல்களுக்கும், செலுத்தவேண்டிய பீசு ஒரு அணு; ஷை ஆக்ட் 27-வது பிரிவின்படிகொடுக்கும் ரிவிஷன் மனுக்களுக்கு அணு 8, ஒட்டவேண்டும்.

(39) (1895-ஷ 3-வது) சென்னைப்பட்டணத்து பரம்பரை கிராம உத்தியோகங்களைக்குறித்த ஆக்ட்டின்படி கலெக்டரிடம்

செய்யப்பட்ட தாவாக்களில் பிராது விண்ணப்பத்திற்காவது, நிறை வேற்றக்கொடுக்கும் மனுவிற்காவது அப்பீலுக்காவது ஒட்டவேண்டிய ஸ்டாம்பு அணு—8; இது விஷயமாய் ரெவினியூபோர்டாருக்கு செய்யப்படும் அப்பீல் பெட்டிஷன்களுக்கு ரூபா 2.

(40) தீர்வை பாக்கிக்காக ஏலத்தில் விற்றுவிட்ட நிலத்தை திருப்பிப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கவர்ன்மெண்ட் ரயத்துகள் செய்யும் வியாச்சியங்களில், அந்த வியாச்சியம்செய்த தேதிக்கு அடுத்து முந்தின ஒரு வருஷத்துக்குச் சேரவேண்டிய அந்த நிலத்தின் குத்தகை வரும்படியின் மதிப்பானது தாவா சங்கதியாயிருந்தால் என்ன பீஸ்சேரவேண்டியதோ அதே பீஸ்தான்.

(41) துப்பாக்கி லைசென்சுக்காகக் கொடுக்கும் மனுக்கள் 4 அணு ஸ்டாம்பு கடிதத்தில் எழுதவேண்டும்.

(42) மாசூல் கிடைக்காமலாவது அழிந்துபோய் விட்டதற்காகவாவது தீர்வையை வஜாகொடுக்கவேண்டுமென, ரெவினியூ அதிகாரிகளுக்கு செய்துகொள்ளப்படும் மனுக்கள்.

(43) சென்னபட்டணத்து 1908-ம்வருஷத்திய 1-வது ஜமீன் குடி நிலசட்டத்தின் 55, 56, 95, 112, 144, 160-வது பிரிவுகளின் படி கலெக்டர்களிடம் தாக்கல் செய்யப்படுகிற வியாஜ்ஜியங்களிலே செலுத்தத்தக்க கட்டணங்களை வஜாசெய்வதற்கும், ஷெ ஆக்ட் 166 (1) பிரிவின்படி ரெவினியூ அதிகாரிகளிடம் செய்துகொள்ளும் ஆட்சேபனை மனுக்கள்.

(44) 1883-ம்வருஷத்திய 19-வது நில அபிவிர்த்திகடன் ஆக்டின்படியாவது 1884-ம்வருஷத்திய 12-வது விவசாயிகளின் கடன்களைக் குறித்த ஆக்டின்படியாவது கடன் வாங்குவதற்கும் வாங்கிய கடன்களை வசூல் செய்யாது விட்டுவைப்பதற்கும் செய்யப்படும் மனுக்கள்.

(45) முத்திரை ஸ்டாம்புகளை விற்பனை செய்வதற்கான லைசென்ஸ் கிடைப்பதற்கு செய்யப்படும் மனுக்கள்.

(46) ரெவினியூ கணக்குகளிலே, ரயத்துவாரி நிலங்களின் பாத்தியதையை மாற்றுவதற்கும், சென்னை ராஜதானிப் பட்டணங்களிலே வீட்டு மனைகளின் பாத்தியதையை மாறுதல் செய்வதற்கும் மனுக்கள்.

1922-ம் ஹூத்திய 11-வது வருமான வரி ஆக்ட்

1. வருமானவரி ஸம்பந்தமான புதிய ஆக்டானது 1922-ம் ஹூ ஏப்ரல்ஸ்ரீ 1-யன்று அமுலுக்கு வந்தது. இதற்கும் 1918-ம் ஹூத்திய ஆக்டுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசங்களும், வருமானவரி இலாகாவின் அமைப்பில் உண்டாயிருக்கும் மாறுதல்கள், வருமானவரி, ஸூபர் டாக்ஸ் இவைகளைப்பற்றிய சட்டங்களை ஒன்றுசேர்த்து பழைய ஆக்டில் அவசியம் மாற்றவேண்டியிருந்த வாசகங்களை மாற்றி, ஸந்தேகம், இரண்டர்த்தமுள்ள சொல், விபரீத வாசகங்கள் இவைகளை நிவர்த்திப்பதே இந்த ஆக்டை ஏற்படுத்தின தன் உத்தேசமாகும்.

2. போது விஷயங்கள்:—வரி விதிக்கப்படத்தக்க வருமானம் இன்னதென்று இந்த ஆக்டில் விவரணம் காணவில்லை. 1918-ம் ஹூத்து ஆக்டின் 1 முதல் 14 (a) வரையிலுள்ள பிரிவுகளில் "வரி விதிக்கப்படத்தக்க வருமானத்தை"க் கணக்கிடுவதற்காகச் சொல்லப்பட்ட ஏற்பாட்டினால் வரி சமமாய் விதிக்கப்பட மார்க்கமில்லாமலிருந்தபடியால் அது ஒழிக்கப்பட்டுப்போயிற்று. அந்தப் பிரிவுகளின்படி "வரி விதிக்கப்படத்தக்க வருமானம்" என்றால் ஒரு நபருக்கு எந்தத் தொகையின்பேரில் நேராக வரி விதிக்கப்பட்டதோ அந்தத் தொகை என்று அர்த்தமாயிற்று; அதாவது, ஒரு கம்பெனியினால் கொடுக்கப்படும் ஈவு அல்லது ஒரு கூட்டுக்கடையில் கிடைத்த லாபத்தில் இவருடைய பங்கு தவிர மற்ற வருமானம் என்று அர்த்தமாயிற்று; ஆகவே ஒரு கம்பெனியிலிருந்தாவது கூட்டுக்கடையிலிருந்தாவது ஒரு நபருக்கு ஏதேனும் வருமானம் இருந்து, நேராக அவருக்கு வரி விதிக்கப்படத்தக்க இதர வருமானமும் இருக்கும் பக்ஷத்தில் அவருடைய அப்படிப்பட்ட இதர வருமானம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருந்தாலொழிய மற்றப்படி அந்தத் தொகைக்கு வரி செலுத்தவேண்டியிருந்ததில்லை. ஆனால், மேற்சொல்லிய கம்பெனி அல்லது கூட்டுக்கடையிலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக ஏற்படும் இன்ஷூரென்ஸ் சந்தாக்களுக்கு வரி தள்ளப்படவில்லை. தனி நபர், கம்பெனி, கூட்டுக்கடை அல்லது பாகமாகாத கூட்டு ஹிந்து குடும்பம் ஆகிய இவைகளுடைய முன் வருஷத்திய மொத்த வருமானத்தின்பேரில் அந்தந்த ஷத்துக்காக ஏற்பட்ட பண வரவு செலவு ஸம்பந்தமான ஆக்

டில் (Finance Act) கண்ட தாரணைப்படி வருமான வரி வசூலிக்கப்படவேண்டும் என்று புதிய ஆக்டின் 3-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. "மொத்த வருமானம்" எப்படிக் கணக்கிடுகிறதென்றும், 16 (1)-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. "மொத்தவருமானம்" என்றால் இந்த ஆக்ட் ஸம்பந்தப்படும் ஸகல மார்க்கங்களாலும் கிடைக்கும் வருமானம், லாபம், ஆதாயம் இவைகள் 16-வது பிரிவில் சொல்லியிருக்கிற மாதிரியாய்க் கணக்கிடப்பட்டதன் மொத்தம் என்று அர்த்தமாகும் என்று 2 (15)-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. பாகமாகாத கூட்டு ஹிந்துக் குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு நபருடைய பாகத்துக்கு அந்தக் குடும்பத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின்மேல் வரி விதிக்கக்கூடாதென்று 14 (1)-வது பிரிவில் கூறியிருக்கிறபடி, 16 (1)-வது பிரிவின்படி அந்தத் தொகை அவருடைய மொத்த வருமானத்தில் சேராது; 14 (2) வது பிரிவையும் 15 (1) (2) பிரிவுகளையும் 16 (1)-வது பிரிவின் உதவியைக்கொண்டு அர்த்தம் செய்யும்போது ஒரு நபருக்கு அடியிற்கண்ட தொகைகள் சம்பந்தமாய் வருமான வரி விதிக்கப்படமாட்டாதென்று ஏற்படுகிறது.

அவையாவன:—

(a) வருமான வரி விதிக்கப்பட்டிருக்கும் யாதொரு சம்பெனியில் ஒருவர் எடுத்திருக்கும் பங்குகளுக்காக ஒருவருக்கு அக்கம்பெனியிலிருந்து கிடைக்கும் ஈவுத்தொகைகள் ;

(b) வருமானவரி விதிக்கப்பட்டிருக்கும் யாதொரு கூட்டுக்கடையின் வருமானத்தில் தனக்குள்ள பாகம் ;

(c) பிற்காலத்தில வருஷாந்தர வரும்படியை (annuity) உத்தேசித்துக்கொடுக்கப்படும் இன்ஷூரன்ஸ் சந்தாக்கள், தொகைகள், அல்லது சில ப்ராவிடென்ட் பண்டுகளுக்குக் கொடுக்கப்படும் சந்தாக்கள்.

ஆனல், பாகமாகாத கூட்டு ஹிந்துக்குடும்பத்தின் வரும்படியைப் போலன்றி, மேற்கண்ட **(a)**, **b)**, **(c)** இவைகளில் சொல்லியவை போன்ற தொகைகளெல்லாம் மொத்த வருமானத்தில் சேருகின்றன; அதாவது அந்த நபருக்கு விதிக்கப்படவேண்டிய வரியின் தாரணையை அவை பாதிக்கின்றன. ஒரு நபருக்கு விதிக்கவேண்டிய வரி தாரணையின் வீதத்தைக் கண்டுபிடிக்கும்பொருட்டு ஒரு கூட்டுக்கடையின் லாபத்திலிருந்து அவருக்குச் சேரவேண்டிய பாகமானது அவருடைய

மொத்த வருமானத்தில் சேரும்; ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் அல்லது குறிப்பிட்ட வீதத்துக்குமேல் அவருக்கு அந்த லாபத்தில் பங்குகொடுக்கப்படமாட்டாது என்றாவது அல்லது அவர் தன் பங்குக் குள்ள லாபத்தில் எந்த பாகத்தைபாவது தர்மம் முதலியதற்காக எடுத்து வைத்துவிடவேண்டுமென்றாவது நிபந்தனையிருப்பினும், அப் படிப்பட்ட நிபந்தனை சம்பந்தமன்னியில், அந்தக்கடையின் மொத்த லாபத்தில் அவர் பாகத்துக்குச் சேரவேண்டிய தொகை மேற்கண்ட படிக்கான அவருடைய மொத்த வரும்படியில் சேரும்.

3. **ஹைகோர்ட்டுக்கு விஷயங்களை அனுப்புவது;**—கமிஷனர் ஒரு வர் தான் விஷயங்களை ஹைகோர்ட்டுக்கு அனுப்பலாம். வரி விதிக்கப் பட்ட ஒரு நபர் சட்டசம்பந்தமான ஒரு விஷயத்தைப்பற்றி ஹைகோர் ட்டுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டால் அதை மறுக்க கமிஷனரு க்கு அதிகாரமில்லை. ஆனால் அதில் சட்ட ஸம்பந்தமான விஷயம் ஒன்று மில்லையென்று கமிஷனர் தீர்மானிக்கும் பட்சத்தில் அப்பொழுதுஅந்த நபர் கமிஷனரை அவ்விஷயத்தைக்கோர்ட்டுக்கு அனுப்பச்சொல்ல வேண்டுமென்று ஹைகோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாம்.

ஹைகோர்ட்டுக்குத் தன் விஷயத்தை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிற நபர் நூறு ரூபாயாகிலும் அல்லது அதற்குக் குறைந்து உள்நாட்டு வருமானபோர்டார் நிர்ணயிக்கும் எந்தத்தொகை யாகிலும் டிபாஸிட் செய்யவேண்டும். ஹைகோர்ட்டுக்கு விஷயம் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைக்கொண்டு வரி கட்டாமல் நிறுத்துவது கூடாது. ஹைகோர்ட்டார் ஏதாவது தொகையை வா பஸ் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கும் பட்சத்தில் கமிஷனர் அந்தத் தொகைக்கு வட்டி கொடுக்கும்படி செய்யலாம்.

ஒரு நபர் அப்பீல் செய்வதற்குத் தனக்குள்ள பாத்தியதைகளை யெல்லாம் பூர்த்தியாக உபயோகிக்காமல் ஹைகோர்ட்டுக்குத் தன் விஷயத்தை அனுப்பவேண்டுமென்று கேட்கக்கூடாது. விவாதத்திலி ருக்கும் சட்டஸம்பந்தமான விஷயத்தைப்பற்றி விண்ணப்பதாரருக்கு அனுகூலமாக கம்மிஷனரே தீர்மானம் செய்யத் தயாராயிருந்தால் அப்பொழுது அந்த விண்ணப்பதாரர் கமிஷனருடைய உத்திரவு அல் லது புனராலோசனை தனக்குத் திருப்திகரமாயிருக்கும் பட்சத்தில் ஹைகோர்ட்டுக்குத் தன் விஷயந்தை அனுப்பவேண்டுமென்று கேட் கும் விண்ணப்பத்தை வாப்ஸ் வாங்கிக்கொள்ளலாம்.

4. இந்த ஆக்டின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளில் வரி விதிக்கப்படும் நபர்களுக்காக ஆஜராவது.—இந்த ஆக்டின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளில் வரிவிதிக்கப்பட்டிருக்கும் நபருக்காக அவரால் எழுத்துமூலமாய் அதிகாரம்பெற்ற வேறொரு நபர் ஆஜராகலாம். (61 பிரிவு) கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற எந்த நபராகிலும் வரி விதிக்கப்பட்ட நபருக்காக ஆஜராகலாமாகையால் அப்பீல்கள் அல்லது இந்த ஆக்டின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளில் அந்த நபர்களுக்காக அவர்களுடைய கணக்குப் பிள்ளைகளும், கணக்குப் பரிசோதகர்களும் அல்லது வக்கீல்களும், ஆஜராவதில் இனி எவ்விதமான ஆக்ஷேபமும் இல்லையென்பது தெளிவாய் விளங்கும்.

5. அப்பீல்களும் புனராலோசனையும்—இன்கம்டாக்ஸ் ஆபிஸரால் விதிக்கப்படும் வரி அல்லது அவரால் செய்யப்படும் மற்ற உத்தரவுகளைப்பற்றி உதவி கமிஷனருக்கு எந்தெந்த சந்தர்ப்பங்களில் அப்பீல் செய்துகொள்ளலாமென்பது :...

(1) வரி விதிக்கப்படும் போதும் ;

(2) மறுபடி வரி விதிக்கப்படும் போதும் ;

(3) மறுபடி வரி விதிக்க மறுத்தல் ;

(4) தொழில் நிறுத்தப்பட்டதைப்பற்றி நோடீஸ் கொடுக்கத் தவறினதற்காக விதிக்கப்படும் தண்டனை ;

(5) வருமானத்தை மறைத்ததற்காக விதிக்கப்படும் தண்டனை விதிக்கப்பட்டதற்கு அல்லது வரி மறுபடியும் விதிக்கப்பட்டதற்கு முந்தி ரிடர்ன் அனுப்பாத நபர் எவருக்கும் அப்பீல் செய்துகொள்ள பாத்தியமில்லை.

இனி, அப்பீல் செய்யும்போது அப்பீலுடன் எந்த உத்தரவின் மேல் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்தரவின் நகல் அனுப்பவேண்டுமென்று கட்டாயமில்லை.

ஒரு உதவிகமிஷனர் அப்பீலைத் தீர்மானிக்கையில் வருமானத்தை மறைத்து வைத்திருப்பதற்காக தண்டனைவிதிக்க அவருக்கு அதிகாரம் கொடுக்கிறது. ஒரு உதவி கமிஷனருக்கு அப்பீல் செய்தபோது அவர் வரியை உயர்த்தி உத்தரவுபோட்டால் அப்படிப்பட்ட உத்தரவின்பேரிலும், வருமானத்தை மறைத்ததற்காக உதவி கமிஷனர் விதிச்

கும் தண்டனையின்பேரிலும் 32-வது பிரிவின்படி கமிஷனருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

கமிஷனரானவர் தனக்குக்கீழ்ப்பட்ட அதிகாரிகளால் நடத்தப்பட்ட நடவடிக்கைகளையும் தானாக உதவி கமிஷனருடைய அதிகாரத்தைச்செலுத்துகையில் செய்த நடவடிக்கைகளையும் 33-வது பிரிவின்படி புனராலோசனை செய்யலாம்.

கமிஷனர் அப்பீல்களை விசாரிக்கையிலும், புனராலோசனை செய்கையிலும், வருமானத்தை மறைத்ததற்காக 28 (1)-வது பிரிவின்படி தண்டனை விதிக்கலாம்.

6. **வருமானவரி செலுத்தல்.**—45-வது பிரிவின்படி வரிகொடுக்கப்படவேண்டிய காலத்தை நோடீஸ் அல்லது உத்தரவு சேர்ப்பிக்கப்பட்ட தேதிமுதல் கணக்கிடவேண்டுமேயொழிய, அந்த நோடீஸ் அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி முதல் கணக்கிடக்கூடாது.

இந்த ஆக்டின்படி செலுத்தவேண்டியதாகும் தொகையை கேட்கும் வருஷத்தின் கடைசித்தேதிலிருந்து ஒரு வருஷத்திற்குப்பிறகு அதை வசூலிக்க எந்த நடவடிக்கையும் நடத்தக்கூடாது. [46 (7) வது பிரிவு]. ஆனால் உள்ளூரில் குடியிராத நபர்களிடமிருந்து 2 (1) வது பிரிவின்படி வசூலாகவேண்டிய தொகைகளை இந்த விதியிலிருந்து விலக்கியிருக்கிறது.

7. **உள்ளூரில் குடியிராத கூட்டாளிகளும் பங்குக்காரர்களும்.**-ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு கூட்டுக்கடையின் மெம்பர் உள்ளூரில் குடியிராதபோது அந்தக் கடையின் லாபத்தில் அவர் பங்குக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தின்பேரில் அவரால் செலுத்தத்தக்க ஸூபர் டாக்ஸ் தொகையை 57 (1)-வது பிரிவின்படி ப்ரிடிஷ் இந்தியாவில் குடியிருக்கும் மெம்பர்களிடமிருந்து வசூல்செய்யலாம்; இதுபோலவே, ஒரு கம்பெனியின் பங்குக்காரர் உள்ளூரில் குடியிராதபோது அந்தக் கம்பெனியின் கூட்டாளி அல்லது பங்குக்காரருக்குச் சேரவேண்டிய கம்பெனியின் லாபம் அல்லது ஈவின் பங்கின்மேல் ஸூபர் டாக்ஸ் விதிக்கத்தக்கதாயிருக்கும் பக்ஷத்தில், அந்தத் தொகையின் பேரில் அவர் கொடுக்கவேண்டிவரும் ஸூபர் டாக்ஸை ப்ரிடிஷ் இந்தியாவில் இருக்கும் அந்தக் கம்பெனியின் பிரதான உத்திபோகஸ்தரிடமிருந்து வசூல்செய்யலாம்.

அனுபந்தம்.

1 - ம் பாகம்.

வருமானவரி விகிதங்கள்.

	வீதம்
A. ஒவ்வொரு நபரின் விஷயத்திலும், ரெஜிஸ்டர் செய்யப்படாத ஒவ்வொரு பர்ம் என்னும் வர்த்தகக் கூட்டத்தின் விஷயத்திலும், தனிநபர்கள் சேர்ந்த மற்ற சங்கங்கள் விஷயத்திலும், ஒவ்வொரு அவிபக்த ஹிந்து குடும்பத்தின் விஷயத்திலும்—	
(1) மொத்த வரும்படியானது ரூபா இரண்டாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்.	பூஜ்ஜியம்.
(2) மொத்த வரும்படியானது ரூபா இரண்டாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்து, ரூபா ஐயாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்.	ரூபாய்க்கு ஐந்து தம்பிடி.
(3) மொத்த வரும்படியானது ரூபா ஐயாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்து ரூபா பத்தாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்	ரூபாய்க்கு ஆறு தம்பிடி.
(4) மொத்த வரும்படியானது ரூபா பத்தாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்து ரூபா இருபதிணாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்.	ரூபாய்க்கு ஒன்பது தம்படி.
(5) மொத்த வரும்படியானது ரூபா இருபதிணாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்து ரூபா முப்பதிணாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்.	ரூபாய்க்கு ஒரு அணா.
(6) மொத்த வரும்படியானது ரூபா முப்பதிணாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்து ரூபா நாற்பதிணாயிரத்துக்குக் குறைவாயிருந்தால்.	ரூபாய்க்கு ஒரு அணா மூன்று தம்பிடி.
(7) மொத்த வரும்படியானது ரூபா நாற்பதிணாயிரம் ஆகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்தால்.	ரூபாய்க்கு ஒருஅணா ஆறு தம்பிடி.
B. ஒவ்வொரு கம்பெனியின் விஷயத்திலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒவ்வொரு பர்ம் என்னும் வர்த்தகக் கூட்டத்தின் விஷயத்திலும் அவைகளின் மொத்த வரும்படி எவ்வளவாயிருந்தாலுஞ்சரி.	ரூபாய்க்கு ஒரு அணா ஆறு தம்பிடி.

2 - ம் பாகம்.

ஸுபர் டாக்ஸ் என்னும் மேல் வரி வீதங்கள்.

மொத்த வரும்படியில் ஐம்பதிணாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கும் தொகை விஷயமாய்—

(1) ஒவ்வொரு கம்பெனியின் விஷயத்திலும் —	ரூபாய்க்கு ஒரு அணா.
(2) (a) ஒவ்வொரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் விஷயத்திலும்—	
(i) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் முதல் இருபத்தையாயிரம் ரூபாய் விஷயமாக.	பூஜ்ஜியம்.
(ii) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த இருபத்தையாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு ஒரு அணா.
(b) ஒவ்வொருநபர் விஷயத்திலும் ரெஜிஸ்டர்செய்யப்பட்டிராத ஒவ்வொரு பர்ம் என்னும் வர்தகக்கூட்டத்தின் விஷயத்திலும் அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் முதல் ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு ஒரு அணா.
(c) ஒவ்வொரு நபர் விஷயத்திலும் ரெஜிஸ்டர்செய்யப்பட்டிராத ஒவ்வொரு பர்ம் என்னும் வர்த்தகக்கூட்டத்தின் விஷயத்திலும் ஒவ்வொரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் விஷயத்திலும்.—	
(i) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் இரண்டாவது ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்	ரூபாய்க்கு ஒன்றரை அணா
(ii) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு இரண்டு அணா.
(iii) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்	ரூபாய்க்கு இரண்டரை அணா.
(vi) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிர ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு மூன்று அணா
(v) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு மூன்றரை அணா.
(vi) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு நாலு அணா.
(vii) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு நாலரை அணா.
(viii) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு ஐந்து அணா.
(ix) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் அடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு ஐந்தரை அணா.
(x) அம்மாதிரி அதிகப்படியாயிருக்கும் மிச்சத்தொகையில் ஒவ்வொரு ரூபாய்க்கும்.	ரூபாய்க்கு ஆறு அணா.

1908-ஆஸ்த்து 9-வது ஆக்ட்.

வியாஜ்ஜியங்களைக்குறித்துக் காலநிர்ணயஞ் செய்வதற்காகவும், மற்ற காரியங்களுக்காகவும் உண்டான சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றுய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

வியாஜ்ஜியங்களையும் அப்பீல்களையும் கோர்ட்டுக்குச் செய்துகொள்ளப்படும் சில மனுக்களையுங்குறித்த காலநிர்ணயச் சட்டத்தைத் திருத்தி ஒன்றுய்ச்சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், ஸ்வாதீனத்தினலே வழிநடை முதலிய வசதியுரிமைகளிலும், மற்ற சொத்திலும் சொத்துவம் அடைவதற்காக விதிகள் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிற படியாலும், இதனல் விதிக்கப்படுகிறதென்னவென்றல் :—

1-ம் பாகம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வியாபகமும் வழங்கத்தொடங்குவதும்.

1. இந்த ஆக்ட்டை, 1908-ம் வருஷத்திய இந்து தேசத்துக் காலநிர்ணயச் சட்டமென்று சொல்லலாம்.

(1) இது ப்ரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது; மேலும்,

(2) இந்தப் பிரிவும் 31-வது பிரிவும் உடனே செலாவணியாகத்தொடங்கவேண்டும். இந்த ஆக்டின் மிகுதிபாகமானது 1909-ம் வருஷம் ஜனவரிமீ முதல் தேதியன்றைக்குச் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே சங்கதியினலாவது முன்பின் தொடர்ச்சியினலாவது விரோதமெதுவுமில்லாவிட்டால்,

(1) "மனுதார்" என்பதிலே மனுசெய்துகொள்ள எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய் மனுதாரர் சுதந்தர மடைகிறரோ அந்த நபர் என்பதும் அடங்கும்;

(2) "பில் ஆவ் எக்ஸ்சேஞ்ச்" என்பதிலே-உண்டியும் செக்கும் அடங்கும்:

(3) "பாண்ட் அல்லது பத்திரம்" என்பதிலே-சந்தர்ப்பத்துக்கேற்றபடி குறித்த யாதொரு காரியம் நிறைவேற்றப்பட்டாலும் நிறைவேற்றப்படா விட்டாலும் உடன்படிக்கை ரத்தாய் விடுமென்கிற ஷரத்தின்மேல், ஒருவர் வேறொருவருக்குப் பணஞ்செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவென்பதும் அடங்கும்:

(4) "பிரதிவாதி" என்பதில் வியாஜ்ஜியந் தொடரப்படுவதற்கு எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய்ப் பிரதிவாதி பொறுப்பு அடைகிறாரோ அந்த நபர் என்பதும் அடங்கும்:

(5) "வழிநடை முதலிய வசதியுரிமை" என்பதிலே-ஒப்பந்த உடன்படிக்கையினாலே உண்டாகாமல், மற்றப்படி எதனாலே ஒருவர் வேறொருவருடையதாயிருக்கிற நிலத்தின் யாதொரு பாகத்தையாவது, வேறொருவருடைய நிலத்தில் வளர்ந்து கொண்டாகிலும் அதோடு சேர்க்கப்பட்டாகிலும் அதன்மேல் ஜீவித்துக்கொண்டாகிலுமிருக்கிற யாதொரு பொருளையாவது தம்முடைய சொந்த பிரயோசனத்துக்காக அப்புறப்படுத்தவும் உரித்தாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பாத்தியம் உண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்ட சுதந்தரமென்பதும் அடங்கும்:

(6) "அன்னியதேசம்" என்பது-ப்ரிடிஷ் இந்தியா அல்லாமல் வேறே யாதொரு தேசமென்று அர்த்தமாகும்:

(7) "நல்ல எண்ணம்" என்பது தகுந்த ஜாக்கிரதையுடனும் கவனத்துடனும் செய்யப்படாதது எதுவோ அது நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதாக எண்ணப்படமாட்டாது:

(8) "வாதி" என்பதிலே-வியாஜ்ஜியந்தொடர எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய் வாதி சுதந்தர மடைகிறாரோ அந்த நபர் என்பதும் அடங்கும்:

(9) "ப்ராமிஸொரி நோட்" என்பது-(ஆதரவில்) குறித்திருக்கிற காலத்திலாவது கேட்டவுடனேயாவது தரிசனமான வுடனேயாவது குறித்த யாதொரு தொகையை ஒருவர் வேறொருவருக்கு அறுதியாய்ச் செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவென்று அர்த்தமாகும்:

(10) "வியாஜ்ஜியம்" என்பதிலே-அப்பீலென்பதாவது, மனுவென்பதாவது அடங்காது:

(11) "ட்ரஸ்டி" என்பதிலே-பினுமிதார் என்பதாவது, கொதுவைக்குச் சரிச்சொல்லப்பட்ட பின்பு (சொத்தை) ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டேயிருக்கிற கொதுவை வைத்துக்கொண்டவரென்பதாவது, ஹக்கில்லாமல் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற அக்கிரமஸ்தரென்பதாவது அடங்காது.

2-ம் பாகம்.

வியாஜ்ஜ்யங்களுக்கும் அப்பீல்களுக்கும் மனுக்களுக்கும் காலநிர்ணயம்.

கெடுவுகாலத்திற்குப்பின்பு தொடருவது முதலியவை செய்யப்பட்ட வியாஜ்ஜிய முதலியவைகளைத் தள்ளிவிடுவது.

3. முதல் ஷெட்யூலில் அதற்காக நிர்ணயித்திருக்கிற கெடுவுகாலத்துக்குப் பின்பு தொடரப்பட்ட பிரதி வியாஜ்ஜியமும் செய்யப்பட்ட அப்பீலும் செய்துகொள்ளப்பட்ட மனுவும் பிரதிவாதிபட்சத்தில் காலநிர்ணய தோஷம் எடுத்துக் காட்டப்படாமற் போனபோதிலும், 4-வது பிரிவு முதல் 25-வது (உட்பட) அதுவரையிலுள்ள பிரிவுகளில் கண்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டுத் தள்ளிவிடப்படும்.

விவரணம் :—சாதாரணமான விஷயங்களிலே, தகுந்த உத்தியோகஸ்தரிடத்தில் ப்ளெய்ன்ட் கொடுக்கப்படும்போதும், பாபர் விஷயத்திலே, பாபராக வியாஜ்ஜியம் தொடர அனுமதி கொடுக்கும்படி அவர் மனு செய்யும்போதும், கோர்ட்டாரால், முடிவுசெய்யப்படுகிற யாதொரு கம்பெனியின்மேல் உண்டாகிய தாவா விஷயத்திலே, அபிஷல் லிக்விடேட்டர் என்னும் கடன் பைசல்செய்கிறவரிடத்திற்குத் தாவாதாரர் தம்முடைய தாவாவை முதலில் அனுப்பும்போதும், வியாஜ்ஜியம் தொடரப்படுகிறதாகிறது.

கெடுவுகாலம் மூடியும்போது கோர்ட் மூடியிருந்தால்.

4. யாதொரு வியாஜ்ஜியத்திற்காகவாவது அப்பீலுக்காகவாவது மனுவுக்காகவாவது நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலம் கோர்ட் மூடியிருக்கிற தினத்தில் முடியுமாகில், கோர்ட் மறுபடி திறக்கிற தினத்திலே அந்த வியாஜ்ஜியம் தொடரலாம், அப்பீல் செய்யலாம், மனுசெய்து கொள்ளலாம்.

சில விஷயங்களில் கெடுவுகாலத்தை அதிகப்படுத்துவது.

5. யாதொரு அப்பீலையாவது தீர்ப்பைப் புனராலோசனை பண்ணும்படியாகிலும் அப்பீல்செய்ய அனுமதி கொடுக்கும்படியாகிலும் கொடுக்கப்பட்ட மனுவையாவது அந்தந்தக் காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டதினாலாவது அதன்படியாவது, வேறே எந்த மனுவுக்கு இந்தப்பிரிவு பிரயோகப்படும்படியாகச் செய்யப்படுமோ அந்த மனுவையாவது அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்குள் அப்பீல் செய்யாமைக்காகவாகிலும் மனு செய்துகொள்ளாமைக்காகவாகிலும் தமக்குத் தகுந்த காரணமிருந்ததென்று அப்பீல் வாதியோ அல்லது மனுதாரரோ கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய்த் தெரிவிக்கும்போது, அந்த கெடுவு காலத்திற்குப் பின்பும் ஏற்றுக்கொள்ளலாம்.

விவரணம்.—அப்பீல் வாதியாகிலும் மனுதாரராகிலும் நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தை நிச்சயிப்பதிலாவது கணக்கிடுவதிலாவது ஹைகோர்ட்டாருடைய யாதொரு உத்தரவு வழக்கம் அல்லது தீர்ப்பினால் வகைமோசம்போனாரென்னும் சங்கதி இந்தப்பிரிவின் தாத்பரியப்படி போதுமான காரணமாகலாம்.

சட்டப்படிக்குண்டான அசமர்த்ததை.

6. (1) வியாஜ்ஜியம் தொடரவாவது டிக்ரியை நிறைவேற்றுவதற்காக மனுசெய்து கொள்ளவாவது சுதந்தரமுடைய நபர் எதுமுதல் கெடுவுகாலம் கணக்கிடப்படுகிறதோ அந்தக் காலத்தில் மைனராய் வயது வராதவராய் இருந்தாலும், பைத்தியக்காரராயிருந்தாலும், உன்மத்தராயிருந்தாலும், அந்த அசமர்த்தை நீங்கினபின்பு, முதல் ஷெட்யூலின் மூன்றாவது கலத்திலே அதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலமுதற்கொண்டு மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் அவர் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனு செய்து கொள்ளலாம்.

(2) எதுமுதல் கெடுவுகாலம் கணக்கிடப்படுகிறதோ அந்தக் காலத்தில் அந்த நபருக்கு அப்படிப்பட்ட இரண்டு அசமர்த்தை யுண்டாயிருந்தாலும், அவருடைய அசமர்த்ததை நீங்குமுன்னே அவருக்கு வேறொரு அசமர்த்ததை உண்டானாலும், அந்த இரண்டு அசமர்த்ததைகளும் நீங்கினபின்பு, அப்படி நிர்ணயிக்கப்பட்ட காலமுதற்கொண்டு

மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் அவர் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனு செய்துகொள்ளலாம்.

(3) அந்த அசமர்த்தை அப்படிப்பட்ட நபருடைய மரணம் வரையிலிருக்குமாகில், சட்டசம்மதமான அவருடைய பிரதிநிதி அந்த மரணத்திற்குப் பின்பு. அப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலமுதற் கொண்டு மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனுசெய்துகொள்ளலாம்.

(4) அந்த மரணதேதியில் அப்படிப்பட்ட பிரதிநிதிக்கு அவ்வகையான யாதொரு அசமர்த்ததை யுண்டாயிருந்தால், (1) (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட விதிகள் பிரயோகப்படவேண்டும்.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு படகுக்கூலிக்காக வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் ஏ-என்பவருக்கு அவர் மைனராயிருந்தகாலத்தில் உண்டாகிறது. அந்தச் சுதந்தர முண்டான நான்கு வருஷத்திற்குப்பின்பு அவர் வயது வந்த பருவமடைகிறார். அவர் வயதுவந்த பருவமடைந்த தேதிமுதல் மூன்றுவருஷத்திற்குள் எப்போதாவது அவர் வியாஜ்ஜியம் தொடரலாம்.

(b) வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் இஜெட்-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. அது உண்டான பின்பு அவர் இன்னும் மைனராயிருக்கும்போதே அவருக்குப் பைத்தியம் பிடிக்கிறது, அவருடைய பைத்தியமும் சிறு (மைனர்) வயதும் ஒழிகிற தேதிமுதல் அவருக்குக் காலம் கடந்துகொண்டே வரும்.

(c) வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் **எக்ஸ்**-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. **எக்ஸ்**-என்பவர் வயதுவந்த பருவமடைவதற்கு முன்னமே இறந்துபோய், அவருடைய மைனர் குமாரராகிய **ஒய்**-என்பவர் அவருக்குப் பின்வருகிறார். **ஒய்**-என்பவர் பருவமடைகிற தேதிமுதல் அவருக்குக் காலங் கடந்துகொண்டே வரும்.

(d) வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் **எக்ஸ்**-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. **எக்ஸ்**-என்பவர் வயதுவந்த பருவமடைவதற்கு முன்னமே இறந்துபோய், அவருடைய மைனர் குமாரராகிய **ஒய்**-என்பவர் அவருக்குப் பின்வருகிறார், **ஒய்**-என்பவர் பருவமடைகிற தேதிமுதல் அவருக்குக் காலங் கடந்துகொண்டே வரும்.

7. பல வாதிகள் அல்லது மனுதாரர்களி வியாஜ்ஜியம் தொடரவாவது டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக மனுச் செய்துகொள்ளவாவது கூட்டாய்ச் சுதந்தரமடைந்திருக்கும் பலபேர்களில் ஒருவர் அப்படிப்பட்ட யாதொரு அசமர்த்ததைக்கு உட்

ல் ஒருவருடைய அ பட்டவராயிருந்து, அப்படிப்பட்ட நபருடைய சமர்த்ததை. அனுமதியில்லாமல் பரிஷ்காரஞ் செய்யப்படக்கூடியதாயிருக்குமாகில், அவர்களெல்லோருக்கும் காலங்கடந்துகொண்டேவரும்; ஆனால் அப்படிப்பட்ட பரிஷ்காரம் செய்யக்கூடாமையாயிருக்குமாகில், அவர்களில் எவராவது மற்றவர்களுடைய அனுமதியில்லாமல் அப்படிப்பட்ட பரிஷ்காரம் செய்யக்கூடியவராகிற வரையிலாவது அந்த அசமர்த்ததை நீங்குகிறவரையிலாவது அவர்களில் ஒருவருக்கும் காலங்கடக்கமாட்டாது

திருஷ்டாந்தம்.

(a) பி, ஸி, டி, என்பவர்கள் பங்குக்காரர்களாயிருக்கிற ஒருவர்த்தகக் கூட்டத்துக்கு எ-என்பவர் கடன்பட்டிருக்கிறார். பி-என்பவர் பித்தராயும் ஸி-என்பவர் மைனராயுமிருக்கிறார்கள். பி, ஸி, என்பவர்களுடைய அனுமதியில்லாமல் டி என்பவர் அந்தக்கடனைப் பரிஷ்காரஞ்செய்து விடக்கூடும். பி, ஸி, டி, என்பவர்களுக்குக் காலங்கடந்துகொண்டேவரும்.

(b) இ, எப், ஜி என்பவர்கள் பங்குக்காரர்களாயிருக்கிற ஒரு வர்த்தகக் கூட்டத்துக்கு எ-என்பவர் கடன்பட்டிருக்கிறார். இ, எப், என்பவர்கள் பித்தராயிருக்கிறார்கள்; ஜி, என்பவர் மைனராயிருக்கிறார். இ, என்பவராவது எப்-என்பவராவது புத்தி ஸ்வாதீனமடைகிறவரையிலாகிலும், ஜி, என்பவர் வயது வந்த பருவமடைகிறவரையிலாகிலும் அவர்கள் எவருக்கும் காலங்கடக்கமாட்டாது.

8. எவ்வளவு காலத்திற்குள் யாதொரு வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டியதோ அல்லது மனுசெய்து கொள்ளவேண்டியதோ அந்தக் காலமானது, அசமர்த்ததை நீங்கினது முதற்கொண்டாவது, அசமர்த்ததையுண்டான நபர் இறந்துபோனது முதற்கொண்டாவது, 6-வது அல்லது 7-வது பிரிவிலுள்ள தெதனாலும் மூன்று வருஷத்தைவிட அதிகப்படுவதாக எண்ணக்கூடாது; * சாமந்த பாத்தியதையை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்படுகிற வியாஜ்ஜியங்களுக்கு 6-வது அல்லது 7-வது பிரிவிலுள்ள தெதுவும் பிரயோகப்படாது.

விசேஷ நிவாரணைகள்.

திருஷ்டாந்தம்.

(a) உயில் மூலமாய் ஏற்பட்டான ஆஸ்திக்காக வியாச்சியந்தொடரும்படியான சுதந்தரத்தை மைனராயிருந்தகாலத்தில் அடைந்த எ-என்பவர் அந்தச் சுத

---

* 'சாமந்த பாத்தியதை' என்பது யாதொரு பொருளை மற்றவர்களுக்கு முன்னே கிரயத்துக்குக் கொள்வதற்கான பாத்தியதையாகும்.

ந்தரமுண்டான பதினெரு வருஷத்திற்குப்பின்பு வயதுவந்த பருவமடைகிருர். சாதாரணமான சட்டப்பிரகாரம் எ-என்பவர் வியாஜ்ஜியம் தொடருவதற்கு இன்னும் ஒரேவருஷந்தான் மிகுதியாயிருக்கிறது. ஆனல் 6-வது பிரிவின்படியும் இந்தப்பிரிவின்படியும் அவருக்குப்பின்னும் இரண்டுவருஷம் ஒத்துக்கொடுக்கப்படுமாதலால், அவர் பருவமடைந்த தேதிமுதல் எல்லாம் சேர்ந்து மூன்றுவருஷமாகும்; அதற்குள் வியாஜ்ஜியங் கொண்டுவரலாம்.

(b) பரம்பரையான தொழிலுக்காக வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் எ-என்பவருக்கு அவர் பித்தராயிருந்தகாலத்தில் உண்டாகிறது. அந்தச் சுதந்தரமுண்டான ஆறுவருஷத்திற்குப்பின்பு எ-என்பவர் புத்திஸ்வாதீனமடைகிருர். சாதாரணமான சட்டப்பிரகாரம், அவருக்குப் பைத்தியம் தீர்ந்த தேதிமுதல் வியாஜ்ஜியந் தொடருவதற்காக எ-என்பவருக்கு ஆறு வருஷமிருக்கிறது. 6-வது பிரிவை இந்தப்பிரிவோடு சேர்த்துவாசிக்கும்போது அந்தப்பிரிவின்படி அவருக்கு அதிககாலம் கொடுக்கப்படமாட்டாது.

(c) குடிக்கூலிக்காரரிடத்திலிருந்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள வீட்டுக்காரராய் வியாஜ்ஜியம் தொடருவதற்காக உன்மத்தராயிருக்கிற எ-என்பவருக்குச் சுதந்தரமுண்டாகிறது எ-என்பவர் உன்மத்தராயிருந்தபடியே அந்தச் சுதந்திரமுண்டான மூன்றுவருஷத்திற்குப்பின்பு இறந்துபோகிருர். சுதந்திரத்தில் எ-என்பவருடைய பிரதிநிதியாயிருப்பவருக்குச் சாதாரணமான சட்டப்பிரகாரம் எ-என்பவருடைய மரணதேதிமுதல் வியாஜ்ஜியங்கொண்டு வருவதற்காக ஒன்பது வருஷமிருக்கிறது. பிரதிநிதிக்கு அந்த பிரதிநிதித்வம் உண்டாகும்போது அவரும் அசக்த்தராயிருந்தாலொழிய, 6-வது பிரிவை இந்தப் பிரிவோடுசேர்த்து வாசிக்கும்போது அந்தப்பிரிவினலே அந்தக்காலம் அதிகப்படாது.

9. காலம் தொடர்ச்சியாய்ச்செல்லுவது. காலம்கடக்க ஒருதரம் ஆரம்பித்திருக்குமாகில், பின்னிட்டுண்டாகிற அசமர்த்ததையினலாவது வியாஜ்ஜியந் தொடர அசக்தியினலாவது அது தடைபடமாட்டாது.

ஆனல், கடன்கொடுத்தவருடைய ஆஸ்திக்காக லெட்டர்ஸ் ஆவ் அட்மினிஸ்ட்ரேஷன் என்னும் அதிகார பத்திரமானது அவருடைய கடனளிக்குக் கொடுக்கப்பட்டிருக்குமாகில் அந்தக்கடனை வசூல்செய்ய வியாஜ்ஜியத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காலமானது அந்த அட்மினிஸ்ட்ரேஷன் இருக்கும்போது கடக்கவொட்டாமல் நிறுத்திவைக்கப்படும்.

10. வெளிப்படையான ட்ரஸ்டிகள் மே இதில் முன்னமே என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, குறித்த யாதொரு காரியத்திற்காகச் சொத்தானது டிரஸ்டில் யாருக்குச் சங்கிரமித்தி

ரும்அவர்களுடைய பிரதிநிதிகள் மேலும் வியாஜ்ஜியம்.

ருக்கிறதோ அந்த பேரின்மேலாவது அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதிகளின்மேலாவது (பெறுமான ஐவேஜூக்காக ஒப்படைக்காரர்களல்லாத) ஒப்படைக்காரர்கள் மேலாவது அவருடைய அல்லது அவர்களுடைய வசத்தில் அப்படிப்பட்ட சொத்தையாகிலும் அதன் வரும்படியையாகிலும் தொடருவதற்காகவோ அல்லது அப்படிப்பட்ட சொத்து அல்லது வரும்படியைப்பற்றிய கணக்குக்காகவோ கொண்டு வரப்படும் வியாஜ்ஜியமானது எவ்வளவு தீர்க்க காலத்தினாலாகிலும் தடைப்படமாட்டாது.

அன்னிய தேசத் ஒப்பந்த உடன்படிக்கைகள் மேல் வியாஜ்ஜியம்.

11. (1) அன்னியதேசத்தில் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளின்மேல் ப்ரிடிஷ் இந்தியாவில் தொடரப்படும் வியாஜ்ஜியங்கள் இந்த ஆக்டில் கண்ட காலநிர்ணய விதிகளுக்கு உட்பட்டிருக்கின்றன.

(2) யாதொரு அன்னியதேசத்தில் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையைக்குறித்து ப்ரிடிஷ் இந்தியாவில் தொடரப்படுகிற வியாஜ்ஜியத்திலே அன்னியதேசத்துக் காலநிர்ணய விதியை அந்த விதியினாலே அந்த உடன்படிக்கை அற்றுப்போயிருந்தும், அந்த விதியினாலே நிர்ணயிக்கப்பட்ட காலவரையறையில் அப்படிப்பட்ட தேசத்திலே அந்தக் கட்சிக்காரர்கள் நிலையாய் வாசஞ்செய்து கொண்டிருந்தாலொழிய, பிரதிவாதமாக எடுத்துச்சொல்லலாகாது.

3 - ம் பாகம்.

கெடுவுகாலத்தை கணக்கிடுவது.

சட்டப்படிக்கான நடவடிக்கைகளில் காலத்தைக் கழித்துக்கொடுப்பது.

12. (1) யாதொரு வியாஜ்ஜியம் அப்பீல் அல்லது மனுவிற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில் என்று முதல் அந்த கெடுவுகாலத்தைக் கணக்கிடவேண்டுமோ அந்த நாளைக்கழித்துக்கொடுக்கவேண்டும்.

(2) அப்பீலுக்கும் அப்பீல்செய்ய அனுமதி கேட்டுக்கொள்ளுகிற மனுவுக்கும், தீர்ப்பைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிற மனுவுக்கும் நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில், எதன்மேல் பிரியாது செய்யப்பட்டதோ அந்தத் தீர்ப்பு சொல்லப்பட்ட நாளையும், எதன்மேல் அப்பீல் செய்யப்பட்டதோ

அல்லது எதைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதோ அந்த டிக்ரி - தீர்ப்பு அல்லது உத்தரவுக்கு நகல் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த காலத்தையும் கழித்துக்கொடுக்கவேண்டும்.

(3) யாதொரு டிக்ரியின்மேல் அப்பீல் செய்யப்பட்டாலும் அதைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டாலும், அதற்கு ஆதாரமாயிருக்கிற தீர்ப்புக்கு நகலைப்பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டியிருக்கிற காலத்தையும் கழித்துக்கொடுக்கவேண்டும்.

(4) யாதொரு தீர்மானத்தை ரத்துபண்ணும்படி செய்யப்பட்ட மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில், அந்தத் தீர்மானத்திற்கு நகல் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த காலத்தைக் கழித்துக்கொடுக்கவேண்டும்.

பிரதிவாதி ப்ரிடிஷ் இந்தியாவிலும் வேறே சில பிரதேசங்களிலுமில்லாத காலத்தைக்கழித்துக்கொடுப்பது.

13. யாதொரு வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில், ப்ரிடிஷ் இந்தியாவிலும் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே கவர்ன்மெண்டாரின் பரிபாலனத்தின் கீழிருக்கும் பிரதேசங்களிலும் பிரதிவாதி இல்லாத காலத்தைக் கழித்துக்கொடுக்கவேண்டும்.

அதிகாரமில்லாத கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு வியாஜ்ஜியம் தொடர்ந்திருக்கிற காலத்தைக் கழித்துக் கொடுப்பது.

14. (1) யாதொரு வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்தைக் கணக்கிடுகையில், யாதொரு அசல் கோர்ட்டிலானாலும் அப்பீல் கோர்ட்டிலானாலும், பிரதிவாதியின்மேல் வேறொரு ஸிவில் விவகாரத்தைத் தகுந்த ஜாக்கிரதையோடு வாதி நடத்திக் கொண்டிருந்த காலத்தை-அந்த விவகாரம் அதே வியாஜ்ஜிய மூலத்தை ஆதாரமாகக்கொண்டும், அதிகாரவரம்பு குறைவினாலாகிலும் அத்தன்மையான வேறே காரணத்தினாலாகிலும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாமையாயிருக்கிற யாதொரு கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு நடத்தப்பட்டு மிருக்குமாகில், கழித்துக்கொடுக்கவேண்டும்.

(2) யாதொரு மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில், அதே பரிகாரத்திற்காக அதே நபரின்மேல் மனுதாரர் யாதொரு அசல் கோர்ட்டிலாவது அப்பீல் கோர்ட்டிலாவது வேறொரு ஸிவில் விவகாரத்தைத் தகுந்த ஜாக்கிரதையுடன் நடத்திக்கொண்டிருந்த காலத்தை-மேற்படி விவகாரமானது அதிகாரவரம்பு

குறைவினாலாகிலும் அத்தன்மையான வேறே காரணத்தினாலாகிலும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாமையாயிருக்கிற யாதொரு கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு நடத்தப்பட்டிருக்குமாகில் கழித்துக்கொடுக்க வேண்டும்.

விவரணம் 1.—முந்திய வியாஜ்ஜியமாவது மனுவாவது நடந்து கொண்டிருந்த காலத்தைக் கழித்துக்கொடுப்பதில், அந்த வியாஜ்ஜியம் தொடரப்பட்ட அல்லது மனுசெய்யப்பட்ட நாளும் அதில் நடவடிக்கைகள் முடிந்த நாளுமாகிய இரண்டு நாளையும் கணக்காக்கிக்கொள்ள வேண்டும்.

விவரணம் 2—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக அப்பீலை எதிர்க்கிற வாதி அல்லது மனுதாரர் வியாஜ்ஜியம் நடத்துகிறவராக எண்ணப்படுவார்.

விவரணம் 3.—இந்தப் பிரிவின் காரியங்களுக்காகக் கட்சிக்காரர்களையாவது வியாஜ்ஜிய மூலங்களையாவது பிசகாய்ச் சேர்ப்பதானது-அதிகார வரம்பு குறைவைப்போன்ற தன்மையுடைய காரணமாய் எண்ணப்படும்.

எதுவரையில் விவகாரம் நிறுத்திவைக்கப்படுகிறதோ அந்தக்காலத்தைக் கழித்துக்கொடுப்பது.

15. (1) யாதொரு வியாஜ்ஜியம் தொடருவது அல்லது டிக்ரியை நிறைவேற்றுவது இன்ஜங்ஷன் அல்லது உத்தரவினாலே நிறுத்திவைக்கப்பட்டிருக்குமானால் அந்த வியாஜ்ஜியத்திற்காகவாகிலும் டிக்ரியை நிறைவேற்றிக் கொள்வதற்கான மனுவுக்காகவாகிலும் நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்தைக் கணக்கிடுகையில், அந்த இன்ஜங்ஷன் அல்லது உத்தரவு எதுவரையிலிருக்கிறதோ அந்தக்காலத்தையும், அது பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட நாளையும், அது நிறுத்திவிடப்பட்ட நாளையும் கழித்துக்கொடுக்கவேண்டும்.

(2) யாதொரு வியாஜ்ஜியத்தைக்குறித்து அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்தின் நிபந்தனைகளின்படி நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில் அந்த நோடீஸ் காலவரையறையைக் கழித்துக்கொடுக்கவேண்டும்.

டிக்ரியை நிறைவேற்றுவதற்கான

16. டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டுச் செய்யப்பட்ட விற்பனையிலே கிரயத்துக்குக் கொண்

விற்பனையை ரத்து பண்ணுவதற்காகவிவகாரம்நடந்துகொண்டிருக்கிற காலத்தைக்கழித்துக்கொடுப்பது.

டவரால் ஸ்வாதீனஞ் செய்யும்படி தொடரப்பட்ட வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் கணக்கிடுகையில், அந்த விற்பனையை ரத்து பண்ணும்படி விவகாரம் நடத்தப்பட்டிருக்கிற காலத்தைக் கழித்துக்கொடுக்கவேண்டும்.

வியாஜ்ஜியம்தொடரும்படியானசுதந்தர முண்டாவதற்கு முன்னமே இறந்து போவதனலே இன்னதுண்டாருமென்பது.

17. (1) ஜீவித்திருந்தால் வியாஜ்ஜியம் தொடர அல்லது மனுசெய்து கொள்ளச் சுதந்தர முடையவராகிறவர் அந்த சுதந்தரமுண்டாவதற்கு முன்னமே இறந்துபோனல், அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடர அல்லது மனு செய்துகொள்ளக் கூடுமானவராய், இறந்துபோனவருக்குச் சட்ட சம்மதமான பிரதிநிதி ஏற்படுகிற காலமுதற்கொண்டு கெடுவுகாலம் கணக்கிடப்படும்.

(2) ஜீவித்திருந்தால் எவர்மேல் வியாஜ்ஜியம் தொடர அல்லது மனுசெய்துகொள்ளச் சுதந்தர முண்டாயிருக்குமோ அவர் அந்தச் சுதந்தரமுண்டாவதற்கு முன்னமே இறந்துபோனல், எவர்மேல் வாதி அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடரலாமோ அல்லது மனு செய்து கொள்ளலாமோ அப்படிப்பட்ட சட்டசம்மதமான பிரதிநிதி இறந்துபோனவருக்கு ஏற்படுகிற கால முதற்கொண்டு கெடுவுகாலம் கணக்கிடப்படும்.

(3) சாமந்த பாத்தியதைஸ்ய நிறைவேற்றுவதைப்பற்றிய வியாஜ்ஜியங்களுக்காவது, அசையாப்பொருள் அல்லது பரம்பரையான தொழிலின் ஸ்வாதீனத்தைப்பற்றிய வியாஜ்ஜியங்களுக்காவது (1) (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலுள்ள தெதுவும் பிரயோகப்படமாட்டாது.

மோசத்தினலே இன்னதுண்டாகுமென்பது.

18. வியாஜ்ஜியம் தொடர அல்லது மனுசெய்துகொள்ளச் சுதந்தரமுடையவரெவராவது அப்படிப்பட்ட சுதந்தரம் அல்லது அதற்கு ஆதாரமான ஹக்கு அவருக்குத் தெரியவரவொட்டாமல் மோசவகையாய் வைத்திருக்கப்பட்டிருந்தாலும், அப்படிப்பட்ட சுதந்தரத்தை ஸ்தாபிப்பதற்கு அவசியமான யாதொரு தஸ்தவேஜு அவருக்குக் கிட்டாமல் மோசடியாய் மறைத்துவைக்கப்பட்டிருந்தாலும்,

(a) மோசஞ்செய்தவர் அல்லது அதற்கு உதவியாயிருந்தவர் மேலாவது,

(b) பெறுமான ஐவேஜுக்காகவும் நல்ல எண்ணத்தோடல்லாமல் மற்றபடி அவர் மூலமாய்த் தாவாசெய்கிறவரெவர் மேலாவது,-

வியாஜ்ஜியம்தொடர அல்லது மனுசெய்துகொள்ள நிர்ணயிக்கப்பட்ட காலமானது- மோசத்தினாலே கெடுதியடைந்த நபருக்கு அது முதலில் தெரியவந்த காலமுதற்கொண்டும், ஒளித்து வைக்கப்பட்ட தஸ்தாவேஜு விஷயத்தில் அதைக்கொண்டுவரவாவது கொண்டுவரும்படி கட்டாயப்படுத்தவாவது அவருக்கு முதலில் வகையுண்டான காலமுதற்கொண்டும் கணக்கு செய்யப்படும்.

எழுத்து மூலமாய் ஒப்புக் கொள்ளுவதனாலே இன்னதுண்டாகு மென்பது.

19. (1) யாதொரு சொத்து அல்லது சுதந்தரத்தைக் குறித்த வியாஜ்ஜியத்திற்காவது மனுவுக்காவது நிர்ணயிக்கப்பட்ட காலம்கழிவதற்கு முன்னமே, அப்படிப்பட்ட சொத்து அல்லது சுதந்திரத்தைக் குறித்து உத்தரிப்பதாக ஒப்புக்கொள்வது- அப்படிப்பட்ட சொத்து அல்லது சுதந்தரத்தைக்குறித்து எவர்மேல் தாவா செய்யப்படுகிறதோ அந்த நபரினாலாகிலும், யார் மூலமாய் அவர் ஹக்கு அல்லது பொறுப்பு அடைகிறாரோ அந்த யாதொரு நபரினாலாகிலும் எழுதிக்கையெழுத்து செய்யப்பட்டிருக்குமாகில், அப்படி ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்யப்பட்ட காலமுதற்கொண்டு புதிதாய்க் கெடுவுகாலம் கணக்கிடப்படும்.

(2) ஒப்புக்கொள்வதைக் கண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதரவிலே தேதி போடாதிருந்தால், அதில் கையெழுத்துசெய்யப்பட்ட காலத்தைக் குறித்து வாய்மொழிச் சாட்சியம் கொடுக்கலாம்; ஆனால், 1872-ம்வருஷத்திய 1-வது ஆக்டாகிய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு அதில் கண்டிருக்கிற சங்கதிகளைக்குறித்து வாய்மொழி சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விவரணம் 1.—ஒப்புக்கொள்ளுவதில் அந்த சொத்து அல்லது சுதந்தரம் இப்படிப்பட்டதென்று சரியாய்க் கண்டிராவிட்டாலும், செலுத்துவதற்காவது ஒப்பிப்பதற்காவது நிறைவேற்றுவதற்காவது அனுபவிப்பதற்காவது இன்னும் காலம்வரவில்லையென்று கண்டிருந்தாலும், செலுத்துவதற்காவது ஒப்பிப்பதற்காவது நிறைவேற்றுவதற்காவது அனுபவிக்கவிடவாவது மறுப்பதையுங்கூடக் கண்டிருந்தாலும், எதிர்க்

கடன் தாவாவையும்கூடச்சேர்த்து எழுதியிருந்தாலும், அந்தச்சொத்து அல்லது சுதந்திரத்திற்குப்பாத்தியமுடையவரல்லாத வேறே எவர் பெயருக்காவது எழுதியிருந்தாலும், இந்தப்பிரிவிற் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக அந்த ஆதரவேபோதுமானதாகலாம்.

விவரணம் 2.— இந்தப்பிரிவின் காரியங்களுக்காக "கையெழுத்து செய்யப்பட்ட" என்பது நேராகவாகிலும் இதுவிஷயத்தில் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற ஏஜண்டினுகிலும் கையெழுத்து செய்யப்பட்ட என்று அர்த்தமாகும்.

விவரணம் 3.—இந்தப்பிரிவின் காரியங்களுக்காக ஒரு டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காகச்செய்துகொள்ளும் மனுவானது யாதொரு சுதந்தரத்தைக்குறித்த மனுவாகும்.

வட்டிக் கென்று (பணம்) செலுத்தினுலாவது அசலுக்காக எவ்வளவாகிலும் செலுத்தினுலாவது இன்ன துண்டாகுமென்பது.

20. (1) நிர்ணயமானகாலம் முடிவதற்கு முன்னமே கடனுக்காகிலும் மரணசாஸன மூலமாய் ஏற்பாடான ஆஸ்திக்காகிலும் வட்டியானது அந்தக்கடன் அல்லது ஏற்பாடான ஆஸ்தியைச் செலுத்துவதற்குட்பட்டவராகிலும், இதுவிஷயத்தில் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டினுலாகிலும் அப்படிப்பட்டதாகச் செலுத்தப்பட்டாலும்,

நிர்ணயமான காலம் முடிவதற்கு முன்னமே அசல் கடனுக்கு எவ்வளவாவது பாக்கிதாரராலாகிலும் இதுவிஷயத்தில் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டினுலாகிலும் செலுத்தப்பட்டாலும்,

அப்படி செலுத்தப்பட்ட காலமுதற்கொண்டு, புதிதாய்க் கெடுவு காலம் கணக்கிடப்படும்.

ஆனுல், 1928-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-தேதிக்கு முன்பாக வட்டிக்காக செலுத்தப்பட்ட விஷயங்களில் தவிர, மற்ற விஷயங்களிலே, பணம்செலுத்துகிறவருடைய கையெழுத்தினுலே செல்லு எழுதப்பட்டு, அல்லது பணஞ்செலுத்தியதாக ஒப்புக்கொள்ளுவது எழுதி அவரால் கையெழுத்து செய்யப்பட்டாவது இருக்கவேண்டும்.

கொதுவை நிலத்தின் மாசூலைப்பெற்றுக் கொள்ளுவதுல் இன்ன துண்டாகுமென்பது.

(2) கொதுவை நிலமானது கொதுவைவைத்துக்கொண்டவருடைய ஸ்வாதீனத்திலிருக்குமாகில், அப்படிப்பட்ட நிலத்தின் வாடகை அல்லது குத்தகைத்தொகையையாவது மாசூலையாவது பெ

ற்றுக்கொள்வது, (1) குறிப்பிட்ட உட்பிரிவிற் சொல்லியிருக்கிற காரியத்தின் பொருட்டுச் செலுத்தினதாக எண்ணப்படும்.

விவரணம்.—கடன் என்பதிலே கோர்ட் டிக்ரியின்படி அல்லது உத்தரவின்படி செலுத்ததக்க பணமென்பதும் அடங்கும்

அசமர்த்ததையாயிருக்கும் நபரின் ஏஜென்ட்.

21. (1) 19-வது 20-வது பிரிவுகளிற்கண்ட "இது விஷயத்தில் கிரம அதிகாரங்கொடுக்கப் பெற்ற ஏஜென்ட்" என்னும் சொற்றொடரிலே அசமர்த்ததையாயிருக்கும் நபரின் விஷயத்தில், அவருடைய சட்டசம்மதமான கார்டியன் (சவரட்சகர்) கமிட்டி அல்லது மானேஜர் (நிர்வாக கர்த்தர்) என்பதும், அல்லது ஒப்புக்கொள்ளவதற்கான மேற்படி ஆதரவிலே கையெழுத்து செய்யவோ மேலேகண்டபடி (பணம்) செலுத்தவோ அந்த கார்டியன் கமிட்டி அல்லது மானேஜரிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்ற ஏஜென்ட் என்பதும் அடங்கும்.

கூட்டான பல ஒப்பந்தக்காரர்முதலானவர்களில் ஒருவர் ஒப்புக்கொள்வது அல்லது (பணம்) செலுத்துவது.

(2) கூட்டான பல ஒப்பந்தக்காரர்கள்-பங்குக்காரர்கள் எக்ஸிக்யூட்டர்கள் அல்லது கொதுவை வைத்துக்கொண்டவர்களில் யாவரொருவராலாகிலும் சிலராலாகிலும் அப்படிப்பட்டவர்களுடைய ஏஜெண்டினாலாகிலும் ஒப்புக்கொண்டு எழுதிக் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமாவது (பணம்) செலுத்தப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமாவது அவர்களில் வேறெவர் மேலேகண்ட பிரிகளிலுள்ள தேதனுலும் பொறுப்புக்குள்ளாகமாட்டார்.

(3) மேற்கண்ட பிரிவுகளின் காரியங்களுக்காக—

(a) ஹிந்துலாவை அனுசரிக்கிற யாதொரு விதவை, அல்லது சொத்துக்களில் குறிப்பிட்ட பாத்தியதையுள்ள மற்ற சுதந்தரமுடைய யாதொருவர், நேரிலாவது கிரமமாய் அதிகாரங் கொடுத்து நியமிக்கப்பட்ட ஏஜெண்டினாலாவது யாதொரு சுதந்தரத்தைக்குறித்து, ஒப்புக்கொண்டு எழுதிக்கையெழுத்துசெய்வதும், பணம் செலுத்துவதும், அப்படிப்பட்ட ஸ்வதந்தரத்தைக்குறித்து பாத்தியதையடையக்கூடிய பின்வார்ஸுகளையும், சந்தர்ப்பத்துக் கேற்றபடி அவை ஒரு சரியான ஒப்புக்கொள்ளுதலாகவும், செலுத்தப்பட்டதாகவும் கட்டுப்படுத்தும். மேலும்,

(b) ஒரு ஹிந்து அவிபக்தகுடும்பத்தினுலாவாது அல்லது அதற்காகவாவது, யாதொரு சுதந்தரம் உட்படுத்தப்பட்டு, அதற்காக அந்தந்த காலத்தில் குடும்ப மானேஜராய் இருப்பவராவாவது, கிரமமாய் அதிகாரங்கொடுத்து நியமிக்கப்பட்டவராலாவது செலுத்தப்பட்டதை அல்லது (பணம்) செலுத்தியதாக ஒப்புக்கொள்ளுவதை, அந்த அவிபக்த குடும்பத்தின் சார்பாக செய்யப்பட்டதாக எண்ணப்படும்.

புதிதாய்வாதியையாவது பிரதிவாதியையாவது பார்த்தி செய்வதனுலாகிலும் சேர்ப்பதனு லாகிலும் இன்னதுண்டாகுமென்பது

22. (1) யாதொரு வியாஜ்ஜியம் தொடரப்பட்ட பின்பு, புதிதாய் வாதியாவது பிரதிவாதியாவது பார்த்திசெய்யப்பட்டாலும்,சேர்க்கப்பட்டாலும் அவர் மட்டில் அந்த வியாஜ்ஜியமானது அப்படி அவர் கட்சிகாரராக செய்யப்பட்டபோது ஆரம்பமானதாக எண்ணப்படும்.

(2) யாதொரு வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கும்போது எந்த பாத்தியதையாகிலும் ஒப்படை செய்யப்பட்டது காரணமாகவோ (இன்னொருவரைச்) சேர்ந்துவிட்டது காரணமாகவோ யாதொரு கட்சிக்காரர் சேர்க்கப்பட்டாலும் பார்த்தி செய்யப்பட்டாலும் அல்லது பிரதிவாதி வாதியாக்கப்பட்டாலும் அப்படிப்பட்ட விஷயத்துக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவுலுள்ளதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

தொடர்ச்சியாய்த் தவறிப்போவதும் அக்கிரமிப்பதும்.

23. ஒப்பந்த உடன்படிக்கை தவறிப்போவது இடைவிடாததாயிருக்கிற விஷயத்திலும், ஒப்பந்த உடன்படிக்கை சம்பந்தமில்லாமல் இடைவிடாத அக்கிரம முண்டாயிருக்கிற விஷயத்திலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி தவறுதலோ அல்லது அக்கிரமமோ நடந்து வருகிற காலம் வரையிலே அந்தந்தக்ஷணத்தில் புதிதாய்க் கெடுவுக் காலம் செல்லத்தொடங்கும்.

பிரத்தியேகமான நஷ்டமில்லாமல் வியாஜ்ஜியம்தொடரத்தகாதகாரியத்துக்காகப் பிரதிபலனைப்பற்றி வியாஜ்ஜியம்.

24. யாதொரு காரியத்தினுலே ஏதாவது குறித்த கெடுதி வாஸ்தவமாய் உண்டானுலொழிய வியாஜ்ஜிய மூலத்துக்கு இடங்கொடாத அந்தகாரியத்தைக் குறித்துப் பிரதிபலனைப்பற்றின வியாஜ்ஜிய விஷயத்தில் அந்தக்கெடுதியுண்டாகிற காலமுதற்கொண்டு கெடுவுகாலம் கணக்கிடப்படும்.

திருஷ்டாந்தம்.

ஒரு புலத்தின் மேற்புறம் ஏ-என்பவருக்குறியது. அதன் உட்புறத்துமன் பி-என்பவருக்குறியது. மேற்புறத்துக்கு உடனே கண்ணுக்குத் தென்படும்படியான யாதொரு கெடுதியுமுண்டுபண்ணுமல் பி-என்பவர் அதிலிருந்து கரிவெட்டி எடுக்கிறுர்; ஆனுல், கடைசியில் மேற்புறம் உள்ளமுந்தி போகிறது. பி-என்பவர் மேல் ஏ என்பவர் வியாஜ்ஜியம் தொடருகிற விஷயத்தில் அப்படி உள்ளமுந்திப்போன காலமுதற்கொண்டு கெடுவுகாலம் செல்லும்.

ஆதரவுகளில்கண்டிருக்கிற காலத்தைக்கணக்குசெய்வது.

25. இந்த ஆக்டிற் சொல்லியிருக்கிற காரியங்களினிமித்தம் சகல ஆதரவுகளும் (க்ரெகொரி) என்பவரால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தை அனுசரித்து எழுதப்பட்டவைகளாக எண்ணப்படும்.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு ஹிந்துவானவர் சுயதேதிமாத்திரம் போட்டு, அந்த தேதிக்கு நான்கு மாதத்திற்குப் பின்பு செலுத்துவதாக ஒரு ப்ராமிஸொரி நோட் எழுதிக் கொடுக்கிறுர். அந்த ப்ராமிஸொரி நோட்டின்மேல் வியாஜ்ஜியத்திற்குச் சம்மந்தப்படும்படியான கெடுவுகாலமானது க்ரெகொரி என்பவரால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கப்படிக்குக் கணக்கு செய்யப்பட்ட தேதிக்குப்பின்பு நான்குமாதம் கழிந்ததுமுதல் செல்லும்.

(b) ஒரு ஹிந்துவானவர் சுயதேதிமாத்திரம் போட்டு, ஒரு வருஷத்திற்குள் மறுபடி பணம் செலுத்துவதாகப் பத்திரமெழுதிக்கொடுக்கிறுர். அந்தப்பத்திரத்தின்மேல் வியாஜ்ஜியத்திற்குச்சம்பந்தப்படும்படியான கெடுவுகாலயானது க்ரெகொரி என்பவரால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கப்படிக்குக் கணக்கு செய்யப்பட்ட தேதிக்குப்பின்பு ஒரு வருஷம் கழிந்தது முதல் செல்லும்.

4-ம் பாகம்.

ஸ்வாதீனத்திஞலே உரிமை அடைவது.

வழிநடை முதலிய வசதி யுரிமைகளுக்குச் சுதந்தர மடைவது.

26. (1) வெளிச்சமாவது காற்றுவது யாதொரு கட்டிடத்துக்கு வருவதையும் அந்தக்கட்டிடத்திற்காக உபயோகப்படுவதையும் வசதியுரிமையாகவும சுதந்தரப்பொருளாகவும் தடையில்லாமல் இருபது வருஷகாலம் நிம்மதியாய் அதனுடன் அனுபவித்திருந்தாலும்.

யாதொரு வழியையாவது, தண்ணீர்க் கால்வாவது, தண்ணீரின் உபயோகத்தையாவது, (தம் செய்கையினுலே அனுபவிக்கப்படுகிற

தாகவாகிலுமிருக்கிற) வேறே யாதொரு வசதியுரிமையையாவது, வசதியுரிமையாகவும் சுதந்தரப்பொருளாகவும் அதற்குப் பாத்தியதை கொண்டாடுகிறவரெவராகிலும் தடையில்லாமல் இருபது வருஷகாலம் நிம்மதியாயும் வெளிப்படையாயும் அனுபவித்திருந்தாலும்,

அப்படிப்பட்ட வெளிச்சம் அல்லது காற்றின் வருகைக்கும் உபயோகத்திற்குமாவது, வழி-தண்ணீர்க்கால்-தண்ணீரின் உபயோகம் அல்லது வேறே வசதியுரிமைக்காவது உண்டாகிய சுதந்தரம் அடிபட்டுப்போகமாட்டாமல் அறுதியானதாகும்.

மேற்சொல்லிய பிரதி இருபது வருஷகாலமும்-விவாதத்திலிருக்கிற அந்தகால சம்பந்தமான தாவாவைக் குறித்து வியாஜ்ஜியம் தொடருவதற்கு அடுத்து முந்திய இரண்டு வருஷத்திற்குள் முடிகிற காலமாக எடுத்துக்கொள்ளப்படும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எந்த சொத்தின்மேல் சுதந்தரமிருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறதோ அந்த சொத்தானது கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாயிருந்தால் ஷெ உட்பிரிவை "இருபது வருஷகாலம்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "அறுபது வருஷகாலம்" என்னும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போல வாசிக்கவேண்டும்.

விவரணம் :—தாவாதாரரல்லாமல் வேறே எவருடைய செய்கையினாலாவது உண்டுபண்ணப்பட்ட தடைகாரணமாக அந்த ஸ்வாதீனம் அல்லது அனுபவம் வாஸ்தவமாய் நின்றுபோயிருந்தாலன்றி மற்றப்படிக்கும், அந்த தடையைக்குறித்தும் அதைச் செய்கிறவர் அல்லது செய்யும்படி உத்தரவு கொடுக்கிறவரைக்குறித்தும் தாவாதாரர்தெரிந்து கொண்ட பின்பு ஒருவருஷகாலம் அப்படிப்பட்ட தடைக்கு உட்பட்டு அல்லது சம்மதித்திருந்தாலன்றி மற்றப்படிக்கும் இங்கப்பிரிவின் தாற்பரியப்படி எதுவும் தடையாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a) வழிநடை பாத்தியதை தடுக்கப்பட்டதற்காக 1911-ம் ஹு த்தில் வியாஜ்ஜியங்கொண்டுவரப்படுகிறது. தடுத்ததை பிரதிவாதி ஒப்புக்கொண்டு வழிநடை பாத்தியதையை மறுக்கிறார். வாதியானவர்-அந்த பாத்தியதைக்கு வசதியுரிமையாகவும் சுதந்தரப்பொருளாகவும் ஹக்கு உடைத்தாயிருக்கிற தாம் அதை, 1890-ம் ஹு ஜனவரிமீ 1௳ வரைக்கும் தடையில்லாமல் நிம்மதியாயும் வெளிப்

படையாயும் அனுபவித்து வந்ததாக ருஜூப்படுத்துகிறார் வாதி தம் பக்கமாகத் தீர்ப்பு பெற அர்ஹராயிருக்கிறார்.

(b அவ்வித வியாஜ்ஜியத்திலே வாதியானவர் இருபது வருஷகாலம் நிம்மதியாயும் வெளிப்படையாயும் அந்தச் சுதந்தரத்தைத் தாம் அனுபவித்து வந்ததாக ருஜூசெய்கிறார். இந்த இருபது வருஷகாலத்திலே ஒரு தருணத்தில் அந்தச் சுதந்தரத்தை அனுபவிக்க அனுமதி கொடுக்கும்படி வாதி தம்மைக்கேட்டுக்கொண்டாரென்று பிரதிவாதி ருஜூசெய்கிறார். வியாஜ்ஜியம் தள்ளுண்டு போகும்.

வசதி யுரிமைக்கு உட்பட்டிருக்கிற ஆட்சி எவருக்குப் பிந்தி சித்திக்கிறதோ அவர் பட்சத்தில் கழித்துக்கொடுப்பது.

27. யாதொரு வசதி யுரிமையானது எதன்மேல் அல்லது எதற்கு மேலாக அல்லது எதிலிருந்து அனுபவிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது அடையப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நிலமாவது தண்ணீராவது ஆயுள்வரையிலாகிலும், அது கொடுக்கப்படுகிறது முதல் மூன்று வருஷத்திற்கு மேற்பட்டு எத்தனை வருஷத்திற்காகிலும் உண்டாகிய யாதொரு பாத்தியதையைப் பற்றியாவது பாத்தியதையின் தன்மையைப் பற்றியாவது அடையப்பட்டிருக்குமாகில் அப்படிப்பட்ட பாத்தியதை அல்லது காலவரையறை நடந்துவருகிற வரையில் அப்படிப்பட்ட வசதியுரிமையை அனுபவித்துவருகிற காலமானது-அப்படிப்பட்ட பாத்தியதை அல்லது காலவரையறை முடிந்தவுடனே ஷை நிலம் அல்லது தண்ணீருக்குப் பாத்தியஸ்தராகிறவர் அப்படி முடிந்த பின்பு அடுத்த மூன்று வருஷத்திற்குள் அந்தச் சுதந்தரத்தை எதிர்க்கிற பட்சத்தில், மேற்படி இருபது வருஷகாலக்கணக்கிலே சேர்க்காமல் தள்ளிவிடப்படும்.

திருஷ்டாந்தம்.

பி-என்பவருடைய நிலத்தின்மேல் தமக்கு வழிநடை பாத்தியதை யுண்டாயிருப்பதாக நிச்சயிக்கும்படி எ-என்பவர் வியாஜ்ஜியம் தொடருகிறார். அந்த பாத்தியதையை இருபத்தைந்து வருஷம் தாம் அனுபவித்ததாக எ-என்பவர் ருஜூப்படுத்துகிறார்; ஆனால், பி-என்பவர் இந்த வருஷங்களில் பத்து வருஷகாலம் ஒரு ஹிந்து விதந்துவாகிய ஸி-என்பவள் அந்த நிலத்திலே ஆயுள்வரையில் சுதந்தரமுடையவளாயிருந்தாளென்றும், ஸி-என்பவள் இறந்து போனவுடனே தமக்கு (பி-என்பவருக்கு) அந்த நிலத்தில் ஹக்கு உண்டாயிற்றென்றும், ஸி-என்பவள் இறந்துபோனபின்பு இரண்டு வருஷத்திற்குள் அந்த பாத்தியதைக்கு எ-என்பவருக்குண்டான தாவாவைத் தாம் ஆட்சேபித்தாரென்றும் ரூபிக்கிறார். இந்தப் பிரிவிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் எ-என்பவர் பதினைந்து

வருஷம் அனுபவித்ததாக மாத்திரம் ருஜூப்படுத்தின்படியால் அந்த வியாஜ்ஜியத்தை தள்ளிவிடவேண்டும்.

சொத்துக்குப் பாத்தியதை யற்றுப் போவது.

28. யாதொரு சொத்தின் ஸ்வாதீனத்தைக் குறித்து வியாஜ்ஜியம் தொடருவதற்கு எவருக்காவது இதனுல் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்தவுடனே அப்படிப் பட்ட சொத்துக்கு அவருர்குள்ள பாத்தியதையானது அற்றுப்போகும்

5-ம் பாகம்.

நிவாரணைகளும் ரத்தானவைகளும்.

நிவாரணைகள்.

29. (1) இந்த ஆக்டிலுள்ளதெதனுலும் 1872-ம்வருஷத்திய இந்துதேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 25-வது பிரிவுக்கு பாதகம் உண்டாகமாட்டாது.

(2) யாதொரு விசேஷ சட்டதிட்டத்திலாவது பிரதேச சட்டதிட்டத்திலாவது யாதொரு வியாஜ்ஜியத்திற்கோ அப்பீலுக்கோ மனுவுக்கோ முதல் ஷெட்யூலின்படி அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவிலிருந்து வேருனதாயுள்ள ஒரு கெடுவுகாலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்தக்கால அளவு அதற்கு ஷை ஷெட்யூலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தாற்போலவே 3-வது பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படும்; மேலும், யாதொரு விசேஷ சட்டதிட்டத்திலாகிலும் பிரதேச சட்டதிட்டத்திலாகிலும் யாதொரு வியாஜ்ஜியம், அப்பீல் அல்லது மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் யாதொரு கெடுவுகாலத்தை நிச்சயிக்கும் காரியத்துக்காக:—

(a) 4-வது பிரிவு, 9-வது முதல் 18-வது வரையிலுள்ள பிரிவுகள், 22-வது பிரிவு ஆகிய இவைகளில் கண்ட நிபந்தனைகள் ஷை விசேஷ சட்டதிட்டம் அல்லது பிரதேச சட்டதிட்டத்திலுல் வெளிப்படையாய் விலக்கப்படாமலிருக்கிற வரையிலும் அளவுக்கும் மாத்திரமே பிரயோகப்படும்; அல்லாமலும்,

(b) இந்த ஆக்டில் கண்ட மற்ற நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா;

(3) இந்த ஆக்டிலுள்ள தெதுவும் 1860-ம்வருஷத்து 4-வது ஆக்ட்டாகிய இந்துதேசத்து விவாக சம்பந்த நிவர்த்தி ஆக்டின்படிக்கான வியாஜ்ஜியங்களுக்குப் பிரயோகப்படமாட்டாது.

(4) 26-வது, 27-வது பிரிவுகளும் 2-வது பிரிவிற்கண்ட "வழி நடை முதலிய வசதியுரிமை" என்பதன் அர்த்தமும் 1882-ம்வருஷத்திய 5-வது ஆக்ட்டாகிய இந்து தேசத்து வழிநடை முதலிய வசதியுரிமைகளைக் குறித்த ஆக்ட் அந்தந்த காலத்தில் வியாபிக்கக் கூடிய பிரதேசங்களில் உண்டாகும் வியாஜ்ஜியங்களுக்குப் பிரயோகப் படமாட்டா.

எந்த வியாஜ்ஜியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலஅளவானது 1877-ம் வருஷத்திய இந்துதேசத்துக்கால நிர்ணயச்சட்டத்திஞல் நிர்ணயிக்கப்பட்ட காலஅளவைக் காட்டிலும் குறைவாயிருக்கிறதோ அந்த வியாஜ்ஜியங்களுக்காக நிபந்தனை.

30. இதில் இன்ன சொல்லியிருந்த போதினும் பாதகமில்லாமலே, யாதொரு வியாஜ்ஜியத்துக்காக இந்த ஆக்டிஞல் நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலமானது 1877-ம்வருஷத்திய 15-வது ஆக்டாகிய இந்துதேசத்துக் கால நிர்ணயச் சட்டத்திஞல் நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்தைக் காட்டிலும் குறைவாயிருந்தால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை-இந்த ஆக்ட் ஜாரி செய்தபிறகு அடுத்துவரும் இரண்டு வருஷகாலமாவது 1877-ம்வருஷத்திய இந்துதேசத்துக் கால நிர்ணயச் சட்டத்திஞல் ஷை வியாஜ்ஜியத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட காலஅளவாவது இந்த இரண்டு கால அளவுகளில் எதுமுதலில் முடிவாகிறதோ அந்தகால அளவுக்குள்ளே தொடரலாம்.

இரண்டாவது ஷெட்யூலிற் கண்ட பிரதேசங்களில்சில கொதுவைவைத்துக்கொண்டவர்களால் தொடரப்படும் வியாஜ்ஜியங் களுக்காக நிபந்தனை.

31. (1) இந்த ஆக்டிலாவது 1877-ம்வருஷத்திய 15-வது ஆக்டாகிய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்திலாவது என்னசொல்லியிருந்த போதினும் பாதகமில்லாமலே, இரண்டாவது ஷெட்யூலிற்கண்ட பிரதேசங்களில் யாதொரு கொதுவை வைத்துக்கொண்டவர் (கொதுவைச் சொத்தை) மீட்டுக்கொள்வதற்கான பாத்தியதை அற்றுப்போவதற்காகவாவது விற்பனைக்காகவாவது வியாஜ்ஜியம் தொடரவேண்டுமாஞல் அந்த வியாஜ்ஜியத்தை, இந்த ஆக்ட் ஜாரியான தேதியிலிருந்து இரண்டுவருஷகாலமாவது கொதுவையின் மேல் கொடுக்கப்பட்ட பணம் பாக்கியான தேதியிலிருந்து அறுபது வருஷகாலமாவது இந்த இரண்டு காலங்களில் எது முதலில் முடிவாகிறதோ அந்தக் காலத்துக்குள்ளே தொடரலாம்; மேலும், மேலேகண்ட பிரதேசங்களில் அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியமானது அசல் கோர்ட்டிலாகிலும் அப்பீல் கோர்ட்டிலாகிலும் மேற்படி

அறுபது வருஷகாலத்துக்குள் தொடரப்பட்டு இந்த ஆக்ட் ஜாரியாகுந் தேதியிலே நடந்துகொண்டிருந்தால், அந்த வியாஜ்ஜியத்தைப் பன்னிரண்டு வருஷ காலநிர்ணயவிதி அதற்குப் பிரயோகப்படுகிறதென்னும் ஹேதுவினால் தள்ளிவிடக்கூடாது.

(2) மேலேகண்ட பிரதேசங்களிலே அசல் கோர்ட்டிலாவது அப்பீல் கோர்ட்டிலாவது (கொதுவைச்சொத்தை) மீட்டுக்கொள்வதற்கான பாத்தியதை அற்றுப்போவதற்காகவாகிலும் விற்பனைக்காகவாகிலும் கொதுவை வைத்துக்கொண்டவரால் செய்யப்பட்ட தாவா முழுவதுமாயினும் சிறிதுமட்டிலாயினும் 1907-ம் ஜூலை இருபத்திரண்டாந்தேதிக்குப்பிறகும் இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னும்மேற்படி தாவாவுக்குப் பன்னிரண்டுவருஷ காலநிர்ணயவிதி பிரயோகப்பட்டதென்னும் ஹேதுவினாலே தள்ளிவிடப்பட்டிருந்தாலுஞ்சரி, வாபஸ்வாங்கிக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி, அந்த தாவா எந்தக்கோர்ட்டாரால் தள்ளிவிடப்பட்டதோ அல்லது எந்தக்கோர்ட்டில் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டதோ அந்தக்கோர்ட்டாருக்கு எழுத்துமூலமாக மனு செய்துகொள்ளப்படுவதன்மேல் அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த ஆக்ட்ஜாரி செய்யப்படும் தேதியிலிருந்து ஆறுமாதகாலத்துக்குள்ளாக மேற்படி மனுசெய்துகொள்ளப்படவேண்டும். (தாவாவானது) மேலேகண்டபடி மறுபடியும் எடுத்துக்கொள்ளப்படுவதன்மேல், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்டபடி நிபந்தனைகள், பிரயோகப்படும்.

32. [1914-ம்ஞத்து 17-வது ஆக்டினால் ரத்து.]

முதல் ஷெட்யூல்.

(3 - வது பிரிவைப் பார்க்க.)

முதல் பகுதி: வியாஜ்ஜியங்கள்.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
1-ம் பாகம்—முப்பது நாள்.	
1. 1863-ம்வருஷத்து 23-வது ஆக்ட்டாகிய கரம்பு நிலங்களுக்குறிய (தாவாக்ககளைப்பற்றிய) ஆக்டின்படி ரெவினியு போர்டாருடைய தீர்மானத்தை ஆட்சேபிப்பதற்கு.	தீர்மானத்தைக் குறித்து வாதிக்கு நோட்டீஸ் ஒப்பிக்கப்படுகிறபோது.
2-ம் பாகம்—தொண்ணூறு நாள்.	
2. ப்ரிடிஷ் இந்தியாவிலே அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்ட திட்டத்தை யனுசரித்ததாகச் சொல்லப்பட்ட ஒரு காரியம் செய்வதற்காகவாவது, செய்யாமல் விடுவதற்காகவாவது பிரதிபலனுக்கு.	செய்வதாவது செய்யாமல் விடுவதாவது நேரிடுகிறபோது.
3-ம் பாகம்—ஆறு மாதம்.	
3. 1877-ம்வருஷத்து 1-வது ஆக்டாகிய ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்ட் 9-வது பிரிவின்படி அசையாப் பொருளை மறுபடி ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்காக.	ஸ்வாதீனம் தப்பிப்போன போது.
4. 1860-ம்வருஷத்து 9-வது ஆக்டாகிய தொழிலாளிகளுக்கும் அவர்களை வேலையில் வைத்துக் கொண்டவர்களுக்கும் (நேரிடுகிற விவாதங்களைப் பற்றிய) ஆக்ட் 1-வது பிரிவின்படி.	தாவாசெய்யப்பட்ட கூலியாவது கொடைக்கூலியாவது வேலையின் கிரயமாவது பாக்கியாகிற போது.
4-ம் பாகம்—ஒரு வருஷம்.	
5. 1908-ம்வருஷத்திய 5-வது ஸிவில்ப்ரொஸீஜர் கோடின் 128-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (f) அடையாளமிட்ட பகுதியிலே உதகரிக்கப்பட்ட (ஸம்மெரி) சுருக்கவகையான நடவடிக்கை. ஆனல், அப்படிப்பட்ட	கடனாவது நிஷ்கரிஷை செய்யப்பட்ட டிமாண்ட் தொகையாவது செலுத்தும்படியான தாகும்போதாகிலும் சொத்து மறுபடி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளும்படியானதாகும் போதாகிலும்.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

4-ம் பாகம்—ஒரு வருஷம்—தொடர்ச்சி.

சுருக்கவகையான பரிசீலனையில் சாதாரணமாய் அந்த தாவாக்களில் அனுசரிக்கப்படுகிற முறையைவிடாமலும் ஷைகோடின் 37-வது அதிகாரத்தின்படியும்.	
6. அபராதம் அல்லது பறிமுதலைக்குறித்து, ஸ்டாட்யூட்- ஆக்ட் ரெகுலேஷன் அல்லது சகாயச்சட்டத்தின் மேல்	அபராதம் அல்லது பறிமுதலுக்குள்ளாகிறபோது
7. இந்த ஷெட்யூல் 4-வது நம்பரில்சொல்லியிராத வீட்டுவேலைக்காரன், கைத்தொழிலாளி அல்லது வேலையாளின் கூலிக்காக.	கூலி பாக்கியாகிறபோது.
8. ஹோட்டல்- சாராயக்கடை-அல்லதுவிற்தி-வீடு வைத்துக்கொண்டிருப்பவரால் விடுகப்பட்ட உணவு அல்லது பானத்தின் கிரயத்திற்காக	உணவு அல்லது பணம் ஒப்பிக்கப்படுகிறபோது.
9. விடுதியின் வாடகைக்காக ...	வாடகை செலுத்தத்தக்கதாகும் போது.
10. சாமந்த பாத்தியதையானது சட்டத்தின் படிக்காகிலும், சாதாரணமான வழக்கத்தின் மேலாகிலும் ஆதாரப்பட்டதாயிருந்தாலும், பிரத்தியேகமான ஒப்பந்த உடன்படிக்கையின்மேல் ஆதாரப்பட்டதாயிருந்தாலும். அந்த பாத்தியதையை நிறைவேற்றுவிக்கும்படியாக.	தோஷஞ் சொல்லி கோரப்பட்ட விற்பனையின் பிரகாரம் கிரயகாரர் விற்கப்பட்ட சொத்து முழுமையையும் இயல்பாய் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகிறபோது; அல்லது விற்பனைப் பொருள் இயல்பாய் ஸ்வாதீனப்படத்தகாததா யிருந்தால், விக்கிரயபத்திரம் ரெஜிஸ்டர் செய்யப்படுகிறபோது.
11. எவருக்குவிரோதமாய் அடியிற்கண்ட உத்தரவுகளிலெதுவாவது செய்யப்பட்டிருக்கிறதோ அவர் அந்த உத்தரவிலடங்கியசொத்தில் தமக்கு உண்டென்று சொல்லிக்கொள்ளுகிற பாத்யதையை ஸ்தாபிப்பதற்கு.	அந்த உத்தரவின் தேதி.
(1) யாதொரு டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டு ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் விஷயமாய்த் தாவாசெய்யப்படுவதன்மேல் அல்லது அந்த சொத்தின் ஜப்திக்கு ஆட்சேபனை செய்யப்படுவதன்மேல் 1908-ம்ளுத்திய 5 - வது ஆக்டாகிய வியில் ப்ரொஸீஜர்கோடின்படிக்கான உத்தரவு.	

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எடுப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
4-ம்பாகம்—ஒரு வருஷம்—தொடர்ச்சி.	
(2) 1882-ம் ௵த்து 15-வது ஆக்டாகிய ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டின் 28-வது பிரிவின்படிக்கான உத்தரவு.	
11-A. டிக்கிரிபெற்றவர் அசையாப்பொருளின் ஸ்வாதீனத்துக்காகவாவது, யாதொரு டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டு விற்கப்பட்ட அப்படிப்பட்ட சொத்தைக் கிரயத்துக்குக்கொண்டவர் அந்தசொத்தின் ஸ்வாதீனம்ஒப்பிக்கப்படும் விஷயத்தில் எதிர்க்கப்படுவதைப்பற்றியோ தடுக்கப்படுவதைப்பற்றியோ முறையிட்டுக்கொண்டாவது மனுசெய்து கொள்வதன்மேலாகிலும், டிக்ரிபெற்றவருக்காவது கிரயதாரருக்காவது அந்தசொத்தின் ஸ்வாதீனத்தை ஒப்பிக்கையிலே அந்த சொத்தின் ஸ்வாதீனமிழந்த யாதொரு நபர் மனுசெய்து கொள்வதன் மேலாகிலும், எவருக்கு விரோதமாய் 1908-ம் ௵த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி உத்தரவு செய்யபபட்டிருக்கிறதோ அவர் அந்த உத்தரவிலடங்கிய சொத்தின் தற்கால ஸ்வாதீனத்துக்குத் தமக்குத் உண்டென்று சொல்லிக்கொள்ளுகிற பாத்தியதையை ஸ்தாபிப்பதற்கு.	அந்த உத்தரவின் தேதி.
12. அடியில் கண்டிருக்கிற விற்பனைகளில் எதையாவது ரத்துபண்ணும்படி:— (a) ஸிவில் கோர்ட் டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டுச் செய்யப்படும் விற்பனை; (b) கலெக்டர் அல்லது வேறே ரெவினியு அதிகாரியினுடைய டிக்ரியையாவது உதரவையாவது அனுசரித்து விற்பனை; (c) கவர்ன்மெண்ட் ரெவினியு பாக்கிக்காகவாவது அப்படிப்பட்ட பாக்கியைப் போல்வசூல் பண்ணும்படியான யாதொரு பாக்கிக்காகவாவது விற்பனை;	விற்பனை ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்படும்போது, அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் கொண்டுவரப்படாதிருந்தால் மற்றப்படி அறுதியாக முடிவானதாயிருக்கும்போது.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
4 - ம் பாகம்—ஒரு வருஷம்—தொடர்ச்சி.	
(d) நடைமுதல் வாடகை அல்லது குத்தகை பாக்கிக்காக, விற்கப்பட்ட பட்னி தாலுக் விற்பனே **விவரணம்.**—இந்த பகுதியில் "பட்னி" என்பதிலே நடைமுதல் வாடகை அல்லது குத்தகை பாக்கிக்காக விற்கும்படியான மத்தியிலுள்ள யாதொரு காணியாட்சி என்பதும் அடங்கும்.	
13. வியாஜ்ஜியமல்லாத வேறே யாதொரு விவகாரத்திலே ஸிவில் கோர்ட் தீர்மானம் அல்லது உத்தரவை மாற்றும்படிக்காவது ரத்து பண்ணும்படிக்காவது.	அந்த சங்கதியை முடிவாய் நிச்சயிப்பதற்கு அதிகாரமுள்ள கோர்ட்டாரால் அந்த சங்கதியில் செய்யப்பட்ட முடிவான தீர்மானம் அல்லது உத்தரவின் தேதி.
14. யாதொரு கவர்ன்மெண்ட் அதிகாரியினல் அவருடைய உத்தியோக ஹோதாவிலே செய்யப்பட்டதாய், மற்றப்படி இதில் வெளிப்படையாகக் கண்டிராத யாதொரு காரியம் அல்லதுஉத்தரவை ரத்துபண்ணும்படி.	அந்தக்காரியம் அல்லது உத்தரவின் தேதி.
15. கவர்ன்மெண்ட் ரெவினியு பாக்கிக்காக ரெவினியு அதிகாரிகளால் செய்யப்பட்ட அசையாப் பொருளின் ஜப்தியையாவது குத்தகையையாவது ட்ரான்ஸ்பரையாவது ரத்துபண்ணும்படி கவர்ன்மெண்டார்மேல்.	ஜப்தி-குத்தகை-அல்லது ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறபோது.
16. ரெவினியு பாக்கிக்காகவாவது அப்படிப்பட்ட பாக்கியைப்போல் வசூல் பண்ணும்படியான பாக்கிக்காகவாவது ரெவினியு அதிகாரிகளால் செய்யப்பட்ட தாவாவுக்குச் சரிச்சொல்லும் நிமித்தம்ஆட்சேபனையுடன் செலுத்தப்பட்ட பணத்தை வசூல்பண்ணுவதற்குக் கவர்ன்மெண்டார் மேல்.	பணஞ்செலுத்தப்படுகிறபோது.
17. பொதுஜன உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்காகப் பிரதிபலனைக் குறித்து கவர்ன்மெண்டார்மேல்.	பிரதிபலன் தொகை நிச்சயிக்கப்படுகிற தேதி.
18. எடுத்துக்கொண்டது பூர்த்திசெய்யப்படாதபோது பிரதிபலனைக்குறித்து அவ்வித வியாஜ்ஜியம்.	பூர்த்திசெய்ய நிராகரித்த தேதி,

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
4-ம் பாகம்—ஒரு வருஷம்—தொடர்ச்சி.	
19. மாறுபாடாய் சிறையிலடைப்பதற்காகப் பிரதி பலனைக்குறித்து.	சிறையிலிருப்பது முடியும்போது.
20. 1855-ம்௵த்து 12-வது ஆக்டாகியசட்டசம்மதமான பிரதிநிதிகளின் வியாஜ்ஜியங்களைப்பற்றிய ஆக்டின்படி எக்ஸிக்யூட்டர்கள்-அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அல்லது பிரதிநிதிகளால்.	அநியாயமடைந்த நபர் இறந்து போனதேதி.
21. 1855-ம்௵த்திய 13-வது ஆக்டாகிய இந்துதேசத்துத் தற்செயலாய் நேரிடும் மரணத்துக் கேதுவான விபத்துகளைப்பற்றிய ஆக்டின்படி எக்ஸிக்யூட்டர்கள் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அல்லது பிரதிநிதிகளால்.	கொல்லப்பட்ட நபர் இறந்துபோனதேதி.
22. சரீரத்துக்குச் செய்யப்பட்ட வேறே யாதொரு தீங்குக்காக பிரதிபலனைக்குறித்து.	தீங்கு செய்யப்படுகிறபோது.
23. வன்மத்தினால் செய்தபிராதுக்காகப்பிரதி பலனைக்குறித்து.	வாதி விடுதலை செய்யப்படுகிற போது, அல்லது மற்றப்படி பிராது முடிவாகும்போது.
24. அவதூறுக்காகப் பிரதிபலனைக்குறித்து.	அவதூறு பிரசித்தஞ்செய்யப்படுகிறபோது.
25. தூஷணைக்காகப் பிரதி பலனைக்குறித்து.	வார்த்தைகள் சொல்லப்படுகிற போது, அல்லது வார்த்தைகளினால் மாத்திரம்வியாஜ்ஜியங் கொண்டு வரத்தகாததாயிருந்தால், முறையிடப்பட்ட பிரத்தியேகமான நஷ்டமுண்டாகும்போது.
26. வாதியினுடைய வேலைக்காரி அல்லது மகளைக்கற்பழிப்பதனால் நேரிடுகிற ஊழிய நஷ்டத்துக்காகப் பிரதிபலனைக்குறித்து.	நஷ்டம் நேரிடுகிறபோது.
27. வாதியினிடத்தில் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையைத் தவறும்படி ஒருவரை உடன்படுத்துவதற்காகப் பிரதிபலனைக்குறித்து.	தவறுகிறதேதி.
28. சட்டத்துக்குவிரோதமாயாவது அக்கிரமமாயாவது அதிகமாயாவது வாரண்டில் சாமானெடுக்கிறதற்காகப் பிரதி பலனைக்குறித்து.	சாமானெடுக்கிற தேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
4 - ம் பாகம்—ஒரு வருஷம்—தொடர்ச்சி.	
29. சட்டசம்மதமான ப்ராஸெஸ் என்னும் கட்டளையைக்கொண்டு அசையும் பொருளை அக்கிரமமாய்க் கைப்பற்றுவதற்காகப்பிரதிபலனைக்குறித்து	கைப்பற்றுகிற தேதி
30. சரக்கைப்போக்கடிப்பதற்காகவாவதுகெடுப்பதற்காகவாவது பிரதிபலனைக் குறித்து அதைக்கொண்டு போகிறவர்மேல்.	நஷ்டம் அல்லது கெடுதி நேரிடுகிறபோது.
31. சரக்கை ஒப்பிக்காமைக்காகவாவது ஒப்பிப்பதில் ஆலசியத்திற்காகவாவது பிரதிபலனைக்குறித்து அதைக்கொண்டுபோகிறவர் மேல்.	சரக்கை ஒப்பிக்கவேண்டியதிருந்தபோது.
5 - ம் பாகம்—இரண்டு வருஷம்.	
32. பலான காரியத்திற்கென்று சொத்தை உபயோகிக்கச் சுதந்தரமிருந்து மற்றக்காரியங்களுக்கு அதை மாற்றுகிறவர்மேல்.	மாற்றுகிறதனாலே அநியாயமடைந்தவருக்கு அது முதலில் தெரியவருகிறபோது.
33. 1855-ம்வருஷத்திய 12-வது ஆக்டாகிய சட்டசம்மதமான பிரதிநிதிகளின் வியாஜ்ஜியங்களைப்பற்றிய ஆக்டின்படி, எக்ஸிக்யூட்டரின்மேல்.	பிரியாதுபண்ணப்பட்ட அநியாயஞ்செய்யப்படுகிறபோது.
34. அதே ஆக்டின்படி அட்மினிஸ்ட்ரேட்டரின்மேல்.	ஷை
35. அதே ஆக்டின்படி வேறே யாதொரு பிரதிநிதியின்மேல்.	ஷை
36. ஒப்பந்த உடன்படிக்கையில் சேராததும் இதில் பிரத்தியேகமாய்ச் சொல்லியிராததுமாகிய செய்யக்கூடாத யாதொரு காரியத்தைச் செய்வது-சட்டப்படி செய்யக்கூடிய யாதொரு காரியத்தை அக்கிரமமாய்ச் செய்வது அல்லது செய்யவேண்டிய யாதொரு காரியத்தைச் செய்யாமல்விடுவது இதைக் குறித்துப் பிரதிபலனுக்காக.	அப்படிப்பட்டது நேரிடுகிறபோது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்.	
37. வழியையாவது தண்ணீர்க்காலையாவது அடைப்பதற்காகப் பிரதிபலனைக்குறித்து.	அடைக்கிற தேதி.
38. தண்ணீர்க்காலைத் திருப்புவதற்காகப் பிரதிபலனைக்குறித்து.	திருப்புகிற தேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.

39. அசையாப்பொருளினிடமாய் அக்கிரமாக நுழைவதற்காகப் பிரதிபலனைக்குறித்து.	அக்கிரமமாய் நுழைகிறதேதி.
40. காப்பிரைட் என்னும் பாத்தியதையை யாவது உரித்தான வேறே யாதொரு சுதந்தரத்தையாவது அதிக்கிரமிப்பதற்காகப் பிரதிபலனைக் குறித்து.	அதிக்கிரமிக்கிற தேதி.
41. பாழ்செய்வதை அடக்குவதற்காக ...	பாழ்செய்வதுதொடங்கும்போது.
42. அக்கிரமமாய்ப் பெற்றுக்கொண்ட இன்ஜங்ஷனைக்கொண்டு உண்டுபண்ணப்பட்ட தீங்குக்காகப் பிரதிபலனைக்குறித்து.	இன்ஜங்ஷன் நிவர்த்தியாகிறபோது.
43. எவருக்கு எக்ஸிக்யூட்டராவது அட்மினிஸ்ட்ரேட்டராவது மரணசாஸனப் பொருளைச் செலுத்தினரோ அல்லது ஆஸ்தியைப்பகிர்ந்து கொடுத்தாரோ அவரை அதை வாபஸ் பண்ணவேண்டுமென்று 1865-ம்வருஷத்திய 10-வது சட்டம் இந்துதேசத்துத் தாயபாக ஆக்ட் 320 அல்லது 321-வது பிரிவின்படியாகிலும் ப்ரொபேட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையுங் குறித்த 1881-ம்வருஷத்திய 5-வது ஆக்ட் 139-வது அல்லது 140-வது பிரிவின்படியாகிலும் நிர்பந்திப்பதற்கு.	செலுத்தின அல்லது பகிர்ந்து கொடுத்த தேதி.
44. மைனராயிருந்து வயதுவந்த பருவமடைந்தவர் தம்முடைய கார்டியனால் செய்யப்பட்ட சொத்து டிரான்ஸ்பரை ரத்துபண்ணும்படி.	மைனர் வயது வந்த பருவமடைகிறபோது.
45. பங்காளத்துச் சட்ட புஸ்தகத்திலிருப்பதாகிய அடியில் கண்டிருக்கிற ரெகுலேஷன்களிலெதன்படிக்காவது செய்யப்பட்ட தீர்மானத்தை ஆட்சேபிப்பதற்கு.	அந்த விஷயத்தில் முடிவான தீர்மானம் அல்லது உத்தரவின் தேதி.
1822-ம்வருஷத்திய 7-வது ஆக்ட் பங்காளத்து நிலத்தீர்வைப் பைசலேற்பாட்டைப்பற்றிய ரெகுலேஷன்.	

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.

1325-ம்ஹூத்திய பங்காளத்து நிலத் தீர்வைப் பைசலேற்பாட்டைப் பற்றிய ரெகுலேஷன்.	
1833-ம்ஹூத்திய பங்காளத்து நிலத் தீர்வை (பைசலேற்பாட்டையும்) டெப்யுடி கலெக்டர்களையும் பற்றிய ரெகுலேஷன்.	
46. அப்படிப்பட்ட தீர்மானத்தில் கண்டிருக்கிற யாதொரு சொத்தை வரப்பற்றுவதற்காக அந்தத் தீர்மானத்தினால் கடமைப்பூண்டிருக்கிற கட்சிக்காரரால்.	அந்த விஷயத்தில் முடிவான தீர்மானம் அல்லது உத்தரவின் தேதி.
47. அசையாப்பொருளின் ஸ்வாதீனத்தைக் குறித்து 1898-ம்ஹூத்திய க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படிக்காவது; 1906-ம்ஹூத்திய மாம்லத்தார் கோர்ட்டுகள் ஆக்டின்படிக்காவது செய்யப்பட்ட உத்தரவினாலே கடமை பூண்டிருக்கிற எவராலாகிலும் அவரை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற எவராலாகிலும் அந்த உத்தரவில் கண்டிருக்கிற சொத்தை வரப்பற்றுவதற்காக.	அந்த விஷயத்தில் முடிவான உத்தரவின் தேதி.
48. போக்கடிந்து போயாவது, திருட்டினாலாகிலும் அயோக்கியமாய் உபயோகித்துக்கொள்வதனாலாகிலும் மாற்றுதவனாலாகிலும் அடையப்பட்டாவதிருக்கிற குறித்த அசையும் பொருளுக்காகவாகிலும் அப்படிப்பட்டதை அக்கிரமமாய் எடுத்துக்கொள்வது அல்லது தடுத்துவைத்திருப்பதினாலே பிரதிபலனுக்காகவாகிலும்.	சொத்தின் ஸ்வாதீனத்திற்குச் சுதந்தரமுடையவர் அது இன்னாருடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதென்று முதலில் தெரிந்துகொள்ளும்போது.
49. குறித்த வேறே அசையும்பொருளுக்காகவாவது, அப்படிப்பட்டதை அக்கிரமமாய் எடுத்துக்கொள்வது அல்லது கெடுப்பது அல்லது அக்கிரமமாய்த் தடுத்துவைப்பதைக் குறித்துப் பிரதிபலனுக்காகவாவது.	சொத்து அக்கிரமமாய் எடுத்துக் கொள்ளப்பட்ட போதாகிலும் கெடுக்கப்பட்ட போதாகிலும், தடைசெய்து வைத்துக்கொண்டிருப்பவருடைய ஸ்வாதீனம் சட்டத்திக்கு விரோதமானதாகும் போதாகிலும்.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
50. பிராணிகள்-வண்டிகள் படகுகள் அல்லது வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களின் கொடைக்கூலிக்காக.	கொடைக்கூலி செலுத்தத்தக்கதாகிறபோது.
51. ஒப்பிக்கும்படியான சரக்குக்காக முன்னதாய்ச் செலுத்தப்பட்ட பணம்போக நிலுவை பாக்கிக்காக.	சரக்கு ஒப்பிக்கவேண்டியதாயிருந்தபோது.
52. பணஞ்செலுத்துவதற்கு நிஷ்கரிஷையான கெடுவு ஏற்படாதிருக்குமாகில் விற்று ஒப்பிக்கப்பட்ட சரக்கின் கிரயத்துக்காக.	சரக்கு ஒப்பிக்கிற தேதி.
53. பணஞ்செலுத்துவதற்கு நிஷ்கரிஷையான கெடுவுகாலம் கழிந்த பின்பு செலுத்தும்படி விற்று ஒப்பிக்கப்பட்ட சரக்கின் கிரயத்துக்காக.	அந்த கெடுவுகாலம் கழியும்போது.
54. விற்று ஒப்பிக்கப்பட்ட சரக்கின் கிரயத்துக்காக பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் கொடுக்கிறதாய்ச் சொல்லியிருந்து அப்படிப்பட்ட பில் கொடாமற்போனால்.	கொடுக்கிறதாகச் சொன்ன பில்லின் கெடுவுகாலம் கழிகிறபோது.
55. பணஞ் செலுத்துவதற்கு நிஷ்கரிஷையான கெடுவு ஏற்பாடில்லாமல் வாதியினால் பிரதிவாதிக்கு விற்கப்பட்ட மரங்கள் அல்லது வளர்ந்துகொண்டிருக்கும் பயிரின் கிரயத்துக்காக.	விற்பனை தேதி.
56. பணஞ்செலுத்துவதற்குக் காலம் நிஷ்கரிஷை செய்யப்படாமல் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன்மேல் அவருக்காக வாதியினால் செய்யப்பட்ட வேலையின் கிரயத்துக்காக.	வேலை முடிகிறபோது.
57. கடன்கொடுத்த பணத்திற்குச் செலுத்தும்படியான பணத்திற்காக.	கடன் கொடுக்கிறபோது.
58. கடன்கொடுத்தவர் பணத்திற்காகச் செக்கொடுத்திருக்கிறபோது அவ்வித வியாஜ்ஜியம்.	செக் பணஞ் செலுத்தப்படுகிறபோது.
59. கேட்டவுடனே பணஞ்செலுத்தும்படியான உடன்படிக்கையின்மேல் கடன் கொடுக்கப்பட்ட பணத்திற்காக.	கடன் கொடுக்கிறபோது.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
60. ஒரு வாடிக்கைக்காரரால் தம்முடைய பாங்கர் (சாவுகாரி) இடம் கேட்டவுடனே செலுத்தும்படியாய் (கொடுக்கப்பட்ட பணமுட்பட) அந்தப்படி செலுத்தும்படியான உடன்படிக்கையின் பிரகாரம் கட்டப்பட்ட பணத்திற்காக.	கேட்கப்படுகிறபோது.
61. பிரதிவாதிக்காகச் செலுத்தப்பட்ட பணத்தைப்பற்றி வாதிக்குச் செலுத்தும்படியான பணத்திற்காக.	பணஞ்செலுத்தப்படுகிறபோது.
62. வாதியினுடைய உபயோகத்திற்காகப் பிரதிவாதியினால் வாங்கிக்கொள்ளப்பட்ட பணத்தைக்குறித்து வாதிக்குப் பிரதிவாதி செலுத்தும்படியான பணத்திற்காக.	பணம் வாங்கிக்கொள்ளப்படுகிறபோது.
63. வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டிய பணத்துக்கு வட்டிக்காகச் செலுத்தும்படியான பணத்தைக் குறித்து.	வட்டி பாக்கியாகிறபோது.
64. வாதி பிரதிவாதிகளுக்குள் எழுதப்பட்ட கணக்குகளின்மேல் வாதிக்குப் பிரதிவாதி பாக்கியாயிருக்கிறதாகத் தெரியவருகிற பணத்திற்காக வாதிக்குச் செலுத்தும்படியான பணத்தைக்குறித்து.	பின்னிட்ட காலத்தில் கடனைச் செலுத்தும்படி பிரதிவாதியாவது இதற்காகக் கிரமமாய் அதிகாரம்பெற்ற அவருடைய எஜெண்டாவது ஒருமிக்க எழுதிக்கையெழுத்து செய்திருக்கிற உடன்படிக்கையினாலே ஏற்பாடாயிராவிட்டால், கணக்குகள் கண்டெழுதி மேற்சொல்லியபடி கையெழுத்து செய்யப்படும்போது, ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அந்தக்காலம் வருகிறபோது.
65. குறிக்கப்பட்ட காலத்திலாவது குறிக்கப்பட்ட இடைச்சம்பவம் நேரிடுவதன் மேலாவது யாதொரு காரியஞ்செய்கிறதாகச் சொல்லியிருப்பது தவறிப்போனதற்குப் பிரதிபலனுக்காக.	குறிக்கப்பட்ட காலம் வரும்போது, அல்லது இடைச்சம்பவம் நேரிடும்போது.
66. பணஞ்செலுத்துவதற்காக நாள் குறிக்கப்படுமாகில் தனி (பாண்ட்) பத்திரத்தின்மேல்.	அப்படி குறிக்கப்பட்ட நாள்.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
67. அப்படிப்பட்ட நாள் குறிக்கப்படாதிருக்குமாகில் தனிப்பத்திரத்தின்மேல்.	பத்திர மெழுதிக்கொடுக்கிறதேதி.
68. ஷராத்துக்குட்பட்ட பத்திரத்தின்மேல்.	ஷராத்து தவறிப்போகிறபோது.
69. தேதிக்குப் பின்பு நிஷ்கரிஷையான காலத்திலே செலுத்தும்படியான பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டின்மேல்.	அந்த பில் அல்லது நோட் பாக்கியாகிறபோது.
70. நிஷ்கரிஷையான காலத்திலல்லாமல், தரிசனமாகும்போதாவது தரிசனமான பின்பாவது செலுத்தும்படியான பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜின் மேல்.	அந்த பில் கொண்டு வந்து கொடுக்கப்படுகிறபோது.
71. பலான இடத்திலே செலுத்தும்படியானதாக அங்கீகரிக்கப்படுகிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜின் மேல்.	அவ்விடத்திலே அந்த பில் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறபோது.
72. தரிசனமான பின்பாவது கேட்ட பின்பாவது நிஷ்கரிஷையான காலத்தில் செலுத்தும்படியான பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டின் மேல்.	நிஷ்கரிஷையான காலம் முடிவாகிறபோது.
73. வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரத்தைத் தடுக்கிற அல்லது நிறுத்திவைக்கிற யாதொரு எழுத்துகூட இல்லாததாய், கேட்டவுடனே பணஞ்செலுத்தும்படியான பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டின் மேல்.	அந்த பில் அல்லது நோட்டின் தேதி.
74. வாயிதாக்களாகச் செலுத்தும்படியான ப்ராமிஸொரி நோட் அல்லது பத்திரத்தின்மேல்.	செலுத்தும்படியான முதல்வாயிதாத் தொகையைக் குறித்து அந்த முதல் வாயிதா கழியும்போதும், மற்ற வாயிதாத் தொகைகளைக் குறித்து அந்தந்த வாயிதா கழியும்போதும்.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
75. வாயிதாக்களாகப் பணஞ்செலுத்துவதாய்க்கண்டு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாயிதாக்கள் தவறினுல் முழுதும் பாக்கியாய்விடுமென்கிற ஷரத்தெழுதியிருக்கிற ப்ராமிஸொரி நோட் அல்லது பத்திரத்தின்மேல்.	பணஞ்சேரவேண்டியவர் அல்லது உடன்பாடு பெறுகிறவர் அந்த ஷரத்தின் பிரயோஜனத்தை விட்டுவிட்டாலன்றி மற்றப்படி வாயிதா தவறிப்போகும்போது, இல்லாவிட்டால் எதைக்குறித்து அப்படி விட்டுவிடுவதில்லையோ அந்தப் புது வாயிதா தவறிப்போகும்போது.
76. எழுதிக்கொடுக்கிறவர் ஏதோ ஒரு காரியம் நேரிட்ட பின்பு பணஞ்சேரவேண்டியவரிடத்தில் ஒப்பிக்கும்படி மூன்றாவது நபருக்குக் கொடுக்கிற ப்ராமிஸொரி நோட்டின் மேல்.	பணஞ் சேரவேண்டியவரிடத்தில் ஒப்பிக்கிற தேதி.
77. திரஸ்கரிக்கப்பட்ட அன்னிய பில்லைக் குறித்து ப்ரொட்டெஸ்ட் செய்து நோடீஸ் கொடுத்திருக்கிற பட்சத்தில் அந்த பில்லின்மேல்.	நோடீஸ் கொடுக்கப்படுகிற போது.
78. அங்கீகரியாமையினுல் திரஸ்கரிக்கப்பட்ட பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜை எழுதிக்கொடுத்தவர்மேல் பணஞ்சேர வேண்டியவரால்	அங்கீகரியாமல் திரஸ்கரிக்கப்பட்ட தேதி.
79. அக்காமடேஷன் பில் எழுதிக்கொடுத்தவர்மேல் அதை அங்கீகரித்தவரால்.	அங்கீகரித்தவர் பில் பணஞ்செலுத்துகிறபோது.
80. இதில் வெளிப்படையாய்ச் சொல்லியிராத பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ், ப்ராமிஸொரிநோட் அல்லது பாண்டின் பத்திரத்தின்மேல் வியாஜ்ஜியம்.	அந்த பில் நோட் அல்லது பாண்டுக்குப் பணஞ் செலுத்தத்தக்கதாகும்போது.
81. கடன் வாங்கின முதலாளியின்மேல் ஜாமீன்தாரரால்.	கடன்கொடுத்தவருக்கு ஜாமீன்தாரர் பணஞ்செலுத்துகிறபோது.
82. உடன் சேர்ந்த ஜாமீன்தாரர்மேல் ஒரு ஜாமீன்தாரரால்.	ஜாமீன்தாரர் தம்முடைய பங்குக்கதிகமாய் ஏதாவது செலுத்தும்போது.
83. நஷ்ட ஈடு செய்வதாக வேறே யாதொரு ஒப்பந்த உடன்படிக்கையின்மேல்.	வாதிக்கு வாஸ்தவமாய் நஷ்டம் உண்டுபண்ணினபோது.
84. வியாஜ்ஜியம் அல்லது குறிப்பான யா	அந்த வியாஜ்ஜியம் அல்லது காரி

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

6-ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.

தொரு காரியத்தின் செலவுகளைச் செலுத்தும்படியான காலத்தைக்குறித்து வெளிப்படையான உடன்படிக்கை யில்லாதிருக்குமாகில் அப்படிப்பட்ட தம்முடைய செலவைக்குறித்து அட்டர்ணி அல்லது வக்கீலினல்.	யம் முடிகிற தேதி, அல்லது (அட்டர்னியாவது வக்கீலாவது அந்த வியாஜ்ஜியம் அல்லது காரியத்தைக் கிரமமாய் நிறுத்திவிடுகிற பட்சத்தில்) அப்படி நிறுத்திவிடுகிற தேதி.
85. உபயத்திராளுக்கும் பரஸ்பரமாய்க் கொடுக்கல் வாங்கல் நடந்துகொண்டிருக்கிற பட்சத்தில், பைசலாகாமல் பரஸ்பரமாய் நடந்துகொண்டிருக்கிற பற்று வரவு கணக்கின்மேல் நிலுவை பாக்கிக்காக.	ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது ருஜுசெய்யப்பட்ட கடைசி பாபத்து எந்த வருஷத்தில் கணக்கில் பதிவுசெய்யப்படுகிறதோ அந்த வருஷ முடிவு; அப்படிப்பட்ட வருஷத்தைக் கணக்கில் இருப்பதுபோல் கணக்கு செய்யவேண்டும்.
86. இறந்து போனதைக் குறித்தாவது நஷ்டத்தைக் குறித்தாவது இன்ஷ்யூரன்ஸ் கொடுத்தவர்களுக்கு ருஜுகொடுத்த பின்பாகிலும் அவர்கள் ருஜுப்பெற்றுக் கொண்ட பின்பாகிலும் உடனே நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தும்படியானதாகிறபோது இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியின்மேல்.	இறந்துபோனது அல்லது நஷ்டத்தைக் குறித்து வாதியினலாகிலும் வேறே எவராலாகிலும் இன்ஷ்யூரன்ஸ் கொடுத்தவர்களுக்கு ருஜுகொடுக்கப்படுகிற போதாவது, அவரிடத்திலிருந்து அவர்கள் ருஜுபெற்றுக்கொள்ளுகிறபோதாவது.
87. இன்ஷ்யூரன்ஸ் கொடுத்தவர்களுடைய இஷ்டத்தின்மேல் ஒழித்துவிடும்படியான பாலிஸியின்படி செலுத்தப்பட்ட (ப்ரிமியம்) பணத்தை வசூல்பண்ணுவதற்காக இன்ஷ்யூரன்ஸ்பெற்றுக்கொண்டவரால்.	இன்ஷ்யூரன்ஸ் கொடுக்கிறவர்கள் பாலிஸியை ஒழிக்க இஷ்டங்கொள்ளுகிறபோது.
88. கணக்கைக்குறித்து (**factor**) பிரதி காரியஸ்தர்மேல்.	பிரதி காரியத்துவம் நடந்துகொண்டிருக்கையில் கணக்கு கேட்கப்பட்டு நிக்கிரகிக்கப்படும்போது, அல்லது அப்படி கேட்கப்படாவிட்டால், பிரதி காரியத்துவம் முடிகிறபோது.
89. எஜெண்ட் வாங்கிக்கொண்டு வகைசொல்லாதிருக்கிற அசையும் பொருளைக் குறித்து அந்த எஜெண்டின்மேல் அவருடைய முதலாளியினல்.	ஷை

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
90. அஜாக்கிரதையைக் குறித்தாவது துர் நடத்தையைக்குறித்தாவது ஏஜெண்டு கள்மேல் முதலாளிகளால் மற்ற வியாஜ் ஜியங்கள்.	அஜாக்கிரதை அல்லது துர்நடத் தை வாதிக்குத் தெரியவருகிற போது.
91. வேறே வகை சொல்லியிராத யாதொரு ஆதரவை ரத்துசெய்வது அல்லது தள் ளிவிடுவதற்காக.	ஆதாரவை ரத்துபண்ணும்படியா வது தள்ளும்படியாவது செய் வித்துக்கொள்ள வாதிக்குச் சுத ந்தரமுண்டுபண்ணுகிற சங்கதி கள் அவருக்குத் தெரியவரும் போது.
92. பிறப்பிக்கப்பட்ட அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவு பொய்யென்று நிச்சயிப்பதற்காக.	பிறப்பித்தது அல்லது ரெஜிஸ்டர் செய்தது வாதிக்குத் தெரிய வரும்போது.
93. வாதியின்மேல் அமுலுக்குக் கொண்டு வர எத்தனிக்கப்பட்ட யாதொரு ஆதரவு பொய்யானதென்று நிச்சயிப்பதற்காக.	எத்தனித்த தேதி.
94. வாதியானவர் பித்தராயிருந்தபோது விற்பனை முதலிய ஒப்படை செய்திருக் கிற சொத்தைக்குறித்து.	வாதி பைத்தியந்தெளிந்து அந்த ஒப்படையைத் தெரிந்து கொ ள்ளுகிறபோது.
95. மோசத்தினுலே அடைந்த டிக்ரியை ரத் துசெய்வதற்காக அல்லது மோசம் நடந் திருக்கிறதென்கிற ஹேதுவைப்பற்றி வேறே பரிகாரத்துக்காக.	மோசஞ்செய்யப்பட்ட நபருக்கு அது தெரியவருகிறபோது.
96. பிசகிருக்கிறதென்கிற ஹேதுவைப்பற் றி பரிகாரத்துக்காக.	வாதிக்கு அந்த பிசகு தெரியவரு கிறபோது.
97. பணங்கொடுக்கிறபோதிருந்து பின்பு தவறிப்போகிற ஐவேஜின்மேல், கொடுத் திருக்கிற பணத்திற்காக.	தவறிப்போகிறதேதி.
98. நம்பிக்கைத் துரோகத்தினுலே நேரிட்ட நஷ்டத்தை இறந்துபோன ட்ரஸ்டியினு டைய பொது ஆஸ்தியிலிருந்து சரிப் படுத்தும்படியாக.	ட்ரஸ்டியினுடைய மரணதேதி அ ல்லது அப்போது நஷ்டம் சம் பவியாமலிருந்தால் நஷ்டமுண் டான தேதி.
99. கூட்டான டிக்ரியின்படி கொடுக்கவே ண்டிய தொகை முழுமையுமாவது தம் முடைய பங்கைவிட அதிகமாகவாவது	வாதியின் சொந்த பங்குக்கு அதி கமாகப் பணம் செலுத்தின தேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
6 - ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
செலுத்திய கட்சிக்காரராலாகிலும், தாமும் தம்முடைய உடன் பங்குக்காரர்களும் கொடுக்கவேண்டிய ரெவினியு தொகை முழுமையுமாவது தம்முடைய பங்கைவிட அதிகமாகவாவது செலுத்திய கூட்டு ஆஸ்தியின் பங்குக்காரராலாகிலும் தமக்கு வரவேண்டிய பணத்துக்காக.	
100. பணம் சேரவேண்டியதற்காக தாவாவை இறந்துபோன ட்ரஸ்டியினுடைய ஆஸ்தியின்மேல் செலாவணியாக்கும்படி உடன் சேர்ந்த ட்ரஸ்டியினால்.	பணஞ்சேரும்படியான பாத்தியதை உண்டாகிறபோது.
101. கப்பலாளிகள் சம்பளம் கூலிகளுக்காக.	எதுவரையில் சம்பளம் கூலிகள் சம்பாதிக்கப்படுகின்றன வோ அந்த சபரின் முடிவு.
102. இந்த ஷெட்யூலில் மற்றப்படி வெளிப்படையாய்ச் சொல்லியிராத சம்பளம் கூலிகளைக்குறித்து.	சம்பளம் கூலிகள் பாக்கியாகிற போது.
103. வசூல் பண்ணும்படியான (மௌர் வஜ்ஜல்) சீதனத்துக்காக மகம்மதியரால்.	சீதனங்கேட்டு மறுக்கப்படுகிற போது அல்லது (விவாகசம்பந்தம் பிரியாதிருக்கிற வரையில் அப்படி கேட்கப்படாதிருக்குமாகில்) மரணத்தினாலாவது விவாகப் பிரிவினையினாலாவது அந்த விவாகம் கலைந்துபோகிறபோது.
104. நிறுத்திவைக்கப்பட்ட (மௌர் வஜ்ஜல்) சீதனத்துக்காக மகம்மதியரால்.	மரணத்தினாலாவது விவாகப்பிரிவினையினாலாவது விவாகங்கலைந்துபோகிறபோது.
105. கொதுவைக்குப் பணம் சேர்ந்துபோன பின்பு, கொதுவை வைத்துக்கொண்டவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிக வசூலை வரப்பற்றுவதற்காகக் கொதுவை வைத்தவரால்.	கொதுவை வைத்த சொத்தில் கொதுவை வைத்தவர் மறுபடி பிரவேசிக்கும்போது.
106. பிரிந்துபோன கூட்டுப்பங்கின் லாபத்தைக் குறித்துக் கணக்குக்காகவும் அதன் பங்குக்காகவும்.	பிரிவினை தேதி.
107. அவிபக்த குடும்பத்தின் கூட்டு ஆஸ்தியி	பணஞ்செலுத்தின தேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
6-ம் பாகம்—மூன்று வருஷம்—தொடர்ச்சி.	
னிமித்தம் தாம் பணஞ் செலுத்தியிருப்பதைக் குறித்துத் தமக்குப் பணம் சேரவேண்டியதற்காக அந்தக்கூட்டு ஆஸ்தியின் மானேஜரால்	
108. குத்தகை பெற்றுக்கொண்டவர் குத்தகை ஷரத்துக்கு விரோதமாய் வெட்டின மரங்களின் கிரயத்துக்காகக் குத்தகை கொடுத்தவரால்.	மரங்கள் வெட்டப்படுகிறபோது.
109. வாதியினுடையதாயிருக்கிற அசையாப் பொருளைச்சேர்ந்ததாய் அக்கிரமமாகப் பிரதிவாதியினாலே பெற்றுக்கொள்ளப்பட்ட லாபத்திற்காக.	லாபம் பெற்றுக்கொள்ளப்படுகிறபோது.
110. குத்தகை அல்லது வாடகை நிலுவைக்காக.	நிலுவை பாக்கியாகிறபோது.
111. செலுத்தப்படாத கிரயப்பணத்தைத் தமக்கு நேரே செலுத்தவேண்டுமென்று அசையாப்பொருளை விற்றவரால்.	விற்பனையைப் பூர்த்திசெய்வதற்காக நிச்சயிக்கப்பட்ட காலம், அல்லது (பூர்த்திசெய்வதற்காக நிச்சயிக்கப்பட்ட காலத்திற்குப்பின்பு ஹக்கு அங்கீகரிக்கப்படுகிற பட்சத்தில்) அங்கீகரிக்கிற தேதி.
112. யாதொரு ஸ்டாட்யூட் அல்லது ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனியால் வாயிதாத் தொகைக்காக.	வாயிதாத்தொகை செலுத்தப்படத்தக்கதாயிருக்கும்போது.
113. ஒப்பந்த உடன்படிக்கையினால் இன்னதென்று குறித்ததை நிறைவேற்றுவதற்காக.	நிறைவேற்றுவதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதி, அல்லது அப்படி தேதி நிச்சயிக்கப்படாவிட்டால் நிறைவேற்றுகிறதில்லையென்று நிராகரித்தது வாதிக்குத் தெரியவரும்போது.
114. ஒப்பந்த உடன்படிக்கையை ரத்துசெய்வதற்காக.	உடன்படிக்கையை ரத்துசெய்வித்துக்கொள்ள வாதிக்குச் சுதந்திரமுண்டுபண்ணுகிற சங்கதிகள் அவருக்கு முதலில் தெரியவரும்போது.
115. ரெஜிஸ்டரான ஆதரவில்லாததும் இதில் பிரத்தியேகமாக எடுத்துச் சொல்லியி	உடன்படிக்கை தவறுகிறபோது அல்லது (அடுத்தடுத்து தவறுத

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
ராததுமாய், வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவதிருக்கிற யாதொரு ஒப்பந்த உடன்படிக்கை தவறுதைற்காகப் பிரதிபலனைக் குறித்து.	லுண்டாகிற பட்சத்தில்) வியாஜ்ஜியந்தொடரப்பட்ட தவறுதல் நேரிடுகிறபோது, அல்லது (தவறுதல் இடைவிடாததாயிருக்கிற பட்சத்தில்) அது விட்டுப் போகும்போது:

7 - ம் பாகம்—ஆறு வருஷம்.

116. ரெஜிஸ்டரான ஆதரவிலுள்ள ஒப்பந்த உடன்படிக்கை தவறுவதற்காகப் பிரதிபலனைக்குறித்து.	ரெஜிஸ்டராகாத அவ்வித உடன்படிக்கையின்மேல் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்திற்குக் கெடுவுகாலம் செல்லத்தொடங்கும்போது.
117. 1908-ம்வருத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் விவரித்திருக்கிறபடி அன்னிய தேசத்துத்தீர்ப்பின்மேல்.	தீர்ப்பு தேதி.
118. சொல்லப்பட்ட ஸ்வீகாரம் செல்லாதென்றுவது உண்மையாய் நடந்தேறவேஇல்லையென்றுவது தீர்மானம் பெறுவதற்காக.	சொல்லப்பட்ட ஸ்வீகாரம் வாதிக்குத் தெரியவரும்போது.
119. ஸ்வீகாரம் செல்லுமென்று தீர்மானம் பெறுவதற்காக.	ஸ்வீகாரபுத்திரராக அவனுடைய சுதந்தரம் பாதிக்கப்படுகிறபோது.
120. இந்த ஷெட்யூலிலே மற்றெங்கேயாவது கெடுவுகாலம் கண்டிராத வியாச்சியம்.	வியாஜ்ஜியந்தொடருவதற்கான சுதந்தரம் உண்டாகிற போது.

8 - ம் பாகம்—பன்னிரண்டு வருஷம்.

121. கவர்ன்மெண்ட்ரெவினியூ பாக்கிக்காக விற்கப்பட்ட முழுபூஸ்திதியிலாகிலும் வாடகை அல்லது குத்தகைபாக்கிக்காக விற்கப்பட்ட பட்ணிதாலூக்கிலாகிலும் விற்பனைசெய்யத்தக்கவேறே ஆட்சியிலாகிலும் சிக்குச்சிலுக்குகளையாவது கீழ்ப்பட்ட ஆட்சிகளையாவது நிவர்த்திசெய்யும்படி.	விற்பனை அறுதியாய் முடிவாகிற போது.
122. ப்ரிடிஷ் இந்தியாவில் பெறப்பட்ட தீர்ப்பின் மேலாவது முச்சிலிக்காவின் மேலாவது.	அந்த தீர்ப்பு அல்லது முச்சிலிக்காவின்தேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
8 - ம் பாகம்—பன்னிரண்டு வருஷம்—தொடர்ச்சி.	
123. மரணசாஸன ஆஸ்தியைக்குறித்தாவது உயிலேற்படுத்தினவர் மிகுதியில் ஏற்பாடு செய்த பங்கைக்குறித்தாவது, உயிலேற்படுத்தாமலிறந்து போனவருடைய பொருளிலே வகுக்கும்படியான பாகத்தைக் குறித்தாவது.	மரணசாஸன ஆஸ்தியாவது அந்தப்பங்காவது செலுத்தும்படியானதாகவாகிலும் ஒப்பிக்கும்யானதாகவாகிலுமாகிறபோது.
124. பரம்பரையான உத்தியோகத்தின் ஸ்வாதீனத்தைப்பற்றி. விவரணம்:-பரம்பரையான உத்தியோகத்தின் வரும்படியை வழக்கமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறபோதாவது, (வரும்படி ஒன்றுமில்லா விட்டால்) அதைச் சேர்ந்த அலுவலை வழக்கமாய்ச் செய்யும்போதாவது பரம்பரையான உத்தியோகம் ஸ்வாதீனம் பண்ணிக்கொண்டதாகும்.	பிரதிவாதி வாதிக்கு விரோதமாய் அந்த உத்தியோகத்தை ஸ்வாதீனம் செய்துகொண்டபோது.
125. வியாஜ்ஜியந் தொடருகிற தேதியில் ஹிந்து அல்லது மகம்மதிய ஸ்திரீ இறந்துபோனால், நிலஸ்வாதீனத்திற்குப் பாத்தியதையடைய ஒரு ஹிந்து அல்லது மகம்மதியரானவர் அவள் செய்திருக்கிற அந்த நிலபராதீனத்தை அவளுடைய ஆயிசுவரையில் அல்லது அவளுடைய புனர் விவாகம் வரையில் தவிர பிறகு செல்ல மாட்டாதென்று தீர்மானிக்கும்படி அவள் உயிரோடிருக்கையில் தொடருகிற வியாஜ்ஜியம்.	பராதீனஞ்செய்யப்பட்ட தேதி.
126. முன்னோர்களுடைய சொத்தைத் தன் தகப்பன் பாராதீனஞ் செய்திருப்பதை ரத்து பண்ணும்படி மிதாக்ஷர சாஸ்திரத்துக்குட்பட்ட ஹிந்துவினால்.	பராதீனஞ்செய்யப்பெற்றவர் சொத்தை ஸ்வாதீனம் பண்ணிக்கொள்ளுகிறபோது.
127. அவிபக்த குடும்ப சொத்திலிருந்து நீக்கப்பட்டவரால் அதில் பாகம் பெறுவதற்குப் பாத்தியதையைச் செல்லும்படி செய்வதற்கு.	நீக்கப்பட்டது வாதிக்குத் தெரிய வரும்போது.
128. ஜீவனாம்ச பாக்கிக்காக ஹிந்துவினால்...	பாக்கி செலுத்தத்தக்கதாகும் போது.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது
8 - ம் பாகம்—பன்னிரண்டு வருஷம்—தொடர்ச்சி.	
129. ஜீவனும்சத்துக்குத் தம்முடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ள ஹிந்துவினுல்.	பாத்தியதை மறுக்கப்படுகிற போது.
130. மானிய நிலத்தை மறுபடி எடுத்துத்கொள்ளுவதற்காவது அதற்குத் தீர்வைபோடுவதற்காவது.	நிலத்தை மறுபடி எடுத்துக்கொள்ளவாவது அதற்குத் தீர்வை போடவாவது முதலில்சுதந்தரம் உண்டானபோது.
131. காலக்கிரமமாய் மறுபடி வருகிற சுதந்தரத்தை ஸ்தாபிப்பதற்காக.	அந்த சுதந்தரத்தின் அனுபவம்வாதிக்கு முதலில் நிராகரிக்கப்படுகிற போது.
132. அசையாப்பொருளின்மேல் வரவேண்டிய பணத்தை வசூல் செய்வதற்காக. **விவரணம்.**—இந்த பகுதியின் காரியங்களுக்காக. (a) முறையே **மாலிகானு** என்றும், **ஹாக்ஸ்** என்றும் சொல்லப்பட்டவர்த்தனையும் கட்டணமும், (b) யாதொரு விவசாயத்தின் மாசூல் அல்லது வேறே தானியங்களின் கிரயத்தை பெற்றுக்கொள்ளும் படியான பாத்தியதையை, அசையாப்பொருளின்மேல் பொருப்புக்காட்டிய சுதந்தரத்தினுல் கிடைக்கப்பெறுவதும், அசையாப் பொருளின்மேல் வரவேண்டிய பணத்தை வசூல் செய்யப்படுவதாக எண்ணப்படும்.	வியாஜ்ஜியந் தொடரப்பட்டபணம் பாக்கியாகிறபோது.
133. ட்ரஸ்டாக ஒப்பித்தாவது உயில்மூலமாய் வைத்தாவது அனுமத்தில் வைத்தாவது அடகு வைத்தாவதிருந்து, பின்பு ட்ரஸ்டியினிடத்திலிருந்தாகிலும் அனுமத்தில் வைத்துக் கொண்டவரிடத்திலிருந்தாகிலும் அடகுவைத்துக் கொண்டவரிடத்திலிருந்தாகிலும் பெறுமான ஜவேஜுக்கு வாங்கப்பட்ட அசையும்பொருளை வரப்பற்றுவதற்காக. [குறிப்பு:—1929-ம்வூத்	கிரயத்துக்கு வாங்கின தேதி. துதிருத்த ஆக்டினுல் இந்த பகுதியை 48-A பகுதியாக அமைத்து கொள்ளும்படி திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.]

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

8- ம் பாகம்—பன்னிரண்டு வருஷம்—தொடர்ச்சி.

134. ட்ரஸ்டாக ஒப்பித்தாவது உயில் மூலமாய் வைத்தாவது கொதுவை வைத்தாவதிருந்து பின்பு ட்ரஸ்டினுலாகிலும் கொதுவை வைத்துக்கொண்டவராலாகிலும், பெறுமான் ஜவேஜுக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட அசையாப் பொருளின் ஸ்வாதீனத்தை அடைவதற்காக.	ட்ரான்ஸ்பர் வாதிக்குத் தெரியவரும்போது.
விவரணம்.—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, யாதொரு ஹிந்து, மஹம்மதிய அல்லது பௌத்தமத சம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான இனமில் அடங்கியுள்ள யாதொரு சொத்தானது ட்ரஸ்டில் ஒப்பிக்கப்பட்ட சொத்தாகக் கருதப்படுகிறது; மேலும், அப்படிப்பட்ட யாதொரு சொத்தின் மானேஜர் அதன் டிரஸ்டியாகக் கருதப்படுகிறார்.	
135. கொதுவை வைக்கப்பட்ட அசையாப் பொருளை ஸ்வாதீனப்படுத்தும்படி கொதுவை வைத்துக்கொண்டவர் ராயல் சார்ட்டர் என்னும் சாஸனப்படி ஸ்தாபிக்கப்படாத கோர்ட்டில் தொடருகிற வியாஜ்ஜியம்.	கொதுவை வைத்தவருக்கு ஸ்வாதீனஞ் செய்துகொள்வதற்கான வுள்ள சுதந்தரம் முடிவாகும்போது.
136. கைவிலைக்கு விற்கப்பட்ட அசையாப் பொருள் விற்ற தேதியிலே விற்றவருடைய ஸ்வாதீனத்திலில்லாதிருக்குமாகில் அதை ஸ்வாதீனப்படுத்தும்படி கிரயத்துக்குக்கொண்டவரால்.	விற்றவர் முதலில் ஸ்வாதீனத்திற்குப் பாத்தியதை யுடையவராகிறபோது.
137. டிக்ரியை நிறைவேற்றுவதற்காக விற்கப்பட்ட தேதியில், தீர்ப்பான கடனாளியினுடைய ஸ்வாதீனத்திலில்லாதிருக்குமாகில் அந்த விக்கிரயத்தில் கொண்டவரால் அவ்வித வியாஜ்ஜியம்.	தீர்ப்பான கடனாளி முதலில் ஸ்வாதீனத்திற்குப் பாத்தியதையுடையவராகிறபோது.
138. டிக்ரியை நிறைவேற்றுவதற்காக விற்கப்பட்ட தேதியில் தீர்ப்பான கடனாளியினுடைய ஸ்வாதீனத்தி லிருந்திருக்குமாகில் அந்த விக்கிரயத்தில் கொண்டவரால் அவ்வித வியாஜ்ஜியம்.	விக்கிரயம் அறுதியாகிறதேதி.

வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
8 - ம் பாகம்—பன்னிரண்டு வருஷம்—தொடர்ச்சி.	
139. வாடகை அல்லது குத்தகைதாரரிடத்தி லிருந்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவ தற்காகச் சொந்தக்காரரால்.	வாடகை அல்லது குத்தகை முடி கிறபோது.
140. அசையாப்பொருளை ஸ்வாதீனப்படுத் தும்படி, முன் அனுபவமுடிந்தபின்பு அதுகொடுக்கப்பட்டவராலாவது, (சொந் தக்காரரல்லாமல்) அனுபவமுடிந்த பின்பு அதற்குபாத்தியஸ்தராகிறவராலாவது, உ யில் மூலமாய் ஏற்பாடு பெற்றவராவது.	அவருடைய பூஸ்திதி ஸ்வாதீனத் திற்குள்ளாகும்போது.
141. ஹிந்து அல்லது மகம்மதிய ஸ்திரீ இற ந்து போவதன்மேல் அசையாப்பொரு ளின் ஸ்வாதீனத்திற்குப் பாத்தியஸ்தரா கிற ஒரு ஹிந்து அல்லது மகம்மதியரால் அவ்வித வியாஜ்ஜியம்.	அந்த ஸ்திரீ இறந்துபோகிறபோ து.
142. சொத்து வாதியினுடைய ஸ்வாதீனத்தி லிருந்தபோது அந்த ஸ்வாதீனம் நீக்கப் பட்டிருந்தாலும், அந்த ஸ்வாதீனத்தை அவர் விட்டுவிட்டிருந்தாலும், அந்த அசையாப்பொருளின் ஸ்வாதீனத்துக் காக.	ஸ்வாதீனம் நீக்கப்பட்ட அல்லது விடப்பட்ட தேதி.
143. யாதொரு பறிமுதலைப்பற்றியாவது ஷர த்து தவறுதலை பற்றியாவது வாதிக்கு ஹக்கு உண்டாயிருந்தால் அவ்வித வியா ஜ்ஜியம்.	பறிமுதலுக்குள்ளானபோது அல் லது ஷரத்து தவறினபோது.
144. இதில் பிரத்தியேகமாய் வேறே வகை சொல்லியிராத அசையாப்பொருள் அல் லது அதிலுள்ள யாதொரு சுதந்தரத்தின் ஸ்வாதீனத்திற்காக.	பிரதிவாதியினுடைய ஸ்வாதீன மானது வாதிக்கு விரோதமாகி றபோது.
9 - ம் பாகம்—முப்பது வருஷம்.	
145. அமானத்தில் வைக்கப்பட்ட அல்லது அடகுவைக்கப்பட்ட அசையும்பொருளை வரப்பற்றுவதற்காக அமானத்தில் வைத் துக்கொண்டவர் அல்லது அடகு வைத் துக்கொண்டவர்மேல்.	அமானத்து அல்லது அடகுவைத் ததேதி.
146. ராயல் சார்ட்டர் என்னும் சாஸனப்படி ஸ்தாபிக்கப்பட்டு ஸிவில் விவகாரத்திலே	கொடுவைக்கடனைக்குறித்து அச லுக்காவது வட்டிக்காவது க

	வியாஜ்ஜிய விவரம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.
	9-ம் பாகம்—முப்பது வருஷம்—தொடர்ச்சி.	
	சாதாரண அசல் விசாரணை அதிகாரஞ் செலுத்துகிற கோர்ட்டுக்கு முன்பாக, கொதுவை வைத்தவரிடத்திலிருந்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள கொதுவை வைத்துக்கொண்டவரால்.	டையாய் எவ்வளவாகிலும் செலுத்தப் பட்டபோது.
146-அ.	யாதொரு பொதுவான தெரு அல்லது பாட்டை அல்லது அதைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் ஸ்வாதீனத்தை யாதொரு பிரதேச அதிகாரி இழக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், அதன் ஸ்வாதீனத்தை அந்த அதிகாரி விட்டுவிட்டிருந்தாலும், அந்த ஸ்வாதீனத்துக்காக அந்தந்த அதிகாரியாலாவது அவருக்காக எவராலாவது.	ஸ்வாதீனம் இழக்கும்படி செய்யப்பட்ட அல்லது விடப்பட்ட தேதி.
	10-ம் பாகம்—அறுபது வருஷம்.	
147.	கொதுவைச்சொத்தை மீட்டுக்கொள்வதற்கான பாத்தியதை அற்றுப்போகும்படி செய்வதற்காகவாவது விற்பதற்காகவாவது கொதுவைவைத்துக்கொண்டவரால்.	கொதுவையின்மேல் கொடுத்த பணம் பாக்கியாகிறபோது.
148.	கொதுவை வைக்கப்பட்ட அசையாப் பொருளை மீட்டுக்கொள்ளுவதற்காவது மறுபடி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்காவது கொதுவைவைத்துக்கொண்டவர்மேல்.	மீட்டுக்கொள்ளுவதற்காவது மறுபடி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவதற்காவது பாத்தியதையுண்டாகும் போது; ஆனால், லோவர் பர்மாவிலிருக்கிற அசையாப்பொருளைக் குறித்து 1863-ம௵ மேமீ 1உ-க்கு முன்னமே எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிற கொதுவைப் பத்திரங்களின்படி மீட்டுக்கொள்வதற்குண்டாகிற சகல பாத்தியதையும் அந்ததேதிக்கு அடுத்து முந்தி அந்த மாகாணத்தில் வழங்குகிற காலநிர்ணயவிதிகளுக்கு உட்படவேண்டும்.
149.	ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட்ஸெகெர்டெரி அவர்களாலாவது அவர்கள் பட்சத்திலாவது யாதொரு வியாஜ்ஜியம்.	ஸர்க்காரைச்சேராத யாதொரு நபரினால் தொடரப்படுகிற அவ்வித வியாஜ்ஜியத்திற்கு இந்த ஆக்டின்படி கெடுவுகாலம் செல்லத் தொடங்கும் போது.

இரண்டாம் பகுதி: அப்பீல்கள்.

அப்பீலின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத்தொடங்குமென்பது.
150. ஸெஷன் கோர்ட்டாரால் செய்யப்பட்ட மரணத்தீர்ப்பின் மேல் 1898-ஞூத்து க்ரிமினல்ப்ரொஸீஜர் கோடின்படி.	எழு நாள் ...	தீர்ப்பு தேதி.
150-A. க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 443-வது பிரிவின்படி செய்யப்பட்ட மனு நிக்கிரகிக்கப்பட்டதன் மேல் அப்பீல்.	எழு நாள் ...	தீர்ப்பு தேதி.
151. அசல்விசாரணை அதிகாரஞ் செலுத்துவதில் போர்ட் உவில்லியத்திலும் சென்னப்பட்டணத்திலும் பம்பாயிலுமுள்ள ஹைகோர்ட்டுகள் யாதொன்றிலாவது பஞ்சாப் பிரதான கோர்ட்டிலாவது லோவர் பர்மா பிரதான கோர்ட்டிலாவது பிறந்த டிக்ரி அல்லது உத்தரவின்மேல்.	இருபது நாள்...	டிக்ரி அல்லது உத்திரவின் தேதி.
152. 1908-ம்ஞூத்திய ஸிவில் ப்ரோஸீஜர் கோடின்படி டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கோர்ட்டுக்கு.	முப்பது நாள்...	அப்பீல் செய்யப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவின் தேதி.
153. ஆலோசனை சபையிலுள்ள மஹாராஜா அவர்களுக்கு அப்பீல்செய்யஅனுமதி கொடுக்காமல் மறுக்கும் யாதொரு ஸபார்டினேட் கோர்ட்டாரின் உத்தரவின்மேல் அதே கோடின்படி ஹைகோர்ட்டுக்கு.	முப்பது நாள்...	உத்தரவின் தேதி.
154. 1898-ம்ஞூத்து க்ரிமினல்ப்ரோஸீஜர் கோடின்படி ஹைகோர்ட்தவிர வேறே யாதொரு கோர்ட்டுக்கு.	முப்பது நாள்...	எதன்மேல் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்தத்தீர்ப்பு அல்லது உத்தரவின் தேதி.
155. 150-வது 157-வது நம்பர்களினல் விதிக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் தவிர அதே கோடின்படி ஹைகோர்ட்டுக்கு.	அறுபது நாள்...	எதன்மேல் அப்பீல் செய்யப் படுகிறதோ அந்தத்தீர்ப்பு அல்லதுஉத்தரவின் தேதி
156. 151-வது 153-வது நம்பர்களினல் விதிக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் தவிர 1908-ம்ஞூத்திய ஸி	தொண்ணூறு நாள்.	அப்பீல் செய்யப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவின் தேதி.

அப்பீலின் அல்லது மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
வில் ப்ரொஸீஜர் கோடின்படி ஹைகோர்ட்டுக்கு.		
157. 1898-ம்வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி விடுதலை உத்தரவின்மேல்.	ஆறுமாதம் ...	அப்பீல் செய்யப்பட்ட உத்தரவின் தேதி.

மூன்றும் பகுதி : மனுக்கள்.

158. 1908-ம்வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர்கோடின்படி தீர்மானத்தைத் தள்ளி விடுவதற்காக.	பத்து நாள் ...	தீர்மானம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு அதைக்குறித்து கட்சிக்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுத்ததிலிருந்து.
159. அதேகோடின் 128-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (f) அடையாளமிட்ட பகுதியின்படியாவது, 37-வது அதிகாரத்தின்படியாவது உதகரிக்கப்பட்ட ஸம்மெரி (சுருக்கவகையான) நடவடிக்கையின்படி ஹாஜராகி வியாஜ்ஜியத்துக்குப் பிரதிவாதம் செய்ய அனுமதிக்காக.	பத்து நாள் ...	சம்மன் சேர்ப்பிக்கப்படுகிறபோது.
160. புனராலோசனை பண்ணும்படி கொடுத்துக் கொள்ளப்பட்ட மனுவைக் குறித்து விசாரணைக்காகக் கூப்பிடப்பட்டபோது மனுதாரர் ஆஜராகாததனால் அந்த மனு நிக்கிரகிக்கப்பட்டால் அதை மறுபடி தாக்கல் செய்துகொள்ள அதேகோடின் பிரகாரம் உத்தரவு பிறப்பிக்கும்படி.	பதினைந்து நாள்.	புனராலோசனைக்காக மனு நிக்கிரகிக்கப்படுகிறபோது.
161. யாதொரு ப்ரொவின்ஷில் ஸ்மால்காஸ் கோர்ட்டாராலாவது, ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு கோர்ட்டார் அந்த அதிகாரத்தைச் செலுத்துகையில் அந்தக் கோர்ட்டாராலாவது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பைப் புனராலோசனை பண்ணும்படி.	பதினைந்து நாள்.	டிக்ரி அல்லது உத்தரவின் தேதி.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
162. அசல் விசாரணை அதிகாரஞ்செலுத்துவதில் கீழ்கண்ட கோர்ட்டுகளில், அதாவது-போர்ட் உவில்லியத்திலும், சென்னப்பட்டணத்திலும், பம்பாயிலும், லாகூரிலும், ரெங்கூனிலுமுள்ள ஹைகோர்ட்டுகள் யாதொன்றிலாவது ஸிந்துப் பிரதேச பிரதான கோர்ட்டிலாவது பிறந்த தீர்ப்பைப் புனராலோசனை பண்ணும்படி.	இருபது நாள்...	டிக்ரி அல்லது உத்தரவின் தேதி.
163. ஹாஜராகாமையினாலாவது ப்ராஸெஸ் என்னும் கட்டளையைச்சேர்ப்பிப்பதற்காகப் பிடித்தசெலவைக் கொடுக்கவாகிலும் செலவுகளுக்காக ஜாமீன் கொடுக்கவாகிலும் தவறுதலினாலாவது தள்ளிவிட்டதை ரத்து செய்வதற்கு உத்தரவாகும்படி பிரதிவாதியினால்.	முப்பது நாள்...	தள்ளி விடப் பட்ட தேதி.
164. எக்ஸ்பார்ட்டி (ஒருதலையாக) ஜாரி செய்யப்பட்ட டிக்ரியைத் தள்ளி விடுவதற்கு உத்தரவாகும்படி பிரதிவாதியினால்.	முப்பது நாள்...	டிக்ரியின்தேதி, அல்லது சம்மன் சரியாகச்சேர்ப்பிக்கப் படாவிட்டால் மனுதாரர் டிக்ரியைப் பற்றி தெரிந்து கொண்டபொழுது.
165. அசையாப்பொருளின் ஸ்வாதீனம் நீக்கப்பட்டு, டிக்ரி பெற்றவருக்கு அல்லது டிக்ரியை நிறைவேற்றுவதற்கான விற்பனையில் கிரயதாரருக்கு ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியதையில்லை யென்று வாதிக்கிறவரால் 1908-ம் ஷ த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி.	முப்பது நாள்...	ஸ்வாதீனம் நீக்கப்பட்ட தேதி.
166. டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டுச்செய்யப்பட்ட விற்பனையைத் தள்ளி விடுவதற்காக அதேகோடின்படி தீர்ப்பான கடனாளியால் செய்யப்பட்ட அப்படிப்பட்ட யாதொரு மனு உள்பட.	முப்பது நாள்...	விற்பனை தேதி.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
167. டிக்ரிசெய்யப்பட்ட அல்லது டிக்ரியை நிறைவேற்றும்படி விற்கப்பட்ட அசையாப்பொருளின் ஸ்வாதீனத்தை ஒப்பிப்பதற்கு, எதிர்க்கப்பட்டது அல்லது தடங்கல் செய்யப்பட்டதைக் குறித்துப் பிரியாது செய்வது.	முப்பது நாள்...	எதிர்த்த அல்லது தடுத்த தேதி.
168. வியாஜ்ஜியம் நடத்தாமைக்காகத்தள்ளிவிடப்பட்ட அப்பீலை மறுபடி எற்றுக்கொள்வதற்காக.	முப்பது நாள்...	தள்ளிவிடப்பட்ட தேதி.
169. எக்ஸ்பார்ட்டி (ஒருதலையாக) விசாரணை செய்யப்பட்ட அப்பீலைப் புனர்விசாரணை பண்ணும்படி.	முப்பது நாள்...	அப்பீல் டிக்ரி தேதி, அல்லது அப்பீலைக்குறித்துக் கிரமமாய் நோட்டீஸ் கொடுக்கப்படா விட்டால், மனுதாரர் டிக்ரியைப்பற்றித் தெரிந்து கொண்டபொழுது.
170. பாபராக அப்பீல்செய்ய அனுமதிக்காக.	முப்பது நாள்...	அப்பீல் செய்யப்பட்ட டிக்ரி தேதி.
171. 1908-ம்வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி நிறுத்திவிட்டதை ரத்து செய்யும்படி உத்தரவாக வேண்டுமென்று.	அறுபது நாள்...	நிறுத்திவிடப்பட்ட தேதி.
172. அதே கோடின்படி கடனிறுக்கச் சக்தியற்ற வாதி அல்லது அப்பீல் வாதியின் ரிஸீவரினாலாவது அஸைனியினாலாவது வியாஜ்ஜியம் அல்லது அப்பீலைத்தள்ளி விட்டதை ரத்துசெய்யும்படி உத்தரவாகவேண்டுமென்று.	அறுபது நாள்...	தள்ளி விடுவதற்கான உத்தரவின் தேதி.
173. 161-வது நம்பரினாலும் 162-வது நம்பரினாலும் விதிக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் தவிர, தீர்ப்பைப் புனராலோசனை செய்யும்படி.	தொண்ணூறு நாள்.	டிக்ரி அல்லது உத்தரவு தேதி.
174. டிக்கிரியின்படியாவது, அந்த டிக்ரி எவ்விதமாகவாகிலும் சரிக்கட்டப்பட்டிருந்தால் அந்தப்படியாவது கொடுக்கவேண்டியதான யாதொரு	தொண்ணூறு நாள்.	அந்தப்படி பணஞ்செலுத்தப்பட்டபோது அல்லது சரிக்கட்டப்பட்டபோது.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத்தொடங்கு மென்பது.
பணமானது கோர்ட்டு மூலமாயல்லாமல் செலுத்தப்பட்டிருந்தால் அதை ஸெர்டிபை பண்ணப்பட்டதாகப் பதிவுசெய்யக்கூடாதென்பதற்குக் காரணம் தெரிவிக்க அதே கோடின்படி நோடீஸ் பிறப்பிப்பதற்காக.		
175. டிக்ரி தொகையை வாயிதாக்களாய்ச் செலுத்துவதற்காக.	ஆறு மாதம் ...	டிக்ரி தேதி.
176. அதே கோடின்படி இறந்துபோன வாதி அல்லது அப்பீல் வாதியினுடைய சட்டசம்மதமான பிரதிநிதியை ஒரு கட்சிக்காரராகச்செய்விப்பதற்கு.	தொண்ணூறு நாள்.	இறந்துபோன வாதி அல்லது அப்பீல் வாதியின் மரணத் தேதி.
177. அதே கோடின்படி இறந்துபோன பிரதிவாதி அல்லது அப்பீல் பிரதிவாதியின் சட்டசம்மதமான பிரதிநிதியை ஒரு கட்சிக்காரராகச் செய்விப்பதற்கு.	தொண்ணூறு நாள்.	இறந்துபோன பிரதிவாதி அல்லது அப்பீல் பிரதிவாதியின் மரண தேதி.
178. அதே கோடின்படி, யாதொரு வியாஜ்ஜியத்திலே கோர்ட்டினுத்தரவின்மேல் மத்தியஸ்தருக்கு அனுப்பப்பட்ட யாதொரு விஷயத்தைக் குறித்துச் செய்த தீர்மானத்தையாவது கோர்ட் மூலமாயல்லாமல் மத்தியஸ்தருக்கு அனுப்பப்பட்ட யாதொரு விஷயத்தைக்குறித்துச் செய்த தீர்மானத்தையாவது கோர்ட்டில் தாக்கல் செய்துகொள்ளவேண்டுமென்று.	ஆறு மாதம்.	தீர்மானத்தின் தேதி.
179. ஆலோசனை சபையிலுள்ள மஹாராஜா அவர்களுக்கு மேற்படி கோடின்படி அப்பீல் செய்யவிரும்புகிறவரால்.	தொண்ணூறு நாள்.	அப்பீல் செய்யப்பட்ட டிக்ரி தேதி.
180. டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டு செய்யப்பட்ட விற்பனையில் அசையாப்பொருளைக் கிரயத்துக்கு	மூன்று வருஷம்.	விக்கிரயம் அறுதியாகும்பொழுது.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத்தொடங்கு மென்பது.
வாங்கினவரால், ஸ்வாதீனம் ஒப்பிக்கப்பெறுவதற்காக.		
181. இந்த ஷெட்யூலில் மற்றெங்கேயாவது. 1908 ம் ஸ்ல ஸத்திய ஸிவில் ப்ரொஸீஜர்கோடின் 48-வது பிரிவிலாவது எவைகளுக்காகக் காலநிர்ணயஞ் செய்யப்பட்டிருக்கவில்லையோ அந்த மனுக்களுக்கு.	மூன்று வருஷம்.	மனுசெய்யும்படியான பாத்தியதை யுண்டாகும்போது.
182. 183-வது நம்பரிலாவது 1908-ம் ஸ்ல ஸத்திய ஸிவில் ப்ரொஸிஜர் கோடின் 48-வது பிரிவிலாவது சொல்லியிராத யாதொரு ஸிவில் கோர்ட் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக.	மூன்று வருஷம். அல்லது டிக்கிரிக்காவது உத்தரவுக்காவது ஸெர்டிபைசெய்யப்பட்ட நகல்ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் ஆறுவருஷம்.	1. டிக்ரி அல்லது உத்தரவின் தேதி, அல்லது 2. (அப்பீல் செய்யப்பட்டிருந்தால்) அப்பீல் கோர்ட்டின் முடிவான டிக்ரி அல்லது உத்தரவின் தேதி அல்லது அந்த அப்பீலை வாபீஸ் வாங்கிக்கொண்டதேதி, அல்லது

3. (தீர்ப்பு புனராலோசனை செய்யப்பட்டிருந்தால்) புனராலோசனையின் மேல் செய்யப்பட்ட தீர்மானத்தின் தேதி, அல்லது

4. (டிக்ரி திருத்தப்பட்டிருந்தால்) அப்படி திருத்தப்பட்ட தேதி, அல்லது

5. (அடுத்து இதன் பின்னல் கண்டிருக்கிற மனுசெய்யப்பட்டிருந்தால்) டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றும்படிக்காவது நிறைவேற்றுவதற்குச் சகாயமாக யாதொருவகை செய்யும்படிக்காவது தகுந்த கோர்ட்டுக்குச் சட்டத்தை அனுசரித்துசெய்து கொள்ளப்பட்ட மனுவின்மேல் பிறப்பிக்கப்பட்ட முடிவான உத்திரவின் தேதி, அல்லது

6. (டிக்ரி அல்லது உத்திரவின்படி நிறைவேற்றி வசூல் செய்யப்பட்ட யாதொரு துகையின் விஷயத்திலே, டிக்ரி-பெற்றவர் அந்த துகையை வாபீஸ் செய்து கொடுக்கும்படியான ஒரு வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்பட்டபடி மறுபடி திருப்பி கொடுத்து விடும்படி அறிவிக்கப்பட்டிருந்தால்) பின் சொல்லிய அப்படிப்பட்ட கடைசி டிக்ரியின் தேதி, அல்லது அதன்மேல் அப்பீல் செய்யப்பட்டிருக்கிற விஷயத்திலே, அப்பீல் கோர்ட்டாரின் முடிவான டிக்ரியின் தேதி அல்லது அப்பீல் வாபீஸ் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதி, அல்லது

7. (ஓர்தேதியில் செலுத்தும்படி டிக்ரி அல்லது உத்தரவில் கட்டளையிட்டிருக்கிற யாதொரு தொகையைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதற்காக மனு பண்ணிக்கொள்ளுகிறதானுல்) அப்படிப்பட்ட தேதி.

விவரணம் 1.—(விவாதப்) பொருளின் பாகங்களை அவரவருக்குச் செலுத்தும்படிக்காவது ஒப்பிக்கும்படிக்காவது வகுத்துத் தனித்தனியாக ஒருவரல்லாமல் பலர்பட்சத்தில் டிக்ரியாவது உத்தரவாவது செய்யப்பட்டிருக்குமாகில் இந்த நம்பரின் 5-வது பகுதியில் கண்டிருக்கிற மனுவானது மேற்படியார்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளில் யாரார் மனுசெய்து கொள்வார்களோ அவர்கள் பட்சத்தில் மாத்திரம் பிரயோசனப்படவேண்டும். ஆனுல், டிக்ரியாவது உத்தரவாவது ஒருவரல்லாமல் பலர் பட்சத்தில் கூட்டாய்ச் செய்யப்பட்டிருக்குமாகில் அப்படிப்பட்ட மனுவானது அவர்களில் யாவரொருவராலாகிலும், பலராலாகிலும், அவருடைய அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளாலும் செய்யப்பட்டால் அவர்களெல்லோர் பட்சத்திலும் பிரயோசனப்படவேண்டும்.

(விவாதப்) பொருளின் பாகங்கள் அவரவரால் செலுத்தப்படத்தக்கதாகவாவது ஒப்பிக்கப்படத்தக்கதாகவாவது வகுத்துத் தனித்தனியாக ஒருவரல்லாமல் பலருக்கு விரோதமாய் டிக்ரியாவது உத்தரவாவது செய்யப்பட்டிருக்குமாகில், அந்த மனுவானது மேற்படியார்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளில் யாராருக்கு விரோதமாய் அது செய்யப்படுமோ அவர்களுக்கு விரோதமாக மாத்திரம் பிரயோசனப்படவேண்டும். ஆனுல், டிக்ரியாவது உத்தரவாவது ஒருவரல்லாமல் பலருக்கு விரோதமாய்க் கூட்டாகச் செய்யப்பட்டிருக்குமாகில், அந்தமனுவானது அவர்களில் யாவரொருவருக்கு விரோதமாகவாகிலும் பலருக்கு விரோதமாகவாகிலும் அவருடைய அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு விரோதமாகவாகிலும் செய்யப்பட்டால் அது அவர்களெல்லோருக்கும் விரோதமாகப் பிரயோசனப்படவேண்டும்.

விவரணம். 2—“ தகுந்த கோர்ட் ” என்பது டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றும்படியான கடமையுள்ள கோர்ட் என்று அர்த்தமாகும்.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.
183. ஸிவில் விவகாரத்திலே சாதாரண அசல் விசாரணை அதிகாரஞ்செலுத்துவதில் ராயல் சார்ட்டர் என்னும் சாஸனப்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கோர்ட்டாருடைய தீர்ப்பு டிக்ரி அல்லது உத்தரவையாவது ஆலோசனை சபையிலுள்ள மஹாராஜா அவர்களுடைய உத்தரவையாவது நிறைவேற்றுவதற்காக.	பன்னிரண்டு வருஷம்.	தீர்ப்பு டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்குத் தற்கால சுதந்தரமானது அதைவிட்டு விடக்கூடுமான யாவரொருவருக்கு உண்டாகும்போது.

மனுவின் விவரம்.	கெடுவுகாலம்.	கெடுவு எப்போது முதல் செல்லத் தொடங்கு மென்பது.

ஆனால், தீர்ப்பு-டிக்ரி அல்லது உத்தரவுக்கு உயிருண்டாக்கியிருந்தாலும், அதனாலே செலுத்தவேண்டியதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அசல் பணத்தில் எவ்வளவாவது அந்த பணத்திற்கு வட்டி எவ்வளவாவது செலுத்தப்பட்டிருந்தாலும், அதற்குப் பாத்தியதையுண்டென்று ஒப்புக்கொண்டு அப்படிப்பட்ட அசல் அல்லது வட்டிசெலுத்துவதற்குள்ளானவராலாவது அவருடைய ஏஜெண்டினாலாவது அதற்குப் பாத்தியதையுடையவருக்காகிலும் அவருடைய ஏஜெண்டுக்காகிலும் கையெழுத்து சகிதமாய் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தாலும் அப்படி உயிருண்டாக்கின அல்லது பணஞ்செலுத்தின அல்லது ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த தேதி முதற்கொண்டாவது, அப்படி உயிருண்டாக்கினது-பணஞ்செலுத்தினது அல்லது ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தது பல தடவை செய்யப்பட்டிருந்தால், கடைசி தடவை செய்யப்பட்ட தேதிமுதற்கொண்டாவது பன்னிரண்டு வருஷ காலம் கணக்கு செய்யப்பட்ட தேதிமுதற்கொண்டாவது பன்னிரண்டு வருஷ காலம் கணக்குசெய்யப்படும்.

இரண்டாவது ஷெட்யூல்.

31-வது பிரிவிற்கண்ட பிரதேசங்கள்.

(31-வது பிரிவைப்பார்க்க.)

சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி.

பம்பாய் ப்ரெஸிடென்ஸி.

போர்ட் உவில்லியம் ப்ரெஸி டென்ஸியைச்சேர்ந்த பங்காள டிவிஷனிலுள்ள சாம்பல்பூர் டிஸ்ட்ரிக்ட்.

ஆக்ராவும் அயோத்தியாவுமாகிய ஐக்கிய மாகாணங்கள்.

பர்மா.

மத்திய மாகாணங்கள்.

அஜ்மீர்-மேர்வாரா.

மூன்றுவது ஷெட்யூல்.

[1914-ம்வருஷத்திய 17-வதுஆக்டால் ரத்து.]